ஸ்ரீ வேதாந்த தீபிகை

தொகுதி-22 எண்-8 முதல் 12

பிப்ரவரி முதல் ஜூன் வரை

1934

SL
R65m211, N12
N34.22-8-12
158952

687

ஸம்புடம் 22] FEBRUARY 1934 [ஸஞ்சிகை 8

458

ஸ்ரீ

வேதாந்த தீபிகை

ஸ்ரீமுக ஸூ

தை மீ

PUBLISHED BY

SRI VAISHNAVA SIDDHANTA SABHA,

MADRAS.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. ஸர்வமத வினு விடை:—[ஸ்ரீ. உப. வித்யாரத்னாகர வேதாந்த கேஸரி V. R. நரஸிம்ஹாசார்யர்] ... 223

2. தர்ம சாஸ்த்ரம்:— [ப்ராஹ்ம ஸ்ரீ. சேங்காலிபுரம் அநந்தராம தீக்ஷிதர்] ... 231

3. தீண்டாமை:—[ஸ்ரீ அஹோபில மடத்து வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 236

4. ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸாதுத்வ ஸமர்த்தநம்:— [புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] 246

5. ஸ்ரீ வைஷ்ணவ விபூதி:— ... 248

6. ஸம்பாதகீயம்:— ... 254

7 ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி:— ... 1

8. திவ்ய ஸூரி சரிதம்:— [வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 17

9. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:— [வங்கீபுரம் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர் ... 361

ஸ்ரீவேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—[ஸ்ரீ பாஷ்யகாரரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ தாத்பர்ய தீபிகையை அநுஸரித்து ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் செய்யப்பட்ட தமிழ் வ்யாக்யானத்துடன் கூடியது. இப்பொழுது 370 பக்கம் வரை முடிந்திருக்கிறது. இன்னும் 20 அல்லது 30 பக்கங்களுடன் இந்த க்ரந்தம் முடிவு பெறும். இப்பொழுது இதை வாங்குகிறவர்களுக்கு இது குறைந்த விலையாகக் கொடுக்கப்படும்; பாக்கி ஸஞ்சிகைகள் ஒவ்வொரு மாஸத்திலும் அவை ப்ரசுரம் ஆனவுடன் அவர்களுக்குத் தவறாது அனுப்பப்படும்] ... ... ரூ 2—0—0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடன் கூடியது] ... ... ரூ 0—8—0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடனும் புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யானத்துடனும் கூடியது] ... ... ரூ. 0 6 0

(4) ஸ்ரீ வேதாந்த தீபிகை 19, 20, 21 வது ஸம்புடங்கள். ஸம்புடம் 1.க்கு ... ... ரூ. 3 0 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
கோட்கிஸ் கார்டென்ஸ்,
மாம்பலம், தேனும்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.

ஸ்ரீ:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீ வேதாந்த தீபிகை

ஸம்பாதகர்:—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 22.] ஸ்ரீமுக வருஷம் தைமீ [ஸஞ்சிகை 8

ஸ்ரீ:

ஸர்வமத வினு விடை

வித்யாரத்னாகர—வேதாந்த கேஸரி
V. R. நரஸிம்ஹாசார்யர் எழுதியது.

(காபிரைட் ரிஸெர்வ்ட்)

(தொடர்ச்சி: ஸஞ்சிகை 7 பக்கம் 203)

பலராம்:—தம்பி! அப்படிப் படித்துவா. இனிச் சொல்லுகிறேன் கேள். இந்த ஆத்மானந்தம் என்பதைத் தூரத் தள்ளி வைத்து விடு. மனிதர் அநுபவிக்க வேண்டிய புருஷார்த்தம் விஷயஸுகமொன்றே தானென்றும் வைத்துக்கொள். அப்போதும் மனிதர் ஒவ்வொருவரும் தாம் வேண்டும் வரைக்கும் அளவிற்கு விஞ்சி அதனை அநுபவிப்பதற்கு ஆதாரங் கொண்டு ப்ரவ்ருத்திப்பாரானால் அது எங்குப் போய் முடியும்? அநர்த்தத்திலே தானே. அவ்வநர்த்தம் வாராமைக்காக நீ என்ன வகையைச் செய்ய நினைப்பாய்? அப்படி அந்யருக்குக் கிடைக்காமற் போகும்படி அளவுகடந்து ஒருவரும் அநுபவிக்கலாகாது. பக்கத்திலுள்ளவர்களும் பகிர்ந்துகொண்டு நுகரும்படி மிதமாகவேதான் ஸ்வீகரித்துக்கொள்ள வேண்டும் என்று திட்டப்படுத்துவதைத் தானே சரியான உபாயமென்று கருது

வாய். இனி இப்படி மிதமாகவேதான் அநுபவிக்கிற தென்கிற உடன்பாட்டின்படி நடக்கிறதானால், ஆத்மலாபத்திற்கான மார்க்கத்திலும் நீ கூசாமற் செல்லலாம். ஏனெனில், அவ்வழி உனது பரிமிதமான விஷயாநுபவத்தைத் தடுக்கவில்லை; எல்லைக்கு மீறிச் செல்லுவதைத்தான் அது தடுக்கின்றது. ஒரு வரையை மீறிச் சென்றால் ஆத்ம லாபந்தான் கெடுமென்ப தில்லை; ஐஹிக ஸௌக்யமுந்தான் அழிந்து போகும். இவ்வுண்மையை யெண்ணித்தான் ' அநுபவியுங்கள்; ஆனால் பிறருக்கு விட்டுக் கொடுத்தே அநுபவியுங்கள் ' என்று (1) ஒரு உபநிஷத்தும் உபதேசித்தது.

இது போலவே, இந்த்ரியங்களைத் தம் வசப்படுத்தி வைத்துக் கொண்டு விஷய போகங்களைக் கூடுமானவரை குறைத்து அநுபவித்தால் தான் தர்மமும் தழைத்தோங்கும்; பொருளுங் கைகூடி வரும். இவ்விரஹஸ்யத்தை நீதிநிபுண ரொருவர் அழகிய முறையிற் கூறுகிறார் பார். அவர் முதன் முதலில் தவத்தினால் தர்மத்தைப் பெறலா மென்றார்; அதன்மேல், தவமென்ற லென்ன வென்றொரு கேள்வி கேட்டுக்கொண்டு, இந்த்ரியங்களை ஜெயித்து நிற்பதே தவமாகு மென்றார். பிறகு ' இந்த்ரிய ஜெய மென்றதின் பொருளென்ன? ' என்கிற கேள்வி யெழ, அதற்கு, (2) சாஸ்த்ரம் ஸம்மதியாத போகத்தைக் கனவிலும் நினைக்காம லொழிப்பதும், ஸம்மதித்ததையும் வரைகடந்து செல்லாமற் கூடுமானவரையிற் குறைத்து அநுபவிப்பதும் இந்த்ரிய ஜெயமாகு மென்றார். இப்படி லக்ஷணத்தைக் கூறியதோடு நிற்காமல், (3) அர்த்த சாஸ்த்ரத்தைப் படிப்பதையேனும் இந்த்ரிய ஜெயமென்று வைத்துக்கொள்ளலா மென்றும் ஒரு வார்த்தை சொன்னார். அதெப்படி? ஒரு புத்தகத்தைப் படிப்பது எப்படி இந்த்ரிய ஜெயமாகு மென்றொரு சங்கை தோன்றும். அர்த்த சாஸ்த்ரத்தைக் கற்பதினா லன்றோ மாந்தர்க்கு இந்த்ரியங்கள் நன்றாக வசப்படும்? எனவே இந்த்ரிய ஜெயத்திற்கு அர்த்த சாஸ்த்ரத்தைப் படிப்பது காரணமென்று ஏற்படவில்லையா?

---

(1) തേന ത്യക്തേന ഭുഞ്ജീഥാ മാ ഗൃധഃ കസ്യസ്വിദ്ധനം॥ [ഈശാവാസ്യ ഉപനിഷത്.]

(2) ഇഷ്ടേഽർഥേഽപ്യനാസക്തിഃ വിരുദ്ധേ ചാപ്രവൃത്തിഃ ഇന്ദ്രിയജയഃ-

(3) അർഥശാസ്ത്രാധ്യയനം വാ.

158952

(4) இனி, காரணத்தைக் கார்யமென்றே குறிப்பது ' தநமே ஸுகம் ' என்பதுபோல இயல்பாகையால் அப்படிச் சொன்னோ மென்று அதற்கு ஸமாதாநத்தையும் கூறி முடித்தார். தம்பீ! இங்கு இதற்குமேலும் உனக்கொரு சங்கை தோன்றும். ' அர்த்த சாஸ்த்ரத்தைப் படிப்பது இந்த்ரிய ஜெயத்தைக் குறித்துக் காரணமென்றது தானெப்படி? இதற்கும் அதற்கு மென்ன ஸம்பந்த மிருக்கிறது ஒன்றிற் கொன்று கார்யகாரணங்க ளென்பதற்கு?' என்று தோன்றுகிறதல்லவா? இது விஷயத்தில் அந்த நீதி நிபுணர் கொண்டுள்ள கருத்தை விளக்குகின்றேன் கேள். தர்மார்த்த காம மோக்ஷங்கள் எனப்படுகிற நான்கு புருஷார்த்தங்களைப் பற்றியும், தர்மசாஸ்த்ரம் அர்த்த சாஸ்த்ரம் காம சாஸ்த்ரம் மோக்ஷ சாஸ்த்ரம் என்று நான்கு விதமான சாஸ்த்ரமுண்டு. அந்தந்த புருஷார்த்தத்தைப் பெறுவதற்கான உபாயத்தை விசேஷித்துக் கூறுகின்ற சாஸ்த்ரத்தை அந்தந்த சாஸ்த்ரமாக வழங்குகின்றோம். அதன்படி அர்த்த புருஷார்த்தத்தைப் பெறுவதற்கான உபாயத்தைக் காட்டுகிற சாஸ்த்ரமே அர்த்த சாஸ்த்ர மென்றாகிற தல்லவா? இவ்வர்த்த சாஸ்த்ரத்தின் மர்மத்தில் மிக்க நுட்பமான ஒரு ரஹஸ்யமுண்டு. அதென்னவெனில்: தர்ம விருத்தமான வழியில் ஸம்பாதிக்கிற பொருளானது அர்த்தமென்கிற புருஷார்த்தத்திலேயே சேராது; அது கேவலம் அநர்த்தமே தவிர வேறல்ல என்பதேதான். இதன் முடிவு என்னகிற தென்றால், ஒருவன் எத்துணைதான் நிபுணனாக விருந்தாலும், அவன் தனக்கென்று ஸம்பாதிக்கிற ஊதியமானது அவனுடைய மிகப் பரிமிதமான போகத்திற்கே பற்றும் பற்றாததாகத் தான் இருக்கும். அன்றிக்கு, அவன் நினைத்தபடிக் கெல்லாம் அநுபவிக்கக் கூடிய அளவிற்கு அது வளர்ந்து கிடந்தால், அவ்வளவைக் கொண்டே அப்பொருளை அதர்மார்ஜித மென்று கூசாமற் கூறிவிடலாம் என்பதிலேதான் இது முடிவடையும். ஆனால், ' புத்தி வித்தைகளிற் சிறந்த ஒருவர், பெரிய நீதிபதியின் பதவியி லமர்ந்து, மாத மொன்றிற்கு ஐயாயிரம் சம்பளம் பெற்று, இந்திரனுக்குள்ள போகத்தையும் அநுபவித்துக் கொண்டிருக்கிறார் ' என்று வைத்துக்கொள்வோம். அங்கு அவருடைய ஆர்ஜநத்தில் ' அதர்ம ஸம்பந்த மென்ன விருக்கிறது? அப்பொருள் அவ்வளவும் தர்மார்ஜிதந்தானே ' என்று நீ நினைப்பாய். இதற்கு அந்த நீதிகர்த்தாக்கள் சொல்லுவ தென்னவென்றால், ' இல்லை யில்லை; அது பெரும் த்ரோஹச் செயல் ' என்பதுதான். ஒரு

---

(4) കാരണേ കാര്യവദുപചാരഃ ॥ [ഭോജദേവ സൂക്തിഃ]

458

குடும்பத்தில் அண்ணன் தம்பிகள் ஐந்தாறு பெயர்கள் இருப்பதாக வைத்துக்கொள். அவர்களுள் மூத்தவன் மட்டும் உரிய வயது பெற்றுவிட்டான். சரீர பலம் ஆள்க்கட்டு முதலிய அநுகூலங்கள் அவனுக்கு ஏராளமா யுண்டு. மற்றவர்களோ வெனில், வயது வராத சிறுவர்கள்; முற் கூறிய பலம் ஒன்று மில்லாதவர்கள். மூத்தவன் தனக்குள்ள பலத்தைக் கொண்டு சிறுவர்களான ஸஹோதரர்களை அடக்கிவைத்து, அவர்களுக்கு வேண்டிய சரீரபோஷணை கல்வி கற்பித்தல் முதலான முக்ய செலவிற்குக்கூடப் பொருள் கொடாமல், தகப்பன் தேடிவைத்த த்ரவியத்தை யெல்லாம் தன் கைவசத்தில் வைத்துக்கொண்டு, மனம்போன படிக்கெல்லாம் தன்னுடைய போகத்திற்கு மட்டும் தாராளமாய்ச் செலவிடுகிறான். அது தர்மமா? த்ரோஹமா? த்ரோஹந் தானே. அப்படியாகில் இதுவும் அதைப் போன்ற ஒன்றுதான், அவன் சரீரபலம் ஆள்பலம் இவற்றை வைத்துக்கொண்டு ஹடஞ் செய்கிறான். இவன் புத்தி பலம் வித்யா பலம் இவற்றை வைத்துக்கொண்டு அந்யாயஞ் செய்கிறான். மொத்தத்தில் இரண்டிற்கும் வழியில் சிறிதளவு ஏதோ பேதமுள்ள தென்றாலும், ஸஹோதர த்ரோஹ மென்னுமிடத்தில் இரண்டும் வாசியற்றது தானென்பதில் ஸந்தேஹ மில்லையே.

கோபால்:—அண்ணா! இவ்வுதாஹரணம் பொருத்தமுள்ளதாகத் தோன்றவில்லையே. முதலாவது, அங்கு அப்பொருள் முழுவதும் அந்த ஸஹோதரர்களைப் பெற்றவரான பிதா ஸம்பாதித்ததேயன்றிப் புத்ரன் ஸம்பாதித்த தல்ல. இங்கோவெனில், இவர் (நீதிபதி) தமது திறமையைக் கொண்டுதானே ஸம்பாதித்தது. மேலும் அவர்களெல்லோரும் ஒரு மாதா பிதாக்களுக்குப் பிறந்த ஸஹோதரர்கள். இங்கு அப்படியல்லவே. அயலார் தானே. இனி இவ்விரண்டையும் எப்படி ஒப்பிடலாம்?

பலராம்:—தம்பீ! நீ அது அதர்மமென்பதை ஆக்ஷேபிக்கவில்லையே. த்ரோஹந் தானென்று ஒப்புக்கொள்கிறா யல்லவா? இனி இதுவும் அதேபோன்ற த்ரோஹந்தானென்பதைத் தெளிவு படுத்துகிறேன் பார்.

ஸர்வ ப்ராணிகளுக்கும் பிதாவான கர்த்தர், இப்பூமண்டலத்தைத் தாமே படைத்து, இதனுள் தமது குமாரர்களான ஜீவர்களைக் குடியேற்றுவாராய், அவர்களுடைய ஸுகவாழ்க்கைக்கு இன்றியமையாதனவான நீர் நிலம் தீ கால் ஆதிய பூதங்களையும் அவற்றின் விகாரமான க்ருஹாராம க்ஷேத்ர வாபீ கூப தடாக ஸுவர்ண மணி

தந தாந்யாதி போக்ய வஸ்துக்களையும் முன்னதாகவே வேண்டுமளவிற்குக் கணக்கிட்டுச் சீராக ஸ்ருஷ்டித்து நிறைத்து வைத்து, பிறகு ப்ராணி வர்க்கங்களையும் இந்த மங்கள க்ருஹத்தில் ப்ரவேசம் செய்வித்து, இங்குள்ள போகங்களைப் பாங்காய்ப் பகிர்ந்துகொண்டு ஆயிரங் காலம் ஸுகமாய்ப் புஜித்துக்கொண்டு வாழுங்களென்று ஆசீர்வதித்து மறைந்தருளினார். ஆகவே, எக்காரணத்தினாலேனும் இப்பொருள் எந்தப் பெருங்கையில் அதிகம் ஏறிக் குவிந்தாலும் அதுவும் பித்ரு தநமேயன்றி அவனுடைய தல்ல. அப்படியிருக்க, திரட்டுவதற்குத் திறனில்லாததனால் பொருளின்றித் தவிக்கிற பக்கத்திலுள்ள ஸஹோதர ப்ரஜைக்கு அதைக் கொடுத்து உதவவேண்டியது ஸம்பாதகருக்கு ந்யாயமும் கடமையுமாயிருக்க, அப்படிச் செய்யாமல் வயிறு தாழிகளாகத் தாமே விழுங்கி விட்டுத் தம்பிமார்களைத் தவிக்க விடுவது த்ரோஹமல்ல வென்றால் வேறென்ன? எனவே ஆனவரையில் ஸம்பாதிக்க வேண்டியது அவச்யந்தான் ஆனாலும், அதற்காக அத்தனையுந் தானே அநுபவித்து ஒழித்துவிடுகிற தென்பது கூடாது. கூடுமானவரை, தனது போகத்தை மட்டுப்படுத்திக்கொண்டு, தீனர்களான ஸஹோதர ப்ரஜைகளுக்கு உதவுவது தான் தர்மம். இந்தப் பொதுவுடைமைத் தர்மத்தின் தத்வத்தை ப்ருஹதாரண்யக உபநிஷத்து முதலான ஜ்ஞாந நூல்களும் விளங்கப் போதித்திருக்கின்றன என்று கூடச் சில மேதாவிகள் கருதுகின்றனர். தம்பீ! அவற்றையெல்லா மிங்கு விவரிக்கிறதென்றால் விரிவடையு மென்று விடுத்தேன்.

கோபால்:—அண்ணா! பொதுவுடைமைக் கொள்கை என்பதும் ஒரு தர்மமானால் எவருடைய பொருளிலும் எவருக்கும் பாத்ய முண்டே. இனி ஒருவர் தாந்யத்தைத் திரட்டி ஆயிரக் கணக்காகச் சேர் கட்டிவைத்திருக்க, வேறு சிலர் வயிற்றுக்குக் கூழில்லாமல் வறுமையால் வருந்துவானேன்? வேண்டியமட்டும் ஏராளமாக அள்ளிக்கொண்டு செல்லலாமே. அள்ளிக் கொள்ளலாம் என்றாலோ, அப்புறம் தன்னது பிறரது திருட்டுப் புரட்டு, என்கிற பேச்சுக்கெல்லா மிடமேயில்லையாதலின், உலகவ்யவஸ்தையே குலைந்து போகாதா?

பலராம்:—தம்பீ! உடமையில் பாத்ய முண்டென்பதில் ஸந்தேஹமேயில்லை தான். ஆனாலும் கடைமையையும் செய்தாகவேண்டுமென்பதை மட்டும் மறந்து விடலாகாது. கடமையைச் செலுத்தாதவர்கள் பாத்யத்தைக் கொண்டாடுவதற்கு அர்ஹரல்ல ரென்பது நீதியின் ரஹஸ்யம். கேதாரத்தை உழுது பயிரிட்டு உதவிய குடி-

யானவர்கள், வாரமென்ற பெயரை வைத்து, சேருக்குப் போகு முன்னேகூட நெல்லைப் பிரித்துக்கொள்ள வில்லையா? அது அவர்களுக்குள்ள பாத்யத்தின்படி ஏற்பட்ட பங்குதானே? இதே ந்யாயந்தான் முதலாளி தொழிலாளி போன்ற எல்லா விஷயத்திலும் என்பதையும் உணரவேண்டும் என்று பொது வுடைமைக் கொள்கையினர் இக்கேள்விக்கு லகுவாக ஒரு ஸமாதானத்தைக் கூறி விடுகின்றனர். தம்பீ! ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக வெகு தூரம் வந்து விட்டோம். இனி உத்தேசமான இடத்திற்குச் செல்வோம். அலௌகிகமான ஆத்மலாபத்தை உத்தேசிக்காமல் இஹலோக வாழ்க்கையையே பெரிதென்று கருதுகிற (1) அர்த்த காமபரர்கள் கூட அவ்வர்த்த காமங்களையும் மாந்தர்கள் கூடுமான வரைக்கும் குறைத்தே அநுபவிப்பதாயிருந்தாலன்றி அநர்த்தமாய் முடியு மென்றும், ஆகவே இந்த்ரியங்களை அவை போம் வழியில் விட்டு விடாமல் தம்வசத்தில் வைத்துக்கொண்டு அநுமதிக்கப் பட்டிருக்கும் போகத்தைக் கூடக் குறைத்தே வைத்துக்கொண்டும், கூடாதென்று தடுக்கப்பட்டிருப்பதைக் கனவிலும் நினைக்காதபடி தள்ளிவைத்தும் வர்த்திக்கக்கடவரென்றும் நீதி நிபுணர்களும் வற்புறுத்துகின்றனர். இதனால் ஆத்ம லாபத்தை அபேக்ஷிக்காத விஷய ருசியுள்ளவரும் அவ்விஷய போகத்தை மிகவும் மட்டுப் படுத்தியேதான் ஸ்வீகரித்துக்கொள்ளவேண்டு மென்றதாகிறது. அத்யாத்ம சாஸ்த்ரமோவெனில், ஆத்ம லாபத்திற்கான மார்க்கத்தில் நடப்பவர்களான முமுக்ஷுக்களும் வேண்டுமானால் மிகப் பரிமிதமான ஸ்வல்ப அளவிற்கு விஷயத்திலும் ஸம்பந்தப்படலாம். அதனால் ஆத்மலாபம் அழிந்து விடாது என்று சற்றேனும் அநுமதிக்கிறது. இதனால் முமுக்ஷுக்கள் விஷயத்தை அடியோடு த்யஜித்தே தீரவேண்டு மென்கிற நிர்ப்பந்தமில்லை யென்றதாகிறது. ஆகவே, இனி அதை நம்பி இதையு மிழந்து விட்டால் ஒருகால்

(1) இங்கு அர்த்த மென்றது பொன் வெள்ளிகளினால் செய்த நாணயங்களை மட்டுமல்ல. மற்றென்ன வெனில்: மனிதர் இன்புறுவதற்கு ஸாதகமான புஷ்பம் சந்தநம் முத்து ரத்நம் புத்ரர் களத்ரம் முதலான எல்லாப் பொருளையுமேதான். இப்படியே காமமென்பதும் ஸ்த்ரீ புருஷர்களுக்குப் பரஸ்பரக் கலவியினா லுண்டாகும் ஒரு உணர்ச்சியை மட்டுமல்ல. மற்றுமென்ன வெனில்: புத்ரரை மடிமீது வைத்து ஆநந்திப்பதும் மித்ரரைத் தழுவி ஸுகிப்பதும் இன்னும் ஸ்ருக் சந்தந வஸ்த்ராபரணாதிகளினால் ஆநந்திப்பதும் இவை போன்ற எல்லாவற்றையுமேதான். எனவே போகத்திற்குரிய வஸ்துக்களை அர்த்தமென்றும், அவற்றின் போகத்தில் தோன்று முணர்வைக் காம மென்றும் சொல்லியதாயிற்று.

இரண்டு மில்லாமற் போய்விடுமோ வென்று நீ சங்கித்ததற்கு இடமில்லையன்றோ? எனவே, இவ்வேத சாஸ்த்ரமானது ப்ரமாண வகுப்பிற்குள் ப்ராதாந்யத்தைப் பெற்று விளங்குகிற தென்பது முற்றவும் பொருத்தமானதே யென்று தெளிவாயாக. தம்பீ! ஆளவந்தாரென்று புகழ்ப் பெயர் பெற்றவரான ஸ்ரீமத் யாமுநாசார்யர், இவ்விஷயத்தையெல்லாந் திரட்டி ஒரு சிறிய கதையாக வருணித்தருளியிருக்கிறார். அதைச் சொல்லுகிறேன் கேள்.

நகர வாஸிகளான சைவ நண்பர் சிலர் இருந்தனர். அவர்கள் மத்ஸ்யம் என்கிற ஜந்துவைக் கண்டது மில்லை கேட்டது மில்லை. ஒருபொழுது அவர்கள் அருகிலுள்ள ஒரு க்ராமத்திற்குப் போக வேண்டி வழி நடந்தார்கள். நடுவே ஒரு பெரிய ஏரி யிருக்கக் கண்டனர். அதன் வசீகரமான தோற்றத்தில் வியப்புற்றவர்களான அந்த நாகரிகர்கள் அவ்வேரி கரையில் சற்று நேரங் கூடி உட்கார்ந்து கொண்டு, அதன் ஜலஸம்ருத்தி முதலான சோபையில் மன மீடுபட்டு அவ்வழகைக் கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தனர். இந்நிலையில் ஜலத்திற்குள் ஏதோவொன்று (மீன்) துள்ளிப்புரண்டு செல்லுகிறதுபோல அவர்கட்குத் தோன்றிற்று. அது இன்ன தென்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனாலும் அவ்விளவெயில் வேளையில் அப்பொருள் பளீரென்று மின்னிக்கொண்டு சென்றதை மட்டும் நன்றாய்ப் பார்த்து விட்டார்கள். அது என்னவாயிருக்கு மென்று நெடு நேரம் ஆலோசித்தார்கள். ‘இப்பொழுதும் நடு நடுவே அதுவேதானோ அது போன்ற வேறொன்றோ பளிச் பளிச்சென்று கண்ணிற் படுகின்றதே. ஆனால் ஊன்றிப் பார்க்கக் கூடியபடி நிலையாக நிற்காமல் அது ஒரு நொடிப் பொழுதில் மறைந்து விடுகிறதே. அது ஒருகால் ஏதேனு மொரு ப்ராணியா யிருக்குமோ? ஜலத்தில் ஸஞ்சரிப்பது அதன் ஸ்வபாவமோ? அல்லது ஜலமேதான் அப்படி யலைந்தபோது பொன் போன்ற இளவெயிலைத் தன்னுள் வாங்கிக்கொண்டு அப்படிப் பளீரென்று மின்னிற்றோ? அன்றி வேறேதேனுமா?’ என்று பலவிதமாய் ஊஹித்துப் பார்த்தார்கள். ஒருவித முடிவிற்கும் வர முடியவில்லை. முன்னிலுங் குழப்ப மதிகமாகி விட்டது. சுற்றி முற்றப் பார்த்தார்கள். தற்செயலாய் அங்கொரு குடிசைவாயிலில் ஒருவன் (செம்படவன்) உட்கார்ந்திருக்கக் கண்டார்கள். அவனண்டை சென்று, ‘ஐய! இப்படி யெங்களுக்குத் தோன்றி மறைகின்ற இப்பொருளென்னவென்பதை விவரமாய்ச் சொல்’ என்றார்கள். அது தான் மீனெனப்படுகிற தொரு ஜலசர ப்ராணி யென்றானவன். ‘ஆ! அப்படியு மொரு

ப்ராணியுண்டா?' வென்று அவர்கள் சற்று மலைத்தார்கள். 'ஆகா உண்டு' என்று சொல்லி விட்டு, அவன் தன் பையிலிருந்து ஒன்றை வெளியி லெடுத்து 'இதோ பாருங்கள்' என்று கையை நீட்டிக் காட்டினான். பார்த்தார்கள் அவர்கள். இப்போது அரைவாசி ஸம்சயந் தீர்ந்தது. 'ஆனாலும் அது இன்னும் ப்ரகாசமா யிருந்ததே. தென்றற் காற்றில் தேர்க்கொடி யாடுவதுபோல அழகாய் வளைந்து வளைந்து அசைந்து நீந்திச் சென்றதே!' என்று ஸந்தேஹப் பட்டார்கள். அவன் உடனே எழுந்து, அவர்கள் கையில் ஒரு வலையைக் கொடுத்து ஜலத்தில் வீசி யெறிந்து திருப்பி யிழுங்க ளென்றான். அவர்களும் அப்படியே செய்து பார்த்தனர். அதனுள் முன்பார்த்தது போன்ற ப்ராணியை அதன் முழு உருவத்தோடு கண்கூடாகக் கண்டு விட்டார்கள். இனி அவர்கட்கு அதைப்பற்றிய ஸம்சயமே தீர்ந்து விட்டது.

(1) அதுபோலவே நமது தேஹமாகிற ஏரிக்குள் அஹமஹமென்று சைதந்ய மயமாய் ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற இவ்வாத்மாவை இந்த ப்ரத்யக்ஷத்தினாலேயே முழுவதும் அறிந்து கொள்ள மாட்டாத யாம், அநுமாநத்தி லிறங்கி, அதுவும் நிலை கொடாமற் போகவே, ஆப்தவாக்யமான உபநிஷத்தின் உபதேசத்தை நாடுகின்றோம். அதிலிருந்து தத்வத்தை உள்ளபடி கேட்டுத் தெரிந்து கொள்கிறோ மென்றாலும், கேவலம் சொல்லிக் கேட்பதேயான அந்த சாப்த ஜ்ஞாந மாத்ரத்தால் பூர்ண த்ருப்தியைப் பெறாதவராய், அவ்வுபநிஷத்தின் உபதேசத்தின்படியே யோகத்தை யங்கீகரித்து, அதனுதவியால் சங்கா களங்கமற்ற ஆத்மாபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தைப் பெற்று க்ருதார்த்தராகின்றோம்.

---

(1) [illegible]

(𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌤𑍍𑌰𑌯𑍇 𑌆𑌤𑍍𑌮𑌸𑌿𑌦𑍍𑌧𑍌)

தம்பீ! இந்த வர்ணனையினால் அறியக்கிடக்கிற அர்த்தத்தின் ஸாரமென்ன? நாம் சும்மாவிருந்தாலும் இவ்வாத்ம ஸ்வரூபம் அரை குறையாகவேனுந் தோன்றியே தீருகின்றமையால், இதனை முற்றவும் நன்றாகத் தெரிந்து கொள்வதற்குச் சரியானபடி வழி தேடவேண்டு மென்பது தானே. இதனாலும், இவ்வாத்மா வென்பது சற்றேனுந் தோன்றாமல் ஒளிந்தே கிடக்கிறதென்று வைத்துக் கொண்டாலுங் கூட, அதைப்பற்றிய யதார்த்த ஜ்ஞாந மின்றி மாந்தர்க்குற்ற மஹா புருஷார்த்தம் ஸித்திப்பதற்கு வேறு வழியே யில்லை யாதலால், அவ்வறிவைத் தட்டியெழுப்பியாவது புகட்ட வேண்டியது அத்யவச்யமாகையாலும், மக்களுக்குத் தாயனைய இவ்வுபநிஷத் தேவீ தம் மைந்தர்களான மாந்தர்களுக்கு ஆத்ம ஞானப் பாலமுதை அகங்குளிர ஊட்டி வளர்க்கின்றாரெனக. தம்பீ! வேத சாஸ்த்ரத்தைப்பற்றி முதன் முதலில் முக்யமாய்ச் சொல்ல வேண்டுமென்று யான் நினைத்த சில விஷயத்தைச் சொல்லி விட்டேன். இனி நீ வினவிய கேள்விகளுக்கு முறையே விடை கூறுகிறேன். அவற்றுள் முன்னதான இவ்வைதிக ஸித்தாந்தத்தின்படி ஜீவபதார்த்தத்தின் ஸ்வரூப ஸ்வபாவாதிக ளெப்படியென்ற கேள்விக்கே இப்போது விவரமாக விடை தருகின்றேன்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீராமஜயம்

தர்ம சாஸ்த்ரம்

(தொடர்ச்சி, ஸஞ்சிகை 5 பக்கம் 138)

சிலர் தாம் ஆசாரமாக இருப்பதாக நினைத்துக்கொண்டு, தமது பக்கத்தில் வரும் அறிவில்லாத குழந்தை பசு முதலியவைகளைக் கூட கோபத்தினால் வெருட்டுவர். அப்படிச் செய்வது ஆசாரமாகாது. மாதவீயம் எனும் க்ரந்தத்தில் ஆசார சப்தத்தின் அர்த்தம்

"𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌚𑌾𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑍋 𑌦𑌯𑌾𑌦𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑍍𑌯𑌾𑌦𑌿𑌰𑍂𑌪𑍋 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌿𑌶𑍇𑌷 𑌆𑌚𑌾𑌰𑌃"

[சிஷ்டர்களுக்குச் சம்மதமான தயை தாக்ஷிண்யம் முதலியவைகளுடன் கூடிய உயர்ந்த நடத்தையே ஆசாரமெனப்படும்] என்று கூறப்பட்டுள்ளது.

மஹாவீரனான ஸ்ரீராமனிடத்தில் ஹநுமான் லங்கையை வர்ணிக்குங்காலத்தில்,

"அக்னிஹோத்ராஸ்ச வேதாஸ்ச ராக்ஷஸானாம் க்ருஹே க்ருஹே"

[ராக்ஷஸர்களின் ஒவ்வொரு வீடுகளிலும் அக்நியின் உபாஸநமும் வேதங்களும் நடைபெறுகின்றன] என்றார். இப்படி ஆரம்பித்த ஹநுமான், பரம தர்மிஷ்டனான ஸ்ரீராகவன் ராக்ஷஸர்களை வதம் செய்யமாட்டார் என்று பயங்கொண்டு,

"தயா ஸத்யம் ச சௌசம் ச ராக்ஷஸானாம் ந வித்யதே ||

[தயை ஸத்யம் சரீர சுத்தி மநஸ் சுத்தி இவைகள் ராக்ஷஸர்களுக்கு இல்லை.] என்று உடனே அங்கிருந்த பெரிய தோஷத்தையும் கூறினார். இதனால் ராக்ஷஸர்களிடத்தில் எவ்வளவு தர்மங்கள் இருந்தபோதிலும், அவர்களிடம் ஆசாரம் இல்லாமையால், அவர்களுக்கு நன்மை கிடைக்கவில்லை என்று தெரிகிறது. இவ் விஷயத்தையே மநுவும்,

"அனப்யாஸேன வேதானாம் ஆசாரஸ்ய ச வர்ஜனாத் |
ஆலஸ்யாத் அன்னதோஷாச்ச ம்ருத்யுர் விப்ராந் ஜிகாம்ஸதி ||"

[ப்ராம்ஹணர்கள் வேதங்களைக் கற்காததனாலும் ஆசாரத்தை விட்டதாலும் தமக்குச்சக்தி இருக்கும் பொழுது அவச்யம் செய்யவேண்டிய கார்யத்தில் உத்ஸாஹம் இல்லாததாலும் (அதாவது: ஆலஸ்யமாயிருப்பதாலும்,) கெட்ட வஸ்துக்களைப் புஜிப்பதனாலும், யமன் அவர்களைக் கொல்வதற்கு இச்சிக்கிறான்] என்கிறார். "ப்ராஹ்மணர்கள்" என்று குறிப்பிட்டதால், அந்யர்கள், வேதம் ஆசாரம் முதலியவைகள் அற்றவர்களா யிருந்து நீண்டகாலம் ஆயுள் அடைந்திருப்பதால் சாஸ்த்ரம் சொல்லியது தவறல்ல. முற்காலத்தில் மஹர்ஷிகள் நல்ல ஆசாரத்தை அநுஷ்டித்து வந்ததனாலேயே நீண்ட காலம் த்ருடமாக வாழ்ந்து வந்ததாகத் தெரிகிறது. இப்பொழுது, ப்ராஹ்மணர்களில் சிலர் ஆசாரம் முதலியன இல்லாமலே நீண்ட காலம் வாழ்ந்து வந்தாலும், அவர்கள் த்ருட காத்ரம் ஆரோக்யம் மநஸ் ஸந்தோஷம் இவை அற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

ஆனால் ஆசாரம் முதலிய நன்னடத்தைகள் உள்ள சில ஸாதுக்களுக்கும் கஷ்டங்கள் ஸம்பவிக்கின்றனவே என்று கேட்கலாம். அவ்வாறு அவர்கள் கஷ்டப்படுவதாக நமக்குத் தோற்றினாலும், ஸத் கார்யம் செய்வதில் உள்ள உத்ஸாஹத்தினால், அவர்களுக்குக் கஷ்டத்தினால் ஏற்படும் துக்கம் தெரிகிறதில்லை யென்பதே அதற்குத் தக்க ஸமாதாநம். ஆகவே மஹான்கள் செய்யும் கார்யமே ஸதாசாரமாகும். இவ்விஷயம் ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும்,

"ஸதாசாரவதா பும்ஸா ஜிதௌ லோகாவுபாவபி |
ஸாதவ: க்ஷீணதோஷாஸ்து ஸச்சப்த: ஸாதுவாசக: ||
தேஷாமாசரணம் யத்து ஸதாசார: ஸ உச்யதே ||"

[நல்ல ஆசாரத்தைச் செய்கின்ற மனிதர்களால் இஹ பர லோகங்கள் இரண்டும் ஜயிக்கப்பட்டு விட்டன. அவர்கள் தோஷ மற்றவர்களாகவும் ஸாதுக்களாகவும் ஆகின்றனர்] என்று கூறப்பட்டுள்ளது. இக்காலத்தில் சிலர், நமது முன்னோர்கள் செய்து வந்த ஆசாரத்துக்கு விருத்தமாகத் தமக்குத் தோன்றினவாறு ஆசாரத்தைக் கல்பிக்கின்றார்களே! இது என்ன பேதமை!

"யஸ்மின் தேசே ய ஆசார: பாரம்பர்யக்ரமாகத: |
ச்ருதிஸ்ம்ருத்யவிரோதேன ஸதாசார: ஸ உச்யதே ||"

[எந்தத் தேசத்தில் எந்த ஆசாரமானது முன்னோர்கள் நாள் முதல் வேதம் ஸ்ம்ருதி இவைகளுக்கு விரோதமில்லாமல் வருகின்றதோ, அதுவே ஸதாசாரம்] என்று ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. வேதம் ஸ்ம்ருதி இவைகளுக்கு விரோதமில்லாதது ஸதாசாரமென்று கூறியதால், அவைகளுக்கு விருததமான ஆசாரம் சில பெரியோரிடம் இருக்கும் பக்ஷத்தில் அதைக் கூசாமல் அவர்கள் மாற்றிக்கொள்ளவேண்டும். பெரியோரிடத்தில் தோஷங்கள் இருக்குமோ வெனில் இருக்கலாமென்று வேதம் கூறுகிறது. வேதத்தைச் சிஷ்யனுக்கு முழுதும் உபதேசித்து, அவனை வீட்டிற்கு அனுப்புங் காலத்தில், குரு சில உபதேசங்களைச் செய்து அனுப்ப வேண்டுமென்று வேதம் கூறுமிடத்தில், ஸத்யம் முதலியவைகளைக் கைக்கொள்ளும்படி உபதேசித்து,

"யான்யனவத்யானி கர்மாணி | தானி ஸேவிதவ்யானி | நோ இதராணி | யான்யஸ்மாகꣳ ஸுசரிதானி | தானி த்வயோபாஸ்யானி | நோ இதராணி |

[வேத சாஸ்த்ரங்களால் எந்தக்கர்மாக்கள் தோஷமற்றவை யென்று கூறப்பட்டிருக்கின்றனவோ, அவைகளைச் செய்யவேண்டும். அப்படி யில்லாதவைகளைச் செய்யக்கூடாது. குருக்களான எங்களிடத்தில் எந்த நல்ல நடத்தைகள் இருக்கின்றனவோ அவைகளைச் செய்யவேண்டும். கெட்ட கார்யங்கள் எங்களிடம் இருந்தால், அவைகளைச் செய்யக் கூடாது] என்றும் கூறுகிறது. பெரியோர்களுக்கு ஜந்மாந்தரீயமான பாப வசத்தால் வேத விருத்தமான கர்மாக்கள் இருக்கலாம். தம்மிடமுள்ள தோஷங்களைத்தாமே சொல்வதால் தான் அவர்கள் பெரியோர் எனப்படுகின்றனர். இப்போதுள்ள நாகரிகர்களிற் சிலர், தாம் ஏதோ காரணத்தால், தெரிந்தோ தெரியாமலோ, தமது வாழ்க்கையில் தப்பிதமான கார்யத்தைச் செய்துவிட்டு, அதை நல்லதென்று ஸ்தாபிக்கவும் பார்க்கிறார்கள். அன்றியும், உலகமெங்கும் அதையே செய்யும்படியும் தூண்டுகிறார்கள். அவர்கள் பெரியோராவது எங்ஙனம் ?

ஆபஸ்தம்பரும்

"𑌦𑍃𑌷𑍍𑌟𑍋 𑌧𑌰𑍍𑌮𑌵𑍍𑌯𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌸𑍍𑌸𑌾𑌹𑌸𑌂 𑌚 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑍍 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇𑌜𑍋𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑍋 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌦𑌨𑍍𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑍍𑌰𑌯𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑌸𑍍𑌸𑍀𑌦𑌤𑍍𑌯𑌵𑌰𑌃 ॥"

[முற்காலத்துப் பெரியோர்கள் பிடிவாதத்தால் தர்மத்துக்கு மாறுகச் சிலவற்றைச் செய்துவந்தனர். அவர்களுக்கு அதிகமான தேஜஸ் இருந்தமையால் தோஷங்கள் அவர்களைப் பாதிக்கவில்லை. அதைப் பார்த்துத் தேஜஸ் இல்லாத கீழ்ப்பட்டவன் அவர்கள் செய்தவற்றைச் செய்வானே யாகில், அவன் நாசமடைந்து விடுகிறான்] என்று சொல்லுகிறார். அவ்வாறே மநுவும், பெரியாரிடம் தோஷம் தங்கா தென்கிறார்.

"𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑌾𑌨𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌶𑌰𑍀𑌰𑌾𑌣𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌚 ।
[illegible] ॥"

[முற்காலத்துப் பெரியோர்களுடைய சரீரங்கள் இந்த்ரியங்கள் முதலியவை தேஜோமயமாகவே இருந்தமையால், அவர்கள் தோஷ ஸம்பந்த மற்றவர்). உலகில் மிக்க பலவானான ஒருவன் மேல் பந்து எறியப்பட்டால், அது அவனுக்கு வ்யதையைக் கொடுப்பதில்லை. பலமில்லாத ஒருவன்மேல் அப்பந்து விழுமாகில், அவன் அவ்வடி

தாங்காமல் மயங்கி விழுவான். அதுபோல், சக்தி ரூபமான தேஜஸுள்ள ஒருவனுக்குத் தோஷத்தால் ஏற்பட்ட பாபம் ஒன்றும் செய்ய முடியாது. அந்தத் தேஜஸ்ஸில்லாதவன் தவறான கார்யத்தைச் செய்வானே யாகில், தோஷத்தின் பயனான பாபத்தை அநுபவிக்கிறான்.

ஸ்ரீமத் பாகவதத்தில், சுகாசார்யாள் பரீக்ஷித்துக்கு, ஸ்ரீ கோபாலன் கோபிகைகளுடன் ராஸக்ரீடை அநுக்ரஹித்த சரித்ரத்தைச் சொல்லுங் காலத்தில், மஹாராஜாவானவர் சுகரைப் பார்த்து 'ஸ்வாமிந் ! ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா, தர்மத்தை ஸ்தாபித்து அதர்மத்தை அழிப்பதற்கு அவதாரம் செய்தவரன்றோ ? அப்படிப்பட்ட ஈச்வரன் பிறர் மனைவிகளான கோபிகளைத் தொட்டது அதர்மந்தானே. அதன் கருத்தைச் சொல்லவேண்டும்' என்று ப்ரார்த்தித்தார். அதற்குச் சுகர் பதில் அளிக்கிறார்:—

"𑌧𑌰𑍍𑌮𑌵𑍍𑌯𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍋 𑌦𑍃𑌷𑍍𑌟 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌸𑌾𑌹𑌸𑌮𑍍 ।
𑌤𑍇𑌜𑍀𑌯𑌸𑌾𑌂 𑌨 𑌦𑍋𑌷𑌾𑌯 𑌵𑌹𑍍𑌨𑍇𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍁𑌜𑍋 𑌯𑌥𑌾 ॥
𑌨𑍈𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌜𑍍𑌜𑌾𑌤𑍁 𑌮𑌨𑌸𑌾𑌪𑌿 𑌹𑍍𑌯𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌾𑌚𑌰𑌨𑍍𑌮𑍌𑌢𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌥𑌾𑌽𑌰𑍁𑌦𑍍𑌰𑍋𑌽𑌬𑍍𑌧𑌿𑌜𑌂 𑌵𑌿𑌷𑌮𑍍 ॥
𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌵𑌚𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌤𑌥𑍈𑌵𑌾𑌚𑌰𑌿𑌤𑌂 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌯𑌤𑍍𑌸𑍍𑌵𑌵𑌚𑍋𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥
𑌕𑍁𑌶𑌲𑌾𑌚𑌰𑌿𑌤𑍇𑌨𑍈𑌷𑌾𑌮𑌿𑌹 𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑍋 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑍇𑌣 𑌵𑌾𑌨𑌰𑍍𑌥𑍋 𑌨𑌿𑌰𑌹𑌂𑌕𑌾𑌰𑌿𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋 ॥"

[தேஹாபிமாந மற்ற பெரியோர்கள், சில தர்மத்துக்கு மாறாக நடந்திருப்பதைக் கண்டிருக்கிறோம். தேஜஸ்விகளான அவர்களுக்கு அது தோஷமாகாது. எப்படி நெருப்பானது எல்லா வற்றையும் தஹித்துவிடுமோ, அப்படியே அவர்களிடத்துள்ள தோஷமும் எரிந்துவிடும். அப்படி அவர்கள் செய்த கார்யத்தை, சக்தியற்ற மனிதன் மனத்தினால் கூட நினைக்கக் கூடாது. மூடத்தனத்தினால் அப்படி ஒருவன் செய்வானாகில், பரம சிவன் விஷத்தைச் சாப்பிட்டமாதிரி நானும் விஷயத்தைச் சாப்பிடுவேன் என்று சொல்வதையொக்கும். அதாவது அவன் நாசமடைந்து விடுவான். ஈச்வரர்களுடைய வார்த்தையையே நமது அநுஷ்டானத்திற்கு ப்ரமாண

மாகக் கொள்ளவேண்டும். அவர்களுடைய சில ஆசாரங்களையும் வார்த்தையுடன் கூடிய செய்கையையும் புத்திமான்கள் அநுஷ்டிக்க வேண்டும். அவர்களுக்கு நல்ல கார்யம் செய்வதனாலும் அடைய வேண்டிய நன்மை ஒன்றுமில்லை; கெட்ட கார்யம் செய்வதனாலும் அடையவேண்டிய தீமை ஒன்றுமில்லை. ஏனென்றால், அவர்கள் அஹங்கார மற்றவர்களாகையால், அவர்களுக்கு இரண்டின் ஸம்பந்தமும் இல்லை. ஸ்ரீ க்ருஷ்ணன் கோபிகைகளுக்கும் அவர்கள் பதிகளுக்கும் மற்று முள்ள எல்லோருக்கும், புத்தி முதலிய வற்றிற்கு ஸாக்ஷியாக உள்ளே இருப்பவன்; வெளியில் தொட்டால் தோஷ முள்ளவனாக ஆகமாட்டான்] என்று பதில் சொன்னார்.

சேங்காலிபுரம் அநந்தராம தீக்ஷிதர்

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

தீண்டாமை

[ஸ்ரீ அஹோபில மடத்து வித்வாந் புத்தக்கோட்டகம்
[ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்.

தத்காலம் தீண்டாமையை ஒழித்துவிட ப்ரயத்நப்படுகிறவர்களுட் சிலர், தீண்டாமையை ஒழித்து விடுவது சாஸ்த்ர விஹித்தமென்று சொல்லுகிற ஸநாதநிகளை ஏமாற்றிவிடும் அபிப்ராயத்தினால் ப்ரஹ்மஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர்களால் எழுதப்பட்ட “சிவார்க்கமணி தீபிகை என்னும் க்ரந்தத்திலுள்ள

“ஶ்வபச யவநாத்யைஸ்ஸஹ இதி வாக்யம் ஸர்வைஸ் ஸஹ ஸம்வஸேத்”

இத்யாதியான ச்ருதி வாக்யமானது தீண்டாத ஜாதியாருடன் மற்றை ஜாதி ஜநங்கள் எல்லாரும் இஷ்டப்படி கலந்துகொள்ள வேண்டுமென்று விதித்திருப்பதால் அப்படி எல்லாரும் ஒருவரோடொருவர் கலந்துகொள்வது சாஸ்த்ர ஸம்மத விஷயமென்று ஆங்காங்கு உபந்யஸித்து சாஸ்த்ர தாத்பர்ய மறியாதவர்களை மோஹிக்கச் செய்கிறார்கள். ஸ்ரீ பகவத் கீதை முதல் அத்யாயத்தில்

“ஸங்கரோ நரகாயைவ”,

“பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்தபிண்டோதக க்ரியா:

[கலக்கக் கூடாத ஜாதியைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டால் அப்படிக் கலந்து கொண்டவர்கள் நரகத்திற்கே போய் ஹிம்ஸைகளை அநுபவிக்க வேண்டும். இப்படிக் கலந்து கொள்ளுகிறவர்கள் செய்யும் ச்ராத்தம் முதலிய கர்மங்கள் பயனில்லாமல் வீணாகப் போய் விடுகின்றன] என்று சொல்லப் பட்டிருக்கிறது. அன்றியும் ஸ்வர்க்க லோகத்தில் ஸுகத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும் இந்தப் பாபிகளுடைய பித்ருக்களுங் கூட, ஸாங்கர்யத்தினால் அந்த ஸுகங்களை இழந்து கீழே விழுந்து விடுகிறார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஜாதிக் கலப்பு கொடிய பாபமாகச் சொல்லப் பட்டிருப்பதாலும், எல்லா மஹர்ஷிகளும் சண்டாள ஸஹவாஸாதிகளைக் கொடிய பாபமாகவே எழுதிவைத் திருப்பதாலும் ,இவ் விபரீதமான உபதேசத்தைக் கேட்டுச் சாஸ்த்ரம் அறியாதவர்கள் மஹா நரகத்திற்கு ஆளாகாதபடி செய்வதே மஹத்தான புண்ய கார்ய மாகையினால், இந்த ச்ருதியின் வாஸ்தவமான அர்த்தத்தைச் சாஸ்த்ர ஸம்மதமான முறையில் தெரிவிக்கிறோம்.

இந்த ச்ருதி வாக்யமானது இந்த உலகத்தில் தத்காலம் படிக்கப்படும் வேதத்தில் ஓரிடத்திலும் காணப் படாததனாலும், தீக்ஷிதருக்கு முன்பும் பின்பு முள்ள ஸ்ரீ சங்கராசார்யர் ஸ்ரீ பகவத் ராமாநுஜாசார்யர் ஆநந்த தீர்த்தாசார்யர் முதலான மதாசார்ய க்ரந்தங்களிலும் இது காணப் படாததனாலும் இதற்கு முன் பின் ப்ரகரணம் தெரியாததனால்

1. இது இன்ன அபிப்ராயத்தினால் இப்படிச் சொல்லியிருக்கிற தென்று நம்மால் நிச்சயிக்க முடியாததனால் இதை எழுதின தீக்ஷிதருடைய அபிப்பிராயத்தைக் கொண்டும்,

2. மற்றும் ஸந்தேஹிக்கப்பட்ட ச்ருதிவாக்யங்களின் அர்த்தம் இன்னது தான் என்று நிர்மாணிப்பதற்காகவே ஏற்பட்டதான மீமாம்ஸை என்கிற சாஸ்த்ரத்தைக் கொண்டும்

3. “ஐதிஹாஸ வர்ணாஶ்ரமம் வேதம் ஸதாவஶ்யம்ஸமேயத:!
ஸிஷேத்ஸு ப்ராகாஷ்டேஷு ஸ்தேயம் ப்ரதரிஷ்யதி!”

என்கிற மநு ஸ்ம்ருதிவாக்யத்தின் படியே வேதங்களின வயாகயாந ரூபங்களான இதிஹாஸ புராணங்களைக் கொண்டும்தான் நாம் இத னுடைய அபிப்பிராயம் இன்ன தென்பதை நிச்சயிக்க வேண்டும். இம் மூன்று காரணங்களுக்குள் முதலாவதான தீக்ஷிதருடைய அபி ப்பிராயத்தை விசாரிப்போம்.

உலகில், க்ரந்தம் எழுதுவோர், தமக்கு இஷ்டமான ஓர் அர்த்த விசேஷத்தை எழுதி, அதை மற்றவர்களும் ப்ராமாணிகமான அர்த்தமென்று அங்கிகரிப்பதற்காகத் தாம் எழுதின அர்த்தத்தைச் சொல்லுகிற ச்ருதி ஸ்ம்ருதி புராணங்களை அங்கு எழுதுவது வழக் கம். அந்த முறையில் தீக்ஷிதரும் சிவார்க்கமணி தீபிகையில்,

"ஸ்வவித ஶிவஶப்த ஸக்ருது ச்சாரணேந ஸகல துரித க்ஷய:"

என்கிற வாக்யத்தினுல் "ஶிவ" என்னும் சப்தமானது ஒரு தட்வை சொல்லப்பட்ட மாத்ரத்தினுல் ஸர்வ பாபத்தையும் போக்கி விடுகிறதென்றும் சொல்லி, இந்த விஷயத்தில் ப்ரமாணமாகவே "சுவிவா" என்கிற இந்த ச்ருதியையும்,

"யத்³வ்யக்ஷரம் நாம கி³ரேரிதம் ந்ருணாம்
ஸக்ருத் ப்ரஸங்கா³த³க⁴மாஶு ஹந்தி தத்"

என்கிற புராண வாக்யத்தையும் இங்கு எழுதியிருக்கிறுர். தீக்ஷிதரு டைய ப்ரதிஜ்ஞா வாக்யத்தினுல் சிவநாமம் சொன்னவனுக்கு ஸர்வ பாபங்களும் போய் விடுகின்றன என்னும் அர்த்தமே தான் வ்யக்த மாக ஏற்படுகிறது. மேல் இந்த விஷயத்துக்கு ப்ரமாணமாகக் காட்டின புராண வாக்யமும் அதே அர்த்தத்தைச் சொல்லுகிறபடி யால் அது ப்ரதிஜ்ஞை பண்ணப்பட்ட அர்த்தத்தில் ப்ரமாணமாக லாம். இவ்விரண்டு வாக்யங்களுக்கும் நடுவிலிருக்கிற இந்த ச்ருதி வாக்யமும் இவருடைய ப்ரதிஜ்ஞாதார்த்தத்துக்கு ப்ரமாணமாக அவராலேயே காட்டப்பட்டதாக இருப்பதால், இந்த ச்ருதிக்கும் சிவநாமம் பாபத்தைப் போக்கிவிடுகிற தென்னும் அர்த்தத்திலே தான் தாத்பர்யம். சொல்லவேண்டுமே யல்லது சண்டாளனேடு ஸஹவாஸத்தை விதிப்பதில். இதற்குத் தாத்பர்யமென்று சொன் ஞல், இது முன்பின் வாக்யங்களுக்குப் பொருந்தாதாகையினுல் அஸங்கதமாகும்.

ஆனுல் இந்த ச்ருதி வாக்யத்திலிருக்கும் சப்தங்களுக்கு ஸ்வா ரஸ்யஸித்தமான 'சிவ' என்று சொன்ன மனிதன் சண்டாளனுை

னும் அவனேடு பேசவேண்டும், அவனேடு வஸிக்க வேண்டும், அவ னேடு சாப்பிடவேண்டு மென்கிற அர்த்தம் தீக்ஷிதருக்கு இஷ்ட மானதல்ல. இந்த ச்ருதியி லிருக்கிற சப்தங்களினுல் சொல்லப் படாத 'சிவநாமோச்சாரணம் பாபத்தைப் போக்கிவிடும் என்கிற அர்த்தந்தான் இந்த ச்ருதிக்குத் தாத்பர்யம்' என்பதே தீக்ஷிதரு டைய அபிப்ராயமென்பதை அவரை நேரில் கண்டு கேட்டு அறிந்து கொள்ளமுடியாத நாம் எப்படி நிச்சயிக்கக்கூடு மென்று கேட்க லாம். தீக்ஷிதர் இந்த ச்ருதிக்குச் சப்த ஸ்வாரஸ்ய ஸித்தமான அர்த்தத்தை அங்கீகரித்திருந்தால் அது இங்கிருக்கும் முன்பின் ப்ர கரணத்திற்குப் பொருந்தா தாகையினுலும், தாம் ப்ரதிஜ்ஞை பண் ணின அர்த்தத்திற்கு அநுகுணமில்லாத அர்த்தத்தைச் சொல்லு கிற ச்ருதியை அவர் இங்கு ப்ரமாணமாக எழுதினுரென்பது அநு சித மாகையினுலும், சப்தத்தினுல் சொல்லப்படும் அர்த்தமானது ப்ரகரணத்திற்குப் பொருந்தாத பக்ஷத்தில் வ்யங்க்யமான அர்த்தத் தையே சப்தத்திற்கு அங்கீகரிப்பது "விஷம் பு⁴ங்க்ஷ்வ" என்பது முதலிய இடங்களில் ப்ரஸித்த மாகையினுலும், இந்த ச்ருதியின் முன்பின் ப்ரகரணம் தெரிந்த அவர், அதை இங்கு உபயோகப்படுத்தி யிருப்பதால், ஷ்டி ச்ருதியானது வேதத்திலும் 'சிவநாமம் பாபங் களைப் போக்கிவிடும்' என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிற ப்ரகர ணத்திலேயே தான் படிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று நிச்சயிக்கப் படுகிறது. ஆகையினுல்: தீக்ஷிதரின் அபிப்ராயத்தைப் பற்றின வரையில் இந்த ச்ருதியின் அர்த்தமானது, 'சிவநாமம் பாபங்களைப் போக்குகிறதென்று நாம மஹிமையை ப்ரசம்ஸிப்பது தான்' என்று நாம் நிச்சயிக்கிறோம்.

இப்படி இந்த ச்ருதியை எழுதின தீக்ஷிதரின் அபிப்ராயப்படி, இந்த ச்ருதி, 'சண்டாளர்களோடு மற்றவர்கள் ஸர்வ ஸஹவா ஸத்தை விதிக்க வந்ததல்ல; சிவநாமத்தை ப்ரசம்ஸிக்க வந்தது; ஆகையினுல் தீண்டாதவர்களோடு ஸஹவாஸம் செய்வதற்கு இது ப்ரமாணமாகாது' என்று முடிந்தது.

நிற்க: இரண்டாவது ப்ரகரணமாகக் கீழே குறிப்பிடப்பட்ட பூர்வ மீமாம்ஸையைக்கொண்டு இந்த ச்ருதியின் அர்த்தத்தை விசாரிப்போம்.

ஒருவனுக்குத் தெரியாத விஷயத்தைத் தெரிவிப்பதும், ஒரு கார்யத்தில் ப்ரவர்த்திக்காதவனை அதில் ப்ரவர்த்திக்கச் செய்வதும்

விதி எனப்படும். பூர்வ மீமாம்ஸையில் லிங் லோட் தவ்ய என்னும் ப்ரத்யய முள்ள வாக்யங்கள். அர்த்த விசேஷத்தை விதிக்கிறதாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. மேற் கூறிய ப்ரத்யயங்களையுடைய வாக்யங்களில் யச்சப்த மிருந்தாலும், அல்லது 'வா' என்னும் பத மிருந்தாலும், அந்த வாக்யமானது ஓரர்த்தத்தையும் விதிக்க யோக்யதையுடைய தல்ல. இந்த விஷயம் பூர்வ மீமாம்ஸை அத். 2' பா. 2. அதி. 3-ல் பாட்ட தீபிகையில்,

"ய வனவං விஷாநு வளணசூாவீං யஜதெ"

என்கிற வாக்யமானது கர்ம விதாயகமாகக் கூடுமோ வென்று சங்கித்துக்கொண்டு ஸமாதாநம் சொல்லுமிடத்தில்,

"தயாவி, விஷாகெ்யூ கூஃவியிஃயதுவெ வியி யக்ஷீ ஷூகிவஜெநு வியிவாநஸுவணமெலுவ ஸுஷாவாக"

என்று விஸ்தாரம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆனாலும் இதற்குப் பாதகமாக 'யதாஜூய' இத்யாதி ஸ்தலங்களில் யச்சப்த மிருக்கும் பொழுதே அங்கு விதாயகத்வம் சொல்லியிருப்ப துண்டு. அங்கு ஸர்வதா அப்ராப்த விஷயமாகையினால் அங்கு விதி சொல்லப்படவேண்டு மென்று இந்த ஆக்ஷேபத்திற்கு ஸமாதாநம் சொல்லப்பட்டிருப்பதால் இதற்கு விரோத மில்லை. ப்ராக்ருதத்தில்:

"அவி வா யஸுணாலஃஸுவ ஜதி வாவං
வடெசு. தெந ஸஹ ஸංவடெசு-தெந
ஸஹ ஸංவஷெசு-தெந ஸஹ ஸுஂஜீத"

என்று இந்த வாக்யத்தில்

"தெந ஸஹ ஸංவடெசு"

முதலான மூன்றுக்குள் ஒன்று விதாயகம். 'அபிவா' என்னும் மேல் வாக்யமானது, இந்த 'தேந' என்கிற தச்சப்தத்தின் அர்த்தத்தைத் தெரிவிக்க வந்ததாகையால் இதற்குச் சேஷமானது; அது விதாயகமாகாது. தச்சப்த கடிதமான மூன்று வாக்யங்களுக்குள் ஏதோ ஒன்று தான் விதாயக மாகலாம். இல்லாவிட்டால் வாக்ய பேத ப்ரஸங்கம் வரும். அது எப்படியானாலும் 'தேந' என்கிற தச்சப்தத்தினால் சொல்லப்படுகிற,

"அவி வா யஸுணாலஃ"

என்னும் வாக்யத்தில், ய: என்கிற யச்சப்த மிருப்பதாலும், இது ராக ப்ராப்தமாய் அப்ராப்த விஷயமல்ல வாகையாலும் இந்த வாக்யம் விதாயக மாகமாட்டாது.

அத். 10, பா. 8, ஜர்த்திலயவாக்வதிகரணத்தில் 'வா' சப்த மிருப்பதால் இந்த வாக்யம் விதாயகமாக மாட்டாதென்று சொல்லியிருப்பதாலும், இங்கு "அபி வா" என்று 'வா' சப்தம் படிக்கப் பட்டிருப்பதாலும், இந்த வாக்யம் தீண்டாதவர்களோடு ஸஹவாஸத்தையாவது மற்றும் எந்த விஷயத்தையாவது விதிப்பதற்கு யோக்யமானதல்ல. ஆகையால் இந்த வாக்யம் தீண்டாதவர்களோடு ஸஹவாஸத்தை விதிக்கிற தென்று சிலர் சொல்வது மீமாம்ஸா சாஸ்த்ரத்துக்கு விருத்த மென்பது நிச்சயம். ஆகவே இந்த ச்ருதியானது சிவ நாமத்தை ப்ரசம்ஸிக்கிற அர்த்தவாத மாகிறது. ஸம்வாத ஸஹவாஸ ஸஹபோஜநங்களுக்கு அநர்ஹனான மனிதன் கூடச் சிவநாமத்தைச் சொன்ன மாத்ரத்தினால் அவைகளுக்கு யோக்ய னாகிறான் என்பது இதன் பொருள். இதுபோன்ற அர்த்தவாதங்களை,

"சுணாாலூஃவி வ்ருதூவஂ தஂ ஜெவா ஸுாஹணஂ விதுஃ ।
ஸாமெறாவி யஃ ஷூஜாநாதி தஂ ஜெவாஃ ஸூவிஂ விதுஃ ॥"

"அவிவா ஃாதஂ மஜெுக நமஜெுக ஜெவதாஂகிகாஂ"

"வஂ ஸூவீதூமஃநஂ வஂ ஜொஃாஂவஸுக்ஷணஂ ।
வஂ ஹஷூா வஂஂவாநஂ ஜெநகாஃஸூஹஜொஜநஃ ॥"

முதலிய இடங்களில் ப்ரஸித்தமாகக் காணலாம். இவ் வசநங்களிலிருக்கும் சப்தங்களை மட்டும் கவனித்து, அர்த்தங்களை உள்ளபடி ஆதரித்து விட்டால், ஒழுங்காக இருக்கும் சண்டாளனுக்கு ப்ராஹ்மணன் பெண் கொடுத்துக் கொள்வதும் தாயைப் புணர்வதும் கோமாம்ஸம் தின்பதும் ப்ரஹ்மஹத்யை செய்வதும் கள் குடிப்பதும் ப்ராஹ்மணனுக்குத் தர்மமாகவே முடியுமன்றோ? இவை யெல்லாம் ஸர்வ சாஸ்த்ர நிஷித்த மாகையினால், இவைகளை யெல்லாம் அர்த்தவாதங்களென்று சாஸ்த்ரங்களில் நிர்மானித்திருக்கிறார்கள். ஆகையினால் கேவலம் விதி சப்தங்கள் இருப்பனவற்றை மாத்ரம் கொண்டு அஸம்பாவிதமான அர்த்தத்தை விதிக்க சாஸ்த்ரம் இடம் கொடுப்பதில்லை. ஆகையால் இந்த வாக்யத்தில் ய: என்றும் வா என்றும் இரண்டு விதி ப்ரதிபந்தகங்கள் இருப்பதால், இது ஓரர்த்தத்தையும் விதிக்கமாட்டா தென்பதுதான் சாஸ்த்ர தாத்பர்யம்.

நிற்க: இந்த வாக்யத்தை, ஓர்த்தத்தை விதிப்பதற்கு யோக்யதை உள்ளதாகவே நாம் ஒப்புக்கொண்டாலும், இந்த வாக்யம் தீண்டாத ஜாதியரோடு ப்ராஹ்மணன் முதலான ஜாதிகள் ஸஹவாஸத்தைச் செய்ய வேண்டுமென்கிற அர்த்தத்தை விதிக்க முடியாதென்பதையும் வ்யக்தமாகக் காட்டுகிறேம். வேதத்திலிருக்கும் சப்தங்களுக்குள் இம்மாதிரியான சப்தங்களுக்கு இன்னபடிதான் அர்த்தம் செய்யவேண்டுமென்பதைத் தீர்மானிப்பதற் கென்றே ஏற்பட்டது மீமாம்ஸா சாஸ்த்ரம். அந்தச் சாஸ்த்ரத்தில் விதி வாக்யங்களை மூன்று விதங்களாகவே அங்கீகரித்திருக்கிறார்கள். அவையாவன:— அபூர்வவிதி, நியமவிதி, பரிஸங்க்யை விதி என்பன. இவற்றுள்: அபூர்வ விதியாவது

'விதிரத்யந்தமப்ராப்தௌ'

என்கிறபடியே வேறு எந்தக் காரணத்தாலாவது ப்ராப்த மல்லாத விஷயத்தை விதிப்பது.

'வ்ரீஹீந் ப்ரோக்ஷதி'

[நெல்லை ஜலத்தினால் ப்ரோக்ஷிக்க வேண்டும்]. யாகத்தில் புரோடாசத்திற்கு வேண்டிய மாவுக்காக அரிசி வேண்டுமானால், அந்த அரிசிக்காக வேண்டிய நெல்லை முதலில் ப்ரோக்ஷணம் பண்ண வேண்டுமென்று இந்த வாக்யம் விதிக்கிறது. இதை இந்த வாக்யம் விதிக்காவிட்டால், நெல்லை ஜலத்தினால் ப்ரோக்ஷித்துத் தான் பிறகு குற்றவேண்டு மென்பது ஒருவருக்கும் வேறு காரணத்தினால் தெரிந்து கொள்ள முடியாது. ஆகையால் இது அப்ராப்தமான விஷயத்தை விதிப்பதால் இதற்கு அபூர்வவிதி என்று பெயர். ப்ரக்ருதத்தில் சண்டாளனோடு ஸஹவாஸத்தை விதிக்கிறதாக நம்மால் உத்தேசிக்கப்படுகிற இந்த 'அபிவா' என்கிற வாக்யமானது இந்த அபூர்வவிதியாகமாட்டாது. ஏனென்றால், உலகத்தில் ஒருவன் மற்றொருவனோடு அர்த்தம் காமம் முதலிய காரணங்களினால் ஸஹவாஸத்தை விரும்புவது ஸம்பாவிதமாகையினால் இது அத்யந்தம் அப்ராப்த விஷய மாகாதல்லவா? தேச க்ஷேமம் என்கிற காரணத்தினால் அன்றோ தத்காலம் நமது நாகரிகர் தீண்டாத ஸஹவாஸத்தை விரும்பிப் போருவது? ஆகையினால் இது ராக ப்ராப்தமாகையினால் அபூர்வ விதியல்ல. இப்படி அபூர்வ விதி ஆகாவிட்டாலும்,

'நியம: பாக்ஷிகே ஸதி'

என்கிறப்படியே உலக்கையினாலும், யந்த்ரம் முதலிய வேறு உபாயத்தினாலும் அரிசி யாக்கக் கூடிய நெல்லை,

'வ்ரீஹீநவஹந்தி'

உலக்கையினாலேயே குற்றி அரிசியாக்க வேண்டு மென்று விதிப்பது போல, சிவ நாமம் சொன்ன சண்டாளனோடு போஜநாந்தமான ஸஹவாஸத்தைப் பண்ணியே தீரவேண்டு மென்று இந்த வாக்யம் விதிக்கக் கூடாதா என்று சங்கிக்கலாம். இது ஸம்பாவிதமல்ல. இந்த ச்ருதியில் "யச்சண்டாலோ அபி வா" என்று சண்டாளனானாலும் எவனாவது ஒரு மனிதன் 'சிவ' என்று சொன்னால் அவனோடு இன்னான் ஸஹவாஸத்தைச் செய்யவேண்டு மென்று குறிப்பிட்டுச் சொல்லாததனால் எல்லா மனிதர்களுக்கும் அவனோடு ஸஹவாஸத்தைச் செய்ய வேண்டு மென்று சொன்னதாக முடிந்தது. தவிர: இங்கு பலம் சொல்லப்படாததனால் இது நித்ய விதியாகவும் முடியும். ஆகவே, சிவ நாமம் சொன்ன சண்டாள பர்யந்தமான ஸர்வ மனிதர்களோடு ஸர்வ மனிதர்களும் போஜநாந்தமான ஸஹவாஸத்தைப் பண்ணியே தீரவேண்டு மென்று விதித்ததாகிறபடியால், அந்ய ஸாபேக்ஷமான இந்தக் கார்யத்தை ஒருவனாலும் செய்யமுடியா தாகையால், அசக்யமான கார்யத்தைச் சாஸ்த்ரம் விதிக்கக் கூடாது. நியம விதியில் அயோக்ய வ்யவச்சேதமே ப்ரயோஜந மாகையால் சிவநாமம் சொன்ன சண்டாள பர்யந்த எல்லா மனிதரோடும் மற்றும் எல்லா மனிதர்களும் போஜநாந்த ஸஹவாஸத்தைப் பண்ணியே தீரவேண்டு மென்று அர்த்தமாகுமே யல்லது, இஷ்ட மிருந்தால் பண்ணலா மென்று அர்த்தம் சொல்ல முடியாது. ஷை ஸஹவாஸத்தைப் பண்ணாத பொழுது ஸர்வ மனிதர்களுக்கும் ப்ராயச்சித்தம் பண்ண வேண்டிவரும். ஆகையால் ஒரு நாளும் ஒருவனாலும் செய்ய முடியாத கார்யத்தைச் சாஸ்த்ரம் விதிக்கக் கூடாது. இப்படி ஒரு விதி ஸம்பவித்தாலும்,

"சிஷ்டாசாரம் லோகவிதிவிஷ்டம் யத்நேநைவ பரிவர்ஜயேத்"

என்கிறபடியே பண்டித லோக வித்விஷ்டமான இக் கார்யம் அநுஷ்டிக்கத் தகுந்தது மல்ல. ஆகையினால் இது நியம விதியாகாது.

"தத்ர சாந்யத்ர ச ப்ராப்தௌ பரிஸங்க்யேதி கீயதே"

என்கிறபடியே இது பரிஸங்க்யா விதியாகலா மென்பதும்சரியல்ல. அப்பொழுது,

"பஞ்ச பஞ்சநகா பக்ஷ்யா:"

என்கிற இடத்தில் பஞ்சேதர பஞ்சநக பக்ஷணத்தை நிஷேதிப்பது போல் 'சிவ' என்று சொல்லாதவனோடு ஸஹவாஸம் செய்யக் கூடா

தென்று சென்னதாக முடியுமே யல்லது, 'சிவ' என்று சொன்ன சண்டாள பர்யந்த மனிதனோடு ஸஹவாஸத்தைச் செய்ய வேண்டுமென்று இந்த வாக்யம் விதித்ததாகாது. இதனால் நமது நாகரிகர்களுக்கு அபேக்ஷிதமான சண்டாள ஸஹவாஸத்திற்கு அநுகூலம் ஒன்று மில்லை. ஆகையினால் மீமாம்ஸா சாஸ்த்ரத்தை அநுஸரித்து இந்த ச்ருதியின் அர்த்தத்தை விசாரித்துப் பார்த்தால், இந்த வாக்யத்தில் ய: வா என்னும் சப்தங்கள் இருப்பதால் இந்த வாக்யம் ஓரர்த்தத்திற்கும் விதாயகமாகா தென்பது முக்ய மென்றும், அப்படியே விதாயகமாக ஒப்புக் கொண்டாலும் கீழே குறிப்பிடப் பட்ட :ஒரு விதியிலும் சேராததனாலும், இது தீண்டாதவர்களோடு ஸஹவாஸத்தை விதிக்க யோக்ய மல்லவென்று நிச்சயிக்கப்படுகிறது.

“𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍇𑌦𑌂 𑌸𑌮𑍁𑌪𑌬𑍃𑌂𑌹𑌯𑍇𑌤𑍍”

என்கிற மநுவின்படியே, நமக்கு ஸந்தேஹிக்கக் கூடிய வேத வாக்யத்தின் அர்த்தத்தை ஸர்வஜ்ஞர்களான மஹர்ஷிகளின் அபிப்ராயத்தைக் கொண்டு தீர்மானிக்க வேண்டியதே உசிதமாகையால், இந்த விஷயத்தில் மஹர்ஷிகளினால் சொல்லப்படும் இதிஹாஸ புராணம் தர்ம சாஸ்த்ரங்களின் அர்த்தத்தை விசாரித்துப் பார்க்க வேண்டியது அவச்யமாகும்.

இந்த விஷயத்தில் தர்ம சாஸ்த்ரங்களும் இதிஹாஸங்களும் புராணங்களும் சண்டாளர்களோடு மற்றவர்கள் ஒரு விதமான ஸஹவாஸத்தையும் செய்யக்கூடா தென்றும், அப்படிச் செய்தால் ப்ராயச்சித்தங்களை ஸஹவாஸத்துக்குத் தக்கபடி செய்து கொள்ள வேண்டுமென்றும், ஆங்காங்கு விஸ்தாரமாகச் சொல்லியிருப்பதால், நமது மஹர்ஷிகளின் அபிப்ராயப்படி இந்த ச்ருதிக்குச் சண்டாளர்களோடு ஸஹவாஸத்தைச் செய்யலா மென்பது அர்த்த மல்லவென்பதும் வ்யக்த மாகிறது.

ஆகையால், இந்த ச்ருதியை எழுதின தீக்ஷிதர் அபிப்ராயப்படிக்கும், ச்ருதிக்கு அர்த்தம் எழுதுகிற மீமாம்ஸா சாஸ்த்ரப்படிக்கும், ச்ருதிகளுக்கு வ்யாக்யாநமான ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களை எழுதின ஸர்வஜ்ஞர்களான மஹர்ஷிகளின் அபிப்ராயப்படிக்கும், இந்த ச்ருதியானது தீண்டாத ஜாதியர்களோடு மற்றவர்கள் ஸஹவாஸம் செய்வதற்கு ப்ரமாணமாகா தென்பதை வ்யக்தமாகக் காட்டினோம். மற்றும் இந்த விஷயத்தின் விஸ்தாரத்தை

இதற்கென்று எழுதப்பட்டுள்ள க்ரந்தத்தில் பரக்கக் காணலாம். மஹர்ஷிகளின் அபிப்ராயமான ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களின் விஷயங்கள் விஸ்தாரமாகக் காட்டப்படவேண்டிய தாகையினால் அவற்றைத் தனித்து எழுதுகிறோம்.

நிற்க - இந்த ச்ருதியானது சிவநாமம் சொன்ன சண்டாளனோடு ஸஹவாஸத்தைச் செய்யவேண்டுமென்று விதிக்கிறதாகவே வைத்துக்கொண்டாலும், அத்ரி ஸ்ம்ருதி முதலிய தர்ம சாஸ்த்ரங்களில்,

“[illegible] 𑌨𑌿𑌷𑌾𑌦𑌕𑌃 ।
[illegible] ॥”
(370 ச்லோ)

என்றும்,

“𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍀𑌨𑌸𑍍𑌯 𑌮𑍂𑌰𑍍𑌖𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ।
𑌨𑌿𑌰𑍍𑌦𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌵𑌿𑌪𑍍𑌰𑌶𑍍𑌚𑌣𑍍𑌡𑌾𑌲 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥”
(380 ச்லோ)

என்றும், ப்ராஹ்மண ஜாதியிலேயே கெட்டுப்போ யிருப்பவனுக்குச் சண்டாளன் என்று பெயரிட்டிருப்பதாலும், ஜாதி சண்டாளனோடு ஸஹவாஸத்தைத் தர்ம சாஸ்த்ரங்களில் நிஷேதித்திருப்பதால், நிஷேதிக்கப்பட்ட விஷயத்தில் விதி சாஸ்த்ரமானது ப்ரவர்த்திக்கா ததலால் இங்குச் சொல்லப்பட்ட கர்ம சண்டாளன் சிவநாமத்தைச் சொன்னால் அது அவனுடைய பாபங்களுக்கு ப்ராயச்சித்தமாகி அதனால் சுத்தனான அவனோடு மற்றைப் பந்துக்களுக்கு ஸஹவாஸத்தை விதிக்கிற தென்கை ஸம்பாவிதமாகலாம். இது, சிவநாம மஹிமையை எழுதின ப்ரகரணத்தில் இந்த ச்ருதியை எழுதின தீக்ஷிதர் அபிப்ராயத்துக்கு மிகவும் பொருத்தமானது. சிவநாமம் சொன்ன மாத்ரத்தினால் ஜாதி சண்டாளனுக்குச் சண்டாள ஜாதி போய் உயர்ந்த ஜாதி வந்துவிடுவதால், அவனோடு மற்ற உயர்ந்த ஜாதி மனிதன் ஸஹவாஸம் செய்யலாமென்று இந்த ச்ருதிக்கு அபிப்ராயமென்று சொல்வது சரியல்ல.

பாரதத்தில், உமா மஹேச்வர ஸம்வாதத்தில், 'ஒரு மனிதனுக்கு ஒரே ஜந்மத்தில் பிறந்த ஜாதிபோய் வேறு ஜாதி உண்டாகக் கூடுமோ?' என்று பார்வதி பரமசிவனைக் கேட்டதற்கு, 'ஒரு மனிதனுக்கு ஒரே ஜந்மத்தில் எவ்வளவு தவம் புரிந்தாலும் பிறந்த ஜாதி போய் வேறு ஜாதி உண்டாகாது' என்று பரமசிவன் பதில் சொல்லி,

விச்வாமித்திராதிகளுடைய ஜாதி வேறுபாட்டுக்குக் காரணத்தையும் அங்கே விஸ்தாரமாகச் சொல்லியிருப்பதால், சிவ நாமம் சொன்னதைக் கொண்டு தீண்டாதவனுக்கு ஜாதி மாறாது. இதனால்,

"தீக்ஷாப்ரவேசமாத்ரேண ப்ராஹ்மணோ பவதி க்ஷணாத்"

என்கிற காலாம்ருத வசநமும் அர்த்தவாத மென்று சொல்லப்பட்டதாகிறது. இந்த விஷயத்தைச் சிவார்க்கமணி தீபிகையில் பாசுபதாதிகரணத்தில் அப்பய்ய தீக்ஷிதர், "லாகுட பாசுபத காபாலிக காளமுக தந்த்ரங்கள் வேத விருத்தங்கள்; ஆகையால் வேதங்களை ஆதரிப்பவர்களுக்கு அவை ப்ராமணங்களாக மாட்டா" என்று எழுதி யிருக்கிறார். மற்றும் சிலர், தீண்டாத ஜாதிகளுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் பண்ணிவிட்டால் அவர்களுக்குத் தீண்டாத ஜாதி போய்விடுகிற தென்று சொல்வதும் பாரதாதிகளுக்கு விருத்தம். இது அசாஸ்த்ரீய மென்பதை ஆளவந்தார் ஆகம ப்ராமாண்யத்தில் பரக்க நிரூபித்திருக்கிறார். வராக புராண ப்ரஸித்தமான நம்பாடுவானுடைய அநுஷ்டானத்திற்கும் இது விருத்த மென்பதை அங்குக் காணலாம்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே நம:

ஸ்ரீ தேசிக திவ்யஸூக்தி ஸாதுத்வ ஸமர்த்தநம்

[ஸ்ரீ. உப. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர்,
ஸ்ரீ அஹோபில மடத்து ஆஸ்தான பண்டிதர்]

சென்ற ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்யப்பட்டுள்ள வ்யாஸத்தில் விட்டுப்போன ஒரு அம்சம் இவ்விடத்தில் எழுதப்படுகின்றது. 'அஹிர்புத்ந்ய' என்னும் சப்தத்தில் ரேபம் ('ர' என்னும் எழுத்து) எப்படி வந்திருக்கின்றது என்பதை விசாரித்தல் வேண்டும். பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளுள் ஒன்றாகிய இந்தப் பெயர்கொண்ட ஸம்ஹிதை 'அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை' என்றே எல்லாராலும் வ்யவஹரிக்கப்பட்டு வருகின்றது. ஸ்ரீதேசிகனுடைய ஸுதர்சநாஷ்டகத்திலும்,

"ஸஜூரஹிர்புத்ந்யருக்ஷித"

என்று ரேபாந்தமாகவே ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. இவ்விதம் ப்ரயோகங்கள் இருப்பதால், இங்கு 'ஸு' என்னும் ப்ரத்யயத்திற்கு 'அலுக்' வந்திருக்க வேண்டுமென்று சிலர் நினைக்கிறார்கள். வ்யாகரண சாஸ்த்ரத்தில் இவ்விடத்தில் அலுக்கை விதிக்கிற ஸூத்ரமில்லாததால், அப்படி நினைப்பது சரியன்று. அலுக் வராவிட்டால் கீழே குறிக்கப்பட்டுள்ள ப்ரயோகங்களில் ரேபம் எப்படி வந்திருக்கின்றது என்று சிலர் கேட்கலாம். இந்தக் கேள்விக்கு இரண்டு விதமாக ஸமாதானம் சொல்லக்கூடும்.

(1) ஸ்ரீஸஹஸ்ர நாமத்தில் "அஹஸ்ஸம்வர்த்தக:" என்னும் ஒரே திருநாமத்தில் "அஹர்" என்று ரேபத்துடன் எப்படி ப்ரயோகம் ஏற்பட்டிருக்கலாம் என்பதைச் சங்கித்துக் கொண்டு, ஸ்ரீபட்டர், தமது பாஷ்யத்தில், 'அஹர்' என்று ரேபாந்தமான அவ்யயம் ஸ்வராதிகணத்தில் படிக்கப்பட்டதாகச் சொல்லவேண்டும் என்று பாஷித்திருக்கிறார். அது போலவே, 'அஹிர்' என்னும் ரேபாந்தமான சப்தமும் ப்ருஷோதராதி முதலான கணங்களில் படிக்கப்பட்டிருப்பதாக வைத்துக் கொள்ளலாம்.

(2) 'சப்த கல்ப த்ருமம்' என்னும் க்ரந்தத்தில் பின் வருமாறு ஒரு பங்க்தி காணப்படுகின்றது.

'அஹிர்புத்ந்யோ க்ராமணீ:, உத்தரப்ரோஷ்டபந்நக்ஷத்ரதேவதா. 'அஹேர்புத்ந்யஹிர்புத்ந்ய:' இதி ஹரிவம்சே'

இதில் 'அஹி' சப்தம் ரேபாந்தமில்லாமல் இகாராந்தமாகவே படிக்கப்பட்டு ஹரிவம்ச ப்ரயோகமும் அதற்கு ப்ரமாணமாகக் காண்பிக்கப்பட்டிருக்கின்றது. நிற்க, வாமந சிவராம ஆப்தே என்பவரால் எழுதப்பட்டுள்ள டிக்ஷனரியிலும் இந்தச் சப்தமானது 'அஹிர்புத்ந:' 'அஹிர்ப்ருத்ந:' 'அஹிர்புத்ந்ய:' 'அஹிர்புத்ந்ய:' என்று நாலு விதமாக ப்ரயோகிக்கப்படுவதாய் எழுதப்பட்டிருக்கின்றது. இவை எல்லாவற்றையும் பார்க்கும்பொழுது இந்தச் சப்தம் கீழ்க்கூறியுள்ள ப்ரயோகங்களில், பூர்வம் இகாராந்தமாகவே ப்ரயோகம் செய்யப்பட்டு பச்சாத் எழுத்து மாறி ரேபாந்தமாகப் பாடம் வந்திருக்கின்றது என்றும் சொல்லலாம்.

அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையை நாகர லிபியில் தியஸாபிகல் ஸொஸைடிக்காரர்கள் அச்சுப் பதிப்பித்திருக்கிறார்கள். அந்தப் பதிப்புக்கு வித்வான் ஸ்ரீ. உ.வே. ராமாநுஜாசார்யர் ஒரு உபோத்காதம் எழுதி யிருக்கிறார். அந்த உபோத்காதத்தில்

"அஹிர்வை புத்நியோ கார்ஹபத்ய:"

"அஹயே புத்நியாய ப்ரோஷ்டபதேப்ய:"

என்று இரண்டு வாக்யங்கள் உதாஹரிக்கப் பட்டிருக்கின்றன. அவ்விடத்திலும் 'அஹி' சப்தம் இகாராந்தமாகவே காணப்படுகிறபடியால், 'அஹிர்' என்கிற பாடம் உரு மாறியதென்றே ஸ்ரீ. உ.வே. ராமாநுஜாசார்யரும் அபிப்ராயப்படுகிறதாக அறிகின்றோம்.

இவைகளைத் தவிர்த்து வேறு எவ்வித ஸமாதானம் சொன்னாலும், 'அஹுக்' வந்திருப்பதாகச் சொல்வதற்கு ஒருவித ப்ரமாணமுமில்லையாகையால், 'அஹி: புத்ந்ய:' என்பதும் 'விச்வே தேவா:' என்பதும் ஸமாஸம் என்னும் பெயரை அடையாத தனித் தனி சப்தங்களென்றே முடிகிறபடியினால், ஸ்ரீதேசிகனுக்கு இங்கு அஹுக் வந்திருப்பதாக ப்ரமமுண்டாக ப்ரஸக்தியே இல்லை.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ விபூதி

(1)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி வைபவம்

[1379—1459]

இந்த ஸ்வாமியின் திருவவதாரம் கல்யப்தம் 4480-வதான ஸித்தார்த்தி வர்ஷம் புரட்டாசி மாஸம் சுக்ல பக்ஷம் பஞ்சமி ஜ்யேஷ்டா நக்ஷத்ரம் கூடின வியாழக்கிழமை துலா லக்நத்தில். மேல் நாட்டில் திருநாராயண புரத்தில் கடாம்பி கேசவாசாரியர் என்னும் திரு நாமத்துடன் ஒரு ஸ்ரீவைஷ்ணவாக்ரேஸரர் எழுந்தருளி இருந்தார். அவருடைய திருக்குமாரராக இந்த ஸ்வாமி அவதரித்தார். ஜநிக்கும் காலத்திலேயே இந்தக் குழந்தையினிடம் பல உத்தம லக்ஷணங்கள் விசேஷமாய் விளங்கி யிருந்ததைப் பார்த்து எல்லாரும் ஆச்சர்யப்பட்டார்கள். யதாக்ரமம் உபநயநம் நடந்த பிறகு வேதாப்யாஸமும்

அவருக்கு ஸமக்ரமாகச் செய்விக்கப் பட்டது; கேசவாசார்யரே பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்வித்து திவ்ய ப்ரபந்தங்களையும் ஓதுவித்தார். அப்பொழுது ஸ்ரீ காஞ்சியில் நடாதூர் அம்மாள் பௌத்ரராகிய கடிகாசதம் அம்மாள் என்று ப்ரஸித்தரான ஸ்ரீ வரத விஷ்ணுவாசார்யா என்பவர் வேதாந்த காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டு எழுந்தருளி யிருந்தார். அவரைக்கொண்டு ஸம்ப்ரதாய க்ரந்தங்களைத் தமது குமாரருக்கு அதிகரிப்பிக்க வேண்டு மென்று எண்ணி கேசவாசார்யர் குமாரரை அவ்விடம் அனுப்ப, ஸ்ரீ வரத விஷ்ணுவாசார்யரும் மிகுந்த ஸந்தோஷத்துடன் அவரை அங்கீகரித்து ஸகல தர்சந க்ரந்தங்களையும் ஸகல ரஹஸ்யார்த்தங்களையும் அவருக்கு ப்ரஸாதித்தருளினார். ஆசார்யன் ப்ரஸாதித்த அர்த்தங்களை யெல்லாம் கசடற க்ரஹித்து இவர் பூர்ண ஜ்ஞாநத்துடனும் நிர்துஷ்டமான அநுஷ்டாநத்துடனும் எழுந்தருளி யிருந்த நாளில், ஒருதிநம் இரவில் ஸ்ரீ அஹோபில மிருந்து ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் எழுந்தருளினதாகவும் தம்மை அஹோபிலத்துக்கு வரும்படி நியமித்ததாகவும் ஸ்வப்நம் காணவே, அந்த ஸ்வப்நத்தைப் பகவானுடைய நியமநமென்றே க்ரஹித்து, மறுநாள் காலையில் அந்த ஸ்வப்நத்தை ஆசார்யனிடத்தில் விண்ணப்பம்செய்துவிட்டு அவருடைய நியமநத்தைப் பெற்றுக்கொண்டு அஹோபிலம் சென்றார். அவ்விடத்தில் பகவத் ஸந்நிதிக்குப் போய் பகவானை மங்களாசாஸநம் செய்து கொண்டிருக்கையில், பகவான் ஒரு ஸந்யாஸி ரூபியாய் எழுந்தருளி இவருக்கு ப்ரேஷ மந்த்ரோபதேச பூர்வகமாக ஸந்யாஸம் செய்வித்து 'ஸ்ரீ சடகோப ஜீயர்' என்று தாஸ்ய நாமமுமிட்டு, தம்மிடத்திலிருந்த திருவாழி திருச்சங்குகளை அவரிடம் கொடுத்து, "நீர் நம்மை ஆராதித்துக் கொண்டு ப்ரதி க்ராமம் ப்ரதி நகரம் ஸஞ்சரித்து ஆச்ரிதர்களுக் கெல்லாம் உஜ்ஜீவநோபாயங்களைச் செய்துகொண்டு ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைத் தழைக்கும்படி நிர்வஹித்து வாரும்" என்று நியமித்தருளினார். இம்மாதிரி அவர் ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்தது அவருடைய 20-வது திரு நக்ஷத்ரத்தில் என்று தெரிகின்றது.

பின்பு அந்த அஹோபில ஸந்நிதியில் எழுந்தருளி யிருந்த மூன்று மூர்த்திகளுள் லக்ஷ்மியால் அலங்க்ருதமாயிருக்கும் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மூர்த்தியை ப்ரார்த்தித்து எழுந்தருளப் பண்ணி அதனை விசேஷித்த வைபவத்துடன் ஆராதித்துக் கொண்டு வருகையில், அவ்விடத்திலிருந்த ஸந்நிதி நிர்வாஹகர்களுடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி ஸந்நிதி அதிகார மனைத்தையும் தாமே அங்கீகரிக்கும்படி ஸம்பவித்தது. அப்படி அவ்விடத்தில் ஸ்வல்ப காலம் எழுந்தருளி யிருந்து, பிறகு அவ்விடமிருந்து புறப்பட்டு லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஒரு திருப்பல்லக்கில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வாத்ய கோஷங்களுடன் பாண்ட்ய நாடு சென்று திரு நகரியில் ஆழ்வாரை ஸேவிக்க எழுந்தருளவே, அவ்விடத்தில் ஆழ்வார் எழுந்தருளி யிருந்த ஸ்தாநத்தில் வேறு ஒரு தேவதை இருப்பதைப் பார்த்து மிகவும் துக்கித்து, அந்த இடத்திலேயே ஆழ்வாரையே த்யாநித்துக் கொண்டுக் கண்ணும் கண்ணீருமாக ஸ்வல்ப காலம் நின்று கொண்டிருக்கையில் யாத்ருச்சிகமாக அந்தத் தேசத்தின் அதிபதி அவ்விடம் வந்தார். அவரிடம் இவர் தமது தாபத்தின் காரணத்தைத் தெரிவித்தார். தேசாதிபதி

யும் உடனே அதைப் பற்றி விசாரித்து, மதாந்தரஸ்தர்கள் ஆழ்வாரை அப்புறப்படுத்தி யிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, ஜீயருடன் ஆழ்வாரை மறைத்து வைக்கப்பட்டிருந்த விடம் சென்று ஆழ்வாரைச் சுனையிலிருந்து எழுந்தருளப் பண்ணின வளவில், ஜீயர் இரண்டு கைகளாலும் ஆழ்வாரை அணைத்து 'லோகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி வேதம் தமிழ் செய்த நீர் நம் ஆழ்வாரன்றோ!' என்று அழைத்து ஆழ்வாரை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போய் யதா ஸ்தாநம் ப்ரதிஷ்டாபநம் செய்தார். ஆழ்வாரும் தாம் திருக்கையிற் கொண்டிருந்த ஹம்ஸ முத்திரையை ஜீயருக்கு ப்ரஸாதித்து 'ஸ்ரீவண் சடகோப ஜீயர்' என்னும் திரு நாமத்தையும் தந்தருளி, 'ஸ்ரீ சடகோப ஸ்ரீ' என்று ஸ்ரீமுகம் முதலானவைகளில் எழுதிடும் படியாயும் நியமித்தருளினார். அங்கு ஜீயர் ஸ்வல்பகாலம் எழுந்தருளி இருந்து ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனை அவ்விடத்தில் திரு ப்ரதிஷ்டை செய்து நம்மாழ்வாருடனே தேசிகனுக்குத் திருப்புறப் பாட்டையும் செய்வித்து அளவற்ற வைபவத்துடன் உத்ஸவத்தைக் கண்டருளப் பண்ணினார்.

பிறகு வடதேச யாத்ரையாய் ஜீயர் எழுந்தருளவே அப்பொழுது விஜயநகர சக்ரவர்த்தியாயிருந்த முகுந்த தேவராயன் என்பவன் அவருடைய திருவடிகளை ஆச்ரயித்தான். அவனால் ஆராதிக்கப் பட்டவராய் கொஞ்ச காலம் அவ்விடம் எழுந்தருளி யிருந்து பின்பு அவ்விடமிருந்து புறப்பட்டு புருஷோத்தமத்திற்கு எழுந்தருளி அவ்விடத்தில் அநேக மதாந்தர வித்வான்களுடன் வாதம் செய்தருளி ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தை நிலைநிறுத்தி அங்கே ஆழ்வார் எம்பெருமானாருடைய ஸந்நிதிகளையும் திரு ப்ரதிஷ்டை செய்தார். பிறகு கர்னாடக ஸம்ஸ்தாநம் சென்று அந்தத் தேசத்து அரசனாலும் ஆச்ரயிக்கப்பட்டு அவனாலே பஹுமாநமாக ஸத்கரிக்கப்பட்டார்.

இவ்விதம் ஸித்தாந்தத்தைப் பரவச் செய்து கொண்டு வரும் காலத்தில் ஜீயருடைய ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பத்தைப் பார்த்து விஸ்மயிக்காதவர் இல்லை. ஸிம்ஹாஸநாதிபதிகளின் திருவம்சத்தார்களுள் பலர் அவருடைய திருவடியை ஆச்ரயித்தார்கள். ப்ரஸித்தரான மணற்பாக்கம் தோழப்பர் என்னும் வித்வானும் ஜீயரை அப்பொழுது ஆச்ரயித்தார்; ஜீயருடைய நியமநத்தின் பேரிலேயே அந்த வித்வான் ஆசௌச சதகம் முதலான எட்டு தர்ம சாஸ்த்ரங்களைச் செய்து ஜீயரால் 'வைதிக ஸார்வ பௌமர்' என்னும் திருநாமமும் ப்ரஸாதிக்கப் பெற்றார்.

இவ்வாறு ஜீயர், ஆதியில் தமக்கு அழகிய சிங்கர் செய்தருளிய நியமந ப்ரகாரம் தேசம் முழுவதும் ஸஞ்சாரம் செய்து, ஸம்ப்ரதாய க்ரந்தங்களை யெல்லாம் ஆச்ரிதர்களுக்கு உபதேசித்து, அவர்களை திருவிலச்சினை முதலான ஹித வ்யாபாரங்களால் உபகரித்துக் கொண்டு அறுபது சாதுர் மாஸ்யம் ஆஸ்தாநத்தில் எழுந்தருளி யிருந்தார்.

இவர் செய்தருளிய கைங்கர்யங்களுள் முக்யமானவை:—(1) திருநகரியில் நம்மாழ்வார் திரு ப்ரதிஷ்டை, (2) திருமலைக்கு ஸோபாநம் (3) காஞ்சியில் பேரருளாளன் ஸந்நிதியில் நூற்றுக்கால் மண்டபமும் வாஹந மண்டபமும், (4) தூப்புலில் நிகமாந்த மஹா தேசிகனுக்குத் தனிக்கோயிலும், (5) திரு நாராயணபுரத்தில் கோபுர நிர்மாணமும் தேசிகனுடைய திரு ப்ரதிஷ்டையும், (6) திருநகரியிலும் திரு நாராயண புரத்திலும் மடங்களுமாம். திருநாராயண புரத்தில் திருக்கல்யாணி தீரத்தில் இவருடைய ப்ருந்தாவநம்.

---

(2)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ கலியன் ராமனுஜ ஸ்வாமியின் வைபவம்

[1877–1933]

இந்த மஹான் ஈச்வர ஸம்வத்ஸரத்தில் சித்திரை மீ அச்வநீ நக்ஷத்ரத்தில் (14-4-1877) வானமாமலை திவ்ய தேசத்தில் உத்தமமான ஒரு ஸ்ரீவைஷ்ணவ திருக்குலத்தில் அவதரித்தருளினார். ஜாயமாந கடாக்ஷ விசேஷத்தாலே ஜ்ஞாந ஸம்பத்தெல்லாம் பெருகி, உசிதமான காலம் வந்தவுடன், தத்காலம் ஆஸ்தாநத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சடகோபராமாநுஜ ஸ்வாமியின் திருவடிகளை ஆச்ரயித்து அவராலே அநுக்ரஹிக்கப்பட்டவராய் சாஸ்த்ரங்களில் விசேஷித்தப் பாண்டித்யத்தைப் பெற்று, பிறகு ஸ்ரீ பட்டர் பிரான் ஸ்வாமி ஸந்நிதியில் உபய வேதாந்தங்களையும் அதிகரித்து, அந்த ஸ்வாமி காலத்திற்குப் பிறகு அவரால் நியமிக்கப் பெற்றவராய் தமது 28-வது திரு நக்ஷத்ரத்திலேயே உத்தமாச்ரமத்தை ஸ்வீகரித்து அந்தத் திவ்ய ஸிம்ஹாஸநத்தையே அலங்கரித்தருளினார். ஒரு வருஷ காலம் அவ்விடம் எழுந்தருளியிருந்து, பிறகு யாத்ரை உபக்ரமித்து, கோயில் திருமலைப் பெருமாள் கோயில் முதலான திவ்ய தேசங்களை மங்களாசாஸநம் செய்து, ஸ்ரீ ஜகந்நாதம் வரை எழுந்தருளி மூன்று வர்ஷ காலத்திற்குப் பிறகுத் திரும்ப வானமாமலைக்கு எழுந்தருளினார். இது அவர் செய்தருளிய முதல் யாத்ரை.

பிறகு சில காலம் ஸ்ரீ மடத்திலேயே உபய வேதாந்த ப்ரவசநம் நடைபெற்று வந்தது. அதற்குப் பிறகு உத்தர திவ்யதேசங்களை மங்களாசாஸநம் செய்யக் கருதிக் கணக்கற்ற அடியார்களுடன் கூட வன்பரிசாரம் வாட்டாறு வழியாக அநந்தசயநம் எழுந்தருளி, அங்கு மஹாராஜனாலும் அவ்விடத்திய பக்த ஜநங்களாலும் விசேஷமாக உபசரிக்கப் பெற்று, அங்கு நின்று புறப்பட்டு மலைநாட்டுத் திருப்பதிகளனைத்தையும் மங்களாசாஸநம் செய்து கொண்டு, திருநாராயணபுரம் சென்று அங்கிருந்து கிஷ்கிந்தை மால்யவான் மலைகளுக்கு எழுந்தருளி, பிறகு ஹைதராபாத் மார்க்கமாய் பஞ்சவடி எழுந்தருளி, அங்கிருந்து பம்பாய்க்கு ஸமீபத்தில் இருக்கும் காட் கோபர் என்னும்

இடத்திற்கு எழுந்தருளி அப்பொழுது நேர்ந்த சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை அவ்விடத்திலேயே முடித்துக் கொண்டு, அங்கிருந்து இந்தூர் உஜ்ஜயினீ மார்க்கமாகப் புஷ்கரம் பரதப்பூர் முதலிய ஸ்தலங்களை அலங்கரித்து, பிறகு ப்ருந்தாவனத்திற்கு எழுந்தருளினார். பிறகு வடமதுரை கோகுலம் கோவர்த்தனம் முதலிய திவ்ய தேசங்களை ஸேவித்துக்கொண்டு, அங்கிருந்து ஹரித்வாரம் ஹ்ருஷீகேசம் மார்க்கமாக பதரிகாச்ரமத்தை அடைந்தார். அங்கே சில காலம் பகவத் குணாநுபவம் செய்த பிறகு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு நைமிசாரண்யம் எழுந்தருளி, சித்ரகூடம் ரீவா தேசம் அலஹாபாத் காசீமார்க்கமாகத் திருவயோத்திக்கு எழுந்தருளினார். திருவயோத்தியிலிருந்து மிதிலாபுரி ஸத்வா ஸம்ஸ்தானம் மார்க்கமாய் பாடலீபுரம் எழுந்தருளி, அங்கே அப்பொழுது நடைபெறவிருந்த சதுஸ்ஸம்ப்ரதாய மஹாஸபையில் அக்ராஸநாதிபத்யத்தை வஹித்து, ஹிந்தி பாஷையில் அத்யத்புதமாக உபந்யாஸங்களைச் செய்தருளினார். அங்கு ஸந்நிஹிதர்களாயிருந்த மஹாராஜர்கள் மஹாவித்வான்களெல்லாரும் அந்த உபந்யாஸங்களைக் கேட்டு மிகவும் ஆநந்தித்தார்கள். பிறகு அந்த ஸபை முடிந்த பிறகு அவ்விடமிருந்து புறப்பட்டு ராணிகஞ்ஜ் மார்க்கமாக ஸ்ரீ ஜகந்நாதம் பொப்பிலி விஜயநகரம் பித்தாபுரம் இவ்விடங்களுக்குப் போய், பிறகு ஸ்ரீகூர்மம் ஸிம்ஹாசலம் வழியாகத் திருப்பதிக்கு எழுந்தருளினார். அங்கே திருவேங்கடமுடையானை மங்களாசாஸநம் செய்து, பிறகு ஸ்ரீபெரும்பூதூர் மார்க்கமாக ஸ்ரீரங்கம் எழுந்தருளி அரங்கனை ஸேவித்து, பிறகு திருமாலிருஞ் சோலை ஸ்ரீவில்லிபுத்தூர் எழுந்தருளி அவ்விடத்தில் ப்ரதம தீர்த்தம் பரிவட்டம் மாலை முதலிய மர்யாதைகளால் புரஸ்கரிக்கப் பெற்று, அங்கிருந்து மறுபடியும் வானமாமலை எழுந்தருளினார். இது இரண்டாவது யாத்ரை.

இந்த யாத்ரை நடை பெறுவதற்கு ஐந்து வர்ஷ காலத்திற்கு அதிகமாகவே சென்றது. இதில், ரீவா இந்தூர் ஸத்வா முதலிய மஹாராஜர்களுடைய ஸம்ஸ்தானங்களில் ஸ்ரீ ஸ்வாமி ஸத்கரிக்கப் பட்டதும், பம்பாய் பாட்னா கான்பூர் ஹைதராபாத் முதலிய நகரங்களில் நடைபெற்ற பத்தன ப்ரவேசம் முதலான மஹோத்ஸவங்களும் வாசாம் அகோசரங்கள். வானமாமலைக்கு எழுந்தருளின பிறகு பத்து ஸம்வத்ஸரம் அவ்விடத்திலேயே உபய வேதாந்த கால க்ஷேபாதிகளால் அங்கிருந்த ஆச்ரிதர்களை அநுக்ரஹித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கும்படி ஸம்பவித்து.

பிறகு மூன்றும் தடவையாக விஜய யாத்ரா ப்ரஸ்தானத்தை உபக்ரமித்து ஸ்ரீ வில்லிபுத்தூர் மாலிருஞ்சோலை மார்க்கமாய்த் திருப்புல்லாணி எழுந்தருளி அங்கு திருவணையை ஸேவித்து விட்டு, பிறகு திருக்கோட்டியூர் திருமய்யம் புதுக்கோட்டை மார்க்கமாய் ராஜ மன்னார் ஸந்நிதிக்கு எழுந்தருளி அதற்கு ஸமீபத்திலிருக்கும் சேரன்குளம் என்னும் க்ராமத்தில் சாதுர் மாஸ்ய ஸங்கல்பத்தை முடித்து, அங்கிருந்து குருகைக் காவலப்பன் ஸந்நிதி மார்க்கமாக ஸ்ரீமுஷ்ணம் எழுந்தருளி, பிறகு திருக்கோவிலூர் நாயனாரையும் முதலாழ்வார்களையும் ஸேவித்துக்கொண்டு திருமலை மார்க்கமாகத் திருவல்லிக்கேணிக்கு எருந்தருளினார். அவ்விடத்தில் பல மாஸங்கள் எழுந்

தருளி யிருந்து பல்லாயிரக் கணக்கான பக்தர்களை அநுக்ரஹித்த விஷயம் இந்நகர வாஸிகளான ஆஸ்திகரெல்லாருக்கும் இன்னும் ஜ்ஞாபகத்தில் இருக்கலாம். பிறகு கூடூர் நெல்லூர் மார்க்கமாய் நூஜ்விட் ஸம்ஸ்தானம் எழுந்தருளி, பிறகு ராஜமஹேந்த்ரம் பஜவாடா ஹைதராபாத் ஸிகந்தராபாத் வளப்பருத்தி முதலான இடங்களில் பக்தர்களை அநுக்ரஹித்துக்கொண்டு, அங்கிருந்து மைஸூர் சேர்ந்து, பிறகு சேலம் நாமக்கல் மார்க்கமாகத் திருவரங்கம் பெரிய கோயில் எழுந்தருளி, அங்கிருந்து திரும்ப வானமாமலை எழுந்தருளினார். இது மூன்றாவது யாத்ரையின் வைபவம். இவ்விதம் மஹா ப்ரபாவத்துடன் வெகு காலம் எழுந்தருளி யிருந்து, ஸ்ரீமுக வர்ஷம் ஆவணி மாஸம் க்ருஷ்ணபக்ஷ ஷஷ்டி திநம் [10-9-1933] அபிஜித் காலத்தில் இம்மஹான் திருநாட்டை அலங்கரிக்கும்படி நேர்ந்தது. இந்த விபூதியை அலங்கரித்து எருந்தருளியிருந்த 56 ஸம்வத்ஸரங்களுள் சற்றேறக்குறையப் பாதிகாலம் 28 ஸம்வத்ஸரம் உத்தமாச்ரம ஸ்வீகார பூர்வகமாக ஸ்ரீ ராமாநுஜ தர்சந ஸ்தாபநத்திலேயே விநியோகம் அடைந்தது.

இந்த மஹான் எழுந்தருளியிருந்த காலத்தில் ஸ்ரீ மடத்திற்காக வாங்கப் பட்டுள்ள க்ராமங்கள் மூன்று லக்ஷ ரூபாய் மதிப்புள்ளவை; மடத்திற்காக ஆச்ரிதர்களால் ஸமர்பிக்கப்பட்டுள்ள த்ரவ்யங்களும் ஏராளமே. உள்ளூரிலும் வெளி திவ்ய தேசங்களிலும் ஸ்ரீ ஸ்வாமி செய்தருளின கைங்கர்யங்களும் பலவென்று தெரிய வருகின்றன. இவையெல்லாம் ஸ்ரீ வைஷ்ணவ விபூதியின் ஸம்ருத்தி ஸூசகங்களே.

(3)

ஸ்ரீ:

ஸ்ரீ காஞ்சி ப்ரதி வாதி பயங்கரம் ஜகத்குரு ஸ்ரீமதநந்தாசார்யருடைய ஷஷ்டயப்த பூர்த்தி மஹோத்ஸவம்

[ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதி பயங்கராசார்ய திவ்ய ஸிம்ஹாஸநத்தை அலங்கரித்து வரும் ஜகத்குரு ஸ்ரீமதநந்தாசார்ய தேசிகேந்த்ரர்களுடைய ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவம், நிகழும் மாசி ௴ 14௳ ஞாயிற்றுக்கிழமை திநம் ஆரம்பித்து 23௳ வரை ஸ்ரீ காஞ்சீ நகரத்தில் ஸ்ரீ ப்ரதிவாதிபயங்கர மடத்தில் நடைபெறுகிறதென்றும், அந்தப் பத்து திநங்களிலும் ப்ரதிதிநம் ஆழ்வாராசார்யர்களின் திவ்ய ஸூக்திகளின் பாராயணங்களும் வித்வதுபந்யாஸங்களும் செய்யப்படுமென்றும் நாம் கேட்டு மிகவும் ஆநந்திக்கின்றோம். அந்த உத்ஸவ காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாரும் எழுந்தருள வேணுமென்று ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி ஆஹ்வாந பத்ரிகை வாயிலாக எல்லாரையும் ப்ரார்த்திப்பதுடன், அந்தப் பத்ரிகையில் ஒன்றை நமக்கு அனுப்பி அதைத் தீபிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டுமென்றும் நியமித்திருக்கிறார். அந்தப் பத்ரிகையை நாம் க்ருதஜ்ஞதையுடன் அங்கீகரித்து, அதன் ஸங்க்ரஹத்தை நமது ஸுஹ்ருத்துக்களுக்குத் தெரிவிக்குமாறு கீழில் ப்ரசுரம் செய்கின்றோம்.]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃

[illegible] ॥

[illegible] 'जगद्गुरु' [illegible] [25-2-34-6-3-34] [illegible]

ஸ்ரீகாஞ்சீ,
12—2—34.

ப்ர. அண்ணங்கராசார்ய தாஸ:

ஸத் சூத்ர தர்மம்:—இது புத்தகக்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசார்யரால் எளிதான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கும் க்ரந்தம். இதில் நான்காவது வர்ணத்தார்களால் தினந் தோறும் அநுஷ்டிக்கப்பட வேண்டியவையாக மஹர்ஷிகளாற் சொல்லப்பட்டுள்ள தர்மங்களெல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு, எல்லாருக்கும் விளங்கும்படி எழுதப்பட்டிருகின்றன. இதன் விலை அணா 2. தபால் சார்ஜு வேறு. "திருச்சி ஜில்லா, லால்குடி போஸ்டு, திருப்பள்ளத்துறை, ஸ்ரீ. உப. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர்" என்னும் விலாஸத்திற்கு எழுதி இதைப் பெற்றுக் கொள்ளலாம்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑌿𑌯𑍈 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புகள்

மஹாத்மா காந்தியும் மஹாத்மா

மஹாத்மா காந்தியின் தக்ஷிண தேச ஸஞ்சாரம் முடிந்தது. துர்ப்பிக்ஷத்தால் மஹாஜநங்கள் மஹத்தான கஷ்டங்களை அநுபவித்துக்கொண்டிருக்கும் இந்த க்ஷாம காலத்தில், மஹாத்மா லக்ஷக்கணக்காக த்ரவ்யம் சேர்த்துக் கொண்டு வடக்கு திக்கு நோக்கிப் போய்விட்டார். ஹரிஜநங்களும் அவர் ருஜு ஸ்வபாவ முள்ளவர் என்பதையாவது அவருக்கு அளவற்ற பூததயை உண்டு என்பதை யாவது நாம் மறுக்கவில்லை; தாம் ஸம்பாதித்திருக்கும் த்ரவ்யத்தைக் கொண்டு எளிய ஜநங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதே அவருடைய எண்ணமாக இருக்கலாம். எது எப்படி இருந்த போதிலும், அவர் செய்யும் கார்யம் தோஷ துஷ்டமாக இருப்பதால், அவரை நிரபராதி என்று சொல்வதற்கு நமக்குத் தைர்யம் வரவில்லை.

முதலில், அவர், ஹரிஜநங்கள் என்று இப்பொழுது வ்யவஹரிக்கப்பட்டுவரும் ஜந்ம சண்டாளர்களுக்குத் தீண்டாமை விலக்க வேண்டுமென்றும், அவர்கள் வர்ணாச்ரம தர்மத்தார்களுடன் கூட ஸமமாகவே தேவாலய ப்ரவேசம் செய்ய அநுமதி கொடுக்கப்பட வேண்டுமென்றும் நிர்ப்பந்திப்பது, தீவ்ரமாக ஆக்ஷேபிக்கத் தகுந்ததான கார்யம். வர்ணாச்ரம தர்மத்தார்கள், தமது ரக்ஷகனான பகவானால் த்ரிகாலஜ்ஞாநிகளான மஹர்ஷிகளைக்கொண்டு ப்ரவ்ருத்திக்கப்பட்டுள்ள சாஸ்த்ரத்திற்குக் கட்டுப்பட்டவர்கள்; அந்த மஹர்ஷிகளால் விதிக்கப்பட்டுள்ள விதிகள் குலையாதிருக்கும் வரை மாத்ரம் ஜகத் க்ஷேமத்துடன் நிலைபெற்று நிற்கும் என்று நம்புகிறவர்கள். அந்த விதிகள், ஜந்ம சண்டாளர்கள் தீண்டாதவர்களென்றும் அவர்களுடன் ஸமமாக தேவாலய ப்ரவேசம் செய்வது கூடாதென்றும் விதிக்கும் பக்ஷத்தில், அந்த விதிகளை அவர்கள் எவ்விதத்தில் அநாதரிக்கக் கூடும்? 'அம்மாதிரியான விதிகள் யுக்திக்கும் ந்யாயத்திற்கும் விருத்தங்களாக இருக்கிறபடியால் அவை அநாதரிக்கத் தகுந்தவைகளே' என்பதே மஹாத்மாவின் வாதமாக இருக்கலாம். அந்த வாதம் புத்திசாலிகள் ஒத்துக்கொள்ளத் தகுந்ததாக மாட்டாது என்பதை நாம் நிரூபிப்போம்.

யுக்தியை மாத்ரம் கைப்பற்றி ஒருவனும் உலக வாழ்க்கையை நிர்ணயிக்க ப்ரவ்ருத்திக்க மாட்டான். அப்படி ப்ரவ்ருத்தித்தால்

அந்த ப்ரவ்ருத்தி அளவற்ற குழப்பத்திற்கும் பயத்திற்கும் காரணமாகுமே தவிர, உலகம் நிலை பெற்று நிற்பதற்கு ஒருபொழுதும் காரணமாக மாட்டாது என்பது வ்யக்தம். ஆகையால் இதைப் பற்றி நாம் நிரூபிக்கவேண்டியது அதிகமாக ஒன்றுமில்லை. சாஸ்த்ரம் ந்யாயத்திற்கு ஒத்ததில்லை என்று சொல்வதும் பரிஹஸிக்கத் தகுந்த வார்த்தையே. இது ந்யாயம் இது அபந்யாயம் என்பதை நாம் சாஸ்த்ரத்தைக் கொண்டே அன்றோ நிர்ணயித்தல் வேண்டும்? அப்படி இருக்கையில் சாஸ்த்ரம் சொல்வது ந்யாயத்திற்கு விருத்தமாக இருக்கின்றது என்று வாதிப்பது எவ்விதத்தில் ஸங்கதமாகும்? வஸ்து ஸ்திதி என்னவென்றால், ஜகத்தை ஸ்ருஷ்டித்த பகவான், அதன் க்ஷேமத்தைக் கருதி மஹர்ஷிகளைக் கொண்டு 'இது செய்யத் தகுந்தது, இது செய்யத் தகாதது' என்பதை விளக்கும் சாஸ்த்ரங்களை ப்ரவ்ருத்திப்பித்திருக்கிறான் என்பது தான். ஆகையால் ந்யாயாபந்யாயங்களையும் தர்மாதர்மங்களையும் புண்யாபுண்யங்களையும் நாம் சாஸ்த்ரங்களைக் கொண்டு சிக்ஷித்துக் கொள்ளுதல் வேண்டுமே தவிர, சாஸ்த்ரங்களைச் சாராத ந்யாயா பந்யாயங்கள் சில இருக்கின்றன வென்றும் அவைகளைக் கொண்டு சாஸ்த்ரங்களை நாம் சிக்ஷித்தல் வேண்டு மென்றும் சொல்வது சரியாக மாட்டாது,

"[illegible]"

என்பது பெரியோர்களுடைய ஸூக்தி. நிற்க, நமக்கு ப்ரியமாக இருக்கும் அம்சத்தில் சாஸ்த்ரத்தை ப்ரமாணமாக ஒத்துக்கொண்டு, அப்ரியமான அம்சத்தில் அதை நிராகரிப்பதும் ருஜு ஸ்வபாவத்திற்கு விருத்த மாதலால், மஹாத்மா காந்தி சாஸ்த்ரத்திற்கு விருத்தமாகத் தீண்டாமையை விலக்க வேண்டு மென்று வாதிப்பதும் மஹா ஜநங்களுக்கு அம்மாதிரியான உபதேசத்தைச் செய்வதும் மஹத்தான அபராதம் ஆகும் என்றே நாம் சொல்வோம்.

இரண்டாவது: அவர் பணம் வஸூல் செய்வதில் இறங்கி விட்டாரே என்று நாம் மிகவும் சோகிக்கிறோம். இதுவரை நாம் அவரிடம் செய்திருந்த கௌரவ புத்தி முழுவதும் அவர் நிஸ்ப்ருஹராக இருந்தார் என்பதனாலேயே. இப்பொழுதும் அவர் தமது சொந்த உபயோகத்திற்காக த்ரவ்யத்தை ஸம்பாதிக்க வில்லை என்பது உண்மையேயாயினும், த்ரவ்ய ஸம்பாதநத்தில் ப்ரவ்ருத்தித்து விட்டார் என்பதே அவருடைய மஹிமையைக் குறைத்து விட்டது என்றே நாம் க்ரஹிக்கிறோம். 'சொந்த உபயோகமுண்டு' என்பது மாத்ரம் த்ரவ்ய ஸம்பாதநத்திலுள்ள தோஷத்திற்கு நியாமகமன்று; த்ரவ்ய ஸம்பந்தமே தோஷாவஹம்' என்பது நம்முடைய த்ருடமான அபிப்ராயம். த்ரவ்யம் ஸம்பாதிப்பதில் ஒருவன் இறங்கிவிட்டால், அவனுக்கு, த்ரவ்யத்தால் உபகரிப்பவனிடத்தில் ஒரு வித ப்ரீதியும் உபகரியாதவனிடத்தில் ஒரு வித அப்ரீதியும் பரவசமாகவே உண்டாகின்றது. அந்த ப்ரீத்ய ப்ரீதிகளின் வழியாக மற்றைத் தோஷங்களும் கொஞ்சம் கொஞ்சமாக அவனிடம் ஆவிர்ப்பவிக்கின்றன. இது லோகாநுபவம். மஹாத்மா காந்தியும் ப்ரக்ருதி ஸம்பந்தம் பெற்றவரே. அவரிடத்தில் மாத்ரம் அந்தத் தோஷம் எப்படி ஆவிர்ப்பவியாமல் இருக்கும்? துர்ப்பிக்ஷத்தால் ஜநங்கள் அநுபவிக்கும் கஷ்டத்தை அறியாமல் தம்மிடம் வந்த ஸ்திரீ பால வ்ருத்தர்களெல்லாரையும் அவரவர்கள் தம் தம் தேஹத்தில் பூண்டிருந்த ஆபரணங்களைக் கழற்றிக் கொடுக்கும்படி அவர் எவ்வித கூச்சமு மின்றிக்கே நிர்ப்பந்தித்துக் கேட்டார் என்பதே அவரிடத்தில் தோஷங்கள் ப்ரவஹித்து நின்றன என்பதை நன்கு காண்பிக்கின்றது. 'கநக மென்றால் கண்ணை மூடுபவர்களன்றோ மஹான்கள்? 'இதையும் கொடு, அதையுங் கொடு' என்று கேட்குமவர்களிடம் மஹாத்மத்தன்மை எவ்விதத்தில் ஒட்டும்?

மஹாத்மா, 'சாஸ்த்ரத்தை நம்புகிறவர்களுள் நாமும் ஒருவர்' என்று சொல்லிக் கொள்ளுகிறபடியால் நாம் இவ்வளவு தூரம் இதைப் பற்றி எழுதத் துணிந்தோம். ஜாதிநியமங்களைப் பற்றி நமது சாஸ்த்ரம் சொல்வதை அவர் கொஞ்சம் கவனித்தல் வேண்டும்.

"[illegible]।
[illegible]॥"

[பகவத் ப்ரீதியை அடைய விரும்புகிறவன் இந்த லோகத்தில் இருக்கும் காலமெல்லாம் ஆஹாரம் முதலியவைகளில் நியமங்களுடன் இருப்பது போல வர்ணாச்ரம தர்மங்களுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.]

"[illegible] ।
[illegible]"॥

[ஆனால், பகவத் பக்தன் விஷயத்தில், ஜாதி ப்ரயுக்தமாக அவனை நாம் ஒருபொழுதும் தாழ நினைக்கக் கூடாது. அப்படித் தாழ நினைப்பதற்காக அவனுக்கும் நமக்குமுள்ள ஜாதி வ்யத்யாஸத்தை நாம் அநுஸந்தாநம் செய்தால், அது நமக்கு அநர்த்தத்தையே விளைவிக்கும்; அவன் விஷயத்தில் ஜாதி வ்யத்யாஸத்தைப் பாவிப்பதெல்லாம் சாஸ்த்ர வ்யவஸ்தை ப்ரகாரம் அநுஷ்டாநாதிகளை நடத்திக் கொள்வதற்காக மாத்ரம் இருத்தல் வேண்டும். அப்பொழுது அது எவ்வித அநர்த்தத்தையும் விளைவிக்க மாட்டாது.] இதிலிருந்து நாம் மற்றவர்களைத் தாழ நினைக்க வேண்டும் என்பது நமது சாஸ்த்ரம் செய்த மஹர்ஷிகளின் கருத்தன்று என்பதை வ்யக்தமாக அறியலாம். சிற்சில வ்யவஸ்தைகளுக்குக் கட்டுப்பட்டு நாம் நமது நடவடிக்கைகளைப் பாது காத்து வரவேண்டும் என்பதே அவர்களின் நோக்கம். அந்த வ்யவஸ்தைகளின் ஆந்தர அபிப்ராயம்

அந்த வ்யவஸ்தைகளைச் செய்யும் நமது ரக்ஷகர்களுக்கே தெரியும்; நமக்கு அது புலப்பட மாட்டாது. இதுதான் ரஹஸ்யம்.

* * * * *

பல ஸௌஹ்ருத்துக்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, நாம் நமது தீபிகையில் இந்த மாஸத்திய ஸஞ்சிகை முதல் சில புதிய விஷயங்களை மாஸம் தவறாமல் வெளியிடுவதற்கு தீபிகையின் ஏற்பாடு செய்திருக்கின்றோம். முதலில் பகவத் அபிவ்ருத்தி ராமாநுஜ ஸித்தாந்தம் எங்கும் பரவவேண்டும் என்னும் எண்ணத்துடன் பகவத்ராமாநுஜனை முன்னிட்டு ஆங்காங்கு ஸ்தாபிக்கப் பட்டுள்ள ஆசார்ய ஸ்தாநங்களின் மஹிமையும் விபூதியும் பல பெயருக்கு உள்ளபடி தெரியாமலே அப்ரகாசிதங்களாக இருக்கின்றன. அவையெல்லாம் ஆஸ்திகர்களாயுள்ள நமது ஸௌஹ்ருத்துக்களுக்கு ப்ரகாசிப்பிக்கப் படவேண்டும் என்பது மிகவும் முக்யங்களான விஷயங்களுள் ஒன்று. அதை உத்தேசித்து அந்தந்த ஆஸ்தாந அதிபதிக ளெல்லோருக்கும் நாம் இந்தத் தீபிகை வாயிலாகவும் வேறு விதமாகவும் விண்ணப்பப் பத்திரிகைகளை அனுப்பி யிருக்கிறோம். அவர்கள் அவ்வவ் விடங்களிலுள்ள மநுஷ்யர்களைக் கொண்டு ஒவ்வொரு மாஸத்திலும் அந்தந்த ஸந்நிதிகளில் நடைபெறும் க்ரந்த காலக்ஷேபங்களைப் பற்றியும் நித்யோத்ஸவாதிகளைப் பற்றியும் ஸங்க்ரஹமாக அறிக்கைகளை அனுப்ப நியமிக்க வேணு மென்பது நம்முடைய ப்ரார்த்தனை. அந்த ப்ரார்த்தனையை அவர்கள் க்ருபையுடன் தலைக்கட்டி வைக்கும் பக்ஷத்தில், அது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்திக்கு அநுரூபமாக இருப்பதுடன், அநேக ஆஸ்திகர்களுக்கு மிகவும் உபகாரகமாகவும் இருக்கும் என்பது நமது நம்பிக்கை. இரண்டாவது, நமது ஆசார்யர்கள் அநுக்ரஹித்துள்ள பகவத் ஸ்தோத்ர ரூபங்களான திவ்ய ஸூக்திகளுக்கு எளிய தமிழ் நடையில் வ்யாக்யாநம் ஒன்றைத் தீபிகை வாயிலாக வெளியிடவேண்டும் என்பதும் நமது உத்தேசம். அதற்காக ஸ்ரீ கூரேசனுடைய பஞ்ச ஸ்தவத்திலுள்ள ஸ்ரீ ஸ்துதியை முதல் முதலாக உபக்ரமித்திருக்கிறோம். அவருடைய ஐந்து ஸ்தவங்களை முடித்த பிறகு, ஸ்ரீ பட்டர் முதலிய மற்றை ஆசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளை எடுத்துக்கொள்ளலா மென்பது நம்முடைய எண்ணம். இந்த எண்ணங்களெல்லாம் த்ருப்திகரமாக முடிவு பெறுவது நமது ஸௌஹ்ருத்துக்களின் ஸஹாயத்தைச் சார்ந்து நிற்கின்ற தாதலால், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் அபிமாநம் வைத்திருக்கும் ஆஸ்திகர்களெல்லாரும் தீபிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து, தம் தம்மால் இயன்ற வரையில் த்ரவ்ய ஸஹாயம் செய்ய வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

உரைத்தலுங் கொணர்ந்தத்தச்ச னொலிகட லுலகையெல்லாம்
பரப்பியோர் புறத்தின்மற்றைத் தட்டிலப் பதியைத்தானே
நிரப்பலும் விதேகனுண்ட நிகரற மழிசைநிற்க
வரைக்குலத் துடனேமற்ற வையக மெழுந்ததம்மா. 29

கண்டதை முனிவரெல்லாங் களிப்பொடு வியந்துபோற்றிக்
கொண்டினி யிதுவேநன்ம கீசார மெனவேநான்கு
துண்டனைத் தொழுதுமீண்டத் தொல்பதி யணுகினாருங்
கொண்டலார் வண்ணன்றன்னைக் குறித்திருந் தவத்திலார்ந்தார். 30

அவர்களி லொருவனுய பார்க்கவ னரியையுள்ளப்
பவர்நிறப் பதுமத்தூடே பதிந்திட விளக்கிவையத்
தெவர்களு மிறும்பூதெய்தக் கால்சரு கிவற்றையுண்டு
தவர்களுக் கரசேயென்னத் தகுமென வொழுகினானல். 31

பாம்பொடு பயிலும்பஞ்சா னனத்தொடு கரியும்பாயும்
வேங்கையி னுடனேமானும் விருப்பொடு பயிலுமந்த
மேம்படு முனிவனேற்கும் மிருமணம் விரவப்பூக்கும்
பூம்பொழி லிடையிலந்தப் புனிதனின் றகைமைதன்னால். 32

ஆயிரம் விழியோனந்த வருந்தவன் றவத்தின்மிக்க
தாயவெய் யொளியைநோக்கித் தன்பத மலைக்குமிந்தத்
தூயவெந் தவமென்றெண்ணிக் குலைத்திட வதனைத்தோகை
யாயவங் கனுழுமோர்பெண் ணரசியை யழைத்துச்சொல்வான். 33

பங்கயத் திடையிரண்டு செங்கயல் பயில்வதொப்ப
வங்கனும் வதனமாதே யம்புவி வ்தனமென்னப்
பொங்குறு மழிசையூடு பொருவருந் தவயோகத்திற்
றங்குபார்க் கவன்றனேன்மைத் தடுத்திடங் கெழுகவென்றான். 34

மொழிவது செவியுற்றந்த முருந்துறழ் முறுவன்மாதுங்
கொழுமலர்க் கணையோன்வெய்ய பூங்கழை குழைத்துப்பின்னா
ரெழுதர் வெழுந்துவிண்ணி னின்றுமவ் விருடிவாழும்
பழுதறு பழுவத்தூடு மின்னெனப் பொலிந்துநின்றாள். 35

காலமும் வயந்தமாகிக் கானக முழுதுமாலை
மாலையாய்த் தழைத்துயர்ந்த மரங்களும் பழுப்புநீத்துக்
கோலமார் பசியசெய்ய குழைதளிர் மலிந்துநாளு
மாலுறு மணங்கள்வீசும் மலர்சினை குழையப்பூத்த. 36

வயந்தநா யகனைக்கண்டிவ் வாறலர்ந் திலகுசோலை
யியைந்தநா யகனைக்கண்டோர் துடியிடை யிழைத்தபூவார்
நயந்திடு புதியகூறை நன்குடுத் தணிகள்பூண்டு
செயந்தரப் பொலிவதொக்குஞ் செறிகுழன் மலர்கள்சேர்த்தி. 37

மாதவிமலர்க் குள்ளாடி மணம்புதி துடனின்சேவல்
போதரப் பூத்தமாவின் பொழிலிடம் பிரிந்துசாம்பும்
ஆதர முடையபேடைக் குயிலதை யகற்றுமூடி
மேதகு புதியவாசை மனைவிபான் மேவுகென்றே. 38

தும்பிகண் மதுவையுண்டு துணையுட னினிதுபாடும்
வம்புலாம் பொழிலினூடே வளர்முருக் கீன்றதோடு
தம்புகழ் நாசியொக்கு மென்றதைத் தமதுமூக்கின்
வெம்பியே கறிக்கும்பைந்தார்ப் பசுங்கிளித் திரள்கள்வீழ்ந்தே. 39

வந்தவள் கரியகூந்தன் முகிலென மருண்டுவாசக்
கொந்தலர் பொழிலின்மஞ்ஞைக் குலநடம் புரியக்கீதம்
விந்தையி னளிகள்பாட வேங்கையின் முழக்கமென்னும்
முந்துறு முழவமார்ப்ப முல்லைமான் முறுவல்பூக்கும். 40

தாதவிழ் தருவின்மாலைத் தையலு மினையபோழ்தத்
தோதருந் தவசிமுன்ன ருலவிட வவனுநோக்கி
யீதென முகிலினின்று மிறங்கிய கொடிமின்னென்று
மாதுரு வெடுத்தென்மாடு நடைபயில் வதனைமானும். 41

சேருயர் கனகத்தாலிச் சேயிழை யுருவமுற்று
மாகியங் கலுழ்வதென்ப தொன்றல வியப்பிவ்வாட்டி
யோகியு மருளற்கொத்த வுறுப்பெலா மொளிரும்வண்ணம்
வாகைநுண் கலையையீங்கு வகையுற வுடுத்ததென்னே. 42

என்றவன் கலங்குமாறவ் வேந்திழை தெரியலோடுந்
துன்றிருங் கூந்தல்சோரத் துணைக்கரும் புருவவில்லை
நன்றுற வளைத்துநீல நயனவே லவன்றன்போரக்
குன்றெனுங் குணமுங்குன்றப் போழ்ந்திடக் குறித்துவிட்டாள். 43

அன்னது தவசிநெஞ்சிற் பாயுமு னனங்கன்றென்ற
லின்னிசைக் குயில்களாதி பரிகரத் துடனேயேன்று
கன்னலின் றனுவைவாங்கிக் காரளி யொழுங்காநாணின்
மன்னிய வுரத்தின்விட்ட மலர்க்கணை நுழைந்தமாதோ. 44

நுழைந்ததும் படிவத்தோனு நோன்பினைத் துறந்துமுன்னம்
விழைந்துமே னகையின்வஞ்ச மயற்குழி விழுந்தான்போலக்
குழைந்தக மவண்மேற்காதல் கொண்டவ ளுடனேகூடி
யிழைந்தனன் கணமுநீங்கா தகங்களித் திருந்தான்மன்னோ. 45

பாலொடு கலந்தநீரிற் பண்ணவ னொழுகுநாளி
லாலிளந் தளிர்போலந்த வரம்பையி னகடுவீங்கி
நாலிரண் டிரண்டுதிங்க ணடந்தபி னுற்பந்தன்னை
மேலுறப் பிணித்தபிண்ட மொன்றினை மெலிந்துபெற்றாள். 46

பெற்றபி னதனையன்னாள் வைத்தொரு பிரப்பந்தூற்றில்
விற்றரு விமானமூர்ந்து விண்ணுல கெழுந்தபின்னர்
நற்றவன் விரதம்போய தெனநனி நலிந்துதேறி
மற்றொரு வனத்திற்சென்று தவநெறி மணந்துநின்றான். 47

முன்னொரு மூவர்வந்த வாண்டுதைம் மகத்திற்றோன்று
மன்னதோர் பிண்டந்தன்னைப் போழ்ந்துமா லழலுமாழி
தன்னொளி யுருவந்தாங்கி மழிசைமன் னுதயமானான்
பொன்னிகர் கலுழனண்டம் போழ்ந்துமுன் னுதித்தபோலும். 48

பிறந்திடு குழவியாழ்வான் பான்முலை பெறுதலின்றிக்
கறந்திடு கறவைநீப்பக் கதறிளங் கன்றேபோலச்
சிறந்திடு தொனியிற்சால வாற்றலுந் திருமாதோடு
முறைந்திடு மழிசைதன்னி லுவணகே தனனுந்தோன்றி. 49

கருணையா மிரதமூறுங் கடைக்கணிப் பெனுந்தீம்பாலைப்
பருகுமா றளித்தேசெய்ய பறவையி னெழுந்தபின்னர்க்
கருடவா கனனீத்த கடுமையை நினைந்துநெஞ்ச
முருகியஞ் சனையின்செல்வ னுறழ்ந்துராத் தழுதானன்றே. 50

வேறு

அங்கி ரும்பிரம் பறுப்பவ ரனுகியச் சிசுவைச்
சங்கை கொண்டுகண் ணுறுகையி லவரிலொர் சதுரந்
தங்கு வோன்றிரு வாளனென் றொருபெயர் தரித்தோன்
பொங்கி யுள்ளமப் புலவனைக் கரங்களி லெடுத்தான். 51

சென்று தங்குரம் பையினிடம் பங்கயச் செல்வி
யென்ற தன்மனைக் கிழத்தியி னெழிற்கரத் தளிக்க

வின்றி நாமகப் பேற்றினை யினைவது தேர்ந்தே
நன்று நாரண னளித்தன னமக்கெனக் களித்தாள். 52

உச்சி மோந்தகங் குழைந்தக டிளைந்துதா னீன்ற
பச்சை யங்குழந் தையினிடம் பரிந்திடும் பாங்கி
னிச்சை யாலெடுத் தெழிலுறு மார்புட னணைக்கக்
கச்சை யங்குயத் தமுதமுங் கான்றது கடுகி. 53

ஒழுகு மின்பய முதவவு மருந்திடா தொன்று
மழுகை யின்றியு மசைவது மின்றியு மரியின்
கெழுவு தண்ணருட் பயந்தனைப் பருகியே கிளர்ந்து
வழுவ ருந்திரு வறிவொடு வளர்ந்தனன் மாதோ. 51

இன்ன வாறுமைத் திராவரு ணியையியைந் திவனும்
மன்னு காலையி லத்திரு மழிசையி லுறைவோன்
உன்னு நீதிய னுழவர்தங் குலத்தினி லுதித்தோன்
அன்ன செய்திதன் செவியுற வறிசயித் தாங்கே. 55

கன்று கொண்டபின் கறந்திடு கறவையி னமுதஞ்
சென்று கொண்டவன் மழிசையான் பெறலருஞ் செல்வி
நின்று கொண்டுகண் புளகுட னிமிர்தர மகிழ்ந்து
நன்று கொண்டவர் நாண்மல ரடிசிரந் தொழுது. 53

விந்தை யாயவ தரித்திடு மெந்தையே வினையேன்
றந்த விந்தநெய் ளமுதினை யமுதுசெய் கென்று
சிந்தை யோடவன் பரவிட வவனருள் செய்தே
யந்த நற்சுவை யமிழ்தினை யமுதுசெய் தனனால். 57

எச்ச மின்றியே மூப்பினிற் பெருகிய விவனும்
நிச்ச மன்புடன் மனைவியு நியமமுஞ் செறிய
வைச்ச தீஞ்சுவைப் பயந்தனை வாய்மடுத் தாழ்வான்,
மெச்ச யாவருஞ் செழித்தனன் மெலிவறப் பரிவின், 58

ஏரின் வாழ்பவ னிவ்வண நிகழ்த்திட வொருகா
லார வுண்டபின் மிகுந்திடு மமுதையவ் வாழ்வா
னீரி துண்ணுமி னெனவருள் புரிந்தன னியமஞ்
சாரு மத்திருத் தம்பதி தனையழைத் தருகே. 59

பத்தி யாலவர் பவித்திரத் துடன்பரு கியதுஞ்
சத்தி யாலதின் றளர்தரு முதுமையுந் தணந்து
சித்தி யாதயௌ வனமது செறிந்தெழில் பெருகும்.
வித்தி யாதர மிதுனமா மெனவிளங் கினரால். 60

பின்ப வன்றன தில்லவ ளொடுமுதம் பெருகி
யன்பு கூர்ந்தொழு கமயமோர் தினந்தனி லாழ்வா
னின்பு கூர்ந்தருள் பயமது பருகிய வியைபால்
தன்க ருங்குழன் மனைவியுந் தரித்தனள் கருவை. 61

திங்க ளொன்பதுந் தீர்ந்தபின் மதியினிற் றெரிவை
பொங்கு ஞானியாம் புதல்வனை யுயிர்த்துமுன் பொருவி
லெங்கு மஞ்சுறுஞ் சிலைக்கர விதுரனை யீன்ற
கொங்கு வார்குழற் கொம்பனை யெனவொளி கூர்ந்தாள். 62

கண்ட வன்மகப் பேற்றினைக் களிக்கடன் மூழ்கி
பெண்டி சைக்கணு மிசைபெறுங் கணிகண னென்னுந்
தண்ட மிழ்ப்பெயர் சாத்தினன் வளர்ந்திடத் தக்க
*வண்டி லெண்ணருங் கலைகளு மறிவுற வமைத்தான். 63

கற்று யாவையுங் கருத்துறக் கணிகணன் கலையிற்
சொற்ற நன்னெறி யொழுகியே சுருதியோர் பரவும்
நற்ற வந்தனக் குறையுளா மழிசைமன் னளினப்
பொற்றி ருப்பதப் பணிவிடை புரிந்தனன் போந்தான். 64

பத்தி சாரனும் பாலமு தருந்தலு மொருவி
முத்தர் வாழெது கிரியவன் முளரியின் பதத்தை
வைத்த வன்றிருக் கருணையாம் வழிதரு மமுதை
நித்த முண்டக நிறைவுறச் செழித்தன னெறியால். 65

போத மூர்த்தியா யின்னணம் பெருகினும் புனிதன்
சாதி பெற்றிடுந் தொழில்கொடு தரையினர் மருளப்
பீத கப்பிரம் பறுத்ததின் முறம்பல பின்னி
யாத ரத்துட னனைவருங் கொளவிலைப் படுத்தே. 66

மாச டைந்திடுங் குரம்பையுண் மகிழ்ந்துறை தரினுந்
தேச மெங்கணுந் தெளிவுறுந் தனதொளி பரப்பி

---

* ஆண்டு என்பதன் குறுக்கல்.

வீசு வெங்கதிர்க் கடவுளால் வெளியிரு ளகலி
னூசு தங்கக விருளொழிந் தகலவீற் றிருந்தான். 67

வேடர் வைகுறுஞ் சேரியும் பின்பவன் விடுத்துக்
காடெ ழுந்தவ னுயிர்ப்பினைக் காண்கொளு தடைத்துப்
பாடு றுந்தன தகந்தனைப் பகலென விளக்கி
நாட ருந்திரு நாரணன் றனையதி னிறுவி. 68

நாலி ரண்டியோ கந்தனை நணுகியப் பெருமான்
காலி ரண்டெனுங் கமலமா மலர்க்கடைப் பற்றிப்
பாலி ரண்டினும் பசையற வொருவியே யைந்தி
னேலி ரண்டுறா றுண்டினை யிவ்வணங் கழித்தான். 69

வேறு.

பின்பொன்றோ டொன்றெவ்வாப் பிணக்குபல
சமயங்கள் பேசுந் தன்மை
நன்காயத் துணிந்துலுக சாக்கியகா
பிலசமண முதல நாடும்
வன்பாய புறச்சமயத் தொடுசைவம்
வைசெடிகம் பாட்ட மன்றி
யின்பறுமா யாவாத முதலறியாச்
சமயத்து மிழிந்து மன்னோ. 70

அந்தந்த மதங்களிலும் மவரவரா
யாசரித்தே யனைத்துந் தேர்ந்து
மெந்தெந்த விதத்திலுமோர் பயனின்றிக்
களைந்தவற்றை யிறைவ னுண்மை
யிந்திந்த விழிசமயத் துழலுபவர்க்
கொருபோது மெட்டா தென்று
மெந்தந்த மதத்தினரை நீத்தவற்றை
நோன்மையுறு மொன்றே யென்று. 71

இவ்வண்ண மொருநாறுண் டிச்சமயக்
குட்டைகளைக் குழப்பி யேறி
யுய்வண்ணம் வைணவமே யல்லதொன்
றில்லையென வுணர்ந்து தேறி

யவ்வண்ண வெழிற்கலச வாரிதியி
லாடியய னாலுர்க் கீசன்
செவ்வண்ணத் திருமகளார் மார்பனனே
பரம்பொருளென் றறிந்து தேர்ந்தான். 72

ஆழ்வாரும் வேதாந்த விழுப்பொருளின்
மேலிலகு மரிய சோதி
வாழ்வாக வறிவுறவே வாமனனு
மதுகொண்டு மயர்வை யென்றும்
போழ்வாளின் மதியருளித் தனதான்ம
சொரூபமதைப் புலப்ப டுத்தித்
தாழ்வாரே கண்டறியுந் தன்னரிய
ஞானநி கலையுந் தேற்றி. 73

காமற்குத் தந்தையென்று கழறுவதை
நிண்ணயிக்குங் கண்ட கண்க
ளேமமுறும் பெயர்வரிதா யெழிலார்ந்த
திருவுருவு மிலகுஞ் சோதித்
தூமணிகள் பலநிரைத்த முடிமுதலாத்
தொகைபெறுபல் பணியுந் தொன்மை
யாமவுணர் குலங்களையு மயிலார்ந்த
வைம்படையு மடைவே தோன்ற. 74

ஒருக்கணமு மகலாமே தயையுருவா
யுரத்தெழுந்த வலர்மேன் மாது
மிருபுறமு மிணைந்துறையும் பூநீளை
யெனுமெழில்சேர் நாய்ச்சி மாரு
முருகிமன மெம்பெருமா னியைபொன்றே
தாரகமாய்ச் சூழ்ந்தே யுய்யும்
பெருகரிய ஞானியனந் தன்முதலாம்
பரிசனத்தின் பெருமை தானும். 75

இன்னுமுள வானந்த மயமாயுஞ்
சத்துவமா யிணைந்து முள்ள
தன்னெருமா நித்தியவி பூதியையுந்
தாங்காணத் துலக்கி மற்றும்
பன்னரிய கால்பகுதி புருடமய
மாய்நிகழும் படைத்த லாதி

மன்னுமொரு முத்தொழிலு மன்னுதிரு
விளையாட்டு மறிவித் தானல். 76
பொறிகாலுந் திகிரிகொடு வெங்கரவைப்
போழ்ந்துகரி புரந்த மாலிற்
றெறியாலே தெருட்டியிடத் தெருண்டவனு
நிலைதளங்கா வுளத்தோ டென்று
மறியாத பேரின்பப் பரவையிடை
யாழ்ந்தரியே யளிகள் பாடும்
வெறியாருந் துளவமுடி வித்தகனே
யுனதருளால் வினைபோ யுய்ந்தேன். 77
சாக்கியமுங் காபிலமுஞ் சங்கரனு
ராக்கியதுஞ் சமணந் தானும்
நோக்கியுமன் றொருபயனு நுகராது
விழற்கிறைத்த விதமே நொந்து
பாக்கியமும் பண்டுளதா லுனதரிய
பங்கயத்தாள் படிந்த வெற்குப்
பார்க்கவரி தென்னுளதென் றவனடியைப்
பணிந்துபர வசமாய் நின்றான். 78
அம்புதமா ரின்பொழில்சூழ் திருமழிசை
யானிந்த வடைவே தேர்ந்து
நம்பெருமாள் திருவடியை யொருநொடியு
மறவாமே நவின்று நாவா
லம்புமலர் மல்கருங்க சேந்திரபுட்
கரணியிருஞ் சரையி லார்ந்தே
யும்பர்தொழும் பரிசுடனே யோகியிறை
யாகிமகிழ்ந் துறைந்தா னங்கே. 79

வேறு

சங்கர பரிபவம்

ஆங்கம் மேலோ னுறைபோழ்தி
லரனு ரஞ்சொன் மலைகளும்
பாங்கர் படிய வம்பரத்திற்
படருங் காலை யவர்கீழல்
தாங்க லாகா தெனவொதுங்க
வியந்து கண்டத் தம்பதிக
ளோங்கு மூர்த்தி தனைநிறுத்த
வுமையா ளீசற் கிதுரைப்பாள். 80

பாவார்த்த கர்த்ருத்வஸ்ய நைவ ஹி நியோஜ்யத்வம்; யதோக்தம்—
'நியோஜ்ய: ஸ ச கார்யம் ய: ஸ்வகீயத்வேந புத்யதே', இதி। 'யஷ்ட்ருத்வாநுகுணம் தஸ்ய ஸ்வர்கித்வம்' இதி சேத், 'தேவதத்த: பசேத்' இதி வாக்யே கர்த்ருதயா ச்ருதஸ்ய தேவதத்தஸ்ய பாகப்ரயோஜநம் பாகாநுகுணமிதி பசநே கர்த்ருத்வம் ந யுஜ்யதே।

கிஞ்ச, அதிகாரஸ்வபாவம் ஸ்வர்கித்வம் கிமித்யேவ ஆஶ்ரீயதே? 'ஸ்வர்ககாமத்வஸம்பந்த்யதிகார்யநுபபத்தே:' இதி சேத், கர்த்ராநுபபத்தி:? 'விஷயவிஷிதஸ்வர்கோ ஹி ஸ்வர்ககாம:; தஸ்ய ஸ்வர்ககாமஸ்ய காம்யஸாதநஸாவி ஸ்வர்க

செய்வது' என்னும் க்ரியையில் கர்த்ருத்வம் கல்பிக்கப்படுகின்றது. அதுதான் நியோஜ்யத்வம் என்பதை 'நியோஜ்ய: ஸ ச' இத்யாதியான அவர்களுடைய வாக்யமே விளக்குகின்றது. 'அப்படி புத்தியில் கர்த்ருத்வாந்வயம் செய்வது யாகம் செய்பவன் தன்மைக்கு ஒத்திருக்கிறபடியால் நாங்கள் சொல்வது அயுக்தமன்று' என்று அவர்கள் வாதிப்பதும் ஸாத்யமாக மாட்டாது. ஏனென்றால், 'தேவதத்தன் சமையல் செய்யவேண்டும்' என்று ஒரு கட்டளை பிறந்தால், அப்பொழுது சமையல் செய்வதைக் குறித்துக் கர்த்தாவாகக் கூறப்பட்டுள்ள தேவதத்தனுக்கு, 'சமையல் செய்யும் பொருட்டுஅவன் புறப்பட்டுப் போவதும் அவனாற் செய்யப்படவேண்டிய சமையலுக்கு ஒத்திருக்கின்றது' என்னும் காரணத்தைக் கொண்டு அவன் போகும் வ்யாபாரத்தைக் குறித்து கர்த்ருத்வம் கல்பிப்பது யுக்தமாக மாட்டாதன்றோ?

என்னும் க்ரியை நியோஜ்யனை ப்ரதிபாதிக்கின்றது என்று சொல்வது சப்த சாஸ்த்ர விருத்தம்.

யஷ்ட்ருத்வாநுகுண... 'அப்படிப் புத்தியில் கர்த்ருத்வம் செய்வது யாகத்தில் கர்த்ருத்வம் சொல்வதற்குத் துல்யமே; ஏனென்றால் அப்படிச் செய்யும் தன்மையானது யாகம் செய்யும் தன்மைக்கு அநுகுணமன்றோ? ஆகையால் வேறு க்ரியாந்வய மில்லை' என்று மீமாம்ஸகர்கள் வாதிக்கலாம். அப்படி வாதிப்பது சரியன்று என்பது மேல்கூறப்படும் த்ருஷ்டாந்தத்தால் விளங்கும்.

'க்ருதிக்கு உத்தேச்யம் கார்யம்' என்று மீமாம்ஸகர்கள் சொன்னது இவ்வளவால் நிராகரிக்கப்பட்டது. 'உத்தேச்யம்' என்னும் பதத்தின் பொருள் என்னவென்று கேட்டதற்கு அவர்கள் பலவிதமாக் ஸமாதாநம் சொன்னார்கள். முதலில் 'எதை அதிகரித்து க்ருதி இருக்கிறதோ அது க்ருதியின் உத்தேச்யம்' என்றும், பிறகு 'ப்ரேரகத்வம் க்ருத்யுத்தேச்யம்' என்றும், பிறகு 'க்ருதியைக் குறித்துச் சேஷியாக இருப்பது க்ருத்யுத்தேச்யத்வம்' என்றும் சொன்னார்கள். இவையெல்லாம் நிராகரிக்கப்பட்டன. இவ்விதம் இவைகளை நிராகரித்ததாலேயே 'ஸ்வத: இஷ்டமாயிருப்பதே உத்தேச்யத்வம்' என்பதும் 'க்ருதியின் பல விசேஷமே க்ருத்யுத்தேச்யம்' என்பதும் அர்த்தத்தாலே நிராகரிக்கப்பட்டன. கார்யத்தை அநுபந்தித்திருக்கும் அர்த்தமும் தூஷிக்கப்பட்டது. இதுதான் இவ்வளவாற் சொல்லப்பட்ட விஷயம்.

ஸித்தம், க்ஷணத்வம்ஸிநீ யாகாதிக்ரியா ந ஸமர்தா' இதி சேத், அநாக்ராதவேதவிஜ்ஞாநாநாமியமநுபபத்தி: | ஸர்வை: கர்மபிராராதித: பரமேஶ்வரோ பகவாந்நாராயணஸ்தத்ததிஷ்டம் பலம் ததாதீதி வேதவிதோ வதந்தி | யதாஹ வேதவிதக்ரேஸரோ த்ரமிடாசார்ய: - "பலஸம்பிப்ஸயா ஹி கர்மபிராத்மாநம் பிப்ரீஷந்தி, ஸ ப்ரீதோऽலம் பலாயேதி ஶாஸ்த்ரமர்யாதா"

ஸித்தம்...' லிங் முதலான சப்தங்கள் ஸ்தாயியான [காலாந்தரத்திலும் இருக்கக் கூடியதான] அபூர்வம் என்பதைச் சொல்லுகின்றன ' என்று எதற்காக நீங்கள் வாதிக்கிறீர்கள் ? 'அப்படிச் சொல்லாவிட்டால் ' ஸ்வர்க்க காம ' என்னும் பதம் அவ்விடத்தில் சேர்த்துப் படிக்கப்பட்டிருப்பதானது ஒத்துவர மாட்டாது ' என்று ஸமாதாநம் சொன்னால், ' எப்படி ஒத்துவர மாட்டாது ?' என்று நாங்கள் கேட்போம். 'ஸ்வர்க்க காமன் என்று சொல்லப்படுமவன் ஸ்வர்க்கத்தை ஸாதித்துக்கொள்ளவேண்டு மென்னும் விருப்பத்தை உடையவனன்றோ? அப்படிப்பட்ட ஸ்வர்க்க காமனுக்கு, ஒருக்ஷண காலம் மாத்ர மிருந்து உடனே நாசமடையும் யாகம் முதலிய க்ரியைகள், காலாந்தரத்தில் உண்டாகப் போகும் ஸ்வர்க்கத்தை ஸாதித்துக் கொடுப்பதில் எப்படி சக்தங்களாகும் ?' என்று ஸமாதாநம் சொல்லும் பக்ஷத்தில், அது ' அவர்கள் வேத ஸித்தாந்தம் இன்னது என்பதை அறியாதவர்கள்' என்பதையே விளக்குகின்றது என்றுசொல்லவேண்டும். ' பரமேச்வரனும் பகவானுமா யிருக்கும் நாராயணன் ஸகல கர்மங்களாலும் ஆராதிக்கப்பட்டவனாய் அப்படி ஆராதிக்குமவர்களுக்கு அவரவர்களால் இச்சிக்கப்படும் பலத்தைக் கொடுக்கிறான் ' என்பதன்றோ வேத மறிந்தவர்கள் சொல்லும் வார்த்தை? வேத மறிந்தவர்களுள் மிகச் சிறந்தவரான த்ரமிடாசார்யர்களும், ' பலம் தமக்குக் கிடைக்கவேண்டு மென்றன்றோ கர்மம் செய்யுமவர்கள் பரமாத்மாவை அந்தந்தக் கர்மங்களால் ஆராதிக்கிறார்கள் ? அந்தப் பரமாத்மா அந்த ஆராதநத்தால் த்ருப்தி அடைந்தவனாய் அவர்கள் அபேக்ஷிக்கும் பலத்தைக் கொடுப்பதற்குச் சக்தனே. சாஸ்த்ரம் சொல்வது இது தான் ' என்றே சொல்லியிருக்கிறார்கள். இதன் அர்த்த மென்ன

க்ஷணத்வம்ஸிநீ—கர்மங்களெல்லாம், எந்தக் காலத்தில் அவை அநுஷ்டிக்கப்படுகின்றனவோ அந்தக் காலத்தில் மாத்ரம் இருக்குமவை. அடுத்த க்ஷணத்தில் அவை நசித்து விடுகின்றன. அவை ஏதாவது ஒரு பலத்தைக் கொடுப்பதானால், தாம் இருக்கும் பொழுதே அந்தப் பலத்தை அவை கொடுக்கக்கூடுமே ஒழிய, தாம் நாசமடைந்த பிறகு கொடுக்கும் என்று சொல்வது ஒத்து வரமாட்டாது. யாகம் ஒரு கர்மம்; அது அநுஷ்டிக்கப்படும் காலத்தில் மாத்ரம் அதற்கு இருப்பு உண்டு. ஸ்வர்க்கமோ காலாந்தரத்தில் உண்டாகத்தகுந்தது. அதை அந்தக் கர்மம் எப்படி ஸாதித்துக் கொடுக்கும் ? இது தான் சங்கை. இந்தச் சங்கையை நிவ்ருத்தித்துக் கொள்வதற்காகவே, மீமாம்ஸகர்கள், 'யாகத்தால் அபூர்வமென்று ஒன்று உண்டாகின்றது; அது, யாகம் நாசம் அடைந்த பிறகும் நின்று ஸ்வர்க்கமாகிற பலத்தைக் கொடுக்கின்றது' என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதி | பலஸம்பந்தேச்சயா கர்மிபிர்யாகதாநஹோமாதிஷ்விந்த்ராதிதேவதாமுகேந தத்ததந்தர்யாமிரூபேணாவஸ்திதமிந்த்ராதிஶப்தவாச்யம் பரமாத்மாநம் பகவந்தம் வாஸுதேவமாராதயிஷந்தி | ஸ ஹி கர்மபிராராதிதஸ்தேஷாமிஷ்டாநி பலாநி ப்ரயச்சதீத்யர்த: | ததா ச ஶ்ருதி:—"இஷ்டாபூர்தம் பஹுதா ஜாதம் ஜாயமாநம் விஶ்வம் பிபர்தி புவநஸ்ய நாபி:" இதி | 'இஷ்டாபூர்தம்' இதி ஸகலஶ்ருதிஸ்ம்ருதிசோதிதம் கர்மோச்யதே | 'விஶ்வம் பிபர்தி' இந்த்ராக்நிவருணாதி ஸர்வதேவதாஸம்பந்திதயா ப்ரதீயமாநம் ஸகலமபி கர்ம தத்ததந்தராத்மதயாவஸ்தித:

வென்றால், லோகத்தில் இந்த்ரன் முதலிய தேவதைகளை உத்தேசித்து யாகம் தானம் ஹோமம் முதலிய கர்மங்களைச் செய்பவர்களெல்லோரும் ஒரு பலத்தை விரும்பியே அந்த இந்த்ரன் முதலிய தேவதைகளின் வாயிலாய் அந்த இந்த்ரன் முதலிய சப்தங்களால் குறிக்கப்படுகிறவும் ஸகலத்திற்கும் அந்தர்யாமியுமாக இருக்கிற பரமாத்மாவாகிற பகவான் வாஸுதேவனையே ஆராதிக்க இச்சிக்கிறார்கள். அந்த வாஸுதேவன் அந்தந்தக் கர்மங்களால் ஆராதிக்கப்பட்டவனாய்க் கொண்டு அப்படி ஆராதிக்கும்வர்களின் இஷ்டங்களெல்லாவற்றையும் நிறைவேற்றுகிறான்' என்பதுதான். வேதமும் 'இஷ்டாபூர்தம்' இத்யாதியான வாக்யத்தில் இதையே சொல்லுகின்றது. 'இஷ்டாபூர்தம்' என்பதால், ச்ருதி ஸ்ம்ருதிகளில் விதிக்கப்பட்டுள்ள ஸகல கர்மங்களும் சொல்லப்படுகின்றன. 'விஶ்வம் பிபர்தி' என்பதற்கு, ' இந்த்ரன் அக்நி வருணன் முதலிய ஸகல தேவதைகளின் ஸம்பந்தம் பெற்றவையாகத் தோன்றும் அந்தக் கர்மங்களை யெல்லாம், அந்தந்தத் தேவதைகளுக்கு அந்தராத்மாவாக இருக்

இந்த்ராதிதேவதாமுகேந இந்த்ராதிஶப்தவாச்யம் — இவ்விதம் அந்வயம் செய்து கொள்ளவேண்டும். இந்த வாக்யம் த்ரமிட பாஷ்யத்திலுள்ள 'ஆத்மாநம்' என்னும் பதத்தின் பொருளை விவரிக்கின்றது. 'வாஸுதேவம்'— இந்தப் பதம், 'பகவான் எல்லாவற்றுக்கும் அந்தராத்மா' என்பதற்கு ப்ரமாணத்தைக் குறிக்கின்றது. 'ஸர்வத்ராஸௌ வஸதி' [எல்லாவிடத்திலும் இவன் வஸிக்கிறான்] என்னும் காரணத்தாலன்றோ பகவான் 'வாஸுதேவன்' என்று சொல்லபடுகிறான் ?

இஷ்டாபூர்தம்–இந்த வேத வாக்யத்தின் அந்வயமாவது-' பஹுதா ஜாதம் பஹுதா ஜாயமாநம் விஶ்வமிஷ்டாபூர்தம் (பரமபுருஷ ஏவ) பிபர்தி, (ஸ:) புவநஸ்ய நாபி:' | 'இஷ்டம்' என்பது ச்ருதியில் விஹிதமாயுள்ள யாகம் முதலிய கர்மங்களையும், 'பூர்தம்' என்பது ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டுள்ள குளம் வெட்டுவது முதலிய கர்மங்களையும் குறிக்கின்றன. 'ஜாதம் ஜாயமாநம்' என்பதால் இறந்த காலத்திலும் நிகழ் காலத்திலும் நடைபெறும் கர்மங்களெல்லாம் சொல்லப்படுகின்றன. 'பஹுதா' என்பது 'சில கர்மங்கள் அக்நியைத் தேவதையாகவும், மற்றும் சில

பரமபுருஷ: ஸ்வயமேவ ஸ்வீகரோதி | 'புவநஸ்ய நாபி:'—ப்ராஹ்மணக்ஷத்ரியாதிஸர்வவர்ணபூர்ணஸ்ய புவநஸ்ய தாரக:, தைஸ் தை: கர்மபிராராதிதஸ் தத்ததிஷ்டபலப்ரதாநேந புவநாநாம் தாரக இதி நாபிரித்யுக்த: | அக்நிவாய்வாதி தேவதாநாம் ததா ததா அவஸ்திதிரபி ஸ ஏவேத்யாஹ "ததேவாக்நிஸ்தத்வாயுஸ் தத்ஸூர்யஸ் தது சந்த்ரமா:" இதி | யதோக்தம் பகவதா—

"யோ யோ யாம் யாம் தநும் பக்த: ஸ்ரத்தயார்சிதுமிச்சதி |
தஸ்ய தஸ்யாசலாம் ஸ்ரத்தாம் தாமேவ விததாம்யஹம் |

கும் பரம புருஷனே ஸ்வயமாகவே அங்கீகரிக்கிறன்' என்பது கருத்து. 'புவநஸ்ய நாபி:' என்றால், 'ப்ராஹ்மணன் க்ஷத்ரியன் முதலிய அநேக ஜாதிகளால் நிறைந்துள்ள இந்த லோகத்திற்குத் தாரகன்' என்று சொன்னதாயிற்று. அந்தந்தக் கர்மங்களால் ஆராதிக்கப்பட்டவனுய்க் கொண்டு பகவான் அவரவர்களின் இஷ்ட பலங்களைக் கொடுத்து ஜகத்தைத் தாங்கி வருகிறபடியால் அவன் 'நாபி:' என்று சொல்லப்படுகின்றன். 'ததேவாக்நி:' என்பது முதலான வாக்யங்களால், 'அப்படி அக்நி வாயு முதலிய தேவதைகளுக்கெல்லாம் அந்தராத்மாவாக இருக்கும் பகவானே அந்தந்தச் சப்தங்களெல்லாவற்றுலும் குறிக்கப்படுகின்றன்' என்பது விளக்கப்படுகின்றது. பகவத்கீதையிலும் ஸ்ரீ பகவான், "யோ யோ யாம் யாம் தநும் பக்த:" என்பது முதலிய ச்லோகங்களால் இந்த அர்த்தத்தையே சொல்லியிருக்

இந்த்ரனைத் தேவதையாகவும், இவ்வாறு பல தேவதைகளின் ஸம்பந்தத்தை அந்தக் கர்மங்கள் பெற்று நிற்கிற படியால் அவை பஹுவாக இருக்கின்றன' என்பதைச் சொல்லுகின்றது. இந்தக் கர்மங்களெல்லாவற்றையும் பரம புருஷனே ஸ்வயமே ஸ்வீகரிக்கிறன்; அதாவது- இந்தக் கர்மங்கள் பற்பல தேவதைகளை உத்தேசித்துச் செய்யப்படுமவையாகத் தோன்றின போதிலும், உண்மையில் அவை பரம புருஷனொருவனையே தேவதையாகக் கொண்டவை என்று சொன்னதாயிற்று. புவநஸ்ய நாபி:—குடம் எப்படி சக்ரத்திற்குத் தாரகமோ, அப்படிப் பரமபுருஷன் ஜகத்திற்குத் தாரகன். இஷ்டப்பட்ட பலத்தைக் கொடுக்குமவன் பரம புருஷனே ஆகிறபடியால் அவனே தாரகன் என்று சொல்லப்படுகிறன்.

ததேவாக்நி:...'பல தேவதைகளை உத்தேசித்துச் செய்யப்படும் கர்மங்கள் எவ்விதத்தில் பரம புருஷன் ஒருவனையே தேவதையாக உடைத்தாயிருக்கின்றன வென்று சொல்லக் கூடும்?' என்பதை இந்த உத்தரார்த்தம் விளக்குகின்றது. 'அக்நி வாயு சந்த்ரன் இவ்வாறு சொல்லப்படுமவர்களெல்லாரும் அந்தப் பரம புருஷனே யன்றே?' என்பது இந்த வாக்யத்தின் அர்த்தம். அதாவது-அந்தத் தேவதைகளெல்லாருக்கும் அவன் அந்தராத்மாவாக இருக்கிறபடியால், அவர்களெல்லாரும் அவனே என்று சொல்லப்படுகிறார்கள். இப்படிச் சொல்வதற்குச் சரீராத்ம பாவமே நிபந்தநம் என்று சொன்னதாயிற்று.

யோ யோ யாம் யாம்—இந்த ச்லோகங்கள் பகவத்கீதையில் ஏழாவது அத்யாயத்தில் 21, 22-வது ச்லோகங்கள். இவைகளின் பொருளாவது-'சிலர் வேறு தேவதை

ஸ தயா ஸ்ரத்தயா யுக்தஸ் தஸ்யாராதநமீஹதே |
லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந் ||"

'யாம் யாம் தநும்' இதி இந்த்ராதிதேவதாவிஸேஷாஸ் தத்ததந்தராத்மதயாவஸ்திதஸ்ய பகவதஸ் ஸரீராணீத்யர்த்த: |

"அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச" இத்யாதி | 'ப்ரபுரேவ ச' இதி ஸர்வபலாநாம் ப்ரதாதா சேத்யர்த்த: | யதா ச ஸ்ரீவிஷ்ணுபுராணே

"யஜ்ஞைஸ்த்வமிஜ்யஸே நித்யம் ஸர்வதேவமயாச்யுத"

"யை: ஸ்வகர்மபரைர்நாத நரைராராதிதோ பவாந் |
தே தரந்த்யகிலாமேதாம் மாயாமாத்மவிமுக்தயே ||"

கிறன். இவ்விடத்தில் 'தநும்' என்பது கவனிக்கத்தக்கது. 'தநு' என்பதற்குச் 'சரீரம்' என்பது பொருள். 'இந்த்ரன் முதலிய தேவதைகளெல்லோரும் தம் தமக்குள் அந்தர்யாமியாக இருக்கும் பகவானுக்குச் சரீரங்களே' என்பது இதனால் விளங்குகின்றது. "அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச" என்பதிலுள்ள 'ப்ரபு:' என்னும் சப்தமும் 'பலத்தைக் கொடுப்பவனும் அவனே' என்பதைச் சொல்லுகின்றது. ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும், "யஜ்ஞைஸ்த்வமிஜ்யஸே" என்பது முதலான ச்லோகங்களில், இந்த அர்த்தத்

களை ச்ரத்தையுடன் ஆராதித்த போதிலும், அந்தத் தேவதைகளெல்லாம் என்னுடைய சரீரங்களாகிற படியால், அவர்கள் உண்மையில் என்னையே அந்த ச்ரத்தையுடன் ஆராதித்தவராகிறார்கள். அவர்கள் அதைத் தெரிந்து கொள்ளாமல் இருந்த போதிலும், அந்த ச்ரத்தை என்னுடைய சரீரத்தை உத்தேசித்தே செய்யப்படுகின்றது என்று அநுஸந்தித்து நானே அந்த ச்ரத்தையை நிர்விக்நமாகச் செய்கின்றேன். அவர்கள் அப்படி நிர்விக்நமாகச் செய்யப்படும் ச்ரத்தையைக் கொண்டு அந்தந்தத் தேவதைகளையே அர்ச்சிக்கிறார்கள். அர்ச்சிக்கப்படும் தேவதைகள் என்னுடைய சரீரமாக இருக்கிறபடியால், அர்ச்சிக்குமவர்களின் இஷ்டங்களை நானே கொடுக்கிறேன். அப்படி என்னால் கொடுக்கப் படுமவைகளையே அவர்கள் அடைகிறார்கள்'.

அஹம் ஹி...பகவத்கீதை ஒன்பதாவது அத்யாயத்தில் 24 வது ச்லோகம். இதன் அர்த்தம்-'நான் தான் எல்லா யஜ்ஞங்களாலும் ஆராதிக்கப்படுகிறவன்; நானே அந்த யஜ்ஞங்களின் பலத்தையும் கொடுக்கிறேன்'. 'போக்தா' என்பதற்கு 'ஆராத்யன்' என்பதும், 'ப்ரபு:' என்பதற்குப் 'பலத்தைக் கொடுக்கிறவன்' என்பதும் பொருள்.

யஜ்ஞைஸ்த்வமிஜ்யஸே...இது விஷ்ணு புராண ச்லோகம். இதன் பொருள்-'ஹே ஸர்வதேவ மய! ஹே அச்யுத! ஸகல யஜ்ஞங்களாலும் நீரே எப்பொழுதும் ஆராதிக்கப்படுகிறீர்.'

யை: ஸ்வகர்மபரை:...இதுவும் விஷ்ணு புராண ச்லோகமே. இதன் பொருள்- 'தம் தம் தர்மங்களைச் செய்பவர்களெல்லாராலும் நீரே ஆராதிக்கப்படுகிறீர். ஆகையால் அவர்கள் இந்த மாயை முழுவதையும் கடந்து ஆத்ம மோக்ஷத்தை அடைகிறார்கள்.'

இதி ஸகலேதிஹாஸபுராணேஷு ஸர்வேஷ்வேவ வேதேஷு ச ஸர்வாணி கர்மாணி ஸர்வேச்வராராதனரூபாணி, தைஸ்தை: கர்மபிராராதித: புருஷோத்தமஸ் தத்தத் இஷ்டம் பலம் ததாதி' இதி தத்ர தத்ர ப்ரபஞ்சிதம் । ஏவமேவ ஹி ஸர்வச்ருதீநாம் ஸர்வஜ்ஞ: ஸர்வசக்தி: ஸத்யஸங்கல்ப: ஸர்வேச்வர: ஆராதனப்ரகாரவிசேஷாநபி ஸ்வயமேவ வேதேஷு ப்ரதிபாதிதவான் ஸர்வேஷாம் கர்மணாம் போக்தாரம் ஸர்வஹேதுபூதம் ப்ரதானம் ச ஸர்வாஸ் ச்ருதயோ வதந்தி

ஷதையே காணலாம். இவ்வாறு இன்னும் பலவிடங்களில் இதிஹாஸ புராணங்களுள்பட ஸகல சாஸ்த்ரங்களும், 'ஸகல கர்மங்களும் ஸர்வேச்வரனுடைய ஆராதந ரூபங்களே ; அந்தந்தக் கர்மங்களால் ஆராதிதனுப் கொண்டு அந்தப் புருஷோத்தமனே அவரவர்களுடைய இஷ்ட பலத்தைக் கொடுக்கிறுன்' என்பதையே இன்னும் விஸ்தாரமாகவும் தெளிவாகவும் பேசுகின்றன. அவன் ஸர்வஜ்ஞனுனதால் ஆராதந ப்ரகார விசேஷங்களை அவனே சரிவர அறியத்தகுந்தவன்; அவன் ஸர்வ சக்தியுடன் கூடினவனுனதால் கேட்கப்படும் பலமெல்லாவற்றையும் கொடுக்க அவனே சக்தனுவான் ; அவன் ஸர்வேச்வரனுனதால், அவனே எல்லாராலும் அடையத் தகுந்தவனுவான். ஆகையினாலன்றோ, 'சதுர்ஹோதார:' என்பதுமுதலான ச்ருதிகளும் அந்தப் பகவானே இந்த்ரன் முதலான தேவதைகளுக்கெல்லாம் அந்தர்யாமியாக இருந்துகொண்டு, வேதத்தில் சொல்லப்பட்டுள்ள யாகம் தானம் ஹோமம் முதலிய ஸகல கர்மங்களாலும் தானே ஆராதிக்கப்பெற்று, தானே ஸகல பலங்களையும் கொடுக்கிறுன் என்று சொல்லுகின்றன? 'சதுர்ஹோதார:'... யஜ்ஞங்கள். 'யத்ர'— எவ்விடத்தில்(அதாவது-தேவர்களுக்குள் அந்தர்யாமியாக இருக்கும் பரமாத்மாவினிடத்தில்). ஸம்பதம்'— ஸம்பந்தத்தை. அதாவது-இந்த்ரன் முதலானவர்களுக்கு

ஸர்வேஷ்வேவ ஹி...இது வரை ப்ரமாணத்தை நிரூபித்துவிட்டு, இனி 'இவ்விதமான அர்த்தமே உபபந்நம்' என்பதைச் சொல்லப் போகிறவராய், அதற்குக் கடகமாயிருக்கும் ச்ருதி வாக்யத்தைக் கூறுகிறுர்.

சதுர்ஹோதாரோ யத்ர...இந்த வாக்யத்தின் பதவுரை- சதுர்ஹோதார:=யஜ்ஞங்களெல்லாம், யத்ர=எந்தப் பரமாத்மாவினிடத்தில், தேவை:ஸம்பதம்=தேவர்களுடன் ஸம்பந்தத்தை, கச்சந்தி=பெறுகின்றனவோ. அதாவது-யஜ்ஞங்களுக்கும் தேவதைகளுக்கும் ஏற்படும் ஸம்பந்தமெல்லாம் பரமாத்மாவின் வழியாகவே என்று சொன்னதாயிற்று. பரமாத்மாவுக்கும் கர்மங்களுக்குமுள்ள ஸம்பந்தம் ஸ்வதந்த்ரம்; தேவதைகளுக்கும் கர்மங்களுக்குமுள்ள ஸம்பந்தம் பாதந்த்ரம்: ஏனென்றுல், இவர்களுக்கு ஏற்படும் ஸம்பந்தம் இவர்கள் பரமாத்மாவுக்குச் சரீரமாக இருக்கிறபடியாலன்றோ? இந்த வாக்யத்தில் 'ஸம்பதம்' என்பதற்கு 'ஸம்பந்தத்தை என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் அவயவார்த்தம் அதுவே. 'பத்' என்னும் தாதுவுக்குக் 'கதி' என்பது பொருளாகையால், 'ஸம்பத்' என்பதற்கு 'ப்ராப்தி' என்பது பொருளாகக் கூடும். அந்வய ஸ்வாரஸ்யம் இருக்கிறபடியால் இந்தப் பொருள் ஆச்ரயிக்கப் படுகின்றது.

" சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பதம் கச்சந்தி தேவை: "

இத்யத்ர 'சதுர்ஹோதார:' யஜ்ஞா:, 'யத்ர' பரமாத்மநி தேவைஸ்ஸம்பந்தமுபயாந்தி, 'தேவை: ஸம்பதம் கச்சந்தி' தேவை: ஸம்பந்தம் கச்சந்தி இத்யர்த்த: । இந்த்ராதீநாம் அந்தர்யாமிதயா பரமாத்மா ஸ்தித: இந்த்ராதய: சரீரபூதா இதி ஸம்பந்த: பரமாத்மா ஆராத்ய: இத்யுக்தம் பவதி । யதோக்தம் பகவதா-

" போக்தாரம் யஜ்ஞதபஸாம் ஸர்வலோகமஹேச்வரம் " இதி ।

தஸ்மாத் இந்த்ராதிதேவதா ஸம்பந்தம் ஆராதனரூபாணி ஸர்வாணி கர்மாணி, ஸ ஏவ ஆராத்ய: ப்ரதாதா இதி கிஞ்ச இந்த்ராதிசப்தா: அபி தத்ப்ரவ்ருத்தி நிமித்த வாச்யத்வ ...

யாகம் முதலிய கர்மங்களில் ஸம்பந்தம் கிடைப்பதெல்லாம், அந்த்ர்யாமியாக நிற்கும் பரமாத்மாவுக்கு அவர்கள் சரீரமாக இருப்பதாலேயே என்று சொன்னதாயிற்று. பகவான் ஒருவனே அந்தக் கர்மங்களின் ஸ்வதந்த்ரமான ஸம்பந்தத்தைப் பெற்றவனென்பதை 'போக்தாரம்' என்பது முதலான பகவத் கீதா வாக்யமும் விளக்குகின்றதன்றோ? இப்படி ஸகல கர்மங்களும், இந்த்ரன் முதலிய தேவதைகளுக்கு அந்தராத்மாவாக இருக்கும் பரம புருஷனுடைய ஆராதந ரூபங்களே என்றும், அந்தப் பரம புருஷனே அவரவர்களால் இச்சிக்கப்படும் பலங்களை யெல்லாம் கொடுக்கிறுனென்றும் ஏற்படுகிறபடியால், எதற்காக லோக வ்யுத்பத்திக்கு எட்டாமலும் புதியதாகவும் இருக்கும் ஒரு அர்த்தத்தை கட்டுப்பாட்டாலோ அல்லது ஏதாவது ஒரு கல்பனையைக் கொண்டோ வாச்யமென்று ஒத்துக்கொள்ள வேண்டும் ? ' இப்படியானுல், லிங் முதலியவைகளுக்கு நீங்கள் என்ன அர்த்தம் சொல்லுகிறீர்கள்?' என்று கேட்டால், நாங்கள் கொண்டிருக்கும் அர்த்தத்தைச் சொல்லுகிறேம். 'யாக:' என்னும் சப்தத்திற்கு 'யஜ்' என்பது தாது. அந்தத் தாதுவுக்குத் 'தேவனைப் பூஜிக்கிறது' என்பது பொருள். ஆகையால் 'யாக:' என்பது தேவதையின் ஆராதந ரூபமான ஒரு கர்மம். இது தான் 'யஜேத' என்பது முதலான வினைச் சொல்லில் இருக்கும் ப்ரக்ருதியின் (பகுதியின்) அர்த்தம். அந்த வினைச் சொல்லில் இருக்கும் ' லிங் ' முதலிய விகுதிகள் ' அந்த ஆராதநம் ஒரு கர்த்தாவின் வ்யாபாரத்தால் ஸாதிக்கத் தகுந்தது ' என்பதைக் குறிக்கின்றன. இது அதன் வ்யுத்பத்தியினுலேயே விளங்கும். இப்படி அர்த்தம் சொல்வதில் ஒரு வித அநு

போக்தாரம்...பகவத் கீதை 5-29. இந்த ச்லோகம், கர்மங்களுடன் ஸ்வதந்த்ர ஸம்பந்தம் பகவானொருவனுக்கே என்பதற்கு ப்ரமாணமாகக் கூறப்பட்டிருக்கிறது.

தஸ்மாத்...இவ்விதம் பகவான் ஸ்வதந்த்ர ஸம்பந்தத்தை உடையவனுகவும் தேவதைகளெல்லாரும் பாதந்த்ர ஸம்பந்தத்தை உடையவர்கள் என்று சொல்வதால் என்ன ஏற்பட்டது என்பதை விளக்குகிறுர். பரம புருஷனே பலம் கொடுக்கிறவனுக இருக்கிறபடியால் பல ஸாதநத்வத்தைக் கல்பிக்கவேண்டியது என்பது இல்லை என்பது முக்ய லாபம். கிம் ப்ரயோஜநம்- என்ன அநுபபத்தி சமநம் ப்ரயோஜநமாகின்றது?

ஸர்வம் ச...லிங் முதலியவைகளின் அர்த்தத்தைத் தெளிவாக வரிக்கிறவிதற்கு ஆரம்பிக்கிறுர்.

பலேந கர்த்ரா வா ப்ரயோஜநம்? 'ஏவம் ச ஸதி விதேஃ கோ வ்யாபாரஃ பரிக்ருஹீதஃ?' இதி சேதுச்யதே। 'யஜ தேவபூஜாயாம்' இதி தேவதாராதநபூதயாகாதேஃ ப்ரக்ருத்யர்த்தஸ்ய கர்த்ருவ்யாபாரஸாத்யதாம் வ்யுத்பத்திஸித்தாம் லிஙாதயோऽபிதததீதி ந கிஞ்சிதநுபபந்நம்। கர்த்ருவாசிநாம் ப்ரத்யயாநாம் ப்ரக்ருத்யர்த்தஸ்ய கர்த்ருவ்யாபாரஸம்பந்தப்ரகாரோ ஹி வாச்யஃ। லடாதயோ வர்த்தமாநாதிகாந் விஶேஷப்ரகாராந் வதந்தி, லிஙாதயஸ்து கர்த்ருவ்யாபாரஸாத்யதாம் வதந்தி।

அபி ச காமிநஃ கர்த்தவ்யதயா சோதிதாநி கர்மாணி தேவதாராதநரூபதாம் தத்த்வாரா ஸர்வஜ்ஞம் ச தத்தத்பலப்ரதாயி

பபத்தியுமில்லை. ஒரு வினைச் சொல்லின் ப்ரக்ருதியின் (பகுதியின்) அர்த்தம் கர்த்தாவின் வ்யாபாரத்துடன் எவ்வித ஸம்பந்தத்தைப் பெற்றிருக்கின்றது என்பதை மாத்ரமே கர்த்தாவைக் குறிக்கும் ப்ரத்யயங்கள் (விகுதிகள்) சொல்ல வேண்டுமென்றோ? 'லட்' 'லிட்' முதலிய லகாரங்கள் நிகழ்காலம் இறந்த காலம் முதலியவற்றைக் குறிக்கின்றன; 'லிங்' முதலியவைகளோ வென்றால் 'அந்தக் கர்மம் கர்த்தாவின் வ்யாபாரத்தால் ஸாதிக்கத் தகுந்தது' என்பதையே சொல்லுகின்றன.

அபி ச...ஙிற்க, 'இன்ன இன்ன பலத்தை அபேக்ஷிப்பவர்கள் இன்ன இன்ன கர்மத்தைச் செய்தல் வேண்டும்' என்று விதித்துவிட்டு, அந்த விதி வாக்யங்களே, 'இந்தக் கர்மங்களெல்லாம் தேவதாராதந ரூபங்கள்; அந்தத் தேவதைகளே

கர்த்ருவாசிநாம்...சாஸ்த்ர மர்யாதை என்னவென்றால்- ப்ரக்ருதியும் ப்ரத்யயமும் சேர்ந்து பதம் உண்டாகின்றது. கர்த்தாவைச் சொல்லும் ப்ரத்யயங்களெல்லாம் ப்ரக்ருதியின் அர்த்தத்திற்கும் ப்ரத்யயத்தின் அர்த்தமாகிற கர்த்தாவின் வ்யாபாரத்திற்கும் எவ்விதமான ஸம்பந்தம் இருக்கிறது என்பதைக் குறித்தல் வேண்டும். அவைகளுள் 'லட்' 'லங்' முதலானவைகள் நிகழ் கால ரூபமாகவும் இறந்த கால ரூபமாகவும் இம்மாதிரி இருக்கும் கர்த்ரு வ்யாபார ஸம்பந்தத்தைக் குறிக்கின்றன; 'லிங்' முதலியவைகளோ வென்றால், கர்த்ரு வ்யாபார ஸாத்ய ரூபமான ஸம்பந்தத்தைக் குறிக்கின்றன. இது தான் இவ்விடத்திற் சொல்லப்பட்டுள்ள விஷயம். இவ்வளவு சொன்னதிலிருந்து, லிங் முதலிய லகாரங்கள் ப்ரக்ருத்யர்த்தத்திற்கு மாத்ரம் கர்த்ரு வ்யாபார ஸம்பந்தத்தைச் சொல்லுகின்றனவே தவிர, ப்ரக்ருத்யர்த்தத்தைக் காட்டிலும் வ்யதிரிக்தமான மற்றை ஒன்றுக்கும் அவை சொல்லவில்லை என்பது ஏற்படுகின்றது.

அபி ச...இது வரை, எல்லா உபநிஷத் வாக்யங்களும் அவைகளின் உபப்ருஹ்மணங்களும் இவையெல்லாம் 'பகவானே பல ப்ரதனாக இருக்கிறபடியால், அபூர்வம் என்று ஒன்றைக் கல்பிக்கவேண்டியது அநாவச்யமென்று நிரூபிக்கப்பட்டது. இனி, கர்ம விதி வாக்யங்களே தேவதைகளுக்குப் பல ப்ரதத்வத்தைச் சொல்லுகிற படியால் அபூர்வத்தைக் கல்பிப்பது அநாவச்யமென்று நிரூபிக்கிறார்.

280

ஸம்புடம் 22] MARCH - APRIL 1934 [ஸஞ்சிகை 9 - 10

ஸ்ரீ

வேதாந்த தீபிகை

OFFICE OF THE ... OF BOOKS
9-JAN 1935
MADRAS

ஸ்ரீமுக ஸு மாசி-பங்குனி

PUBLISHED BY
SRI VAISHNAVA SIDDHANTA SABHA,
MADRAS.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. அஸூயையும் அதனுல் விளையும் தீமையும்:—
[மஹாமஹோபாத்யாய ஸாரஸ்வத ஸர்வஜ்ஞ
தட்டை ஸ்ரீ. உப ஸ்ரீ. நிவாஸாசார்யர்] ... 259
2. ஸர்வமத வினு விடை:—[ஸ்ரீ. உப. வித்யாரத்நாகர
வேதாந்த கேஸரி V. R. நரஸிம்ஹாசார்யர்] ... 265
3. ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்தம்:—
[வங்கீபுரம் ஸ்ரீ . உப. வாஸுதேவாசார்யர்] ... 272
4. கடிதங்கள்:— ... 279
5. ஸ்ரீ வைஷ்ணவ விபூதி:— ... 284
6. ஸம்பாதகீயம்:— ... 292
7 ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி:— ... 5
8. திவ்ய ஸூரி சரிதம்:—
[வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 25
9. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—
[வங்கீபுரம் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர் ... 369

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—[ஸ்ரீ பாஷ்யகாரரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ தாத்பர்ய தீபிகையை அநுஸரித்து ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் செய்யப்பட்ட தமிழ் வ்யாக்யாநத்துடன் கூடியது. இப்பொழுது 370 பக்கம் வரை முடிந்திருக்கிறது. இன்னும் 20 அல்லது 30 பக்கங்களுடன் இந்த க்ரந்தம் முடிவு பெறும். இப்பொழுது இதை வாங்குகிறவர்களுக்கு இது குறைந்த விலையாகக் கொடுக்கப்படும்; பாக்கி ஸஞ்சிகைகள் ஒவ்வொரு மாஸத்திலும் அவை ப்ரசுரம் ஆனவுடன் அவர்களுக்குத் தவறுது அனுப்பப்படும்] ... ... ரூ 2—0—0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடன் கூடியது] ... ... ரூ 0—8—0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடனும் புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யாநத்துடனும் கூடியது] ... ... ரூ. 0 6 0

(4) ஸ்ரீ வேதாந்த தீபிகை 19, 20, 21 வது ஸம்புடங்கள். ஸம்புடம் 1.க்கு ... ... ரூ. 3 0 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
கோட்ஸ் கார்டென்ஸ்,
மாம்பலம், தேனும்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.

ஸ்ரீ:
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீ வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்பு. 22.] ஸ்ரீமுக வருஷ மாசி-பங்குனி மீ [ஸஞ்சி. 9-10 .

அஸூயையும் அதனுல் விளையும் தீமையும்

[மஹாமஹோபாத்யாய ஸாரஸ்வத ஸர்வஜ்ஞ தட்டை ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்]

பூமண்டலத்தில் மனிதர்கள் அனைவர்க்கும் கௌரவம் கீர்த்தி பெருமை ஸுகம் முதலிய யாவும் அவரவர்களிடத்திலுள்ள நற்குணங்களால் ஏற்படுகின்றன. இந்த நற்குணங்கள் சில மனிதர்க்கு இயற்கையிலேயே அமைந்திருக்கின்றன. அதற்குக் காரணம் அவர்களுடைய ஜந்மாந்தர ஸுக்ருதமே. அந்த ஸுக்ருதமும் பகவதநுக்ரஹ நிபந்தநம் தான்.

" [illegible]
[illegible] "

என்கிற வசநத்தின்படி ஸுக்ருத ஸஹக்ருதமான பகவத் கடாக்ஷத்தை ஜநந காலத்தில் பெற்றவர்களே ஸத்குண நிதிகளாகவும் ஸத்வோத்தரர்களாகவும் தார்மிகர்களாகவும் கீர்த்திமான்களாகவும் பாக்யவான்களாகவும் ஆகிறுர்கள். புகழ்ச்சி இகழ்ச்சி, மேன்மை தாழ்மை, நிறைவு குறைவு, ஆகிய இவைகள் மனிதர்களுக்குத் தத்தம் குணங்களாலேயே ஸம்பவிக்கின்றன. எல்லா நன்மைகளுக்கும் மூல காரணமாயிருக்கிற நற்குணங்களை அடைவதற்காகவே பால்யத்தில் வித்யை அப்யஸிக்கப்படுகிறது.

158952

"வித்யா ததாதி விநயம் விநயாத்யாதி பாத்ரதாம் |
பாத்ரத்வாத் தநமாப்நோதி தநாத் தர்மம் தத: ஸுகம் ||"

என்கிற வசநத்தின்படி கல்வி ஒன்றே, விநயம் முதலிய நற்குணங்கள் ஏற்படுவதற்கு அடிப்படையாக இருக்கிறது. மனிதர் இளமைப் பருவத்தில் கல்வி கற்பதும், நல்ல ஆசார்யர்களை அணுகுவதும், குருகுல வாஸம் செய்வதும், இடையிலே பாரதம் ராமாயணம் முதலிய இதிஹாஸங்களைப் படிப்பதும், பாகவதம் முதலிய ஸாத்விக புராணங்களைப் பரிசீலநம் செய்வதும், காவ்யங்களில் உழைப்பதும், ரஸவத்தரங்களான நாடகங்களைப் படிப்பதும், நடிப்பதும், அவைகளிலுள்ள ரஸங்களை அநுபவிப்பதும் எதற்காக வென்றால்: தீய குணங்களை அகற்றி, நற்குணங்களைக் கைக்கொண்டு, உலக நடைகளிலும் ஜனங்களுடைய ஒழுக்க முறைகளிலும் தேசாசாரங்களிலும் அறிவு மேம்பாடு அடைவதற்காகத்தான். வைதிக க்ரியாரூபங்களாகவும் குணரூபங்களாகவு மிருக்கிற ப்ராஹ்மணர்களுக் குரிய நாற்பத்தெட்டு ஸம்ஸ்காரங்களுக்குள், குணங்களின் மேம்பாட்டைக் கருதியே நாற்பது க்ரியா ஸம்ஸ்காரங்களைவிட எட்டு ஆத்மகுண ஸம்ஸ்காரங்களே சிறந்தவைகளென்று ஆபஸ்தம்ப மஹர்ஷி தர்ம ஸூத்ரத்தில் கூறியிருக்கிறார்.

"சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகஶ: |
தஸ்ய கர்தாரமபி மாம் வித்த்யகர்தாரமவ்யயம் ||"

என்று கீதையில் உபதேசித்த வண்ணம், நான்கு வர்ணத்தினரையும் குணங்களின் பாகுபாட்டை முன்னிட்டே பரமபுருஷன் படைத்திருக்கிறான். ப்ராஹ்ம க்ஷத்ரிய வைச்ய சூத்ர வர்ணங்களுக்குள் பிந்திப் பிந்தி இருக்கிற வர்ணங்களை விட, முந்தி முந்தி இருக்கிற வர்ணங்களுக்கு இருக்கும் மேம்பாடானது சிறப்புடைய குணங்களின் ஸம்பந்தத்தினாலேயே நிலைபெற்றிருக்கிறது. முக்குணங்களுக்குள் சிறப்புடையதான ஸத்வகுணமானது ப்ராஹ்மணர்களிடத்தில் ஜந்ம ஸித்தங்களாக இருப்பதனால், நல்ல ஜ்ஞாநம் சித்தசுத்தி ஸுகம் ஆரோக்யம் இவைகள் ஸம்பவிக்கின்றன.

"தத்ர ஸத்த்வம் நிர்மலத்வாத் ப்ரகாஶகமநாமயம் |
ஸுகஸங்கேந பத்நாதி ஜ்ஞாநஸங்கேந சாநக ||"

என்கிற பகவத் வசநம் இதில் ப்ரமாணம்.

"ஸர்வத்வாரேஷு தேஹேऽஸ்மிந் ப்ரகாஶ உபஜாயதே |
ஜ்ஞாநம் யதா ததா வித்யாத் விவ்ருத்தம் ஸத்த்வமித்யுத ||"

என்கிற வசநத்தின்படி எப்பொழுது ஸத்வகுணம் வ்ருத்தி யடைகிறதோ அப்பொழுது ஜ்ஞாநம் நன்கு நிலைபெறுகிறது. அப்பொழுது

"ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச கார்யாகார்யே பயாபயே |
பந்தம் மோக்ஷம் ச யா வேத்தி புத்தி: ஸா பார்த்த ஸாத்த்விகீ ||"

என்கிறபடி அவர்கள் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும், கார்யாகார்யங்களையும், பயாபயங்களையும், பந்த மோக்ஷங்களையும், ஸாத்விக புத்தியினால் உள்ளபடி அறிகிறார்கள்.

"ஶமோ தமஸ்தப: ஶௌசம் க்ஷாந்திரார்ஜவமேவ ச |
ஜ்ஞாநம் விஜ்ஞாநமாஸ்திக்யம் ப்ரஹ்மகர்ம ஸ்வபாவஜம் ||"

என்கிறபடி ஸத்வகுண ஸம்பந்தத்தின் வாயிலாக ப்ராஹ்மணர்களுக்கு காது கண் முதலிய ஜ்ஞாநேந்த்ரியங்களின் ஒடுக்கமும், மன அடக்கமும், தவமும், தூய்மையும், பொறுமையும், மநோ வாக் காயங்களின் ஒற்றுமையும், சாஸ்த்ரங்களில் நல்ல அறிவும், ப்ரஹ்ம ஜ்ஞாநமும், ஆஸ்திக்ய புத்தியும் உண்டாகின்றன. ஆனால் இந்த உத்தம குணங்க ளெல்லாம் ப்ராஹ்மணர்களிடத்தில் தத்காலம் காண்பது அரிதாயிருக்கிறது. தார்மிகர்களாகவும், கர்மடர்களாகவும், ஆஸ்திகர்களாகவும், தபஸ்விகளாகவும், சாந்தர்களாகவும், விநயமுள்ளவர்களாகவும், ச்ரத்தாளுக்களாகவும் இருக்கிற ப்ராஹ்மணர்களிடத்தில்தான் இக்குணங்கள் அருமையாகக் காணப்படும். ஜாதி மாத்ரத்தினால் ப்ராஹ்மணர்க ளென்று வ்யவஹரிக்கப்படுகிறவர்க ளிடத்தில் சமதமாதி குணங்கள் புலப்படா. முற்கூறிய குணங்கள் ப்ரகாசியாம லிருப்பதனாலேயே அவர்களிடம் அக்குணங்கள் இல்லை என்று எண்ணக் கூடாது. சாணையில் தீட்டப்படாத ரத்நத்தின் ஒளிபோல அவைகள் உள்ளே அழுந்தி மழுங்கி மறைந்திருக்கின்றன. வந்தேறியாக மேலே படர்ந்து மூடிக்கொண்டிருக்கிற அஜ்ஞாநமாகிற அழுக்கு நீக்கப்பட்டால், ஸ்வதஸ்ஸித்தங்களான நற்குணங்கள் தாமாகவே ப்ரகாசிக்கும். இவ்வளவு நற்குணங்களால் அவர்கள் நிறைந்திருந்த போதிலும், அவர்களிடத்திலுள்ள நற்குணங்களில், குடம் பாலில் ஒரு விஷபிந்து கலந்ததுபோல அஸூயை என்கிற கெட்ட எண்ணம் சேர்ந்து, அவர்களுடைய நற்குணங்களை யெல்லாம் முற்றிலும் கெடுத்து விடுகிறது. இக்கருத்தை ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன்,

"[illegible] —
[illegible] |

“ஆசாதபாஜியோகாநு பாகதலூலதீய
தகெந்யாகநவெபஜநீ விஜஹாதூலஸ்யா॥”

என்று அருளிச்செய்தார்.

குணங்களிடத்திலேயே தோஷங்களை ஏறிடுதல் அஸூயை எனப்படும். இக்கெட்ட குணமானது மற்ற ப்ராஹ்மணர்களை விட ஸ்ரீ வைஷ்ணவர்களிடத்தில் அதிகம் குடிகொண்டிருக்கின்றதென்னலாம். அவர்கள் இந்தத் துர்க்குணத்தால் ஜ்ஞாநிகள் என்ருவது ஆசார்யர்கள் என்ருவது ப்ரஹ்ம வித்துக்கள் என்ருவது ஆலோசியாமல், உந்மத்தர்கள் போலவும் மத்தர்கள் போலவும் மெய்ம் மறந்து வாயில் வரக்கூடாத வசநங்களைச் சொல்லி மஹாந்களை நிந்தித்துப் பாகவத அபசாரச் சுமைகளைத் தாங்கமுற்படுகிருர்கள். இந்த மஹதபசாரத்தால், காக்கைகளும் கழுகுகளும் அடையும் இடுகாட்டிலுள்ள முள் மரங்களாவதற்கு இந்த ப்ராஹ்மணப்ருவர்கள் தயாராகிருர்கள். எல்லா அபசாரங்களுக்கும் பரிஹாரமுண்டு; இந்தப் பாகவதாபசாரத்திற்கு மாத்ரம் பரிஹாரமே இல்லை. இவர்கள் பரம புருஷனுடைய நிக்ரஹ ஸங்கல்பத்துக்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்கிருர்கள்.

“க்யவிக்யயாஸஂஷயா ஸஜிஸஜெத”

[ப்ரஸித்தியிலும் லாபத்திலும் ஸம்மாநத்திலும் நோக்கமற்று, விநயத்தையே அணியாகக் கொண்டு, பாகவதர்கள், தம்மைப் பிறர்க்கு விற்கவும் பாத்யமுள்ளவர்கள்] என்கிறபடி பாரதந்த்ர்ய காஷ்டையைத் தாங்கியிருப்பதல்லவோ உண்மையான ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வபாவம். அதற்கு மாருகச் சில வைஷ்ணவர்கள்—அதிலும் பண்டிதர்கள் என்கிற ஸ்வகோஷ்டி ப்ரஸித்தியைப் பெற்றவர்கள்—சாஸ்த்ர மர்யாதையையும் லோக ரீதியையும் கால நிலையையும் கவனிக்காமல், நிர்ஹேதுகமான வைரத்தை மூலதநமாகக் கொண்டு, தங்கள் ஸொத்தைக் கொள்ளை கொடுத்தவர்கள்போல் அஸஹ்யமான மன வருத்தத்துடனும் பரபரப்புடனும் க்ரோதத்துடனும் பருஷாக்ஷரங்கள் நிறைந்த கடுஞ் சொற்களால் பாகவதோத்தமர்களை நிந்திக்கிருர்கள். இந்த அஸூயை என்கிற மஹாராணிக்குத் தென்கலை வடகலை என்னும் இரண்டு ஸ்த்ரீகள் ப்ரிய ஸகிகள். இந்த இரண்டு ஸகிகளும் எந்த வழியில் இழுக்கிருர்களோ அந்த வழியி லெல்லாம் அஸூயை செல்கிருள்.

மேனாட்டு நாகரிகத்தில் ஸயன்ஸ் (Science) வ்ருத்தியடைந்து, அது யுத்தத்தில் ஜனங்களின் ஸங்காத மரணத்திற்குக் காரணமாக ஏற்பட்டது போல, மிதப்ரஜ்ஞர்களுக்கு ஏற்பட்ட வைதுஷ்யமானது பரஸ்பரம்

ஆசார்ய நிந்தையிலும் மஹா பாகவத நிந்தையிலும் பர்யவஸித்து, ஸம்யமிநீ நகரத்திலுள்ள நரகங்களின் ப்ரதேசங்களை இடைவெளியில்லாமல் மனிதர்களால் நிரப்ப ஆரம்பித்து விட்டது. ‘பூர்வாசார்யர்கள் பண்ணியிருக்கிற க்ரந்தங்களைப் பார்க்கவும், அர்த்த விசாரம் பண்ணவும், நமக்கு அவகாசம் இல்லையே!’ என்று புலம்புவோர் சிலர். ‘ஆசார்யர்கள் அநுக்ரஹித் திருக்கிற க்ரந்தங்களின் அர்த்தம் கருத்து முதலியவைகள் விளங்கவில்லையே!’ என்று கவலை யுறுவோர் சிலர். ‘ப்ராஹ்மண்யத்திற்கு உரிய கர்மங்களை உள்ளபடி அநுஷ்டிக்க முடியவில்லையே!’ என்று பரிதபிப்போர் சிலர். பூர்வ க்ரந்தங்களைப் பார்க்கமுடியாமல் வருந்துவோர் சிலர். இப்படி உலக நடத்தை ஒருபுற மிருக்க, அஸூயா தாஸர்கள் தடையின்றியும் ஆலஸ்ய மின்றியும் விடா முயற்சியுடன் மஹாந்களை ஓயாமல் நிந்திப்பதும், கண்டந க்ரந்தங்களை எழுதுவதும்—அதற்கு ஒரு கண்டநம், அதற்கு ஒரு முண்டநம், அதற்கு ஒரு மண்டநம்—இப்படி முண்டந மண்டந கண்டந க்ரந்த பரம்பரைகள் நடையாடி வருகின்றன. இந்தப் பாப க்ரந்தங்களில் அடியேன் ஒன்றை ஒரு ஸமயம் ஆமூலாக்ரம் பார்க்க நேரிட்டது. அப்போது என் மனம் பெரிதும் தபித்து விட்டது. ஆஹா! ஒரு ஸ்ரீவைஷ்ணவர் மற்ருெரு ஸ்ரீ வைஷ்ணவரை எவ்வளவு நிந்தித்திருக்கிருர்! அந்தோ! கலியின் ஸாம்ராஜ்யத்தில் எதுதான் தோன்ருது? இவர்களும் ஸ்ரீ வைஷ்ணவர்களா? அஹந்தை யன்ருே இப்படி உத்பதங்களான செய்கைகளில் மனிதர்களை நடத்துகிறது! வைஷ்ணவர்களுக்கு அஸாதாரணமா யுள்ள சேஷத்வம் எங்கேயோ பறந்துபோய் விட்டதே!

“ஜ்ஞாநாநாஂஸவெஷாஂ விஷ்ணுசாஸ்த்ரஂ வரஂ।
தஸ்மாச் சாஸ்த்ரஂ வைராக்யஂ தீயாஸ்த்ரஂ வரஂ॥”

என்கிற சாஸ்த்ரார்த்தம் எந்த இடத்தில் ஒளிந்ததோ தெரியவில்லை.

“ஸமவஸ்தூநாஂ ஸாரஂ சாஸ்த்ரஂ வஸ்து வஸ்துநஂ। க்ஷீரஂ ஶகர்யா யுக்தஂ ஸ்வத‍தெ ஹி விஶெஷதஃ॥ யஸ்ய தெவெ பரா பக்திர்யதா தெவெ ததா குரௌ। தஸ்யைதெ கதிதா ஹ்யர்தாஃ ப்ரகாஶந்தெ மஹாத்மநஃ॥ ஆசார்யவாந் புருஷோ வேத ஸாத்விகாஃ॥ தெவதாபாஸ்யதேவாநாஸீத। நச ஆசார்யவாந்। ஆசார்யதேவோ பவ। ஶாஸ்த்ரமேவ பரஂ ப்ரஹ்ம ஶாஸ்த்ரஂ சைவ பராகதிஃ॥”

இப்படிப்பட்ட சாஸ்த்ரார்த்தங்கள் அனைத்தும் குரு நிந்தகர்கள் விஷயத்தில் பயனற்றவைகளாக வல்லவோ ஆகவேண்டும். சாஸ்த்ரம் என்பது பகவதாஜ்ஞை. அதை உல்லங்கநம் பண்ணுகிறவன் பகவானுக்கு த்ரோஹம் செய்பவன்; அவன் பக்தனு மாகான்; ஸ்ரீ வைஷ்ணவனு மாகான்; அவன் நரகத்திற்கு ஆட்பட்டே தீர வேண்டும். பகவதாஜ்ஞா ரூபங்களான சாஸ்த்ரங்கள் ஒருக்காலும் பயனற்றவைகளாக ஆகமாட்டா. ஆகையால் ஜகத்துக்கே பாவநர்களாகவும், நல்ல குலத்தில் தோன்றி, ஆசாரம் சீலம் ஜ்ஞாநம் விநயம் விவேகம் முதலிய குணங்களுடன் கூடியவர்களாகவும், திவ்ய தேசத்தில் வாஸம் பண்ணக்கூடிய பாக்யத்துடன் கூடி யிருப்பவர்களுமான ஸ்ரீ வைஷ்ணவர்கள், நரகத்துக்குத் தலைவாசலாக இருக்கிற பாகவதாபசாரத்துக்குப் பயந்து அஹங்கார மமகாரங்களை விட்டு,

"ശുദ്ധസ്സ പരിശിഷ്യതേ ശമിതവിദ്ധവേഷോ നരഃ॥"

என்கிற வசநத்தின்படி சாந்தியைப் பெற்று பகவத் பாகவத க்ருபைக்குப் பாத்ரமாக இருந்துகொண்டு, கீழ்க் காணப்படும் இரண்டு ச்லோகங்களின் அர்த்தங்களை எப்பொழுதும் அநுஸந்தித்துக்கொண்டு ஸுகிகளாய் இருப்பார்களாக.

"ചരണേ നാഥം തേ വിതരണചണം ദേശികമിഷഃ സ്വധനേ ന സ്വാന്തേ സമയിതസമസ്തോഹവിഷയാഃ । ചതുരായാമാ യാമാ ഉഭയവിധയാമാ ഭഗവതീ പ്രപദ്യാനാപ്രായാപ്രതിക്രമായാ ണനാനാഃ॥"

"സംസാരാദിത്യഘർമം പ്രശമയ സതതം വൃത്തിം വ്യവസ്ഥാപയ തസ്യ ബ്രഹ്മവിദ്യാമസ്തൂണിവ ദൈവമിച്ഛാനുസാരം । നിത്യശേഷിണി നിഷ്കിഞ്ചനജനം സർവസ്ഥേ ശ്രീസവേ പ്രപ്യ പാദാംബുജസ്യ കാമയിതു പ്രപ്യേദേകാന്തിനഃ॥"

ഉദ്ധീയ മന്ദം കൃപയാ ഭഗവദ്പ്രേഷ്യ പാദുക-ഷേത്രാപ്യ ധർമശരണീനാ ശ്രീ പാദേനായാദൃതോ വ്യാസഃ॥

ஸ்ரீ:

ஸர்வமத விஞ விடை

[வித்யாரத்நாகர வேதாந்த கேஸரி ஸ்ரீ. உப. V. R. நரஸிம்ஹாசார்யர்]

(காபிரைட் ரிஸெர்வ்ட்)

(தொடர்ச்சி: ஸஞ்சிகை 7 பக்கம் 203)

பலராம்:—தம்பீ! நூதநமாக தத்வமொன்று ஸித்திக்க வேண்டுமானல் அதன் ஸித்தி ப்ரமாதா, ப்ரமாணம், ப்ரமேயம், ப்ரமிதி என்கிற நான்கையும் பொருத்ததாகவே யிருக்குமென்று யான் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறே னல்லவா? அதனை இப்போது ஞாபகப்படுத்திக்கொள். அவற்றுள் அர்த்தத்திற்கு உருவைக் கொடுக்கும் விஷயத்தில் மற்றை மூன்றையும் விட ப்ரமிதி எனப்படுகிற அர்த்தத்தை (அதாவது: பொருளைப்) பற்றித் தோன்றுகிற விஜ்ஞாநமே முக்யமானது. அதாவது: ஒரு வகையில் ப்ரதாநமாயிருக்கின்ற தென்னலாம். அது எவ்வகையில் ப்ரதாநம் என்பதை விவரிக்கிறேன் கேள். மனிதரின் புத்தியானது இயற்கையிலேயே கற்பநா சக்தி வாய்ந்துள்ளது. அப்படி அது பொருட்களைக் கற்பிக்கத் தலைப்படுகையில், அதற்குள்ள நீடித்த பழைய வாஸனையால் உண்டாயிருக்கிற ருசி எனப்படுகிற அபிலாஷைக்குத் தக்கபடியேதான் பொருளை நிர்மிக்கின்றது. உதாரணமாக: ஒரு ப்ரம்ஹசாரி விவாஹித்துக் கொள்ளக்கருதியவனுப், தனக்கு வாழ்க்கைப்படவேண்டிய ஒரு கந்நியைப் பற்றிச் சிந்திக்கிறனென்று வைத்துக்கொள். அச்சிந்தனையில் அவன் நெடுநாளாகத் தன் பெண்டாட்டி எப்படி அழகா யிருக்கவேண்டுமென்று எண்ணி யிருந்தானே, எத்தகைய குணமுள்ளவளா யிருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தானே, அத்தகை எழிலும் குணமு முள்ளவளாகவேதான் அவள் தோற்றுவாள். இப்படி நினைவில் மட்டும் உள்ளதென்பதல்ல. அவன் ஒரு கந்நியை மணந்த பிறகும் அதிகமான விபரீதம் தோற்றுதவரையில் அப்பெண், தான் முன் எண்ணியபடியே இருப்பதாகத்தான் பார்க்கவும் பார்க்கின்றான். ப்ரத்யக்ஷ விஷயத்திற் கூட இப்படி இருக்கிறதென்றால் கேவலம் கற்பநாமாத்ரமான பரோக்ஷ விஷயத்திற் சொல்லவேண்டுமோ? அப்பொருளைக் கற்பிக்க முற்படுகையில், அதைப்பற்றி அவரவருக் குள்ள நெடிய வாஸநா மூலமான அபிலாஷைதானே முன்வந்து நிற்கும்? இனி த்ருஷ்டாந்தத்திலிருந்து ப்ரக்ருதமான இடத்திற்கு வருவோம். ஆத்மாவெனப்படுகிற பொருளை உள்ளபடி நம்முள் ஒருவரும் கண்டறிந்தவ

ரில்லை. ஆயினும் அது ஒவ்வொருவருக்கும் பரம ப்ரீதிக்கு இடமாயிருக்கிறது. தன்னை விட அதிகமாகவோ அல்லது தன்னோடு ஸமானமாகவோ ப்ரீதிக்கு இடமாக வேறொரு பொருளிருப்பதாக ஒரு ப்ராணிக்கும் எண்ணமே யில்லையன்றோ? ஆத்மாவேதான் ப்ரீதிக்கு எல்லை நில மென்றாயிற்று. ஆகவே இத்தகைய ப்ரீதி விஷயமான ஆத்மாவைப் பற்றி மாந்தர் சிந்திக்க ஆரம்பித்தாரானால், அது மிக உயர்ந்ததா யிருக்கவேண்டு மென்று தானே அபிலஷிப்பர். எனவே, ஆத்ம சிந்தனையில் இறங்கின மதஸ்தர்க ளெல்லோருக்கும் மொத்தத்தில் அவ்வாத்மா மிகமிக உயர்வுள்ளதா யிருக்க வேண்டு மெனும் அபிலாஷை பொதுவாக உண்டாவது ஸஹஜமாகிறது. அற்ப ப்ரீதிக்கு இடமான ஒரு வஸ்த்ரம் ஆபரணம் போன்ற வஸ்துக்கள் கூட உத்க்ருஷ்டமா யிருக்கவேண்டு மென்று அபிலஷிப்பது மனித இயற்கையாயிருக்க, அந்த வஸ்துக்களெல்லாம் எந்த தன்னுடைய விருப்பத்தை நிரப்புவதற்காகவே அத்துணை ச்ரேஷ்டமா யிருக்கவேண்டுமென்று கோரப்படுகிறதோ, அப்படிப்பட்ட தம்மை அவர்கள் ஸாதாரண பொருளொன்றாயிருக்க ஸம்மதிப்பாரோ? ஒரு காலும் ஸம்மதியார். ஆகவே: ஆத்ம தத்வமென்பது ஸர்வோத்தமமான தென்கிற துணிபு ஸமயிக ளெல்லோருக்கும் பொதுவான ஸித்தாந்த மாகிறது: இனி 'அதற்குள்ள உயர்வுதானென்ன,?' என்று விசேஷித்த ப்ரச்னையிலோ வெனில், ஒவ்வொருவர் ஒவ்வொரு வழியாகச் செல்லுகின்றனர். அதற்கும் அவரவர்களுக்கு முன்னுள்ள அபிலாஷைதான் காரணமென்பது உனக்குச் சொல்லாமலே விளங்கியிருக்குமே? இதற்குமேல் அன்னார் பலருக்குள்ள பற்பல அபிலாஷைகளையும் அதன் மூலமாய் அவர்கள் பற்றிய விசாரணைமார்க்கங்களையும் ஆங்கு அவர்கள் தேடிக் கண்டெடுத்த ஆத்ம வஸ்துவின் ஸ்வரூப ஸ்பாவாதிகளின் நிலையையும் யான் உனக்கு விவரித்துக் கூறுகிறேன் கேள்.

உயர்வு என்பது தாழ்விலிருந்தே விளங்குவதா யிருப்பதொன்று. தகப்பனென்றால் மக்களைக்கொண்டு தானே அவன் விளங்கவேண்டும்? இனி 'உமது ஆத்மா எதைவிட உயர்ந்ததா யிருக்கவேண்டும்?' என்று நாம் ஒரு ஆத்ம சிந்தகரைக் கேட்பதாக வைத்துக்கொள்வோம். அவர் என்ன சொல்வார்? தன்னைத் தவிர்த்த மற்ற எல்லாப் பொருளையும்விட தான் உயர்ந்திருக்க வேண்டு மென்றுதான் அவர் சொல்லுவார். நல்லது: 'இப்போது நீர் அப்படிப்பட்ட உயர்ந்த நிலையிலேதான் இருக்கின்றீரா?' என்று மேலே கேட்போம். அங்கென்ன பதில்? 'இல்லை இனித்தான் உயரவேண்டு மென்பது' தான். இதற்குமேல், 'ஐய! நீர் இயற்கையில் தாழ்ந்தவரா யிருப்பீரானால் உமது கோரிக்கை ஈடேறுமா? இரும்புக்கு எவ்வளவுதான் மெருகு தேய்த்தாலும் பொன்னாகி விடாதன்றோ?' என்று கேட்போம் அதற்கு வரும் விடை யென்ன?' இல்லையில்லை; நான் ஸ்வபாவத்திலேயே

தாழ்ந்தவனல்ல. மிகமிக உயர்ந்தவனேதான் என்றாலும் யாதோ ஒரு காரணத்தினால் தற்போது இப்படி மலிநப்பட்டுக் கிடக்கிறேன். நான் பத்தரை மாற்றுப் பசும்பொன் போன்றவனே. ஆனால் அது துருவேறிக் கிடக்கிறது. அத்துருவைத் துடைத்துவிட்டால் அது பளீரென்று தன் நிறம் பெற்றுவிடுமன்றோ?' என்று விடைதருகிறார். இதனால் இவ்வாத்மாவென்பது ஸ்வத: சுத்தமானது (அதாவது: இயற்கையில் மாசற்றது) என்பது இதற்குள்ள ஏற்றங்களுள் ஒன்று என்று ஏற்பட்டது பார். இதற்குமேல், 'நல்லது: நீர் தற்போது மலிநரா யிருந்தாலும் இனி எவ்வகையினாலோ சுத்திபெற்று விடுகிறீரென்று வைத்துக்கொள்ளும். அப்படிச் சுத்தியைப் பெற்று எவ்வளவு காலம் வரையில் வாழவேண்டுமென விரும்புகின்றீர்?' என்று வினவுவோம். 'ஐயோ எனய்யா வரையறுக்கிறீர்? இக்கால தத்வமுள்ள அளவும் யான் நிர்மலனாய் விளங்கிக்கொண்டுதானிருப்பேன்' என்று விடை பகர்கின்றார். இதனால் இவ்வாத்ம தத்வம் நித்யமானதென்று ஏற்பட, முன்னதையுங் கூட்டிப் பார்த்தால் நித்ய சுத்த ஸ்வரூபமென்று தீருகிறது.

தம்பி! இவரைப் பார்த்து யாம் இன்னுமொரு கேள்வி கேட்போம். 'ஐய! அப்படிப்பட்ட அருமந்த உம்மீது இவ்வழுக்கைத் தீட்டி அசுத்தப்படுத்திய பகைவர் எவரோ?' என்றால், 'ஐயோ! பிறர் மீது பழியைச் சுமத்த நினைப்பது பாவமன்றோ? முளைபெயர்த்த வாநரத்தின் கதைபோல ஸ்வயங்க்ருதாநர்த்தந்தான் இது' என்று கெட்டியாய்க் கூறுகிறார். 'நீர்தான் உம்மைத் தங்கம் போன்றவனென்றீரே? தரையிற் கிடக்குந் தங்கத்தின் மீது தற்செயலாகத் துருவேறிற்றானால் அது தங்கத்தின் குற்றமன்றே? எனவே, நீர் பிறர்மீது குறைகூற வேண்டாம். ஆனாலும் அக்குற்றத்தை உமது தலைமீது எதற்காக வீணில் ஏற்றிக்கொள்கிறீர்?' என்று கேட்டோமானால் அதற்கென்ன பதிலுரைக்கிறார் பார். 'ஏனையா! யோஜனையில்லாமற் பேசுகிறீர்? ஏதோ த்ருஷ்டாந்தத்திற்கென வொன்றைச் சொல்லிவைத்தால் அதையே முற்றவும் பிடித்துக்கொண்டு போராடுகிறீரே? ஒரு புலவர் 'ஒரு பெண்ணின் முகம் தாமரைப் பூப் போன்றது' என்று, வர்ணித்தாராம். அதுகேட்ட ஒரு ரஸிகர் 'ஐயோ! கல்லம்மை போட்டிக் கஷ்டமடைந்தவள்போலும்!' என்று கரைந்து உருகினாராம். 'எதைக் கொண்டு கண்டீர்?' என்று கவி கேட்டதற்கு, 'அவள் முகத்தை அரவிந்தமென்றீரே! தாமரை மலரைத் தாங்கி நிற்கும் காம்பு காடு முரடாகத்தானே இருக்கும்? இனி இவள் வதநாரவிந்தத்தின் நாளமாகிய கழுத்தும் அதைப் போன்றதாகவே யல்லவோ இருக்கவேண்டும்' என்று வெகு அழகான் ஊஹரீதியில் பதிலுரைத்தாராம் அந்த புத்திமான். அது போலல்லவோ பேசுகிறீர்? தங்கமென்பது அறிவற்ற அசேதந வகுப்பிற் சேர்ந்த பொருள்.

அப்படியா நாமும்? நமக்கு நல்லதையோ கெட்டதையோ தெரிந்துகொள்ள ஆற்றல் இருக்க வில்லையா? அப்பகுத்தறிவைக்கொண்டு அஹிதத்திற்கு இடங் கொடாமல் ஹிதத்தையே நிறைத்து வைத்துக்கொள்ளவேண்டியது நமது கடைமையாயிருக்க, அது செய்யாமல் சோம்பேறியாகத் திரிந்து விட்டு, 'குற்ற மென்னுடைய தல்ல'வென்றால் அது இரட்டிப் பாகவன்றோ சுமறும்? முழுகாமற் குளிக்காமல் அழுக்குப்படிந்து கிடக்கிற ஒரு சோம்பேறியைப் பார்த்து 'முட்டாளே! ஏனிப்படி அழுக்கடைந் திருக்கிறாய்?' என்றதற்கு, 'யானென்ன செய்வது? அழுக்கல்லவோ வந்து படைபடையாகப் பற்றிக்கொள்கிறது' என்றானும். எனவே, குற்றம் என்னுடையது தான் என்று ஒப்புக்கொள்வதன்றோ நாணய மென்கிறார்.

இதனால் ஆத்மாவின் பூர்ணஸ்வரூபம் ப்ரகாசியாமல் ஒளி மழுங்கிக் கிடப்பதே ஸம்ஸாரமென்றும், அதுவும்சேதநர்களுடைய ஸ்வ தோஷத்தாலேதான் ஏற்பட்டதென்றும் அங்கீகரிக்கப்பட்டதாகிறது பார். இனி இதற்கு மேலும் ஒன்றைக் கேட்போம். 'ஸாதுவே! அப்படி மிகப் பரிசுத்தராக இருந்த நீர் தவறாக என்றைக்கேனும் ஏதேனுமொரு அடாததைச் செய்து இவ்வில்லங்கத்திற் சிக்கிக்கொண்டீர் போலும்!' என்போமாயின், 'அல்ல; அப்படியல்ல. மாணிக்கத்தை மண்ணிற் புதைத்து வைத்தாலும் அது மண்ணாகி விடுமோ? அதுபோல எனது ஆத்மா முன்னொரு பொழுதில் முழுமையும் சுத்தமா யிருந்திருக்குமானால் அதன்மீது எப்பொழுதும் அழுக்கே பிடிக்காது. மேலும் அப்படிச் சுத்தமா யிருந்திருப்பின், யான் இவ்வழுக்கை வாரிப் பூசித்தான் கொள்வேனா? அநர்த்தத்தை ஏற்பதற்கே அசுத்திதானே காரணம். இனி அசுத்தியில்லை யென்றால் அநர்த்த மெங்கிருந்து வரும்? எனவே கர்ப்பரோகம் போல எனது ஸம்ஸாரப் பிணி அநாதிகாலமாகவே யுள்ளதுதான்' என்கின்றார்.

இதன்மேல், 'ஐயோ! இப்படி அநாதிகாலமாகவே மலிநமாய்க்கிடந்து உழலுகிற உமக்கு இனி விடியும் நாளேது? உமது வாணாள் முடிய வீணாகக் கிடந்து மடியவேண்டியதுதான் போலும்!' என்று சொல்லிவிட்டாலோ, 'ஏனய்யா! அப்படி அமங்களமாய்ப் பேசுகிறீர்? கர்ப்பப் பிணி யென்றாலும் ஸித்த ஔஷதத்தால் தீர்ந்துபோய் விடவில்லையா? கனி, எனப்படுகிற ஸுவர்ணச் சுரங்கத்தில் மண்ணோடு மண்ணாக மறைந்து மண்ணென்றே ஸாதாரணமாய் மதிக்கப் பெற்றுக் கிடந்த தங்கத் தூகள்களையும் பௌதிக சாஸ்த்ர முறைப்படி எடுத்துக் காய்ச்சி உருக்கி வார்த்துப் பார்க்கையில் அதுவே பத்தரை மாற்றுப் பசும்பொன் பாளமாகப் பளபளவென்று ப்ரகாசிக்கக் காண்கிறோமன்றோ? எனவே, எனது ஆத்மா அநாதிகாலமாய் மலிநமாகவேதான் இருக்கிற தென்றாலும் இதுவும் ஒரு நற்பொழுதில் சுத்தி பெறப்போகிற தென்பதில் ஸந்தேஹமே யில்லை' என்று வெகு

அழுத்தமாய் உறுதி கூறுகின்றார். இதனால் ஜீவராசிகளுக்குள்ள ஸம்ஸார மலம் அநாதி யென்றும், ஆனாலும் முடிவுள்ளது தானென்றும் ஏற்படுகிறது பார்.

கோபால்:—அண்ணா! நாயின் வாலை நீட்டிப் பிடித்தாலும் கைவிட்டவுடனே சுருட்டித்தான் கொள்ளும். ஏன்? அது பிறப்பிலேயே கோணலானதன்றோ? அதுபோல அநாதி காலமாய் மலிநமாகவே யிருக்கிற இவ்வாத்மாவை ஏதோ ப்ரயாஸப்பட்டுச் சுத்தப்படுத்துகிறோம். ஆனாலும் அது பழையபடி ஆய்விட்டால் பட்டபாடு விழலுக் கிறைத்தாற் போல் பாழாகி விடாதா?

பலராம்:—தம்பீ! அடுத்தபடியாக அதைத்தான் சொல்லவிருந்தேன். நீயாகவே கேட்டு விட்டாய். இக்கேள்விக்கு அந்த விமர்சகர் கூறும் உத்தரமென்ன?'அதொரு நாளுமில்லை; உருக்கிய நெய் மறுபடி வெண்ணெயாகுமா? ரஸவாதியினால் பொன்னாக மாற்றப்பட்ட செம்பு, திரும்பவும் முன்னுருவைப் பெறுமா?' என்று ஒன்றன்பின் ஒன்றாகப் பற்பல த்ருஷ்டாந்தங் காட்டி இச்சங்கையைக் களைந்து விடுகின்றார்.

கோபால்:—இந்த உபமாநம் இரண்டிலும் ஓரம்சத்தில் மஹத்தான வ்யத்யாஸம் தோன்றுகிறது. நெய் வெண்ணெயாகவோ தயிராகவோ அல்லது பாலாகவோ இருந்த நிலையிலும், அப்பொருள்களிலும் நெய்யினுடைய ஸூக்ஷ்மாம்சங்கள் அடங்கித்தானிருக்கின்றன. ஆனால் அது பால் தயிர் வெண்ணெய் இவற்றின் ஸ்தூலாம்சத்தில் மறைந்திருந்தது. பிறகு காய்ச்சித் தோய்த்துக் குழப்பித் திரட்டி உருக்குவதால் அந்த ஸ்தூலாம்சம் தனியாக ஒதுக்கப்பட்டு நெய்யின் ஸ்வாம்சம் மட்டும் திரிந்து தெளிந்து வருகையில் எஞ்சியது நெய்யாகிறது. ஆனதினால்தான் பால் தயிர்களின் அளவைவிட நெய்யின் அளவு குறைவாகிறது. இந்த த்ருஷ்டாந்தத்தின்படி பார்த்தால், ஜீவர்களுடைய பரிசுத்தமான ஸூக்ஷ்ம ஸ்வரூபம் அபரிசுத்தமான ஏதோ சில ஸ்தூலாம்சங்களில் அநாதிகாலமாய் மறைந்து கிடந்து, பின்னொருபொழுது மஹத்தான ப்ரயத்நத்தின் பேரில் அந்தக் கல்மஷமான ஸ்தூலாம்சங்கள் கழுவப்பட்டுப் போகையில் ஸ்வாபாவிகமான சுத்த ஸ்வரூபம் வெளிப்படையாக ப்ரகாசிக்கிறது. இதனால் ஜீவதத்வம் மற்றொன்றால் மறைக்கப்பட்டிருத்தலே ஸம்ஸார மென்றும், அம்மறைவு நீங்கி வெளித் தோன்றுவதே அதற்குற்ற புருஷார்த்தமென்றும் ஏற்படுகிறது.

நிற்க: மற்றொரு த்ருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்வோம். அதில் செம்பென்ற ஒரு லோஹமே ரஸவித்தையின் மஹிமையினால் பொன் எனப்

படுகிற வேறொரு லோஹமாக மாறி விடுகிறது. அதனால் தான் எந்த அளவு அல்லது நிறைக்கிச் செம்பை வைக்கின்றோமோ, அது தங்கமாக மாறிய பின்னரும் அந்த அளவுகாணலாகிறது. எனவே, இதன்படி பார்க்கையில், ஸம்ஸார தசையில் ஜீவனாயிருக்கின்ற ஆத்மாவே முக்தி தசையில் வேறு ஏதோவொரு ஆத்மாவாக மாறிவிடுகிறதென்றாகிறது. ஆகவே, முதல் த்ருஷ்டாந்தத்தில் சுரங்கத்தில் மண்ணோடு கலந்து கிடந்த ஸுவர்ண அணுக்கள் அம்மண்ணைக் காய்ச்சி எரித்து விட்டபின் ஒன்று சேர்ந்து தங்கக்கட்டி யாகிறதுபோல ஜடபதார்த்தத்தோடு கலந்திருக்கிற ஆத்மஸ்வரூபம் தக்க முறையினால் அந்த ஜடப்பொருள் விலக்கப்பட்டபின் சுத்தஸ்வரூபத்துடன் ப்ரகாசிக்கிறது. ஆனாலும் அப்போதும் இப்போதும் எப்போதும் இது சுத்தந்தான் என்று ஏற்படுகிறது.

இரண்டாவது த்ருஷ்டாந்தத்திலோவெனில்: விதையானது உழுது விதைப்பதினால் முளை எனப்படுகிற வேறு ஜாதீயப் பொருளாக மாறி விடுவதுபோல, ஸம்ஸார நிலையில் ஜீவஜாதியாயிருக்கிற இவ்வாத்மா ஸாதநாநுஷ்டாநத்தினால் ஜீவஜாதியல்லாத வேறு ஜாதீயனாக மாறிவிடுகிறானென்று ஏற்படுகிறது. இனி எந்த த்ருஷ்டாந்தத்தின்படி வைதிகர்கள் ப்ரக்ருத விஷயத்தை வைத்து நிர்ணயித்திருக்கின்றார்கள்?

பலராம்:—மேதாவியான எனது அருமைத் தம்பியே! இங்குக் குறித்த உபமாநம் இரண்டிற்குள்ளும் நீ காட்டிய வாசி உள்ளதுதான். வைதிகர்கள் முதல் த்ருஷ்டாந்தத்தின் படியேதான் அர்த்த நிர்ணயத்தைச் செய்து கொள்கிறார்கள். ஏனெனில்: இவர்களுக்கு முக்தியென்பது ஆவரண நிவ்ருத்திமாத்ர மென்பதே கொள்கை. கிணறு வெட்டுவதால் ஜலத்திற்கிருந்த மறைவு (மண்) விலக்கப்பட்டதே யன்றிப் புதிதாக ஜல முண்டாக்கப்படவில்லை யென்பது போல, முக்திக்கிருந்த மறைவு போக்கப்பட்ட தன்றி ஜீவதத்வத்தின் ஸ்வரூபமும் போய்விடவில்லை ஜாதியும் மாறிவிட வில்லை என்றே இவர்களின் ஸித்தாந்த மாதலால், ஸ்வரூபத்திலோ ஜாதியிலோ மாறுதலைக் காட்டுகிற எந்த உபமாநத்தையும் இவர்கள் பூர்ணமாய் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

ஆனால் இரண்டாவது த்ருஷ்டாந்தத்தைப் பூர்ணமாய்ப் பற்றுகிற மதவாதிகளு முண்டு. அவர்கள் சிறிய விதையே பெரிய மரமாகும்போது முன்னிருந்த பீஜரூபத்தையும் பீஜநாமாவையும் பீஜஜாதியையும் இழந்து வ்ருக்ஷத்திற்குள்ள விலக்ஷணமான நாமரூபஜாதியாதிகளைப் பெற்று விலக்ஷண வஸ்துவாகிறது போல, ஸம்ஸார தசையில் ஜீவருக்குள்ள நாமரூபாதிகளைப் பெற்றிருக்கிற சேதநர்கள் (அல்லது பசுக்கள் அல்லது புத்கலர்கள்) ஸாதநாநுஷ்டாந பலத்தால் ஈசனுக்குள்ள நாமரூபாதிகளைப் பெற்று ஈச்வரனாக

அல்லது ஈச்வரர்களாக ஆய்விடுகின்றனரென்றுஞ் சொல்லுகின்றனர். அப்படிச் சொல்லுகிறது உபநிஷத்தைச் சார்ந்த மும்மதத்தி லொன்றான வைதிகஸித்தாந்தமல்ல வாதலால் இப்போது யான் அதை விவரிக்காமல் விட்டுவைத்து, அதற்கு ஸமயம் வாய்க்கும்போது விஸ்தரித்துக் கூறுவேன்.

இது இம்மட்டில் இருக்கட்டும். இந்த விமர்சகரைப் பார்த்து இன்னுமொன்று கேட்போம். 'அப்பனே! நீ சுத்தப்படுகிறதற்கு யாரை நம்பியிருக்கிறாய்?' என்றாலோ 'ஏன் இதிலென்ன ஸந்தேஹம்? அரிப்பெடுத்தவன்தானே சொரிந்துகொள்ள வேண்டும். பசி யெடுத்தவன்தானே புசிக்க வேண்டும். பிணி யெனக்கென்றால் மருந்து உண்பதற்கு மாத்ரம் முத்தண்ணாவோ? என்னைக் கெடுத்துக்கொண்டதும் யான்தான். இனி யென்னை மீட்டு முன்னுக்குக் கொண்டுவர வேண்டிய பொருப்பும் என்னது தான். கெடுதிக்கும் சில துஷ்டர்கள் துணையாகத்தான் இருந்தார்கள். நன்மைக்கும் சில நல்லார் உதவி வேண்டியதுதான். ஆனாலும் அவர்களாலே தான் யான் கெட்டேனென்றும் சொல்லிவிடுவதற்கில்லை. இவர்களே தான் என்னைத் தூக்கிச் சுமந்துகொண்டு செல்வார்களென்று சும்மா விருப்பதற்கு மில்லை. அன்றைக்கும் நான்தான் எனக்குச் சத்ருவாயிருந்தேன்; இன்றைக்கும் யானேதான் எனக்கு மித்ரனாகவும் விளங்குகிறேன்' என்று சரமாரியாகப் பொழிந்து தள்ளுகிறார்.

'நல்ல தப்பா! உம்மீது குற்றமில்லாமல் உண்மையாக முன்னுக்கு வரத்தான் பாடுபடுகிறீர். அது பலித்தேதீரு மென்கிற நிச்சயமென்ன? நிர்ப்பந்தந்தா னென்ன? ஒருகால் பலமளிக்கத் தவறியும் போய்விடலா மன்றோ?' என்று சற்று ஸந்தேஹப்பட்டு விட்டாலோ, 'புசித்தால் பசிதீரும் குடித்தால் விடாய் தீரும்' என்பதிற்கூடத்தான் உமக்கு ஸந்தேஹ முண்டாகலாம். எதில்தான் உமக்கு நிச்சயம்? ஸந்தேஹாத்மா விநஶ்யதி. நீர்போமென்கின்றார்.

'கோபிக்க வேண்டாம். அதுபோல் அல்லவே ஆயிரம் பேர் சோறுண்டு பசிதீருவதையும் ஜல மருந்தி சாந்தி பெறுவதையும் கண்ணாரப் பார்க்கின்றோமே' என்றாலோ, இங்கும் பதினாயிரம் பேர் பதம்பெற்றதாக ப்ரமாணங்கள் முறையிடுகின்றனவே' என்று திடமாக விடை கூறுகின்றார்.

தம்பீ! இது வரையில் யான் சொல்லியதிலிருந்து 'ஆத்ம ஸ்வரூபம் நித்ய சுத்தமானது. அதன் கண்படர்ந்து அதன் ஸ்வய ஸ்வரூபத்தை மறைக்கின்றதான ஒருவகை ஜடப் பொருளின் ஸம்பந்தமே அதற்கு ஸம்ஸாரம். இதுவும் அநாதிகாலமா யுள்ளது; ஆனாலும் அற்றுப் போகுந் தன்மையது. இது அடியோடு அற்றுப்போய் இவ்வாத்ம ஸ்வரூபம் தனக்

குள்ள எல்லா மேன்மையுடனும் விளங்குவதே இது பெறவேண்டிய மஹா புருஷார்த்தம். இந்த நன்னிலை இன்றுவரை கிடையாத குற்றம் நம்மைச் சேர்ந்ததேயன்றி இதற்குப் பிறரெவரும் பாத்யஸ்தரல்லர். நமது குற்றத்தால் ஏற்பட்ட குறையை நீக்கிக்கொள்வதற்கு நாமேதான் ப்ரயத்நம் பண்ணவேண்டும். பண்ணினால் பலம் கிடைப்பது நிச்சயம். தவறாது. இதில் சிறிதளவும் ஸந்தேஹமில்லை' என்கிற விஷயங்கள் உனக்கு நன்றாக விளங்கியிருக்கு மென்று நினைக்கிறேன். இவ்விஷயங்களெல்லாம் தேகமே ஆத்மாவென்கிற நிர்மாக முள்ளவர்களான நாஸ்திகர் நீங்கலாக தேஹேந்த்ரியாதி விலக்ஷணமான ஆத்ம தத்வத்தை அங்கீகரிக்கின்றவர்களான ஆஸ்திகர் பெரும்பாலாருக்கும் (அதாவது: வைதிக அவைதிகரென்கிற வாசியற ஆத்ம விசாரகர் பலருக்கும்) பொதுவானவைக ளென்னலாம்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம்

ஜீவ ஸ்வரூபமும் ஸம்ஸார பந்தமும்

[ஸ்ரீ உப. வக்கீபுரம் வாஸுதேவாசார்யர்]

சென்ற ஸஞ்சிகையில் ஜீவ ஸ்வரூபத்தைப் பற்றிக் கொஞ்சம் விசாரித்தோம். ஜீவன்கள் எல்லாரும் பகவானைப் போல ஜ்ஞாநத்தையே ஸ்வரூபமாக உடையவர்களென்றும், பகவான் ஸர்வஜ்ஞனும் ஸகல கல்யாண குணங்களுடன் கூடினவனும் இருப்பது போல ஜீவன்களும் தமது சுத்த ஸ்வரூபத்தில் ஸர்வஜ்ஞர்களாகவும் ஸகல கல்யாண குணங்களுடன் கூடினவர்களாகவும் இருக்கிறார்க ளென்றும், ஆனால் பகவானுடைய ஸ்வரூபம் விபுவாக (அதாவது— எங்கும் வ்யாபித்து நிற்கக் கூடியதாக) இருப்பது போலன்றிக்கே ஜீவன்களுடைய ஸ்வரூபம் அணுவாக இருக்கின்றதென்றும், பகவானுக்குப் போல ஜீவன்களுக்கும் தம்மைத் தவிர்த்த மற்றைப் பதார்த்தங்களைத் தமக்குத் தெரிவிக்கும் தர்ம ஜ்ஞாநமொன்று இருக்கின்றதென்றும், பகவானுடைய தர்ம ஜ்ஞாநம் ஒரு வித விகாரத்திற்கும் ஆஸ்பதமாகாமல் எப்பொழுதும் சுத்தமாகவும் பூர்ணமாகவும் இருப்பது போலன்றிக்கே ஜீவன்களுடைய தர்ம ஜ்ஞாநம், அந்த ஜீவன்கள் கர்மத்திற்குப் பரவசர்களாக இருக்கும்பொழுது ஒரு வித ஸங்கோச விகா

ஸங்களை (அதாவது—குறைவையும் வ்ருத்தியையும்) அடைகின்றதென்றும், அந்தக் கர்ம பந்தம் விலகிவிட்டால் அவர்கள் தமது தர்ம ஜ்ஞாநத்தின் பூர்ண விகாஸத்தையும் தமக்கு இயற்கையாயுள்ள கல்யாண குணங்களையும் திரும்பப் பெறுகிறார்களென்றும் அவ்விடத்தில் நிரூபிக்கப் பட்டன. இந்த நிரூபணங்களுக்கு ப்ரமாணமாகச் சில மஹர்ஷி வாக்யங்கள் முதலானவற்றை இப்பொழுது உதாஹரிக்கின்றோம்.

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில்,

“𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑌰𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌖𑍍𑌯𑌾 𑌤𑌥𑌾𑌪𑌰𑌾”

[விஷ்ணு சக்தி என்று சொல்லப்படும் பர வஸ்துவை நிரூபித்தோம், க்ஷேத்ரஜ்ஞர்களென்று சொல்லப்படும் ஜீவன்களைப் பற்றிச் சொல்லுகிறோம்] என்று ஆரம்பித்து ஜீவ ஸ்வரூபத்தை விவரிக்குமிடத்தில்,

“𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌨𑍍𑌯𑌾 𑌤𑍃𑌤𑍀𑌯𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑍇।
𑌯𑌯𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌾 𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌾 𑌨𑍃𑌪 𑌸𑌰𑍍𑌵𑌗𑌾 ॥
𑌸𑌂𑌸𑌾𑌰𑌤𑌾𑌪𑌾𑌨𑌖𑌿𑌲𑌾𑌨𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍍𑌯𑌤𑌿 𑌸𑌨𑍍𑌤𑌤𑌾𑌨𑍍 ।
𑌤𑌯𑌾 𑌤𑌿𑌰𑍋𑌹𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌾।
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌭𑍂𑌪𑌾𑌲 𑌤𑌾𑌰𑌤𑌮𑍍𑌯𑍇𑌨 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥”

[வி. பு. VI—8—61, 62, 63,]

[பரமான பகவானுகிற சக்தியையும் அபரமான ஜீவ சக்தியையும் காட்டிலும் அவித்யை என்றும் கர்மமென்றும் மூன்றாவது சக்தி ஒன்று உண்டு. கர்ம நிமித்தங்களான ஸர்வ சரீரங்களிலும் புகுந்து நிற்கும் ஜீவன்களெல்லாரும், இந்த மூன்றாவது சக்தியால் மூடப்பட்டவர்களாய், எப்பொழுதும் தொடர்ந்து நிற்கும் ஸகல வித ஸம்ஸார கஷ்டங்களையும் அடைகிறார்கள். இந்த ஜீவன்களுக்கு இயற்கையாயுள்ள ஜ்ஞாநம் அந்தச் சக்தியால் மூடப்பட்டிருக்கிறபடியால், அந்த ஜ்ஞாநமானது ஸகல ஜந்துக்களிடங்களிலும், ஒன்றில் ஏறியும் மற்றொன்றில் இறங்கியும், தாரதம்யத்துடன் காணப்படுகின்றது.] இவ்விடத்தில் மஹர்ஷி, பகவான் முதலான எல்லாவற்றையும் ‘சக்தி’ என்று வ்யவஹரித்துக்கொண்டு, ஜீவ சக்தியானது கர்மத்தால் ஆக்ரமிக்கப்பட்டிருக்கின்றதென்றும், அப்படி ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் காரணத்தால் ஜீவன்கள் தாபத்ரயத்திற்கு ஆளாகிறார்க ளென்றும், அது காரணமாகவே அந்த ஜீவன்களிடம் ஜ்ஞாநமும் மழுங்கி நிற்கின்றதென்றும் சொல்லுகிறார். ஜீவன்களுக்கு இயற்கையாயுள்ள ஜ்ஞாநமானது பரிபூர்ணமாக இருக்கும் வரையில் அவர்கள் தாபத்ரயத்

தால் பிடிக்கப்படமாட்டார்களாதலால், அந்த ஜ்ஞாநம் ஒரு வித குறைவை அடைந்த பிறகே அவர்கள் ஸம்ஸார தாபங்களை அடைகின்றார்களென்று இவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஜீவன்களுக்கு இவ்விதம் நேரும் ஜ்ஞாந தாரதம்யமும் பின்வருமாறு நிற்கின்றதாம்.

"ஸப்ராணவஸ்துஷு ஸர்வேஷு ஸா ஸ்தாவரேஷு தத்தாரதம்யதா।
ஸரீஸ்ருபேஷு தேஹேஷ்வபி ஸ்ருதிஸ்ம்ருதிவர்த்திஷு॥"

[வெளிப்படையாகத் தெரியாமலிருக்கும் ப்ராணனையுடைய கல் கட்டை முதலிய வஸ்துக்களில் அந்த ஜீவ சக்தியானது மிகவும் குறைந்த ஜ்ஞாநத்தை உடைத்தாயிருக்கின்றது. புல் பூண்டு செடி மரங்கள் முதலிய ஸ்தாவர வஸ்துக்களில், கல் கட்டைகளில் இருப்பதைக் காட்டிலும் அந்த ஜ்ஞாநம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கின்றது. புழு பக்ஷி மாடு முதலிய திர்யக் ஜந்துக்களில் இன்னும் கொஞ்சம் அதிகம்.] அந்தத் திர்யக்குக்களுக்கு இருப்பதைக் காட்டிலும் மநுஷ்யனுக்கு இன்னும் அதிகமென்றும், மநுஷ்யர்களிடம் காட்டிலும் தேவர்களிடம் இன்னும் அதிகமென்றும் இவ்விடத்தில் விவக்ஷிதம். இந்தத் தாரதம்யம் முழுவதும் தர்ம பூத ஜ்ஞாநத்திற்கே தவிர, ஸ்வரூப ஜ்ஞாநத்திற்கு நேர்வதில்லை என்பதை நாம் மறக்கக் கூடாது.

இந்தத் தர்ம பூத ஜ்ஞாநம் எவ்வளவு குறைவை அடைந்தாலும் ஒரு பொழுதும் நாசத்தை அடைகின்றதில்லை என்றும், அது நித்யமான ஸ்வரூப ஜ்ஞாநத்தின் தர்மமானதால் அந்த ஸ்வரூபம் போல அதுவும் நித்யமாகவே இருக்கின்றது என்றும் ச்ருதிகள் விளக்குகின்றன. ப்ருஹதாரண்ய கோபநிஷத்தில், தூங்கும்பொழுது ஜீவன்களிடம் இந்த ஜ்ஞாநம் இருக்கின்றதா இல்லையா என்பதை விசாரித்து வருமிடத்தில், 'இந்தத் தர்ம ஜ்ஞாநம் அவிநாசி' என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

"யத்வைதம் ந விஜாநாதி, விஜாநந்வை தந்ந விஜாநாதி;
நஹி விஜ்ஞாதுர் விஜ்ஞாதேர் விபரிலோபோ வித்யதே, அவி
நாசித்வாத்। ந து தத் த்விதீயமஸ்தி ததோ(அ)ந்யத் விபக்தம் யத் விஜாநீயாத்,"

[ப்ரு. VI 3-30]

என்னும் வாக்யம் காணப்படுகின்றது. இதன் பொருளாவது—'ஜீவனே ஜ்ஞாதா [அதாவது—அறியும் ஸ்வபாவமுள்ளவன்.] அப்படிப்பட்ட ஜீவன் தூக்கக் காலத்தில் ஏன் ஒன்றையும் அறியவில்லை என்றால், அவனுக்கு அப்பொழுது அந்த ஜ்ஞாநம் இருந்தும் ஒன்றையும் அறியாமலே

இருக்கிறான் என்பதே அதற்கு ஸமாதாநம். ஏனென்றால்: ஜ்ஞாதாவாகிற ஜீவனுடைய தர்ம பூத ஜ்ஞாநம் நாச மடையும் ஸ்வபாவத்துடன் கூடினதன்று; ஆகையால் அது அப்பொழுது நாச மடைந்து விட்டது என்று சொல்வது ஸங்கதமாக மாட்டாது. அந்தத் தூக்கக் காலத்தில் தன்னைத் தவிர்த்த வேறொரு வஸ்துவும் தனக்கு இல்லையாதலால் அவன் ஒன்றையும் அறியவில்லை'. இதனால் ஏற்படுவது என்ன வென்றால், 'தூக்கக் காலத்தில் நமக்கு நம்மைத் தவிர்த்த வேறொரு வஸ்துவின் ஜ்ஞாநம் உண்டாகாமல் இருப்பது, அப்பொழுது நம்முடைய தர்ம பூத ஜ்ஞாநம் இல்லை என்னும் காரணத்தாலன்று; அந்த ஜ்ஞாநம் அவிநாசியானதால் எப்பொழுதும் அது நம்மிடம் இருக்கின்றது. ஆனால், அந்த ஜ்ஞாநத்தால் அறியப்படக் கூடிய வேறொரு வஸ்துவும் அப்பொழுது இராததே நாம் அப்படி ஒன்றையும் அறியாமல் இருப்பதற்குக் காரணம்' என்பது தான். தூக்கக் காலத்தில் தூங்குபவனுடைய இந்த்ரியங்கள் உபரதங்களாக இருப்பதும் இதற்கு ஒரு காரணம்.

இந்த ஜீவன்களைப்பற்றி இன்னும் ஒரு விஷயம் நாம் கவனிக்க வேண்டியது உண்டு. அதாவது: 'இந்த ப்ரபஞ்சத்தில் தேவர்கள் மநுஷ்யர்கள் திர்யக் ஜந்துக்கள் ஸ்தாவரங்கள் என்று பல வித ஜந்துக்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு ஜந்துவும் தன் தனக்குத் தகுந்த சிற்சில ப்ரயத்நங்களைச் செய்வதும் சிற்சில கர்மங்களை அநுஷ்டிப்பதும் சிற்சில பலங்களை அநுபவிப்பதுமாக இருக்கின்றது. 'இவன் நம்மைச் சேர்ந்தவன்; ஆகையால் இவனுக்கு நாம் இஷ்டத்தைச் செய்யவேண்டும். இவன் நம்மைச் சேராதவன்; ஆகையால் இவனுக்கு அநிஷ்டத்தைச் செய்யவேண்டும்' என்று எல்லாரும் பற்பல கார்யங்களில் ப்ரவ்ருத்திக்கிறார்கள். இந்த ப்ரவ்ருத்திகளுள் ஒன்றும் சுத்த ஜீவன்களைச் சேர்ந்ததன்று; சுத்த ஜீவன்களுக்கு அம்மாதிரி கர்த்ருத்வமாவது கர்மங்களைச் செய்வதாவது அந்தக் கர்மங்களின் பலத்தை அநுபவிப்பதாவது ஒட்டமாட்டாது' என்பது தான். இவையெல்லாம், ஜீவன்களின் ஜ்ஞாநத்தை மறைத்துக்கொண்டு அதன் ப்ரகாசத்தைக் குறைத்துக்கொண்டும் நிற்கும் கர்மங்களின் கார்யமே. ஜீவன்கள் சேதநர்களாக இருக்கிறபடியால் ஜ்ஞாத்ருத்வம் கர்த்ருத்வம் முதலியவை அவர்களுக்கு உண்டு; ஆனால் அவை, இப்பொழுது இந்த ப்ரபஞ்சத்தில் ஒவ்வொருவருக்கும் அஸாதாரணமாகத் தென்படும் கர்த்ருத்வம் போன்றதல்ல; அவை இவைகளைக் காட்டிலும் விலக்ஷணங்கள் என்பதுதான் விவக்ஷிதம். இந்த விஷயம் பகவத் கீதையில் ஐந்தாவது அத்யாயத்தில் ஜீவன்களுடைய ஸ்வாபாவிக ரூபத்தைச் சொல்லுமிடத்தில் விளக்கப்பட்டிருக்கின்றது.

“𑌨 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌸𑍃𑌜𑌤𑌿 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ।
𑌨 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌸𑌂𑌯𑍋𑌗𑌂 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥
𑌨𑌾𑌦𑌤𑍍𑌤𑍇 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍𑌪𑌾𑌪𑌂 𑌨 𑌚𑍈𑌵 𑌸𑍁𑌕𑍃𑌤𑌂 𑌵𑌿𑌭𑍁𑌃 ।
𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑌾𑌵𑍃𑌤𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑍇𑌨 𑌮𑍁𑌹𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌜𑌨𑍍𑌤𑌵𑌃”

[இந்த லோகத்தில் ஒவ்வொரு ஜந்துவுக்கும் அஸாதாரணமாகத் தென்படும் ப்ரயத்நத்தையோ கர்மங்களையோ அந்தந்தக் கர்மங்களால் உண்டாகும் பலாநுபவத்தையோ, ஸ்வாபாவிகமான சுத்த ஸ்வரூபத்துடன் இருக்கும் ஜீவன் உண்டுபண்ணவில்லை. அநாதி காலமாகத் தொடர்ந்து வரும் ப்ரக்ருதி வாஸனையே இவைகளை உண்டுபண்ணுகின்றது. நமது புத்ராதிகளுடைய துக்கத்தை நாம் போக்கடிக்க ப்ரயத்நப்படுவதும், நமக்கு ப்ரதிகூலராயுள்ள சத்ருக்களின் ஸுகத்தைத் தடுக்க ப்ரயத்நப்படுவதும், அப்படி ப்ரயத்நப்பட்டு அதற்கு அநுகுணங்களான கார்யங்களைச் செய்வதும், அவைகளைச் செய்து அதனால் ஏற்படும் பலத்தை அநுபவிப்பதும், ஆகிய இவை யெல்லாம் ப்ரக்ருதி வாஸனையின் கார்யங்களே. நமது ஜ்ஞானத்தைக் குறைக்கும் சக்தியுள்ள பூர்வ பூர்வ கர்மங்களால் நமது ஜ்ஞானம் குறைவுபடவே, நாம் மோஹத்தை அடைந்து இம்மாதிரி கார்யங்களில் ப்ரவ்ருத்திக்கின்றோம்.]

இதுவரை ஜீவ ஸ்வரூபம் விசாரிக்கப்பட்டது. இனி இப்படிப்பட்ட ஜீவன்கள் ப்ரக்ருதி வாஸனைக்கு எவ்விதம் ஆளாகின்றார்கள்? அப்படி ஆளாவதால் அவர்களுக்கு எப்படிப்பட்ட ஹானி ஏற்படுகின்றது? இவை முதலிய சில விஷயங்களைக் கொஞ்சம் விசாரிப்போம்.

கீழ் விவரித்திருக்கிறபடி கணக்கற்று இருக்கும் ஜீவன்களுள் சிலர், அநாதி காலமாகத் தமது சுத்த ஸ்வபாவத்துடனேயே இருந்துகொண்டு, தம்முடைய ஸ்வரூபத்திற்கு அநுகுணமான கைங்கர்ய புருஷார்த்தத்தை எப்பொழுதும் அநுபவித்துக்கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் ‘நித்யர்கள்’ என்று சொல்லப்படுவார்கள். மற்றும் சிலர், ஒரு காலத்தில் ஸம்ஸார பந்தத்தில் அகப்பட்டிருந்து, பிறகு பகவத் க்ருபையைப் பெற்றுக் கர்ம பந்தத்திலிருந்து விடப்பட்டவர்களாய் நித்யர்கள் போல் பகவதநுபவம் செய்துகொண் டிருக்கிறார்கள். இவர்கள் ‘முக்தர்கள்’. மிகுதியாக இருக்கும் ஜீவர்களெல்லாரும் ஸம்ஸார பந்தத்தில் அகப்பட்டவர்களாக இருக்கிறபடியால், அவர்கள் ‘பத்தர்கள்’ என்று சொல்லப்படுகிறார்கள். இவர்களைப்பற்றியே நாம் இப்பொழுது விசாரிக்க ப்ராப்தமாகின்றது.

‘ஸம்ஸார பந்தம்’ என்றால் என்ன? 𑌸𑌂𑌸𑌰𑌤𑌿 𑌬𑌹𑍁𑌶𑍋𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌿𑌤𑌿 𑌸𑌂𑌸𑌾𑌰𑌃 [ஜீவன் இதில் ஸம்ஸரிக்கிறான் என்று ஸம்ஸாரம்] என்பது ‘ஸம்ஸாரம்’ என்பதன் வ்யுத்பத்தி. பிறப்பும் இறப்பும் சக்ரம் போல் சுழன்று வருகின்றன. அந்தச் சுழல்களில் இடைவிடாமல் சுற்றி வருவதே ‘ஸம்ஸரிக்கிறது’ என்பதன் பொருள். நாம் செய்யும் அபராதத்திற்காகப் பகவானால் நாம் இம்மாதிரி சுழன்று வரும்படி ஸங்கல்பிக்கப்பட்டிருக்கிறோம். இது நமக்கு விதிக்கப்பட்டுள்ள ஒரு தண்டனையே. நம்மால் அநுஷ்டிக்கப்பட வேண்டியவைகளாக நமக்குச் சில கட்டளைகளைப் பகவான் இட்டிருக்கிறான் என்றும், பகவான் ஸ்வாமியாகவும் நாம் அவனுடைய தாஸர்களாகவும் இருக்கிறபடியால் நாம் அந்தக் கட்டளைகளுக்கு உட்பட்டு நடக்கக் கடமைப்பட்டவர்கள் என்றும், அப்படி உட்பட்டு நடவாமல் நாம் அவைகளை மீறி நடந்தால் நாம் அபராதம் செய்தவர்களாகிறோம் என்றும், அம்மாதிரி நாம் அபராதிகளாக இருப்பதனாலேயே நமக்கு இந்தத் தண்டனை ஏற்பட்டிருக்கின்றது என்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. எக்காலத்தில் நாம் இவ்விதம் அபராதத்தைச் செய்தோமென்றாவது எவ்விதமான அபராதத்தைச் செய்தோமென்றாவது நம்மால் இப்பொழுது அறிவதற்கு முடியாது. நிற்க, நாம் எப்பொழுதோ ஒரு அபராதத்தைச் செய்தோம் என்பதுமில்லை. நாம் செய்திருக்கும் அபராதங்கள் கணக்கற்றவை; மறுபடியும் மறுபடியும் அவைகளை நாம் செய்து கொண்டே இருக்கிறோம்.

“𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌲𑍍𑌪𑌨𑌿𑌯𑍁𑌤𑌾𑌨𑍁𑌭𑌵𑍇𑌽𑌪𑍍𑌯𑌨𑌾𑌶𑍍𑌯𑌂
𑌤𑌤𑍍𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌂 𑌸𑍃𑌜𑌤𑌿 𑌜𑌨𑍍𑌤𑍁𑌰𑌿𑌹 𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌧𑍇”

[கணக்கற்ற காலம் அநுபவித்தாலும் கழியாமல் இருக்குமளவு எல்லையற்ற அபராதங்களை நாம் அரை க்ஷணத்தில் செய்கின்றோம்] என்பது நமது ஸ்வபாவத்தை அறிந்திருப்பவர்கள் சொல்லும் வார்த்தை. ஆனால், இந்த ஸம்ஸாரத்தைக் கேவலம் தண்டனை என்று சொல்வதும் சரியன்று. நம்மை இந்தத் தண்டனைக்கு உட்படுத்தும் பகவான், அந்தத் தண்டனையை நாம் அநுபவித்து வரும் காலத்திலேயே அந்தத் தண்டனையிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளும் யோக்யதையையும் நமக்குக் கொடுத்திருக்கிறான். அந்த யோக்யதையை நாம் சரிவர உபயோகப்படுத்தினால் நமக்கு இந்தத் தண்டனை விட்டுப் போகுமானதால் இந்த ஸம்ஸாரம் நமக்கு அநுகூலமாகவும் இருக்கின்றது என்பதையும் நாம் க்ரஹித்தல் வேண்டும்.

நாம் பகவானிடம் செய்யும் அபராதங்களுள் ஒன்று மிகவும் பெரியது; அதுவே மற்றை அபராதங்களுக்கெல்லாம் காரணமாகின்றதென்று பெரி

யோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது—நாம் ஸ்வபாவத்தால் பகவானுடைய தாஸர்களாகவும், ஆகையால் அவனுடைய சொத்தாகவும் இருக்க, அதை மறுத்து 'நாம் நம்முடைய சொத்தே; அதாவது-நாம் ஸ்வதந்த்ரர்களே, மற்றை ஒருவனுக்கும் பரதந்த்ரர்களல்லர்' என்று நினைப்பதும் அந்த நினைவுக்கு அநுகுணமாக நடப்பதுமே. பகவானுடையச் சொத்தை நாம் நம்முடையதென்று அபஹரிப்பதால் நாம் மிகப் பெரிய திருட்டைச் செய்தவராகிறோம் என்பதே இதைப் பெரிய அபராதமென்று சொல்வதற்குக் காரணம்.

"கிம்தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா"

[அவ்விதம் பகவானுடைய சொத்தாகிற ஆத்மாவைத் தன்னுடையதென்று அபஹரிக்கும் திருடனால் என்ன பாபம் தான் செய்யப் பட்டதாகவில்லை?] என்பது மஹர்ஷிகளின் வாக்யம். இந்தப் பாபம் நம்மிடம் இருக்கும் வரையில் நமக்காக விதிக்கப்பட்டுள்ள ஸம்ஸார பந்தமாகிற தண்டனையும் நம்மைத் தொடர்ந்தே நிற்கின்றது. எப்பொழுதாவது நாம் இந்தப் பாபத்தை உணர்ந்து, நாம் திருடியிருக்கும் சொத்தை அதற்குச் சொந்தக்காரனாகிற பகவானுக்கு நம்முடைய குற்றத்திற்குத் தகுந்த அநுதாபத்துடன் திருப்பிக்கொடுக்க ப்ரயத்நப் பட்டால், அப்பொழுது, கருணாநிதியாயுள்ள அந்தப் பகவான் நமது அநுதாபத்தை வ்யாஜமாகக் கொண்டு நம்மை மன்னிக்கிறான் என்பது மாத்ரமின்றிக்கே, நாம் இவ்வளவு காலமாகச் செய்துள்ள மற்றை அபராதங்கள் எல்லாவற்றையும் பொருத்து நம்மை தண்டனையிலிருந்து விடுவிக்கிறான் என்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. நமக்குள் எவ்வளவு பெயர்கள், அப்படிச் சாஸ்த்ரம் சொல்வதை நம்பி நமது பாபத்தைப் பாபமென்று உணரவோ, அது காரணமாக அதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவோ ஸந்நத்தராக இருக்கிறார்கள் என்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ ?

(தொடரும்)

ஸத் ஶூத்ர தர்மம் :—இது ஒரு சிறிய புஸ்தகம். இதில் நாலாவது வர்ணத்தார்களால் நிகம் தோறும் அநுஷ்டிக்கப்பட வேண்டியவையாக மஹர்ஷிகளால் சொல்லப்பட்டுள்ள தர்மங்களெல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு, புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உ. வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யரால் எளிதான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. விலை அணா 2; தபால் சார்ஜு வேறு. "திருச்சி ஜில்லா எலமனூர் போஸ்ட் திருப்பள்ளத்துறை ஸ்ரீ. உ. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர்" என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ:

புஸ்தக விமர்சம்.

அத்யாத்ம யோகம் அல்லது ஆத்மப் பயிற்சி.

அத்யாத்ம யோகம் அல்லது ஆத்மப் பயிற்சி என்னும் இந்நூல் குக தாஸரால் இயற்றப்பட்டு, பரஹ்ம ஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்த்ரிகளின் முகவுரையோடு கூடியது ; 272 பக்கங்கள் அடங்கியுள்ளது.

இந்நூல், வடமொழிப் பயிற்சியில்லாத சிறுவர்களும் பிறரும் சாஸ்த்ரங்களின் ஸாராம்சத்தை அறியுமாறு, ஆஹாரம், ஆஸநம், ப்ராணாயாமம், ஸங்கீதம், பஜனை, ஜாகர்யம், ஸமாதி முதலிய விஷயங்களைக் குறித்து உபநிஷத்துக்களின் ஆதாரத்தைக் கொண்டும் மற்றைச் சாஸ்த்ரங்களின் உபதேசங்களைக் கொண்டும் தத்கால அநுபவத்திற்கு உரியபடி தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. முக்யமாய், ப்ராணாயாமம் செய்யவேண்டிய முறையும் தஹரோபாஸநா விதமும் இந்நூலில் வெகு அழகாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. 'ப்ராசீநமதக் கோட்பாடுகளும் இந்நாளில் சரியானவைகள் தாம்' என்று தெரிந்து கொள்ளவேண்டுமென்று விரும்புவோரும், ச்ரத்தாளுக்களான மஹாங்களும், அதிக ச்ரமப்பட்டு உத்க்ரந்தங்களைப் பார்க்க அவகாசமில்லாதவர்களும், அத்யாத்மப் பயிற்சியில் ப்ரயத்நப்படும் சிறுவர்களும் இந்நூலைப் பார்க்க வேண்டியது மிகவும் அவச்யமாகும்.

இதன் விலை ரூ. 2—8—0. இதை அபேக்ஷிப்பவர்கள், 'கார்யதர்சி, குஹாலயம், சேங்காலிபுரம், தஞ்சாவூர் ஜில்லா' என்னும் விலாஸத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

கடிதங்கள்

(1)

ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸாதுத்வ ஸமர்த்தநம்

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஸம்பாதகருக்கு:—

ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸாதுத்வ ஸமர்த்தநமென்று அடியேன் எழுதி அனுப்பிய விஷயத்தை ப்ரசுரம் செய்ததைப் பற்றி ஸந்தோஷம். ஆனால் அதில் சில அசங்கள் ஸங்க்ரஹித்து அச்சுப் பதிப்பிக்கப் பட்டிருக்கின்றன. அதற்குத் தகுந்த காரணங்கள் இருந்தாலும், 'அஹிர்புத்ந்ய சப்தத்தில் ரேபம் இருப்பதற்கு ஸமாதானத்தை எழுத வேண்டும்' என்று பூர்வ பக்ஷிகள் கேட்டிருப்பதாலும் அது முக்யமான விஷயமானதாலும் அந்த விஷயத்திற்கு அடியேன் எழுதி இருந்த ஸமாதானத்தை மறுபடியும் எழுதி அனுப்பி இருக்கிறேன். அதை மாத்ரமாவது தீபிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷையில் ஸ்ரீ தேசிகனால் அருளிச் செய்யப்பட்ட 'அஹிர்புத்ந்ய விச்வேதேவ' சப்தங்களில், சென்ற ஸஞ்சிகையில் அடியேன் எழுதியிருக்கிறபடி, அநுக் ப்ரஸக்தியே இல்லாததனாலும், "பஜதஹிர்புத்ந்ய லக்ஷித" என்பது முதலான ப்ரயோகங்களில் 'அஹிர்' என்கிற ரேபத்திற்கு "பூர் புவஸ்வஸ்தரு :" என்கிற ஸஹஸ்ர நாம சப்தத்திலிருக்கும் ரேப விஷயத்தில் ஸ்ரீ பட்டர் சொல்லியிருக்கும் ரீதியை அநுஸரித்து, 'அஹிர்' என்கிற ரேபார்த்தமான மற்றொரு நிபா

தத்தை ஆக்ருதி கண பாடங்களில் சேர்த்து அங்கீகரிக்கக் கூடுமாதலாலும், ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்திகளுக்கு ஓரிடத்திலும் வ்யாகரண சாஸ்த்ர விரோதமே இல்லையென்று சொல்வதுதான் ஸ்ரீ ஸூக்திகளுடைய ஸ்வாரஸ்யத்திற்குப் பொருந்தின விஷயம்.

இப்பொழுது சிலர், உத்யாந பத்ரிகையில் 'டை ஸ்ரீ ஸூக்திகளில் ஸ்ரீ தேசிகன் அலுக்கை அருளிச் செய்திருப்பதாகச் சொல்வதுதான் ஸ்ரீ ஸூக்திகளின் ஸ்வாரஸ்யத்திற்கு அநுகுணம் என்று எழுதி இருப்பதோடு அடியேனால் எழுதப்பட்ட 'அலுக் ப்ரஸக்தி இல்லை' என்னும் பக்ஷமானது ஸூக்தி ஸ்வாரஸ்ய விருத்தமென்றும் எழுதி, 'ஆனால் வ்யாகரண சாஸ்த்ரத்தில் டை சப்தங்களில் அலுக்கை விதிக்கக் கூடிய ஸூத்ரங்கள் இல்லை. அப்படி இராவிட்டாலும், டை சப்தங்களுக்கு ப்ரயோக ப்ரஸித்தி இருப்பதைக் கொண்டு இங்கு அலுக்கை விதிக்கக்கூடிய ஸூத்ரத்தைப் பஹுள சப்த பாட மூலமாக நாம் கல்பிக்க வேண்டியது அவச்யம்' என்றும் எழுதி இருக்கிறார்கள். இந்த விஷயம் சரியன்று என்பது சென்ற ஸஞ்சிகையில் அடியேன் எழுதி இருப்பதிலிருந்தே நன்றாக விளங்கும். ஆனால், இவர்கள் ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்திகளை நமது பூர்வ பக்ஷிகள் தூஷிப்பது போல தூஷியாமல் வேறு விதமாக ஸமர்த்தித்திருப்பதால் இந்த விஷயத்தின் ஸாதுத்வத்தையும் அஸாதுத்வத்தையும் அடியேன் கவனிக்க வேண்டிய அவச்யமில்லை. அடியேன் செய்திருக்கும் நிர்வாஹம் அஸ்வாரஸ்ய முள்ளதென்று அவர்கள் எழுதியிருப்பதைப் பற்றி மாத்ரம் ஒரு வார்த்தை சொல்லும்படி ஸம்பவிக்கின்றது. அதாவது—'அடியேன் எழுதி இருக்கும் நிர்வாஹமானது தற்காலத்தில் பண்டிதோத்தமர்களென்று ஸுப்ரஸித்தர்களான (1) ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தானத்தில் எழுந்தருளி யிருக்கும் பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதி ஸமஸ்த கல்யாண குணகண பரி பூர்ணர்களான ஸ்ரீ அழகிய சிங்கர்களாலும் (2) ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி ஸமஸ்த கல்யாண குணங்கள் பரிபூர்ணரான ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமியாலும், (3) மஹா மஹோபாத்யாய அபிநவ பட்ட பாண இத்யாதி அநேக பிருதலங்க்ருதரான ஆர். வி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியாலும், (4) திருக்கோட்டியூர் ஸ்ரீ. உ. வே. வித்வான் ஸ்ரீ ராம தேசிகாசார்ய ஸ்வாமியாலும், (5) திருக்குடந்தை அக்நி ஹோத்ரம் ஸ்ரீ. உ. வே. வித்வான் தாததேசிக தாதாசார்ய ஸ்வாமியாலும், (6) மோஹனூர் ஸ்ரீ. உ. வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியாலும் (7) கரூர் ஸ்ரீ. உ. வே. வித்வான் நாராயண ஐயங்கார் ஸ்வாமியாலும் இன்னும் அநேக பண்டிதர்களாலும், திருக்குடந்தை ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸபையாலும் சாஸ்த்ர ஸம்மதமான விஷயமென்று ச்லாகிக்கப் பட்டிருக்கின்றது' என்பதுதான். ஆனாலும் மத்யஸ்த த்ருஷ்டிகளான வித்வான்கள் முக்யமாகக் கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. அதாவது—'ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்திகளுக்கு ஸாதுத்வத்தை ஸமர்த்திக்கிற இவ்விரண்டு பக்ஷங்களுக்குள் ஸ்ரீ ஸூக்திகளுக்கு விரோத லேச ப்ரஸக்தியே இல்லை என்று ஸமர்த்திக்கிற அடியேனுடைய பக்ஷம் ஸ்வாரஸ்ய முள்ளதா? அல்லது வ்யாகரண சாஸ்த்ர விருத்தமென்று தூஷிக்கப்படும் ஓரர்த்தத்தை ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்திகளில் காமாக ஆரோபித்து அந்த விரோதத்தைப் பரிஹரிப்பதற்காக நமது இஷ்டப்படி வ்யாகரண சாஸ்த்ரத்தில ஸூத்ரத்தைக் கல்பிப்பது ஸ்வாரஸ்ய முள்ள பக்ஷமா?' என்பதுதான். இவ்விஷய தாரதம்யத்தையும் உத்யாந பத்ரிகையின் பத்ராதிபருடைய அநுமோதநம் பக்ஷாந்தர ஸாதகமாகா'தென்பதையும் யதாவஸரம் பரக்க நிரூபிப்போம்.

திருப்பளாத்துறை
10—3—1934

புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர்.

(2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:॥

ஸச்சரித்ர ரக்ஷா ஸூக்தி விமர்சம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஸம்பாதகருக்கு :—

சென்ற கார்த்திகை மார்கழி மாதத்து ஸஞ்சிகையில் ஸ்ரீமத் உபய வே. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமியால் வெளியிடப் பட்டுள்ள "ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸாதுத்வ ஸமர்த்தநம்" என்னும் வியாஸத்தை வாசித்தோம். இது சிறிதும் பொருந்த மாட்டாத நிரூபணம் என்பதை நாம் விரிவாக எடுத்துரைத்து "ரக்ஷாவிரோத பரிஹாரப்ரகாசிகா" என்னும் பெயர் பூண்ட ஒரு க்ரந்தத்தை சுத்த ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதி தேவநாகர லிபியில் வெளியிட்டிருக்கிறோம். 'ரக்ஷா' என்றால் ஸச்சரித்ர ரக்ஷை. 'விரோத பரிஹாரம்' என்றால் ஸந்தேஹவிலோசநம். ஆக இந்த இரண்டு கிரந்தங்களிலு முள்ள விவாதாஸ்பத வாக்யங்களின் உண்மையான கருத்தை விளக்குவ தென்பது எமது நூற் பெயரின் பொருள்.

தேசிகனுடைய ரஹஸ்யத்ரய ஸாரத்தில் சில ஆசார்யவர்யர்களை உத்தேசித்து [illegible] உள்ளது. அது ஸமஞ்ஜஸமன்று என்பதை நாம் விவரிக்கப் புகுந்த காலத்து [பாதுகாஸஹஸ்ராவதார தத்வ மென்கிற நூலில்] எழுதியிருந்த சில வாக்கியங்களை மூலமாகக் கொண்டு புத்தங் கோட்டகம் ஸ்வாமியால் விசாரம் கிளப்பப் பட்டது. ஆச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்திகளின் மேல் தேசிகன் எறிட்டுரைத்த தூஷணங்கள் சிறிதும் ஏறமாட்டா வென்பதை நாம் விளக்கியிருந்தோம். ஆச்சான் பிள்ளையை நோக்கி அநாவச்யகமாகவே மந்தபத ப்ரயோகம் செய்யப்பட்ட தென்று நிரூபித்தோம். அதைப்பற்றின விடை யாதொன்றும் வெளிவரவில்லை. அதனால் "[illegible] [illegible]" "[illegible]" [illegible] ரஹஸ்யத்ரயஸாரவாக்யங்கள் ப்ராமாணிகங்களே யென்பது புத்தங்கோட்டகம் ஸ்வாமி முதலானவர்களாலும் அங்கீகரிக்கப் பட்டதாயிற்றென்று விவேகிகள் தெளியலாம்.

அங்ஙனன்றிக்கே ஆச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்திகள் [illegible]மென்றும் [illegible]ங்களே யென்றும் ஸாதிக்க விருப்பமும் துணிவு முடையவர்கள் அதைப்பற்றி தாராளமாக விஷய நிரூபணம் செய்ய முன் வரலாம்.

இரண்டாவது விஷயம்—ஸச்சரித்ர ரக்ஷையில் உள்ள ஸ்ரீஸூக்திகளால், விச்வேதேவ பதத்தில் அலுக் ஸமாஸம் தேசிகன் திருவுள்ளம் பற்றியிருப்பது ஸ்பஷ்டம். அப்படி அலுக் ஸமாஸம் என்பது பொருந்தா தென்றும், "விச்வே தேவார்த்தே" என்னமல் "விச்வ தேவார்த்தே" என்றுதான் சொல்ல வேணுமென்றும் தோழப்பர் ஸந்தேஹவிலோசநத்தில் நியமிக்கிறார். தேசிகனுடைய திருவுள்ளப்படி "விச்வே தேவார்த்தே" என்பது ஸாதுவான வ்யவஹாரந்தானென்று தேறுகின்றது; தோழப்பருடைய அபிப்ராயத்தின் படி அது மந்தர்களின் வ்யவஹாரம் என்பதாகத் தேறு

கின்றது என்று நிரூபிக்கிற மூகத்தால் தோழப்பர் தேசிகனை மத்தரென்று கருதின தாக விளங்குகின்றதென்றும், ஆச்சான் பிள்ளையை மத்தரென்றதற்கு இது விடை போலுமென்றும் நாம் எழுதியிருந்ததுண்டு.

இதற்கு வெகு விரிவாக ஸமர்த்தனமெழுதப் புகுந்த புத்தங்கோட்டகம் ஸ்வாமிகள் விச்வேதேவ பதத்தில் அலுக் ஸமாஸவாதம் தேசிகன் அடியோடு செய்ததேயில்லையென்றும் தேசிகனுடைய அபிப்ராயமும் தோழப்பருடைய அபிப்ராயமும் வேறன்றியே ஒன்று தானென்றும் எழுதி முடித்து விட்டார்.

அஹிர்புத்ந்யபதத்தையும் விச்வே தேவ பதத்தையும் தேசிகன் ஒரு கோர்வையாக எடுத்திருக்கிறார். ஸுதர்சநாஷ்டகத்தில் "பஜதஹிர்புத்ந்யலக்ஷித" என்று ப்ரயோகம் செய்திருக்கிறார். அதனால் அஹிர்புத்ந்யபதத்தில் அலுக் ஸமாஸமே தேசிகன் திருவுள்ளம் பற்றினதென்று ஸ்பஷ்டமாக விளங்குகின்றது. தத்புருஷவர்ஜிதமான விச்வேதேவபதத்திலும் அலுக் ஸமாஸமே ஸித்தமென்பதை ஒரு வையாகரணரும் அபலபிக்க மாட்டார்—என்கிற இவ்விஷயத்தை நாம் ஏற்கனவே வெளியிட்டிருந்தும் அதைப் பற்றி ஒரு உத்தரமும் உரையாமல் அர்வப க்ரமங்களைத் தம் இஷ்டப்படி வேறுபடுத்தி ஏதோ எழுதி முடித்திருக்கிறார். ஸச்சரித்ர ரக்ஷா ஸூக்திகளுக்கு அடியேன் காட்டியிருக்கிற அபிப்ராயமே இணங்கினதென்றும், புத்தங்கோட்டகம் ஸ்வாமி செய்திருக்கிற அந்வயக்ரமம் ஏற்காதென்றும் திருவையாற்றிலிருந்து வெளிவருகின்ற உத்யாந பத்ரிகையும் நிஷ்கர்ஷித்து விட்டது. மாசிமாதத்தில் வெளிவந்த உத்யாந பத்ரிகையில் (பக்கம் 77ல்) «அஹிர்புத்ந்யாதி சப்தவிசார:» என்னும் வியாஸம் V. R. S. தாதாசார்ய சிரோமணியால் எழுதப்பட்டுள்ளது. அதன் கீழ் அந்த பத்திரிகா ஸம்பாதகரும் சில கோச ப்ரமாணங்களைக் காட்டி அதுவே மிகவும் யுக்தமானதென்று ஸமர்த்தநமும் செய்திருக்கிறார். விச்வேதேவ பதத்தில் அலுக் ஸமாஸமேயுள்ளதென்றும், அப்படியே முன்னோர்களெல்லாரும் கருதியுள்ளார்களென்றும், தேசிகனும் அதையே தழுவியருளினாரென்றும் அதில் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆக இவற்றால் புத்தங்கோட்டகம் ஸ்வாமியின் ஸமர்த்தநம் முழுதும் தவறானதென்று விளங்கும். இவ்விஷயத்தை அடியேன் பலவகை உபபத்திகளுடனும் ப்ரதிவாக்ஷியின் ஸம்வாத த்ருஷ்டாந்தங்களுடனும் நன்கு நிரூபித்து ரக்ஷாவிரோதபரிஹாரப்ரகாசிகாவ்யாக்யாரூபேண வெளியிட்டிருக்கிறேனென்பதை இங்கு விஜ்ஞாபித்துக் கொண்டேன்.

விருப்பமுள்ளவர்கள் 0 5 0 ஸ்டாம்பு அனுப்பினால் அந்த ஸஞ்சிகையை அடியேன் அனுப்புவேன்.

இங்ஙனம்

வேத வேதாந்த வைஜயந்தீ
காஞ்சீபுரம்.
13—3—1934

பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர்.

(2)

ஸமீபத்தில் நமக்குக் கிடைத்த தீபிகையின் தை மாதத்து ஸஞ்சிகையில் ஸ்ரீ. உ. வே. புத்தங்கோட்டகம் ஸ்வாமி அஹிர்புத்ந்ய சப்த விஷயமாக எழுதியிருக்கின்ற வ்யாஸத்தையும் பார்த்தோம். அதற்கும் நம்முடைய "ரக்ஷா விலோசந பாவ ப்ரகாசிகை" யில் ப்ரத்யாக்யாநம் காணத்தக்கது. "பஜதஹிர்புத்ந்யலக்ஷித" என்கிற ஸ்வாமி தேசிகனுடைய ப்ரயோகத்தை நாம் ஏற்கெனவே எடுத்துக்காட்டியிருந்தோம். ஸச்சரித்ரரக்ஷையில் அஹிர்புத்ந்ய பதத்தையும் விச்வேதேவ பதத்தையும் ஸஹசரிதமாக எடுத்துக்காட்டியருளின தேசிகனது திருவுள்ளத்தை விவேகிகள் விமர்சிக்கவேண்டும். அந்த இரண்டு பதத்திலும் பூர்வாவயவம் ஸுப்போடு கூடியே ஸமஸ்தமாக்கப் பட்டிருக்கிறதை இசைந்தே தேசிகன் அவற்றை உதாஹரித்தருளினார் என்பது ஒருவராலும் மறுக்க வொண்ணாது. வ்யாகரண சாஸ்த்ரம் இடந்தாராமையாலே அங்கு அலுக்கிருப்பதாக தேசிகன் ஒருகாலும் திருவுள்ளம் பற்றியிருக்கமாட்டாரென்பதொன்றே புத்தங்கோட்டகம் ஸ்வாமிக்கு விவக்ஷிதம். தேசிகன், "ஸுதாஸாரஸுதாஹாரா:" என்று எழுதவேண்டுமிடத்தில் "ப்ருஷிதஸுதாஹாரா:" என்று எழுதியிருக்கிற ஸ்வாரஸ்யத்தை ஊன்றி நோக்கவேண்டும். ச்ருங்க க்ராஹிகயா இங்கு அலுக் விதாயகமான சாஸ்த்ரம் இல்லையென்பதை தேசிகன் திருவுள்ளம் பற்றியே "ப்ருஷிதஸுதாஹாரா:" என்று அருளிச்செய்தார். ப்ராமாணிக ப்ரஸித்தி ப்ராசுர்யத்தைக்கொண்டு அஹிர்புத்ந்ய விச்வேதேவ பதங்களில் அலுகாச்ரயண முள்ளது போலே, 'உஷஸே தேவதாய' என்பதில் அது சொல்ல முடியாது. அப்படிப்பட்ட ப்ரஸித்தி இல்லாமையால்—என்கிற விவ்வளவே அங்கு தேசிகன் திருவுள்ளம் பற்றியிருப்பது. உத்யாந பத்ரிகா ஸம்பாதக மஹாசயர்களும் இந்த அபிஸந்தியையே ஸப்ரமாணமாகத் த்ருடப்படுத்தியுள்ளார்கள். ஆகவே 'விச்வேதேவார்த்தே' என்றும், 'விச்வேதேவரூபீ' என்றும் புரோஹிதாதிகள் சொல்லி வருவது யுக்தந்தானென்பது தேசிகன் திருவுள்ளம். அது அயுக்தமென்பது தோழப்பருடைய வாதம். மற்ற விஷயங்களின் விவரணம் நமது பாவ ப்ரகாசிகையில் தினவடங்கத் தெளியக் காணத்தக்கது.

காஞ்சி
20-3-34.

ப்ர. அண்ணங்கராசாரியர்.

[இந்த விஷயத்தைப் பற்றிய சர்ச்சை, இனி தீபிகையில் ப்ரசுரம் செய்யப் படமாட்டாது என்பதை நாம் இதனால் நமது ஸுஹ்ருத்துக்களுக்கு விஜ்ஞாபநம் செய்து கொள்ளுகிறோம். ஸ்ரீ. வே. தீபிகை ஸம்பாதகர்.]

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ விபூதி

(1)

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ வரவரமுநயே நம:

திருவல்லிக்கேணி

ஸ்ரீ அஹோபில மடத்தின் காலக்ஷேபங்கள்.

சென்ற மூன்று மாத காலமாகத் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் வேதாந்த க்ரந்த கால க்ஷேபங்கள் ப்ரதி தினம் நடந்து வருகின்றன வென்பது அநேகர்க்குத் தெரிந்திருக்கலாம். ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வானுன பண்டித பூஷணம் ஸ்ரீ. உ. வே. தில்லையம்பூர் சக்ரவர்த்யாசார்ய ஸ்வாமி சென்ற கார்த்திகை மீ ஸ்ரீ கத்தவால் ஸம்ஸ்தானத்தில் ப்ரதி ஸம்வத்ஸரம் நடத்தப்படும் வித்வத் ஸபையில் பரீக்ஷார்த்தமாக வரும் வித்வான்களைப் பரீக்ஷித்து, அவரவர்களுடைய யோக்யதைக்குத் தக்கவாறு ஸம்மாநம் அளிக்கவேண்டிய கார்யத்துக்காக ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ அழகியசிங்கரால் நியமிக்கப்பட்டு கத்தவால் ஸம்ஸ்தானத்துக்கு எழுந்தருளி, அங்கு ஸபை முடிவு பெற்றவுடன் திருவல்லிக்கேணிக்கு இவ்வருஷம் மார்கழி மீ முதல் தேதி எழுந்தருளினார். அந்த ஸமயம் ஷை ஸ்வாமியின் பாண்டித்யத்தின் பெருமையை எற்கனவே அநுபவித்த சில ஆஸ்திகர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, அந்த மார்கழி மாதம் முப்பது நாளும் நாளுக்கு ஒரு பாசுரமாக ஸ்ரீ ஆண்டாள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாவை முப்பது பாசுரங்களையும், உபந்யாஸ ரீதியில், கேட்போர் மனம் பரவசமாம்படி, சாஸ்த்ரீயமாயும் லௌகிகமாயும் பல உதாஹரணங்களுடனும் சாமேதிகளுடனும் மிகவும் விரிவாக உபந்யாஸம் செய்தருளினார். இவ்வுபந்யாஸங்களைக் கேட்டு ஆநந்தித்தவர்கள் அனைவரும், அந்த ஸ்வாமியின் உபந்யாஸத் திறமையையும் சாஸ்த்ர பாண்டியத்தின் விசேஷத்தையும் கண்டு களித்து, அவ்வாறே ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் எல்லாவற்றையும் அந்த ஸ்வாமியின் முகமாகவே அதிகரிக்க எண்ணங்கொண்டு ஷை ஸ்வாமியை ப்ரார்த்திக்க, அந்த ஸ்வாமியும் தம்முடைய ஸ்ரமத்தைப் பாராட்டாமல் "பாஷ்யத்தைப் படித்து ப்ரவர்த்திப்பித்தல் பரமே காந்திக்கு ப்ரதம கைங்கர்யம்" என்னும் ஸ்ரீஸூக்தியின் பொருளைத் திருவுள்ளம் பற்றி அவ்வாறே அங்கீகரித்து, நடந்த தை மீ 12௳ தொடக்கமாக, ராத்ரி வேளையில் 8-மணி முதல் 10-மணிவரையில் ஸர்வவேத ஸாரமும் சரணாகதி ரஹஸ்ய ப்ரதிபாதகமாயும் இருக்கிற இதிஹாஸ ரத்னமான ஸ்ரீமத் ராமாயணத்தை விசேஷார்த்தங்களுடனும் அங்கங்கே பகவத் விஷயத்தில் பூர்வாசார்யர்கள் அநுபவித்திருக்கும் ரீதியில் ஸ்வாரஸ்யமான அர்த்தங்களையும் சேர்த்து மிகவும் ரஞ்சகமாக ஸாதித்து வருகிறார். இதில் ஒரு விசேஷம். ஸ்வாமியின் ஸாமர்த்யத்தைக் கண்டு வித்வான்களாயிருக்குமவர்கள் ஸந்தோஷிக்கிறார்கள் என்பதோடு மாத்ரமல்லாமல், சிறுவர்களும் ஸ்த்ரீகளும் கூட பூர்ணமாக விஷயத்தை க்ரஹித்து ஆநந்திக்கும்படி யிருப்பது குறிப்பிடத்தக்கது. இதில் நன்கு அந்வயித்துக் கவனிக்குமவர்கள், ஒரு விதத்தில் இதைக் கேவலம் உபந்யாஸ கோஷ்டி யென்றும், மற்றொரு விதத்தில் கேவலம் பரமே காந்திகளின் காலக்ஷேப கோஷ்டியென்றும் சொல்லிக் கொள்ளும்படி

இருக்கிறது. இதில் அநேக லௌகிகர்கள் தங்கள் வேலைகளைச் சுருக்கிக் கொண்டு விசேஷ ஊக்கத்துடன் அந்வயித்திருப்பது, ஸ்ரீமத் ராமாயணத்தின் பெருமைக்கும் சக்ரவர்த்யாசார்ய ஸ்வாமியின் பெருமைக்கும் அறிகுறியாகும். அந்த ஸ்வாமிக்கு, வாஸத்துக்கு வேண்டிய ஸௌகர்யங்களை ஷை மடத்திலேயே ஏற்படுத்திக் கொடுத்து மற்றும் ஸகல ஸௌகர்யங்களையும் ராவ்பகதூர் ஸ்ரீமான் பி. வி. ரங்கஸாமி ஐயங்கார் நன்றாய்க் கவனித்து வருகிறார்.

தவிர: பிரதி சனி ஞாயிறு களிலும் (சனிக்கிழமை மாலை 6½ மணி முதல் 8-மணி வரையிலும், ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணி முதல் 10-மணி வரையிலும்), ஸ்ரீ நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திருவாய் மொழியின் வ்யாக்யாநங்களுள் ப்ரதாநமாயும் அதிவிஸ்தீர்ணமாயுமுள்ள ஈடு முப்பத்தாறாயிரப் படியைச் சாஸ்த்ரீயமான காலக்ஷேப முறையில் அந்த ஸ்வாமி ஸாதித்து வருகிறார். சுமார் 30-ஸ்வாமிகளுக் கதிகம் காலக்ஷேப கோஷ்டியில் அந்வயித்திருக்கிறார்கள்.

"அஹோ ஸாம்ராஜ்யஹோ ஸாம்ராஜ்யம் ஸம்ப்ரதாய ஜலதே:"

என்று சொல்லவேண்டிய ரீதியில் இருப்பது தற்காலம் இந்த ஸ்வாமியின் கோஷ்டியில் அந்வயித்தவர்களின் பாக்ய விசேஷம். ப்ரவேசங்கள் மூன்றும் முடிந்து, முதல் பத்து முதல் திருவாய் மொழியில் 7-பாசுரங்கள் வ்யாக்யாநம் முற்றுப் பெற்றது.

இதையும் தவிர, ப்ரதி தினம் காலையில், அநத்யயந காலம் நீங்கலாக, ஒரு மஹானுக்காக ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபம் தொடங்கி மிகவும் வேகமாயும் நிரர்கள மாயும் ஸாதிக்கும் ரீதியில், ஆரம்பித்த ஸ்வல்ப காலத்துக் குள்ளாகவே வெகு தூரம் நடந்து, மஹாஸித்தாந்தத்தில் 'ஸப்த விதாநுபபத்தி நிரூபணம்' நடந்து வருகிறது. இந்தக் கோஷ்டியில் 4, 5, ஸ்வாமிகள் அந்வயித்திருக்கிறார்கள். இதைப் போலவே மற்றொரு மஹானுக்காக ஸமீபத்தில் கீதா பாஷ்யமும் தொடங்கி இப்பொழுது முதல் அத்யாயம் முடியும் தறுவாயிலிருக்கிறது.

இவ்வாறாக ஸாம்ப்ரதாயிகமாகச் சொல்லப்படும் க்ரந்த சதுஷ்டயங்களில், மூன்று க்ரந்தங்கள், அல்லது ஸ்ரீமத்ராமாயணத்தை ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரஸ்தானத்தில் வைத்துக்கொண்டால் க்ரந்த சதுஷ்டயமாயும் ஆகிறபடியால் இந்த நான்கு க்ரந்தங்களையும் ஒரே ஸமயத்தில் காலக்ஷேபம் நடத்துவது மிகவும் ச்ரம ஸாத்யமே. சிஷ்யனுடைய ஆத்ம யாத்ரை ஆசார்யாதீனையென்றும் சாஸ்த்ரங்கள் வகுத்தபடி இந்த ஸ்வாமியின் தேஹயாத்ரா சேஷமான கார்யங்கள் சக்தர்களான மஹான்கள் கவனித்துக் கொள்ள வேண்டியது அவச்யமானதால் அதை அவர்களின் பாரமாக விட்டு விட்டு இந்த நான்கு க்ரந்த காலக்ஷேபமும் ஏகதா நடத்துகிற படியால் இதற்கு யாதொரு அவத்யமும் இல்லாமல் நடக்கும் படிக்கும் அதற்குத் தகுந்தபடி ஸ்வாமியின் திருமேனியில் தார்ட்யம் யாதொரு படியும் குறையாமலிருந்து அவிச்சின்னமாகக் காலக்ஷேபம் சீக்ர காலத்துக் குள்ளாகவே முடிந்தேறும்படிக்கும் பூர்ணமாக அருள் புரியமாறு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ப்ரார்த்தித்துக் கொள்வது ஸர்வாத்மநா அசக்தனான அடியேன் போன்றவனுடைய கார்யமாகுமாதலால், இந்த விஷயத்தில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய அநுக்ரஹம் இருக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

திருவல்லிக்கேணி
ஸ்ரீ முகஹு, பங்குனிமீ, 2௳

தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்
(வேதாந்தி சிரோமணி)

(2)

ஸ்ரீ:

ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதி பயங்கர மடாதிபதி ஸ்ரீ ஜகத் குரு ஸ்வாமிகள்.

அநந்தஸூரேணோ காந்தப்ரியயே ப்ரியயே ஶ்ரிய: ।
ஜாமாதாரம் மாமுநேரேவ ஹயாஸ்யாங்க்ரிவே ஶேஷ ஸம்ஶ்ரயே ॥

"ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் ।
மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா ॥"

என்றும் "பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து" என்றுஞ் சொல்லுகிற படியே இந்நிலவுலகத்தைத் திருத்திப் பணிகொள்ள விரும்பு மெம்பருமான் உசித ஸமய விசேஷங்களிலே ஆசார்ய ரூபமாகத் திருவவதரித்து வருமடைவிலே, எம்பெருமானார் நியமித்தருளின எழுபத்திநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளில் ஒருவரான முடும்பை நம்பியின் திருவம்சத்தில் தோன்றினவரும், மணவாள மாமுனிகள் நியமித்தருளின அஷ்ட திக்கஜங்களில் ஒருவருமான ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவின் ஸந்ததியிலே, கலி ௵ 4975, ஸ்ரீமுக ஸம்வத்ஸரத்தில் மாசி தன்னிற் சோதி யென்னும் நன்னாளில் ஸ்ரீ க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் திருக்குமாரராகத் திருமலைத் திருப்பதியில் மாதுல க்ருஹத்தில் திருவவதரித்து நாடு புகழும் பரிசினால் நன்றாக ஸ்ரீமத நந்தார்ய ஸ்வாமி யென்றும் ஜகத்குரு வென்றும் நாற்றிசையும் நவிலப் பெற்று விளங்கி வருகின்றமை உலகமறிந்தது.

இந்த ஸ்வாமி, தமது மாதுலரும் ஜகத் ப்ரஸித்த வித்வச் சிகாமணியாக விளங்கி நின்றவருமான திருமலை அநந்தான்பிள்ளை புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமியின் திருவடிவாரத்திலே வாழ்ந்திருந்து தர்க்க வ்யாகரணாதி ஸகல ஸாமாந்ய சாஸ்த்ரங்களையும் ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயாதி அத்யாத்ம சாஸ்த்ரங்களையும் அடைவே அதிகரித்து மஹாமேதாவியாய் ஸர்வதோ முக ஜ்ஞாந ஸாம்ராஜ்ய ஸம்பந்நராய் — —

"விம்ஶத்யப்தே விஶ்ருதநாநாவிதவித்ய:"

என்றாப்போலே இருபது திருநக்ஷத்ரத்திலேயே நாநாவிதவித்யைகளிலும் விசாரதராய் வாழ்ந்தருளா நிற்க;

உத்தர பாரதத்தில் தமது முன்னோர்களின் திருவடி ஸம்பந்திகள் பலருண்டாதலால் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி முதல்முதலாக (கி. பி.) 1895 ஆம் ஆண்டில் வடதேச யாத்ரை யெழுந்தருளி பதரிகாச்ரம பர்யந்தமாக மங்களாசாஸநஞ் செய்தருளி அத்யந்தம் அதிசயித சிஷ்ய ஸம்பத்துடனே 1898 ஆம் ஆண்டில் பெரு

மாள்கோயிலுக் கெழுந்தருளி, ஸந்நிதி வீதியில் புராதநமாயிருந்த தமது திருமாளிகையை மஹித மஹாபவந ப்ரக்ரியையிலே உத்தரித்து, குல தநமான ஸ்ரீவேணுகோபாலனை விசேஷ விபவங்கள் பொலிய ஆராதித்துக்கொண்டு, திருவடி பணிந்த ஸ்ரீ வைஷ்ணவர்கட்கு ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரங்களை ப்ரவசநம் செய்துகொண்டு வாழ்ந்தருளா நிற்கையில், அறிவினால் குறைவில்லா அகன்ஞாலமென்ற இவ்வுலகின்கண் லக்ஷணமான சாச்வத வித்யோபகாரங்களைச் செய்தருள விரும்பி, வேதாந்த வைஜயந்தீ என்கிற ஸம்ஸ்க்ருத பாடசாலையை ஸ்தாபித்தருளியும் ஸ்ரீ ஸுதர்சந முத்ராக்ஷர சாலை யென்கிற அச்சுக்கூடத்தை அமைத்தருளியும் தம்முடைய ஜ்ஞாந விஜ்ஞாந ஸம்பத்தியை உலகுக்குப் பெரிதும் பயன்படச் செய்யத்தொடங்கினார்.

அச்சுக்கூடத்தில் ஸ்ரீ ஸ்வாமி இதுவரை வெளியிடுவித்தருளிய ப்ராசீந க்ரந்தங்களும் ஸ்வ ப்ரணீத க்ரந்தங்களும் இவ்வுலக மெங்கும் பரவியிருக்கின்றன. தர்க்க வ்யாகரண தந்த்ர வேதாந்த பாஞ்சராத்ர இதிஹாஸ புராணாதிகளில் ஸ்ரீ ஸ்வாமி பரிஷ்கரித்து ப்ரகாசிப்பித் தருளியிருக்கும் க்ரந்தங்கள் ஒவ்வொன்றும் மிக முக்யமானவை. தர்க்க சாஸ்த்ரத்தில் ப்ராமாண்ய வாதாந்த முள்ள வாத க்ரந்தங்களத்தனையும் தேவநாகர லிபியில் ஸுஸம்ஸ்க்ருதமாக ஸ்ரீ ஸ்வாமியால்தான் முதன் முதலாக முத்ரிதமாயின. பாட்ட ரஹஸ்யம், மீமாம்ஸா கௌஸ்துபம், ஸேச்வர மீமாம்ஸை, மீமாம்ஸா பாதுகை இத்யாதிகளான மீமாம்ஸா சாஸ்த்ர ப்ரபந்தங்களும், ஸ்ரீ ஸ்வாமியால்தான் பரிசோதிக்கப்பெற்று ப்ராகாசிதமாயின. சண்ட மாருத வ்யாக்யாநத்துடன் கூடிய சத தூஷணீ, பாராசர்ய விஜயம், பகவத் கீதைக்கு அபூர்வ வ்யாக்யாநங்கள், மைஸூர் அநந்தாழ்வாருடைய வாதார்த்தக்ருதிகள் முதலான வேதாந்த உத்க்ரந்தங்களும் ஸ்ரீ ஸ்வாமியால்தான் சீர்மைபெற்று ப்ரகடிதமாயின. இங்ஙனே நூற்றுக் கணக்கான அத்யாவச்யக சாஸ்த்ரீய க்ரந்தங்களைப் பரிசோதித்து ப்ரகாசிப்பித் தருளினதுமன்றியில், புருஷ ஸூக்தபாஷ்யம், வால்மீகி பாவ தீபம், ஜக சாஸ்த்ரய மீமாம்ஸை, இத்யாதிகளான பல சிறந்த க்ரந்தங்களையும் ஆவச்யகதைக்கு இணங்கியவாறு தாம் அருளிச் செய்து உபகரித்தருளினார். [அநுபந்தத்தில் இவற்றின் விவரணம் வெளிவரும்.]

இவையுமல்லாமல், மஞ்ஜு பாஷிணீ என்கிற ஸம்ஸ்க்ருத பத்ரிகையை ப்ரசாரிக்கத் தொடங்கி, சில மாதம் மாஸிக பத்ரிகையாகவும் சில வருஷம் பாக்ஷிக பத்ரிகையாகவும் பல வருஷங்கள் ஸாப்தாஹிக பத்ரிகையாகவும் ஆக முப்பத்திரண்டு வருஷ காலம் தத் ஸம்பாதநம் செய்தருளியிருக்கிறார். வநமாலிகா ப்ரஹ்மவித்யா என்கிற இரண்டு தமிழ்ப் பத்ரிகைகளையும் ப்ரசுரித்தருளினார். வைதிக ஸாவஸ்வ மென்கிற ஹிந்தி பாஷா மாஸிக பத்ரிகையை இருபத்தைந்து வருஷகாலமாக நடத்தி வருகிறார். இவ்விதமாகப் பலவழிகளில் ஜ்ஞாந ப்ரதாநமும் தர்ம ப்ரசாரமும் ஸ்ரீ ஸ்வாமி உலகுக்குச் செய்தருளும் முறைமை விலக்ஷணமானது.

ஸம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மார்வாடி, மஹாராஷ்ட்ரம், ஆங்கிலம், முதலிய பலபாஷைகளில் சிறிது மாயாஸமின்றிப் பண்டிதர்க்கும் பாமரர்க்கும் ஒருங்கே பயன்படுமாறு நாலைந்து மணி காலம் நீண்ட அழகிய அரிய பெரிய உபந்யாஸங்களைச் செய்தருளும் வல்லமை ஸ்ரீ ஸ்வாமியிடத்தில் அற்புதமாகக் குடிகொண்டிருப்பதாகும் 'க்ரந்தங்கள் எழுதக் கற்றவர்கட்குப் பேசத் தெரியாது, பேசப் பயின்றவர்கட்கு எழுதத் தெரியாது' என்று பெரும்பான்மையாக வுள்ள அப ப்ரதை ஸ்ரீ ஸ்வாமி விஷயத்தில்,

மிக ஒதுங்கி நிற்பதாம். எந்தப் பாஷையிலும் எந்த விஷயமாகப் பேசப் புகுந்தாலும் "இந்த வொன்று தானோ இவர் பயின்றது!, இதுவேயோ இவர் கற்றது!" என்று நினைக்கும்படியாகவும், "சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச் சொல்லை, வெல்லுஞ் சொல் இன்மை யறிந்து" என்ற குறட்காரர் கட்டளை யிட்டபடியும் பிறர் ஒரு குற்றங் குறை கூறுவதற்கு இறைபு மிடமின்றியே உபந்யஸிக்குந் திறமை வேறெங்கும் கண்டதில்லை யென்று பல பல மேதாவிகளும் மதித்துப் போற்றியுள்ள விஷயத்தை அடியேன் சிறிய ஜ்ஞானத்தன் அறைதற்கு அர்ஹனல்லேன்.

இத்தகைய உபந்யாஸங்களினால் அங்க வங்க களிங்க காம்போஜ காச்மீர காமரூப ஸௌவீர ஸௌராஷ்ட்ராதி ஸகல தேசங்களையும் ஸ்ரீ ஸ்வாமி ஸஞ்சார முகத்தாலே புனிதமாக்கி யருளியிருப்பதால் இப்பெருமைகளைத் தெரிந்து கொள்ளாத நாட்டினர் மிகுதியாக இரார்க ளென்றெண்ணுகின்றேன்.

ஸ்ரீ ஸ்வாமி 1912 ஆம் வருஷத்தில் ஜகத்குரு ப்ரக்யா விக்யாதியுடனே ஸௌவர்ண சிபிகாத கஜ துரக பரிஜந பரிபர்ஹ பரிகர்மிதராய்ப் புறப்பட்டருளி நீண்ட காலம் நிகழ்ந்த ஜைத்ர யாத்ரை செய்தருளுங் காலத்திலே வட இந்தியாவில் பல பல பகுதிகளில் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய விஜய த்வஜம் நாட்டப்பட்டு ஆயிரக்கணக்கான புறமதத்தவர்களும் திருத்திப் பணிகொள்ளப்பட்டு '[illegible] ஜயது" என்ற மங்களாசாஸநம் மிகுதியாக மாட்சிமை பெறுவிக்கப்பட்டது. நாநா மதாந்தரஸ்த பண்டித பரிப்ருடர்கள் ஆயிரக் கணக்காக வசித்திருக்கப் பெற்றதான காசி மாநகரத்தில் ஸ்ரீ ஸ்வாமி யெழுந்தருளி நிர்ப்பயமாகவும் நிஸ்ஸங்கோசமாகவும் ஸித்தாந்த ப்ரசாரம் செய்தருளினபோது அஸஹிஷ்ணுக்களான அங்குள்ள பண்டிதர்களால் வாத ப்ரதிவாதங்கள் கிளப்பப்பட்ட காலத்து, ஸ்ரீ ஸ்வாமி அவர்களுடைய துர்வாதங்கட்கெல்லாம் வாசிகமாகவும் ஸத்ய: ப்ரணீத ப்ரபந்தங்களாலும் ப்ரத்யாக்யாநம் செய்தருளினது மல்லாமல், தென்திசையில் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தைப் பாதுகாக்கவல்ல பண்டிதர்கள் பலருளர் என்பதையும் அங்குள்ளார்க்கு மூதலித்துக் காட்டவேண்டி அநேக திவ்ய தேசங்களிலிருந்து வித்வான்களையும் வரவழைத்தருளி உபந்யஸிப்பித்து ப்ரதிபக்ஷிகளைப் பாற்றியருளின பெருமை 'எம்பெருமானுருடைய அபராவதாரமே யிவர்' என்னுந் தகுதியை நன்கு நிலைநாட்ட வற்றாயிற்று.

ஸ்ரீ ஸ்வாமி அநேக ராஜதானிகளில் ஸ்ரீ வைஷ்ண மஹா ஸம்மேளநங்களை நடத்தியருளி ஸநாதந தர்ம ஸம்ரக்ஷணம் செய்தருளும் பரிசும் பெரியதே. பம்பாய், கல்கத்தா, ப்ரயாகை, புரீஜகந்நாதம், ஷோலாபூர் ஜாவரா, ப்ருந்தாவநம், புஷ்கரம் ஹைதராபாத், பக்ஸர் முதலிய மஹா நகரங்களில் இருபத்தைந்து வருஷகாலமாக அடிக்கடி ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸம்மேளநங்களை நடத்தி லக்ஷக் கணக்கான பணச் செலவுகளைச் செய்வித்து நாநா தேசத்துப் பண்டிதர்களையும் திரட்டி தர்ம ஸம்பந்தமான உபந்யாஸங்களை நடத்தி இவ்வழியாலே ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷ்மீ ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகத்தை நாடு நகரமும் நன்கறிய ஸ்ரீ ஸ்வாமி செய்தருளியிருக்கும் மாண்பு அப்போதைக்கப்போது பல பல வ்ருத்தாந்த பத்ரிகைகள் வாயிலாக அனைவரு மறிந்ததேயாம். இத்தகைய ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸம்மேளநங்கள் இது வரையில் ஸ்ரீ ஸ்வாமியால் பதினேழு நடத்தப்பட்டுள்ளன.

உதயபூர் மஹாராஜா, ஜோத்பூர் மஹாராஜா, க்வாலியர் மஹாராஜா, பாலன்பூர் நவாப், ஹைதராபாத் நவாப், ஜாலராபாடன் மஹாராஜா, புந்தீ மஹாராஜா, சிகர்ராவ் ராஜா, திருவாங்கூர் மஹாராஜா, திரோல் ராஜா, ஜுநாகட் [காதியாவாட்] மஹாராஜா, வளா ராஜா, வடவான் நவாப், போரபந்தர் ராஜா, தாரா மஹாராஜா, ஜாவரா நவாப், ரதலாம் மஹாராஜா—என்றிப் பெயர் கொண்ட பல மஹாராஜர்களால் ஸ்ரீ ஸ்வாமி ஸத்கார பஹுமாநங்கள் பெறுவிக்கப் பெற்று

'[illegible]

[illegible]'

என்றும் படியே வீறு பெற்று விளங்கும் வாய்ப்பும் விச்வப்ரஸித்தம்.

ஸ்ரீ ஸ்வாமியின் ப்ரபிதாமஹராய்ப் பெரிய அநந்தாசாரியர் ஸ்வாமி யென்று புகழ் பெற்ற மஹாநுபாவரே முதன் முதலாக வடநாடுகளில் எழுந்தருளி நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை ஆங்காங்குப் புகவிட்டவர். அக்காலத்தில் அங்கு அங்குரிதமான ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷ்மீ ஸாம்ராஜ்யமானது இவருடைய பிதாமஹரின் காலத்தில் பல்லவிதமாகி, திருத் தகப்பனருடைய காலத்தில் கோரகிதமாகி, இந்த ஸ்வாமியின் முதல் யாத்ரையிலே புஷ்பிதமாகி, அடுத்த மஹா யாத்ரைகளில் பலிதமாகப் பெற்ற பெரு மேன்மைகளை நோக்குங்கால், "கலியுங் கெடுங் கண்டு கொண்மின்" என்ற ஆழ்வாருடைய திருவாக்கின் இலக்கு இவ்வளவும் வர நின்றது என்றே அறுதியிடலாகும்.

உலகில் ஸம்ப்ரதாய ப்ரசாரத்திற்காக முயற்சி செய்பவர்கள் பற்பலர் இருப்பினும் ஒவ்வொருவருடைய முயற்சி ஒவ்வொரு நெறியிலேயே சென்று கொண்டிருக்குமென்பதே நாம் பெரும்பாலுங் காண்பதாகும். ஸர்வதோ முகமான ஸாஹித்ய சாஸ்த்ராதி ஜ்ஞாநங்களையும் பல பாஷைகளிற் பயிற்சியையும் உபதேச ஸாமர்த்யத்தையும் ஒழுங்கே பெற்றிருக்குமவர்கள் மிகச் சிறுகணக்குக் குள்ளாவர். இவை ஒருவாறு வாய்ப்பினும், (1) ஆவச்யகாநேக ப்ராசீந க்ரந்த பரிஷ்கரண ப்ரகாசநம், (2) ஸமயோசித அபூர்வ க்ரந்த ப்ரணயநம், (3) நாநா பாஷைகளில் பத்ரிகா ப்ரகாசநம் (4) ஸமுத்ர ஸலிலத்தைப் பருகின மேகம் போலே நாடெங்கும் ஸஞ்சரித்து அர்த்த விசேஷங்களை வர்ஷித்தல், (5) வாக்யார்த்தங்கள் நடத்தி ப்ரதிபக்ஷிகளை வெல்லுதல், (6) பல விடங்களில் அடிக்கடி மஹாஸபைகள் திரட்டுதல், (7) மஹாராஜர்களுடைய அபிமாநத்திற்கும் இலக்காகி அவர்களையும் சீர் திருத்தல், என்கிற இத்தனை சிறப்புக்களும் ஒரு வ்யக்தியில் அமைவதென்பது ஸ்ரீ ஸ்வாமியிடத்திலன்றி வேறெவ்விடத்தும் எக்காலத்திலும் காணக் கிடைக்கா வென்னுமிடம் ஈஷத்தும் அதிசயோக்தியாகாது.

இத்தனை சிறப்புக்களுக்கும் சிகரமாக ஸ்ரீ ஸ்வாமி வட இந்தியாவிற் பல விடங்களில் திவ்ய தேச ப்ரதிஷ்டைகள் செய்தருளியிருக்குந் திறனும் அதிமாநுஷ சேஷ்டித மென்னவுரியதே. மாளவ தேசம், மார்வாட தேசம் முதலிய விடங்களில் அநேக மந்திரங்களும் ஸந்நிதிகளும் அமைந்தருளினது இருபது முப்பது வருஷங்களுக்கு முன்பாகும். ஸமீப காலத்தில் பம்பாய் மஹாராஜதானியில் பனஸவாடி யென்னும் பகுதியில் அநேக லக்ஷம் ரூபாய்ச் செலவினால் திருவேங்கடமுடையான் ஸந்நிதியை ப்ரதிஷ்டிப்பித்து ப்ரஸித்த திவ்ய தேசங்களிற் போலவே விசேஷ விப

வங்களுடன் பாஞ்சகாலிக ஆராதனங்களும் நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவங்களும் நடை பெறுமாறு சாச்வதிக வ்யவஸ்தைகள் செய்தருளியிருக்குமடைவும் அதி விலக்ஷண ப்ராகார கோபுர மண்டப வாபீ கூப தடாக வாஹந திவ்ய பூஷண பரிச்சதாதிகளை ஒழுங்குப்படுத்தியிருக்குஞ்சீர்மையும் நெஞ்சால் நினைப்பரிது. ஸ்ரீ காஞ்சியிலும் ஏற்கனவே ப்ரதிஷ்டிதமாயிருந்த ஸ்வ குல கூடஸ்த ப்ரதிவாதி பயங்கராசார்ய ஸந்நிதியை ப்ராகார கோபுராதிகளுடன் விசேஷத் திருப்பணிகள் நடத்தி உத்தரிப்பித்தும் திருநாங்கூர்த் திருப்பதிகளில் ஒன்றான வண்புருஷோத்தமத்தில் நின்றும் ஒரு பேர மூர்த்தியை அங்கு எழுந்தருளினப் பண்ணிவைத்தும், நித்யமும் இரண்டு வேளையிலும் தேசாந்திரி ஸ்ரீ வைஷ்ணவர்களை ஆராதிக்க உபபத்திகள் சேமித்தும் நடத்திப் போகுகிற கார்யவிசேஷங்கள் நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சு கனிய நிற்கும்.

ஆக இத்தகைய் வாசாமகோசர வைபவங்கள் விளங்கி நிற்கு மிந்த ஸ்வாமி "வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே" என்கிற ஆழ்வார் பாசரம் அந்வர்த்தமாம்படி இவ்விபூதியிலே அநேக த்ருட காத்ரரா யெழுந்தருளியிருந்து கொண்டு ஸ்ரீ வைஷ்ணவ ஸபை மேன்மேலும் மல்குவிக்குமாறு பகவத் பாகவத நிரவக்ரஹ அநுக்ரஹத்தைப் பெற்று வாழ்ந்தருளும் நாளடைவிலே, ஒரு ஷஷ்ட்யப்த பர்யாயம் பரிபூர்ணமாம்படியான பாக்யம் வாய்ந்ததனால் இந்த மஹாநந்தத்தைக் குழாங்களா யடியீருடன் கூடி நின்றாடி யநுபவிக்க வேணுமென்று குதூஹலங்கொண்ட சிஷ்ய வர்க்கங்கள், மஹா விரக்த சிகாமணியாய் ப்ரபந்ந ஜந சக்ரவர்த்தியாய் விளங்குகின்ற ஸ்ரீ ஸ்வாமியின் தகைமைக்குத் தகுதியாக இந்த மஹோத்ஸவத்தை நடைபெறுத்த வேணுமென்று பாரித்து, பூர்வாசார்யர்களனைவரு மொன்று சேர்ந்து திருவவதரித்தபடியான ஸ்ரீ ஸ்வாமிக்கு அந்த ஆசார்யர்களின் மஹோத்ஸவம் போலவே சிறப்புற நடத்திவைத்தனர்.

நடந்த மாசியீ 14௨ புநர்வஸு நக்ஷத்ரந் தொடங்கிப் பத்து நாள் இரண்டு வேளையும் ஸ்ரீ ஸ்வாமியின் மடத்தில் இந்த ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவம் அற்புதமாக அநுபவிக்கப்பட்டது. நான் திசைகளிலுமுள்ள ப்ரஸித்த ஸ்தலங்களில் நின்றும் வித்வான்களும் உபய வேத வேதாந்த வேதாங்க வேதிகளும் "வந்து மண்ணும் மணமுங்கொண்மின்" என்கிறபடியே முந்துற முன்னமே வந்து குழுமினர். வேத பாராயணங்களும் திவ்ய ப்ரபந்த ஸேவையும் இதிஹாஸ புராண ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷய ரஹஸ்யாதி பாராயணங்களும் தினப்படி காலை ஆறு மணி முதல் பன்னிரண்டு மணி வரையிலும், மாலை ஆறு மணி முதல் பதினொரு மணி வரையிலும், கண்ணெச்சில் படாத படிக்கும் பொலிக பொலிக வென்று போற்ற வேண்டும் படியாகவே அபூர்வ ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தி புடைசூழ நடந்து வந்தன. ஒவ்வொரு வேளையிலும் கோஷ்டி ஸமாப்தி ஸமயத்தில் ஸ்ரீஸ்வாமியின் குல தநமான ஸ்ரீ வேணுகோபாலனுடைய ப்ரஸாத விநியோகங்களும் பூர்வாசார்ய ஸ்தோத்ர ஜாலாநுஸந்தாந விபவங்களும் விஸ்மயநீயங்களா யிருந்தன.

அடுத்த படியாக ஸர்வோபசார ஸம்வலிதமான லோகோத்தர ததீயாராதநம் நடைபெற்று ஸ்வாமிகள் சற்றுப்போது விச்ரமித்தானவுடனே நித்யமும் மூன்று மணி காலம் வித்வான்களின் உபந்யாஸங்களும் நடந்து வந்தன. ஸ்ரீ ஸ்வாமியால் அருளிச் செய்யப்பட்ட அநேக திவ்ய க்ரந்தங்களின் விஷயங்களைப் பற்றியும் ஸ்ரீ ஸ்வாமியின்

பெருமைகளைப் பற்றியும் பல பல மஹான்கள் அழகாக உபந்யஸித்து வந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமியின் ஸ்ரீ ஸூக்தி வர்ஷங்களும் இடையிடையே மிக நிகழ்ந்து அனைவர்க்கும் ஆநந்த மளித்தன. முடிவில் இரண்டு தினங்களில் வித்வான்களின் வாக்யார்த்த ரீதியாகவும் ஸம்ஸ்க்ருதத்திலேயே விஷய சர்ச்சைகள் நடந்தன.

இவ்விதமாகவே நித்ய க்ரமம் நடைபெற்று வந்து ஸ்ரீ ஸ்வாமியின் திருநக்ஷத்ர மஹோத்ஸவ திநத்தில் நடந்த விபவங்கள் இனி எழுதப் படுகின்றன. ஆழ்வார் திருநகரி, ஸ்ரீ வில்லிபுத்தூர், நம்பெருமாள் ஸந்நிதி, திருவேங்கடமுடையான் திருமலை, திருவாலி திருநகரி, திரு நாங்கூர், திருவிந்தளூர், தில்லைத் திருச்சித்ரகூடம், ஸ்ரீ மதுராந்தகம், திருநீர்மலை, ஸ்ரீ பெரும்பூதூர் முதலான திவ்ய தேசங்களிலிருந்தும் கச்சித் திருப்பதிகளிலிருந்தும் மாலை திருப்பரிவட்டம் முதலிய மஹா ப்ரஸாதங்கள் காலை எட்டு மணிக்கு ஸ்ரீ யதோக்தகாரி எம்பெருமான் ஸந்நிதியிலிருந்து வேத பாராயண வாத்ய கோஷாதிகளுடன் மாடவீதி வலமாகப் போந்து ஸ்ரீ ஸ்வாமி மடத்திற்கு வந்துசேர, ஸ்வாமி இவற்றை ஸ்வீகரித்து நிற்கையில், ஸ்ரீ பேரருளாளன் ஸந்நிதி பரிகரங்கள் வந்து தேவபிரான் மங்களாசாஸநத்திற்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போய் ஸகல ஸந்நிதிகளிலும் சிறப்புற மர்யாதைகள் நடத்தி மங்களாசாஸநம் செய்வித்து அனைத்துக் கொத்துடனே மடமேற எழுந்தருள்வித்ததும், பெருமாள் ப்ரஸாத பணியாரவகைகளையும் விசேஷ மர்யாதைகளுடனே அநுப்புவித்து ஸம்பாவித்த பின்பு பன்னிரண்டு மணிக்குத் திருப்பாவை சாற்றுமுறை திருவோலக்கம் நடைபெற்றது. அன்று குழுமியிருந்த ஆயிரம் ஸ்ரீ வைஷ்ணவர்கட்கும் பூரி தாநமும் ததீயாராதநமும் நடந்து நித்ய க்ரமப்படி உபந்யாஸ கோஷ்டியும் நிறைவேறிய பின்பு இரவு பத்து மணிக்குப் பெரிய சாற்றுமுறையும் திவ்ய தேச ஸம்பாவனைகளும் தீர்த்த ப்ரஸாத விநியோக கோஷ்டிகளும் ஸ்தோத்ராநுஸந்தாநமும், ஸ்ரீ ஸ்வாமி விஷயமாகப் பலர் பணித்திருந்த வாழ்த்துக் கவிகளின் அரங்கேற்றமும் நடந்து முடிந்தன. இவை ஸ்ரீ ஸ்வாமியின் திருவவதார நன்னாளாகிய ஸ்வாதீ நக்ஷத்ரத்தின்று நடந்தவை.

மறுநாள் பகலில் இயற்பா ஆயிரமும் ஸேவித்து இரவு சாற்றுமுறையாகி, வித்வான்கள் அத்யாபகர்கள் முதலான அனைவர்க்கும் ஸத்காரம் உபக்ரமிக்கப்பட்டது.

ஸ்ரீ ஸ்வாமிக்கு மற்ற எல்லாக் குணங்களும் புஷ்கலமாயிருப்பது போலவே, வள்ளல் தனமென்கிற ஔதார்யமும் ஒப்புயர்வற்று விளங்குவதென்பது உலக ப்ரஸித்தம்.

"ரக்ஷிதா ஜீவலோகஸ்ய ஸ்வஜநஸ்ய ச ரக்ஷிதா"

என்றாப்போலே நித்யப்படியாகவே ஸாமாந்ய விசேஷ ஔதார்யங்கள் வீறு பெற்றிருக்கப் பெற்ற இந்த ஸ்வாமிக்கு நைமித்திக ப்ரகரண விசேஷங்களில் தம்மையும் அறியாமலே தளிர்க்கின்ற ஔதார்யோத்ஸாஹம் அநந்யஸாலங்காரைகலக்ஷ்யபூத மென்று அநுபவ ரஸிகர்களான மஹான்கள் சொல்லுகிற வழக்கம். அந்த ரீதியிலே ப்ரக்ருத மஹோத்ஸவத்தில் ஆஹூத அநாஹூத விபாகம் பாராமல், உபஸ்திதர்களாயிருந்த ஸகலர்க்கும் யதாதிகாரம் சால்வைகளும் சிறந்த ஆடைகளும் த்ரவ்யங்களுமாகப் பரிசளித்த பெற்றி ஸார்வபௌம ஸந்நிதாநங்களிலே காணக் கூடியதத்தனையன்றி வேறெங்கும் காண முடியாதென்று பலரும் பகர நிகழ்ந்தது.

ஸ்ரீ ஸ்வாமியின் ப்ரபிதாமஹருடைய திருவடியிலே முதன்முதலாக ஸமாச்ரயித்து உஜ்ஜீவிக்கப்பெற்ற ‘ஹைதராபாத் பூர்ணமல் ஸேட்’ என்கிற மகாதநிக வைச்யருடைய ப்ரபௌத்ரரான ‘ராஜா லக்ஷ்மீ நிவாஸராமலால் ஸேட்’ என்கிற பக்த சிரோமணியானவர் முன்னின்றும் இந்த மஹோத்ஸவத்தை இத்தனை சிறப்புடனே நடப்பித்தனர். அவரைப் போன்ற மற்றும் பல சிஷ்ய வர்க்கங்களும் சென்னை முதலிய நகரங்களிலுள்ள அநேக பக்தவர்க்கங்களும் வந்திருந்து ஸேவித்து வாழ்த்தி வாழ்ந்தனர்.

ஸ்ரீ ஸ்வாமியின் ப்ரபாவமும் ப்ரக்ருத மஹோத்ஸவத்தின் மாட்சியும் பன்னியுரைக்குங்கால் பாரதமாம். இது தனியே பெரிய புஸ்தக ரூபமாக வெளிவரப் போகின்றமையால் இப்போது சுருக்கமாகவே விஜ்ஞாபிக்கலாயின.

நம்முடைய ஸ்ரீ வைஷ்ணவ தர்சநம் எத்திசையும் தழைத்தோங்கவே அவதரித்துத் தமது வாழ்நாள் முழுவதையும் அஃதொன்றுக்கே ஆற்றி வருகின்ற இந்த ஸ்வாமிக்கு ஸ்ரீ வைஷ்ணவ வுலகம் முழுவதும் பல்லாண்டு பாடக் கடமைப்பட்டதென்பதை அடியேன் விஜ்ஞாபிப்பது மிகையே.

இங்ஙனம்

ஸ்ரீ ஸ்வாமியின் திருவடித்தூகள் ஸ்ரீ வைஷ்ணவ தாஸன்

ஸ்ரீ காஞ்சீ 20—3—34 } அண்ணங்கராசார்யன்.

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: |

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா |
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ||

ஸம்பாதகரின் குறிப்புகள்

‘பகவத் கீதா தாத்பர்யம்’ என்னும் பெயருடன் ஒரு க்ரந்தம் இங்கிலீஷ் பாஷையில் எழுதப்பெற்று இப்பொழுது வெளி வந்திருக்கின்றது. இதில் வேதாந்த ஸம்பந்தமான விஷயங்களெல்லாம் விஸ்தாரமாக விசாரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவனும் தன் தன் தர்மத்தை அநுஷ்டித்தல் வேண்டும் என்பது தான் கீதையின் பரம தாத்பர்யமாம். ஆனால், ‘தன் தன் தர்மம்’ என்பதால் அவரவர்களுடைய ஜாதி தர்மமாவது ஆச்ரம தர்மமாவது குறிக்கப்படவில்லையென்றும், ஸ்வபாவத்தால் ஒவ்

(எ. எஸ். வாடி யாவின் கீதா தாத்பர்யம்.)

வொருவனுக்கும் ஏற்பட்டிருக்கும் ஜ்ஞாந சக்தி முதலியவைகளைக்கொண்டு அவனவன் எந்த வ்யாபாரங்களைச் செய்வதற்குச் சக்தனாக இருக்கின்றானோ அந்தந்த வ்யாபாரங்களெல்லாம் அவனவனுக்கு ஸ்வதர்மங்களாகின்றனவென்றும், இவ்விதமே கீதையில் ஸ்வதர்மம் விளக்கப்பட்டிருக்கிறபடியால் இதற்கு விருத்தமாக ‘ஸ்வதர்மமானது அவனவன் வர்ணாச்ரமதர்மத்தைக் குறிக்கின்றது’ என்று சொல்லுகிறவர்கள் கீதையின் ஹ்ருதயத்தை அறியாதவர்களென்றும் இந்த க்ரந்தத்தை எழுதினவர் வாதிக்கிறார். அதாவது— பகவத் கீதை, ஜாதி ஸாங்கர்யத்தையே உபதேசிக்கின்றது என்று சொன்னதாயிற்று. இந்த அர்த்தத்தைக் கீதையில் எவ்விடத்தில் இவர் காண்கின்றாரோ?

மூன்றாவது அத்யாயத்தில், ஜ்ஞாந யோக அநுஷ்டாநத்தைக் காட்டிலும் கர்மயோக அநுஷ்டாநமே, ப்ரக்ருதி ஸம்ஸ்ருஷ்டராயிருக்கும் நமக்கு ஸுகரம் என்பதைச் சொல்லி வருமிடத்தில், ‘ஒருவன் ஜ்ஞாந யோகத்திற்கு யோக்யனாக இருந்தாலும் அதில் ப்ரமாதங்கள் நேரக்கூடுமாகையால், ப்ரக்ருதி ஸம்ஸர்க்கம் பெற்றிருக்கும் அதிகாரிகளெல்லாரும் கர்ம யோகத்தையே அநுஷ்டித்தல் வேண்டும்’ என்று உபபாதிக்கப் பட்டிருக்கின்றது. அந்த ஸந்தர்ப்பத்தில் ‘ஒவ்வொருவனும் தன் தனக்குச் சக்யமாக இருக்கும் தர்மத்தில் ப்ரவ்ருத்திப்பதே நன்மையை விளைவிக்கும்; தனக்கு அசக்யமாக இருக்கும் தர்மத்தில் ஒருவன் ப்ரவ்ருத்தித்தால் அவன் தீமையை அடைவான்’ என்னும் ஸாமாந்ய ந்யாயமும்

“ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் |
ஸ்வதர்மே நிதநம் ஶ்ரேய: பரதர்மோ பயாவஹ:”

என்னும் ச்லோகத்தால் விளக்கப்பட்டிருக்கின்றது: இவ்விடத்தில் ‘கர்ம யோகம் ஸுஶகம், ஜ்ஞாந யோகம் துஶ்ஶகம்’ என்பது விஷயமானதால், ‘ஸ்வதர்மம்’ என்னும் சப்தம் ‘ஸ்வ சக்ய தர்மம்’ [அதாவது தன்னால் ஸாதிக்கப்படக்கூடும் தர்மம்] என்னும் அர்த்தத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது என்பது உண்மையே. இந்த ‘ஸ்வதர்மம்’ என்னும் சப்தத்திற்கு ‘அவனவன் வர்ணத்திற்கும் ஆச்ரமத்திற்கும் உரிய தர்மம்’ என்று பொருள் கொள்வது ப்ரகரணத்திற்கு ஸங்கதமாகமாட்டாது. இவ்விடத்தில் வர்ணாச்ரம தர்ம ப்ரஸக்தியே இல்லை. இப்படி இவ்விடத்தில் செய்யப்பட்டுள்ள ப்ரயோகத்தை ஆதாரமாகக் கொண்டு, ‘கீதையில் உபதேசிக்கப்படும் ஸ்வதர்மாநுஷ்டாநமெல்லாம் இம்மாதிரியான ஸ்வதர்மத்தைப் பற்றியே பேசுகின்றது’ என்றானது, ‘கீதையில் வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநம் வற்புறுத்தப்படவில்லை’ என்றாவது நிர்ணயிப்பது சரியான நிர்ணயமாகுமோ?

"𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌮𑌪𑌿 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌕𑌮𑍍𑌪𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿" [2-31

[ஹே அர்ஜுந ! க்ஷத்ரியனாக இருக்கும் உனக்கு யுத்தம் செய்வதே ஸ்வதர்மம் என்பதை உணர்ந்தும், நீ இம்மாதிரி சலிப்பதற்கு யோக்யமாகிறதில்லை]

"𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌶𑌾𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌪𑌰𑌂𑌤𑌪 ।
𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌿" [18-41.

"𑌸𑍍𑌵𑍇 𑌸𑍍𑌵𑍇 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌭𑌿𑌰𑌤𑌃 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌨𑌰𑌃" [18-45

"𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌤𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃" [18-46

[ப்ராஹ்மணர்கள் க்ஷத்ரியர்கள் வைச்யர்கள் சூத்ரர்கள் இவர்களெல்லாருக்கும் தொழில்கள் வெவ்வேறாக விபாகம் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவனும் தன் தன் தொழிலில் ப்ரவ்ருத்தித்து அதை ஊக்கத்துடன் சரிவர செய்து அதனால் ஸித்தியைப் பெறுகிறான். ஒவ்வொருவனும் தன்தன் கர்மங்களை பகவதாராதந ரூபமாகச் செய்து அதனால் ஸித்தி அடைகின்றான்.]

இத்யாதியான இடங்களில் 'ஸ்வகர்மம்' 'ஸ்வதர்மம்' என்னும் பதங்களால் குறிக்கப் படுமவைகள் வர்ணாச்ரம தர்மங்களல்லவென்று சொல்வது ஸாத்யமாகுமோ? நிற்க,

"𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁 𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌸𑍁 𑌵𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍇𑌯 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌃 ।
𑌸𑌂𑌕𑌰𑍋 𑌨𑌰𑌕𑌾𑌯𑍈𑌵" [1-42

[ஒரு குலத்தில் ஸத்ரீகள் தோஷ துஷ்டர்களாக ஆனால், அப்பொழுது ஜாதி ஸாங்கர்யம் ஏற்படுகின்றது. அது ஏற்பட்டால் ஜனங்களெல்லாரும் நாசமடைகின்றார்கள்]

"𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑌿 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇" [2-31

[க்ஷத்ரியர்களுக்கு, தர்மத்திற்குக் கட்டுப்பட்ட யுத்தம் செய்வதே ச்ரேயஸ்கரமான தர்மம்]

"𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌤𑍇 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍌" [16-24

[இது தர்மம் இது அதர்மம், இது செய்யத் தகுந்தது இது செய்யத் தகாதது என்று நிர்ணயம் செய்வதில் ச்ருதி ஸ்ம்ருதி முதலிய சாஸ்த்ரங்களே ப்ரமாணம்]

இத்யாதியான வாக்யங்கள் வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநத்தை வற்புறுத்தவில்லையென்று சொல்வது தான் ஸாத்யமாகுமோ? ஒருகால் இம்மாதிரியான

வாக்யங்களை அப்ரமாணங்களென்று அவர் விலக்கிவிட்டாரோ வென்று நினைத்தால், அப்படி ஒரு க்ரந்தத்தில் ஒரு பாகத்தை ப்ரமாணமென்றும் மற்றொரு பாகத்தை அப்ரமாணமென்றும் தமது இஷ்டப்படி பண்டிதர்களும் பேசுவார்களோ?

"𑌰𑌕𑍍𑌷𑍋𑌗𑍃𑌹𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌰𑍍𑌮𑍂𑌲𑌮𑌗𑍍𑌨𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑍌 𑌤𑍁 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃"

[ராக்ஷஸனுடைய க்ருஹத்தில் வஸித்ததற்கு மாத்ரம் ராமாயணம் ப்ரமாணம்; அக்நி ப்ரவேசத்தால் வெளிப்படுத்தப்பட்ட சுத்தி விஷயத்திலோ வென்றால், அது அப்ரமாணம்] என்று, அம்மாதிரிப் பேசுவதைத் பெரியோர்கள் பரிஹஸித்திருக்கிறார்களே.

இது நிற்க: அவர் மற்றுமொரு விசேஷம் கீதையில் தாம் கண்டு பிடித்திருப்பதாக எழுதியிருக்கிறார். 'ஹிம்ஸை செய்து துஷ்டர்களை நிக்ரஹிப்பது தர்மமா? அதர்மமா?' என்பதே கீதையில் முக்யமாக முதல் முதல் விசாரிக்கப்படுகின்றதாம். அதை அதர்ம மென்று க்ரஹித்து அதிலிருந்து அஞ்சும் அர்ஜுநனுக்கு, க்ருஷ்ணன் 'அது தர்மமே; துஷ்டர்களை நிக்ரஹிக்கும் விஷயத்தில் ப்ராணி ஹிம்ஸை ஸம்பவித்த போதிலும் அது எல்லாராலும் அவச்யம் செய்யப்படவேண்டிய வ்யாபாரமே' என்று உபதேசிக்கிறாராம். இது தான் க்ருஷ்ணனுடைய மதமாம். ஒரு பொழுதும் ஹிம்ஸையே கூடாது என்பது ஏசு கிருஸ்துவின் மதமாம். இக்காலத்தில் ஹிந்துக்கள் ஹிம்ஸையை விலக்குவதும், கிருஸ்துவர்கள் துஷ்ட நிக்ரஹ விஷயத்தில் ஹிம்ஸையைக் கவனிக்கக்கூடாது என்று சொல்வதும் அவரவர்களுடைய மத ஸ்தாபகர்களின் கோட்பாட்டுக்கு நேர் விருத்தங்களாக இருக்கின்றனவாம். இவ்விதம் இந்த இரு ஜாதியர்களுடைய அநுஷ்டானங்கள் மாறி நிற்பதற்குக் காரணம் ஏது வென்று சொல்லக்கூட வில்லையாம். இவ்விதம் அவர் வாதிக்கிறார். இது வஸ்து ஸ்திதிக்கு அத்யந்தம் விருத்தம். அர்ஜுநனுக்கும் க்ருஷ்ணனுக்கும் நேர்ந்த மதிபேதம், 'ஹிம்ஸை செய்து துஷ்டர்களை நிக்ரஹிக்கலாமா? கூடாதா?' என்பதைப் பற்றியதன்று. க்ஷத்ரியர்களுக்குத் தர்மமாகிற யுத்தத்தை, அதில் பந்துக்களின் வதம் நேர்கின்றது என்னும் காரணத்தால், அதர்மமென்று, பந்து ஸ்நேஹமுள்ள அர்ஜுநன் ப்ரமித்தான்; 'அது அதர்மமன்று; ஸ்வதர்மாநுஷ்டானம் எப்பொழுதும் தர்மமே' என்று க்ருஷ்ணன் அவனுக்கு உபதேசித்தான். ஆகையால், ஒருவன் தனது தர்மத்தை அநுஷ்டிக்கும் காலத்தில் ப்ராணி மாரணம் செய்ய நேர்ந்தால், 'அந்த ப்ராணிமாரணம் ஹிம்ஸையாகுமோ? அது ஹிம்ஸையானால், அவன் தனது தர்மத்தை அநுஷ்டியாமல் நின்று விடலாமோ?' என்னும் விஷயத்தைப் பற்றியதே க்ருஷ்ணார்ஜுநர்களுடைய

மதி பேதம். 'ப்ராணி மாரணமெல்லாம் ஹிம்ஸை; ஆகையால் அது செய்ய நேர்ந்தால், ஸ்வதர்மாநுஷ்டாநத்திலிருந்து விலகுவது சரி' என்பது அர்ஜுநனுடைய ப்ரமம். 'ஒவ்வொருவனும் தன் தன் தர்மாநுஷ்டாநத்தை அவச்யம் அநுஷ்டித்தல் வேண்டும்; அப்படி அநுஷ்டிக்கும்பொழுது ப்ராணி மாரணம் செய்ய நேர்ந்தால், அது ஹிம்ஸையாகமாட்டாதாகையால், அதிலிருந்து கொஞ்சமேனும் அஞ்சுதல் கூடாது' என்பது க்ருஷ்ணன் செய்த உபதேசம். இது கீதையைச் சரிவரப் படித்தவர்களுக்கு நன்கு விளங்கும். கேவலம் ப்ராணி மாரணம், நமது சாஸ்த்ரப்படிக்கு, ஹிம்ஸையாகமாட்டாது. க்ஷத்ரியர்கள் விஷயத்தில் யுத்தத்திலும் த்ரைவர்ணிகர் விஷயத்தில் யாகம்செய்யும் பொழுதும் இன்னும் இம்மாதிரி வேறு தர்மங்களை அநுஷ்டிக்கும்பொழுதும், அந்தத் தர்மாநுஷ்டாநத்தின் அம்சமாக ப்ராணி மாரணம் செய்ய நேர்ந்தால், அப்படி ப்ராண வியோகம் செய்யப்படும் ப்ராணிக்கு அதனால் ச்ரேயஸ்ஸே விளைகின்றதென்று சாஸ்த்ரங்கள் சொல்லுகிறபடியால், அந்த ப்ராணி மாரணம் ஹிம்ஸையாகமாட்டாது என்பதே நமது ஸித்தாந்தம்.

“அநய-வய-வஹித ஸாநுபந்தி கொ ஷுஃவஜநகொ வ்யாவாரொ ஹிம்ஸா”

[முடிவில் தீமையை விளைவிப்பதாகவும் அக்காலத்தில் துக்கத்தைக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும் வ்யாபாரமே ஹிம்ஸை] என்பது பெரியோர்களால் சொல்லப்பட்டுள்ள ஹிம்ஸா லக்ஷணம். வஸ்து ஸ்திதி இப்படி இருக்க, வாடியா சொல்வது எவ்விதத்தில் உபபந்நமாகும்? ஏசு கிருஸ்துவின் மதம் இது விஷயமாக என்ன சொல்லுகின்றதென்பது நமக்குத் தெரியாது. ஸ்வ தர்மாநுஷ்டாநத்தையே கீதையில் க்ருஷ்ணன் வற்புறுத்தியிருக்கிறானென்பதையும் அதைக் கைதவற விட்டு வேறு கொள்கைகளொன்றையும் நாம் கைக்கொள்ள வில்லையென்பதையும் நாம் நன்றாக அறிவோம். ஆகையால், வாடியா, கொள்கைகள் மாறி இருக்கின்றனவென்று ப்ரமித்து அதற்குக் காரணத்தைத் தேடுவதற்கு ஒருவித முயற்சியும் செய்ய வேண்டுவதில்லை.

இந்த வாடியாவை, அவருடைய க்ரந்தங்களிலிருந்து நாம் அறிவோம். அவர் ஹிந்து மதத்வேஷி; பல தடவைகளில் நமது மதக் கொள்கைகளெல்லாவற்றையும் அவர் பலவாறாக தூஷித்திருக்கிறார். இப்பொழுது அவர் கீதையைப் பற்றி புகழ்ந்து பேசினால் அது ஒரு விதத்திலும் அபிநந்திக்கத்தக்கதாக மாட்டாது. இந்த க்ரந்தத்திலேயே கடைசி அத்யாயத்தில், ஹிந்து மதத்தைத் தழுவி நிற்கும் ஜநங்களை விபாகம் செய்து வருமிடத்தில், அவர், நமது வைதிகர்களைப் பிச்சைக்காரர்கள். [professional mendicants] என்றும் ஸாமாந்ய ஜநங்களை ஏமாற்றி அதனால் அயோக்ய ஜீவநம் செய்து வருகிறார்கள் [they exploit the susceptibilities and superstitious fears of the illiterate people] என்றும் நிந்தித்திருக்கிறார். நமது வைதிகர்களுக்குள், அர்த்த காமங்களிலிருந்து விரக்தர்களாகவும் ருஜுவான ஸ்வபாவத்தை உடையவர்களாகவும் பூததயை நிறைந்துள்ளவர்களாகவுமிருக்கும் ஸாதுக்கள் ஒருவர் கூட இல்லை என்பதே அவர் நினைவு போலும். இவ்வளவு துராக்ரஹமுள்ளவர்கள் க்ரந்தங்கள் எழுதுவதற்கே அத்யந்தம் அநர்ஹர்கள்; அவர்கள் க்ரந்தங்களை எழுதினால் அது மஹாஜநங்களுக்குத் தீமையையே விளைவிக்குமாதலால், அவர் இம்மாதிரி க்ரந்தங்கள் எழுதத்துணிந்துவிட்டாரே என்று நாம் மிகவும் சோகிக்கிறோம்.

* * * * *

ஸ்ரீ வேதாந்த தீபிகை இரண்டு மாதங்களுக்கு முன், வைதிகமத தீபிகையை வேதாந்த தீபிகையுடன் ஒன்று சேர்க்க ப்ரயத்நப்பட்டுக் கொண்டிருந்த பொழுது சில ஸங்கடங்கள் ஏற்பட்டன; அது காரணமாக தீபிகையை ப்ரசுரம் செய்வதில் அப்பொழுது கொஞ்சம் விளம்பமும் ஸம்பவித்தது. அந்த விளம்பத்தால், இன்னமும், ஒரு மாஸத்திய ஸஞ்சிகை அந்த மாஸத்திலேயே வெளிவராமல் அதற்கு அடுத்த மாஸத்திலேயே வெளிவந்து கொண்டிருக்கின்றது. அந்த வ்யதிக்ரமத்தைச் சரிப்படுத்தும் பொருட்டு இந்த மாஸத்தில் ஒன்பதாவது பத்தாவது ஸஞ்சிகைகள் இரண்டையும் ஒன்றாக ப்ரசுரம் செய்திருக்கிறோம். இனி ஒவ்வொரு ஸஞ்சிகையும் அதன் காலத்திலேயே வெளிவருமென்று நமது ஸுஹ்ருத்துக்களுக்கு நாம் இதன் மூலமாக விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறோம்.

* * * * *

ஸ்ரீ. உப. வலயபேட்டை ஸ்வாமி கும்பகோணத்திற்கு ஸமீபத்திலிருக்கும் வலயபேட்டை என்னும் ஸ்ரீக்ராமத்தில் அநேகவர்ஷ காலமாக எழுந்தருளியிருந்த நாவல்பாக்கம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸதாதாசார்யர் என்னும் மஹாந் சென்ற மாஸத்தில் பரமபதத்திற்கு எழுந்தருளி விட்டாரென்று நாம் கேள்விப்படுகிறோம். இது மிகவும் சோசநீயமான வ்ருத்தாந்தமே. இவர் ப்ரஹ்மவித்துக்களுள் அக்ரேஸராகவும் ஸாத்விகோத்தமராகவும் எப்பொழுதும் ஜகத்தின் ஹிதத்தையே ப்ரார்த்தித்துக் கொண்டிருப்பவராகவும் எழுந்தருளியிருந்தார். அப்படிபட்டவருடைய ஆத்யந்திக வியோகம் இந்த ஜகத்திற்கு நேர்ந்தது, இந்த ஜகத்திலுள்ள தீநர்களான நம்முடைய தௌர்பாக்யமே.

* * *

சுத்த கணித வாக்ய பஞ்சாங்கம்.

'திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி தேவஸ்தாந சுத்த கணித வாக்ய பஞ்சாங்கம்' என்னும் பெயருடன் ஒரு பஞ்சாங்கம் நாம் வரப்பெற்ருேம். அது, ஸ்ரீ அஹோபில மடம் 41-வது பட்டத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய நியமநத்தின் பேரில், கணித சாஸ்த்ரத்திலும் ஜ்யோதிஷத்திலும் ப்ரவீணராயிருக்கும் ஸ்ரீ. உப. கே. எம். ரங்காசார்ய ஸ்வாமியால் கணிக்கப்பட்டுள்ளதென்று தெரிய வருகின்றது. புராதந க்ரந்தங்களான ஆர்ய பட்டீயம், ஸூர்ய ஸித்தாந்தம் இவை முதலியவைகளிற் சொல்லப்பட்டுள்ள கணந ப்ரகாரத்தை அநுஸரித்து ப்ரதிதிந ஸூர்யோதயத்திற்குத் தக்கபடி திதி முதலியவைகளின் கால நிர்ணயங்களை யெல்லாம் ப்ராசிந ஆசாரத்திற்கு விரோதமில்லாமல் தாம் கணித்திருப்பதாக அந்த ரங்காசார்ய ஸ்வாமி அவருடைய முகவுரையில் எழுதியிருக்கிருர். ஸ்ரீ அழகிய சிங்கருடைய நியமந ரூபமான அநுக்ரஹத்தை இந்தப் பஞ்சாங்கம் பெற்றிருப்பதையும் ஸ்ரீ. உப. ரங்காசார்ய ஸ்வாமியின் உறுதி மொழியையும் ஆதாரமாக அவலம்பித்து, நாம், இதைப் பற்றி நமது ஸுஹ்ருத்துக்களிடம் ப்ரஸ்தாவிக்கத் துணிகின்ருேம். வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநத்தை ப்ரதாந கர்மமாக அவலம்பித்திருக்கும் நமக்கு திதி வார நக்ஷத்ரங்களுடைய கால நிர்ணய ஜ்ஞாநம் அவச்யம் அபேக்ஷிதமாகையால் ப்ராமாணிகமான ஒரு பஞ்சாங்கம் வெளிவருவது வைதிகர்களெல்லோருக்கும் ஸந்தோஷ ஹேது, "கே. எம். ரங்காசார்யர், வக்கீல், திருவள்ளூர்" என்னும் விலாஸத்திற்கு எழுதி இதைப்பெற்றுக் கொள்ளலாம்.

ஹே ஶ்ரீதேவி! ஸமஸ்தலோகஜநநீம் த்வாம் ஸ்தோதுமீஹாமஹே
யுக்தாம் பாவய பாரதீம் ப்ரகுணய ப்ரேமப்ரதாநாம் தியம் ।
பக்திம் பத்ரய நந்தயாஶ்ரிததமம் தாஸம் ஜநம் தாவகம்
லக்ஷ்யம் லக்ஷ்மி! கடாக்ஷவீசிவிஸ்ருதேஸ்தே ஸ்யாம சாமீ வயம் ॥ (௨)

---

2 இவ்விதம் ஆசீர்வசந ரூபமான மங்களத்தை ப்ரார்த்தித்துவிட்டு, பிறகு ப்ரக்ருத ஸ்தோத்ரத்தைச் செய்யப்போகிறவராய். அந்த ஸ்தோத்ரத்தைச் சரிவரச் செய்வதற்கு அபேக்ஷிதங்களான வாக் ஸம்ருத்தி முதலியவைகளை ப்ரார்த்திக்கிருர்.

[பதவுரை] ஹே ஶ்ரீதேவி லக்ஷ்மி - ஸ்ரீயாகவும் தேவியாகவு மிருக்கும் ஹே லக்ஷ்மி, ஸமஸ்தலோகஜநநீம் - ஸகல ப்ரஜைகளுக்கும் மாதாவாக இருக்கும், த்வாம் - உன்னை, ஸ்தோதும் - ஸ்தோத்ரம் செய்வதற்கு, ஈஹாமஹே - ப்ரயத்நப்படுகிறேன். யுக்தாம் - (அப்படி ஸ்தோத்ரம் செய்வதற்கு) அநுரூபமான, பாரதீம் - வார்த்தையை (அதாவது - வாக் ஸம்ருத்தியை), பாவய - அநுக்ரஹிக்கவேண்டும்; ப்ரேமப்ரதாநாம் தியம் - ப்ரீதியையே முக்யமாக உடைய புத்தி விசேஷத்தை (அதாவது - வாக் ஸம்ருத்தியை அநுக்ரஹிப்பதற்கு ஹேதுவாக இருக்கும் ப்ரீதி விசேஷத்தை), ப்ரகுணய - வ்ருத்திசெய்ய வேண்டும்; பக்திம் - (உன்னால் வ்ருத்தி செய்யப்படும்) பக்தியை, பத்ரய - சுபமான பக்தியாக இருக்கும்படி அநுக்ரஹிக்கவேண்டும்; ஆஶ்ரிததமம் - உன்னை ஆச்ரயித்து நிற்கும், தாவகம் தாஸம் - உன்னுடைய தாஸனாகிற, இமம் ஜநம் - என்னை, நந்தய - ஆநந்திப்பிக்க வேண்டும் (அதாவது - உன்னுடைய கைங்கர்யத்தில் ஊக்கமுள்ளவனாகச் செய்து அதனால் பெரிய ஆநந்தத்தை அநுபவிக்கும்படி செய்யவேண்டும்). அமீ வயம் ச - இந்த நாங்களும், தே கடாக்ஷவீசிவிஸ்ருதே: - உன்னுடைய கடாக்ஷ அலைகளின் வீசலுக்கு, லக்ஷ்யம் - இலக்காக, ஸ்யாம - ஆகக்கடவோம்.

முதலில் ஸ்தோத்ரமாகிற கைங்கர்யத்தை த்ருப்திகரமாகச் செய்யும் பொருட்டு அதற்கு அநுகூலமான வாக்ஸம்ருத்தியை ப்ரார்த்தித்தார். பிறகு அந்த ஸம்ருத்திக்கு ஹேதுவாகிற ப்ரீதிவிசேஷம் தம்முடைய ஹ்ருதயத்தில் பூர்ணமாக இராவிட்டால் அந்த ஸம்ருத்தியைத் தாம் எப்படி ப்ரார்த்திக்கக்கூடும் என்று சங்கித்துக்கொண்டு. அந்த ப்ரீதி விசேஷத்தின் பூர்த்தியைத் தம்முடைய ஹ்ருதயத்தில் ஜநிப்பிக்கும்படி ப்ரார்த்திக்கிருர். அப்படி ஜநிப்பிக்கப்பட்ட பக்தியைக்கொண்டு தாம் ஒருகால் அல்ப அஸ்திர பலங்களை ப்ரார்த்திக்கும்படி நேர்ந்துவிடுமோ வென்று பயந்து. அந்தப் பக்தியைச் சுபமான பக்தியாகச் செய்யவேண்டு மென்று ப்ரார்த்திக்கிருர். அப்படிச் சுபமான பக்தி வந்தும் அது கைங்கர்யத்தில் பர்யவஸியாவிட்டால் அது ஒரு குறைவாகிவிடுமே என்று எண்ணி. அதைக் கைங்கர்யத்தில் பர்யவஸிக்கும்

படி செய்து, அந்தக் கைங்கர்யத்தில் போக்யத்வ புத்தியையும் ஜநிப்பிக்கவேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறார். இவ்விதமெல்லாம் தாம் அநுக்ரஹம் பெற்றால் தாமும் நித்ய ஸூரிகள்போல க்ருதார்த்தர்களாகலாம் என்பது குறிப்பு.

தேவி - ஹே தேவதேவனாகிற நாராயணனுடைய திவ்ய மஹிஷி! இது "தேவதேவதிவ்யமஹிஷீம்" என்னும் ஸ்ரீ பாஷ்யகாரருடைய திவ்ய ஸூக்தியை ஜ்ஞாபிக்கின்றது. ஸ்த்ரீகளுக்குப் பர்த்தாவன்றோ ப்ரதாநம். அப்படிப்பட்ட பர்த்தாவினால் ஏற்படும் ஏற்றத்தைக் குறிப்பது இந்தப் பதத்தின் கருத்து.

ஶ்ரீ: - ஹே ஸ்ரீ! இது குணங்களாலும் சேஷ்டிதங்களாலும் ஏற்படும் பெருமையைக் குறிக்கும் பெயரால் வரும் ஏற்றத்தைக் குறிக்கின்றது. இந்தப் பதத்திற்கு ஆறுபடியாகப் பகவத் சாஸ்த்ரங்களில் நிர்வசநம் செய்யப்பட்டிருக்கின்றது. (1) ஶ்ரீயதே (ஆச்ரயிக்கப்படுகிறாள்) இதி 'ஶ்ரீ:, பகவானுடைய கட்டளைகளைக் கடந்து அதனால் குற்றவாளிகளாயிருக்கும் சேதநர்கள் பகவானை அணுகப் பயந்து, அநுக்ரஹமே குணமாய் நிற்கும் லக்ஷ்மியைச் சரணமாக ஆச்ரயிக்கிறபடியால் அவளுக்கு 'ஸ்ரீ:' என்று பெயர். (2) ஶ்ரயதே (ஆச்ரயிக்கிறாள்) இதி 'ஶ்ரீ:' - அப்படித் தன்னை ஆச்ரயிக்கும் தீநர்களான சேதநர்களைப் பார்த்து உள்ளம் கரைந்து 'இவர்களைத் தண்டிக்கக் கூடாது, காப்பாற்றவேண்டும்' என்று தானே பகவானை ஆச்ரயித்து ப்ரார்த்திக்கிறபடியால் ஸ்ரீ:'. (3) ஶ்ருணோதி (கேட்கிறாள்) இதி ஶ்ரீ: - தீநர்களான ஆச்ரிதர்கள் 'அடியோங்களை ஸர்வேச்வரன் திருவடிகளில் ஸமர்ப்பிக்க வேண்டும்' என்று செய்யும் ப்ரார்த்தனையை ப்ரீதியுடன் கேட்கிறபடியால் 'ஸ்ரீ:'. (4) ஶ்ராவயதி (கேட்கும்படி செய்கிறாள்) இதி ஶ்ரீ: - அந்தச் சேதநர்களுடைய ப்ரார்த்தனையைப் பகவானிடத்தில் தானே விஜ்ஞாபநம் செய்து அவனை அதைக் கேட்பிக்கிறபடியால் 'ஸ்ரீ:'. (5) ஶ்ருணாதி (தீர்க்கிறாள்) இதி ஶ்ரீ: - தன்னைச் சரணமாக ஆச்ரயிக்கிறவர்களின் வினைகளெல்லாவற்றையும் தீர்க்கிறபடியால் 'ஸ்ரீ:'. (6) ஶ்ரீணாதி (பரிபாகத்தை உண்டாக்குகிறாள்) இதி ஶ்ரீ: - தம்முடைய காருண்யம் முதலிய குணங்களால் ஆச்ரிதர்களுக்கு நித்ய கைங்கர்ய பர்யந்தமான குண பரிபாகத்தை உண்டாக்குகிறபடியால் 'ஸ்ரீ:'. 'இவ்வளவு குணங்களுடன் கூடிக்கொண்டிருக்கிற' என்பது இவ்விடத்தில் இந்தப் பதத்தின் பொருள். *

---

* "அருடரு மடியவர்பால் மெய்யை வைத்துத்
தெருடர நின்ற தெய்வ நாயக நின்
அருளெனுஞ் சீரோ ரரிவையான தென
இருள்செக வெமக்கோ ரின்னொளி விளக்காய்
மணிவரை யன்ன நின்றிரு வுருவில்
அணியம ராக மலங்கலா யிலங்கி
நின்படிக் கெல்லாம் தன்படி யேற்க
அன்புட னுன்னோ டவதரித் தருளி
வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்து
ஈண்டிய வினைகள் மாண்டிட முயன்று
தன்னடி சேர்ந்த தமருனை யணுக
நின்னுடன் சேர்ந்து நிற்குநின் திருவே." [மும். கோ. பாசு. 1]

என்று ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன் அநுக்ரஹித்திருக்கும் பாசுரம் இங்கு அநுஸந்தேயம்.

லக்ஷ்மி - ஹே லக்ஷ்மி! "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" என்னும் புருஷ ஸூக்தத்தில் சொல்லப்படும் நாராயண பத்நியே இவள் என்பது இதன் குறிப்பு. இதனால் பார்வதீ இந்த்ராணீ முதலிய தேவதாந்தர பத்நிகளைக் காட்டிலும் இவளுக்கு மேன்மை சொல்லப்பட்டதாயிற்று.

ஸமஸ்தலோகஜநநீ - ஸகல ப்ரஜைகளுக்கும் மாதாவாகிற. ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் தென்படும் "த்வம் மாதா ஸர்வலோகாநாம்" என்னும் வாக்யம் இதற்கு ப்ரமாணம். இதனால் அவளுடைய வாத்ஸல்யாதிசயம் ஸூசிதமாகின்றது. பகவானிடத்திலும் இந்த வாத்ஸல்யம் இருக்கையிலும், இது ஸ்த்ரீகளிடமே பெரும்பாலும் தென்படுகிறபடியால். இதை லக்ஷ்மியின் விசேஷித்த குணமாகவே ஆசார்யர்கள் விபஜித்துப் பேசி யிருக்கிறார்கள். தண்டதரத்வம் தீரத்வம் சத்ருக்களை சமிப்பது முதலிய குணங்கள் பகவானுக்கும், வாத்ஸல்யம் மார்த்தவம் புருஷகாரத்வம் முதலியவைகள் லக்ஷ்மிக்கும் கூறாக விபஜித்த வ்யாபாரங்கள்.

ஶாரதீம் ஶ்ராவய - வாக் ஸம்ருத்தி. ப்ரீதி விசேஷம், சுபமான பக்தி, கைங்கர்யத்தில் ஊக்கம். அந்தக் கைங்கர்யத்தைச் செய்வதில் ஆநந்தாநுபவம். ஆகிய இவையெல்லாம் லக்ஷ்மி கடாக்ஷத்தாலேயே ஏற்படுகின்றன வாகையால் இவ்விடத்தில் லக்ஷ்மியைக் குறித்து இவைகளைக் கொடுக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறார்.

"ஸ ஶ்லாக்ய: ஸ குணீ தந்ய: ஸ குலீந: ஸ புத்திமாந் ।
ஸ ஶூர: ஸ ச விக்ராந்தோ யம் த்வம் தேவி நிரீக்ஷஸே ॥"

[ஹே தேவி! எவனை நீ கடாக்ஷிக்கிறாயோ அவனே ச்லாக்யன், அவனே குணசாலி, அவனே தந்யன், அவனே குலீநன், அவனே புத்திமான், அவனே சூரன், அவனே விக்ரமசாலி] என்றன்றோ மஹர்ஷிகள் அறுதியிட்டிருக்கிறார்கள்.

'ஶம்ஸய' - இது, 'கல்யாணம்' என்னும் பொருளுள்ள ஒரு சொல்லின் ரூபம். 'ஶக்திம் ஶம்ஸய' என்பதற்கு 'என்னுடைய பக்தியைச் சுபமான பக்தியாகச் செய்' என்பது அர்த்தம். அதாவது:— 'பரம பக்தி' என்று சொல்லப்படும் பக்தியை முடிவாக உடைய பரிபாகத்துடன் கூடியதாகச் செய் என்பது கருத்து. பக்தி அநந்ய ப்ரயோஜநமாகச் செய்யப்பட்டால் அதைச் சுபமான பக்தி என்று சொல்வார்கள்.

தாஸம் ப்ரபந்நம் - 'இவ்வளவு காலமாக நான் உன்னுடைய தாஸன் என்னும் ஸம்பந்தத்தை மறந்திருந்தேன்; இப்பொழுது அந்த ஜ்ஞாநம் உண்டாயிற்று. அது உண்டானவுடன் உன்னுடைய திருவடிகளை ஆச்ரயித்தேன்' என்பது குறிப்பு. ஸ்ரீ ஆளவந்தாருடைய "தாம் த்வாம் தாஸ இதி ப்ரபந்ந இதி ச ஸ்தோஷ்யாம்யஹம்" என்னும் திவ்ய ஸூக்தியின் அநுஸந்தாநம் இது.

வயம் ச - 'நாங்களும்' எப்படி நித்யர்களும் முக்தர்களும் உன்னுடைய கடாக்ஷமாகிற அலைகளால் எப்பொழுதும் அபிஷிக்தர்களாக இருக்கிறார்களோ, அப்படியே நாங்களும் இருக்கவேண்டும். இது தான் 'நாங்களும்' என்பதிலுள்ள உம்மையின் குறிப்பு.

3. இவ்விதம் தமது அபிமதத்தை ப்ரார்த்தித்துவிட்டு. 'அளவற்றவும் அதி விலக்ஷணமுமான குணங்களை யுடைய உன் விஷயத்தில் ஸ்தோத்ரம் என்பது எப்படி ஸாத்யம்?' என்று சொல்லுகிறார். 'ஸ்தோத்ரம்' என்பதற்கு ஒருவனிடத்

ஸ்தோத்ரம் நாம கிமாமநந்தி கவயோ யத்யந்யதீயாந் குணா-
நந்யத்ர ஸ்வஸதோऽதிரோப்ய ஃபணிதிஸ்ஸா தர்ஹி வந்த்யா த்வயி ।
ஸம்யக்ஸத்யகுணாபிவர்ணநமதோ ப்ரூயு: கதம் தாத்ருஶீ
வாக்வாசஸ்பதிநாபி ஶக்யரசநா த்வத்ஸத்குணார்ணோநிதௌ ॥ (௩)

தில் இல்லாத குணங்களை அவனிடம் ஆரோபித்துப் பேசுவது என்றும், ஒருவனிடத்தில் இருக்கும் குணங்களை ஒன்று கூட விடாமல் வர்ணிப்பது என்றும் இரண்டு விதமாகப் பொருள் கொள்ளக்கூடும். லக்ஷ்மியிடத்தில் இராத குணங்கள் இல்லையாதலால் முதல் அர்த்தத்திற்கு இடமில்லை. அவளுடைய குணங்களுக்கு எல்லை இல்லையாதலால், அவைகளைப் பூர்ணமாக வர்ணிப்பது என்பதும் சக்யமன்று. ஆகையால் இரண்டாவது அர்த்தத்தின் ப்ரகாரத்திலும் 'ஸ்தோத்ரம்' என்பது ஸம்பவிக்கமாட்டாது. ஆகையால்,'எவ்விதம் நான் ஸ்தோத்ரத்தைச் செய்யப்போகிறேன்' என்று பயப்படுகிறார்.

[பதவுரை] கவய: - கவிகள், கிமாம ஸ்தோத்ரமாமநந்தி - எதை ஸ்தோத்ரமென்று சொல்லுகிறார்கள்? ஸ்வஸத: - (ஒருவனிடத்தில்) இராமலிருக்கிற, அந்யதீயாந் குணாந் - மற்றவனுடைய குணங்களை, அந்யத்ராதிரோப்ய - அவனிடத்தில் இருப்பதாக ஆரோபணம் செய்து, ஃபணிதி: - பேசுவதானது, ஸ்தோத்ரம் யதி - ஸ்தோத்ரமாகும் பக்ஷத்தில், தர்ஹி - அப்படியானால், ஸா - அந்தப் பேச்சானது, த்வயி - உன்னிடத்தில், வந்த்யா - வீணையாகும். ஸம்யக்ஸத்யகுணாபிவர்ணநம் - (ஒருவனிடத்தில்) உண்மையாக இருக்கும் குணங்களையே உள்ளபடி வர்ணிப்பதையே, அத ப்ரூயு: - (ஸ்தோத்ரமென்று) சொல்லும் பக்ஷத்தில், தாத்ருஶீ வாக் - அப்படிப்பட்ட வர்ணநமானது, த்வத்ஸத்குணார்ணோநிதௌ - உன்னுடைய ஸத்குணங்களாகிற ஸமுத்ரத்தில், வாசஸ்பதிநாபி - ப்ருஹஸ்பதியினால் கூட, கதம் - எப்படி, ஶக்யரசநா - சொல்வதற்கு ஶக்யம்?

'லக்ஷ்மியினிடத்தில் இராத நல்ல குணங்களும் இல்லை. அப்படி அவளிடத்தில் இருக்கும் நல்ல குணங்களுக்கு அளவும் கிடையாது' என்பதுதான் இந்த ச்லோகத்தால் சொல்லப்பட்டதாகிறது.

"ந தே வர்ணயிதும் ஶக்தா குணாந் ஜிஹ்வாऽபி வேதஸ:"
[ப்ரஹ்மாவின் நாக்குக்கூட உன் குணங்களை வர்ணிப்பதற்கு அசக்தமே] என்பது மஹர்ஷிகளின் வார்த்தை.

'ஸ்தோத்ரம் என்னும் சப்தத்திற்குக் கீழ்க் கூறப்பட்டுள்ள இரண்டு அர்த்தங்களுள் முதல் அர்த்தத்திற்கு மஹா கவியாகிற காளிதாஸன் வாக்யம் ப்ரமாணம். இராத குணங்களை இருப்பது போலப் பேசுவது ஸ்தோத்ர மென்னும் லக்ஷணத்தை வித்தவத்கரித்து, 'ஸ்துதி' சப்தத்தை அவர் ரகு வம்சத்தில் பின்வருமாறு ப்ரயோகித்திருக்கிறார்.

யே வாசாம் மநஸாம் ச துர்க்ரஹதயா க்யாதா குணாஸ்தாவகா-
ஸ்தாநேவ ப்ரதி ஸாம்புஜிஹ்வமுதிதா ஹந்தைஷா மாமிகா பாரதீ ।
ஹாஸ்யம் தத்து ந மந்மஹே நநு சகோரோऽப்யுத்கடவிக்ரமம் சந்த்ரிகாம்
நாலம் பாதுமிதி ப்ரஹ்ருஷ்யதி ரஸநாரஸீத ஸத்ருஷ்ணம் த்ருஷி ॥ (௪)

"ருதாயவ்யாஹ்ருதி: ஸா ஹி ந ஸ்துதி: பரமேஷ்டிந:"
[இது, ஸத்யமாக இருக்கும் குணங்களைப் பேசினதே தவிர, ஸ்தோத்ரமன்று]. 'ஸ்தோத்ரமன்று' என்று சொல்லியிருப்பதனால், அஸத்ய குண வர்ணநமே ஸ்தோத்ரமென்று அந்த மஹாகவி அபிப்ராயப்பட்டிருப்பதாகத் தெரிகின்றதன்றோ? இரண்டாவது அர்த்தத்திற்கு ஸ்ரீபராசர பட்டரின் ஸூக்தி ப்ரமாணம். ஸ்ரீகுணரத்நகோசத்தில் 'ஸ்துதி செய்யப்படும் வஸ்துவின் குணங்களை ப்ரகாசிப்பதே ஸ்தோத்ரமாகும்' என்று "ஸ்தோத்ராணாம் தத்ஸமஞ்ஜஸி தேவி கவயோ யோ விவ்ருணுதே குணாந் ஸ்தோதவ்யஸ்ய" என்னும் ச்லோகத்தால் விளக்கியிருக்கிறார். ஆகையால் இந்த இரண்டு லக்ஷணங்களும் 'ஸ்தோத்ரம்' என்பதற்குப் பொருந்தினவை என்று ஏற்படுகின்றது.

4. கீழ் ச்லோகத்தில், லக்ஷ்மியின் குணங்கள் அளவற்றவை என்றும் ஆகையால் ப்ருஹஸ்பதியால் கூட அவை வர்ணிக்கக் கூடாதவை என்றும் சொல்லப்பட்டன. அப்படியிருக்கையில் தாம் அவைகளின் வர்ணநத்தைச் செய்யப் புகுவது எப்படி என்று சங்கித்துக்கொண்டு, அந்தச் சங்கையை ஒரு த்ருஷ்டாந்தத்தைக் காண்பித்துப் பரிஹரிக்கிறார்.

[பதவுரை] தாவகா: - உன்னுடையவையான, யே குணா: - எந்தக் குணங்கள், வாசாம் - வாக்குக்கும், மநஸாம் ச - மநஸ்ஸுக்கும், துர்க்ரஹதயா - எட்டாதவையாக, க்யாதா: - ப்ரஸித்தி பெற்றிருக்கின்றனவோ, தாந் ஏவ ப்ரதி - அந்தக் குணங்களைக் குறித்தே (அதாவது - அந்தக் குணங்களையே வர்ணிக்கத் தகுந்தவைகளாக உத்தேசித்தே), மாமிகா - என்னுடையதான, பாரதீ - வாக்கானது, ஸாம்புஜிஹ்வம் - ஊறின ஜலத்துடன் கூடிக்கொண்டிருக்கிற நாக்கை உடைத்தாயிருக்கும்படி (அதாவது - உன்னுடைய குணங்கள் மிகவும் ரஸவத்துக்கள் என்று அறிந்திருக்கும் என் நாக்கில் அவைகளின் ப்ரஸ்தாவத்தாலேயே ஜலம் ஊறுகின்றது என்று சொன்னதாயிற்று), உதிதா - ப்ரவ்ருத்திக்கின்றது (அதாவது அவைகளை நான் வர்ணிப்பேன் என்னும் ஸங்கல்பத்துடன் ப்ரவ்ருத்திக்கின்றது); ஹந்த - ஆச்சர்யம், தத்து - ஆனால், தத் - அதை (அதாவது அப்படி அது ப்ரவ்ருத்திப்பதை), ஹாஸ்யம் - பரிஹஸிக்கத் தகுந்ததாக, ந மந்மஹே - நாம் எண்ண

வில்லை; ஹி - ஏனென்றால், சகோரீ - சகோர பக்ஷியானது, ஏகா - ஒன்றியாக, க்ருத்ஸ்நாம் சந்த்ரிகாம் - நிலவு முழுவதையும், பாதும் - பாநம் செய்வதற்கு, க்ஷமா ந - சக்தையன்று, இதி - என்னும் காரணத்தால், த்ருஷி ஸத்யாம் - (தனக்குத்) தாஹம் இருக்கும்பொழுது, ரஸநாம் - (தனது) நாக்கை, ஸம்ஹ்ருத்ய - அடக்கிக்கொண்டு, ந ஆஸீத - (பாநம் செய்யாமல்) இருக்கமாட்டாதன்றோ?

ரஸவத்தான பொருள் கிடைத்தால் அதில் ஆஸ்தையுள்ள எல்லாரும் தம் தம் சக்திக்குத் தக்கபடி அதை அநுபவிக்க ப்ரயத்நப்படுவோர்களே தவிர, அப்பொருள் முழுவதையும் தாம் அநுபவிக்கச் சக்தியற்றவர்கள் என்னும் காரணத்தால் அதை அணு காமல் நின்றுவிட மாட்டார்கள் என்பது கருத்து. அலை மோதும் தடாகத்திற்குத் துல்யம் பகவத் குணங்கள்; 'தாஹமுடையவன் அந்தத் தடாகத்தில் ஒரு கை ஜலம் எடுத்துப் பாநம் செய்வதுபோல, அந்தக் குணங்களை என்னுடைய சக்திக்குத் தகுந்த படி வர்ணித்து அதனால் கிடைக்கும் ஆநந்தத்தை நான் அநுபவிக்கிறேன்' என்பது கவியின் திருவுள்ளம்.

"யாவாநர்த்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லுதோதகே।
தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத: ॥"

என்று ஸ்ரீ கீதாசார்யன் இந்த ந்யாயத்தை வெளியிட்டிருக்கிறான் என்பது ஸ்ரீ கூரேச னுடைய ஹ்ருதயமென்று தெரிகின்றது. ஸ்ரீ ஆளவந்தார், பகவானுடைய குணங்களை வர்ணிக்கப் புகுகையில், முதலில் அவைகளின் ஆநந்த்யத்தைப் பார்த்து அகன்று, பிறகு, தமக்குத் தக்க ப்ரவ்ருத்தியைத் தாம் செய்வதில் எவ்வித தோஷமு மில்லையென்று ஸமாதாநம் செய்துகொண்ட ரீதியை இவ்விடத்தில் ஸ்ரீ கூரேசன் அநுஸரிக்கிறார்.

"யத்வா ஶ்ரமாவதி யதாமதி வாப்யஶக்த:
ஸ்தௌம்யேவமேவ கலு தேऽபி ஸதா ஸ்துவந்த: ।
வேதாஶ்சதுர்முகமுகாஶ்ச மஹார்ணவாந்த:
கோ மஜ்ஜதோரணுகுலாசலயோர்விஶேஷ: ? ॥"

[நான் அசக்தனாயிருக்கையிலும் என்னுடைய சக்திக்கும் ஜ்ஞாநத்திற்கும் தக்கபடி ஸ்தோத்ரம் செய்கின்றேன். வேதங்களும் சதுர்முக ப்ரஹ்மா முதலானவர்களும் இம்மாதிரி மாத்ரமே ஸ்தோத்ரம் செய்கிறார்களே தவிர, அவர்கள் நிஶ்ஶேஷ ஸ்தோத்ரம் செய்தார்கள் என்பதில்லை யன்றோ? ஸமுத்ரத்தில் பெரிய மலை மூழ்குவதற்கும் அணு மூழ்குவதற்கும் வாசி உண்டோ? மூழ்கிப் போவதில் இரண்டும் துல்யமே.] ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீ கூரேசன் இருவரும் சொல்லும் விஷயமொன்றே; ஆனால் அவர்கள் அதைச் சொல்லும் பங்கிகள் மாத்ரம் வெவ்வேறாக இருக்கின்றன.

சகோரீ - பெண் சகோர பக்ஷி. சகோர பக்ஷிகள் நிலவைப் பாநம் செய்து அதனால் தமது தாஹத்தைச் சமநம் செய்துகொள்ளுகின்றன என்பது ப்ரஸித்தம். ஆனால், அப்படிப் பாநம் செய்வதில் பெண் சகோரங்களுக்கும் ஆண் சகோரங்களுக்கும் எவ்வித வாசியுமில்லை. இவ்விடத்தில் 'சகோரீ' என்று பெண் சகோரத்தைக்

க்ஷோதீயாநபி துஷ்டபுத்திரபி நிஸ்ஸ்நேஹோऽப்யநீஹோऽபி தே
கீர்த்திம் தேவி! லிஹந்நஹம் ச பிபேம்யஜ்ஞோ ந ஜிஹ்ரேமி ச ।
துஷ்யேத்ஸா து ந தாவதா நஹி ஶுநா லீடாபி பாகீரதீ
துஷ்யேச்ச்வாபி நலஜ்ஜதே நச பிபேத்யார்த்தி: ஶ்வா ஶாஸ்யேஹந: ॥

குறிப்பிட்டிருப்பது, 'ஸாரஸீ' என்று ஸ்த்ரீ லிங்கத்தில் நிர்த்தேசிக்கப்பட்டுள்ள வாக்குக்கு த்ருஷ்டாந்த ஆநுகுண்யத்தைக் கல்பிக்கும்பொருட்டே என்று அறிய வேண்டும்.

அஹோ - இது ஆச்சர்யத்தைக் குறிக்கும் ஒரு அவ்யயம். இதை ப்ரயோகம் செய்வதில் ஸ்ரீ கூரேசனுக்கு ஒருவித விசேஷித்த உத்ஸாஹம் உண்டென்பது அவ ருடைய ஸூக்திகளிலிருந்து தெரிகின்றது.

"அஹோ சேநதேய ஸசைவ்யமங்கீகரோஷி"
"அஹோ துர்க்ஷேத்ரைவ நிவிஶாऽபி பவதீஹ வ்ருத்தி:"

என்று பலவிடங்களில் அதைக் காண்கிறோம்.

5. இவ்விதம் தம்முடைய சக்திக்குத் தக்கபடி ஸ்தோத்ரம் செய்வதில் பரிஹஸிக்கப்படத் தகுந்த அம்சமொன்றுமில்லை என்று நிச்சயித்த பிறகும் தம்முடைய குண சூந்யதையை நினைத்து, அப்படிப்பட்ட குணஹீனனால் ஸ்தோத்ரம் செய்யப்படு வதனால் அந்த ஸ்துத்ய வஸ்துவுக்கு ஏதாவது அவத்யம் நேர்ந்துவிடுமோ வென்று ஒரு பயம் ஜநிக்கவே, அப்படிப் பயப்படுவதற்கும் ஹேதுவில்லை யென்று ஒரு த்ருஷ்டாந் தத்தை முன்னிட்டு ஸமாதாநம் செய்துகொள்ளுகிறார்.

[ப—ரை] தேவி - ஹே தேவி! க்ஷோதீயாநபி - மிகவும் க்ஷுத்ரனாக இருந்த போதிலும், துஷ்டபுத்திரபி - (அப்படி க்ஷுத்ரனாக இருப்பதனால்) கெட்ட புத்தியை யுடையவனாக இருந்தபோதிலும், நிஸ்ஸ்நேஹோऽபி - (அப்படிக் கெட்ட புத்தியை உடைத்தாயிருக்கிற படியால்) பக்தியற்றவனாக இருந்தபோதிலும், அநீஹோऽபி - (அப்படிப் பக்தியற்றவனாக இருக்கிறபடியால்) கைங்கர்யமாகிற வ்யாபாரத்தில் ப்ர வ்ருத்தியாமல் இருந்தபோதிலும், தே - உன்னுடைய, கீர்த்திம் - (அந ந்த ஸத் குணங்களை உடைத்தாயிருப்பதால் ஏற்பட்டுள்ள) யசஸ்ஸை, லிஹந் - (வர்ணிக்கத் தகுந்த வஸ்துவாக) ஆஸ்வாதம் செய்துகொண்டு, அஜ்ஞ: அஹம் - ஒன்றுமறியாத நான், ந ச பிபேமி - பயப்படவுமில்லை; ந ச ஜிஹ்ரேமி - வெட்கமடையவுமில்லை; ஸா து - அந்தக் கீர்த்தி யோவென்றால், தாவதா - அவ்வளவால் (நான் ஆஸ்வாதம் செய்வதால்), ந துஷ்யேத் - தோஷத்தை அடைந்துவிட மாட்டாது; ஹி - ஏனென்

ஐச்வர்யம் மஹதேவ வா(அ)ல்பமதவா த்ருச்யேத பும்ஸாம் ஹி யத்
தல்லக்ஷ்ம்யா: ஸமுதீக்ஷணாத் தவ யத: ஸார்வத்ரிகம் வர்த்ததே।
தேநைதேந ந விஸ்மயேமஹி ஜகந்நாதோ(அ)பி நாராயணோ
தந்யம் மந்யத ஈக்ஷணாத் தவ யதஸ்ஸ்வாத்மாநமபீச்வர:॥ (௬)

றால், ஜாஹ்நவீ - கங்கையானது, ச்வநா - நாயினால், லீடாபி - ஆஸ்வாதிக்கப்பட்டபோதிலும், ந தோஷஞ்ச - தோஷத்தை அடைகின்றதில்லையன்றோ? ச்வாபி - நாயும், ந லஜ்ஜதே - லஜ்ஜைப்படுகிறதுமில்லை; ந ச பிபேதி - பயப்படுகிறதுமில்லை; ச்வந: - அந்த நாயினுடைய, த்ருஷ்ணா - (தாகத்தினால் உண்டாயிருந்த) உபத்ரவமோவென்றால், சாம்யதி - சாந்தமாகி விடுகின்றது.

கங்கையில் நாய் ஜலம் குடித்தால், அதனால் கங்கைக்கு எப்படித் தோஷம் உண்டாகமாட்டாதோ, அப்படியே உன்னுடைய கீர்த்தியானது குணசூன்யனாக இருக்கும் என்னால் ஸ்தோத்ரம் செய்யப்பட்டபோதிலும் அதனால் அதற்கு எவ்வித தோஷமு முண்டாக மாட்டாது; அந்த ஜலத்தைக் குடிப்பதால் அந்த நாய்க்குத் தாஹ சமநம் கிடைப்பதுபோல, அந்தக் கீர்த்தியை ஆஸ்வாதம் செய்வதால் என்னுடைய மநோரதமும் நிறைவேறிவிடும்.

6. கீழ் நாலு ச்லோகங்களால் தாம் செய்யப் புகும் ஸ்தோத்ரத்தை ப்ரஸ்தாவித்துவிட்டு, இதற்குமேல் மூன்று ச்லோகங்களால் லக்ஷ்மியின் மஹிமையை வர்ணிக்கின்றார். இந்த ச்லோகத்தில், இந்த லோகத்திலோ பரலோகத்திலோ ஒருவனுக்கு நேரும் ஐச்வர்யமெல்லாம் லக்ஷ்மியின் க்ருபா கடாக்ஷத்தைச் சார்ந்தே நிற்கின்றது என்று சொல்லிவிட்டு, ஸ்ரீமந் நாராயணன் விஷயத்திலும் இது அந்வயிக்கின்றது என்று புகழ்ந்து பேசுகிறார்.

[ப—ரை] பும்ஸாம் யதைச்வர்யம் - ப்ரஜைகளின் யாதொரு ஐச்வர்யமானது, மஹதேவ வா - உயர்ந்ததாகவோ, அல்பம் அதவா - குறைந்ததாகவோ, த்ருச்யேத ஹி - ப்ரஸித்தமாகக் காணப்படுகின்றதோ, ஸார்வத்ரிகம் தத் - (இந்த லோகத்திலோ லோகாந்தரங்களிலோ) எல்லா விடங்களிலும் தென்படும் அந்த ஐச்வர்ய மெல்லாம், லக்ஷ்ம்யா: - லக்ஷ்மியாகிற உன்னுடைய, யத: ஸமுதீக்ஷணாத் - யாதொரு கடாக்ஷத்தாலே, வர்த்ததே - ப்ரவ்ருத்திக்கின்றதோ, தேந ஏதேந - அந்தக் கடாக்ஷத்தாலே (அதாவது-அப்படிப்பட்ட மஹிமையையுடைய கடாக்ஷத்தால்), ந விஸ்மயேமஹி - நாம் ஆச்சர்யப்படுகிறோமில்லை; யத: - ஏனென்றால், ஜகந்நாத: - ஜகத்துக்கு எல்லாவற்றுக்கும் நாதனாகவும், ஸ்வேச்வர: - தனக்குத் தானே ஈச்வரனாகவும், (அதாவது : தன்னையும் நியமிக்கும்படியான வேறொரு ஈச்வரனை

முக்கண் முதல்வா மூவுலகும்
முதல்வ னீயே யென மொழிந்துன்
பக்கஞ் சாரு மெனப் பெருமை
பாராட் டுவையே பலகாலு
மிக்கேழ் கிளரு மிருடியுநஞ்
சாயை யிகழ்ந் திங் கொதுங்குவதேன்
றக்கன் வேள்வி தகர்த்தவனே
தரையிற் போது மவனருகே. 81

என்றத் தோகையி சைத்துகேட்
டெருதே றீசன் முறுவலித்துக்
குன்றத் தீசன் குலமகளே
கொழுமா மலராள் கொண்கனது
நன்றாற் றிடுமிவ் விளையாட்டின்
னான்கு முகத்தோன் படைத்திடுவன்
பொன்றத் துடைப்ப தெனது செயல்
புருடோத் தமனே புரந்தருள்வான். 82

தண்ணார் கமலத் திசைமுகனுந்
தன்னாண் முழுதுந் தளர்ந்ததற்பின்
விண்ணோ டிந்த மூவுலகும்
வீய வண்டங் கரந்தொழிய
மண்ணோ டைம்பூ தங்களுமம்
மாயன் மாயை தனிலொடுங்கக்
கண்ணா ரந்த வைகுந்தங்
கலந்தே யின்பக் கடலாழ்வான். 83

ஆங்கே யாமு மடைகுவதி
னிவனே யல்லா லொரு தெய்வம்
நாங்கண் டறியோ மவன்பதமே
நாடி யிவனு நோன்புறலா
லீங்கு நம்மை மதித்துரையா
னென்ன வவனு மிறையே நாம்
பாங்கி னவனைப் பார்த்துவரந்
தந்தே படர்து மெனப்பகர்ந்தாள். 84

பகரக் கேட்டே விண்டுபதி
படருஞ் சடையா னிழிந்தவன் கண்

முகமே நிற்க வெதிர் நோக்கா
தவனுங் கீழாய் முகங் கோட்டித்
துகளார் கந்தைத் துண்டுகளைத்
தொடரப் பொத்தி யுறவவனுந்
தகவி லென்னை மதியாமே
யுறைவ தென்ன தகவென்றான். 85

மெய்யே நின்னொ லெற் கியையும்
விழைவே தென்று மிழற்றவிவன்
ஐயே வேண்டும் வரமளிப்ப
லறைக வென்ன வரனுழ்வான்
கொய்யுந் தாதைத தலைக்கா நீ
கொடுப்ப தெனக்கொன் றில்லை யென
வெய்ய நுதற்கண் பசுபதியும்
வீடின் மற்றும் விளம்புவனால். 86

முனிவர் குலத்தின் சேகரின்
மூவாவிரதத் துள மகிழ்ந்து
கனிவாய் வேண்டும் வரமளிக்கக்
கைலை நீத்துன் கண்முகப்பே
தனியே நின்று நனிவேண்டுந்
தன்மை யுணரா தகற்றுவதும்
முனியும் வினையை நோற்பவர் தம்
மொய்ம்பிற் கியல்போ வென மொழிந்தான். 87

மொழியக் கேட்ட மழிசையனும்
முறுவல் பூத்து வரைவில்லோய்
ஒழிவி லின்ப வுலகருள
வொல்லு மென்னி லுதவு கெனக்
கழிய வுள்ளம் வெள்கியது
கருணை செய்வோன் றிருமாலே
யொழிய வேறு வரித்திடுகென்
றுரைக்க முனியு மோதுவனால். 88

ஆயின் முத்தி யளித்தலையே
லானையுரித்தோ யின்றொழிவோர்
வாயின் சின்னா ளிருந்தகலும்
வண்ண மிழைத்தி யெளவவனும்

மாயு முயிரைத் தடுத்திடலென்
மாடும் வினையின் மாய்வரெனப்
பாயு மூசி யுடனிழையும்
பாயும் வரமே னுந்தருவாய். 89

என்றவ் வாழ்வா னிகழ்ந்திடலு
மேந்து மழற்கை யுருத்திரனும்
நன்று நன்றென் றுருத் தெழுந்தே
நமனார் நமனென் றெனையறியா
யன்று சென்ற வனங்கனெறி
யடைகென் றின்னே நுதல்விழியைக்
கன்றி நின்று கனன்றெரியைக்
காலும் வகையே திறந்தனனால். 90

அழற்க ணின்றுங் கடைக் காலத்
தவனி யெரிக்கும் வடவையெனத்
தழற்பி ழம்பாங் கெழுந்தழலத்
தனதே ரித்யத் தாமரையின்
மழைக்கண் மலர்மா மங்கையுடன்
மன்னும் பெருமான் மலரடியே
பிழைக்குங் கதியென் றடைக்கலஞ்செய்
போழ்தின் முனிவன் பெருமானும். 91

இடங்கர் வலிக்க வாற்றாதன்
றிரங்கி யழைத்த மதகரிக்குப்
படங்கொள் பாய றணந்துவிரைந்
தெழுந்த பாங்கின் படிவமறைத்
திடங்கொள் வாணி விருந்துனது
வவத்தாள் பெரிய விரனுதியி.
னடங்கும் விழியைத் திறந்திடுகென்
றுரு முணரா தருளினனால். 92

இருடி யிறையு மெம்பெருமா
னிசைத்த துணர்ந்து தளராமே
விரைவி லடியின் கண்டிறக்க
வெயில்கால் கோடி வெங்கதிர்கள்
புரையு முழுத்தீப் பிழம்பேய
தனின்றெ ழுந்து புவிமுழுதும்

பரவிக் கங்கைச் செஞ்சடையன்
பாங்கர் வளைந்து தகித்ததரோ. 93

அப்போ தன்று னுதல்விழியு
மடங்கி நளம்பி னேழ்பரியோன்
வெப்பங் காலும் வெயிலிடையே
புரண்டு வெதும்புங் கீடமெனச்
செப்பற் கரிய துயருழந்து
செங்கட் கருமா மழைமுகிலே
யிப்போ தருளா மழை சொரிந்தென்
னிடும்பை யகற்ற வென விரைந்தான். 94

நாரி பாக னிவ்வணமே
நலியக் கண்ட வானவரும்
வேரி மாறு மலரவனும்
வெருவிப் போந்து விரைவுடனே
காரி நிகர்க்குங் கண்மலராள்
கணமும் வரையா துறை நிறத்தோன்
பாரை யளக்கும் பதமலர் நம்
பைம்பொன் முடிமேற் படவீழ்ந்தார். 95

வீழக் கண்ட நெடுமாலும்
வேயுந் தருமா மலர்த் தொடையீர்
பாழிப் புயவெந் தானவர்நும்
பாடு பறிக்கப் பயந்தீரோ
ஆழிப் புவியிற் கஞ்சன்முத
லடலா ரவுணர் தமையடர்த்தோம்
தாழக் குலைந்திங் கென்புகுந்த
தஞ்சா தடைவே சாற்றுதிரே. 96

என்னக் கமல யோனியுமா
யிமையோர் குழு வெழுந்துசரந்
தன்னன் முடியிற் கூம்பியிடத்
தாயா யுலகந் தாங்கிறையே
நின்னின் னடியன் திருமழிசை
நிலவ நின்று னடிவிரலின்
கண்ணின் னழலாற் கரிகரிந்து
கண்மூன் றுடையோன் கலங்குவனால். 97

அதுவே யொன்றோ வவ்வனலா
லவனி யெல்லாந் தீந்தொழியும்
மதுவார் தண்ணந் துளவத்தார்
மாயா முந்திக் காக்கிலையேல்
பொதுவர் மனையி னறுநெய்பால்
புகழ வருந்தும் புயல்வண்ணா
மதமா வளித்த வடைவேயிம்
மங்கை பாகற் கருளென்றான். 98

முப்பான் மூன்று கோடியெனும்
மூவா வமரர் முனிகணங்கள்
துப்பே ரிதழா ளயிராணித்
தொய்யின் முலைதோய் விண்ணவர்கோன்
அப்பா லன்ன முகைத்திடுவோன்
முதலா மிந்த வமரரெலா
மப்பா வென்றவ் வமலற
வையன் முறுவல் பூத்தருள்வான். 99,

கேளீ ருலகி லெவரேனுங்
கிளர்ந்தே யெமக்குத் தீங்கிழைக்கின்
கேளீ ரென்றே யவர்சமிப்பேங்
கெடலி லெந்த மடியார்பால்
கோளில் புரை யொன்றிழைப்பவரைக்
குழைய வொறுப்பேமெனவருளி
மாள வுலகம் பெயும்புட்க
லாவர்த் தம்மென் மழைவிளித்தே. 100.

நீவி ரின்னே தாழாமே
நிலமாவுலகிற் படர்ந்தலவன்
காவி னீழல் வயல்வரம்பின்
முழையி னூடே கண்வளர
மேவு நாரை யுழுபடையின்
மேயுங் கயலைக் கவர்பெரிய
வாவி செறியும் வளமலிநன்
மழிசைத் தீயை மாற்றுதிரே. 101.

என்ன செவிகொள் ளெழிலிகளு
மெந்தாயுன்ற னெழிற் கரத்தின்

மின்னுந் திகிரித் திருவுருவாய்
மிளிரு மாழ்வான் பதவிரலின்
மன்னுந் தீமூண் டெரிந்திடினெம்
மழையி னவிக்கும் மதுகையிலே
மன்ன வழலை யம்பகங்கொண்
டணுகிக் காண்டற் காருளரே. 102.

எந்தம் பகடு வியனுலக
மெங்கும் புகழ வீங்கதுவு
மிந்த நெறியி னகலற்க
வென்றே யவையாங் கிரங்கிடமா
னந்தம் பணியிற் படர்கவுமக்
கனுகுந் திறனு நனியென்ன
வந்த வருங்கார்க் குலமடைய
வாங்கே மீண்டு படர்ந்தனவால். 103.

காண்போர் காணுங் காஞ்சியிற்
ககன மெங்குஞ் சாலமெனச்
சேண்கா ராழி முழுதுமெழுந்
திடையொன் றின்றிச் செறிந்ததென
மாண்பா ரெங்கு மனநடுங்க
விடியு மின்னு மலிந்துமுனந்
தூண்போ லாயர் படப்பொழிந்த
தாரை நிகர்ப்பச் சொரிந்தனவே. 104.

சொரியத் திணைகள் வேறறியுஞ்
சூழ்ச்சி யின்றித் தொல்புவியில்
பெரிய பிரள யம்மிதுவென்
றெவரும் பேதுற் றழுங்கவெள்ளம்
விரியத் தரணி மிசைப்புரள
வாழ்வா ரடியின் விழிநெருப்புந்
தெரியத் தெரிய மதமடங்குந்
திறமே முற்றுந் தணிந்ததரோ. 105.

வேறு

செவியுற்ற போழ்தத்து மகமுட்கு
மச்செப்ப வரிதாய திண்மாரியின்
புவியுற்ற பெருவெப்பி னசையாது
புருடோத்த மன்பாதமேபுந்தியின்

சவியுற்ற மலர்வைத்த வன்றன்னை
யெயத்த வத்தோர டைந்தார்தனு
மவியுற்ற பின்வன்னி யழலேந்தி
தெளிவுற்றெ ழுந்தங்க கந்தேறினன். 106.

தேறித்தி றந்தேக ணெதிர்நின்று
திகழ்கின்ற திறலாரை முகநோக்கியே
மீறித்த னக்குள்ள டங்காவி
யப்போடு மேனின்ற வானோர்களைக்
கூறிக்கு றிக்கொண்டு ரோளிர்க
ளினியிக்கு ணக்குன்ற னத்தோன்றுமில்
வீறுற்ற முனிபத்தி சான்றென
னும்பேர்வி ளங்கத்த மைத்தோங்குமே 107.

அடியாருண் முதலம்ப ரீடன்ற
ஞலோர்மு னறியாது முனிபட்டதின்
படியாய தென்பாடு மீங்கென்றி
டங்கொண்ட பைந்தோகை யுடனேந்தருந்
தொடையாடு சுரர்காண வதைநன்கு
ரைத்தெந்தை துளவாடு புயமாயவன்
வடிவாரு மடியாரை வெல்வாரு
முளர்கொல்லோ வகையாரு மெவராயினும். 108.

என்றேதி ருப்பாக வதர்வீறு
மெழில்பஞ்ச விதமாந்தி ருத்தங்களுங்
குன்றாத குருபாதம் பயில்வண்ண
மோடின்ன குறையாத தருமங்களும்
நன்றுய றைந்தந்த நளியோடி
விடைகொண்டு வானுடர் புடைசூழ்வர
மன்றாடு பெருமானு மலைமானும்
வெண்சோதி மலைமீது றச்சென்றனன். 109.

௩-வது சருக்கம்

கண்ணொன்று மில்லான்ம கன்முன்ன
மேலோர்க ளந்துள்ள மன்றத்திடைப்
பண்ணொன்று மொழியாளை வலிகொண்டி
ழுத்தாடை பரிவின்று களைபோழ்தவன்

மண்ணின்ற மரமேங்க மாயாவெ
    னக்கூவி மாசோடு கதறத்துகில்
எண்ணொன்ற வில்லாது வளரப்பு
    ரிங்தோனெ ழிற்பாத மேயேத்துவாம். 1.
மழிசைப்பி ரானவ்வ ணம்மாத
    வன்பாத மலர்காடி யுறைபோழ்திலோர்
பொழுதிற்பு லிப்போத்தி னிவர்தந்து
    மிசையேகு மோர்கொங்க ணன்போம்பொழி
யெழுகிற்கி லாதேத டைப்பட்டு
    நிற்கத்தி யக்குற்ற வன்னெங்கணு
மழிவுற்ற நெஞ்சோடு நோக்குற்ற
    பின்பார கத்துங்க ணேச்சேர்த்தனன். 2.
கந்தைத்து ணிக்குப்பை பொத்திப்பொ
    லிந்துள்ள கலேஞான முனிகண்டிவ
ரிந்தப்பு லிப்போக்கு மிடர்கொள்ள
    நின்றாரெ னத்தேர்ந்தி ழிந்தையரே
சிந்தத்து கட்சிரை தைப்புத்த
    விர்ந்திச்செ ழும்பட்டி னிற்செய்துறு
மிந்தத்தி ருக்கஞ்சு கங்கொள்ளு
    மென்றென்றை யியச்சி ரித்தன்னவர். 3.
நீதந்த தென்விந்தை யென்மீது
    நிலவுற்ற திக்கஞ்சு கங்காணெனப்
போதந்தி கழ்ந்தோரெ ழின்மேனி
    மீதாயி ரஞ்சோதி போன்மின்னிடும்
பேதம்ப டுந்தாம மணிவார
    ணங்கண்டு பெருவிம்மி தங்கொண்டுபின்
னேதந்த விர்ந்துள்ள தவவீர
    ரேயிந்த குளிகைக்கொ ரிணையின்றரோ. 4.
இதுகோடி யாமோர்க டும்பொன்னே
    யும்போழு மெனவொன்ற வன்காட்டவன்
முதுவெந்த வத்தோர்ந கைத்தஞ்ச
    விக்குண்டு ளேக்கும்ம லங்கொண்டதைப்
புதுமைக்கு ணங்கொள்ளுங் குளிகைக்கு
    ஞுபர்வென்று போற்றும்வ ணஞ்செய்ததைச்
சதகோடி கோடிக்கு மேலாய
    திறபோழு நீ கொள்ளெ னச்சாற்றினர். 5.

வாக்யாந்யேவ வத³ந்தி “வாயவ்யம் ஶ்வேதமாலபே⁴த பூ⁴திகாம: வாயுர்வை க்ஷேபிஷ்டா² தே³வதா வாயுமேவ ஸ்வேந பா⁴க³தே⁴யேநோபதா⁴வதி ஸ ஏவைநம் பூ⁴திம் க³மயதி” இத்யாதீ³நி। நாத்ர ஸர்வவிஜ்ஞாநவத்தி: காமிந: த்³ரவ்யஸ்ய இதி ஹேதுவாய

அந்தக் கர்மங்களால் ஆராதிக்கப்பட்டவர்களாய் ஆராதிக்குமவர்களுக்குப் பலத்தைக் கொடுக்கிறார்கள்' என்று சொல்லுகின்றன. இப்படி தேவதைகளின் வாயிலாகக் கர்மங்களின் பலம் ஸித்திக்கின்றது என்று சொல்வதில் ஒருவித அநுபபத்தியும் இல்லையாகையால், பலத்தை எது ஸாதித்துக் கொடுக்கின்றது என்பதை நாம் அநுமாநத்தா

'வாயவ்ய'...இந்த வாக்யத்தின் பொருளாவது—'இந்த லோகத்தில் ஐச்வர்யத்தை ஒருவன் அடைய விரும்பினால், அவன் வாயு தேவதையை உத்தேசித்து வெள்ளைப் பசு ஒன்றை பலிபாகக் கொடுத்து யாகமொன்றைச் செய்தல் வேண்டும். வாயு தேவதையே அதி சீக்ரத்தில் பலத்தைக் கொடுக்கும் தேவதை. யாகம் செய்பவன் தகுந்த பலியை எடுத்துக் கொண்டு வாயுவிடம் போனால், அந்த வாயு அவனுக்கு ஐச்வர்யத்தைக்கொடுக்கிறான்' என்பது தான். இதில் முதல் வாக்யமே விதிவாக்யம். அதற்குப் பின் வரும் வாக்யங்களை அர்த்த வாதமென்று சொல்வார்கள். 'தேவதையே பலத்தைக் கொடுக்கின்றது' என்னும் விஷயம் விதிவாக்யத்தில் சொல்லப் படவில்லை; அது அர்த்தவாதத்திலேயே சொல்லப் பட்டிருக்கின்றது. அப்படி இருக்கையில் 'விதிவாக்யாந்யேவ வதந்தி' [விதி வாக்யங்களே சொல்லுகின்றன] என்று எப்படிச் சொல்லக்கூடும்? என்று ஒரு சங்கை ஜநிக்கலாம். அர்த்த வாதமெல்லாம் விதி வாக்யத்துடன் ஒரு வித ஸம்பந்தம் பெற்று அதனால் அந்த வாக்யத்திற்கு அது சேஷமாகிறபடியால், அந்த விதி வாக்யத்தையும் அதன் அர்த்தவாத வாக்யங்களையும் ஒரே வாக்யமாக எடுத்துக் கொள்ளலாமென்று ஒரு ந்யாய முண்டு. அந்த ந்யாயத்தைக் கைப் பற்றி இவ்விடத்தில் அர்த்த வாதமும் விதி வாக்யமாகப் பேசப் பட்டிருக்கின்றது என்பதே அந்தச் சங்கைக்கு ஸமாதாநம்.

நாத்ர...இவ்விடத்தில் வேறொரு ஆக்ஷேபம் செய்யப்படுகின்றது. அதாவது—'அர்த்த வாதங்கள் விதி வாக்யங்களில் சொல்லப்படும் கர்மங்களை ஸ்தோத்ரம் செயவதற்காகவே ஏற்பட்டவை. அவை அப்படி அந்ய பரங்களாயிருக்கிறபடியால் அவைகளுக்கு ஸ்வார்த்தத்தில் தாத்பர்யம் சொல்வது சரியன்று, ஆகையால், 'கர்மங்கள் தேவதைகளின் வழியாகப் பலத்திற்கு ஸாதநமாகின்றன' என்பதை அர்த்த வாதங்கள் ஸாதித்துக் கொடுக்கமாட்டா. ஆனால், 'விதி வாக்யத்தில் பலத்தைக் கொடுப்பது எதுவென்று சொல்லப்பட வில்லையே' என்று கேட்டால், அதை அநுமாநத்தால் ஏற்படுத்து கின்றோம் என்று ப்ரத்யுத்தரம் சொல்வோம். அந்த அநுமாநமாவது—'விதிவாக்யத்தில் 'ஐச்வர்யம் அடைய விரும்புகிறவன் அந்த யாகத்தைச் செய்தல் வேண்டும்' என்று மாத்ரம் சொல்லியிருக்கின்றது. அதனால் ஐச்வர்யம் கிடைக்கின்றது என்பது நிச்சயம். ஆனால் அது எப்படி கிடைக்கின்றது என்பது அவ்விடத்தில் சொல்லப்பட வில்லை யாகையால், நாங்கள் அந்த யாகத்தால் 'அபூர்வம்' என்று ஒன்று ஜநித்து அது வழியாகப் பலம் கிடைக்கின்றது என்று அநுமாநம் செய்

ந த்வவகதிரௌபாதாநிகீ’ இத்யபி ந ஸங்கச்சதே। வித்யபேக்ஷிதம் யாகாதே: பலஸாதநத்வப்ரகாரம் வாக்யசேஷ ஏவ போதயதீத்யுக்தம்। “தஸ்மாத் ப்ராஹ்மணாய நாவகுரேத” இத்யத்ர அவகோரணநிஷேதவிதிவிஷயவாக்யசேஷே ச்ரூயமாணம் நிஷே-

லேயே தெரிந்து கொள்ளவேண்டும் என்று சொல்வது ஸங்கதமாக மாட்டாது. விதி வாக்யத்தில் யாகம் முதலியவைகளுக்கு எவ்விதமாகப் பலம் ஸித்திக்கின்றது என்பது சொல்லப்படா விட்டாலும், அந்த விதி வாக்யத்துடன் தொடர்ந்து வரும் வாக்ய சேஷங்களில் அது சொல்லப்பட்டிருக்கிறபடியால் அவைகளைக் கொண்டு அதை அறியலாம் என்பதே சாஸ்த்ரஜ்ஞர்களின் கருத்து.

அப்படி நாம் அறிகின்றோம் என்பதை “தஸ்மாத் ப்ராஹ்மணாய நாவகுரேத” என்னும் வாக்யத்திற் காணலாம். இந்த வாக்யத்தால் ப்ராஹ்மண அபகோரணம் (அதாவது-ப்ராஹ்மணனைக் கொல்ல ப்ரயத்நப்படுவது) நிஷேதிக்கப்படுகின்றது.

கின்றோம்’ என்பது தான். இந்த ஆக்ஷேபம் இவ்விடத்தில் தூஷிக்கப் படுகின்றது. தூஷண ப்ரகாரமாவது—‘கர்மங்கள் தேவதைகளின் வழியாகப் பலத்தை ஸாதித்துக் கொடுக்கின்றன என்று பல ஸித்தியை ஸ்தாபிப்பதில் ஏதாவது அநுபபத்தி இருந்தா லன்றோ நாம் பல ஸாதந ப்ரகாரத்தைக் கண்டு பிடிக்க அநுமாநத்தைத் தேடிப் போக வேண்டும். அவ்வித அநுபபத்தி இவ்விடத்தில் ஒன்று மில்லை. வாக்ய சேஷமே பல ஸாதந ப்ரகாரத்தை நன்றாகப் போதிக்கின்றது. அது அப்படிப் போதிக்க ஸமர்த்த மென்பதை எல்லாரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். “தஸ்மாத் ப்ராஹ்மணாய நாவகுரேத’ என்னும் வாக்யத்தில் அதைக் காணலாம். விதியால் அபேக்ஷிக் கப் படுவது வாக்ய சேஷத்தால் கிடைக்கும் பொழுது, அதைப் பரித்யாகம் செய்து அப்ரஸித்தமான மற்றொன்றைப் புதிதாகக்கல்பிப்பது அயுக்த மன்றோ?’ என்பதுதான்.

ஔபாதாநிகீ—‘உபாதாநம்’ என்னும் ப்ரமாணத்தால் ஸித்தமாவதை இந்தப் பதம் குறிக்கின்றது. ‘உபாதாநம்’ என்னும் ப்ரமாணம் ‘அர்த்தாபத்தி’ என்னும் ப்ரமாணத்தைப் போல ஒரு வித அநுமாநமே ஆகும். ‘தேவதத்தன் புஷ்டனாக இருக்கிறான்; ஆனால் அவன் பகலில் போஜநம் செய்கிறதே இல்லை’ என்று சொல்லு மிடத்தில், போஜந மின்றிக்கு ஒருவன் புஷ்டனாக இருப்பது ஸாத்யமில்லை யாதலால் ‘தேவதத்தன் இரவில் போஜநம் செய்கிறான்’ என்பது அநுமாநத்தால் ஸாதிக்கப் படுகின்றது. இதை ‘அர்த்தாபத்தி’ ப்ரமாணம் என்று சொல்வார்கள். இதைப் போன்றதே ‘உபாதாநம்’ என்னும் ப்ரமாணமும். ‘ஐச்வர்யத்தை அடைய விரும்புகிறவன் வாயுவைக் குறித்து யாகம் செய்தல் வேண்டும்’ என்று சொல்லு மிடத்தில், க்ஷணமாத்ரம் இருக்கும் யாகம் அந்தப் பலத்தை ஸாக்ஷாத்தாக ஸாதித்துக் கொடுக்க அசக்தமாதலால் ‘அந்தப் பலத்தை ஸாதித்துக் கொடுப்பது மற்றொன்றின் வழியாகவே இருத்தல் வேண்டும்’ என்பது அநுமாநத்தால் ஸாதிக்கப் படக்கூடும். இப்படி அநுமாநிப்பதை ‘உபாதாந ப்ரமாணம்’ என்று சொல்வார்கள். ‘அவிஹிதாவயவ ஸாதநத்வோபபத்தி, அவிநாபாவஸாமர்த்யாதௌபாதாநிகீ’ என்று இவை இரண்டுக்கும் ஸ்வல்ப வாசி உண்டு. அதை ஸூக்ஷ்மமாக அறியவேண்டும்.

த்யஸ்யாவகோரணஸ்ய சதயாதநாஸாதநத்வம் நிஷேத்யவிஷயத்வ யோக்யமிதி ஹி ஸ்வீக்ரியதே। அத்ர வதந்தி: காசிந: கர்தவ்யதயா விஹிதஸ்ய யாகாதே: காம்யஸ்வர்காதிஸாதநத்வப்ரகாரம் வாக்ய சேஷாவகதஸுகநாஸ்தித்வாத் கிமித்யௌபாதாநேந யாகாதே: ஸு

அப்படி அபகோரணம் செய்தால் அதனால் என்ன ஸித்திக்கின்றது என்பது அந்த வாக்யத்திற் சொல்லப்படவில்லை. அப்படிச் சொல்லப்படாமல் இருப்பதை அந்த வாக்யத்துடன் தொடர்ந்து வரும் “சதேந யாதயேத்” [அப்படி அபகோரணம் செய்பவனை சதயாதநை என்னும் தண்டனைக்கு உட்படுத்தல் வேண்டும்] என்னும் வாக்ய சேஷத்திலிருந்தே நாம் எடுத்துக் கொள்ளுகிறோமன்றோ? இந்த வாக்ய சேஷத்தால் சொல்லப்படும் தண்டனையாகிற ஸாத்யத்திற்கு விதி வாக்யத்தில் நிஷேதிக்கப் படும் அபகோரணம் ஸாதநமாகி அந்த இரண்டு வாக்யங்களிலும் சொல்லப்படும் விஷயங்களுக்கு பரஸ்பரம் ஸாத்ய ஸாதந ஸம்பந்தம் ஏற்படுகிறபடியால் அந்த வாக்ய சேஷத்திற்கு நாம் ஸ்வார்த்தத்தில் தாத்பர்ய முண்டென்றும் அங்கீகரிக்கிறோம். இது நிஷேத விதிபரமான வாக்யம். ‘வாயவ்யம்’ இத்யாதி வாக்யமோ வென்றால் ஒரு கர்மத்தைச்செய்யச் சொல்லி விதிக்கும் வாக்யம். நிஷேத விதிபரமான வாக்ய விஷயத்திலேயே வாக்ய சேஷத்திற்கு ஸ்வார்த்தத்தில் தாத்பர்யத்தை ஒத்துக்கொள்கையில், கர்த்தவ்யமென்று (அதாவது-செய்யப்பட வேண்டுமென்று) விதிக்கும் ‘‘வாயவ்யம்’’ என்னும் வாக்ய விஷயத்தில் அதன் வாக்ய சேஷத்திற்கு ஸ்வார்த்தத்தில் தாத்பர்யத்தை ஒத்துக்கொள்ளாமல் அதை அநாதரித்து, ஏன் அநுமாநத்தைத் தேடிப்போய் அந்த

ப்ராஹ்மணாய நாவகுரேத’. இந்த வாக்யம் இதற்கு முன் 358-வது பக்கத்தில் உதாஹரிக்கப் பட்டிருக்கின்றது. அவ்விடத்தில் இதன் விவரணத்தைக் காணலாம். ‘ப்ராஹ்மணனுக்கு எவன் அபகோரணம் செய்கிறானோ அவன் ‘சதயாதனை’ என்னும் தண்டனையால் தண்டிக்கக்கடவன்’ என்பதிலிருந்து, ‘சதயாதனையாகிற ஸாத்யத்திற்கு அபகோரணம் ஸாதநம்’ என்பது ஏற்படுகின்றது. இந்த ஸாத்ய ஸாதந ஸம்பந்தத்தால் அபகோரண நிஷேத விதிக்கு இந்த அர்த்தவாதம் உபயோகப் படுகின்றது என்பதை ஆதாரமாக வைத்துக்கொண்டு, சதயாதனையைச் சொல்லும் அர்த்த வாத வாக்யத்திற்கு ஸ்வார்த்தத்தில் தாத்பர்யம் எல்லாராலும் ஒத்துக் கொள்ளப் படுகின்றது. அது போல ப்ரக்ருதத்திலும் ஏன் செய்யக்கூடாது? என்பது தான் கேள்வி.

அத்ர வதந்தி:—‘தஸ்மாத் ப்ராஹ்மணாய நாவகுரேத’ என்னும் வாக்ய விஷயத்தில் காட்டிலும் ‘வாயவ்யம்’ இத்யாதி வாக்ய விஷயத்தில், அர்த்த வாதத்திற்கு ஸ்வார்த்தத்தில் தாத்பர்யத்தை ஒத்துக் கொள்வதற்கு அதிக பலமான காரணமொன்றுண்டு என்பது இதனால் சொல்லப்படுகின்றது. ‘ப்ராஹ்மணாய நாவகுரேத’ என்னும் வாக்யம் ‘இதைச் செய்யக்கூடாது’ என்று நிஷேதிக்கின்றது; ‘வாயவ்யம்’ இத்யாதியான வாக்யம் ‘இதைச் செய்’ என்று விதிக்கின்றது. விதேய விரோதி விஷயத்திலேயே நாம் இம்மாதிரி பல ஸாதநத்வத்தை ஸ்தாபிக்கையில் ஸாக்ஷாத் விதேய விஷயத்தில் இம்மாதிரி பல ஸாதநத்வத்தை ஸ்தாபிப்பது கைமுதிக ந்யாய ஸித்தமன்றோ என்பது கருத்து. இது அதைக் காட்டிலும் அந்தரங்

ஸாதநத்வம் பரிகல்ப்யதே? 'ஹிரண்யநிதிமுபவஸதே நிதாய யாசதே க்ருபணம் ஜந:' இதி ந்யாயேந, ப்ரக்ருதஸாமர்த்யாத் ச்ருதயஸ்ச ஸர்வா: ப்ராதாந்யஸாதநத்வமபி நாவகல்பந்தே | ஸ்ரீஸேநா நாதிஷ்டேந விஹிதம் கர்மாணி ஸர்வாணி தத

அநுமாந ஸஹாயத்தால் 'அந்த விதி வாக்யத்தில் விதிக்கப்படும் யாகத்திற்கும் பலஸாதநத்வமுண்டு' என்பதைக் கல்பிக்க வேண்டும்? 'வீட்டுக்குள் ஹிரண்யநிதி புதைத்து வைக்கப்பட்டிருக்க, அதை அநாதரித்து ஒரு லுப்தன் ஒரு க்ருபணனிடம் அல்ப த்ரவ்யத்தை யாசிக்கப் போகிறான்' என்னும் லோகோக்தி ஒன்று வழங்கி வருகின்றது. அந்த உக்தி போலவே இருக்கின்றது நீங்கள் செய்யும் கார்யம். மேலும் ப்ரக்ருதமான "தஸ்ய ச" இத்யாதியான ச்ருதியில் சொல்லப்படும் 'சதயாதநை' என்னும் தண்டனையாகிற பலத்திற்கு, அபகோரணம் ஸாதநம் என்பது, நீங்கள் கல்பிக்கும் 'அத்ருஷ்டம்' என்னும் அபூர்வத்தின் வாயிலாக ஏற்படவில்லை. ச்ருதிகளால் விதிக்கப்படும் கர்மங்களைச் சரிவரச் செய்பவர்களை அநுக்ரஹித்தும், விஹித கர்மங்களை அநுஷ்டியாமல் நிஷித்த கர்மங்களை அநுஷ்டிப்பவர்களை நிக்ரஹித்தும், பரம புருஷனாகிற பகவானே, ஸகல ஸுகங்களையும் துக்கங்களையும் அவரவர்களுக்குக் கொடுக்கின்றான்

கம் என்பது குறிப்பு.

ஹிரண்யநிதிம்... இது ஒரு லோகோக்தி. இவ்விடத்தில் 'நிதி [புதையல்] என்று மாத்ரம் சொல்லாமல், 'ஹிரண்யநிதி' என்னும் பதத்தை ஒரு விசேஷ அபிப்ராயத்தைத் திருவுள்ளத்தில் வைத்துக் கொண்டே ஸ்ரீ பாஷ்யகாரர் ப்ரயோகம் செய்திருக்கிறார். ப்ரக்ருதத்தில், 'ஸகல கர்மங்களுக்கும் பல ப்ரதாதா பரம புருஷன்' என்பதன்றோ ஸ்தாபிக்கப் படுகின்றது? அந்தப் பரம புருஷனைப்பற்றிய உக்திகள் புதையல் போல ச்ருதி வாக்யங்களில் ஏராளமாகக் கிடக்க, அதை அநாதரித்து 'அபூர்வம்' என்று ஒரு அசேதநத்தைப் பல ப்ரதாதாவாகச் சொல்வது, உள்ளே புதையல் கிடக்கையில் வெளியில் ஒரு க்ருபணனிடம் அல்ப த்ரவ்யத்திற்காக யாசிப்பது போல இருக்கின்றது என்பது விவக்ஷிதம். பரம புருஷனுக்கு த்ருஷ்டாந்தமாகக் கேவல நிதியைச் சொல்வதைக் காட்டிலும் ஹிரண்ய நிதியைச் சொல்வதே ரஸவத்தாக இருக்கின்றதன்றோ? ச்ருதியும் "யதா ஹிரண்யநிதிம் நிஹிதமக்ஷேத்ரஜ்ஞா:" இத்யாதியானச் சாந்தோக்ய வாக்யத்தில் ஹிரண்ய நிதியையே பகவானுக்கு த்ருஷ்டாந்தமாகக் கூறியிருக்கின்றது.

சதயாதநா—இவ்விடத்தில் "வாயவ்யம்" இத்யாதியான வாக்யத்தில் காணப்படும் அர்த்த வாதத்திற்கு ஸ்வார்த்தத்தில் தாத்பர்யம் உண்டு என்பதை ஸ்தாபிப்பதற்காக "தஸ்மாத் ப்ராஹ்மணாய" இத்யாதியான வாக்யம் உதாஹரணமாக உதாஹரிக்கப் பட்டது. இப்பொழுது, 'இந்த உதாஹரண வாக்யத்தில் அபகோரணத்திற்கும் சதயாதநைக்கும் ஸாத்ய ஸாதந பாவமானது ஒரு தேவதை வழியாக ஏற்படுகின்றது என்று நாங்கள் ஒத்துக் கொண்டாலன்றோ அதை உதாஹரணமாகக் கூறலாம்? நாங்கள் அப்படி ஒத்துக் கொள்ளாமல், அபூர்வத்தையே கல்பித்து அந்த அபூர்வத்தின் வழியாகவே அந்த ஸாத்ய ஸாதந பாவம் ஏற்படுகின்றது என்று சொல்

நிக்ருஹீதாநி ச கர்மாணி ஸர்வாணி ஸர்வாணி து:கானி ச ஸர்வ ஸர்வாந்தர்யாமி ஸர்வஜ்ஞ: ஸர்வஸக்தி: பரம புருஷ ஏவ ஸங்கல்பயதி |

"ஏஷ ஹ்யேவாநந்தயாதி" "யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நுதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி" "பீஷாஸ்மாத் வாத: பவதே, பீஷோதேதி ஸூர்ய:, பீஷாஸ்மாதக்நிஸ்சேந்த்ரஸ்ச, ம்ருத்யுர் தாவதி பஞ்சம: இதி" "ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஸாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:, ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஸாஸநே கார்கி தததோ மநுஷ்யா: ப்ரஸம்ஸந்தி யஜமாநம் தேவா தர்வீம் பிதரோऽந்வாயத்தா:"

இத்யாத்யநேகவிதா: ச்ருதயஸ்ஸந்தி | யதோக்தம் த்ரமிடபாஷ்யே

"தஸ்யாஜ்ஞயா தாவதி வாயு:, நத்ய: ஸ்ரவந்தி, தேந ச

ரோ? அப்படி அவனே அந்தப்பலங்களை எல்லாம் கொடுக்கிறானென்று "ஏஷ ஹ்யேவாநந்தயாதி" என்பது முதலான அநேக விதங்களான ச்ருதி வாக்யங்கள்

லுகிறோம்' என்னும் ஒரு ஆக்ஷேபத்தைச் சங்கித்துக்கொண்டு அதற்கு ஸமாதாநம் கூறுகிறார். அந்த ஸமாதாநம் என்னவென்றால்—நிஷித்தங்களான கர்மங்களைச் செய்பவனைப் பகவானே நிக்ரஹிக்கிறானென்றும் அவனுக்குத் துக்கங்களை ஸங்கல்பிக்கிறானென்றும் ச்ருதிகளே சொல்லுகின்றன. அது அப்படி ச்ரௌதமாகையால், அதை அநாதரித்து வேறு கல்பனை செய்வது ந்யாய விருத்தம்' என்பதுதான்.

"ஏஷ ஹ்யேவாநந்தயாதி..." [தை.] இது முதலான ச்ருதி வாக்யங்கள், 'பகவானே, புண்ய பாப ரூபங்களான கர்மங்களுக்குப் பலம் கொடுக்கிறான்' என்பதை நிரூபிப்பதற்காகக் கூறப்படுகின்றன. இந்த வாக்யத்தின் பொருள், 'இவனே (இந்தப் பகவானே) ஆநந்தத்தைக் கொடுக்கிறான்' 'ஆநந்தயாதி' என்பது 'ஆநந்தயதி' என்னும் லௌகிக வார்த்தையின் வைதிக ரூபம்.

"யதா ஹ்யேவைஷ ... பவதி" [தை.]—(பரமாத்ம த்யாநத்தில் எப்பொழுது நிரந்தர ஸ்ம்ருதி நிஷ்டையை அடைகிறானோ) அப்பொழுது அவனை விட்டு பயமெல்லாம் போய்விடுகின்றது. "அத தஸ்ய பயம் பவதி"—(எப்பொழுது அந்த த்யாநத்திற்கு விச்சேதம் ஏற்படுகின்றதோ) அப்பொழுது அவனுக்கு ஸகல பயமும் உண்டாகின்றது.

பீஷா—[தை.] இந்தப் பகவானுக்குப் பயந்தே வாயு வீசுகின்றது, ஸூர்யன் உதயமாகின்றது; அக்நி இந்த்ரன் யமன் எல்லாரும் அவனுக்கு பயந்தே தம் தம் கார்யங்களில் ப்ரவ்ருத்திக்கிறார்கள்.

ஏதஸ்ய வா—[ப்ரு.] இந்தப் பகவானுடைய ஆஜ்ஞைக்கு உட்பட்டே ஸூர்ய சந்த்ரர்கள் தம் தம் ஸ்தாநத்தில் தரிக்கப் பட்டவர்களாய் நிற்கிறார்கள். இந்தப் பகவானுடைய ஆஜ்ஞையை நிமித்தமாகக் கொண்டு தாநம் செய்பவர்களை அவர்களுக்கு ப்ரவணராயிருக்கும் மநுஷ்யர்களும், யாகம் பண்ணுகிறவர்களைத் தேவர்களும் பித்ரு கர்மம் செய்பவர்களைப் பித்ருக்களும் புகழ்ந்து பேசுகிறார்கள். 'ப்ரஸாஸநே தததோ மநுஷ்யா: ப்ரஸம்ஸந்தி, ப்ரஸாஸநே யஜமாநம்

க்ருத்ஸ்நஸ்யேச்வரோ ஜகதாமய: ஸ ஏவ சேஷி ஸர்வசித்தம் ஸர்வஜ்ஞ: ”

“தத்ஸங்கல்பநிபந்தநா ஹ்யேதே லோகா ந ச்யவந்தே, நச்யந்தி | ஸ்வாராதநாநுவர்த்திநம் ஜ்ஞாத்வா காருண்யாத் ஸ பகவாந் வர்த்தயேச் ச்ரேயாம்ஸு கர்மஸு”

இதி | பரமபுருஷயாதாத்ம்ய ஜ்ஞாநபூர்வகதது உபாஸநாதிவிஹிதகர்மாநுஷ்டாயிநஸ்தத்ப்ரஸாதாத்தத்ப்ராப்திபர்யந்தாநி ஸர்வஸுகாந்யபயம் ச யதாதிகாரம் பவதி | ததநுவர்த்தகம் உபாஸநாதி விஹிதம் கர்மாகுர்வதோ நிஷித்தாநி ச குர்வதஸ்தந்நிக்ரஹாதேவ தத்ப்ராப்திவிரோதிபூதாந்யபரிமிததுக்காநி பயம் ச பவதி | யதோக்தம் பகவதா

“நியதம் குரு கர்ம த்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண:” [III-8.

இத்யாதிநா க்ருத்ஸ்நம் கர்ம ஜ்ஞாநபூர்வகமநுஷ்டேயம் விதாய,

“மயி ஸர்வாணி கர்மாணி ஸந்ந்யஸ்ய” [III—30.

இதி ஸர்வஸ்ய கர்மண: ஸ்வாராதநதாம் ஸர்வஸ்யாத்மநாம் ஸ்வநியாம்யதாம் ச ப்ரதிபாத்ய

சொல்லவில்லையா? த்ரமிட பாஷ்யத்திலும், ‘அந்தப் பகவானுடைய கட்டளைக்கு அடங்கி வாயு எப்பொழுதும் ஓடிக்கொண்டே இருக்கின்றது; நதிகள் ப்ரவஹிக்கின்றன; ஸமுத்ரங்கள் மதம் பிடித்த ஆனைகள் போல அவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் எல்லைக்கு உட்பட்டே எழும்புகின்றன’ என்றும், ‘அவனுடைய ஸங்கல்பத்திற்கு அடங்கியே இந்த லோகங்களெல்லாம் நழுவி விழாமலும் வெடித்து விடாமலும் இருக்கின்றன. ஸர்வஜ்ஞனாகவும் கர்மங்களில் ஸமர்த்தனாகவுமிருக்கும் அந்தப் பகவானே, தன்து கட்டளைப்படி நடக்கிறவனை அறிந்து, தனது க்ருபையாலே அவனுக்கு ச்ரேயஸ்ஸைக் கொடுக்கிறான்’ என்றும் இந்த விஷயமே சொல்லப்பட்டிருக்கின்றது. பரம புருஷனை உள்ளபடி அறிந்து, அவனால் விதிக்கப்பட்டுள்ள உபாஸநம் முதலிய கர்மங்களைச் சரிவர அநுஷ்டிக்கிறவர்களுக்கு, அவனுடைய அநுக்ரஹத்தாலேயே, அவனை அடைவது வரையிலான ஸகல ஸுகங்களும் அபயமும் அவரவர்களுடைய அதிகாரத்திற்குத் தகுந்தபடி ஸம்பவிக்கின்றன; அப்படி விஹித கர்மங்களைச் செய்யாமலும் நிஷித்த கர்மங்களைச் செய்து கொண்டும் வர்த்திக்குமவர்களுக்கு, அவனுடைய நிக்ரஹத்தாலேயே, அவனை அடையாமலிருப்பதுடன் அளவற்ற துக்கங்களும் பயமும் நேர்கின்றன. பகவான், தனது கீதையில், ‘நீ உனக்கு ஸ்வபாவத்தால் ஏற்பட்டுள்ள கர்மங்களைச்செய். அப்படிச் செய்வதானது, கேவலம் ஜ்ஞானத்துடன் மாத்ரம் இருப்பதைக் காட்டிலும் ச்லாக்யமன்றோ?’ என்பது முதலிய வாக்யங்களால், ஜ்ஞானத்துடன் கூடினவர்களாக இருக்கும் எல்லாரும் அவரவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கர்மங்களைச்செய்ய வேண்டுமென்று விதித்து, ‘ஸகல கர்மங்களையும் என்னிடம் அர்ப்பணம் செய்’ என்னும் வாக்யத்தால், கர்மங்களெல்லாம் தன்னுடைய ஆராதந ரூபங்களென்றும் ஆத்மாக்களெல்லாம் தன்னுடைய நியமநத்திற்கு உட்பட்டவையென்

தேவா: ஸ்தவந்தி, ப்ரஸாதநே த்வீசம் விப்ரா: ஸ்தவந்தி’ என்பது

“யே மே மதமிதம் நித்யமநுதிஷ்டந்தி மாநவா: |
ச்ரத்தாவந்தோऽநஸூயந்தோ முச்யந்தே தேऽபி கர்மபி: ||
யே த்வேததப்யஸூயந்தோ நாநுதிஷ்டந்தி மே மதம் |
ஸர்வஜ்ஞாநவிமூடாம்ஸ்தாந் வித்தி நஷ்டாநசேதஸ: ||”

(III—32—33.)

இதி ஸ்வாஜ்ஞாநுவர்த்திந: ப்ரசஸ்ய விபரீதாந் நிந்தித்வா, புநரபி ஸ்வாஜ்ஞாநநுவர்த்திநாம் ஆஸுரப்ரக்ருதித்வமுக்த்வா அபாயமதமாம் கதிமுக்தா—

“தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் |
க்ஷிபாம்யஜஸ்ரமசுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு ||
ஆஸுரீம் யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி |

றும் சொல்லி, பிறகு ‘எவர்கள் இந்த என்னுடைய மதத்தைத் தவறாது அநுஷ்டிக்கிறார்களோ, எவர்கள் அப்படி அநுஷ்டியா விட்டாலும் இந்தச் சாஸ்த்ரார்த்தத்தில் ச்ரத்தையுடன் கூடினவர்களாய் இருக்கிறார்களோ, எவர்கள் அப்படி ச்ரத்தையை உடைத்தாயிரா விட்டாலும் அந்த அர்த்தத்தில் அஸூயையற்றிருக்கிறார்களோ, இவர்களெல்லாரும் கர்மங்களிலிருந்து விடப்படுகிறார்கள்; எவர்கள் இந்த மதத்தை அநுஷ்டிக்கவில்லையோ, ச்ரத்தையையும் உடைத்தாயிருக்கவில்லையோ, அஸூயை செய்யாமலும் இருக்கவில்லையோ, அவர்கள், ஜ்ஞானங்களெல்லாவற்றிலும் விசேஷித்த மோஹத்தை அடைந்தவர்களாய், புருஷார்த்தத்திற்கு அயோக்யர்களாய், வஸ்துக்களின் உள்ளபடியான ஜ்ஞானமற்றிருக்கிற படியால் சேதனஸற்றவர்களென்று சொல்லத்தகுந்தவர்களாய் இருக்கிறார்களென்று அறி’ என்று தனது கட்டளைப்படி அநுஷ்டிப்பவர்களைப் புகழ்ந்தும் அப்படி அநுஷ்டியாதவர்களை நிந்தித்தும், மறுபடியும், தனது கட்டளைகளுக்கு மீறி நடப்பவர்கள் ஆஸுர ப்ரக்ருதியை உடையவர்களென்று சொல்லி அவர்கள் தாழ்ந்த கதியையே அடைகிறார்களென்றும் சொல்லுகிறார்—‘எவர்கள் என்னிடம் த்வேஷத்தைச் செய்கிறார்களோ அந்த க்ரூர அசுபர்களான நராதமர்களை, ஸம்ஸாரங்களில தள்ளுகிறேன்; அதிலும் எனக்கு அநுகூலமாயிராத ஜந்மங்களிலேயே போடுகிறேன். அவர்கள் அப்படிப்பட்ட ஜந்மத்தை அடைந்து, மறுபடியும் ஒவ்வொரு ஜந்மத்திலும்

அந்வயம். ‘ தர்வீ ’ என்பது பைத்ருக கர்மங்களுக்கு உபலக்ஷணமாக ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றது.

ஸமாநத்வேதாஜ்ஞாநாத்... பூர்வ மீமாம்ஸையில் தேவதாதிகரணம் என்று ஒரு அதிகரணமுண்டு. அதில் கர்மமே, தேவதை ஒன்றையும் அபேக்ஷியாமலே, பலத்தைக் கொடுக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லியிருக்கையில், நாம் எப்படி தேவதை வாயிலாகவே பலம் கிடைக்கின்றது என்று சொல்லக்கூடும்? என்று மீமாம்ஸகர்கள் கேட்கலாம். இதற்கு ஸமாதாநமாவது— ‘அப்படிச் சொல்வது வேதத்திற்கு விருத்தம். ஆகையால் அந்தச் சொற்களை அதிவாதங்களென்றே சொல்லவேண்டும். ஸாமாந்ய ஜநங்களுக்கு [அதாவது—வேதாந்தம் படியாதவர்களுக்கு] கர்மங்களில் ச்ரத்தாதிக்யம் உண்டாவதற்காகவே அம்மாதிரி அதிவாதங்கள் ப்ரவருத்தித் திருக்கின்றனவே தவிர, தேவதை ஒன்றையும் அபேக்ஷி

एतद्बुद्ध्वा बुद्धिमान् स्यात् कृतकृत्यश्च भारत ॥"

इति। (XV—19, 20

"सर्वकर्माण्यपि सदा कुर्वाणो मद्व्यपाश्रयः ।
मत्प्रसादादवाप्नोति शाश्वतं पदमव्ययम् ॥" XVIII—56

इति च ज्ञाननिष्ठानां शाश्वतं पदं प्रोक्तम्। अतः वेदान्तानां कर्मण्यश्रद्धा मा भूदिति देवताधिकरणे अतिवादाः कृताः, कर्मणोऽपि यथा श्रद्धा स्यादिति। सर्वैकशास्त्र्यमिति हि वेदवित्सिद्धान्तः ।

इति व्युत्पत्त्यभाववाद निरासः

விபரீதஜ்ஞாநத்தைப் பெற்றவர்களாய் என்னை ஒருபொழுதும் அடையாமலே அந்தந்த ஜந்மங்களிலிருந்து இன்னும் கீழ்ப்பட்ட கதியையே அடைகிறார்கள்'. 'எவன் ஸகல கர்மங்களையும், 'நானே அவைகளைச் செய்விக்கிறேன்' என்னும் அநுஸந்தாநத்துடன் எப்பொழுதும் செய்து கொண்டு வருகிறானோ, அவன் என்னுடைய அநுக்ரஹத்தால் சாச்வதமான என்னைப் பரிபூர்ணமாக அடைகிறான்' என்று, தனது கட்டளைக்கு உட்பட்டு நடக்குமவர்களுக்குத் தன்னுடைய சாச்வத ப்ராப்தி கிடைக்கின்றதென்றும் சொல்லியிருக்கிறான். பூர்வ மீமாம்ஸையில் தேவதாதிகரணத்தில் கர்மமே பலத்தைக் கொடுக்கின்றது என்று சொல்லியிருப்பதெல்லாம் அதி வாதங்களே. 'வேதாந்தம் அறியாதவர்கள் கர்மங்களில் ச்ரத்தையை இழக்கக்கூடாது; அவைகளிலேயே அவர்களுக்கு ச்ரத்தை அவச்யம் இருத்தல் வேண்டும்' என்றே அம்மாதிரி அதிவாதங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. பூர்வ மீமாம்ஸை உத்தர மீமாம்ஸை இவை இரண்டும் ஒரு சாஸ்த்ரமே என்று வேதம் அறிந்தவர்கள் ஸித்தாந்தம் செய்திருக்கிறார்களன்றோ?

வ்யுத்பத்யபாவ வாதத்தின் நிராஸம்
முற்றிற்று.

யாமலே அந்தக் கர்மங்களே பலத்தைக் கொடுக்கக் கூடியவை என்பது அந்த வாக்யங்களின் தாத்பர்ய மன்று' என்பதே.

सर्वैकं शास्त्र्य्—கீழ் விவரித்திருக்கிறபடி ஏன் நிர்வாஹம் செய்யவேண்டுமென்பதற்கு, இந்த வாக்யம் காரணம் சொல்லுகின்றது. அந்தத் தேவதாதிகரணத்தில் சொல்லப் பட்டிருப்பதை உள்ளபடி எடுத்துக்கொண்டால் அது வேதத்திற்கு விருத்தமாக இருக்கும். வேதத்தின் அர்த்தத்தைச் சரிவர அறிந்தவர்களோ, பூர்வ மீமாம்ஸையும் உத்தர மீமாம்ஸையும் ஒரு சாஸ்த்ரமே என்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள். பரஸ்பரம் விருத்தமாக இருப்பவை ஒரு சாஸ்த்ரமாகச் சொல்லப்பட மாட்டாவாகையால் அவைகளுக்குப் பரஸ்பரம் விரோதமில்லையென்றே சொல்லவேண்டும். அப்படி விரோதமில்லை என்று சொல்வதற்கு நாம் கீழ் விவரித்திருப்பது போலத் தாத்பர்யம் கல்பித்து நிர்வாஹம் செய்வதே மார்க்கம்; ஆகையால் தான் அம்மாதிரி நிர்வாஹம் செய்கின்றோம்' என்பதுதான்.

வ்யுத்பத்யபாவவாத நிரஸநம்
முற்றிற்று

281

ஸம்புடம் 22] MAY 1934 [ஸஞ்சிகை 11

ஸ்ரீ

வேதாந்த தீபிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-JAN 1935
MADRAS

பவ ஸ | சித்திரை மீ

PUBLISHED BY
SRI VAISHNAVA SIDDHANTA SABHA,
MADRAS.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்தம்:—
[வங்கீபுரம் ஸ்ரீ . உப. வாஸுதேவாசார்யர்] ... 299
2. ஆதிகாவ்யமும் மேல்நாட்டாரும்:—
[ஸ்ரீ. உப. வி. எஸ். மாதவாசார்யர், சிரோமணி] ... 305
3. மனமும் மணவிலக்கமும்:—
[ஸ்ரீ. உப. மே. ஸ்ரீ. ராஜகோபாலாசார்யர், ஸ்ரீரங்கம்] ... 310
4. புஸ்தக விமர்சம்:— ... 315
5. கடிதங்கள்:— ... 317
6. ஸம்பாதகீயம்:— ... 320
7 ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி:— ... 13
8. திவ்ய ஸூரி சரிதம்:—
[வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 33
9. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—
[வங்கீபுரம் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர்] ... 377

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி—
ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற ஒரு தமிழ் உரையுடன் கூடியது ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடன் கூடியது] ... ... ரூ 0—8—0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடனும் புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யாநத்துடனும் கூடியது] ... ... ரூ. 0 6 0

(4) ஸ்ரீ வேதாந்த தீபிகை 19, 20, 21 வது ஸம்புடங்கள். ஸம்புடம் 1.க்கு ... ... ரூ. 3 0 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
கோட்ஸ் கார்டென்ஸ்,
மாம்பலம், தேனாம்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.

OFFICE OF THE ... 9-JAN 1935 MADRAS

ஸ்ரீ:
ஶ்ரியை நம:

[illegible]

ஸ்ரீ வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்பு. 22.] பவ ஸூ சித்திரை மீ [ஸஞ்சிகை. 11

ஸ்ரீ:

ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம்.

ஜீவ ஸ்வரூபமும் ஸம்ஸார பந்தமும்

[ஸ்ரீ உப. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்]

சென்ற ஸஞ்சிகையில் ஜீவ ஸ்வரூப ஸம்பந்தங்களாகச் சில ப்ரமாண வாக்யங்கள் கூறப்பட்டன. ஜீவன் ஜ்ஞாதாவாக (அறிவு என்னும் ஒரு தர்மத்தை உடையவனாக) இருக்கிறபடியால், அவனுக்கு ஸ்வாபாவிகமாகக் கர்த்ருத்வமும் உண்டென்றும், ஆனால் அது, இந்த உலகத்தில் தென்படும் கர்த்ருத்வத்தைக் காட்டிலும் விலக்ஷணமென்றும் நிரூபித்துவிட்டு, பிறகு பத்த ஜீவன்களுக்கு ஏற்பட்டுள்ள ஸம்ஸார பந்தத்தைப் பற்றி விசாரிக்கப் புகுந்து, அந்தப் பந்தம் அநாதியென்றும், பகவானுடைய கட்டளைகளை மீறி நடப்பதாலேயே அது மேன்மேல் த்ருடப்படுகிறதென்றும் சொன்னோம். இனி அந்தப் பந்தத்தைப் பற்றிய வேறு சில அம்சங்களை விசாரிப்போம்.

இந்த ஸம்ஸாரபந்த மாகிற தண்டனைக்கு நாம் உட்பட்டிருக்கும் காலத்தில் நமது ஸ்திதி எப்படிப்பட்டதாக இருக்கின்றது என்றால்: முதலில், நமக்கு இயற்கையாயுள்ள ஜ்ஞாநம் நம்மைவிட்டு விலகுகின்றது.

58952

ஜ்ஞாநத்தைக் கொண்டு நாம் ஸர்வத்தையும் உள்ளபடி அறியக்கூடு மோ அந்த ஜ்ஞாநத்தை நாம் இழந்துவிடுகின்றோம்; வஸ்துக்களை உள்ள படி அறிய அசக்தர்களாய், நல்லதைப் பொல்லாததென்றும் பொல்லாததை நல்லதென்றும் ப்ரமிக்கிறோம்; ஒரு காலத்தில் நல்லதாகத் தோன்றுவது மற்றொரு காலத்தில் விபரீதமாகத் தென்படுகின்றது; அநேக விஷயங்க ளைப்பற்றி ஒன்றும் அறியாதவர்களாய்ப் பெரிய இருள் போன்ற அஜ்ஞாநத் தால் மூடப்பட்டு நிற்கின்றோம். நிற்க, உபநிஷத்துக்களில் சொல்லியிருக் கிறபடி இஷ்டப்பட்ட இடங்களுக்கு இஷ்டப்பட்ட ரூபத்துடன் ஸஞ்ச ரிக்கும் யோக்யதை யெல்லாவற்றையும் இழந்து, நமக்கு நம்முடைய கர் மத்தால் ஏற்பட்டுள்ள சரீர மொன்றைத் தொழுக்கட்டை போலச் சுமந்து கொண்டு, நமக்காகக் குறிக்கப்பட்டுள்ள ஸ்வல்ப ப்ரதேசத்தில் மாத்ரம் "குருவில் மிளிர்தந் தாங்கே செல்லிய மெல்லிய லாக்கைக் கிருமி" போல் சுற்றிச் சுற்றி வருகின்றோம். இந்த்ரியங்களென்று சொல்லப்படும் சிறிய த்வாரங்கள் வழியாகச்சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் தமது சாலையின் சுவரில் இருக்கும் சிறிய சாளரங்கள் வழியாக வெளிவஸ்துக்களைப் பார்ப்பது போல், இந்த ப்ரபஞ்ச ஸம்பந்தங்களான சிற்சில விஷயங்களை மாத்ரம் அரை குறையாகவே நாம் அறியும்படி இருக்கின்றது. ஒரு காலத்தில் நாம் மநுஷ்யனாகவும், மற்றொரு காலத்தில் மாடாகவும், மற்றுமொரு காலத் தில் மாட்டைக் காட்டிலும் நிஹீநமான ஜந்மத்திலும் பல பிறப்புக்கள் பிறக் கின்றோம். அந்தந்தப் பிறப்பில் மஹத்தான துக்கங்கள் நேரும்பொழுது மிகவும் பீடிதர்களாகவும், சிற்சில அல்ப ஸுகங்கள் நேரும் பொழுது பேரா நந்தம் நேர்ந்தது போல ஸந்தோஷப்பட்டும், பார்ப்பவர்களால் பரிஹஸிக் கப்படும்படி நடந்து வருகின்றோம். இவ்வளவு கஷ்டங்கள் இருக்கையிலும் இவைகளைக் கஷ்டங்களென்று நாம் கொஞ்சமேனும் அறிகின்றோமில்லை. இதுவும் இந்தத் தண்டனையின் மஹிமையே!

இந்த ஸம்ஸார பந்தத்தில் இரண்டு அவஸ்தைகளுண்டு. பந்தமாகிற இந்தத் தண்டனையை விதிக்கும் பகவான், சில ஸமயங்களில், நாம் மிகவும் மழுங்கி நிற்கும் அறிவை யுடையவர்களாய் அசேதந பதார்த்தங்களுக்கும் நமக்கும் வாசியற எவ்வித வ்யாபாரமு மின்றிக்கே தன்னிடம் லயித்துக் கிடக்கும்படி ஸங்கல்பிக்கிறான். அந்த அவஸ்தையை 'ப்ரளய அவஸ்தை' என்று சொல்வார்கள். வேறு சில ஸமயங்களில், அந்தப் பகவான், நம் முடைய ஹிதத்தைக் கருதி, நமது கர்மாநுகுணமாக ஒருவித ஜ்ஞாநவிகா ஸத்தையும் தேஹம் இந்த்ரியம் முதலியவைகளையும் நமக்குக் கொடுத்து, நாம் அவைகளைக் கொண்டு நமது உஜ்ஜீவந உபாயங்களைத் தேடிக்கொள்ள வேண்டும் என்னும் எண்ணத்துடன் நமக்கு ஸ்ருஷ்டியைச் செய்ய ஸங்கல் பிப்பது முண்டு. இந்த அவஸ்தையை 'ஸ்ருஷ்டி அவஸ்தை' என்று சொல்

வார்கள். இந்த அவஸ்தையில்தான் நமக்குப் பலவித பிறப்பு இறப்புக் கள் நேர்கின்றன. ப்ரளய காலத்தில் நம்முடைய ஜ்ஞாநம் மிகவும் ஸங் குசிதமாய் நாம் நிர்வ்யாபாரர்களாகவே இருக்கிறபடியால் அப்பொழுது நாம் ஸூக்ஷ்ம தசையை அடைந்திருக்கிறோமென்றும், ஸ்ருஷ்டி காலத்தில் கொஞ்சம் விகஸிதமான ஜ்ஞாநத்துடனும் தேஹம் இந்த்ரியம் இவைகளு டனும் ஒருவித நாம ரூபங்களைப் பெற்று வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்திக்கச் சக்தர்களாக இருக்கிறபடியால் அப்பொழுது நாம் ஸ்தூல தசையைப் பெற்றிருக்கிறோமென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லும். இந்த ஸ்ருஷ்டியும் லயமும் எப்பொழுதும் மாறிமாறி வந்துகொண்டே இருக்கும். இது வரை எவ்வளவு ஸ்ருஷ்டியும் எவ்வளவு லயங்களும் ஆகியிருக்கின்றன வென்று ஒருவராலும் சொல்ல முடியாது. பகவத் கீதையில், இந்த உத் பத்தி லயங்களைப் பற்றி விவரிக்குமிடத்தில் பின் வரும் ச்லோகங்களைக் காணலாம்.

"ஸஹஸ்ர யுக பர்யந்தம் அஹர் யத் ப்ரஹ்மணோ விது: |
ராத்ரிம் யுக ஸஹஸ்ராந்தாம் தேஹோராத்ரவிதோ ஜநா: ||
அவ்யக்தாத் வ்யக்தய: ஸர்வா: ப்ரபவந்த்யஹராகமே |
ராத்ர்யாகமே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்த ஸம்ஜ்ஞகே ||
பூதக்ராம: ஸ ஏவாயம் பூத்வா பூத்வா ப்ரலீயதே |
ராத்ர்யாகமேऽவச: பார்த்த ப்ரபவத்யஹராகமே ||

[என்னுடைய ஸங்கல்பத்தால் செய்யப்பட்டுள்ள அஹோ ராத்ர வ்யவஸ் தையை அறிந்தவர்கள், சதுர்முக ப்ரஹ்மாவின் பகல் ஆயிரம் சதுர்யுகம் அளவுள்ளதென்றும், அவனுடைய ராத்ரியும் அந்த அளவு உள்ளதென்றும் சொல்லுகிறார்கள். அவைகளுள் பகல் என்னும் காலம் ஆரம்பிக்கும் பொழுது, இந்த மூன்று லோகங்களுக்கும் உட்பட்டிருக்கும் சேதநாசேதந வஸ்துக்களெல்லாம் சதுர்முக ப்ரஹ்மாவின் தேஹத்திலிருந்து உத்பத்தி யைப் பெறுகின்றன; இரவு ஆரம்பிக்கும்பொழுது அந்த வஸ்துக்களெல் லாம் அந்த ப்ரஹ்மாவின் தேஹத்திலேயே லயத்தை அடைகின்றன. இம் மாதிரி ப்ரஹ்மாவின் ஒவ்வொரு பகலிலும் ப்ரஜைகளின் உத்பத்தியும், ஒவ் வொரு இரவிலும் அவைகளின் லயமும் திரும்பத் திரும்ப நடைபெறுகின் றன]. இவ்விதம் நூறு வர்ஷங்கள் சென்ற பிறகு மஹா ப்ரளயம் என்பது ஸம்பவித்து, அப்பொழுது சதுர்முக ப்ரஹ்மா உள்பட ஸகல வஸ்துக் களும் மூல காரணமாகிற 'தமஸ்' என்னும் வஸ்துவில் லயமடைகின்றன வென்றும், அந்தத் தமஸ்ஸும் கடைசியாகப் பகவானுடன் ஏகீபாவத்தை அடைகின்றது என்றும் உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன. இதனால்,

இரண்டு வித ப்ரளயங்கள் உண்டென்றும், முதலில் சேதநாசேதந வஸ்துக்களெல்லாம் சதுர்முக ப்ரஹ்மாவின் தேஹத்தில் லயமடைந்து பிறகு அங்கிருந்து ஸ்ருஷ்டியைப் பெறுகின்றனவென்றும், அவ்விதம் வெகுகாலம் சென்ற பிறகு ஸாக்ஷாத் பகவானிடத்திலேயே அவை லயத்தைப் பெறுகின்றனவென்றும் சொல்லப்பட்டதாகத் தெரியவருகின்றது. இது ஸ்ருஷ்டி க்ரமத்தை ஒத்ததே. ஸ்ருஷ்டி காலத்தில் பகவான், தனது ஸங்கல்பத்தால் சேதநாசேதந விபாகத்தையும் அசேதநங்களில் பஞ்ச பூதங்கள் வரையிலும் 'ஸமஷ்டி ஸ்ருஷ்டி' என்று சொல்லப்படும் ஸ்ஷ்ருடியைச் செய்து, பிறகு சதுர்முக ப்ரஹ்மாவைக் கொண்டு 'வ்யஷ்டி ஸ்ருஷ்டி' என்று சொல்லப்படும் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியைச் செய்விக்கிறுனுகையால், ப்ரளய காலத்திலும் முதலில் ப்ரஹ்மா வரையில் ஒரு வித லயத்தையும் பிறகு ப்ரஹ்மா உள்படத் தன்னிடத்தில் லயத்தையும் செய்விக்கிறுன் என்பது உபபந்நமே. இந்த ப்ரளயத்தையும் ஸ்ருஷ்டியையும் ஆலோசித்துப் பார்க்குமவர்களுக்கு, ஜீவன்கள் பத்தர்களாக இருக்கும் காலத்தில், நடு ஸமுத்ரத்தில் மலை மலையாக ஒன்றன் பின் ஒன்றுக வரும் அலைகளின் நடுவில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் த்ருணம் போல், இங்குமங்கும் வாரி இறைக்கப்பட்டவர்களாய், வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாமலிருக்கும் கஷ்டங்களை அநுபவிக்கிறுர்கள் என்பது நன்றுக விளங்கும்.

இவ்விடத்தில், ஸகல வஸ்துக்களும் ப்ரளய காலத்தில் தமஸ்ஸில் லயிக்கின்றதென்றும், அந்தத் தமஸ் பரம புருஷனுடன் ஏகீ பாவத்தை அடைகின்றதென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. 'அதில் லயம் என்றுல் என்ன? ஏகீ பாவம் என்றுல் என்ன?' என்பதைப் பற்றிக் கொஞ்சம் விசாரித்தல் வேண்டும். 'லயம்' என்னும் சப்தத்திற்கு 'ஒரு பொருள் தனது பூர்வ அவஸ்தையை விட்டுவிட்டுத் தனது காரணத்துடன் சேர்தல்' என்பது பொருள். உபநிஷத்தில் 'ஆகாசம் என்னும் த்ரவ்யத்திலிருந்து வாயு என்னும் த்ரவ்யம் உண்டாகின்றது' என்று சொல்லப்படுகின்றது. இதில் ஆகாசம் என்பது காரண வஸ்து; வாயு அதன் கார்யம். வாயுவானது தனது வாயு அவஸ்தையை விட்டு விட்டுத் தனது காரணமாகிற ஆகாசத்துடன் ஒன்றுகச் சேர்ந்தால், அப்பொழுது வாயு ஆகாசத்தில் லயமடைந்தது என்று நாம் சொல்லலாம். இது தான் லயம் என்னும் சப்தத்தின் பொருள். லயத்தைச் சொல்லிவரும் ச்ருதிகள்,

"ப்ருதிவ்யப்ஸு ப்ரலீயதே"

என்று ஆரம்பித்துக் கடைசியாக

"தம: பரே தேவ ஏகீபவதி"

என்று முடிக்கிறது. எல்லா விடங்களிலும் 'லீயதே' [லயம் அடைகின்றது] என்று ப்ரயோகம் செய்திருப்பதையும், கடைசியாகத் 'தமஸ்' என்பதைப் பற்றிச் சொல்லுமிடத்தில் மாத்ரம் 'பரே தேவ ஏகீபவதி' [பரதேவதையினிடத்தில் ஏகீ பாவத்தை அடைகின்றது] என்று லயத்தைச் சொல்லாமல் ஏகீபாவத்தைச் சொல்வதையும் கவனித்துப் பார்த்தால், ஏகீ பாவம் என்பது லயம் என்பதைக் காட்டிலும் வேறுபட்டது என்பதே ச்ருதியின் அபிப்ராயம் என்று தெரிகின்றது. நமது ஆசார்யர்கள், 'ஏகீ பாவம்' என்பதால் ஒரு வஸ்து தனது பூர்வாவஸ்தையை விடாமலே தனது காரண வஸ்துவுடன் சேர்ந்திருப்பதே குறிக்கப்படுகின்றது என்று சொல்லியிருக்கிறுர்கள். 'ப்ருதிவீ ஜலத்தில் லயமடைவது போல் தமஸ் பகவானிடத்தில் லயமடையவில்லை; ஆனுல், அந்தத் தமஸ் தனது தமஸ்ஸாகிற அவஸ்தையை விடாமலே, 'இது பகவானுடைய சரீரம்' என்று பகவானைக் காட்டிலும் வேறுபட்டதாகச் சிந்திக்கக்கூடாத அளவு ஒரு ஸூக்ஷ்ம தசையை மாத்ரம் பெற்று அந்த ஸூக்ஷ்மாவஸ்தையுடன் பகவானிடம் ஸம்ஸர்க்கித்து நிற்கின்றது' என்பது அவர்களின் கொள்கை.

இவ்விடத்தில் இன்னும் ஒரு சங்கை ஜநிக்கலாம். அதாவது—'ப்ரளய காலத்தில் ஜீவன்களெல்லாரும் பகவானிடத்தில் ஏகீபாவத்தை அடைகிறபடியால், அப்பொழுது அவர்களெல்லாரும் மோக்ஷத்தை அடைந்தவர்களாகி விடுகிறுர்களோ? என்பதுதான். ப்ரளய காலத்தில் நாம் மோக்ஷத்தை அடைகின்றோம் என்று சொல்வது உபபந்நமாக மாட்டாது. ச்ருதிகளில், நாம் நன்றுகத் தூங்கும் பொழுதெல்லாம் பகவானிடம் போயிருக்கிறேமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அப்பொழுது நாம் மோக்ஷ மடைந்து நிற்கிறேம் என்று சொல்வது உபபந்நமாகுமோ? மோக்ஷமடைந்ததற்கு அடையாளம் என்னவென்றுல், கர்ம பந்தம் நீங்கி அது காரணமாக நமக்கு ஸம்பவித்துள்ள ஜ்ஞாந ஸங்கோசம் விலகுவதே. ப்ரளய காலத்தில் நமது கர்ம பந்தமும் விலகவில்லை; ஜ்ஞாந ஸங்கோசமும் நிவ்ருத்தமாவில்லை. ப்ரளயகாலத்தில் நாம் அதிமாத்ரம் ஸங்குசித ஜ்ஞாநர்களாய் அசேதந வஸ்துக்களுடன் வாசியற ஸூக்ஷ்ம தசையைப் பெற்றிருக்கிறபடியால், நாம் அப்பொழுது பகவானிடம் போயிருக்கிறேம் என்னும் ஜ்ஞாநம் நமக்கு ஸம்பவிக்க ஹேதுவே இல்லை. அந்த ஜ்ஞாநம் நமக்கு ஜநித்தாலன்றே நாம் மோக்ஷாநந்தத்தை அடைந்தோமென்று சொல்லக்கூடும்? நிற்க, மோக்ஷமடைந்தவர்கள் மறுபடியும் ஸம்ஸார பந்தத்தில் அகப்படுகிறுர்கள் என்பது இல்லையென்று உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன. ப்ரளய காலத்தில் பகவானிடத்தில் ஏகீ பாவத்தை அடைந்திருக்கும் ஜீவன்களோ வென்றுல், மறுபடியும் ஸ்ரு

ஷ்டி காலம் வரும்பொழுது தம் தம் கர்மத்திற்குத் தக்கபடி தேஹம் இந்த்ரியம் முதலியவைகளைப் பெற்று ஸம்ஸாரத்தை அடைகிறார்கள். ஆகையால் அவர்களுக்கு மோக்ஷம் வந்துவிட்டது என்று எவ்விதம் சொல்லக்கூடும்? ப்ரளய காலத்தில் நாம் மிகுந்த ஸூக்ஷ்மதசையை அடைந்திருந்த போதிலும், நமது கர்ம பந்தம் நம்மை அப்பொழுது விடவில்லை. கர்ம பந்தம் நீங்காமல் இருக்கையில் மோக்ஷம் வருகின்றது என்று சொல்வது விருத்தமன்றோ? வஸ்து ஸ்திதியைப் பார்த்தால் நாம் எப்பொழுதும் பகவானுடன் சேர்ந்தே இருக்கின்றோம். அவன் எவ்விடத்திலும் நிறைந்திருக்கிறபடியால் நம்மிடமும் அவன் இருக்கிறான். அந்தக் காரணத்தைக் கொண்டு நாம் மோக்ஷத்தை அடைந்துவிட்டோம் என்று சொல்வது சரியாகமாட்டாது. அவன் அப்படி நம்மிடம் இருப்பதை நாம் உணராமலன்றோ இருக்கின்றோம்? பூமியில் புதைத்து வைக்கப்பட்டுள்ள புதையலை அறியாதவர்கள் அந்த நிதி இருக்கும் இடத்தின் மேல் எவ்வளவு காலம் ஸஞ்சரித்தாலும் அந்த நிதியை அவர்கள் அறியாமல் இருக்கிறபடியால் அந்தப் புதையலை அநுபவிக்க அவர்கள் எப்படி அர்ஹர்களாகவில்லையோ அப்படியே நாம் பகவானிருக்குமிடத்திலேயே இருந்தபோதிலும் அந்தப் பகவத் ஸாந்நித்யத்தைப் பூர்ணமாக உணராதவரையில், கேவலம் அந்த இருப்பால் எவ்வித ஆநந்தத்தையும் அநுபவிக்க நாம் அர்ஹர்களாகிறோமில்லை.

“𑌤𑌦𑍍𑌯𑌥𑌾𑌪𑌿 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌨𑌿𑌧𑌿𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑌮𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌉𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑌿 𑌸𑌞𑍍𑌚𑌰𑌨𑍍𑌤𑍋 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌯𑍁𑌰𑍇𑌵𑌮𑍇𑌵𑍇𑌮𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌅𑌹𑌰𑌹𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯 𑌏𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑍃𑌤𑍇𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌢𑌾𑌃”

[பூமிக்குள் வைக்கப்பட்டுள்ள புதையலை, புதையல் வைக்கப்பட்டுள்ள ஸ்தலத்தின் லக்ஷணத்தை அறியாதவர்கள், தாம் அந்தப் புதையல் இருக்குமிடத்தின்மேல் திரும்பத் திரும்ப ஸஞ்சரித்த போதிலும், அதை ஒருகாலும் எப்படி அடைய மாட்டார்களோ, அப்படியே இந்த ப்ரஜைகளெல்லோரும், தமக்குள் அந்தராத்மாவாக நிற்கும் பகவானிடம் எப்பொழுதும் இருந்தபோதிலும் அவனை அடைகிறார்களில்லை. ஏனென்றால் அவர்கள் கர்மத்தால் மூடப்பட்டிருக்கிறார்களன்றோ?] என்பது ச்ருதி வாக்யம்.

இதைப்பற்றிய வேறு விஷயங்களை அடுத்த ஸஞ்சிகையில் விசாரிப்போம்.

ஸ்ரீ:

ஆதிகாவ்யமும் மேல்நாட்டாரும்

[ஸ்ரீ. உப. வி. எஸ். மாதவாசார்யர், சிரோமணி]

உலகத்தில் மனிதர்களுள் ஒருவருடைய அபிப்ராயத்தைப் பிறருக்குத் தெளிவுற அறிவிக்க இன்றியமையாத ஸாதநமானது பாஷையாகும். பாஷைகள் பற்பல, நாட்டில் ப்ரசாரத்திலிருப்பினும், அவைகளுள் ஆர்யபாஷை என்று வழங்கப்படும் ஸம்ஸ்க்ருத மொழியானது ஆஸேது ஹிமாசலம் வரையிலுமுள்ள ஸம்ஸ்க்ருதாபிமாநிகளிடையே வழங்கப்பட்டு வருகிறது. பாஷைகளுக்கு இயற்கையாக அமைந்துள்ள இனிமையை அறியவேண்டுமாகில், அதனைத் தெய்வத் தன்மை வாய்ந்த இவ்வார்ய மொழியிலேயே காணலாம். வெகு காலங்களுக்கு முன்னரே ஸம்ஸ்க்ருத மொழியானது உலகத்தினிடையே ப்ரசாரத்தை அடைந்ததென்பதற்கு நமது வேதங்களே போதிய சான்றாகும். இம்மாதிரியான மஹிமை வாய்ந்த இம்மொழியிலேயே ந்யாயம் வ்யாகரணம் மீமாம்ஸை முதலான சாஸ்த்ரங்களும் அநேக விதமான காவ்ய நாடகங்களும் வரையப்பட்டிருக்கின்றன. இவ்விதமாக இயற்றப்பட்டுள்ள காவ்யங்களில் முதன்மையாக உள்ளது ஸ்ரீமத் ராமாயணமாகும். பொதுவாக ஒவ்வொரு சாஸ்த்ரங்களுக்கும் உத்பத்திக்கு அறிகுறி, வேதங்களில் எங்கேனும் காணப்படுகின்றதா என்பதைத் தெரிந்து கொள்வது ஆராய்ச்சியாளர்களுடைய ஸம்ப்ரதாயமாகும். எனவே மற்றைச் சாஸ்த்ரங்களின் உபக்ரமங்களை எவ்விதமாக நாம் வேதங்களில் காண்கின்றோமோ, அவ்விதமாகவே காவ்யங்களுக்கும் வேதத்தினிடையே உள்ள ஸம்பந்தத்தைக் காணலாம்.

வேதங்களில் முதன்மையாகக் கருதப்படுகின்ற ருக் வேதத்தைப் பரிசீலநம் செய்யுமளவில், ஒவ்வொரு ருக்கும் சந்தோபத்தமாகவும் ரஸவத்தாகவும் காணப்படுகின்றது. ஆலங்காரிகர்களுள் ப்ராசீநர்களாலும் நவீநர்களாலும் நிஷ்கர்ஷிக்கப்பட்ட காவ்ய லக்ஷணங்களை ருக் வேதத்தில் ஸமந்வயம் செய்து பார்க்குமளவில், அவைகள் இந்த லக்ஷணங்களில் கொஞ்சமும் குறைவுபட்டதாகத் தெரியவில்லை. இப்படி வேதத்தில் காவ்ய லக்ஷணங்கள் காணப்படினும், நமது முன்னோர்கள், வேதங்களைக் காவ்யமென்று கூறிவிட்டால் அதனிடையே நம்மவர்களுக்குள்ள பூஜ்யதா புத்தியானது குன்றி விடுமோ என்ற அபிப்ராயத்தினால் அவற்றை வேதங்களென்றே அழைத்து வந்தார்கள். எனவே ருக் ஸம்ஹிதைக்குப் பின்னும் ராமா

யணத்திற்கு முன்னும், காவ்யமாக ஒன்றும் இயற்றப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே லௌகிக காவ்யங்களில், ராமாயணமே முதன்மையாக எழுதப்பட்டதால் இதற்கு ஆதி காவ்யமென்று பெயர் வழங்கப்படுகிறது. அல்லாமலும், வால்மீகி முனிவருக்குப் பின் உண்டான மஹா கவிகளும் ஸ்ரீ ராமனுடைய சரித்ரத்தையே காவ்ய நாடகங்களான தங்களுடைய நூல்களுக்குக் கதா வஸ்துவாக எடுத்துக்கொள்ளுகிறபடியாலும் மேற்கூறிய பெயர் ராமாயணத்திற்குப் பொருந்தும்.

ஸ்ரீமத் ராமாயணமானது, ‘எக்காரணம் பற்றி வரையப்பட்டுள்ளது? அதன் உண்மையான நோக்கமென்ன’ என்கிற விஷயத்தில் நம்மவர்களுக்குள் ஒருவிதமான அபிப்ராயம் இருப்பினும், இதைப்பற்றி மேல் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் எவ்விதமான அபிப்ராயம் கொண்டுள்ளார்கள் என்பதை நாம் கொஞ்சம் தெரிந்துகொள்வது அவசியமாகும். அவைகளைப் பற்றிக் கொஞ்சம் ஆராய்வோம்.

வால்மீகி ருஷியினால் ஸ்ரீ ராமனுடைய சரித்ரமானது ஏழுகாண்டங்களாக வரையப்பட்டுள்ளது. அவைகளுள் பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் ஈருக உள்ள பாகத்தில், ஸ்ரீ ராமனுடைய ஜநநம் முதல் மேல் நடந்தேறிய கதைகள் விஸ்தாரமாக எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றில் கடைசியான உத்தரகாண்டமும், பால காண்டத்தின் முதல் ஐந்து ஸர்க்கங்களும் பிற்காலத்தில் புதிதாக ராமாயணத்தோடு சேர்க்கப்பட்டன வென்று மேல் நாட்டார்கள் அபிப்ராயப்படுகிறார்கள். மேலும், இக் காவ்யத்திற்கு அடிப்படையான க்ரௌஞ்சோபாக்யாநமும், இப்படியே சேர்க்கப்பட்டதுதான் என்பது இவர்களுடைய எண்ணமாகும். அன்றியும் ராமாயணம், முதலில் அல்பாகாரமாகவே எழுதப்பட்டிருந்ததென்பதும், நாளடைவில் அது அபிவ்ருத்தி அடைந்தென்பதும் அவர்களது கொள்கை. இவ்விஷயத்தில் அவர்கள் அநேகவிதமான காரணங்களை எடுத்துக் காட்டுகின்றனர்.

ராமாயணத்திற்கு மூன்றுவிதமான சாகா பேதங்கள் இருந்தன. அவைகளுள் ஒருவகை மேற்குத் திசைகளிலும், இரண்டாவது வங்காளம் முதலிய கீழ்த் திசைகளிலும், மூன்றாவது தென்மேற்கு நாடுகளிலும் இருந்தன. அவைகளில் ஒவ்வொரு கிளையும் மற்றவைகளைக் காட்டிலும் வேறுபட்டுக் காண்கின்றது. பின்னும் ராமாயணமானது, இயற்கையாகக் காண்டங்கள் தோறும் அத்யாயமாகப் பிரிக்கப்பட்டிருந்தன. எனவே இக்காவ்யத்தில் மற்ற மஹா காவ்யங்களுக்குள்ள லக்ஷணங்கள் இருப்பினும், ஸர்க்கபத்தமாக இல்லாவிட்டால் மஹா காவ்யத்வம் ராமாயணத்திற்கு ஏற்படாமல் போய்விடுமோ வென்று நினைத்து அத்யாய ரூபமாக இருந்ததை

ஸர்க்கமாகப் பிரித்து எழுதியுள்ளார்கள். இதற்கு, மஹாகவி பவபூதியினால் இயற்றப்பட்ட உத்தர ராமசரிதம் என்ற நாடகத்தில், லவன் ஓரிடத்தில், ‘ஸா௵ காண்டஸ்ய ஸர்கெ ஸம்ஜ்ஞாயெ யஸ்யாயனோ: ஶ்லோக:’ என்று சொல்லும் வாக்யமானது போதிய ப்ரமாணமாகும். எனவே ராமாயணமானது முதலில் அத்யாய ரூபமாக இருந்து, பின்பு, ஸர்க்கமாகத் திருத்தி அமைக்கப்பட்டதென்பது தெளிவுறத் தெரிகிறது.

மேலும் அஹல்யா சாப விமோசநம் என்ற விடத்தில், இந்த்ரனுக்கும் அஹல்யைக்கும் ஏற்பட்ட ஸம்பந்தத்தை அறிந்த கௌதமர், அஹல்யையைக் கல்லுருவம் அடையும்படி சாபமிட்டதாக லோகத்திலும் ப்ரவாதமானது காணப்படுகின்றது. ராமாயணத்தில் வால்மீகி அஹல்யை கல்லுருவம் அடைந்ததாகச் சொல்லப்படாமலிருக்கும் பொழுதே, மஹாகவி காளிதாஸனும் தன்னுடைய காவ்யத்தில் அஹல்யை கல்லுருவை அடைந்து ராமபிரான் அவ்விடத் தேகுமிடத்து அவனுடைய பாத தூளியின் ஸ்பர்ச மாத்ரத்தால் ஸ்வீய ரூபத்தை அடைந்ததாக எழுதியுள்ளார். உண்மையில் ராமாயணத்தைப் பார்க்கும் பொழுது அஹல்யை கல்லுருவம் கொண்டதாக எழுதுவதற்கு யாதொரு வாக்யங்களும் காணப்படவில்லை.

ஆகவே ராகவன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதாரமாகிறபடியால் அவனுடைய மஹிமையை எடுத்துக் காட்டவே இப்படி வரைந்துள்ளார்கள் என்றும், மற்றும் அநேக விடங்களில் விஷ்ணுவினுடைய மஹிமையை அதிகமாகப் புகழ்வதற்கே புராண ப்ரவசநம் செய்துவந்த அக்காலத்திய புலவர்கள் ஆங்காங்குத் தாமாகவே சிலவற்றைச் சேர்த்திருக்கின்றன ரென்றும் மேல்நாட்டார் அபிப்ராயப்படுகின்றார்கள். இதுகாறும் ராமாயணத்தைப் பற்றிய மேல் நாட்டாருடைய பொதுவான அபிப்ராயத்தை எழுதலானோம். தற்போது அக்ரந்தத்தில் ப்ரதிபாத்யமான விஷயத்தைப் பற்றி விமர்சகர்களுடைய அபிப்ராயத்தை ஆராய்வோம்.

ஸ்ரீராமனுடைய ஜநந காலம் தொட்டு, அவன் அரண்யத்துக்குச் சென்ற வரையிலுள்ள கதா பாகமானது உண்மையானதென்று மேல் நாட்டார்கள் அபிப்ராயப்படுகிறார்கள். மேற்கொண்டு வரையப்பட்டுள்ள கதாபாகத்தைப்பற்றி இவர்களுள் அநேகர் பற்பல அபிப்ராய முள்ளவர்களாகக்காணப்படுகின்றனர். அவர்களுள் சிலர், ஆர்யர் வடக்கே யிருந்து தென்திசை அடைந்ததை (Migration to the South) எடுத்துக் காட்டுவதற்காக ராமாயணமானது வால்மீகியினால் எழுதப்பட்டதென்றும், மற்றும் சிலர், ஆர்யர்களுடைய படிப்பு முதலிய நாகரிகங்களை (Civilization) எடுத்துக் காட்டவே இச்சரித்ரம் ராமாயண ரூபமாக வரையப்பட்டுள்ளதென்றும்

அபிப்ராயப்படுகிறார்கள். இவ்விரு கொள்கைகளும் போதிய காரணங்கள் ஆகமாட்டா என நம்மவர்களுக்கே தெரியும். இதே நோக்க முள்ள மேல் நாட்டாரில் ஒரு சாரார், மேலே சொன்ன இவ்விரு காரணங்களையும் புறக்கணித்துவிட்டு, வேறு விதமான காரணங்களைக் கூறுகின்றனர். அவையாவன:—'வேதங்கள் ஒருகாலத்திலும் ஏற்பட்டனவல்ல; ஒருவரானும் அவை இயற்றப்பட்டவையுமல்ல; அவை அநாதிகாலமாக இருந்து வருகின்றன' என்பதே. இவை நம் இந்துக்களின் கொள்கையு மாகும்; அப்படியிருந்த போதிலும் வேதங்களை ஒரு காலவரையறைக்குக் கட்டுப் படுத்தினது மன்றி, அதிலும் ரிக் வேதமானது முதன்மையானது என்பதும் மேல் நாட்டாரின் துணிபு. எனவே ரிக் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற இந்திரனுக்கும் வ்ருத்ராஸுரனுக்கும் ஏற்பட்டுள்ள சண்டையை ஆதிகவி ராமாயணமாக இயற்றியுள்ளார் என்று இவர் அபிப்ராயப் படுகிறார். இதற்குப் போதிய காரணங்களையும் இவரே எடுத்துக் காட்டியுள்ளார். அவையாவன:— "ஸீதா" என்ற சப்தமானது கலப்பையின் நுனியிலுள்ள ஒரு வித கருவியைக் குறிக்கும் சப்தம். ரிக் ஸம்ஹிதையில் இதே சப்தமானது அநேக விடங்களில் காணப்படுகின்றது. அதே பதமானது ராமாயணத்தில் ஜநகனுடைய புத்ரிக்கு இடப்பட்டிருக்கிறது. பூமியின் கர்ஷண ஸமயத்திலேயே ஸீதையானவள் அகப்பட்டாள் என்ற வ்ருத்தாந்தத்தினால் இந்த ஸம்பந்தமானது தெளிவாகிறது. க்ருஹ்ய ஸூத்ரங்களில், விழுது பயிரிடப் பெற்ற பூமியின் அதிதேவதையாக ஸீதை கொண்டாடப் படுகின்றாள். வர்ஷ தேவதையான பர்ஜந்யன் எனப்படும் இந்த்ரனுடைய பத்நியாகவும் அவள் சொல்லப்படுகிறாள். எனவே ராமாயணத்தில், அந்த இந்த்ரனே ராமனாகவும் வ்ருத்ராஸுரன் ராவணனாகவும் சொல்லப் பட்டிருக்கின்றார்கள். ருக் வேதத்தில் "இந்த்ர சத்ரு" என்ற விசேஷணமானது அளிக்கப்பட்டுள்ளது. அதே பெயரானது ராவணனுடைய புத்ரனான இந்த்ரஜித்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேதத்தில் வ்ருத்ராஸுரன், தேவர்களுடைய பசுக்களை அபஹரித்துச் சென்றான். அம்மாதிரியே ராமாயணத்தில் ராவணன் ஸீதையை அபஹரித்துச் சென்றான். மேலும் தேவாஸுர யுத்தத்தில் வாயு பகவான் இந்த்ரனுக்கு விசேஷமாக உபகரித்துள்ளார் என்று வர்ணிக்கப் பட்டுள்ளது. அம்மாதிரியே ராமாயணத்திலும் வாயு குமாரனான ஹநுமான் ஸ்ரீ ராமனுக்கு விசேஷமான உதவிகளைச் செய்திருக்கிறார். மற்றும் வேதத்தில் "ஸரமா" வென்னும் பெயருள்ள ச்வா வானது வர்ணிக்கப் பட்டிருக்கிறது. அதே பெயருள்ள ஒரு ராக்ஷஸியானவள் ஸீதையை ஆச்வாஸநம் செய்தாள் என்று ராமாயணத்திலும் கூறப்பட்டிருக்கிறது. தற்காலத்திலும் ஒவ்வொரு க்ஷேத்ராவதி ப்ரதேசங்களில் "ஹநு" என்று பெயருள்ள கற்கள் நாடப் பெற்றிருக்கின்

றன. க்ருஷ்டமான க்ஷேத்ரங்களுக்கு அதிதேவதையாக ஸீதை கொண்டாடப் பெற்றாள் என்ற விஷயம் மேலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகையால், ஸீதைக்கும் ஹநுமாருக்குமுள்ள ஸம்பந்தமானது தெளிவுறக் காணப்படுகிறது. எனவே மேல் நாட்டாரின் மற்றையவர்களுடைய அபிப்ராயத்தைக் காட்டிலும் இவருடைய எண்ணமானது மிகவும் மேன்மையுற்று விளங்குகிறது என்னலாம்.

தவிர: ராமாயணத்தின் காலத்தைப்பற்றி இவர்கள் கொள்கைகளையும் எடுத்துக் காட்டுவோம். ஸ்ரீவ்யாஸ முநிவரால் இயற்றப்பட்டுள்ள மஹாபாரதமானது பெரும்பாலும் ராமாயணத்தைப் பின்பற்றி வரையப்பட்டதென்னலாம். ஸ்ரீவால்மீகி, ஸூர்ய வம்சத் தரசர்களுடைய சரித்ரத்தை வர்ணிக்க எடுத்துக்கொண்டார். ஸ்ரீவ்யாஸரோ, சந்த்ர வம்சத்தினரைத் தமது கதா நாயகராகச் சொய்துகொண்டார். ராமாயணத்தில், ப்ரதிபக்ஷிகளான அஸுரர்களோடு ஸ்ரீராமனுடைய யுத்தம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. பாரதத்திலோ, ஸஹோதரர்களுக்குள் யுத்தம் வர்ணிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான காரணங்களைக்கொண்டு ராமாயணத்தைப் பின்பற்றியுள்ளார் ஸ்ரீவ்யாஸர் என்று சொல்லலாம். ஸ்ரீமஹா பாரதத்தில் அதிப்ராசீநமாக வரையப்பட்டுள்ள பாகத்தில் ராமாயணத்தில் உள்ள சில ச்லோகங்கள் அப்படியே காணப்படுகின்றன. மேலும் ஆரண்ய பர்வத்தில் வரையப்பட்டுள்ள ஸ்ரீராமனுடைய சரித்ரமானது, வ்யாஸருக்கு ராமாயணத்திலுள்ள விசேஷமான பரிசயத்தை உறுதிப்படுத்துகிறது.

இம்மாதிரியே புத்தருடைய சரித்ரத்தை ப்ரதிபாதநம் செய்வதற்காக வந்துள்ள பாலி பாஷையில் இயற்றப்பட்ட "ஜாதகமாலை" யென்னும் புஸ்தகத்தில் "தசரத ஜாதகம்" என்ற ஒரு பாகம் காணப்படுகின்றது. அவற்றுள் ராமனுடைய ஆரண்ய வாஸ பர்யந்தமான கதையானது காணப்படுகின்றது. ராமாயண ச்லோகங்களும் சில அதில் வரையப்பட்டிருக்கின்றன. அதிப்ராசீநமான பௌத்த க்ரந்தங்களில் ஆர்யா வ்ருத்தம் காணப்படுகின்றது. ராமாயணத்திலோ இந்த வ்ருத்தம் கொஞ்சமும் காணப்படவில்லை. பின்னும் ராமாயணத்தில் புத்தரையோ அல்லது யவநர்களையோ புகழ்கின்ற பாகமானது, பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதே யொழிய, வால்மீகியால் சொல்லப்பட்டதாகக் கருதப்படக் கூடாது.

ஸ்ரீ வால்மீகியானவர் ராமாயணத்தில் நாலா விடங்களிலும் ப்ரசாரத்தை எடுத்துக் காட்ட வந்தவர், "காந்யகுப்ஜம்" "கௌசாம்பி" முதலிய தேசங்களையே எடுத்துக் காட்டியுள்ளார். ஆனால் கி. மு. 380-ம் வர்ஷத்தில் பௌத்த மதத்தினரான காலாசோகனால் ஸ்தாபிக்கப் பெற்றதான பாடலீபுத்ரத்தை இவர் ப்ரஸ்தாவிக்கவே இல்லை. மேற்கூறிய இக்

காரணங்களைக் கொண்டு ராமாயணமானது, பௌத்தருடைய காலத்திற்கு முன்னரே உண்டானது என்பதில் கொஞ்சமும் ஆக்ஷேபத்திற்கு இடமேற்படவில்லை.

இதுகாறும் ராமாயணத்தைப் பற்றிய மேல் நாட்டாருடைய அபிப்ராயத்தைச் சற்றேறக்குறைய தெளிவாகக் கூறினோம். மேல் நாட்டாருடைய அபிப்ராயங்களை நாம் தெரிந்துகொள்வதினால் நம்மவர்களுக்கு ராமாயணத்தினிடம் உள்ள மர்யாதையும் பக்தியும் கொஞ்சமும் குறைவுபடப் போவதில்லை. இதை நாம் படித்துத் தெரிந்துகொள்வதினாலும் யாதொரு ஹாநியும் ஏற்படாது. தெய்விகமான இவ்வார்ய பாஷையை நம்மவர்களில் அநேகர் புறக்கணித்திருக்க, மேல் நாட்டார்கள் ராமாயணத்தை நன்றாக விமர்சித்துத் தம்முடைய அபிப்ராயங்களைத் தெரியப்படுத்துவதின் மூலமாக இப்பாஷையை அறிந்துகொள்ள ஓர் அரிய ஸந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்பதை நாம் மிகவும் ஸந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

ஸ்ரீ:

மனமும் மணவிலக்கமும்

(திருக்கோட்டியூரடிகள் திருவடித்துகளன் மே. ஸ்ரீ. ராஜகோபாலன் ஸ்ரீரங்கம்.)

முதற் காட்சி

(பராங்குசப் பிராட்டி தம் பூங்காவில் மலர் கொய்கிறாள்)

பிராட்டி:—இவ்வழகிய பூ, தேவன் எம்பெருமானுக்கல்லால் வேறு யாருக்குத் தகும்? புஷ்பத்தின் செவ்வி மாறாதே திருவடியில் சேர்ப்பிக்க வெண்ணிய ஸ்ரீகஜேந்த்ராழ்வானது மனோரத மன்றீடேறவில்லையோ? இன்றெனதாசையும் அப்படியே நிறைவேறுமோ? (பெருமூச்செறிகிறாள்)

(யானையைத் தேடிவந்த)

ஸ்ரீமந் நாராயணன்:—(பிரவேசித்து) நின்றவாறு நில்லா நெஞ்செனும் காட்டானையையும் வசம் செய்ய வல்ல ஆளாந யந்த்ரமாம் எனது தோள்களில் இன்று ஓர் களிறைச் சிக்க வைக்க வேண்டும். (பரிக்ரமித்து) அதோ பராங்குச பிராட்டி தான் கொய்த மலரை மலர்க்கண்களால் நோக்கியவாறு நிற்கிறாள். அவளும் அம்மலரும் எனக்குரிமை. ப்ரேமம் எனும் வாஸனையேற்றப்பெற்ற அப்புஷ்பத்தை விரைவில் ஸ்வீகரிக்கிறேன். (நெருங்குகிறான்) (பிராட்டி) ஸம்ப்ரமத்துடன் பின் வாங்குகிறாள்.)

ஸ்ரீமந் நாராயணன்:—பேதாய் கயலோ உன் கண்கள்? இவ்விடம் ஓர் களிறு வந்ததுண்டோ? அதைப் பிடிக்க யான் வந்தேன். அதைக் காண்பித்தால் கொண்டு செல்வேன்.

பிராட்டி:—ஐயரே, நீர் யார்? காரிகையார் நிறை கார்க்கவோ இவ்வேகாந்த ஸ்தலத்தில் நீர் போந்தது?

ஸ்ரீமந் நாராயணன்:—பெண்ணே. யான் ஓர் யானை கொம்பொசித்து ஓரானை கோள்விடுத்து சீருடையவன்.

பிராட்டி:—இங்கு வேறு யானை வந்ததில்லை. தூர் விநீதரே! யானை தேடப் போந்தவர் கயலையும் கண்களையும் பற்றிப் பிதற்றுவதெதற்கு? அயலார் அறியில் என்னாகும்? இதென்ன வார்த்தை?

ஸ்ரீமந் நாராயணன்:—வேல் கொண்டு "யானையைப் பிடிக்க வந்தவன், இங்கு ஒரு போர்க்கெண்டை வேல் விழி விழிக்க, சித்த ஸ்வாதீந மிழந்தேன். பித்தரென்றும், வின்பழி நங்குடிக்கென்றும், இன்னும் பல் வேறு வார்த்தைகளையும் ஊராரு மயற் சேரியுள்ளாரும் கூறிக் கொண்டு கிடக்கட்டும்.

பிராட்டி:—வன்மமே சொல்லி என்னுடன் நீர் விளையாடுகிறீர். அது கேட்ட என் உடன் பிறந்தார்கள், புண்ய பாபம் அறியாதவர்களாய் தடிபிணக்கு செய்யக் கிளம்புவர். அது கொண்டு நான் அஞ்சுவன். விரைவில் புறப்படும். (கடைக் கண்களால் போகாமலிருக்குமாறு கெஞ்சுகிறாள்)

ஸ்ரீமந் நாராயணன்:—ஆம். நான் ருக்மி என்ற மைத்துனன் ஒருவனுடன் போர் புரிந்திருக்கிறேன். நீ அஞ்ச வேண்டியதில்லை.

பிராட்டி:—ஓ! உருப்பிணி நங்கையின் அணி நெடுந்தோள் புணர்ந்த உம் கள்ளத்தனத்தை நாடறியும். நீர் இங்கிருப்பது என் கன்னிப் பருவத்திற் கவத்யம் விளைவிப்பதாகும்.

ஸ்ரீமந் நாராயணன்:—மங்கைய ரிருக்கும் இடத்திற்குச் செல்பவன் யானல்ல. என் குழலோசை கேட்டோடி வந்த ஆய்ச்சியர் பலருளர் என்பதற்கு யமுனையே ஸாக்ஷி.

பிராட்டி:—புவன ஸுந்தரரே! உமது குணங்களைக் காதுகள் வழியாகப் புகுரவிட்டு இழுத்துக் கொள்ளும் வழக்கம் யாருடையது?.

ஸ்ரீமந் நாராயணன்:—யாம் வலிய வருபவரல்ல காண். நம் திறத்தில் உபகாரமாக ஆக்கவல்ல ஏதேனும் ஒன்றை நாம் எதிர் பார்ப்பதுண்டு. நீயும் புஷ்பத்தைக் கொய்து என்னை ஸ்மரித்த பின் அல்லவோ இவ்விடம் யான் வந்தது.

பிராட்டி:—(லஜ்ஜையுடன் நிற்கிறாள்.)

ஸ்ரீமந் நாராயணன்:—(அதிக உத்ஸாஹத்துடன்) உனது கர ஸ்பர்சத்தால் புதுத் துளிரெடுத்த அவ்வழகிய புஷ்பத்தை என் சென்னியில் சூட்டியானளிக்கும் அந்தண்ணந் துழாயி னின்பத் தேனைப் பருகிக் களிப்பாய். (அவ்வாறு தானே செய்கிறான்)

(நேபத்யத்தில் ஸேனையின் ஆரவாரம். தோழிகள் பிராட்டியைத் தேடிக் கொண்டு பிரவேசிக்கிறார்கள்)

ஸ்ரீமந் நாராயணன்:—பேதாய்! நின்னைப் பிரியேன். பிரியில் தரியேன். உன் தோழிமார்கள் உன்னைத் தேடிக் கொண்டு வருகிறார்கள். நானும் என் ஸேனையைச் சாந்தப் படுத்திவிட்டு விரைவில் வருகிறேன். (செல்கிறான்)

பிராட்டி:—(விசனத்துடன் நிற்கிறாள்)

தோழிகள் (பரிக்ரமித்து):— ஸகியே ஏன் வருந்துகிறாய். உயர் விடமடைந்த உனக்கு இனி என்ன குறை? திருமால் தலைக் கொண்ட உனக்குத் தீவினையேது? வழியில் ஸைன்யங்கள் எதிர்ப் படுமுன் அந்தப்புரம் செல்வோம் வா. (மறைகிறார்கள்)

முதற் காக்ஷி முற்றிற்று.

இரண்டாம் காக்ஷி

(பிராட்டியாரின் திருத் தாயார் சில கிழவிகளுடன் வார்த்தை யாடிக் கொண்டிருக்கிறாள்)

திருத்தாயார்:—தோழிகாள்! அரும் பெற்ற பெண்ணை நம் பராங்குசப் பிராட்டிக்குத் தக்கதோர் வரனை நீங்கள் காட்டவேண்டும். கோல் தேடியோடும் கொடியின் பருவம் நிரம்பப் பெற்றுவிட்டா ளல்லவா?

ப்ராஹ்மீ:—அரசியே! ஸ்வயம்பூவாய், ஹிரண்யகர்ப்பன் என்ற பெயருடையானாய் ஓர் அண்டாதிபதி ஸத்ய லோகத்தில் வஸிக்கிறான். நாலு முகங்களாலும் அஶ்ராந்தனாய் வேத கோஷம் செய்பவன். ப்ரஜாபதியான அவன் உன் மகளுக்குப் பதியாவதில் தடை யில்லை.

ஐந்த்ரீ:—தேவாதிபதியானவன் தனக்கு வாழ்க்கைப்பட்டு உன் மகள் அப்ஸரஸ்கள் புடை சூழ வீற்றிருப்பதை நீர் பார்த்து ஆநந்திக்கவேண்டும். "இந்த்ரா! உன்னிலும் உத்தமன் இல்லையன்றோ" என்று வேதங்களே அவனை ஸ்துதிக்கின்றன.

பாசுபதீ:—ராணியே! அவ் விருவரும் தகுந்தவர்களல்லா. மதுகைடபர்களாலும், ராவணனாலும் நலிவுண்ட அவர்கள் வீர மகளிற் கெப்படி மணாளனாக முடியும்? "ஸர்வ பூதங்களுக்கும் கடவன்," "ஸத்தும் இல்லை அஸத்தும் இல்லை", "சிவன் ஒருவனே இருந்தான்" என்றிப்படி பலவாறாக வேத ப்ரதிபாத்யனான ஸதாசிவனுக்கு உன் மகளை ஸமர்ப்பித்து விடுவாய். புரமொரு மூன்றெரித்து இளந் திங்கள் சூடியுள்ள அன்னான் உன்தன் மகளுக்கேற்றவன்.

மதுரவேணி:—(ப்ரவேசித்து; தனக்குள்) வயதானவர்கள் சிறுமியின் மனோபாவத்தை யறிய வகையின்றி அல்லற்படுகின்றனரே. இத்தகைய துராலோசனையைக் கேட்ட மாத்ரத்தால் என்ன நேருகிறதோ நம் பாவைக்கு? மானிடவர்க்கென்று பேச்சு காதில் பட்டால் வாழமாட்டாத தன்மையாய்த்தே அவள். இக் கிழவிகளும் நம் வார்த்தைகளுக்குச் செவி மடுப்பவர்களல்லரே. அன்று, அம்பூந் தேனிளஞ் சோலையில் விவாஹம் நடந்தேறியதென்று எவ்வாறு இவர்களுக்கு உரைப்பது. (ஆலோசித்து) இவர்களுள் ஒருவரைய நான் போய் இவர்களைத் திருப்பவேண்டும். (பரிக்ரமித்து ப்ரகாசமாய்). தாய் மார்களே! அடியாளது ஆலோசனைக்கும் சிறிது செவி கொடுப்பீர். மேற்கே குட்டநாட்டுத் திருப்புலியூர் என்ற ஓர் திருநகரி யுண்டு. தாமரை மலர் போன்ற முக பாணி பாதாக்ஷிகளை யுடைய கருமா மேனியனை அவ்வூர் மன்னன் மாணிக்ய சைலத்தில் தாமரை ஓடைகள் பூத்தது போலிருப்பான். அன்னைமீர்! நும் மகள் அவன் பேச்சேயாக இருத்தல் பற்றி அவனுக்கு இவளை மணம் முடிப்பது யுக்த மென்றெண்ணுகிறேன்.

திருத்தாயார்:—நங்காய்! அழகியவன் அவன் என்று கூறக் கேட்டோம். நன்று. அணிகலனிருந்தாலன்றோ நம்புனையிழைக்குத் தக்கவனாவான்?

மதுரவாணி:—நீண்முடி, சங்கு, ஆழி, நூல், ஆரம், நூபுராதிகள் தொடக்கமாய் ஸ்வோசிதங்களாய், ஸுகந்தங்களாய், ஸுக ஸ்பர்சங்களாய், சின்மயங்களான ஒப்புயர்வற்ற ஒப்பனைகள் பல அவனுக்குண்டு.

பாசுபதீ:—முப்புரமெறித்த எம் தேவன் போல் வீர்யமுடையவனோ நீ கூறும் மைந்தன்?

மதுரவாணீ:—உலகம் புகழும் படை யேந்தி போர்புக்கு அஸுரரை நாசம் செய்த சதுரனை என் தோழி அஹோராத்ரம் புகழ்ந்து கொண்டிருக்கிறாளே!

ஐந்த்ரீ:—வாடிய பயிர்க்கு மழை பொழிந்து அவைகளுக்குப் புத்துயிரளிக்கும் எம் ஸ்வர்க்க வேந்தன் போன்று உன் வரன் உபகரிக்கும் குணமுடையவன் தானோ?

மதுரவாணீ :—அதுவும் மிக்குண்டிவரிடத்தில். உம் இந்த்ரன் உள்ளிட்ட ஸகல ப்ரபஞ்சத்தையும் ப்ரளயம் வந்தபோது தன் வயிற்றில் வைத்து ரக்ஷித்து, பிறகு உமிழ்ந்து காத்தவன் இவன்தானே!

திருத்தாயார் :—இவனை நாம் அறியோம். நாட்டில் நல்லார் பலருண்டு. வேறொருவனை அந்வேஷித்து அவனுக்குக் கொடுப்பதே செய்வோம்.

மதுரவாணீ :—(பதைத்தவளாய் தனக்குள்) காந்தர்வமான விவாஹத்தை நான் எப்படி வெளியிடுவது? இன்றேல், இப்பேதைகள் வேறு ஸமய பந்தம் செய்து நம் உயிர்த் தோழியை முடிப்பர்களே. (ப்ரகாசமாய்)அன்னைகாள் ! என் தோழியின் உரு சின்னாட்களாக வேற்றுருவாகி வருகிறது. ஆபரணங்களையும் ஆடைகளையும் புதிய முறையில் சாத்திக் கொள்கிறாள். மேல் தேசத்தாரைப் போல் பட்டுடுக்கிறாள். ஸம்ச்லேஷம் வ்ரதமோ என்றஞ்சுகிறேன்.

திருத்தாயார் :— சிறுமியே! அம்மாறுதல் வயதேறியதால் வந்ததாக இருக்காதோ?

மதுரவாணீ:—திருப் புலியூரிலுள்ள தாம்பூலத்தால் வந்த செவ்வி உம் மட நங்கையின் திருவதரத்தில் காணக் கிடைக்கிறது. திருப்புலியூர் நாயனார் திருவருளால் வளர்ந்த கமுகல்லது பிறிதொன்றுக்கு அத்தகைய செவ்வி கிடையாது தாயே!

திருத்தாயார் :—அச்செவ்வியும் மெல்லியலிதழிற்கு ஸ்வாபாவிகமே.

மதுரவாணீ :—ஸ்ரிய:பதியின் திருவருளில் மூழ்கினதற்கு அடையாளம் பலதிருந்த உள. நீரே நேரில் பாரும்.

திருத்தாயார்: —நான் பெற்றெடுத்த பொற்கொடி மேல் ப்ரணயத்துடன் அவன் இருப்பான் என்பதற்கு என்ன ஸாக்ஷி?

மதுரவாணீ :—அவனது ப்ரணயித்வம் கிடக்கட்டும். அவனோட்டை ஸம்பந்தத்தால் வந்த ப்ரணயித்வம் உடைய அவ்வூர் ஸ்தாவரங்களின் இருப்பும் அத்யாச்சர்யமாயிருக்கும். பரந்த இலைகளையுடைய வெற்றிலைக் கொடிகள், பணைத்த பாக்குமரங்களைப் புல்கி உயர்ந்து வளர்ந்து நிற்கும். இந்த இளம் ஸ்தாவர தம்பதிகளுக்கு, புஷ்பங்களாகிய காளாஞ்சிகளையும், இலைகளாகிய ஆலவட்டங்களையும் கொண்டு வாழை மரங்கள் தொண்டு செய்து பலனடைகின்றன அவ்வூரில்.

ப்ராஹ்மீ:—ப்ரஹ்மாவுக்குப் போல் இவனுக்கு ஆசார சுத்தியுண்டோ?

மதுரவாணீ:—அதுவும் உண்டு. செல்வவான்களான வடமொழி மறைவாணர் செய்யும் வேள்விகளில் எழுந்த நெய்யழல்வான் புகை அமரர் நாட்டையும் மறைக்கும் வல்லமை யுடைத்து.

ப்ராஹ்மீ :—அமரர்க்கு மறிவீந்த ப்ரஹ்மாவுக்குப் போல் தத்வஜ்ஞாநம் உண்டோ அவனுக்கு ?

மதுரவாணீ :—அவ்வூர் ஸாமவேதிகளின் காந சப்தமும், வைதிகர்களின் வேதார்த்த விசார கோஷமும் மிக்கெழுந்து கடலோசை செவிப்படாதவாறு தடுத்து விடுகின்றன.

திருத்தாயார் :—இவன் இத்தன்மையான் என்பதை ஒப்பினோம். ஆயினும் பிறரையும் சிந்தை செய்து பார்ப்போம்.

மதுரவாணீ :—தாயே! மற்றொரு உபாயம் எதற்கு? இவள் திருமேனியில் தண்டுழாய் கமழா நிற்கிறது. அப்புலியூரில், இவளை மணக்க வென்றே வந்து நின்ற ஆச்சர்ய புருஷனோடு இவளுக்கு காந்தர்வ மணம் நடந்தேறியது. இது ஸத்யம்.

எல்லாரும் :—அது ஸரி—ஏற்கும் பெரும் புகழ் வானவரீசன் கண்ணன் தனக்கு, ஏற்கும் பெரும் புகழுடையவளே நம் பராங்குசப்பிராட்டி (எல்லாரும் போகிறார்கள்)

இரண்டாவது காக்ஷி
முற்றிற்று.

ஸ்ரீ:

புஸ்தக விமர்சம்.

(1)

அதிகார ஸங்க்ரஹம்:—ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன், தன்னால் செய்யப்பட்டுள்ள ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரத்தின் ஒவ்வொரு அதிகாரத்தின் விஷயத்தையும் பாட்டு ரூபமாக ஸங்க்ரஹித்து, அந்தப் பாட்டுகளை அததன் அதிகாரத்தின் முடிவில் அந்தந்த அதிகாரத்தின் ஒரு பாகமாகச் சேர்த்து அநுக்ரஹித்திருக்கிறார் என்பது ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லோருக்கும் தெரிந்திருக்கலாம். அந்தப் பாட்டுக்களை மாத்ரம் தனியாக எடுத்து அவைகளுக்கு எளிதான தமிழ் நடையில் ஒரு உரையை எழுதி ஸ்ரீ. உ. வே. வி. கே. ராமாநுஜாசார்யர் என்று ப்ரஸித்தரான மஹான் இப்பொழுது இந்தப் புஸ்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறார். ஏற்கெனவே இரண்டு வர்ஷங்களுக்கு முன் இவரே 'ரஹஸ்யத்ரய ஸாரச் சுருக்கு' என்று இதே விஷயமாக ஒரு க்ரந்தத்தை வெளியிட்டிருக்கிறார். ஸம்ஸ்க்ருத ஜ்ஞானமிராத கணக்கற்ற ஸ்ரீ வைஷ்ணவ ஆஸ்திகர்களுக்கு அது மிகவும் உபகாரமாக இருந்து வருகிறது. ஆனால் அதில் இந்தப் பாட்டுக்களாவது இவைகளின் அர்த்தமாவது எழுதப்படவில்லை. தமிழ் உரையுடன் கூடிய இந்தப் பாட்டுக்கள் அடங்கியுள்ள இந்தப் புஸ்தகம் அந்த ஆஸ்திகர்களான அதிகாரிகளுக்கு விசேஷித்த உபகாரத்தைச் செய்யும் என்பதில் ஆக்ஷேபமில்லை. பாட்டுக்களின் அர்த்

தத்தைத் தவிர்த்து, ஒவ்வொரு அதிகாரத்திலும் அதற்கு விஷய ஸங்க்ரஹமும் முன் பின் ஸங்கதிகளும் இதில் சேர்க்கப் பட்டிருக்கின்றன வென்பது இதற்கு ஒரு விசேஷித்த ஏற்றத்தைக் கொடுக்கின்றது.

ஸ்ரீ. உ.வே. ராமாநுஜாசார்யருடைய வேதாந்த விஷயமான ஜ்ஞானத்தைப் பற்றி நாம் பேசப் புகுவது ஒரு விடம்பநமே ஆகும். அவர் ஸதாசார்ய கடாக்ஷம் பெற்றவர்; அதனால் தத்வங்களெல்லாம் எவ்வித சங்கா களங்கங்களுமின்றிக்கே அவருடைய மாநஸில் ப்ரகாசித்துக் கொண்டிருக்கின்றன. ஆகையால் அதைப் பற்றி நாம் குண விமர்சம் செய்வதற்கு ஸர்வ ப்ரகாரத்தாலும் அநர்ஹர்கள். ஆனாலும், அவர் தமது ஜ்ஞானத்தை ஜகத்திற்கு உபயோகப்படும்படி விநியோகிக்கும் ரீதியைப் பற்றி மாத்ரம் நாம் ஒரு வார்த்தை சொல்லத் துணிவோம். எந்த க்ரந்தத்தை எடுத்தாலும் அதன் மர்ம பூதங்களான விஷயங்களை ஒன்று இரண்டு மூன்று என்று பொறுக்கி எண்ணிட்டு ஸாமாந்யர்களாயும் ச்ரத்தை இன்றி நுனிப் புல் மேய்பவர்களாயு முள்ளவர்களின் மாநஸில் கூட அழுந்திப் பதியுமாறு எடுத்து உரைக்கும் ஸாமர்த்யத்தை இவரிடத்தில் கண்டது போல நாம் வேறு ஒருவரிடமும் கண்டோமில்லை. அவரால் எழுதப்பட்டுள்ள ஸ்ரீ பாஷ்ய விவரணம், ஸ்ரீ பாகவத ஸங்க்ரஹம் முதலான ஸகல க்ரந்தங்களிலும் வ்யக்தமாயும் நிச்சேஷமாயும் ஸங்க்ரஹிக்கும் இந்தச் சக்தி விசேஷம் நன்கு ப்ரகாசிக்கின்றது. பரீக்ஷைக்குப் படிக்கும் சிறு பிள்ளைகளுக்குப் போதிப்பது போலவே இவர் போதிப்பதைப் பார்த்து நாம் மிக்க ஆச்சர்யமடைகிறோம். இதுவும் பகவத் கடாக்ஷமே.

(2)

ஸம்ஸ்க்ருத ச்லோக ரூபமாக அமைக்கப் பெற்றுள்ள இரண்டு புஸ்தகங்கள் நாம் வரப்பெற்றோம். அவைகளுள் ஒன்று, ஸ்ரீ அஹோபில மடத்தின் ஆஸ்தானம் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீ ரங்கநாத சடகோபயதீந்த்ர மஹா தேசிகனுடைய வைபவத்தைப்பற்றிப் புகழ்ந்து எழுதப்பட்டுள்ளது. அதில் நூற்றெட்டு ச்லோகங்கள் இருக்கின்றன. அந்தப் புஸ்தகத்திலேயே 'ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்தவம்' என்று ஒரு 'ஸ்தோத்ரமும்' இரண்டாவது பாகமாக வெளியிடப் பட்டிருக்கின்றது. அதில் உபக்ரம சதகமென்றும் உப ப்ருஹ்மண சதகமென்றும் உபஸம்ஹார சதகமென்றும் மூன்று சதகங்கள் தென்படுகின்றன. இவையெல்லாம் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீ கேசவ ஸூரி என்றும் மஹா கவியால் இயற்றப்படவை யென்று நாம் அறிகிறோம். ச்லோகங்களுடைய அர்த்த புஷ்டியையும் ரஸவத்தையையும் சப்த ஸம்பத்தியையும் பார்த்து நாம் மிக்க ஆநந்தத்தை அடைகிறோம். இதன் விலை எவ்வளவு என்பதும் எவ்விடத்திலிருந்து அதைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதும் அந்தப் புஸ்தகத்தில் ஓரிடத்திலும் விளக்கப்படவில்லை. மதிராஸ், திருவல்லிக்கேணி கபீர் அச்சாபீஸில் முத்ரிதமென்று மாத்ரம் தெரிய வருகின்றது.

மற்றொரு புஸ்தகமும் ஸம்ஸ்க்ருத ச்லோக ரூபமே. அதில் 'ஆசார்ய சேகரம்' என்றும் 'யதீந்த்ர குண தர்ப்பணம்' என்றும் 'ஸ்ரீ தேஹளீச ஸ்தந மாலை' என்றும் மூன்று க்ரந்தங்கள் காணப்படுகின்றன. இவை யெல்லாம் ஆவியூர் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் இயற்றப்பட்டவை. இந்த க்ரந்தத்திலும் முதல் க்ரந்தத்திற் போலவே குண புஷ்டி ஏராளமாகக் காணப்படுகின்றது. இதன் விலை அணா 4. இது, திருவல்லிக்கேணி கோபில் அச்சுக்கூடத்தில் பதிக்கப் பெற்றிருக்கின்றது.

ஸ்ரீ:

கடிதங்கள்.

(1)

உப்பிலியப்பன் ஸந்நிதி.

ஸ்ரீ பூமிதேவியின் முகார விந்தம் போன்றதும், நூற்றெட்டுத் திருப்பதிகளிலொன்றாகச் சிறந்து விளங்கி ஒப்பிலா வப்பன் (உப்பிலியப்பன்) கோவில் என்று பிரஸித்திப் பெற்றதுமான திவ்ய தேசத்தின் கண் (8—4—34) ஸ்ரீமுக ௵ பங்குனி௴ 26 ௳ ச்ரவண நக்ஷத்திரங் கூடிய சுபதினத்தில் திருத்தேர் உத்ஸவம் அதி விமரிசையாக நடைபெற்றது. அன்று மாலை 4 மணிக்கு கோவில் திருக்கல்யாண மண்டபத்தில் சேர்ந்த வித்வத் கோஷ்டியில், டிரஸ்டிகளின் கோரிக்கைப்படி நாச்சியார் கோவில் லக்ஷ்மீமந்தரம் ஸ்ரீ உபய வேதாந்த வித்வான் அபிநவ ஸரஸ்வதி வாங்முக ரத்ன கோச குருவர்ய நடாதூர் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி இந்தத் திவ்ய க்ஷேத்ரத்தின் மகிமையைப்பற்றி தாமுடனியற்றிய ச்லோகங்களால்

ஸாநூலி த்ரியோகீஹ்யாதி ஈஸா ஜநா விஷ்ணு
வீதீ விஸ்பூவாணஸ்ரீ: ஸ்ரீஸநஹாவேஶ
ஸாஸீ விஸ்ஹதா ஜிதாஸர்யீஶா ராஜயாதீ ||

என்றபடி பிரஸித்த பரிசுத்தமாய் நிலவளம் நீர்வளம் முதலிய பல வளங்களும் மலியப் பெற்ற வீதிகளுடன் கூடிய திருவிண்ணகரமாம் "வ்யோம புரி" அமராவதியின் வனப்பைவிடச் சிறந்ததாய் விளங்கி,

என்னப்ப னெனக்கா யிகுளா யென்னைப் பெற்றவளாய்
பொன்னப்பன் மணியப்பன் முத்தப்ப னென்னப் பனுமாய்
மின்னொப்பன் மதிள்சூழ்திரு விண்ணகர்ச் சேர்ந்தவப்பன்
தன்னொப்பா ரில்லப்பன் தந்தனன் தனதாள் நிழலே

என்ற திவ்ய ஸூக்திக் கிணங்கியும் பொன்னப்பன் முதலிய பஞ்சவ்யூக நிதர்சக ஸ்வரூபாவிர்ப்பாவ திருநாம யுக்தனுகி "ஷண்ணாம் ரஸாநாம் லவணம் ப்ரதாநம்" என்று சகல ரஸங்களுள் உப்பு முக்கியமாக இருப்பினும் ப்ரம்ம நிஷ்டர்களான யோகிகள் உப்பில்லா வுணவைப் புசிப்பதில் யோகஸித்தியும் ஆரோக்யமு ஏற்படுமென்ற கொள்கையின ராதலின் "யுக்தாஹார விஹாரஸ்ய யோகோ பவதி" எனகீதாசார்யன் பட்டோலைக் கொண்டதற்கனு குணமாக யோகீச்ரவனும் பகவான் தானே யநுஷ்டித்துக் காட்ட இந்த திவ்ய க்ஷேத்ரத்தில் அவதரித்து உப்பில்லாமலே அலவண கல்யாண வெங்கடேசனாக, தளிகைப் பிரஸாதங்களைத் திருவுள்ளம் பற்றி அமுதத்திற்கொப்பான இவ்யாந்நங்களை வழங்கும் போது கைமுத்ய ந்யாயத்தாலே எந்தப் பெருமையைத் தான் பிரஸாதிக்காமல் எழுந்தருளி யிருப்பார் என்பதை பக்தா க்ரேஸரர்கள் உணரக்கூடிய விதயமாய் உப்பிலி யப்பன் ஸந்நிதியில் ஸ்ரீ பூமிதேவி ஸமேதனை எம்பெருமான் பக்தா பீஷ்ட பலப்பிரதனாகத் திருவதாரம் செய்தருளி அனைவரையும்

ஸம்ரக்ஷித்து வருகிற பெருமையையும் பலசுவை பொருந்திய மேற் கோள்களால் விளக்கி, அதிபக்திப் பரவசராய் ஸநாதன தர்மத்தைத் தழுவிய ஆலய வைபவ விஷயங்களுடன் ஸ்ரீ பாகவத சிரோமணிகள் ஆனந்திக்குமாறு உபந்யஸித்த பெருமை புகழக் கூடியது.

உப்பிலியப்பன் ஸந்நிதி,
12—4—1934.

ஒரு பக்தன்.

---

(2)

ஸ்ரீ ஸத்வித்யா பாடசாலை, சைதாப்பேட்டை,

ஆறுவது வார்ஷிக மஹோத்ஸவம்.

(1—4—34)

[ஸநாதன தர்மத்தில் ஊக்கம் குன்றிவரும் இந்நாளில் முக்யமாக ஆங்கிலம் கற்கும் மாணவர்கட்கு வைதிக தர்மத்தில் அபிமானம் குறையாமலிருக்கும் பொருட்டு, அவர்கட்கு மதஸம்பந்தமான விஷயங்களை விளக்கி, நற்குண நற்செய்கைகளைப் புகட்டி, அவர்களை நல்வழிப்படுத்தவேண்டுமென்ற முக்ய நோக்கத்துடன், வைதிக தர்மாபிமானிகள் பலருடைய அபிமதத்திற் கிணங்க, இப்பாடசாலையானது சென்ற 1928 ௵ மார்ச்சு ௴ 23௳ ஸ்ரீரகுநாதபுரம் எனப்பெயர்வாய்ந்த சைதாப்பேட்டையின்கண் திறவப்பெற்று, இப்பொழுது ஆறு ஸம்வத்ஸரங்களாக ஆஸ்திக மஹான்களின் அநுக்ரஹத்தால் ப்ரதி ஸம்வத்ஸரமும் அபிவ்ருத்தியடைந்து, இதுகாறும் நிரவிக்நமாய் நடந்து வருகின்றது. இப்பாடசாலை அளித்துவரும் கல்விபயனை முதியோரும் பெறுவதற்கு அநுகூலமாகச் சென்றவருஷம் முதல் அவர்களுக்கும் இப்பாடசாலையில் தனி வகுப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அதுவும் எம்பெருமான் இன்னருளால் இடையூன்றி இனிது நடைபெற்று வருகின்றது. ப்ரதிதிநமும் காலை 4½ மணி முதல் 6 மணிவரை சிறுவர்க்கும் பெரியோர்க்கும், புருஷஸூக்தம் உபநிஷத், ருத்ரம் முதலிய உபயுக்த வேத பாகங்கள், ஸந்த்யா வந்தநாதி மந்த்ரங்கள், கல்யாண பஞ்சாதிகள், தமிழ் ப்ரபந்தங்கள், ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம், இதர ஸ்தோத்ர பாடங்கள், பஜனை பாடல்கள், முதலியவைகளும், அக்ஷராப்யாஸம் முதல் ஸம்ஸ்க்ருத பாஷையும் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றுடன், தினந்தோறும் மாலை 6½-மணி முதல் 7-மணி வரை, மாணவர்களால் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமாதி பாராயணங்களும், 7-மணி முதல் 8-மணி வரை, முதியோர்களால் வேத பாகங்கள், மந்த்ரங்கள், ஸ்தோத்ரங்கள் முதலியவற்றின் அநுஸந்தாநமும் நடத்தப்பட்டுவருகின்றன.

இடையிடையே மதவிஷயமான உபந்யாஸங்களும் இதிஹாஸ புராண கதா காலக்ஷேபங்களும் நடத்தப்பட்டு வருவதுடன், மாணவர்களின் ஞாநாபிவ்ருத்தியின் பொருட்டு மதஸம்பந்தமான புத்தகங்களும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களும் அடங்கிய புத்தகசாலை யொன்றும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இதற்கும் இதைச் சேர்ந்தவாசகசாலைக்கும் பல க்ரந்த கர்த்தாக்களும் பத்திரிகாசிரியர்களும் தமது ப்ரசுரங்களை இலவசமாக உதவியிருக்கின்றனர்.]

ஷை பாடசாலையின் ஆறுவது வார்ஷிக மஹோத்ஸவம் சென்ற பங்குனி ௴ 19௳ ஞாயிற்றுக்கிழமை (1—4—34) மாலை 4-15 மணிக்குச் சைதாப்பேட்டை ஸ்ரீ ஸௌந்தரீச்வரஸ்வாமி ஸந்நிதியில் நடைபெற்றது. ரிடையர்ட் டிஸ்டிரிக்ட் ஜட்ஜூம் 'தர்ம ராஜ்யா' பத்ராதிபருமானப்ரஹ்மஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் அன்புடன் அக்ராஸநம் வஹித்தனர். அன்னார் பூர்ணகும்பத்துடன் வார்ஷிகமஹோத்ஸவக் கொண்டாட்ட மண்டபத்திற்கு வரவேற்கப்பட்ட பின், பாடசாலைத் துணைத் தலைவரான ஸ்ரீ. உப. ஸுதர்சநாசார்யஸ்வாமி ஸம்ஸ்க்ருதத்தில் அக்ராஸநாதிபதியவர்கட்கு நல் வரவு கூறினர்.

பாடசாலை மாணவர்களால் தெய்வ வணக்கம் நடத்தப்பட்ட பின்னர் அக்ராஸநாதிபதியவர்கள் தமது முன்னுரையில் பாடசாலையின் நோக்கங்களையும் அதன் நடவடிக்கைகளையும் புகழ்ந்து பேசி, நசிகேதஸ், ஸாவித்ரி, இவ்விருவர்களின் உபாக்யாநங்களால் ஆடவர் பெண்டிர் இவ்விருபாலரும் நடந்து கொள்ள வேண்டிய முறையை நன்கு விளக்கி, அத்தகைய நடவடிக்கைகளைப் பயிற்று விப்பதற்கு இளமையே ஏற்ற பருவம் என்பதை வற்புறுத்தி, இதனைப் பின்பற்றி இப்பாடசாலை செய்து வரும் வேலையையும் மிகவும் புகழ்ந்து பாராட்டினர்.

பின்னர் பாடசாலைத் தலைவரான ஸ்ரீமான். ரா- வரதாசாரியர் வருஷாந்த அறிக்கையைப்படிக்க அதன் பின் பாடசாலைமாணவர்களாகிய சிறுவர்களும் முதியோரும் தாம் இவ்வருஷத்தில் கற்றுக்கொண்ட ப்ரபந்தங்கள், ஸ்தோத்ரங்கள், உபநிஷத், கல்யாண பஞ்சாதி, ஸந்த்யாவந்தநாதி மந்த்ரங்கள் முதலியவற்றினின்றும் சிற்சில பாகங்களை அனைவரும் கொண்டாடும்படி கம்பீரமாகவும் தெளிவாகவும் ஓதினர். பிறகு பாடசாலைச் சிறுவர்களின் சங்கீத கச்சேரியொன்று நடைபெற அதன் பின் மாணவர்கள் ஸம்ஸ்க்ருதத்தில் சில நாடக பாகங்களை மிகச்சிறப்பாக நடித்து, ஷை பாஷையில் அபிநயத்துடன் சிற்சில உபந்யாஸங்களும் செய் தனர்.

இவை முடிந்ததும் அக்ராஸநாதிபதியவர்கள் மாணவர்கட்குப் பரிசுகளை வழங்கிப் பின்பு தாம் முன்னுரையில் கூறிய முறைப்படியே பாடசாலை நடத்தப்பட்டு வருவதைச் சிலாகித்து, முக்கியமாக மாணவர்கள் அதிகாலையில் எழுந்து வந்து ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் ஸத்விஷயங்களை அப்யஸித்து வருவது பெரிதும் போற்றத்தக்க விஷயம் என்றும் கூறி, இப்பாடசாலையானது மேன் மேலும் அபிவ்ருத்தியடைவதற்கேற்ற உதவிகளைப்புரிவது இந்நகரவாசிகளின் முக்கிய கடமையாகுமென்பதை வற்புறுத்தித் தமது உபந்யாஸத்தை முடித்தனர்.

பின்னர் பாடசாலாதிகாரிகள் அக்ராஸநாதிபதியவர் கட்கும் ஏனையோர்க்கும் வந்தநோபசாரம் கூற, சுமார் 7½ மணிக்கு ஸம்பாவனை தாம் பூலங்களுடன் கொண்டாட்டம் முடிவு பெற்றது.

சைதாப்பேட்டை
21—4—34.

கார்யதர்சி.

---

(2)

மஹாத்மா காந்திஜீ அவர்கள் ஸமுகத்துக்கு ஓர் அந்தரத் தபால்:—

இப்பவும் தாங்கள் பால்யத்தில் இந்நாட்டை விட்டுக் கப்பல் யாத்ரை செய்து, ஸீமைக்குச் சென்று, அங்கே லண்டன் மாநகரிற் கலாசாலையிற் கல்வி கற்கத் தொடங்கி, லாயர் பரீக்ஷைக்குப் படித்ததுடன் ஆங்கில விவிலிய வேதத்தையும் ஓதி அதன் ரஹஸ்யார்த்தங்களை அறிந்து அவற்றிற் சிலவற்றை அப்யாஸத்திலும் அநுஷ்டானத்திலுங் கொண்டுவந்து, கிறிஸ்தவர்கள் அனைவரும் தங்களைக் கொண்டாடும்படி ப்ரக்யாதி பெற்றிருக்கிறீர்கள். மேலும் ஸத்யாக்ரஹ வ்ரதம் பூண்டு, தாங்களும் தங்கள் சிஷ்ய கோடிகளும் அநேக தடவை சிறை வாஸம் செய்தும், அநேக நாட்கள் உபவாஸம் செய்தும் உலகமெங்கும் புகழ் பெற்றிருக்கிறீர்கள். தற்போது தாங்கள் விவிலிய வேதத்திற் கற்ற சில விஷயங்களைத் தங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன். தயை செய்து செவி கொடுப்பீர்களென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆதியில் வானுலகத்தில் சாத்தன் (Satan) ஸ்வதந்த்ராபிநிவேசத்தினால் கடவுளைப் பகைத்து, அவருடன் போர் புரிந்து அந்நாட்டை விட்டுத் தன் ஸகாக்களுடன் கீழே தள்ளப்பட்டானல்லவா! அப்படித் தள்ளப்பட்ட பிறகும் தான் பிடித்த அந்த ஸ்வதந்த்ரா பிநிவேசத்தை விடாமல் தலைகீழாக எழு நாட்கள் அல்லும் பகலும் ஆகாய யாத்திரை செய்து பாதாள லோகத்தை அடைந்தானல்லவா? அங்கே விழுந்தவன் மூர்ச்சை தெளிந்து தன் ஸகாக்களையும் மூர்ச்சை தெளிவித்து அவர்களுடன் கௌன்ஸில் கூடி, "வானுலகத்தில் அடிமையைத் தொண்டு புரிவதினும் நரகத்தில் ஸ்வயராஜ்யம் புரிவது நலமென்று தேர்ந்தானல்லவா? அந்நியும் தான் கெட்டது போல் பூலோகத்தில் உதிக்கப் போகும் மனித வர்க்கத்தினரையும் கெடுக்க வேண்டுமென்று தீர்மானித்து அத்தீர்மானத்தை நிறைவேற்றச் சாத்தன் பூலோகத்திற்கு யாத்ரை செய்து வந்து யாரும் அறியாதபடி திருடன் போல் "Paradise" என்று சொல்லப்பட்ட நந்தவனத்தையடைந்து அங்கே மனித வர்க்கத்தின் மூலக்கிழங்கில் அந்த ஸ்வதந்த்ராபிநிவேசமான தன் நிர்மூல மந்திரத்தைக் கலந்தானல்லவா? அது முதல் மானிடர் ஜனிக்கும் போதே அந்த ஞானம் ஒவ்வொருவருக்கும் பிறப்புரிமையாக வந்து கொண்டிருக்கிறதல்லவா? நிற்க: இந்த ஸ்வதந்த்ரா பிநிவேசம் பூலோகத்தில் என்னென்ன தீங்கிழைத்திருக்கிறதென்பதைத் தங்களுக்கு உணர்த்த வேண்டுமாயின் கூறுகிறேன் கேளுங்கள்:—இதுவே ஆணுக்கும் பெண்ணுக்கும் ஆகவொட்டாமல் அடித்துப் பிரிவினை வியாஜ்ஜியங்களுக்குக் காரணமாகவிருக்கும் பாப மந்த்ரம். இதுவே ஒரு தாய் வயிற்றிற் பிறந்த ஸகோதரர்களைப் பகைக்கச் செய்து ஐக்கிய குடும்பங்களைப் பிரித்து வைக்கும் அசம்பவ மந்த்ரம். இதுவே ஒரு தேசத்தில் வாழும் பல ஜாதியினரைப் பகைக்கச் செய்து ஸமூக வாழ்க்கையைச் சாக அடிக்கச் செய்யும் சனியன் மந்த்ரம்; இதுவே ஒரு தேசத்தை மற்றொரு தேசத்தோடு கொடுக்கல் வாங்கல் லேவாதேவி செய்ய வொட்டாமல் மறியல் செய்து ஜகத் வியாபாரத்தைத் தடை செய்து நிறுத்தி எல்லோரையும் கௌபீனதாரிகளாக்குவிக்கும் சுடர் மந்த்ரம், இதுவே உலகம் பரிதபிக்க மகா யுத்தத்தை யுண்டாக்கிப் பலகோடி வீர தீரர்களைப் பாதாளத்திற்கனுப்பிய அப்பாமான மந்த்ரம்,

இத்தகைய தீங்குகளை விளைவித்திருக்கும் இந்தத் திருமந்திரத்தைத் தாங்களும் தங்கள் சிஷ்யர்களும், மஹா ஜநங்களுக்கு உபதேசிக்க ப்ரயத்நப்படுவது கூடாது காரியம். இதற்கு எதிர்த்தட்டான மூலமந்த்ரம் யாதென்று உணரத் தாங்கள் எங்கள் ஆசார்ய ஸ்வாமிகளை யடுத்து அனந்தமான தண்டன் சமர்ப்பித்து க்ரமப்படி அவரால் உபதேசம் பெற்று தாங்கள் வெளிப்புறப்படுவீராகில் பகவான் தங்களுக்குத் தரிசனங் கொடுப்பனென்பதற்குத் தடையில்லை. இப்படிக்குத் தாங்கள் இன்னுயிர்த் தோழனும், ஸ்ரீ வைஷ்ணவ கோடிகளின் தாஸாநு தாஸனுமான.

ஸைதாப்பேட்டை
10—4—34

S. கிருஷ்ணமாசாரி,
பி. ஏ., எல். டி.

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ।

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகில ஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்த சரண ஶ்ரவண த்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புகள்

துக்கங்களும் அவைகளின் ஹேது வாகும் பாபங்களும்.

இரண்டொரு மாஸங்களுக்கு முன் கங்காதீரத்திலுள்ள பேஹார் ராஜதானியில் பெரியதொரு உத்பாத ரூபமான பூகம்பம் ஸம்பவித்து, அதனால் அளவற்ற ஜநங்கள் மரணமடைந்ததுடன் ஏராளமான சொத்துக்களும் மீளாத நாச மடைந்ததை எல்லாரும் அறிந்திருக்கலாம். இந்த விபத்தைப் பற்றி மனம் நொந்து மிக்க நிர்வேதத்துடன் பேசி வருங்காலத்தில், மஹாத்மா காந்தி என்பவர், இந்த உத்பாதமானது நாம் செய்து வரும் உத்கடமான பாபத்தின் பலமாகப் பகவானால் ஏற்படுத்தப் பட்டதென்றும், இதை அறிந்து நாம் எல்லாரும் சீக்கிரத்திலேயே அந்தப் பாபத்திலிருந்து நிவ்ருத்திக்கும் பக்ஷத்தில் பகவான் ப்ரீதனாகி நமக்கு ச்ரேயஸ்ஸைச் செய்வானென்றும் பல தடவைகளில் பஹுமுகமாகச் சொல்லி வருகிறார். இது மிகவும் சரியான வார்த்தையே. நாம் செய்யும் கர்மங்களின் பலமாகவே பரம புருஷன் நமக்கு ஸுகங்களையும் துக்கங்களையும்

ஸங்கல்பிக்கிறான் என்பதே நமது சாஸ்த்ரம்: ஜகத் முழுவதும் அவன் ஆதீநமே.

> "பீஷாஸ்மாத்வாத: பவதே-பீஷோதேதி ஸூர்ய:-பீஷாஸ்மா
> தக்நிஶ்சேந்த்ரஶ்ச-ம்ருத்யுர்தாவதி பஞ்சம இதி"

[பகவானுடைய ஆஜ்ஞை அடியாகவே காற்று வீசுகிறது, ஸூர்யன் உதய மடைகிறான், அக்நி இந்த்ரன் ம்ருத்யு முதலானவர்கள் தங்கள் தங்கள் க்ருத்யங்களைச் செய்து வருகிறார்கள்] என்கிறபடி இந்த லோகம் நிற்பதும் நடப்பதும் நசிப்பதும் எல்லாம் பகவானுடைய ஸங்கல்பத்தையே நிபந்தந மாக உடைத்தா யிருக்கின்றது. பகவானால் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு நடப்பவர்களுக்கு, அவனை அடைவது பர்யந்தங்களான ஸகல ஸுகங்களையும் அபயத்தையும் அவரவர்களுடைய அதிகாரத்திற்குத் தகுந் தபடி அவனே கொடுக்கிறானென்றும், அவைகளுக்கு உட்படாமல் மீறி நடப்பவர்களுக்கு ஸகல விதமான துக்கங்களையும் பயத்தையும் அவனே செய்கிறானென்றும், நமது சாஸ்த்ரங்களின் உட்கருத்தை அறிந்துள்ள ஆசார்யர்கள்,

> "விஹித காரிணாம் [illegible]
> [illegible]
> [illegible] [தோ
> [illegible]"

இத்யாதி வாக்யங்களால் விவரித்திருக்கிறார்கள். துஷ்டர்களைத் தண்டிப் பது குணமேயாகையால், ஆஜ்ஞாதிலங்கநம் செய்பவர்களுக்கு இவ்விதம் துக்கங்களைக் கொடுப்பது அவனுக்கு எவ்வித தோஷத்தையும் ஆவஹிக்க மாட்டாது. இப்படி, லோகத்தில் ஸம்பவிக்கும் ஸுகதுக்கங்களெல்லாம், பகவதநுக்ரஹம் பகவந்நிக்ரஹம் இவைகளையே காரணமாக உடைத்தாயி ருக்கிறபடியால், இந்தப் பூகம்பமாகிற பெரிய உத்பாத விஷயமாக மஹாத் மா காந்தி சொல்வது நமது சாஸ்த்ரத்திற்கு ஒத்ததென்றே அதை நாம் ஆமோதிக்கிறோம். ஜகத்தின் நிர்வாஹமாகிற வ்யாபாரத்தின் உண்மையைச் சரிவர அறியாதவர்கள் மாத்ரம் இது விஷயமாக மஹாத்மா காந்தியைத் தூஷிப்பார்களே தவிர, அதை அறிந்தவர்கள் அவரை இது காரணமாகக் கொஞ்சமேனும் தூஷிக்கமாட்டார்கள்.

ஆனால், 'இந்த உத்பாதத்தை விளைவிக்கக்கூடிய என்ன பாபத்தை நாம் செய்து வருகிறோம்? எதன் பலமாகப் பகவான் நமது மீது கோபங் கொண்டு இந்தக் கஷ்டத்தை நமக்கு ஸங்கல்பித்தார்?' என்பதை விவரிக்

குமிடத்தில் மாத்ரம் மஹாத்மா காந்தி தவறி விட்டார் என்றே நாம் சொல் லவேண்டி வருகின்றது. அவர், சில ஜாதியார் விஷயமாக நாம் தீண்டா மையை அக்ரமமாகக் கொண்டாடி வருகின்றோ மென்றும், அதுவே பெரிய பாபமென்றும், அந்தப் பாபத்தின் பலமாகத்தான் பகவான் இந்தக் கஷ்டத்தை ஸங்கல்பித்தானென்றும் சொல்லுகிறார். இது தவறுதலான வார்த்தையே. ஏனென்றால், புண்யம் பாபம் என்பவை சாஸ்த்ரத்திலி ருந்தே அறியக்கூடியவை. சாஸ்த்ரத்தில் நிந்திக்கப் படாததும் அதில் விதிக்கப்பட்டதுமா யிருக்கும் ஒரு அநுஷ்டாநத்தைப் பாபமென்று சொல் வது ப்ரமாணத்திற்கு ஒத்ததாக மாட்டாது. நம்மால் அநுஷ்டிக்கப்பட்டு வரும் தீண்டாமை அப்படிப்பட்ட அநுஷ்டாநங்களுள் ஒன்றாதலால், அதைப் பாபமென்று சொல்வதற்குக் காரணமில்லை. இதை மஹாத்மா காந்தி கொஞ்சம் கவனித்தல் வேண்டும்.

நிற்க, பகவானுடைய ஸங்கல்பம் நமது புத்திக்கு எட்டாத விஷயம் என்பதை நாம் மறக்கக் கூடாது. நாம் செய்துள்ள புண்யங்களும் பாபங் களும் கேவலம் இந்த ஜந்மத்திற்கு மாத்ரம் ஸம்பந்தப் பட்டவையல்ல. ஜந்மாந்தரங்களில் நாம் செய்திருக்கும் கர்மங்களின் பலமாகவும் பகவா னுடைய நிக்ரஹமும் அநுக்ரஹமும் நேர்ந்து, நமக்கு இப்பொழுது ஸுகத் தையும் துக்கத்தையும் கொடுக்கக்கூடும். ஜந்மாந்தர ஜ்ஞாநம் நமக்கு இல்லை யாதலால், நமக்கு நேரும் ஸுக துக்கங்களின் ஹேதுக்களை நாம் விசே ஷித்து அறியப்ரயத்நப்படுவது மௌட்யமேயாகும். இப்பொழுது ஒரு கஷ் டம் நேர்ந்தால், அது இந்த ஜந்மத்திலோ அல்லது பூர்வ ஜந்மங்களிலோ நம்மால் செய்யப்பட்டுள்ள ஏதோ ஒரு பாபத்தின் பலமாக நமக்கு நேர்ந் திருக்கின்றது என்று மாத்ரம் நாம் ஊஹிக்கக் கூடுமே தவிர அதற்கு மேல் எள்ளளவு கூட எட்டிப்பார்க்க நமக்குச் சக்தி இல்லை. பெரியோர்களும் அம் மாதிரியே சொல்லியிருக்கிறார்கள். குருக்ஷேத்ர யுத்தமெல்லாம் முடிந்து, புத்ர சோகத்தாலும் பந்து வியோகத்தாலும் வருந்திக்கொண்டிருந்த த்ருத ராஷ்ட்ரர், விவேகம் மேலிட்ட ஒரு க்ஷணத்தில், பின்வருமாறு ஒரு வாக்யம் சொல்லியிருக்கிறார்.

> "ந ஸ்மராம்யாத்மந: கிஞ்சித் பாபம் ஸஞ்ஜய துஷ்க்ருதம் ।
> யஸ்யேதம் பலமத்யேஹ மயா மூடேந புஜ்யதே ॥
> நூநம் வ்யபக்ருதம் கிஞ்சிந்மயா பூர்வேஷு ஜந்மஸு ।
> யேந மாம் து:கபாகேஷு தாதா கர்மஸு யுக்தவாந் ॥"

[ஹே ஸஞ்சய! இவ்வளவு க்ரூரமான கஷ்ட பலங்களை அநுபவிக்கும் படி இந்த ஜந்மத்தில் நான் ஒரு வித பாபத்தையும் செய்திருப்பதாக எனக்

குத் தெரியவில்லையே; ஆனால் நிச்சயம் பூர்வ ஜந்மங்களில் நான் மஹத்தான பாபத்தைச் செய்திருத்தல் வேண்டும். அப்படிக்கிராவிட்டால் இம்மாதிரி துக்கங்களை எனக்குப் பகவாந் ஸங்கல்பிக்கக் காரணமே இல்லை.] இவ்விதம் ஸஹிப்பதே விவேகிகளான நமக்கு லக்ஷணமாகும்.' பேரார் ராஜதானியில் இப்படிப்பட்டப் பெரிய கஷ்டம் நேர்ந்தால், அது ஏதோ ஒரு பெரிய பாபத்தின் பலமென்று மாத்ரம் நாம் சொல்ல அர்ஹர்கள்; குறிப்பிட்டு 'இந்தப் பாபத்தின் பலமே அது' என்று சொல்வதற்கு ஸர்வ ப்ரகாரத்தாலும்நாம் அநர்ஹர்களே. இது தான் தத்வம்.

* * * * *

கங்கா தீர்த்தத்தின் மஹிமை.

கங்கா தீர்த்தத்திற்கு நம்மால் ஒத்துக்கொள்ளப் பட்டுள்ள அத்ருஷ்ட மஹிமையைத் தவிர்த்து, த்ருஷ்டமாகவும் ஒரு மஹிமை உண்டு என்பதை அநேக பெரியோர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். பாச்சாத்ய பூத சாஸ்த்ரஜ்ஞர்களுட் சிலர், ஸ்வல்ப காலம் முன் கங்கா தீர்த்தத்தைப் பூத சாஸ்த்ர முறைப்படிப் பரிசோதித்துப் பார்த்து, மற்றை தீர்த்தங்களில் காணப்படாத ஒரு குண விசேஷம் அதில் இருப்பதாக நிர்ணயம் செய்தார்கள். ஸாங்க்ராமிக வ்யாதிகளுக்குக் காரணமாயுள்ள க்ருமிகளுள் பல கங்கா தீர்த்த ஸம்பந்தம் பெற்றவுடன் நசித்து விடுகின்றனவாம். ஆகையால் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நாந பாநம் முதலியவைகளைச் செய்துவரும் ஜநங்களுக்கு அந்த ஸாங்க்ராமிக வ்யாதிகள் வரமாட்டாவாம். இது தான் அதன் மஹிமை யென்று அவர்களால் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றது. இப்பொழுது ஸாமாந்ய அநுபவத்திலும் அந்த ஜலத்தின் மஹிமை ப்ரத்யக்ஷமாகத் தெரிகின்றது என்று அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். கல்கத்தாவை விட்டு இங்கிலாந்து சீமைக்குப் புறப்படும் கப்பல்களில், ப்ரயாணிகளின் உபயோகத்திற்காக கல்கத்தாவில் ஹூக்ளி என்று வ்யவஹரிக்கப்படும் கங்கையின் முகத்வாரத்திலிருந்து எடுத்துக்கொண்டு போகப்படும் ஜலம், அந்தக் கப்பல் சீமை போய்ச் சேரும் வரை எவ்வித கெடுதலையும் அடையாமல் சுத்தமாகவே இருந்து வருகின்றதாம். சீமையை விட்டுக் கல்கத்தாவுக்குப் புறப்படும் கப்பல்களில், அங்கிருக்கும் தெம்ஸ் நதியிலிருந்து எடுத்து வரப்படும் ஜலம், அந்தக் கப்பல்களின் பாதி யாத்ரை முடியும் முன்னதாகவே கெட்டுப்போய் உபயோகத்திற்கு அநர்ஹமாகி விடுகின்றதாம். இது ப்ரத்யக்ஷமாகத் தெரிந்ததானதால் இதை ஒருவரும் மறுக்க வொண்ணாது.

இந்த மஹிமைக்கு ஹேது என்ன வென்பதை ஒரு புத்தி சாலியான பாச்சாத்ய பூத சாஸ்த்ரஜ்ஞர் ஸமீப காலத்தில் பரிசோதித்துப் பார்த்தா

ராம். அதன் ஹேது பின் வருமாறு என்று அவர் நிர்ணயித்திருப்பதாகப் பத்ரிகைகளில் ப்ரசுரிக்கப் பட்டிருக்கின்றது. கங்கைக் கரையிலுள்ள காசி முதலிய பட்டணங்களின் அசுத்த ஜலம் முழுவதும் கங்கையில் விழும்படி அந்தந்த இடங்களிலிருக்கும் அதிகாரிகள், ராஜாங்கத்தாருடைய அநுமதியைப் பெற்று, கால்வாய் களைக் கட்டி விட்டிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அது காரணமாகக் கங்கா ப்ரவாஹத்தில் அநேக அசுத்தங்களும் பாதி தக்தமான ம்ருத சரீரங்களும் ஏராளமாக மிதந்து போகின்றன வென்பது காசி முதலான கட்டங்களில் ஸ்நாநம் செய்தவர்களெல்லாருக்கும் தெரியும். அப்படிப்பட்ட அசுத்தங்களின் சேர்க்கையே கங்கா தீர்த்தத்திற்கு, இந்தக் குண விசேஷத்தைக் கொடுக்கின்றது என்பது தான் அவரால் செய்யப்பட்டுள்ள தீர்மானம். இதை நிரூபித்துப்பார்க்கும் பொருட்டு, அந்தச் சாஸ்த்ரஜ்ஞர்சுத்த கங்காஜலத்தை எடுத்து வந்து அதில் அசுத்த வஸ்துக்களைச் சேர்த்து அதை வ்யாதி ஹேதுக்களான க்ருமிகளின் மீது பெருக்கின பொழுது, அந்தக்ருமிகளெல்லாம் நசித்து விட்டனவாம். ஆகையால் க்ருமிகளை நசிப்பிக்கும் யோக்யதை, அசுத்த பதார்த்தங்களின் சேர்க்கையையே காரணமாக உடையது என்று அவர் தர்க்கித்து விட்டார். இந்த அசுத்த வஸ்துவை கங்கா தீர்த்தத்தில் சேர்க்காமல் வேறு தீர்த்தத்தில் சேர்த்து அந்தத் தீர்த்தத்திற்கும் அம்மாதிரி குண விசேஷம் ஏற்படுகின்றதா என்பதை அவர் நிரூபித்துப் பார்க்க வில்லை போலும். லண்டன் நகரத்தின் அசுத்தங்களெல்லாம் தெம்ஸ் நதி ஜலத்துடன் சேரவில்லையோ? ஏன் அதன் ஜலம் கங்கா ஜலம் போல், காலம்ாயும், கெடாமல் இருக்கக் கூடாது? புத்தியில் ஒரு ஆக்ரஹம் ஏற்பட்டு விட்டால் அந்த புத்தி அதனால் கலுஷிதமாகி, ஸாமாந்ய யுத்திகளைக் கூடச் சரிவர அறியத் தவறி விடுகின்றது. மதுபாநம் செய்தவர்களுடைய நர்த்தநத்தை பித்துக்கொண்டவர்கள் பார்த்து ஆநந்தித்தார்கள் என்னும் ரீதியில், இந்தச் சாஸ்த்ரஜ்ஞர்செய்த நிர்ணயத்தை இவரைப் போன்ற மற்றை அநேக புத்திசாலிகள் அளவற்ற உத்ஸாஹத்துடன் ஆமோதிக்கிறார்களாம். ஜநங்களின் மௌட்யத்திற்கு எல்லையே இல்லை.

'[illegible]।

[illegible]॥'

[ஹம்ஸம் போல சுத்த வெளுப்பாயுள்ளச் சங்கத்தை மஞ்சள் வர்ணமாகப் பார்க்கும் காமாலைக் கொண்ட நோயாளி மற்றவர்களுக்கு வைத்யம் செய்வதற்கும் யோக்யராவார்களோ?] அநேக இடங்களில் ராஜாங்கத்தார் சாக்கடை ஜலத்தை பாநார்ஹமான நதிகளில் கொண்டு போய் விட்டு அதனால் நல்ல தீர்த்தத்தை அவர்கள் கெடுத்து விடுகிறார்களே என்று நாம் பல காலங்

களில் சோகித்தது உண்டு. அம்மாதிரி சோகத்திற்கு இனி காரணமில்லை போலத் தோன்றுகின்றது. கலியின் க்ரௌர்யம் பஹுமுகமாக ஆவிர்பவிக்கின்றது. வர்ஜ்ய அவர்ஜ்ய விவேகமின்றிக்கு மனம் தோன்றின படியெல்லாம் உணவுகளை உட்கொள்வதே ஹிதமென்றும், சுத்த அசுத்த வ்யத்யாஸமின்றிக்கே எல்லா ஜநங்களுடன் ஸம்ஸர்க்கம் செய்வதே ஸௌஹார்த்தத்தின் அபிவ்ருத்திக்கு ஹேது வென்றும், ஒருவித நியமுமின்றிக்கே எல்லாரும் எல்லா விதமான விஷய ஸுகங்களையும் அநுபவிப்பதே ந்யாயத்திற்கு ஒத்த தென்றும் உத்கோஷிக்கும் இக்காலத்தில், ஸ்நாந பாநத்திற்காக ஏற்பட்டுள்ள தடாகம் நதீ இவைகளை, மஹா ஜநங்களின் ஆரோக்யத்தை உத்தேசித்து, அவசியம் அசுத்த மலங்களுடன் ஸம்பந்தப் படுத்தல் வேண்டும் என்று ஒரு நிர்ணயம் செய்வது ஆச்சர்யத்திற்குக் காரணமும் ஆகுமோ? நமது மஹர்ஷிகள் 'ஜலத்தில் மூத்ர புரீஷோத்ஸர்க்கம் செய்வது பெரிய பாபம்' என்று எழுதிவைத்திருப்பதெல்லாம் அறியாதவர்களின் வார்த்தையே!

* * * * *

நமது தீபிகை மறுபடியும் உபக்ரமிக்கப் பெற்று ஒரு வருஷம் பூர்த்தி அடையப் போகின்றது. இது விஷயமாகப் பகவானால் கொடுக்கப்பட்டுள்ள உத்ஸாஹத்தை ஆதாரமாகக் கொண்டு, இதன் நிர்வாஹ நமது தீபிகை விஷயமாக ஸம்பவிக்கும் க்லேசங்களொன்றையும் பெரியதாகப் பாராட்டாமல், இதை இது வரை நிர்வஹித்து வந்தோம். இந்தக் கைங்கர்யத்தால் பாகவதர்களுடைய முகோல்லாஸம் ஏற்பட்டதோ இல்லையோ வென்பதற்கு அவர்களே ப்ரமாணம். பலம் எப்படி இருந்த போதிலும், சக்திக்கு வஞ்சனையிராமலும் மனச்சாக்ஷிக்கு விரோதம் வராமல் நடப்பதும் ஒரு குணமே ஆகுமானால், அந்தக் குண க்ரஹணத்திற்கு நாமும் பாத்ரமாகலாம் என்று நாம் எதிர்பார்க்கக் கூடும். ஆனால், நமது ஸுஹ்ருத்துக்கள் நம்மை எவ்வளவு ஆதரிப்பார்களென்று எண்ணி நாம் இந்தக் கைங்கர்யத்தில் இறங்கினோமோ, அதில் ப்ரதி ஆதரவு கூட நமக்கு இதுவரை கிடைக்கவில்லை. ஸுஹ்ருத்துக்களுடைய ஸஹாய மின்றிக்கு தீபிகையை நிர்வஹிப்பது துஸ்ஸாத்யமானதால், இந்தத் தீபிகா நிர்வாஹத்தில் உத்ஸாஹமுள்ள ஆஸ்திகர்களெல்லாரும் இனியாவது தங்களால் இயன்ற மட்டும் ஸஹாயம் செய்வதுடன், தங்களுக்குப் பரிசிதர்களாயுள்ள மற்றை ஆஸ்திகர்களையும் இதில் உதவும்படி ப்ரவ்ருத்திக்குச் செய்வார்களென்று நம்புகிறோம்.

உடைத்தாயிராமல் இருக்கிறவும்), நாராயணோऽபி - (பரப்ரஹ்மமென்று ச்ருதிகளில் ப்ரதிபாதிக்கப்படும்) நாராயணனும், ஸ்வாத்மாநம் - (ஜ்ஞாநாநந்தமயமாயிருக்கும்) தனது ஸ்வரூபத்தை, தவ வீக்ஷணாத் - உன்னுடைய கடாக்ஷத்தாலே. யந்மந்யதே - க்ருதார்த்தமாக நினைக்கிறானன்றோ?

நாராயணனுடைய ஐச்வர்யமே லக்ஷ்மீகடாக்ஷத்தைச் சார்ந்து நிற்கின்றது. என்றால் மற்றவர்களுடைய ஐச்வர்யம் அவளுடைய கடாக்ஷாயத்தம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? என்பது குறிப்பு.

ஐச்வர்யம் - ஈச்வரனாக இருக்கும் தன்மை. அதாவது: மற்றவர்களை நியமிக்கும் யோக்யதை. சதுர்முக ப்ரஹ்மாவின் ஐச்வர்யம் மற்றை இந்த்ரன் முதலானவர்களுடைய ஐச்வர்யத்தைக் காட்டிலும் உயர்ந்தது; ஏனென்றால். ப்ரஹ்ம லோக பர்யந்தம் அவனுடைய ஆளுகைக்கு உட்பட்டதன்றோ? இந்த்ரனுடைய ஐச்வர்யம் ப்ரஹ்மாவின் ஐச்வர்யத்தைக் காட்டிலும் குறைந்ததே. அம்மாதிரியே மற்றைத் தேவதைகளுடைய ஐச்வர்யங்களும் ஓரோர் எல்லைக்கு உட்பட்டவை. இந்த லோகத்தில் காணப்படும் ஐச்வர்யங்களுக்குள்ளும் பரஸ்பரம் தாரதம்யத்தைக் காணலாம். இவை மாத்ரமல்ல; இந்த லோகத்திற் சிலர் சிற்சில கர்மங்களைச் செய்து. அவைகளின் பலமாக இந்த லோகத்திலும் பரலோகத்திலும் சிற்சில ஐச்வர்ய விசேஷங்களைப் பெறக்கூடும். இவைகளையும் தவிர்த்து வேறு ஐச்வர்யங்களுமுண்டு. ஆத்மோபாஸ்தி செய்து. அதனால் ஆத்மாவலோகநம் பெற்று. சில ஐச்வர்ய விசேஷங்களையும் சிலர் பெறக்கூடும்; வேறு சிலர் பகவதுபாஸ்தி செய்து முக்தைச்வர்ய மென்று சொல்லப்படும் மோக்ஷத்தையும் பெறக் கூடும். இந்த ஐச்வர்யங்களெல்லாம் லக்ஷ்மியின் கடாக்ஷத்தாலேயே ஏற்படுகின்றன என்று இவ்விடத்திற் சொல்லப்படுகின்றது. 'ஸாவதிகம்' என்னும் பதத்தின் குறிப்பு இதுவே இப்படிச் சொல்வதற்கு ப்ரமாண முண்டோவென்றால், உண்டு என்று சொல்லலாம். வேதங்கள் இதிஹாஸ புராணங்கள் முதலியவைகளால் பல விடங்களிற் சொல்லப்பட்டுள்ள இந்த அர்த்தத்தை ஸ்ரீ ஆளவந்தார் ஸ்பஷ்டமாக. லக்ஷ்மீ கடாக்ஷமுண்டானால் ஐச்வர்யமுண்டு; அது இல்லையானால் இதுவுமில்லை' என்று

"ஈஷத்த்வத்கருணாநிரீக்ஷணஸுதாஸந்துக்ஷணாத்ரக்ஷ்யதே
நஷ்டம் ப்ராக்ததலாபதஸ்த்ரிபுவநம் ஸம்ப்ரத்யநந்தோதயம் ।
ச்ரேயோ ந ஹ்யரவிந்தலோசநமந:காந்தாப்ரஸாதாத்ருதே
ஸம்ஸ்ருத்யக்ஷரவைஷ்ணவாத்வஸு ந்ருணாம் ஸம்பாவ்யதே கர்ஹிசித் ॥"

என்னும் ச்லோகத்தில் விளக்கியிருக்கிறார். ஸம்ஸார மார்க்கமாகிற ப்ராக்ருத அநுபவத்திலோ. அக்ஷர மார்க்கமென்று சொல்லப்படும் ஆத்மாநுபவத்திலோ, வைஷ்ணவ மார்க்கமாகிற மோக்ஷத்திலோ. எவ்விடத்தில் மநுஷ்யர்களிடத்தில் ஐச்வர்யம் காணப்பட்டபோதிலும். அந்த ஐச்வர்ய மெல்லாம் லக்ஷ்மீ கடாக்ஷத்தாலேயே உண்டாகின்றது என்பது இந்த ச்லோகத்தின் அர்த்தம். 'ந்ருணாம்' [மநுஷ்யர்களுடைய] என்று மநுஷ்யர்களுடைய ஐச்வர்யத்தைப்பற்றி மாத்ரம் ஸ்ரீ ஆளவந்தார் இம்மாதிரி

ஸௌந்தர்யலாவண்யயோ -
ரூபவம் யத்து ஹி மங்களம் கிமபி யல்லோகே ஸதித்யுச்யதே।
தத்ஸர்வம் த்வதீநமேவ யததஸ் ஸ்ரீரித்யபேதேந வா
யத்வா ஸ்ரீமதிதீத்ருசேந வசஸா தேவி ப்ரதாமச்னுதே॥ (எ)

பேசியிருந்தபோதிலும், இது தேவர்கள் விஷயத்திலும் ஸ்ரீமந் நாராயணன் விஷயத்திலும் அந்வயிக்கும் என்பதே அவருடைய திருவுள்ளம் என்பதை ஸ்ரீ கூரேசன் இந்த ச்லோகத்தால் விவரித்திருக்கிறார் என்று நாம் அறியவேண்டும். இவருக்குப் பின் வந்த ஸ்ரீ பராசர பட்டர் இவரைக் காட்டிலும் ஒருபடி அதிகமாகப் புகழ்ந்து

"அபாங்கா பூயாம்ஸோ யதுபரி பரம் ப்ரஹ்ம தத் அபூத்"

என்னும் ச்லோகத்தில் பேசுகிறார். 'ஏராளமான லக்ஷ்மீ கடாக்ஷம் பெற்ற வஸ்து பர ப்ரஹ்மமாகவும், இரண்டு மூன்று கடாக்ஷங்களை மாத்ரம் பெற்றவை இந்த்ரன் முதலான தேவதைகளாகவும் ஆயின' என்பது இதன் அர்த்தம். இவையெல்லாம் கீழ் விவரித்திருக்கிறபடி லக்ஷ்மியின் மஹிமையின் பெருமையை ஸூசிப்பிக்கும் ஸ்வல்ப அத்யுக்திகளென்றே க்ரஹிக்தல் வேண்டும். இவ்விடத்தில் ஸ்ரீ கூரேசன் செய்துள்ள பத ப்ரயோகங்களும் கொஞ்சம் கவனிக்கத் தக்கவை. 'தவ ஸங்க்ஷணாந்நாராயணஸ் ஸ்வாத்மாநம் மந்யதே ஸ்ரீமந்தம் மந்யதே' [உன்னுடைய கடாக்ஷத்தால் நாராயணன் தன்னைத் தந்யனாக நினைத்துக் கொள்ளுகிறான்] என்று மாத்ரம் அவர் புகழ்ந்து பேசியிருக்கிறாரே தவிர 'தவ ஸங்க்ஷணாந்நாராயணோ தந்ய: அபூத்' [உன்னுடைய கடாக்ஷத்தால் நாராயணன் தந்யனானான்] என்று சொல்லவில்லை. நாராயணனுடைய புத்திப்படி மாத்ரம் தந்யதை ஸம்பவித்தது என்பது அவருக்கு விவக்ஷிதம். பட்டரோ வென்றால் 'பரம் ப்ரஹ்ம தத் அபூத்' [பர ப்ரஹ்மத்திற்குப் பர ப்ரஹ்மத்வம் ஏற்பட்டது முழுவதும் லக்ஷ்மீ கடாக்ஷங்களின் மஹிமையாலேயே] என்று அதிகமாகவே சொல்லுகிறார்.

7. கீழ் ச்லோகத்தில், ஸ்ரீமந் நாராயணனுடைய ஐச்வர்யமுள்பட ஸகல ஐச்வர்யமும் லக்ஷ்மியின் கடாக்ஷங்களைச் சார்ந்தே நிற்கின்றது என்று புகழ்ந்து பேசப்பட்டது. இந்த ச்லோகத்தில், 'அந்த ஐச்வர்யம் மாத்ரம் அப்படி அவளுடைய கடாக்ஷத்தைச் சார்ந்து நிற்கின்றதென்பதில்லை; அந்த ஐச்வர்யம் போலவே மற்றை மங்களங்களான ஸகல மஹிமைகளும் அவளுடைய கடாக்ஷாதீநங்களே' என்று சொல்லுகிறார். அதாவது—லக்ஷ்மி, இரண்டு விபூதிகளுக்கும் 'சேஷி' என்று சொன்னதாயிற்று. இந்த சலோகத்திற் செய்யப்படும் உபபாதநம் என்னவென்றால்:— 'லோகத்தில் ஒருவன் தந தாந்ய ஸம்ருத்தனாக இருந்தால் அவனை ஸ்ரீமாந் என்று சொல்வதை நாம் பார்க்கிறோம்; ஜ்ஞாநம், சக்தி, பலம், வீர்யம், தேஜஸ், ரூபம் முதலிய அம்சங்களுள் எதில் உத்கர்ஷம் தென்பட்டாலும் அதையும் அதுதன் 'ஸ்ரீ' என்று வ்யவஹரிக்கிறோம். ஸ்ரீ என்னும் சப்தத்தால் ஸாமாந்யமாக ஸகலவித சோபையும் குறிக்கப்படுகின்றது. இப்படி ஸ்ரீ சப்தத்தால் இவையெல்லாவற்றையும் குறிப்பதானது, இவையெல்லாம் அந்த ஸ்ரீயாகிற லக்ஷ்மியின் கடாக்ஷாதீநம் என்பதைக் காரணமாகக் கொண்டதன்றோ?' என்பதுதான்.

தேவி த்வந்மஹிமாவதிர் ந ஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே
யத்யப்யேவமதாபி நைவ யுவயோஸ் ஸர்வஜ்ஞதா ஹீயதே।
யந்நாஸ்த்யேவ ததஜ்ஞதாமநுகுணாம் ஸர்வஜ்ஞதாயா விது: -
வ்யோமாம்போஜமிதந்தயா கில விதந் ப்ராந்தோயமித்யுச்யதே॥ (அ)

[பதவுரை] லோகே - லோகத்தில், அசேஷவஸ்துஷு - ஸமஸ்தமான சேதந வஸ்துக்களிலும், யதைச்வர்யம் - எந்த ஐச்வர்யமானது, விதிதம் - காணப்படுகின்றதோ, யத் - எந்த, ஸௌந்தர்யலாவண்யயோ ரூபவம் - ஸௌந்தர்யம் லாவண்யம் இவைகளின் ரூபமானது, மங்களம் ஹி - மங்களமென்று ப்ரஸித்தி பெற்றிருக்கின்றதோ, யத் கிமபி - எந்த வஸ்துவானது, ஸதிதி - நல்லதென்று, உச்யதே - சொல்லப்படுகின்றதோ, தத்ஸர்வம் - அதெல்லாம், யத: - எந்தக் காரணத்தால், த்வதீநமேவ - உன்னைச்சார்ந்தே நிற்கின்றதோ, அத: - அந்தக் காரணத்தாலேயே, (தத்ஸர்வம் - அதெல்லாம்), ஸ்ரீரிதி - ஸ்ரீ என்று, அபேதேந வா - அபேதமாகவோ, யத்வா - அல்லது, ஸ்ரீமதிதி - ஸ்ரீயுடன் கூடியதென்னும், ஈத்ருசேந வசஸா வா - இம்மாதிரியான சப்தத்தாலேயோ, தேவி - ஹே தேவி, ப்ரதாம் - ப்ரஸித்தியை, அச்னுதே - அடைகின்றது.

அசேஷவஸ்துஷு - ஐச்வர்யம் (தனது நியமநத்திற்கு உட்பட்ட சில வஸ்துக்களை உடைத்தாயிருக்கும் தன்மை) என்பது சேதந வஸ்துக்களுக்கு மாத்ரமே பொருந்துமாகையால், இவ்விடத்தில் 'ஸகல சேதந வஸ்துக்களிடம் காணப்படும் ஐச்வர்யம்' என்று விசேஷிக்கப்பட்டிருக்கிறது. அசேதந வஸ்துக்களுக்கு ஐச்வர்யம் (நியமிக்கும் தன்மை) பொருந்தமாட்டாதாகையால் அவை இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப்படவில்லை.

ஸௌந்தர்யலாவண்யயோ: - அவயவ சோபையை ஸௌந்தர்யமென்றும், ஸமுதாய சோபையை லாவண்யமென்றும் சொல்வார்கள்.

ஸத் - உத்கர்ஷமானது [ஏற்றமானது] கெட்டவிஷயங்களிலும் ஸம்பவிக்குமாதலால், அப்படிப்பட்ட ஏற்றத்தை விலக்குவதற்காகவே 'ஸத்' [நல்லது] என்று சொல்லப்படுகின்றது. 'ஸத்' என்னும் சப்தத்திற்கு 'நல்லது' என்னும் பொருளும் உண்டு.

அபேதேந வா - தந ஸ்ரீ, தாந்ய ஸ்ரீ, ஸந்தாந ஸ்ரீ, ரூப ஸ்ரீ இவ்வாறாக அதுதன் பெருமையே, அந்தந்த ஸ்ரீ என்று எவ்வித பேதமுமின்றிக் பேசப்படுவது உண்டு. 'ஸ்ரீ' என்பதால் 'சோபை' என்னும் ஸாமாந்ய அர்த்தத்தை அவலம்பித்து 'ஒருவனுடைய ரூபம் ஸ்ரீமத்தாக [சோபையுடன் கூடினதாக] இருக்கின்றது' என்று இம்மாதிரி பேதித்தும் பேசுவது உண்டு. இவை இரண்டும் இவ்விடத்தில் நிர்த்தேசிக்கப்பட்டிருக்கின்றன. 'ஸகல வித மங்களங்களும் லக்ஷ்மீ கடாக்ஷாயத்தங்களாக இருக்கின்றபடியாலன்றோ இவ்விதமான வ்யபதேசமெல்லாம் உபபந்நமாகின்றது?' என்பது விவக்ஷிதம்.

8. கீழ் ச்லோகங்களால் ப்ரதிபாதிக்கப்பட்ட மஹிமையானது எல்லையற்றது என்பது இந்த ச்லோகத்தால் விளக்கப்படுகின்றது. 'ஸ்ரீமந் நாராயணனுடைய மஹிமை எல்லையற்றதென்பது நாங்கள் கேட்டிருக்கின்றோம்; லக்ஷ்மியின் மஹிமையும் அப்படிப்பட்டதுதானோ?' என்றால், இரண்டும் எல்லையற்றவைகளே என்பதே அதற்கு ஸமாதானம். 'லக்ஷ்மி, நாராயணனுடைய பத்நியானதால், அவள் அவனுக்குப் பாரார்த்தையன்றோ? அப்படி அவளுக்குப் பாரார்த்யம் சொல்லும்பக்ஷத்தில் அவளுடைய மஹிமைக்கு ஒருவித எல்லை ஏற்படவில்லையோ?' என்று ஒரு சங்கை ஜநிக்கலாம். இவ்விடத்தில் சொல்லப்படும் எல்லையற்றிருக்கும் தன்மையானது உபய விபூதிகளை அபேக்ஷித்துப் பேசப்பட்டிருக்கிறதே தவிர நாராயணனை அபேக்ஷித்துப் பேசப்படவில்லை என்பதை நாம் கவனித்தல் வேண்டும். ஸ்ரீ ஆளவந்தார் அநுக்ரஹித்திருக்கும் யஸ்யாஸ்தே மஹிமாநமாத்மந இவ த்வத்வல்லபோऽபி ப்ரபு: நாலம் மாதுமியத்தயா" [ஹே லக்ஷ்மி! உன்னுடைய பெருமையை உன் ப்ரியதமனான பகவானும், அவன் ஸர்வஜ்ஞனையும் ஸர்வ சக்தியாயும் இருக்கச் செய்தேயும், இவ்வளவென்று பரிச்சேதஞ்செய்ய (அளவிட) சக்தியற்றவனே] என்னும் இடத்திலும் கீழ்ச் சொல்லப்பட்டிருப்பது போலவே நிர்வாஹம் செய்தல் வேண்டும்.

[ப - ரை] தேவி - ஹே தேவி!, த்வந்மஹிமாவதி: - உன் மஹிமையின் எல்லையானது, ஹரிணா - நாராயணனாலும், ந ஜ்ஞாயதே - அறியப்படுகின்றதில்லை; த்வயாऽபி - உன்னாலும், ந ஜ்ஞாயதே - அறியப்படுகின்றதில்லை. ஏவம் - இவ்வாறு, யத்யபி - இருந்தபோதிலும், ஸதாऽபி - அப்பொழுதும், யுவயோ: - உங்களுடைய, ஸர்வஜ்ஞதா - ஸகலத்தையும் அறியும் யோக்யதையானது, ந ஹீயதே - எவ்வித ஹாநியையும், அடையாமலே இருக்கின்றது. (எப்படியென்றால்), ய: - யாதொன்றானது, நாஸ்த்யேவ - இல்லவே இல்லையோ, (அதாவது - எதற்கு ஸ்வரூப ஸத்தையே இல்லையோ). தத்ஜ்ஞதாம் - அது இப்படிப்பட்டது என்று அறியாமலிருப்பதையே, ஸர்வஜ்ஞதாயா: - ஸர்வத்தையும் அறியும் யோக்யதைக்கு. அநுகுணாம் - உரியதாக, விது: - (பெரியோர்கள்) அறிந்திருக்கிறார்கள். வ்யோமாம்போஜம் - ஆகாசத் தாமரையை, இதந்தயா - இதுதானென்று (அதாவது - இப்படிப்பட்டதென்று), விதந் - அறிந்திருக்குமவன், 'ப்ராந்த:' இதி - 'இவன் பைத்யம் பிடித்தவன்' என்று, உச்யதே கில - (மத்யஸ்தர்களால்) சொல்லப்படுகிறானன்றோ?

லோகத்தில், எந்தப் பொருளுக்கு ஸ்வரூபமுண்டோ, அதை ஒருவன் 'இது இப்படிப்பட்டது' என்று அறியக் கூடும். எதற்கு ஸ்வரூபமே இல்லையோ, (அதாவது - ஒரு காலத்திலும் ஒரு இடத்திலும் இல்லவே இல்லையோ) அதைப்பற்றி 'இது இப்

லோகே வநஸ்பதி ப்ருஹஸ்பதி தாரதம்யம்
யஸ்யா: ப்ரஸாதபரிணாமமுதாஹரந்தி ।
ஸா பாரதீ பகவதீ து யதீயதாஸீ
தாம் தேவதேவமஹிஷீம் ச்ரியமாச்ரயாம: ॥ (௯)

படிப்பட்டது' என்று ஒருவன் தான் அறிந்திருப்பதாகச் சொல்லத் தொடங்கினால், அவனை மத்யஸ்தர்களாக இருக்கு மெல்லாரும் பரிஹஸிப்பார்களன்றோ? ஆகையால், எல்லையற்றிருக்கும் ஒரு வஸ்துவை, அது எல்லையற்றது என்று அறிவதே ஸர்வஜ்ஞதைக்கு அநுகுணமாகுமே தவிர, அதன் எல்லையை அறிவது, அந்த எல்லை இல்லவே இல்லையாகையால், ஸர்வஜ்ஞதைக்கு அநுகுணமாகமாட்டாது. நாம் எல்லாரும் எந்த வஸ்துக்கள் இருக்கின்றனவோ, அவைகளுடன் எப்பொழுதும் பழக்கப்பட்டவர்கள்; அப்படிப்பட்ட வஸ்துக்களின் விஷயமாகப் பூர்ண ஜ்ஞாநமுள்ளவர்களை ஸர்வஜ்ஞர்களென்றும், அல்ப ஜ்ஞாநமுள்ளவர்களை அல்பஜ்ஞர்களென்றும் வ்யவஹரித்து வருகின்றோம். இந்தப் பழக்கத்தையும் வ்யவஹாரத்தையும் ஆதாரமாகக் கொண்டு, இவை ஸத்தையுள்ள வஸ்துக்களை மாத்ரம் பற்றியவை என்பதை மறந்து, ஸத்தையே இராத பதார்த்த விஷயத்திலும் இவைகளை அந்வயிப்பிக்கத் தவறுதலாக நம்மில் சிலர் ப்ரயத்நப்படக்கூடும். அவர்களுடைய ஆக்ஷேபத்தை இவ்விடத்தில் சங்கித்துக்கொண்டு அந்தச் சங்கைக்கு ஸமாதானத்தை ஸ்ரீ கூரேசன் இந்த ச்லோகத்தில் அநுக்ரஹித்திருக்கிறார்.

வ்யோமாம்போஜம் - ஆகாசத் தாமரை. தாமரை, ஸரஸ்ஸுக்களில் முளைத்து வளரும். ஆகாசத்தில் அது முளைத்து வளராததலால், 'ஆகாசத் தாமரை' என்னும் சப்தம் ஸத்தையே இராமல் இருக்கும் ஒரு பதார்த்தத்தைக் குறிப்பதற்கு ப்ரயோகம் செய்யப்படும். 'குதிரைக் கொம்பு' 'முயல் கொம்பு' 'மலடி மகன்' என்பவையும் இம்மாதிரியான சப்தங்கள்.

இதந்தயா - 'இது இன்னது' என்னும்படி. இதன் விக்ரஹம்:—'அஸ்ய பாவ: இதந்தா, தயா இதந்தயா' என்பதுதான்.

9. லக்ஷ்மியின் மஹிமையை மற்றும் ஒரு ப்ரகாரமாக ஸ்தோத்ரம் செய்து, அவ்வளவு மஹிமையுள்ள அந்த லக்ஷ்மியை சரணமாக அடைகிறேன்' என்று சொல்லுகிறார். லோகத்தில், 'ஒருவன் அதிக ஜ்ஞாநமுள்ளவனாக இருப்பதும் மற்றொருவன் குறைந்த ஜ்ஞாநமுள்ளவனாக இருப்பதும் ஸரஸ்வதியின் அநுக்ரஹாதீநம்' என்று ஜநங்கள் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். அந்த ஸரஸ்வதீ, லக்ஷ்மியின் நியமநத்துக்கு உட்பட்டவளென்றால், அப்படிப்பட்ட லக்ஷ்மியின் மஹிமை மிகப் பெரிதாக இருத்தல் வேண்டும் என்று ஊஹிக்க வேண்டுமன்றோ? இந்த அர்த்தத்தை ஸ்ரீ தேசிகன் ஹயக்ரீவ விஷயமாகப் பின்வருமாறு அநுக்ரஹித்திருக்கிறார்.

"தாக்ஷிண்யரம்யா கிரிசஸ்ய மூர்த்தி: தேவீ ஸரோஜாஸநதர்மபத்நீ ।
வ்யாஸாதயோऽபி வ்யபதேச்யவாச: ஸ்புரந்தி ஸர்வே தவ சக்திலேசை: ॥

[ஹே ஹயக்ரீவ! லோகத்தில் வித்யாதிகர்களாக இருக்கும் தக்ஷிணா மூர்த்தியாகிற ருத்ரன், சதுர்முகனுடைய பத்நியாகிற ஸரஸ்வதீ தேவீ, ப்ரஸித்த இதிஹாஸ புராண க்ரந்த கர்த்தாக்களாகிற வ்யாஸர் முதலிய மஹர்ஷிகள் இவர்களெல்லாரும் உன்னுடைய சக்தி லேசத்தாலன்றோ ப்ரகாசிக்கிறார்கள்?] பகவத் விஷயமாகச் சொல்லப்படு

மவையெல்லாம் லக்ஷ்மி விஷயமாகவும் அந்வயிக்குமாதலால், இவ்விடத்தில் இது லக்ஷ்மீ விஷயமாகச் சொல்லப்பட்டிருப்பது உபபந்நமே.

[ப - ரை] லோகே - லோகத்தில், வநஸ்பதிப்ருஹஸ்பதிதாரதம்யம் - (ஜ்ஞாந ஶூந்யமான) மரத்திற்கும் (உயர்ந்த ஜ்ஞாநத்தையுடைய) ப்ருஹஸ்பதிக்கும் பரஸ்பரமுள்ள வாசியை, யஸ்யா: - யாதொரு (ஸரஸ்வதீ) தேவியினுடைய, ப்ரஸாதபரிணாமம் - அநுக்ரஹத்தின் பரிபாகமென்று, உதாஹரந்தி - சொல்லுகிறார்களோ, ஸா - அந்த, பகவதீ - பூஜ்யையான, பாரதீ - ஸரஸ்வதியானவள், யதீயதாஸீ - யாதொரு (லக்ஷ்மி) தேவியினுடைய கட்டளைக்குக் கீழ்ப்பட்டு நடக்கிறவளோ, தாம் - அப்படிப்பட்ட, தேவதேவமஹிஷீம் - தேவர்களுக்கெல்லாம் தேவனுடைய (நாராயணனுடைய) மஹிஷியாகிற, ஶ்ரியம் - லக்ஷ்மியை, ஆஶ்ரயாம: - ஶரணமாக அடைகிறோம்.

வநஸ்பதி - வ்ருக்ஷம். வ்ருக்ஷத்தில் ஜ்ஞாந பாகமே இல்லை யென்னும்படி ஜ்ஞாநம் அவ்வளவு அல்பமாக இருக்கிறபடியால், இவ்விடத்தில் வ்ருக்ஷ சப்தத்தால் மிகவும் குறைந்த ஜ்ஞாநத்தை உடையவன் குறிக்கப்படுகிறான். ப்ருஹஸ்பதி - தேவர்களுக்கெல்லாம் குருவாக இருக்கும் ப்ருஹஸ்பதி. அவர் ஜ்ஞாநத்தில் மிகச் சிறந்தவரென்பது ப்ரஸித்தம். இவர் இருவர்களுக்குமுள்ள வாசி இவ்விடத்தில் விவக்ஷிதம்.

தேவதேவமஹிஷீம் - லக்ஷ்மீ ஸர்வேச்வரனுடைய மஹிஷீ என்பதும், அவள் நித்ய ஸித்தையான மஹிஷீ என்பதும் இந்தச் சப்தத்தால் சொல்லப்படுகின்றன.

ஶ்ரியம் - ஸ்ரீ சப்தத்தின் ஒவ்வொரு வ்யுத்பத்தியாலும் ஸித்தமாக இருக்கும் மஹிமை இவ்விடத்தில் விவக்ஷிதம். நிற்க. 'ஶ்ரியம்' என்னும் சப்தம் 'ஆஶ்ரயாம:' என்னும் சப்தத்துடன் சேர்த்து ப்ரயோகம் செய்யப்பட்டிருப்பதைப் பார்த்து, ஸ்ரீயதே (ஆச்ரயிக்கப்படுகிறாள்) என்று ஸ்ரீ: என்னும் வ்யுத்பத்தியே இவ்விடத்தில் விவக்ஷிதமென்றும் சொல்லலாம். எப்படி யென்றால், 'இந்த வ்யுத்பத்தியிலிருந்து எல்லாரும் ஆச்ரயிப்பதற்காகவே லக்ஷ்மி அவதரித்திருக்கிறாள் என்று ஏற்படுகின்றது. அப்படி அவள் அவதரித்திருக்கிறபடியால் அவளை நாம் ஆச்ரியாமல் இருந்துவிட்டால், அவளுடைய மநோரதம் பூர்த்தி பெறாமல் போய்விடுமே என்று பயந்து, 'ஆஶ்ரயாம:' நாம் அவளை ஆச்ரயிப்போம் என்று ஸ்ரீ கூரேசன் அநுக்ரஹித்திருக்கிறார்' என்று சொல்வது ஸமஞ்ஜஸமாக இருக்கின்றதன்றோ? ஆச்ரயிக்கப்படுவதற்காகவே அவதரித்திருப்பவள் அவசியம் நம்மால் ஆச்ரயிக்கப்படவேண்டும் என்பது தாத்பர்யம்.

ஆஶ்ரயாம: - ஆச்ரயிப்போம். எப்படி ஆச்ரயித்தல் வேண்டுமென்றால், ஶரணமாக ஆச்ரயிப்போம். என்று ஏற்படுகின்றது. 'அஸ்மந்மாதரம் அநந்யஶரண: ஶரணமஹம் ப்ரபத்யே'. என்பது ஸ்ரீ பாஷ்யகாரருடைய திவ்ய ஸூக்தி.

யஸ்யா: கடாக்ஷம்ருதுவீக்ஷணதீக்ஷணேந
ஸத்ய: ஸமுல்லஸிதபல்லவமுல்லலாஸ ।
விஶ்வம் விபாய-ஸமுத்த-விபாயம் ப்ராக்
தாம் தேவதேவமஹிஷீம் ஶ்ரியமாஶ்ரயாம: ॥ (௰)

10. இந்த ச்லோகத்தில் லக்ஷ்மியால் நிர்ஹேதுகமாக (எவ்வித காரணமுமின்றிக்கே) நமக்குச் செய்யப்பட்டுள்ள உபகாரத்தை ஸ்மரித்து, அந்த லக்ஷ்மியை க்ருதஜ்ஞதா பூர்வகமாக (நன்றியறிவுடன்) ஆச்ரயிக்கிறார்.

ப்ரளய காலத்தில் சேதநர்களெல்லாரும் கேவலம் அசித் ப்ராயர்களாய், அசேதந வஸ்துக்களுடன் கூட ஒன்றாகவே பகவானிடத்தில் லயித்திருக்கிறார்கள் என்பது நமது ஸித்தாந்தம். அப்படி அவர்கள் துர்த்தசையில் இருப்பதைப் பார்த்து மிகவும் நிர்விண்ணனாய் பகவான் அந்தச் சேதநர்களை உஜ்ஜீவிப்பிக்கும் பொருட்டு அவர்களுக்குக் கரண களேபராதிகளைக் கொடுத்து ஜகத் ஸ்ருஷ்டியைச் செய்கிறான். இந்த ஸ்ருஷ்டியைப் பகவான் செய்தபோதிலும், ஸகல வ்யாபாரங்களிலும் லக்ஷ்மியுடனேயே அவன் ப்ரவ்ருத்திக்கிறபடியாலும் அவர்கள் இருவர்களும் ஒரே ரஸத்தை உடைத்தாயிருக்கிறபடியாலும், ஸ்ருஷ்டிசெய்வதாகிற இந்த உபகாரம் லக்ஷ்மியின் வ்யாபாரமாவதற்குக் குறையில்லை. அப்படி லக்ஷ்மியால் செய்யப்பட்டுள்ள உபகாரமே இவ்விடத்தில் அநுஸந்தாநம் செய்யப்படுகின்றது.

'ஸ்ருஷ்டி காலத்தில் ஆச்ரித சேதநர்களுக்கு அவரவர்கள் அபேக்ஷிக்கும் புருஷார்த்தங்களைக் கொடுத்து உபகரிப்பதைக் காட்டிலும், ப்ரளயகாலத்தின் முடிவில் செய்யப்படும் இந்த ஸ்ருஷ்டியாகிற உபகாரத்திற்கு என்ன ஏற்றம்? எதற்காக இந்த உபகாரம் இவ்விடத்தில் விசேஷித்து அநுஸந்திக்கப்படுகிறது?' என்று ஒரு சங்கை ஜநிக்கலாம். இந்த உபகாரத்திற்கு ஒரு விசேஷம் உண்டு என்பதே இதற்கு ஸமாதாநம். ஸ்ருஷ்டி காலத்திற் செய்யப்படும் உபகாரங்களெல்லாம் சேதநர்களுடைய ஒருவித வ்யாபாரத்தை அபேக்ஷித்தே செய்யப்படுகின்றன. ரக்ஷிக்கும் பொழுதெல்லாம் பகவான் கர்ம வச்யர்களான சேதநர்களை ஏதாவது ஒரு உபாயத்தில் மூட்டியே ரக்ஷிக்கிறான் என்பது நமது ஸித்தாந்தம். ப்ரளய காலத்தில் இந்தச் சேதநர்கள் எவ்வித வ்யாபாரத்திற்கும் அநர்ஹர்களாயிருக்கிறபடியால், அவர்களை ஒருவித உபாயத்திலும் மூட்டாமலே, எவ்வித வ்யாஜமுமின்றிக்கே கரண களேபராதிகளைக்கொடுத்து ஸ்ருஷ்டிக்கிறான். ஆகையால் அப்பொழுது பகவான் செய்யும் க்ருபை நிர்ஹேதுகமே (சேதநர்களாற் செய்யப்படும் வ்யாபாரமொன்றையும் காரணமாக உடைத்தாயிராமலே இருக்கின்றது). ஆகையால் அந்த க்ருபை விசேஷித்த உபகார ஸ்ம்ருதிக்குத் தகுந்தது என்பது தாத்பர்யம்.

[ப - ரை] ப்ராக் - பூர்வ காலத்தில் (அதாவது - ப்ரளய தசையில்), விபாய-ஸமுத்த-விபாயம் - (லக்ஷ்மீ கடாக்ஷத்தின்) இல்லாமையால் உண்டான நாசத்தை உடைய, விஶ்வம் - ஜகத்தானது, யஸ்யா: - யாதொரு லக்ஷ்மியினுடைய, கடாக்ஷம்ருதுவீக்ஷணதீக்ஷணேந - கடாக்ஷமாகிற யாதொரு ஸாந்த்வமான பார்வை உண்டோ அப்படிப்பட்ட பார்வையின் ஸங்கல்பத்தால், ஸத்ய: - அப்பொழுதே, ஸமுல்லஸிதபல்லவம் - நன்றாய் ப்ரகாசிக்கும் தளிர்களுடன் கூடியிருக்கும்படி, உல்

யஸ்யா: கடாக்ஷவீக்ஷணக்ஷணலக்ஷம் லக்ஷிதா மஹேஶா: ஸ்யு: ।
ஶ்ரீரங்கராஜமஹிஷீ ஸா மாமபி வீக்ஷதாம் லக்ஷ்மீ: ॥ (கக)

இதி ஶ்ரீவத்ஸசிஹ்னமிஶ்ரவிரசிதே பஞ்சஸ்தவே ஶ்ரீஸ்தவ: ।

பவ — ஆவிர்ப்பவித்ததோ, தாம் — அப்படிப்பட்ட, தேவதேவமஹிஷீம் — தேவர்களுக்கெல்லாம் தேவனான நாராயணனுடைய மஹிஷியை, ஶ்ரயாம: — ஆச்ரயிக்கிறோம்.

விபர்யய — அபாவம் (இல்லாமை). இவ்விடத்திலுள்ள இரண்டு 'விபர்யய' சப்தங்களுள். முதல் 'விபர்யய' சப்தமானது 'லக்ஷ்மீ கடாக்ஷத்தின் இல்லாமையை'க் குறிக்கின்றது; இரண்டாவது 'ஜகத்தின் இல்லாமை' யைக்குறிக்கின்றது. லக்ஷ்மீ கடாக்ஷம் இருக்கும் பொழுது ஜகத்திற்கு ஸ்திதி உண்டு; அது இல்லாத பொழுது. ஜகத் ப்ரளயத்தை அடைந்து விடுகின்றது என்பது தாத்பர்யம்.

ஸமுல்லஸிதபல்லவம் — மழை பெய்தவுடன் பயிர்கள் நல்ல துளிர்களுடன் வளர்வதுபோல. லக்ஷ்மீ கடாக்ஷம் வர்ஷித்தவுடன் ஜகத் பொங்குகின்றது என்பது கருத்து. ஸ்ரீ ஆளவந்தாருடைய ச்லோகார்த்தத்தின் அநுஸந்தாநம் இது.

“ஈஷத்த்வத்கருணாநிரீக்ஷணஸுதாஸந்துக்ஷணாத்ரக்ஷ்யதே
நஷ்டம் ப்ராக்ததலாபதஸ்த்ரிபுவநம் ஸம்ப்ரத்யநந்தோதயம்”

[ஹே லக்ஷ்மி! உன்னுடைய கருணா கடாக்ஷமாகிற அம்ருதவர்ஷம் லபியாமல் இருந்த ப்ரளய காலத்தில் நாசமடைந்த இந்த மூன்று லோகங்களும். இப்பொழுது அந்தக் கடாக்ஷலேசத்தைப் பெற்று அளவற்ற ச்ரேயஸ்ஸுடன் ரக்ஷணம் பெற்று நிற்கின்றன]

11. கீழ் ச்லோகத்திற் சொல்லியிருக்கிறபடி அளவற்ற வைபவத்தை உடைய லக்ஷ்மீ கடாக்ஷத்தைத் தாமும் ப்ரார்த்திக்கிறார்.

[ப-ரை] யஸ்யா: — எந்த லக்ஷ்மியினுடைய, கடாக்ஷவீக்ஷணக்ஷணலக்ஷம் — கடாக்ஷ வீக்ஷணங்களுக்கு ஒரு க்ஷண மாத்ரம் லக்ஷ்யமாகும்படி, லக்ஷிதா: — பார்க்கப்பட்ட (ஜநங்கள்), மஹேஶா: — அளவற்ற ஐச்வர்யத்துடன் கூடினவர்களாக, ஸ்யு: — ஆகிறார்களோ, ஸா — அப்படிப் பட்ட, ஶ்ரீரங்கராஜமஹிஷீ — ரங்கநாதனுடைய மஹிஷியாகிற, லக்ஷ்மீ: — லக்ஷ்மியானவள், மாமபி — என்னையும், வீக்ஷதாம் — கடாக்ஷிக்க ப்ரார்த்திக்கிறேன்.

இந்த ப்ரார்த்தனையால் ஸ்ரீ கூரேசன் க்ஷுத்ர ஐச்வர்யங்களை அர்த்திக்க வில்லை; வேறு எதை அர்த்திக்கிறாரென்றால், எதனால் தாம் க்ருத க்ருத்யராவரோ அப்படிப்பட்டப் பக்தி ரூபமான ஜ்ஞானத்துடன் கூடியிருக்கும் கைங்கர்ய ஸ்ரீயையே வேண்டுகிறார். “கடாக்ஷவீக்ஷிதஸ்தைதே ஸ்யாம தாஸீ வயம்” என்று நித்யர்களால் அநுபவிக்கப்படும் அநுபவமன்றோ அவரால் வ்யக்தமாக ப்ரார்த்திக்கப் பட்டிருக்கின்றது?

பஞ்ச ஸ்தவத்தில் ஸ்ரீஸ்தவத்தின் உரை முற்றிற்று.

வேறு.

கண்ட வன்னதைக் கழிபெ ரும்வியப்
புண்டு மாதவ ருயர்ப தஞ்சிரங்
கொண்டி ஞசியுங் குளிர்ம னத்துடன்
புண்ட ரீகமே லிவர்ந்து போயினன். 6

போய பின்பவன் புனித மாதவர்
சேய தோர்மறு விபினஞ் சேர்ந்தவண்
மாய வன்பதம் மனத்தி ருத்தியே
மேய ருந்தவம் மேவி நின்றனர். 7.

ஆங்க னேகபோழ் தடைய முன்னுதித்
தோங்கு மூவராம் வார்க ளொன்றியே
வாங்கு பொன்னியி னிடையில் வண்பணிப்
பாங்கு பாயலிற் பள்ளி கொண்டருள். 8.

அரங்க னதியா யருச்சை யாபொளிர்
பரங்கொ ளாரணம் பணிந்து வாழ்த்தியே
மரங்க ளோங்குமவ் வனத்தில் வந்தனர்
வரங்க ளோர்சுடர் வளர நோக்கினர். 9.

இத்தி ருச்சுட ரேதென் றேவியக்
தத்தி ருத்தவ ருகணைந்துகண்
டெத்தி றத்தரோ விவரெ னமகிழ்ந்
தொத்து ளம்பகத் தண்மை கண்டனர். 10.

கண்டு காதலின் மழிசை மன்னரே
கொண்டு சேமமே குலவு கின்றிரோ
பண்டை யோமிவண் படர்ந்து ளேமென
விண்டு கண்ணவர் விமித முற்றரோ. 11.

நீவிர் போதர னென்னல் செய்தவ
மேவ மேவினீ ரெனவங் நால்வரு
மோவ லின்முதத் தொன்று கூடியே
யாவி யொன்றென வளவ ளாவியே, 12.

கண்களா னந்த நீர்கள் காலவுந்
திண்கொ ளத்தமீஇத் தேனின் பால்பழம்
பண்கொள் கன்னலுங் கலந்த பாங்கென
வெண்கொ ளாமகிழ் வெய்தி வாழ்ந்தனர். 13.

இன்ன ணங்குருந் தொசித்த வெம்பிரான்
பொன்ம லர்ப்பதம் புகழ்ந்து போற்றியே
பன்னெ டும்பகற் பண்பி னால்வரு
மன்ன கானகத் தமர்ந்து வைகினார். 14.

வாச நாறுமவ் வனந்த ணந்துபின்
பாச றும்மவ ராசை யோடுபோய்ப்
பேச ரும்பிணைப் பேயர் வந்தருள்
கேச வன்கிளர் மயிலை கிட்டினார். 15.

வண்டு பாண்செய வண்பொ ழிற்குளே
தெண்டி ரைக்கடன் முழவு தேழ்த்திடத்
கண்ட ணிற்குரற் கஞ்ச மார்த்திடத்
தண்ட லைச்சிகி தாந டித்திட. 16.

ஒன்றன் மீதொன்று யொளிரு மாடங்கள்
வெண்சு தாரசங் கலந்து விம்மியே
துன்று தெண்டிரைத் தோய ராசியை
நன்று மின்னியே நகைத்தல் செய்திட. 17.

திருவி ழாவருத் தேர்க ளூர்ந்திடும்
மருவு வான்கொடி பல மலிந்திடுந்
தெருவொ டின்னபல் செல்வ மல்கிடு
மரிய வல்லியங் கேணி தன்னுழை. 18.

இஞ்சி கோபுரம் மெங்கு மாழையாம்
மஞ்சு றங்குமா மாக மோங்கிருஞ்
செஞ்செ வேலென விலகு செம்மணி
விஞ்சி டங்கொளின் னிலைய மேவியே. 19.

விசயன் றேரிடை வீற்றி ருந்ததை
விசையி னாருசம் மட்டி வேய்ந்தரு
இசைய வெம்மனை யிணைந்தொ ளிர்ந்திடப்
பசை யினின்றருள் பார்த்த சாரதி. 20.

திருமு கத்தெதிர் திகழு மல்லிபுட்
கரிணி யின்கரை கலந்தங் நால்வரும்
பெருகு யோகமே பிணைந்து றைந்தனர்
திரும ணாளனு ரடிகள் சேரவே. 21.

ஒழுக வவ்வண மொருதி னந்திரு
மழிசை யாரிடம் மற்ற மூவருந்
தழுவி யின்விடை தாம டைந்துமுன்
புழுவ லன்புட னெருவியத் தலம். 22.

ஆழி சூழுல கெங்கு மார்ந்திடும்
போழ கத்திரட் புனித நீர்படிந்
தாழி வாழ்கரத் தரியை வாழ்த்தியே
தாழு மாசையிற் றம்ப டர்ந்தனர். 23.

வேறு

படர்ந்தபின் மழிசை மன்னன் பாரெலாம் படியவீறு
மடர்ந்த பூம் பொழி கள் சூழ மழிசையை யணுகிப் பூணத்
தொடர்ந்த வெம்பவத்தை வீட்டுந் தூநிறத் திருமண் ணேடிச்
சுடர்ந்த வேங் கடத்தின் மேவுஞ் சோதியை நினைந்து றைந்தார் 24.

அடியிடை முடியி னான்மூ வுலகமு மடைந்து தந்தஞ்
செடியினைக் களைய வீறுஞ் சேடன துருவா மந்தத்
தடவரை யொளிருங் காயா வண்ணனத் தவத்தோர் துஞ்சும்
வடுவறு கனவி னம்மண் வைகுறுந் தலத்தைச் சொன்னான். 25.

துயிலெழுந் தவருந் தூய கனவின்மா லருளிச் செய்த
செயிறரு தலத்திற் சென்றுங் கீதுதெண் மண்ணைக் கொண்டு
பயில்வுறும் பன்னீரங்கத் தணிந்தது துலங்கப்பாங்கின்
மயர்வற வவன்றனும மத்துணை மகிழ்ந்து போற்றி. 26.

ஈறிலா வின்பங் கொண்டே னென்பிறப் பகன்று விண்டேன்
பேறெலாம் பெற்றே னையம் பிரிந்தெழ மயக்கு நீத்தேன்
மாறுகொண் மற்றைத் தெய்வ மணமிலா மலரே யென்று
தேறினே னெனவா னந்தத் தேக்கு றமகிழ்ந் துறைந்தார். 27.

சிலபக லகன்றபின்னர்ப் பொய்கையா ருதித்த செய்ய
தலங்களிற் சிறந்த கச்சித் தலந்தனின் வதிய வெண்ணி
மலர்தலை மழிசை நீத்து மலையெனு மிரத மூரும்
பலமறு ககன்ற வந்தப் பட்டணஞ் செறியச் சேர்ந்தார். 28.

சத்திய விரதக் கேத்தி ரம்மெனச் சகங்கள் போற்று
மத்திரு நகருள்வெஃகா வெனுமொரு தலத்தி னைஞ்ஞா
றெத்தொளிர் சுடிகைச் செய்ய மணியொளி பரவத் தன்மேல்
சத்திர மதனன் போலுஞ் சவிகொள்பாம் பணையின் மீதே. 29.

கருமுகி லிடையின் மின்சேர் காட்சியாய்க் கமல மார்பி
னிருபுறத் தவனி நீளை யிணைந்துறப் புறத்தே கஞ்ச
மருவுவோன் மருவுயோக நித்திரை மணந்தோரோங்கு
மரகத கிரிநேர் மாயன் மலர்ப்பதம் பணிந்து போற்றி. 30.

ஆடக நளினத் தூடே பொய்கை யாரவ தரித்த
பீடுறு மரிய பொய்கைத் தடந்தனிற் பிணைந்தே யோகம்
மூடிய விழியராகி முகுந்தனை நினைந்து முந்நூ
றேடுறு நானூறாண்டு மொருகண மெனவே நீத்தார். 31

கணிகணன் பணிகள் செய்ய விவ்வண முறையுங் காலிற்
கணிகையோர் நரைத்து மூத்துப் பிணிகளி னலிந்து காப்போர்
மணிலொரு வரையு மின்றி மழிசையார் வதியுஞ் சூழ
லணுகினு ளுய்யும் வண்ண மறிவெனு மிகுளை காட்ட. 32

போந்தவன் புனித வாப்பி நீரினுள். மெழுகித் தூய்மை
யாந்தரை முழுதும் பொன்னி னலகிட்டுத் தூகள கற்றி
மாந்தளி மலர்கண் மாறுங் கோலங்கள் பலவுந் தீட்டி
யாந்தனற் பணிக ளின்னு மாற்றின ணிதமும் போந்தாள். 33

பலபக லகல வீங்கே யொருதினம் பத்தி சாரர்
விலகிட விமைகள் கண்கள் விழித்தெதிர் பணிக ளாற்றுங்
குலைகுலைந் துடலஞ் சோரு நரைத்திடு குழலி நோக்கி
யிலகிடு மவளி னந்த விருப்பிடந் தனையுங் கண்டார். 34

கண்டவ ரவள டைந்த கதியினை யடைய ஞானக்
கண்டனின் முதியளே நின் கருத்தினைக் கழறுகென்ன
விண்டொழிந் தெனது மூப்பிங் கிளம்பெண்ணாய் விளங்கவென்பால்
கொண்டருள் புரிக வென்று கூப்பினள் கரங்கண் மாதோ. 35

எம்பலி னவளிவண்ண வேண்டிட விருடி யாங்கே
யாம்படி யருளே பாயுங் கடைக்கணி னமர்ந்து நோக்க
வாம்பல மாய விஞ்ஞை யாடுவார் செயலே யென்ன
மேம்படு மரம்பை மான மிளிர்ந்தன ளிமைப்பின் மன்னோ. 36

கயிரவ மனைய வாயுங் காரெனுங் குழலுந் திங்கள்
பயில்வுறு முகமும் வேலைப் பழித்திடு விழியுங் காம்பி
னயமுறு புயமுங் கஞ்ச நலமுறுங் குயமு நண்ணி
வயதுமோர் பதினா றாகி மதனனு மருள நின்றாள். 37

நின்றவ டன்னையாழ்வார் நின்மனக் கியையும் வண்ணஞ்
சென்றுவாழ் குதியென்றேவச் சேயிழை யவளுமந்தக்
குன்றெனுங் குணத்தி னார்பூங் குரைகழல் வணங்கிமீண்டு
பொன்றிகழ் புரியின் வேறோர் புறமிருந் தொழுகி னாளால். 38.

அவ்வண மொழுகு நாளப் புரிதனி லவனி யாண்டு
தெவ்வரை யடக்குந் திண்மைப் பல்லவ ராய னென்பான்
கொவ்வையங் கனிவாயந்தக் குயின்மொழி யெழிலை நோக்க
நவ்விநேர் விழியி னாளு நரபதி யுளையக் கண்டாள். 39.

கண்டவ ணயன வேலுங் கருப்புவின் மதன னம்பு
மண்டல பதியின் மார்பிற் பாய்தலு மாழாந் தந்தத்
தொண்டைவாய் மயிலன்னாடன் றெய்யின்மா முலையிற் றோய்ந்தங்
கண்டரு மருந்திக் காணா வருஞ்சுகம் பருகிப் போந்தான். 40.

கின்னர மிதுனம் போலக் கிளிமொழி யுடனே காளை
பன்னரும் பகல்கள்போகம் பருகியே யொழுகு நாளம்
மன்னவன் றனக்கு மூப்பு வரவர மலிய நொந்து
கன்னலின் குதலை யாளை விளித்தித கழற லுற்றான். 41.

மதகரி முகத்திற் சூழி மானமென் றுகின் மேலார்ந்த
திதலைபொன் பூத்து மேனாக் கிருங்குலத் தெரிவை நீயே
பதமுறும் பருவம் வாய்ந்து மூப்புறா துறைய யானே
முதுமையிற் பெருகி நாளு மொய்ம்பிழந் தழுங்க லென்னோ. 42.

கற்பகத் தடியில் வாழுங் காந்தையர் குலமே யன்றிப்
பொற்புறும் புவியின் மாதர் மூப்புறா துறைத லென்னே
நிற்கிது நிகழ்தற் கேதோ மறையுள ததனை நீயே
யற்பினி லறைக யானு மவ்வண மடைவ லென்றான். 43.

என்றது செவியி னேற்ற வேந்திழை யிரங்கி யைய
நன்றுறு மழிசை நாத னருளினன் மிடைந்தே னிந்தப்
பொன்றரும் பருவ நீயு நின்னகம் புகுந்து நாளு
மொன்றிய வைய மேற்குங் கணிகணற் குரைத்தி யென்றாள். 44.

கேட்டது கிளர்வா ளேந்துங் குரிசிலு மகிழ்ந்து கேண்மை
நாட்டியக் கணிகண் ணன்க ணலமுற விளித்து நாளென்
வீட்டினுக் கழைத்தாய் நின் மழி சையார்க் கியம்பி வேண்டித்
தாட்டுணை தொழுது வையத் தகவினிற் கொணர்க வென்றான். 45.

முறுவலித் தவனுள் வேந்தே முழுதுல கொருகோலோச்சு
மிறையவ னெனினு மன்னு ரேறெடுத் தவனை நோக்கார்
பிறரகத் தடியும் வையார் பிறைமுடிப் பெருமா னாதி
யிறைவர்க ளவர்பா லீண்டிக் கருத்தழிந் தகன்று ரன்றே. 46.

ஆகையி னின்னை யிங்கோ ரருத்தமாய் மதியா ரென்றத்
தோகைபங் குடலன் செய்தி துலங்குற நவல மன்னன்
வாகையை யெனது பாவால் வகையுறப் பாடு கென்ன
நாகையாப் புலவன் மற்று நரபதி வதன நோக்கா. 47.

வாய்கொண்டு மனிதர் பாட வந்திடு கவியே னல்லே
னாய் கொண்ட சீராரதி நாரண னவன்றன் பாதந்
தோய்கின்ற பெரியோர்தூய புகழினைத் துதிக்க நின்றேன்
பேய்கொண்ட நரரைப்பாடிப் பெறும்பயன் விரும்பேனென்றான் 48

இயம்பலும் புவன பால னிருகணுஞ் சிவக்கச் சீறிச்
செயம்படு மெனது சீர்த்தி செந்தமிழ்க் கவியினேறி
நயம்பட வினது நாவிற் கொருப்படா தாயி னின்னை
பயம்படு மெனது தேயம் பரித்திடா தெழுக வென்றான். 49.

சொற்றவ னுரைத்த மாற்றங் கொதிகொளக் கேட்ட கண்ணன்
மற்றுரை வழங்கலின்றி மன்னவை தணந்து போந்து
நற்றவ ரடியை நண்ணி வணங்கி யிந் நகரை நீங்கிச்
சிற்றறி வுடையேன் செல்ல வருள்கெனச் செப்பி னால். 50.

ஏதையா விந்தமாற்றஞ் சிக்கென விசைத்தா யென்றம்
மேதையா ரிருடிகேட்க மிழற்றின னவனு மன்னன்
கோதையா ருரையைக் கொண்டா ராங்கவர் குழைந்து நெஞ்சம்
வாதையா ரயன் றேயம் வரைவதே தகுதி யாமால். 51.

கோடுறங் கோற்கீ ழார்ந்து வாழ்வரின் வயமா வாழுங்
காடுருஞ் சுகமே யென்று கண்டவர் கழறு மாபோல்
நாடிது நினக்கா காத நமக்குமத் தகையே நாமுங்
கூடவே வருதும்போது மென்றவர் குடிசை நீத்தார். 52.

நீத்தவர் சொன்ன வண்ணஞ் செய்தவெம் பெருமானையப்
பூத்திரு வடியைப் போற்றிப் புயல்வண்ணா கணிகண் ணன்பின்
னீத்திந்த நகரைச் செல்வே னீயுமுன் னுரகப் பாயைப்
பேர்த்தொன்று நினைதலின்றிச் சுருட்டிக்கொள் பெருமவென்றார் 53

பத்தரைக் கணமு நீங்காப் பரம்பொருண் மழிசை மன்ன
னித்திறந் தொழுதுபோற்ற வெழுந்துடன் படர வாங்கே
யத்திரு நகருண் மற்ற வாலயக் கடவு ளெல்லாந்
தொத்துடன் றிரண்டுகூடப் போந்தன வென்ப மாதோ. 54.

வேறு.

முன்னே காருத் தன்வனம் போகத்
தளிரும் பூவு முகம்வாடி
மன்னே சினையின் மரங்கள் சோர
மாநீர் நதியுந் தடம் யாவுங்
கொன்னே கொதிகொண் டழல வின்னுங்
கூறக் கூடாக் கொடுமை பல
தன்னே ரில்லா வந்நகர் கொண்ட
தகவே பின்னீர் தடைந்ததரோ 55

ஊழிக் காற்று மோங்கி யடிக்க
வுதிரங் காலு மழைபொழிய
வீழத் தூம கேது வுடுக்க
ளிரவும் பகலும் வேறுணரார்
சூழத் திமிரஞ் சோரவு முள்ள
மகவும் பாலும் பருகாமே
யாழக் கோயிற் பொலிவுங் குன்றி
யழகார் கச்சி மழுங்கியதே 56

இறைவன் றன்னின் பொன்னகர் மானு
நன்னக ரிங்கே யெழில்குன்றக்
குறையைத் தன்கண் குறுகுந் தேர்ச்சித்
துணைவர்க் கோதிக் கரைபோழ்தின்
மறையைக் கூர்ந்தே யாய்ந்தவர் மன்னு
மழிசைக் கிறைவர் மலரடியி
னுறையுங் கண்ணற் கின்ன விழைத்தே
யுற்ற பயன்கா ணிதுவென்றார். 57

கண்ணனு மாழ்வா ருடனே கக்கார்
வண்ணனு மாங்கே கால்வைத்தா
னெண்ணலி னின்னே யெல்லவ ரும்போ
யன்னவர் தாளிற் சரண்புக்கால்

பண்ணுறு மிந்தப் பட்டண மென்னப்
பார்த்திவ னன்றே பலர்சூழ
மண்ணி னடந்தே யண்டையி லாழ்வார்
மன்னிய வோரிக் கையில்வந்தான் 58

வந்தவ னந்த வானவர் தாளின்
மந்திரி மாரின் வணங்கிக்கண்
சிந்தட நீரென் சிந்தையி லேழைத்
தன்மையி னுற்றும் புகரெல்லா
மந்த முறுங்கண் ணுடியின் மின்னு
நந்த மனத்தே யடையாமே
யிந்த விரும்பே தைக்குல முய்ய
மீண்டெழு கென்ன விரங்குற்றான் 59

நீரே கிழிய வெய்த வகுப்போ னீரவர்
வெப்பங் கெடு மென்னப்
பரரோ ரின்றும் பகரும் வண்ணங்
கண்ணன் சிற்றங் கரந்தொழிய
வோரா ரிதயத் தின்குரு பாதத்
தெய்தி? பொறுத்தி யெனவேண்டச்
சீரார் செல்வத் திருமா மழிசைச்
செல்வரு மாங்கே சினம் விண்டார் 60

விண்டுக தத்தை விண்டுவின் பாதங்
கொண்டு சிரத்தின் வெறிநாறுந்
தண்டுள வத்தார் தாமரை யாள்சே
ரின்கடி மார்பா கணிகண்ணன்
றண்டலை சூழழுங் கச்சியின் வைக்க
கொண்டன னெண்ணந் தான்மீள்வான்
பண்டென நீயும் போந்த வணைய
பாம்பணை மீதே பளிகொள்வாய் 61

அடியா ராதி னத்திரு மாலே
யென்றவ ராங்கோ ரரும்பாவின்
படியால் வேண்டக் கொண்ட னிரத்தோன்
பண்டுபோ லந்தப் பதியேகி

ஸ்ரீ:

நித்யவிபூதிஸமர்த்தநம்

தஸ்யைதஸ்ய பரஸ்ய ப்ரஹ்மணோ நாராயணஸ்ய ஸ்வவி

ஸ்ரீ:

நித்ய விபூதி ஸமர்த்தநம்

தஸ்யைதஸ்ய—பர ப்ரஹ்மமாகிற அந்த நாராயணனுக்கு, ஒரு வித அள

ஸ்ரீ:

நித்ய விபூதி ஸமர்த்தநம்

தஸ்யைதஸ்ய—இது வரையில், 'ஸித்தங்களான வஸ்துக்கள் விஷயத்தில்
சப்தங்கள் எவ்வித அர்த்தத்தையும் போதிக்க மாட்டா' என்னும் ப்ராபாகர மதம் கண்
டிக்கப் பட்டது. இப்படி ப்ராபாகர மதத்தைக் கண்டிப்பது எல்லா வேதாந்திகளுக்
கும் அபிமதமே. இனி மற்றை வேதாந்திகளுக்கு அநபிமதமாயும் விசிஷ்டாத்வைத
வேதாந்திகளால் மாத்ரம் ஒத்துக்கொள்ளப்பட்டதாயுமிருக்கும் 'நித்ய விபூதி' என்று
சொல்லப்படும் விபூதி விசேஷத்தை ஸ்தாபிக்கிறார். முதலில், 'அந்த நித்ய விபூதி
யில் இருப்பதாகச் சொல்லப்படும் திவ்ய மங்கள விக்ரஹம் முதலியவைகள் ப்ராமாணி
கங்கள்' என்பதை நிரூபிப்பதற்காகப் பகவானுடைய ஸ்வரூபம் அதன் குணங்கள் இந்த
லீலா விபூதிகள் இவை மூன்றும் த்ருஷ்டாந்தமாக உதாஹரிக்கப் படுகின்றன. ச்ருதி
ப்ரமாணத்தை ஆதாரமாகக் கொண்டு இந்த மூன்றையும் ப்ராமாணிகமென்று நாம்
ஒத்துக் கொள்வது போல, அந்த ச்ருதி ப்ரமாணத்தைக் கொண்டே நித்ய விபூதியை
யும் ப்ராமாணிகமென்று ஒத்துக் கொள்ளவேண்டும் என்பது கருத்து.

ஒருவனுடைய ஆளுகைக்கு உட்பட்டவை யெல்லாம் அவனுடைய விபூதி என்று
சொல்லப்படும். அம்மாதிரி ஈச்வரனுக்கு இரண்டு விபூதிகள் உண்டு என்பது விசிஷ்
டாத்வைதிகளின் கொள்கை. அவைகளுள் ஒன்று, ஸம்ஸாரிகளான ஜீவன்கள் ஸம்
ஸரிக்கும் இந்த ப்ரபஞ்சம். இதற்கு லீலா விபூதி யென்று பெயர். இதில் இருக்கும்
ஜீவன்களெல்லாரும் கர்ம பரவசர்கள்; இதில் காணப்படும் அசேதந வஸ்துக்களெல்லாம்
'ப்ருக்ருதி' என்று சொல்லப்படும் தத்வத்தின் விகாரங்கள். அது காரணமாக அவை
களை ப்ராக்ருத வஸ்துக்களென்று சொல்வார்கள். மற்றொரு விபூதியானது, இந்தக்
கர்ம பரவசர்களான ஜீவன்களால் மோக்ஷமடைந்த பிறகு போகப்படும் லோகாந்தரம்.
அந்த லோகத்தில் ஒரு பொழுதும் கர்ம பந்தத்தில் அகப்படாத ஜீவன்கள் சிலரும்

[illegible]த்வஜ்ஞாநாநந்தாமலத்வஸ்வரூபவத், ஜ்ஞாநசக்திபலைச்வர்ய-
வீர்யதேஜ:ப்ரப்ருத்யநவதிகாதிசயாஸங்க்யேயகல்யாணகுணகண-
வத், ஸ்வஸங்கல்பப்ரவர்த்யஸ்வேதரஸமஸ்தசிதசித்வஸ்துஜாதவத்,
ஸ்வாபிமதஸ்வாநுரூபைகரூபதிவ்யரூப ததுசிதநிரதி-

வுக்கும் உட்படாத ஜ்ஞாநம் ஆநந்தம் அமலத்வம் இவை முதலிய ஸ்வரூப நிரூபகதர்மங்கள் இருப்பன போலவும், ஜ்ஞாநம் சக்தி பலம் ஐச்வர்யம் வீர்யம் தேஜஸ் இவை முதலிய அளவற்றவும் எண்ணிக்கைபற்றவுமான கல்யாண குணங்கள் இருப்பன போலவும், தனது ஸங்கல்பத்தைச் சார்ந்து நிற்கும் ப்ரவ்ருத்தி முதலியவைகளை உடையனவாய் இந்த ப்ரபஞ்சத்தில் தென்படும் ஸமஸ்த சேதநாசேதந வஸ்துக்கள் இருப்பன போலவும் வேறு சில வஸ்துக்களும் அவனுக்கு உண்டு. அவையாவன-(1) தனக்கு அநுரூபமாயும் ஏகரூபமாயுள்ள திவ்ய ரூபம் ஒன்று, (2) அந்த ரூபத்திற்குத் தகுந்த அள

இருக்கிறார்கள். அவர்களுக்கு 'நித்யர்கள்' என்று பெயர். அந்த லோகத்தில் அசேதந வஸ்துக்களும் உண்டு. ஆனால் அவை 'ப்ரக்ருதி' என்பதன் விகாரங்களல்ல. 'சுத்த ஸத்வம்' என்று அவ்விடத்தில் ஒரு அசேதந முண்டென்றும் அதன் விகாரங்களே அவ்விடத்தில் போக்ய வஸ்துக்களாகக் காணப்படுகின்றன வென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. அந்த வஸ்துக்கள் ப்ரக்ருதியின் விகாரங்களல்லவாதலால் அவைகளை 'அப்ராக்ருதங்கள்' என்று சொல்வது உண்டு.

அமலத்வ...ஜ்ஞாநம் ஆநந்தம் அமலத்வம் இவை பகவத் ஸ்வரூபத்தின் அஸாதாரண தர்மங்கள். அந்த தர்மங்களே இவ்விடத்தில் த்ருஷ்டாந்தமாகச் சொல்லத்தக்கவை யாதலால், இவ்விடத்திலுள்ள 'ஸ்வரூப' என்னும் சப்தத்திற்கு 'ஸ்வரூப நிருபக தர்மங்கள்' என்று பொருள் கொள்தல் வேண்டும்.

ஜ்ஞாநபல...ஜ்ஞாநம் பலம் ஐச்வர்யம் வீர்யம் சக்தி தேஜஸ் இந்த ஆறும் பகவத் குணங்களுள் ப்ரதாநங்களாகையால் இவை இவ்விடத்தில் தனித்துச் சொல்லப்பட்டுள்ளன. ஸௌசீல்யம் முதலிய குணங்கள் 'ப்ரப்ருதி' (முதலிய) என்னும் சப்தத்தால் க்ரஹிக்கப் படுகின்றன. ஸ்வயமாகவே எல்லாவற்றையும் எப்பொழுதும் ஸாக்ஷாத்கரிப்பது ஜ்ஞாநம்; அப்படி ஸாக்ஷாத்கரிக்கப் பட்டதைத் தரிப்பது பலம்; தரித்துக் கொள்ளப்பட்டதை அடக்கி ஆளுவது ஐச்வர்யம்; அப்படி தரித்துக் கொண்டும் நியமித்துக் கொண்டும் வருவதால் களைப்பு அடையாமல் இருப்பது வீர்யம்; அகடிதங்களை ஸாதிப்பது சக்தி; அப்படி ஸாதிப்பதில் எவ்வித ஸஹாயத்தையும் அபேக்ஷியாமல் இருந்து கொண்டு ஒன்றாலும் தான் ஆக்ரமிக்கப்படாமல் தான் எல்லா வற்றையும் ஆக்ரமித்திருப்பது தேஜஸ். இவை யெல்லாம் அநவதிகமாக இருப்பதாவது—இவைகளின் மஹிமை இவ்வளவுதான் என்று சொல்ல முடியாமல் இருப்பது.

ஸ்வாபிமத... லோகத்தில் அபிமதமாயிருப்ப தெல்லாம் அநுரூபமா யிராமலும் அநுரூபமாயிருக்குமவையெல்லாம் அபிமதமா யிராமலும் இருப்பது ஸஹஜம். இந்தத் திவ்ய ரூபம் (அதாவது—திவ்ய மங்கள விக்ரஹம்) அப்படி இல்லை என்பது இதனால் சொல்லப்படுகின்றது. ஏகரூப—எல்லா அவஸ்தைகளிலும் இது மாறுமலே இருக்கின்ற படியால் ஏக ரூபம் என்று சொல்லப் படுகின்றது.

சயகல்யாணவிவிதாநந்தபூஷண ஸ்வசக்திஸத்ருசாபரிமிதாநந்த-
ஆச்சர்யநாநாவிதாயுத ஸ்வாபிமதாநுரூபஸ்வரூப-
ரூபகுணவிபவைச்வர்யசீலாத்யநவதிகமஹிமமஹிஷீ ஸ்வாநு-
ரூபகல்யாணஜ்ஞாநக்ரியாத்யபரிமேயகுணாநந்தபரிஜநபரி-
ச்சத ஸ்வோசிதநிகிலநிரவத்யபோக்யபோகோபகரணாத்யநந்தமஹாவிப-
வாவாங்மநஸகோசரஸ்வரூபஸ்வபாவதிவ்யஸ்தாநாதிநித்யதாநிரவ-
த்யதா[illegible] ஸஹஸ்ரச: ச்ருதய: ஸந்தி।

வற்ற மஹிமையை உடைய அப்ராக்ருத பலவகைப் பட்ட பூஷணங்கள் அநேகங்கள், (3) தனது சக்திக்குத் தகுந்தவைகளானவும் மிகவும் ஆச்சரய காங்களுமான கணக்கற்றப் பலவித ஆயுத விசேஷங்கள், (4) தனக்கு அபிமதமாயும் அநுரூபமாயுமிருக்கும் ஸ்வரூபத்தையும் ரூபத்தையும் அந்த ரூபத்தின் குணங்களையும் விபவத்தையும் ஐச்வர்யம் சீலம் முதலிய அளவற்ற மஹிமையையும் உடைய லக்ஷ்மீ ஒருவள், (5) தனக்கு அநுரூபர்களும், கல்யாணங்களாயிருக்கும் ஜ்ஞாநம் க்ரியை முதலிய அளவற்ற குணங்களை உடையவர்களுமானக் கணக்கற்ற பரிஜநங்களும் பரிச்சதர்களும், (6) தனக்குத்தகுந்த ஸகல போக்ய போகோபகரணங்கள் முதலிய அநந்தமான மஹாவிபவத்தை உடையவும் வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாத ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும் உடையவுமான திவ்ய ஸ்தாநம் முதலியவைகள், இவையெல்லாம் நித்யங்களென்றும்,

---

ததுசித ...பூஷணங்கள் கல்யாணங்களாக இருப்பதாவது அவை அப்ராக்ருதங்களாக இருப்பதே.

ஸ்வாபிமத...லக்ஷ்மியின் ஸ்வரூபம், ரூபம், குணம், விபவம், ஐச்வர்யம் முதலிய மஹிமை இந்த ஐந்தும் பகவானுக்கு அத்யந்தம் அபிமதங்கள், அத்யந்தம் அநுரூபங்கள். ஐச்வர்யம் சீலம் முதலியவை ஸ்வரூபத்தின் குணங்களைக் குறிக்கின்றன; 'குணம்' என்பது ஸௌந்தர்யம் முதலிய விக்ரஹ குணத்தைக் குறிக்கின்றது. லக்ஷ்மியின் ஸ்வரூபம் பகவானுக்கு அநுரூப மென்பது

"யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம் த்விஜோத்தம"

[விஷ்ணு எப்படி ஸர்வ வ்யாபியோ அப்படியே லக்ஷ்மியும்] என்னும் வாக்யத்தால் விளங்கும். 'மஹிஷீ' என்பது லக்ஷ்மியையே குறிக்கின்றது.

ஸ்வாநுரூப கல்யாண—இவ்விடத்தில் 'க்ரியை' என்னும் பதம் பகவானுக்குச் செய்யப்படும் கைங்கர்யத்தைக் குறிக்கின்றது. அநந்த கருட விஷ்வக்ஸேநர் முதலியவர்களைப் பரிஜநமென்னும் பதமும், களாசிகை முதலியவர்களைப் பரிச்சத மென்னும் பதமும் குறிக்கின்றன.

ஸ்வோசித...இவ்விடத்தில் 'போக்ய' என்னும் பதத்தால் மாலை சந்தநம் முதலியவைகளும், 'போகோபகரண' என்னும் பதத்தால் போக்ய வஸ்துக்களின் விநியோகத்திற்கு ஸாதநங்களாயிருக்கும் பதார்த்தங்களும் சொல்லப்படுகின்றன.

இந்த வாக்யங்களின் அர்த்தத்தை ஸ்ரீ பாஷ்யகாருடைய சரணாகதி கத்யத்தின் பாஷ்யத்தில் விஸ்தாரமாகக் காணலாம்.

நிரவத்ய...இவையெல்லாம் தோஷமற்றிருப்பதாவது—துக்க லேசத்தின் ஸம்பந்தத்தையும் அடையாமல் இருப்பதே.

"வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம்
தமஸ: பரஸ்தாத்"

"ய ஏஷோ(அ)ந்தராதித்யே ஹிரண்மய: புருஷ: - தஸ்ய
யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ"

"ஸ ய ஏஷோ(அ)ந்தர்ஹ்ருதய ஆகாஶ:-தஸ்மிந்நயம் புருஷோ
மநோமய: அம்ருதோ ஹிரண்மய:"

['மநோமய:' இதி மநஸைவ விஶுத்தேந க்ராஹ்ய இத்யர்த:|]

"ஸர்வே நிமேஷா ஜஜ்ஞிரே வித்யுத: புருஷாததி"

['வித்யுத: புருஷாத்' இதி வித்யுத்வர்ணாத் புருஷாதித்யர்த:|]

"நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா"

நிர்த்தேஷ்டங்களென்றும் சொல்லும் ச்ருதி வாக்யங்கள் ஆயிரக்கணக்காக இருக்கின்றன.

'ஸூர்யனுடைய வர்ணம் போன்ற வர்ணத்தை உடைய இந்த மஹா புருஷனை நான் அறிவேன்; அவன் தமஸ்ஸாகிற ப்ரக்ருதிக்கு அப்புறத்தில் இருக்கிறான்'.

'ஸூர்யனுடைய உள்ளில் ஸுவர்ண மயமாகத் தென்படுகிறான் இந்தப் புருஷன்; அவனுடைய கண்கள், ஸூர்யனால் மலரப் பெற்றுள்ள தாமரைப் புஷ்பம் போன்றவை'

'ஹ்ருதயத்தின் உள்ளில் யாதொரு ஆகாச முண்டோ, அதில், இந்தப் புருஷன் இருக்கிறான். அவன் விசுத்தமான மனஸ்ஸாலே மாத்ரம் க்ரஹிக்கத்தகுந்தவன். அவன் அம்ருதன், ஸுவர்ணம் போன்றவன்'

[இதில் இருக்கும் 'மநோமய:' என்னும் சப்தத்திற்கு, 'சுத்தமான மனஸ்ஸாலேயே க்ரஹிக்கத் தகுந்தவன்' என்பது பொருள்].

'மின்னல் போன்ற ப்ரகாசத்தை உடைய இந்தப் புருஷனிட மிருந்தே ஸகல நிமிஷங்களும் உண்டாயின'.

[வித்யுத: புருஷாத், என்பதற்கு 'மின்னல் வர்ணத்தை உடைய புருஷன்' என்பது பொருள்].

'நீலமான மேகத்தை நடுவில் உடைய மின்னல் கொடிபோல ப்ரகாசித்துக் கொண்டிருக்கும்'

ஸஹஸ்ரஶ:... ப்ரத்யக்ஷ ச்ருதிகள், உபப்ருஹ்மணங்களுக்கு மூலமாயிருக்கும் ச்ருதிகள் இவையெல்லாம் இங்கு விவக்ஷிதம்.

மநோமய:—இவ்விடத்தில் 'மயட்' என்னும் ப்ரத்யயத்தால் சொல்லப்படும் 'ப்ராசுர்யம்' என்னும் அர்த்தம், ஸம்பந்தத்தைக் குறிக்கின்றது. 'மனஸ் க்ரஹிக்கிற வஸ்து, பரமாத்மா க்ரஹிக்கப்படும் வஸ்து' என்னும் க்ராஹ்ய க்ராஹக ஸம்பந்தம் விவக்ஷிதம்.

நீலதோயதமத்யஸ்தா—'மத்யஸ்தோ நீலதோயதோ யஸ்யா:' என்று பஹுவ்ரீஹி செய்யவேண்டும். பதங்கள் மாறி விழுந்திருப்பது வேத வாக்யமானதால். முன் பின் வாக்யங்கள் இம்மாதிரி அர்த்தத்தை அபேக்ஷிக்கிறபடியால் இம்மாதிரி அர்த்தம் கொள்ளப்படுகின்றது. 'தஸ்யா மத்யே வஹ்நிஶிகா' [அந்த ஸுஷிரத்தின் நடுவில் ஒரு அக்நி சிகை இருக்கின்றது] என்பது முன் வாக்யம்

['நீலதோயதமத்யஸ்தா' இதி மத்யஸ்தநீலதோயதா வித்யுல்லேகேவ| ஸேயம் தஹரபுண்டரீகமத்யஸ்தாகாஶவர்த்திநீ வஹ்நிஶிகா ஸ்வாந்தர்நிஹித நீலதோயதாபபரமாத்மஸ்வரூபா ஸ்வாந்தர்நிஹிதநீலதோயதா வித்யுதிவாபாதீத்யர்த:|]

"மநோமய: ப்ராணஶரீரோ பாரூப: ஸத்யஸங்கல்ப ஆகாஶாத்மா ஸர்வகர்மா ஸர்வகாம: ஸர்வகந்த: ஸர்வரஸ: ஸர்வமிதமப்யாத்தோ(அ)வாக்யநாதர:"

"மஹாரஜநம் வாஸ:"

இத்யாத்யா:|

"அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ"

"ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ"

['நீலதோயத மத்யஸ்தா' என்பதற்கு 'நடுவில் இருக்கிற நீலமேகத்தை உடைய' என்பது பொருள். தஹர புண்டரீகத்தின் நடுவிலிருக்கிற ஆகாசத்தில் இந்த அக்நி சிகை இருக்கின்றதென்று கீழ் வாக்யத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த அக்நி சிகைத் தனது நடுவில் நீல மேகம் போன்ற பரமாத்ம விக்ரஹத்தை உடைத்தாயிருக்கிறபடியால், அது, நீல மேகத்தை நடுவில் உடைத்தாயிருக்கும் மின்னல் போல் ப்ரகாசிக்கின்றது என்று சொல்லப்படுகின்றது.]

'விசுத்தமான மனஸ்ஸாலே மாத்ரம் க்ரஹிக்கத் தகுந்தவன்; ஜகத்திலுள்ள ஸகல ப்ராணங்களையும் தனது சரீரமாகத் தரித்துக் கொண்டிருக்கிறான்; ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற திவ்ய விக்ரஹத்தை உடைத்தாயிருக்கிறான்; அப்ரதிஹதமான (தடைபடாத) ஸங்கல்பத்தை உடையவன்; ஆகாசம் போல ஸூக்ஷ்மமாயிருக்கும் ஸ்வரூபத்தை உடையவன். ஸகலமான ஜகத்தையும் தனது கர்மமாக உடையவன் (ஸகல ஜகத்திற்கும் கர்த்தா); பரிசுத்தமான ஸகல போக்யம் முதலியவைகளையும் உடையவன்; அப்ராக்ருதமான ஸகல கந்தங்களையும் ஸகல ரஸங்களையும் உடையவன்; இந்த கல்யாண குணங்களெல்லாவற்றையும் ஸ்வீகரித்து நிற்கிறான்; பரிபூர்ணமான ஐச்வர்யத்தை உடையவனானதால் ஸகலத்தையும் த்ருணம் போல அநாதரித்தும், அந்தக் காரணத்தால் ஒருவித பேச்சும் பேசாமல் இருக்கிறான்.'

'மஹாரஜதம் என்று சொல்லப்படும் வர்ணத்தில் தோய்க்கப்பட்ட திவ்ய வஸ்த்ரத்தைத் (தரித்துக் கொண்டிருக்கிறான்)'.

'விஷ்ணுவின் பத்நியானவள் இந்த ஜகத்திற்கெல்லாம் ஈச்வரீ'

தஸ்யா: ஶிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித: [அந்த அக்நி சிகையின் நடுவில் பரமாத்மா இருக்கிறான்] என்பது பின் வாக்யம். ஆகையால், 'நீல மேகத்தின் நடுவில் இருக்கும் மின்னல் போல்' என்னும் தத்புருஷார்த்தம் ஸங்கதமாகமாட்டாது; 'நீல மேகத்தை நடுவில் உடைத்தாயிருக்கும் மின்னல் போல' என்னும் பஹுவ்ரீஹியே ஸங்கதமாகும்.

மாஹாரஜநம்...மஹாரஜநேந ரஞ்ஜிதம் [மஹாரஜதம் என்னும் வர்ணத்தில் நனைக்கப்பட்ட]. 'மஹாரஜதம்' என்று ஒரு வர்ண த்ரவ்யத்திற்குப் பெயர்.

"தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பஶ்யந்தி ஸூரய:"
"க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே | யதேகமவ்யக்தமநந்தரூபம் விஶ்வம் புராணம் தமஸ: பரஸ்தாத்"
"யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமந்"

இத்யாதிஶ்ருதிஶதஸித்தோ(அ)யமர்த²: | 'தத்விஷ்ணோ: பரமம் பதம்' இதி-விஷ்ணோ: பரஸ்ய ப்ரஹ்மண: பரமம் பதம் | 'ஸதா பஶ்யந்தி ஸூரய' இதி வசநாத் ஸர்வகாலதர்ஶநவந்த: பரிபூர்ணஜ்ஞாநா: கேசந ஸந்தீதி விஜ்ஞாயதே | 'யே ஸூரயஸ்தே ஸதா பஶ்யந்தி' இதி வசநவ்யக்தி:; 'யே ஸதா பஶ்யந்தி தே ஸூரய:'

'பூமிப் பிராட்டியும் லக்ஷ்மியும் இவனுடைய பத்நிகள்'.

'அந்த விஷ்ணுவின் பரமமான ஸ்தாநத்தை ஸூரிகள் எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்'

'ப்ரக்ருதிக்கு மேல்பட்டிருக்கும் இடத்தில் வஸித்துக்கொண்டிருக்கிறான்' அவனுடைய திவ்ய விக்ரஹமானது அநந்தமான ரூபத்தை உடையது; அது அவ்யக்தம், புராணம், ஸர்வவ்யாபி, தமஸ் -க்கு மேற்பட்டு நிற்கின்றது ?

'ஹ்ருதய குஹையில் வைக்கப்பட்டிருக்கும் இந்த ப்ரஹ்மத்தை எவன் உபாஸிக்கிறானே, அவன் அப்ராக்ருத ஆகாச மென்று சொல்லப்படும் பரம பதத்தை (ப்ரஹ்மத்தை) அடைகிறான்'

இம்மாதிரியான கணக்கற்ற ச்ருதிகளால் இந்த அர்த்தம் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. 'தத்விஷ்ணோ: பரமம் பதம்' என்னும் வாக்யத்தில் 'பர ப்ரஹ்மமாகிற விஷ்ணுவினுடைய பரம பதத்தை எப்பொழுதும் ஸூரிகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று சொல்லப்பட்டிருக்கிற படியால், ஸர்வ காலத்திலும் அந்தத் தர்சநத்தை உடைய சில பரிபூர்ண ஜ்ஞாநர்கள் இருக்கிறார்கள் என்று அறியப்படுகின்றது. 'ஸூரிகள் எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்' என்றாவது, 'அப்படி எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் ஸூரிகள்' என்றாவது அர்த்தம் செய்து

தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பஶ்யந்தி ஸூரய:.— [விஷ்ணுவின் அந்தப் பரம பதத்தை ஸூரிகள் எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்]. இந்த வாக்யத்தால், (1) பரமபதம் என்னும் ஸ்தாநமொன்று உண்டு, (2) அவ்விடத்தில் ஸூரிகள் என்று சிலர் இருக்கிறார்கள், (3) அவர்கள் நித்யர்கள், எப்பொழுதும் அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், என்று மூன்று விஷயங்கள் விதிக்கப் படுகின்றன. 'அப்படி அநேக அர்த்தங்கள் விதிக்கப் படுகின்றனவென்றால், வாக்ய பேதம் ப்ராப்திக்குமே' என்று சங்கிக்கக்கூடும். அதற்கு ஸமாதாநம், 'அந்த அநேக அர்த்தங்கள் அப்ராப்தங்களாகவும் அவிருத்தங்களாகவும் இருக்கும் பக்ஷத்தில், அந்த அர்த்தங்களெல்லாம் விதிக்கப்படுகின்றன என்று சொல்வதில் ஒரு வித தோஷமுமில்லை' என்பது தான். 'அப்ராப்தங்கள்' என்பதற்கு 'வேறு ஒரு ச்ருதி வாக்யத்தாலும் விதிக்கப்படாதவை' என்பது பொருள்; 'அவிருத்தங்கள்' என்பதற்கு 'ச்ருதியில் வேறு இடத்திற் சொல்லப்பட்டுள்ள அர்த்தத்திற்கு விரோதியாதவை' என்பது பொருள். அதாவது-'ஸாதக பாதக ப்ரமாணங்கள்' இராத என்று சொன்னதாயிற்று

இதி வா | 'உபயபக்ஷே(அ)ப்யநேகவிதாநம் ந ஸம்பவதி' இதி சேத், அப்ராப்தத்வாத் ஸர்வஸ்ய | ஸர்வவிஶிஷ்டம் பரஸ்தாநம் விதீயதே | யதோக்தம்-'தத்குணாஸ்து விதீயேரந்நவிபாகாத்விதாநார்தே ந சேதந்யேந ஶிஷ்டா:' இதி | யதா 'யதாக்நேயோ(அ)ஷ்டாகபால:' இத்யாதிகர்மவிதௌ கர்மணோ குணாநாம் சாப்ராப்தத்வேந ஸர்வகுணவிஶிஷ்டம் கர்ம விதீயதே, ததா(அ)த்ராபி ஸூரிபி: ஸதா த்ருஶ்யத்வேந விஷ்ணோ: பரமஸ்தாநஸ்யாப்ராப்தத்வம் ஶ்ருதி

கொள்ளக்கூடும். 'எப்படி எடுத்துக் கொண்ட போதிலும், இந்த வாக்யத்தால் மூன்று (ஒன்றுக்கு மேல் பட்ட) வஸ்துக்கள் விதிக்கப்படுகின்றன என்று சொல்வது ஸாத்யமில்லையே' என்று ஆக்ஷேபிக்க இடமில்லை. ஏனென்றால், இந்த அர்த்தங்களெல்லாம் அப்ராப்தங்கள் (அதாவது ச்ருதியைத் தவிர்த்து வேறு ஒரு ப்ரமாணத்தாலும் அறியப் படவில்லை.) ஆகையால் இந்த வாக்யத்தில், நித்ய ஸூரிகள் அவர்களால் செய்யப்படும் தர்சநம் ஆக இந்த இரண்டுகளுடன் விசிஷ்டமாயுள்ள பரமபதமே இவ்விடத்தில் விதிக்கப் படுகின்றது என்று சொல்லுங்கூடும். ஜைமிநி மஹர்ஷி தமது ஸூத்ரத்தில் 'யாகத்தின் விசேஷணங்களும் விதியால் விதிக்கப்படுகின்றன வென்று சொல்லக்கூடும்; ஏனென்றால் அந்த விசேஷணங்கள் அந்த விதாநத்திற் சொல்லப்படும் முக்ய விஷயத்தைக் காட்டிலும் வேறு பட்டவைகளல்ல. ஆனல் அவை அப்படி விதிக்கப்படுகின்றன வென்று சொல்லப்படும் பொருட்டு அவை மற்றை ஒன்றாலும் விவரிக்கப் படாமலிருத்தல் வேண்டும்' என்று சொல்லி இருக்கிறார். யாகமாகிற ஒரு கர்மத்தை விதிக்கும் 'யதாக்நேயோ(அ)ஷ்டாகபால:' என்னும் விதியில், கர்மம் குணங்கள் இவையிரண்டும், அவை அப்ராப்தங்கள் (வேறு ஒரு ப்ரமாணத்தாலும் அறியப்பட வில்லை) என்னும் காரணத்தால், விதிக்கப்படும் விஷயங்களென்று எப்படி நிச்சயிக்கிறோமோ, அப்படியே இந்த ச்ருதி வாக்யத்திலும் விஷ்ணுவின் பரமபதமானது ஸூரிகளால் எப்பொழுதும் பார்க்கப்பட்டுக் கொண்டிருப்பதாக ப்ரதிபாதிக்கப்படுகின்றது என்று சொல்வதில் எவ்

'தத்குணாஸ்து...' கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ந்யாயம் மீமாம்ஸகர்களால் ஒத்துக்கொள்ளப்பட்டதே என்பதற்கு இந்த ஸூத்ரம் இவ்விடத்தில் கூறப்படுகின்றது. 'யதாக்நேயோ(அ)ஷ்டாகபால:' என்பது இந்த ஸூத்ரத்திற்கு விஷய வாக்யம். இந்த விஷய வாக்யத்தின் யதா ச்ருதமான அர்த்தம் 'எது ஆக்நேயமோ அது அஷ்டாகபாலமாக இருத்தல் வேண்டும்' என்பதுதான். அதாவது, 'எது அக்நியில் ஹோமம் செய்யபட வேண்டியதோ, அது எட்டு கபாலங்களைக்கொண்டு ஹோமம் செய்யப்படவேண்டும்' என்று சொன்னதாயிற்று. இதில் கபாலங்களைக் கொண்டு ஹோமம் செய்ய வேண்டும் என்பது விதிக்கப்படுகின்றதா? இல்லாவிட்டால் அக்நியில் ஹோமம் செய்வதும் விதிக்கப் படுகின்றதா? என்று சங்கையைச் செய்து கொண்டு, இரண்டும் அப்ராப்தங்களாகவும் அவிருத்தங்களாகவும் இருக்கிறபடியால் இரண்டுமே விதிக்கப் படுகின்றன என்று மீமாம்ஸகர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த ந்யாயமே இவ்விடத்தில் அந்வயிக்கப் படுகின்றது. இதில் விசேஷ்யம் மாத்ரம் விதிக்கப் படாமல் விசேஷணமும் விதிக்கப் படுகிறபடியால், இதை விசிஷ்ட விதியென்று சொல்வார்கள்.

பாத்யத இதி ந கஶ்சித்விரோத:। கரணமந்த்ரா: க்ரியமாணாநுவாதி-
ந: ஸ்தோத்ரஶஸ்த்ரரூபா ஜபாதிஷு விநியுக்தாஶ்ச ப்ரகரண
படிதாஶ்சாப்ரகரணபடிதாஶ்ச ஸ்வார்த்தம் ஸர்வம் யதாவஸ்தித
மேவாப்ராப்தமவிருத்தம் ப்ராஹ்மணவத்போதயந்தீதி ஹி வைதிகா:।
ப்ரகீதமந்த்ரஸாத்யகுணிநிஷ்டகுணாபிதாநம் ஸ்தோத்ரம், அப்ர
கீதமந்த்ரஸாத்யகுணிநிஷ்டகுணாபிதாநம் ஶஸ்த்ரம்। விநியு
க்தார்த்தப்ரகாஶநம் ச தேவதாதிஷ்வப்ராப்தாவிருத்தகுணவிஶே
ஷப்ரதிபாதநம் விநியோகாநுகுணமேவ। நேயம் ஶ்ருதி:
ஸம்ஸாரமுக்தவிஷயா, தேஷாம் ஸதாதர்ஶநாநுபபத்தே:, நாபி

வித விரோதமும் இல்லை. ஸூரிகளால் அப்படிப் பார்க்கப்பட்டிருக்கின்றது என்பது அப்ராப்தமே. வேதத்தின் அர்த்தத்தை அறிந்தவர்களெல்லாரும் இப்படியே சொல்லுகிறார்கள். 'ஹோம மந்த்ரங்களும், செய்யப்படும் கர்மாவை அநுவதிக்கும் மந்த்ரங்களும், ஸ்தோத்ரமென்றும் சஸ்த்ரமென்றும் சொல்லப்படுமவைகளும், ஜபங்களாக விநியோகம் செய்யப்பட்டுள்ளவைகளும், ப்ரக்ருத ப்ரகரணத்தில் படிக்கப்பட்டிருப்பவைகளும், வேறு ப்ரகரணத்தில் படிக்கப்பட்டிருப்பவைகளும், இவை யெல்லாம் தம் தம் அர்த்தம் முழுவதையும், அந்தந்த அர்த்தம் அப்ராப்தமாகவும் அவிருத்தமாகவும் இருக்கும் வரையில் ஸாக்ஷாத் விதி வாக்யங்கள் போலவே, உள்ளபடி போதிக்கின்றன' என்பதே அவர்களின் நிர்ணயம். 'ஸ்தோத்ரம்' என்பது கானரூபமாக உச்சரிக்கப்படும் மந்த்ரங்களால் ப்ரதிபாதிக்கப்படும் குணங்களையுடைய வஸ்துவின் குணங்களைச் சொல்லும்; 'சஸ்த்ரம்' என்பது கானமின்றிக்கு உச்சரிக்கப்படும் மந்த்ரங்களால் ப்ரதிபாதிக்கப்படும் குணங்களையுடைய வஸ்துவின் குணங்களைச் சொல்லும். விநியோகத்திற்குத் தகுந்த வஸ்துக்களை ப்ரகாசிப்பிக்கும் மந்த்ரங்கள் விஷயத்திலும், அப்ராப்தங்களாயும் அவிருத்தங்களாயுமுள்ள குணவிசேஷங்களைச் சிற்சில தேவதா விஷயமாகப் பேசுவதெல்லாம் அந்த விநியோகத்திற்கு அநுகுணமே. 'தத்விஷ்ணோ: பரமம் பதம்' இத்யாதியான வாக்யத்திற் சொல்லப்படும் ஸூரிகள், முக்தர்களான ஜீவன்களே' என்று சொல்வதும், அவர்களுக்கு ஸதாதர்சநம் உபபந்நமாக மாட்டாதாகையால், சரியன்று.

ஸ்தோத்ரஶஸ்த்ரரூபா:— கானத்துடன் செய்யப்படும் மந்த்ரோச்சாரணம் ஸ்தோத்ரம், கானமின்றிக்குச் செய்யப்படும் மந்த்ரோச்சாரணம் சஸ்த்ரம்.

ஜபாதிஷு—ஜபம் முதலியவைகளில். அதாவது, ஜபம் அத்யயநம் இவைகளில். உறக்கச் சொல்லப்படுவது அத்யயநம், உபாம்சுவாக உச்சரிக்கப்படுவது ஜபம்.

ப்ராஹ்மணவத்—ஸாக்ஷாத் விதி வாக்யங்கள் போல. 'ப்ராஹ்மணங்கள்' என்பது ச்ருதியில் விதி வாக்யங்களைக் குறிக்கும்.

நேயம்—'தத்விஷ்ணோ:' இத்யாதியான வாக்யத்தில் ஏன்படும் 'ஸூரிகள்' என்னும் பதம், ஸம்ஸாரத்தில் ஒரு காலத்தில் அகப்பட்டிருந்து பிறகு மோக்ஷமடைந்திருக்கும் ஜீவன்களையே குறிக்கின்றது என்று சொல்லிவிட்டால், 'நித்யர்கள்' என்று சிலர் இருக்கிறார்கள் என்று ஒத்துக்கொள்ள வேண்டிய ச்ரமம் இல்லையே என்று ஒரு சங்கையைச் செய்துகொண்டு, அப்படி அது பேசுகின்றது என்று சொல்வதற்கு

202

ஸம்புடம் 22] JUNE 1934 [ஸஞ்சிகை 12

ஸ்ரீ

வேதாந்த தீபிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-JAN 1935
MADRAS



பவ ஞு வைகாசி மீ

PUBLISHED BY

SRI VAISHNAVA SIDDHANTA SABHA,

MADRAS.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. ஸர்வமத வினா விடை:—[ஸ்ரீ. உப. வித்யாரத்நாகர வேதாந்த கேஸரி V. R. நரஸிம்ஹாசார்யர்] ... 327
2. ஸநாதந தர்ம ஸம்ரக்ஷணம்:—[மஹாமஹோபாத்யாய ஸாஸ்வத ஸர்வஜ்ஞ தட்டை ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 330
3. ஸ்ரீ வைஷ்ணவர்களின் உபய வேதாந்தங்கள்:—[ஓரகடம் ஸ்ரீ. உப. கோ. ஸுதர்சநாசார்யர், தமிழ்ப்பண்டிதர்.] 336
4. மீமாம்ஸா ஸங்க்ரஹம் :—[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.] ... 340
5. ஸ்ரீ ரங்கநாத சடகோபயதீந்த்ர மஹா தேசிகன் வைபவம்:— 347
6. ஸம்பாதகீயம்:— ... 351
7 ஸ்ரீ பஞ்சஸ்தவம். ... 21
8. திவ்ய ஸூரி சரிதம்:—[வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 41
9. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—[வங்கீபுரம் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர்] ... 385

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி— ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற ஒரு தமிழ் உரையுடன் கூடியது ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடன் கூடியது] ... ... ரூ 0—8—0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடனும் புத்தக்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யாநத்துடனும் கூடியது] ... ... ரூ. 0 6 0

(4) ஸ்ரீ வேதாந்த தீபிகை 19, 20, 21 வது ஸம்புடங்கள். ஸம்புடம் 1.க்கு ... ... ரூ. 3 0 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு
மாம்பலம், தேனாம்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.

OFFICE OF THE REGISTRAR ... 9-JAN 1935

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீ வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்பு. 22.] பவ வைகாசிமீ [ஸஞ்சிகை. 12

ஸ்ரீ:

ஸர்வமத வினா விடை

[வித்யாரத்நாகர வேதாந்த கேஸரி ஸ்ரீ. உப. V. R. நரஸிம்ஹாசார்யர்]

(காபிரைட் ரிஸெர்வ்ட்)

(தொடர்ச்சி: ஸஞ்சிகை 7 பக்கம் 203)

பலராம்:—தம்பீ! இனி நீ முன் விரும்பியபடி முதன் முதலில் மூன்று விதங்களான வைதிக ஸித்தாந்தங்களின் கொள்கைகளைச் சுருக்கமாகக் கூறுகின்றேன்; ஸாவதானமாகக் கேள்.

இது த்வைதம் அத்வைதம் விசிஷ்டாத்வைதம், என்று மூவகைப் பட்டிருக்கின்றதல்லவா? அவற்றுள் உத்பத்தி க்ரமம் (அதாவது பிறவி முறை) எப்படியானாலும், ஜ்ஞப்திக்ரமம் (அதாவது அறிவுமுறையில்) த்வைத ஸித்தாந்தத்தையே முன்னதென்று கொள்ளவேண்டும். உலக வியவஹாரங்கள் யாவற்றுமே த்வைத பாவனையிலேயே தானே நடைபெறுகின்றன. எனவே, நிலையான வேற்றுமையெனப் படுகிற அஸ்திவாரத்தின் மீதுதான் உலக வியவஹார மெனப்படும் கட்டிட மெழுப்பப்படுகின்றது. உலக வியவஹாரத்திலேயே உழன்றுகொண்டு கிடக்கின்ற மாந்தர்கள் அதில்

[illegible] பெருதனாரும் ஆத்ம விசாரணைக்குத் தலைப்படுகின்றன ரென்று ஆரம்பத்திலேயே சொல்லி யிருக்கின்றேனே? அப்படி யவர்கள் ஆத்ம விசாரணைத் துறையிலிறங்கும்போது அவர்களிடம் நெடு நாளாகக் குடி கொண்டிருக்கிற பேதவாஸனையின் வழியிலேதானே செல்வார்கள்; செல்ல வுங்கூடும். ஆக தத்வ விசாரணைக் கென்று முதன் முதலாக முற்படுகின்ற மேதாவிகள் தமக்கு அன்றுவரையிலு முள்ள பேத த்ருஷ்டியையே பற்றிக் கொண்டு விசாரித்து அந்த பேதத்தை யுட்கொண்டதாகவே நிர்ணயத்தை யுஞ் செய்து கொள்வதே இயற்கையாதலால் ஸித்தாந்தங்களுள் த்வைத ஸித்தாந்தந்தான் முந்திய தென்பது முற்றவும் பொருத்தமானதே. இது காரணம் பற்றித்தான் த்வைத ஸித்தாந்திகளான மாத்வ ஸம்ப்ரதாயஸ் தர்களைத் தத்வ வாதிகளென்று வழங்குகின்றனம் போலும். முற்ற முந்தர தத்வத்தை விசாரிக்கப் பிரயத்னப் பட்டவர்களுக்கு அத்தகைய கௌர வத்தை யளித்து அழைப்பது யுக்தந்தானே?

இந்த த்வைத ஸித்தாந்திகள் ஐந்து விதமான பேதத்தைக் கடை பிடித்து தமது ஸித்தாந்தத்தை நிர்வஹித்திருக்கின்றார்கள். அவையா வன ஜீவேச்வரபேதம், ஜடேச்வரபேதம், ஜடஜீவபேதம், ஜீவாந் யோந்யபேதம், ஜடாந்யோந்ய பேதம், என்கிற ஐந்துமேதான். தன்னை ஈச்வரனென்று எவரும் நினைக்கவில்லை; ஈச்வரனல்ல வென்றே நினைத்திருக் கின்றனர். ஆதலால் ஜீவர்கள் வேறு ஈசுவரன் வேறு, என்பது எல்லோ ருக்கும் அநுபவமறிந்த விஷயமேதான். ஜட பதார்த்தங்களைப் பற்றியோ வெனில் அவற்றை ஈச்வரனென்று பித்துப் பிடித்தவன் கூட நினைக்கமாட் டானாதலின் ஜடேச்வரர்களுக்குள் வேற்றுமையைப் பற்றி சொல்லவேண்டி யதில்லை. இது போலவே ஜடத்திற்கும் ஜீவர்களுக்கு முள்ள வேற்றுமை யும் சொல்லன்றிக்கே விளங்கிவிடும். நானென்றும் நீயென்றும் அவன் இவன் உவனென்றும் ஜீவர்களைப் பற்றியும் பல படியாகவே அநுபவங்களா லுண்டாகின்றமையால் ஜீவர்களுக்கு ஒருவருக்கொருவ ருள்ள வேற்றுமை யும் மறுக்கற்பால தல்ல. மரமென்றும் மலை யென்றும் கடலென்றும் தரை யென்றும் குடமென்றும் படமென்றும் ஜடங்களைப் பற்றிய தோற்றமும் பல திறப்பட்டே யிருக்கின்றமையால் ஜடப் பொருட்களும் தனித்தனிப் பட்ட அநேகங்களேதாம். எனவே இவ்வைந்து வித பேதங்களும் அசைக் கமுடியாதபடி வேரூன்றி விளங்குகையில் அபேத மென்கிற கதை யேது?

கோபால்:—அண்ணா! இப்படி உலக அநுபவத்தை வைத்துப்பார்த்து பேதந்தான் தத்வமென்று தீர்மானித்து விடுவதனால் இனி ஐக்யத்தையே வற்புறுத்துகின்ற ச்ருதி வசநங்களின் கதியென்ன? அவற்றை அபத்த மென்றே தள்ளிப் போடுகிறதா?

பலராம்:—தம்பீ! வேதத்தை முற்றிலும் ப்ரமாண மென்று அங்கீ கரித் திருக்கின்ற வைதிகர்களுள் ஒருவரும் அவ்வேத நூலினுள் சில வாக் யங்களை ப்ரமாண மென்றும் மற்றுஞ் சிலவற்றை அப்பிரமாண மென்றும் பாகுபடுத்திக் கூறவேமாட்டார்கள். வாக்யங்கள் யாவற்றுமே பிரமாணந் தானென்பதற்கு ஆக்ஷேபமில்லை. ஆனால் அவ்வேத வாக்யங்களுள் சில, ஒன்றிற்கொன்று முறண் பட்டிருப்பது போலத் தோன்றிற்றானால் அப்படி முறண்படும் பொருட்க ளிரண்டையும் உள்ளபடியே ஏற்றுக்கொள்ள இய லாதன்றோ? உதாரணமாக இதையெடுத்துக்கொள். சில வசநங்கள் ஜீவர் கள் வேறு ஈச்வரன் வேறென்று சொல்லுகின்றன. மற்றுஞ் சிலதோ வெனில், ஜீவனையும் ப்ரம்ஹத்தையும் ஒன்றென்றே சொல்கின்றன. வேறென்றதை யொப்புக்கொண்டால் ஒன்றென்றது அடிபட்டுப் போகிறது; ஒன்றென்றதை யொப்புக் கொண்டாலோ வேறென்றது கெட்டு விடுகிறது. இனி செய்யக் கிடப்பதென்ன? இவ்வசந மிரண்டினுள் ஏதேனுமொன்றை உள்ளபடியே ஏற்று அதை இடமாக வைத்துக்கொண்டு மற்றொன்றை அத னுடனிழுத்துக் கொணர்ந்து பிணைத்துப் போடவேண்டும். ஏனென்றால், அவ்வாக்யத்திற்கு ப்ரக்ருத வாக்யத்தோடு பொருந்தும் வகையில் பொருளைக் குறுக்கியோ விரித்தோ உரைத்து சரிப்படுத்திப் பொருள் கூற வேண்டு மென்றதாயிற்று.

ஆகவே, த்வைத ஸித்தாந்திகள் பேதவாக்யத்தை தாச்சியாக அதா வது ஸ்தாநமாக வைத்துக்கொண்டு அபேத வாக்யத்தை இதனோடு இழுத்துப் பிணைப்பாராயினர். அத்வைத ஸித்தாந்திகளோ வெனில், அபேதவாக்யத்தை ஸ்தாநமாக வைத்துக்கொண்டு பேதவாக்யங்களையே அவற்றோடு பிணைத்துப் பொருள் கூறுகின்றனர். வாசி இவ்வளவேயன்றி ஏதோ ஒரு வாக்யம் தான் முக்யமாகிற தென்கிறதைப் பற்றியவரையில் இரண்டு ஸித்தாந்தங்களும் ஒருவகையானது தான்.

கோபால்:—அண்ணா! நடுவிலொரு கேள்விக்கு இடந்தரவேண்டும். த்வைதிகள் பேதவாக்யத்தையும் அத்வைதிகள் அபேத வாக்யத்தையும் முக்கிய இடமாக வைத்துக் கொண்டதற்கு அவரவர்களுடைய ஸ்வச்சந்த இச்சைதான் காரணமா? அல்லது வேறு ஏதேனும் தக்கக் காரண மிருக் கின்றதா?

பலராம்:—தம்பீ! அம்மேதாவிகள் தகுந்த காரண மின்றி ஒன்றையுஞ் சொல்ல மாட்டார்கள். த்வைதிகளுடைய அபிப்ராய மென்ன வென்றால், தக்க ப்ரமாணமென்று மதிக்கப் பெற்றிருக்கின்ற வசநங்களுள் சில விடங்களில் ஏதேனுமொரு விஷயத்தைப் பற்றி ஒன்றிற்கொன்று முறண் படுகின்றவையான இரண்டு வாக்யங் தோன்றிற்றாகில் அப்போது அவ்வாக்

யங்கள் நிற்க அவ்விஷயத்தைப் பற்றி ப்ரத்யக்ஷம் முதலான ப்ரமாணங்கள் எப்படிக் காட்டுகின்றன வென்று பார்த்து அவற்றிற்கு அநுகுணமாக அவை காட்டிய பொருளையே உறுதியெனக் கொள்ள வேண்டுமேயன்றி முறணுள்ள இவ்வசநங்களையே நுலாவிக் கொண்டு கிடப்பதில் பயனில்லை. ப்ராக்ருதமான பேத அபேத விஷயத்தைப் பற்றியோவெனில் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்கள் ஐயமற பேதத்தையே காட்டுகின்றன. இனி பேதத்தையே உண்மையென்று கொள்வதையன்றி வேறு எதைத் தத்வமென்கக்கூடும்? ஒருவழக்கில் வாதிப் ப்ரதிவாதிகள் தந்தம் கக்ஷியையே கெட்டியாகப் பற்றிக்கொண்டு போராடட்டும். ஸாக்ஷிகள் சொல்வதிலிருந் தல்லவோ தீர்ப்பு ஏற்படுகின்றது? என்று உனது சங்கைக்கு த்வைதாசிரியர்கள் உசிதமான ஸமாதாநத்தைக் கூறுகின்றார்கள்.

கோபால்:—அண்ணா! இது மிகவும் ந்யாயமாகவே தோன்றுகிறதே, அத்வைதாசிரியர் இதை யெதனாலேற் றுக் கொள்ள மறுத்து விட்டனரோ? எது கொண்டு தான் அபேதத்தையே தத்வமென்று கைக்கொண்டனரோ? இவ்விரண்டையும் விளக்கிக் கூறவேண்டும்.

பலராம்:—தம்பி! இக்கேள்வியை மனத்துள்ளேயே வைத்துக் கொண்டிரு. அத்வைத ஸித்தாந்தத்தின் கொள்கையை விவரிக்கும்போது யானி தற்கு விடைதருகின்றேன்.

கோபால்:—அண்ணா! அப்படியே ப்ராக்ருதமான த்வைத கொள்கைகளையே இப்போது விவரித்துக் கூறுங்கள்.

பலராம்:—த்வைத ஸித்தாந்தத்தில் ஜீவர்கள் ஈச்வரனுக்கு தாஸபூதர்களென்பது ஒரு முக்யமான விஷயம். எனவே 'பகவத் கைங்கர்யம் தான் ஜீவர்கள் பெறவேண்டிய பரம புருஷார்த்தம்' என்ற தாயிற்று.

ஸ்ரீ:

ஸநாதன தர்ம ஸம்ரக்ஷணம்.

[மஹாமஹோபாத்யாய ஸாரஸ்வத ஸர்வஜ்ஞ தட்டை ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யர்.]

இவ்வுலகில் அனைவர்களாலும் வேண்டப்படுவது புருஷார்த்தங்களே. அவைகள் தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என நான்கு விதங்களாகப் பகுக்கப் பட்டிருக்கின்றன.

சேதநைரர்த்த்யமாநா இதி புருஷார்த்தா:.

சேதநர்களால் வேண்டப்படுவதால் அவைகள் புருஷார்த்தங்கள் என வழங்கப்படுகின்றன. அவற்றுள் முதன்மை வாய்ந்திருக்கின்ற தர்ம மொன்றே அர்த்த காமங்களைவிடச் சிறப்பு வாய்ந்தது.

"சோதநாலக்ஷணோऽர்த்தோ தர்ம:"

என்று அபியுக்தர்கள் இதற்கு லக்ஷணங்கூறி யிருக்கின்றனர். மனிதன் பசு பக்ஷிகள் மரம் செடி கொடிகளைப் போல நேராகக் கண்ணால் காணக் கூடாததும் சாஸ்த்ரங்களைக் கொண்டே அறிய வேண்டியதும் நன்மைகளனைத்துக்கும் ஸாதநமாக இருப்பதுமான வஸ்து எதுவோ அதுதான் தர்மம். பரம புருஷனால் இந்த தர்மத்தை ஆதாரமாக ஏற்படுத்தி ப்ரபஞ்சம் நிலைநாட்டப் பட்டிருக்கின்றது. இந்த ப்ரபஞ்சத்தினது ஸ்வரூபம் ஸ்திதி ப்ரவ்ருத்தி இவைகள் எல்லாம் பகவானுடைய தர்ம மூலமான ஸங்கல்பத்தைச் சார்ந்திருக்கின்றன. திடமான ஆதாரமாக தர்ம மொன்று இல்லாவிடில் உலகமனைத்தும் நிலைகுலைந்து விடும். தர்மத்தை நாம் நன்கு பாதுகாத்தால் அது நம்மைப் பாதுகாக்கும். அதை அழித்தால் நம்மை அழி அழித்து விடும். இந்த விஷயத்தில்

தர்ம ஏவ ஹதோ ஹந்தி தர்மோ ரக்ஷதி ரக்ஷித: ।
தஸ்மாத் தர்மோ ந ஹந்தவ்யோ மா நோ தர்மோ ஹதோऽவதீத் ॥

என்கிற வசனம் ப்ரமாணம். ஸ்ருஷ்டிக்கு முந்தின காலத்தில் பரம புருஷன் அபௌருஷேயங்களான வேதங்களைத் தன் நாபீகமலத்தி லுதித்த நான்முகனுக்கு உபதேசித்து அவைகளின் வாயிலாக ப்ரபஞ்சத்தைப் நடக்கச் செய்து அதை உத்தரோத்தர மபிவிருத்தி யடையச் செய்ததும் இந்த தர்மத்தினாலேயே. இந்த தர்மம் என்கிற தீபப்ரகாசத்தினால் அஜ்ஞானமாகிற இருள் நீங்கி உலக முய்யவேண்டு மென்கிற எண்ணத்தினாலேயே வேதம் ப்ரஹ்மத்தினிட மிருந்து அவன் ஸங்கல்பத்தினால் ஆவிர்ப்பவித்தது. கர்மகாண்டம் ப்ரஹ்ம காண்டம் என்கிற இருவித பாகுபாட்டோடு கூட உலகத்தில் பிரகாசித்து வருகிற வேதமானது முக்ய தர்மத்தையே உபதேசிக்கிறது. ஆசார்யன் சிஷ்யனை உத்தேசித்து ஹிதோபதேசம் செய்வதாக அமைந்திருக்கும் ப்ரகரணத்தில் முதலில்

"ஸத்யம் வத, தர்மம் சர"

என்று ஸத்யம் தர்மம் இரண்டையு மல்லவோ ச்ருதிவசனம் கூறுகிறது. இதனால் ஸத்யத்திலும் தர்மத்திலுமே ச்ருதிக்கு முக்யமான நோக்கு இருப்பதாக ஏற்படுகிறது. ஸத்யம் என்கிற சப்தம் ப்ரஹ்மபரம். 'ஸத்ய சப்த வாச்யனான பரப்ரஹ்மத்தைச் சொல். அவன் எதை ஆதாரமாகக் கொண்டு ப்ரபஞ்சத்தை நடைபெறச் செய்கிறானோ அந்த தர்மத்தையும் அநுஷ்டிப்பாயாக,' என்று குரு சிஷ்யோபதேச க்ரமத்தால் ச்ருதி வெளியிடுகிறது. வேதத்தில் பூர்வமாக இருக்கிற கர்ம காண்டம் முழுவதும் தர்மத்தையே அநுஷ்டிக்கத் தக்கதெனக் கூறுகிறது. இந்த வேதத்தை மூலமாகக்

கொண்ட தர்ம சாஸ்த்ரங்களும் தர்மத்தையே வைதிக மார்க்கத்தில் நிலை நாட்டுகின்றது. மகாபாரதம், ராமாயணம் முதலிய இதிஹாஸங்களும் ஸாத்விக புராணங்களும் தர்ம சாஸ்த்ரங்களான நிபந்தன க்ரந்தங்களும் தர்மத்தையே ப்ரதிபாதிக்கின்றன. வர்ணங்கள் ஆச்ரமங்கள் அனைத்தும் தர்மத்தையே ஆச்ரயித்து நிலை பெற்றிருக்கின்றன. தனித் தனியாக எடுத்து உரைப்பதால் யாது பயன்? உலக மனைத்தும் தர்மத்தையே சார்ந்து நிற்கிறது. இந்த தர்மத்திற்குப் பரம புருஷன் நியந்தாவாக இருக்கிறான். அவ்வுடைய ஆஜ்ஞையினால் இது எங்கும் அவ்யாஹதமாக விளங்குகிறது. இது ஒன்றில்லா விடில் உலகமேயில்லை, திண்ணம். ப்ராணிகள் செய்யுங் காரியங்கள் அனைத்திலும் இந்த தர்மம் ஸாக்ஷியாக இருக்கிறது. இந்த விஷயத்தில்,

ஶ்ருதிஸ்ம்ருதிப்ரணீதோऽயம் தர்மோ வர்ணாஶ்ரமாத்மக: ஸர்வ
தயம் யஸ்ய | ஸஜஸ்ய ராஜ்ஞஶ்ச உபே வ ஸம்யக் யத்ஸ்ய ஜாநாதி
நாஸ்ய வ்ருத்தம் ||

என்கிற வசனம் ப்ரமாணம். காவ்யங்கள் நாடகங்கள் ஆக்யானங்கள் ஆக்யாயிகைகள் இதிஹாஸங்கள் புராணங்கள் தர்ம சாஸ்த்ரங்கள் சப்த சாஸ்த்ரங்கள் ந்யாயங்கள் யோக சாஸ்த்ரம் ஸாங்க்யம் மீமாம்ஸை அலங்கார க்ரந்தங்கள் மற்றுமுள்ள க்ரந்தங்களனைத்தும் தர்மம் ஒன்றையே முக்கிய வ்ருத்தியினாலும் தாத்பர்ய வ்ருத்தியினாலும் ப்ரதிபாதிக்கின்றன. வேதம் பூர்வபாகத்தினால் ஸாத்திய தர்மங்களையும் உத்தரபாகத்தினால் ஸித்த தர்மமான ப்ரஹ்மத்தையும் ப்ரதிபாதிக்கிறது. க்ருதம் த்ரேதை த்வாபரம் கலி என்று பகுக்கப் பட்டிருக்கிற நான்கு யுகங்களுக்குள் பிந்திப் பிந்தியிருக்கிற யுகங்களைவிட முந்தி முந்தி யிருக்கிற யுகங்கள் சிறந்தவைகளென்று சொல்வதும் தர்ம ஸம்பந்தத்தின் ஆதிக்யத்தினாலேயே. தர்மமென்கிற வ்ருஷபமானது க்ருத யுகத்தில் ஸத்யம் முதலிய நான்கு கால்களுடன் திடமாக நிலை பெற்றிருந்தது. அந்த யுகத்தில் தர்மங்கள் கர்த்தவ்யங்களாக இராமல் எல்லாம் க்ருதங்களாக இருந்தமையால் க்ருதம் என்றே அந்த யுகத்திற்குப் பெயர் வாய்ந்து விளங்கியது. தர்ம வ்ருஷபத்தின் பாதங்கள் பிந்தின ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொன்றாக ஒடிந்து அதற்கு க்லேசம் ஏற்படவே முறையே த்ரேதை முதலிய யுகங்கள் வரவர தாழ்ச்சியடைந்தன. இக்கலியுகத்திலோ வென்றால் தர்ம வ்ருஷபமானது மூன்று கால்களு மொடிந்து மிகுதியிருக்கிற ஒரு காலால் நிற்க ஆரம்பித்து ஸாத்யப்படாமையால் தடுமாறிக் கீழே வீழ்ந்து விட்டது. ஸநாதன தர்மம் ரக்ஷிக்கப் படாமல் போனதால் மனிதர்களின் ச்ரேயஸ்ஸுக்கள் எல்லாம் அழிந்தன

“விஶ்வஸ்ய ஜகத: ப்ரதிஷ்டா - லோகே தர்மிஷ்டம் ப்ரஜா உபஸர்பந்தி - தர்மேண பாபமபநுததி தர்மே ஸர்வம் ப்ரதிஷ்டிதம் தஸ்மாத்தர்மம் பரமம் வதந்தி”

என்று ச்ருதிகள் இந்த தர்மத்தின் பெருமையைக் கோஷிக்கின்றன. கலியின் வைபவத்தால் தர்மம் வாட்டமடைய அதர்மம் தழைத்து ஓங்க ஸாதுக்கள் மனவருத்தமடைய துஷ்டர்கள் கொந்தளிக்க பாவங்கள் நன்றாகப் பக்குவமடைகின்றன. ஸர்வ ச்ரேயஸ்ஸுக்களுக்கும் ஸாதநமாக இருக்கிற ஸநாதந தர்மமானது நன்றாகப் பாதுகாக்கப் பட்டால் அது கற்பக வ்ருக்ஷம் போலவும் காமதேநு போலவும் சிந்தாமணி ரத்நம் போலவும் வேண்டிய அபீஷ்டங்களை விளைவிக்கும். அந்தோ அதன் விநாசமானது உலகத்தை அநர்த்தங்களுக்கு ஆள்படச் செய்கிறது. இம்மையிலும் மறுமையிலும் நன்மையை விரும்புகிறவர்கள் ஸநாதந தர்மத்தை அல்லவோ பாதுகாக்க வேண்டும்.

தர்மம் ஶநைஸ்ஸஞ்சிநுயாத் வல்மீகமிவ புத்திகா: |
பரலோகஸஹாயார்த்தம் ஸர்வபூதாந்யபீடயந் ||
ம்ருதம் ஶரீரமுத்ஸ்ருஜ்ய காஷ்டலோஷ்டஸமம் க்ஷிதௌ |
விமுகா பாந்தவா யாந்தி தர்மஸ்தமநுகச்சதி ||
ஸுதர்மா ம்ருதே நிவர்த்தந்தே ஶ்ராத்தே [illegible] |
ஸாக்ஷாத் [illegible] தமேவ [illegible] அநுகச்சதி ||
ஶ்ருதிஸ்ம்ருத்யுதிதம் ஸம்யங்நிபத்தம் ஸ்வேஷு கர்மஸு |
தர்மமூலம் நிஷேவேத ஸதாசாரமதந்த்ரித: ||

இந்த வசனங்கள் தர்ம ஸம்பாதநத்திலும் தர்மரக்ஷணத்திலும் ப்ரபல ப்ரமாணங்கள். கர்மயோகத்தினாலோ ஞான யோகத்தினாலோ பக்தி யோகத்தினாலோ பரம புருஷனை ஆராதித்துப் பாவங்களை இழந்து அவன் ப்ரஸாதத்தைத் தேடி நல்ல கதியை யடைவதற்கும், மீண்டும் கர்ப்ப வாஸமிராமல் சாச்வதமான மோக்ஷ ஸாம்ராஜ்ய ஸுகத்தைப் பெறுவதற்கும், ஸநாதந தர்மமே காரணமாக இருக்கிறது. இந்த ஸநாதநதர்ம மார்க்கத்தை விட்டு வேறுவழி ஒரு ஸித்தாந்தத்திலுங் கிடையாது. துக்க ஸாகரமாக இருக்கிற ஸம்ஸாரத்தை அடியோடு வதிதச்செய்து அகண்ட பரிபூர்ண ப்ரஹ்மாநுபவ ரூபமான மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை ஆச்ரிதர்களுக்கு அளிக்கும் வ்ரதத்தைக் கைக்கொண்டிருக்கிற பரம புருஷனுடைய முகோல்லாஸத்தை உண்டு பண்ணி முக்தியை யடைவதற்கு இந்த தர்மமே முக்யமான ஸாதநம்.

வர்ணாச்ரமாசாரவதா புருஷேண பர: புமாந் ।
விஷ்ணுராராத்யதே பந்தா நாந்யத்தத்தோஷகாரக: ॥

என்கிற வசனத்தின்படி வர்ணாச்ரம தர்மாநுஷ்டானமே பகவானுக்கு முகோல்லாஸகரம், ஸம்சயமில்லை. தர்மமே மனிதனை பரிசுத்தனாகச் செய்கிறது அதே பாவநமாநது.

யச்ச்ருதோ வா த்ருஷ்டோ வா ஸ்ம்ருதோ வா கதிதோऽபி வா ।

அநுமோதிதோ வா ராஜேந்த்ர புநாதி புருஷம் ஸதா ॥

இதின் பொருள்: தர்மமானது கேட்கப்பட்டாலும், பார்க்கப் பட்டாலும் நினைக்கப்பட்டாலும் சொல்லப் பட்டாலும், அநுமோதிக்கப் பட்டாலும் மனிதனை எப்பொழுதும் பரிசுத்தனாகச் செய்கிறதென்பதுதான்.

வித்வத்பி: ஸேவித: ஸத்பிர்நித்யமத்வேஷராகிபி: ।
ஹ்ருதயேநாப்யநுஜ்ஞாதோ யோ தர்மஸ்தம் நிபோதத ॥

என்று மனுவும் இந்த தர்ம ஸ்வரூபத்தைப் பகர்ந்திருக்கிறார்.

ஸதீவ ப்ரியபர்த்தாரம் ஜநநீவ ஸ்தநந்தயம் ।
ஆசார்யம் சிஷ்யவத்பக்த்யா பித்ருவத்ஸூநுயேऽஸ்மி ।
ஸ்வாமித்வேந ஸௌஹ்ருத்வேந ப்ரேம்ணா ச ஸசிவஸ்திர ॥
பித்ருத்வேந யதா மாதா ப்ராத்ருத்வேந ச பாந்தவ: ।
யதா யுக்தஜநம் ராஜாநம் யதா ச ஸ்நேஹஸம்ஹிதம் ।
யதா விப்ராதிதிம் யோக்யம் ஸததம் ததாவநயேத் ।
யதா ச புத்ரம் தயிதம் ததைவோபசரேத்தரிம் ॥

என்கிற வசனங்களின்படி பரம புருஷனைப் பற்பல விதங்களால் உபாஸிப்பதற்கும் பாலநம் செய்வதற்கும், ஸ்நேஹம் ப்ரீதி பக்தி கௌரவம் இவைகளை முன்னிட்டு பரம புருஷனை ப்ரஸன்னனாகச் செய்து நன்மைகளை யடைவதற்கும், இந்த ஸநாதந தர்மமே ஸாதநம். இவ்வாறிருக்க, சில கலி புருஷர்கள் தூம கேதுக்கள் போல் இந்தப் பாவயுகத்தில் தோன்றி ‘தர்மம் கிடையாது, வர்ணங்கள் ஆச்ரமங்கள் ஜாதிகள் ஒன்றுமே கிடையாது’ எல்லாம் ஒன்றுதான். எவன் சாகாமலிருக்கிறான்? எவன் பிறக்காமலிருக்கிறான்? பசி தாகம் யாருக்கு இல்லை? எல்லோருக்கும் இருக்கிறது. தேகத்தைக் குத்தி ரத்தத்தை எடுத்துப்பார்த்தால், அந்த ரத்தத்தில் ப்ராஹ்மண ரத்தம் இது சூத்ர ரத்தம் அது என்று வேறுபாடிருக்கிறதா? இல்லை. எல்லாம் வயிற்றுப் பிழைப்பைக் கருதிப் படித்த சில தன்னிலத்தில் நோக்கமுள்ள கொடியவர்களால் எழுதப்பட்ட பொய் நூல்களால் ஏற்படுத்தப் பட்டவைகள். விவேகிகள் அந்தப் பொய்நூல்களை (அதாவது—வேதங்கள் ஸ்ம்ருதிகள் புராணங்கள் இதிஹாஸங்கள் தர்ம சாஸ்த்ரங்கள் இவைகளை) எல்லாம் கண்ணாலும் பார்க்கக் கூடாது. பார்த்துப் பரிஹரிக்க வேண்டியது. உலகத்திலுள்ளவர்களை வஞ்சிப்பதற்காகவே அவைகள் எழுதப்பட்டவைகள். புத்திசாலிகள் அவைகளில் நம்பிக்கை வைக்கலாகாது. எல்லோரும் ஸமாநமான அந்தஸ்துள்ளவர்களே. ஜாதியினால் ஏற்றத் தாழ்ச்சி யென்பதே கிடையாது. ஸமஸ்தர்களாக இருந்து வருவதுதான் விவேகிகளுக்கு அழகு; இவன்மேல் இவன் கீழ் இவன் சுத்தன் இவன் அசுத்தன் இவன் படித்தவன் இவன் பாமரன் என்கிற வேறுபாடுகளெல்லாம் அஜ்ஞானத்தின் சாகைகள். உள்ளபடி சாஸ்த்ரங்களைப் படித்துப் பார்த்தாலும் யுக்தியினால் தூரம் ஆராய்ந்து பார்த்தாலும் வேற்றுமை யுணர்ச்சி உண்டாவதற்கு ஆதாரம் கொஞ்சமேனு மில்லை. ஆகையால் வேத சாஸ்த்ரங்களையெல்லாம் அடியோடு விலக்கித் தள்ளிவிட்டு ஜாதிமதாசாரக் கட்டுப்பாடுகளையும் தூரத்தி அடித்துவிட்டு, நம்மிஷ்டப்படி செய்வதுதான் இக்காலத்திற்கு உசிதமானது. கல்யாணம் செய்வதிலும் போஜநம் செய்வதிலும், சாஸ்த்ரத்தினாலாவது ஆசாரத்தினாலாவது ஒரு விதமான கட்டுப்பாடுங் கூடாது. எல்லோரும் இவ்வண்ணம் ஒன்றுபட்டு வாழ்வார்களேயாகில் அப்பொழுதுதான் இந்த ஹிந்துமதம் வன்மையைப்பெறும். நித்ய வைரிகளான மகமதியர்கள் பலஹானியை யடைந்து தானாகவே ஹிந்துக்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள். இப்படிக்கின்றி, ஸநாதந தர்மத்தை அவலம்பித்து சாஸ்த்ரங்களைக் கண்ணுற்று ஜாதி வர்ணாச்ரம தர்மங்களைத் தழுவ ஆரம்பித்தால் வேற்றுமை தாண்டவமாடத் தொடங்கி, இவன் பள்ளன், இவன் பறையன், இவன் சக்கிலியன், இவன் வள்ளுவன், இவன் சூத்ரன், இவன் தட்டான், இவன் கொல்லன், இவன் நாவிதன் இவன் வண்ணான், என்று ஹிந்து மதஸ்தர்கள் பலவாறாகச் சிதருண்டு பலஹானியை யடைந்து மகமதியர்களால் ஆக்ரமிக்கப்பட்டு கொஞ்சகாலத்திற்குள் எல்லா ஹிந்துக்களும் மகம்மதியர்களாகவே ஆய்விடுவார்கள். இப்படி நேரிடப் போகும் அநர்த்தத்தைத் தீர்க்க தர்சியான மஹாத்மா, நன்றாகக் கவனித்து; வெள்ளம் வருவதற்குமுன அணைபோடுவதுபோல் முந்தியே தக்க ஏற்பாட்டைச் செய்ய முயன்று ஜாதி வர்ணாச்ரம தர்மங்களை புறக்கணித்தும், பள்ளுப் பறைகளை யெல்லாம் ஒன்றுகூட்டித் தக்க உபதேசத்தை அவர்களுக்குச் செய்து ஜாதி ஹிந்துக்களோடு அவர்களுக்கும் எல்லாவிஷயங்களிலும் ஸமவுரிமை யளிக்க முயன்றும் அவர்களுக்குள்ள ஜந்ம ஸித்தமான வறுமையை நீக்குவதற்காக தன் ஸ்வபாத்துக்கு விருத்தமான யாசகத்தன்மையையும்

கைக்கொண்டு இந்தியாவில் எங்கும் திக்விஜயம் செய்து ஏராளமான த்ரவ்யத்தை ஸம்பாதித்து அவைகளை ஆங்காங்கு இருக்கும் பள்ளன்கள் பறையன்கள் சக்கிலியன்கள் எல்லோருக்கும் அளிக்கச் செய்வித்து, கருணைக் கடல் (வெள்ளல்) தன் தேகச்ரமத்தைக் கொஞ்சமேனும் கவனியாமல் இரவு பகலாக ஹரிஜன ஸேவை பண்ணிவருகிறார். மேலும் ஜாதிஹிந்துக்களோடு தேவாலய ப்ரவேசத்திற்காகவும் தக்க முயற்சிசெய்து வருகிறார். முந்தி லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலில் ஒருவரும் ப்ரவேசிக்கக்கூடாது அதை விலக்க வேண்டுமென்று மும்மரமாக வேலைசெய்த மகாத்மாவே, தன் ஸத்ய ப்ரதிஜ்ஞையை ஹரிஜனங்களுக்காக இழந்து ஆலயப்ரவேச மசோதாவானது விரைவில் சட்டமாக ஏற்பட்டு அநுஷ்டானத்துக்கு வந்து ஹரிஜனங்களுடைய உந்நதியைத் தன் கண்ணால் பார்த்துத் தீரவேண்டும் என்கிற எண்ணத்தினால் நல்ல இருப்பை இழந்து இரவு பகலாகப் பாடுபடுகிறார். அந்தோ கலி புருஷன் ஆட்சியை நான் என்ன சொல்வேன்? இக்காலத்துக்குத் தக்க ஒரு மஹாத்மா ஏற்பட்டாலும், அந்த மஹாத்மாவுக்குத் தக்க சிஷ்யர்கள் வாய்ந்ததும் அவர்கள் உலக நன்மையைப்பற்றி மஹாத்மாவோடு சேர்ந்து தீர்க்காலோசனை செய்து முடிவுக்கு வந்திருக்கிறதும், அவர்கள் புத்தி திரும்பியிருக்கிற மாதிரியும் அந்த புத்தியின் பரிபாகத்திற்குத் தக்க வண்ணம் பரோபதேசம் செய்வதும் ஸநாதநிகளிடம் வைரமேற்பட்டிருப்பதும் வெகு விநோதமாக இருக்கின்றன.

" [illegible] "

என்கிற வசநத்தின்படி எந்த வசநத்தைச் சொன்னாலும், கேட்டாலும் ஸாதுக்கள் வெட்கிப்பார்களோ அந்த அஸப்ய வசநங்களை உரக்க ஜனங்கள் மத்தியில் சொல்லிக்கொண்டு ஆநந்த மடைகிறார்கள்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே [illegible] நம:

ஸ்ரீ வைஷ்ணவர்களின் உபய வேதாந்தங்கள்

[ஓரகடம் ஸ்ரீ. உப. வெ. ஸுதர்சநாசார்யர், தமிழ்ப்பண்டிதர்.]

ஸ்ரீய:பதியும், நிகில லோக சரண்யனும், கல்யாணகுணகண மஹாநிதியுமான ஸர்வேஸ்வரன், லோக ஸம்ரக்ஷணார்த்தமாய் முதலில் வேதங்களை ப்ரம்ஹாவுக்கு உபதேசித்து, அவர் முகமாய் சாஸ்த்ரங்களை ப்ரகாசிப்பித்தருளினான். பிறகு, நாரத பராசர சுக சௌநகாதி மஹர்ஷிகளால் அத்யாத்ம வித்யைகளையும் வெளியிட்டான்; வ்யாஸ பராசராதிகளை அநுப்ரவேசித்துப் பாரத சாரீரகாதிகளை ப்ரவர்த்திப்பித்தான்; கீதாசார்யாதி அவதாரங்களால் தானே தத்வ ஹிதங்களைத் தினவறப் போதித்தான். இவற்றில் எல்லாம் உலகம் திருந்தாமை கண்டு,

'யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத।
அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥"

என்று அருளிச் செய்தபடி, அபிநவ தசாவதாரங்கள் போலே மயர்வற மதிநலமருளப்பெற்ற பராங்குச பரகாலாதிகளாகவும், ஸ்ரீமந் நாதமுனிகள் முதலிய ஆசார்ய ரூபமாகவும் தானே அவதரித்து ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை நிலை நிறுத்தினான். சிலகாலம் சென்றதும் ஆரண நூல் வழிச் செவ்வை யழித்திடும் ஹைதுகர்களான பாஷண்டர்களின் அதிக்ரமத்தால் ஸ்ரீ வைஷ்ணவஸம்ப்ரதாயத்துக்குச் சிறிது ஹாநி ஏற்படும்போல் தோன்றினவுடன், ஸ்வகண்டா வதாரமான ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனாக அவதரித்து, அப்பாஷண்டிகளை வாதத்தில் வென்று, அநேக க்ரந்தங்களைச் செய்தருளி, தனது நல்லதோர் அருளினால் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை நிலை நாட்டினான்.

பகவான் பக்தர்களுக்காகவே சாஸ்த்ரங்களையும், அவற்றை உபதேசிக்க ஸதாசார்யர்களையும் தந்திருக்கிறான். சிலர் இந்த ரஹஸ்யத்தைக் கொஞ்சமேனும் அறியாமலும், ஹிதாஹித விசாரம் செய்யாமலும், மூர்க்க ஜந உபதேசங்களால் ஸத் ஸம்ப்ரதாயத்தையும் ப்ராஹ்மண்யத்தையும் இழந்து, வர்ண ஸாங்கர்யம் செய்ய வேண்டுமென்றும், ஹரிஜநங்கள் எனப்படும் பஞ்சமர்களை ஆலயப்ரவேசம் செய்விக்க வேண்டுமென்றும் தீவ்ரமாக முயற்சித்து, ஆங்காங்குக் கூட்டங்களைக் கூட்டி, ம்லேச்சாதிகளுடன் ஸஹ போஜநம் முதலியன செய்து, அம்மாதிரியாகவே தம் இஷ்டர்களையும் செய்விக்க முயல்கிறார்கள். என்னே கலி கோலாஹல க்ரீடை!!

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"

என்று ஒருவனுக்குப் பிறப்பிறப்புகள் ஓயாமல் மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன.

"எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான்
யாதினும் அரிதரிது காண்
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
ஏது வருமோ அறிகிலேன்"

என்றபடி பல்வகைப் பிறப்புகளில் மானிடப் பிறவியே மிகவும் அருமையானது. அதிலும் ப்ராம்ஹண ஜந்மம் ஒருவனுக்குக் கிடைப்பது அருமையினும் அருமை. இவ்வாறு அருமையாகக் கிடைத்த இந்த ஜந்மத்தில் நமது சாஸ்த்ர விஹிதமான கார்யங்களைச் செய்து, அவற்றின் மூலமாய் ஏற்படும் பகவத் பாகவத ஆசார்ய கடாக்ஷத்தினால் ஒருவன் நான்காவது புருஷார்த்தமான மோக்ஷத்தை அடையவேண்டும்.

ப்ராஹ்மணன், பிறந்தவுடன் மூன்று விதத்தால் கடன்காரன் ஆகின்றான். அவன் அக்கடனைத் தீர்த்த பிறகே மோக்ஷத்தை விரும்பவேண்டும். அவையாவன:—

1. கர்ப்பாஷ்டமத்தில் உபநயநத்தைச் செய்வித்து, குருமுகமாக ஸ்வசாகையை அத்யயநம் செய்து மஹர்ஷிகளை த்ருப்திசெய்து வைப்பது. இது ருஷியஜ்ஞம் எனப்படும்.

2. வேதத்தில் சொல்லிய யாகாதிகளைச் செய்து, ஹவிர்ப் பாகங்களைத் தேவர்களுக்குக்கொடுத்து, அவர்களை த்ருப்திசெய்து வைப்பது. இது தேவயஜ்ஞம் எனப்படும்.

3. ஸத்புத்ரர்களை உண்டுபண்ணி பித்ருக்களை த்ருப்திசெய்து வைப்பது. இது பித்ருயஜ்ஞம் எனப்படும். இம் மூன்று விதமான ருணங்களைத் தீர்க்காத ப்ராம்ஹணன் ப்ராம்மஹனாக மாட்டான், இவ்விதம் தர்மங்களைச் செய்ய வேதாத்யயநம் மிக்க அவஸ்யம். வேதாத்யயநம் செய்யாதவனுக்கு வ்ராத்யதை சூத்ரத்வம் முதலியன ஸம்பவிக்கின்றன என்பது வேதத்தால் தெரிகிறது. அதற்காக இப்பொழுது பொட்டைப் பாடம் செய்வதுபோல் உருவிட்டு ஓதுதல் உசிதமாகாது; அர்த்த ஜ்ஞாநத்துடன் அத்யயநம் செய்வதே உத்தமம். எவனுக்கு அர்த்த ஜ்ஞாநமிருக்கிறதோ அவனே மோக்ஷத்தை அடைகிறானென்றும், அர்த்த ஜ்ஞாநமில்லாதவனிடத்தில் வேதாத்யயநம் ப்ரகாசிக்க மாட்டாது என்றும் வேதமே கூறுகிறது. வேதத்தின் அர்த்த ஜ்ஞாநம்: சிக்ஷா, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்று சொல்லப்படும் ஆறு அங்கங்களின் அப்யாஸத்தால் ஏற்படக் கூடியது. இவ்விதம் ப்ராம்ஹணன் ஷடங்க வேதாப்யாஸம் செய்து அநுஷ்டாநங்களைச் செய்து வரவேண்டும். இவ்வாறு செய்தவனே ப்ராம்ஹணோத்தமனாகிறான்.

இப்படியே, உபய வேதாந்த ப்ரவர்த்தகனாக வேண்டுவோன் ஒருவன், மேற்கூறிய வேதத்தை ஷடங்கங்களுடன் அத்யயநம் செய்து அறிதல் போலவே வேத துல்யமான த்ராவிட ப்ரபந்தங்களையும் ஷடங்கங்களுடன் அத்யயநம் செய்து அறிதல் வேண்டும். த்ராவிட வேதங்கள் நான்கு. அவை:— திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி, பெரிய திருவந்தாதி என்பன. அவற்றுள், ருக்வேத ஸாரம் திருவிருத்தம்; யஜுர்வேத ஸாரம் திருவாசிரியம்; ஸாமவேத ஸாரம் திருவாய்மொழி; அதர்வண வேதஸாரம் பெரிய திருவந்தாதி. இவற்றிற்கு ஆறங்கங்கள்:—திருமங்கையாழ்வார் அருளிச்செய்த அறுவகை ப்ரபந்தங்கள். அவையாவன:— பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பன. மயர்வற மதிநல மருளப்

பெற்ற ஆழ்வார்கள் அருளிச்செய்த இத்ராவிட ப்ரபந்தங்கள் வேத துல்யங்கள் என்பது, செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளிய வோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே.” “[illegible] ஸம்ஹிதாநாம் [illegible]” இத்யாதி ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் ஸ்ரீஸூக்திகளால் நன்கு தெளிவாகிறது.

இனி, ப்ரபந்ந ஜந ஸந்தாந கூடஸ்தரும், ஆதிகுலபதியும், ஸ்ரீமந் நாராயணன் ஸ்ரீ கௌஸ்துப ரத்நம் ஸ்ரீ விஷ்வக்ஸேநர் முதலியோரின் அம்சமும், மற்றை ஆழ்வார்களுக்கு அங்கியுமான நம்மாழ்வாரைக் குறித்துச் சில விஷயங்கள் விசாரிப்போம். லோகாதீதமான ப்லவித மஹிமை யுடைமையால் நம்மாழ்வார் நாராயணனது அம்சமெனப் படுவர். ‘வங்கிப்புரத்து நம்பி, எம்பெருமான் தான் இப்படி வந்து அவதரித்தானென்பர்; இப்படிச் சொல்லுகைக்கு அடி ஆழ்வாருடைய ப்ரபாவத்தாலே’ என்ற ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை வ்யாக்யாந வாக்யம் காணத்தக்கது. ஆழ்வார் தமது திருவாய்மொழியில்

“தானேயானென்பானாகித் தன்னைத்தானே துதித்து”

என்றும்,

“நண்ணாவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த
எண்ணாதனகளெண்ணும் நன்முனிவரின்பம் தலைசிறப்ப
பண்ணார் பாடலின் கவிகள்யானாய்த் தன்னைத்தான் பாடித்
தென்னாவென்னு மென்னம்மான் திருமாலிருஞ் சோலையானே”

என்றும், பகவானுடைய ஸாந்நித்ய விசேஷம் தம்மிடத்து இருப்பதாகத் தாமே அருளிச் செய்தார். ஆழ்வாரைப் பகவானுடைய அம்ச மென்றும் புராணங்கள் கூறுகின்றன. ‘தீவினையாளரால் கெடுக்கப்பட்ட கலியுகத்திலேயே, விச்வாதிகரும் விச்வமயருமான விஷ்ணு, அடியார்கள் பக்கல் மிக்க அன்பினால் அனைவரையும் பாதுகாத்தற் பொருட்டுப் பக்தரூபியாய்த்தோன்றினார்’ என்று ருஷிகள் சொல்வர். “அத்ரியும் ஜமதக்நியுமாகிய ப்ராம்ஹணோத்தமர்களுக்குப் பிள்ளைகளான தத்தாத்ரேயனும், பரசுராமனுமாக முதல் யுகத்திலே முதல் வர்ணத்திலும், க்ஷத்ரியரான தசரத சக்ரவர்த்திக்குப் பிள்ளையாகிய இராமபிரானாக இரண்டாம் யுகத்திலே இரண்டாம் வர்ணத்திலும், யயாதி சாபத்தாலே அபிஷேக ப்ராப்தியற்று க்ஷத்ரியரில் தாழ்ந்து, வைபர்ய ப்ராயரான யது குலத்தில் தோன்றிய வஸுதேவர்க்கும் கோவைப்ராயரான நந்தகோபர்க்கும் பிள்ளையாகிய கண்ணபிரானாக மூன்றாம் யுகத்திலே மூன்றாம் வர்ணத்திலும்,

நியதம் ஊர்ணிவாஸோ நுயாந

ஸ்ரீநிவாஸ ஸம்ஸேவ ஐதருவிஷ்ணும் ।

தஷ்வாஸ்ரீஸ்வாதிஜாதவம்ஸ

ஷுதிவ மேத்ரு வாஸாதாதாநாவேடி ॥

ஆக இப்படி க்ருத யுகாதி க்ரமத்திலே ப்ராஹ்மணாதி வர்ணக்ரமத்தால் இந்நிலவுகத்திலே அவதரித்து வந்த ஸர்வேச்வரன்தானே, நான்காவதான கலியுகத்திலே நான்காம் வர்ணத்திலே காரியார்க்குப் புதல்வராகிய நம்மாழ்வாராய் வந்து அவதரித்தான்" என்று விவரம் கூறுதலுமுண்டு. இப்படி அம்சாவதார மென்பதன்றி, ஆவேசாவதாரம் என்பர் சிலர். ஸ்ரீமந்நாராயணன் வ்யாஸர் முதலானவர்களிடம் ஆவேசித்து வேதங்களை வகுத்தல் முதலிய கார்யங்களைச் செய்து முடித்தாற்போல, நம்மாழ்வார் பக்கல் ஆவேசித்துத் தமிழ் வேதங்களை வெளியிட்டருளினான் என்றுங் கூறுவதுண்டு.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகாய நம:

மீமாம்ஸா ஸங்க்ரஹம்

அவதாரிகை

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.]

1. வேதத்தின் அர்த்தத்தை விசாரிக்கிற சாஸ்த்ரத்திற்கு மீமாம்ஸை யென்று பெயர். அவ்வேதத்தின் முதல் பாகத்தின் அர்த்தத்தை விசாரிப்பது பூர்வ மீமாம்ஸை. இதை வ்யாஸருடைய சிஷ்யனான ஜைமினி என்கிற ருஷி ஸூத்ரமாகச் செய்திருக்கிறார். அதில் பன்னிரண்டு அத்யாயங்கள் இருக்கின்றன. முதல் ஆறு அத்யாயங்களை உபதேசகாண்டம் என்றும் பின் ஆறு அத்யாயங்களை அதிதேசகாண்ட மென்றும் சொல்லுகிறது. இந்த சாஸ்த்ரத்தில் தர்ம மென்பது விசாரிக்கப்படுகிறது. தர்ம மென்றால் ஒருவனுடைய க்ஷேமத்திற்கு ஸாதநமாக வேதத்தில் விதிக்கப்பட்ட கர்மம்.

2. முதல் அத்யாயத்தில் இவ்விதமான கர்மங்களைச் செய்வதற்கு என்ன ப்ரமாண மிருக்கிறது என்று விசாரிக்கப்படுகிறது. ப்ரமாணங்கள்—ச்ருதி, ஸ்ம்ருதி, ஆசாரம் என மூன்று விதங்கள். ச்ருதியிலும், ப்ராஹ்மணம் மந்த்ரம் அர்த்தவாதம் என மூன்று பிரிவுகள் இருக்கின்றன. ப்ராஹ்மணம்

இன்ன கர்மத்தைச் செய் என விதிப்பது. அதுதான் உயர்ந்த ப்ரமாணம். அதற்கு உதவி செய்வதாலோ அல்லது அதில் சொன்ன விஷயங்களைச் சொல்வதாலோ மற்றவைகள் ப்ரமாணமாகின்றன. இரண்டாவது அத்யாயத்தில், கர்மங்கள் ஒன்றா? பலவா? என்பது விசாரிக்கப்படுகிறது. அதாவது—ததாதி (கொடுக்கிறான்) யஜதி (யாகஞ்செய்கிறான்) ஜுஹோதி (ஹோமம் செய்கிறான்) என்கிற சொற்கள் ஒரே கர்மத்தைச் சொல்லுகின்றனவா? அல்லது வெவ்வேறு கர்மங்களைச் சொல்லுகின்றனவா? "ஸமிதோ யஜதி - தநூநபாதம் யஜதி" என்று இரண்டு வாக்யங்களிருக்கின்றன. அவைகள் ஒரே ப்ரதாந கர்மத்தைச் சொல்லுகின்றனவா? அல்லது இரண்டு ப்ரதாந கர்மங்களைச் சொல்லுகின்றனவா? என்ற இவ்விதமான விசாரம் செய்யப்படுகிறது. மூன்றாவது அத்யாயத்தில், ஒரு இடத்தில் சொல்லிய கர்மங்களில் எது ப்ரதாநமானது? அதற்கு அங்கங்கள் [அதாவது அதற்கு உதவி செய்கிறவைகள்] எவை? இதை எந்த ப்ரமாணங்களாலே அறியலாம்? அந்த ப்ரமாணங்களுக்குள் எது வலிமையுள்ளது? என்பது விசாரிக்கப்படுகிறது. நான்காவது அத்யாயத்தில், விதிக்கப்பட்ட கர்மங்கள் எந்த ப்ரயோஜநத்திற்காக என்று விசாரிக்கப்படுகிறது. உதாரணம்:—'கொதிக்கிற பாலில் தயிரைச் சேரு; அது விச்வே தேவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஆமிக்ஷாவாகிறது' என்ற வொரு விதியிருக்கிறது. பால் திரிந்து சக்கையும் தண்ணீருமாகிறது. சக்கைக்கு ஆமிக்ஷா என்றும், தண்ணீருக்கு வாஜிநம் என்றும் பெயர். இந்தக் கொதிக்கிற பாலில் தயிரைச் சேர்த்ததற்குப் பிரயோஜநம் ஆமிக்ஷா வுண்டாவது மாத்ரமா? அல்லது வாஜிநம் உண்டாவது கூடவா? இவை போன்றவைகள் விசாரிக்கப் படுகின்றன. ஐந்தாவது அத்யாயத்தில் ப்ரதாந கர்மங்களையும் அவைகளுக்கு உதவியானவைகளையும் எந்த வரிசையாய்ச் செய்கிறதென்று விசாரிக்கப்படுகின்றது. ஆறாவது அத்யாயத்தில் அக்நி ஹோத்ரம் தர்சம் பூர்ணமாஸம் முதலானவைகளை யார் செய்யத் தகுந்தவன்? ஏழையா? பணக்காரனா? ப்ராஹ்மணனா? சூத்ரனா? ஆணா? பெண்ணா? என்பதும், முக்யமான த்ரவ்யம் அகப்படாமற் போனால், அவைகளுக்குப் பதிலாக எதை வைத்துக் கொள்ளலாம் என்பதும் ஆக இவை முதலானவைகள் விசாரிக்கப்படுகின்றன.

3. மீமாம்ஸா சாஸ்த்ரம் என்ன சொல்லுகிறது என்றும், எந்த ந்யாயங்கள் அதில் தீர்மானிக்கப்படுகின்றன வென்றும் அறிவதற்கு வேண்டிய அதிகரணங்கள் மாத்ரம் எழுதப்படுகின்றன.

4. ஒவ்வொரு அதிகரணத்திலும் நான்கு அவயவங்கள், (பாகங்கள்) இருக்கின்றன. அவை, விஷயம் ஸந்தேஹம் பூர்வ பக்ஷம் ஸித்தாந்தம் என்பனவாம். விஷயம் என்பது வேதத்தின் வாக்யம். அதற்கு எப்படி அர்

த்தம் சொல்லலாம்? இப்படி சொல்லலாமா? அல்லது வேறுவிதமாகச் சொல்லலாமா? என்பது ஸந்தேஹம். முதலில் தோன்றும் அர்த்தம் பூர்வ பக்ஷம், விசாரித்து முடிவு செய்யப்படும் அர்த்தம் ஸித்தாந்தம். ஒரு அதிகரணத்திற்கும் அடுத்த அதிகரணத்திற்கும் இருக்கும் ஸம்பந்தத்தை ஸங்கதி யென்று சொல்லுகிறது. அதை, இதைப் படிக்கிறவர்கள் தாமே பார்த்துக் கொள்ளலாமென்று சொல்லி ஜைமிநீய ந்யாயமாலையைச் செய்தவர் அதைக் காட்டுகிறதில்லை. இங்கேயும் முக்யமான அதிகரணங்களை மட்டும் எழுதுவதால் ஸங்கதி யென்கிற ஐந்தாவது அவயவத்தைச் சொல்ல வில்லை.

முதல் அத்யாயம்—முதல்பாதம்.

5. மீமாம்ஸா சாஸ்த்ரத்தை ஆரம்பிக்க வேண்டியதா? அல்லது வேண்டியதில்லையா? வேதத்தில் "ஸ்வாத்யாயோத்யேதவ்ய:" [ஒருவன் தன்னுடைய வேதத்தை அத்யயநத்தாலே தெரிந்துகொள்ள வேண்டியது] என்று ஒரு விதியிருக்கிறது. அத்யயநம் என்பது, ஒரு குரு வேதத்தைச் சொல்ல அவர் பின்னாலே அதைச் சிஷ்யன் சொல்வதுதான். இந்த விதியைக் கொண்டு சாஸ்த்ரத்தை ஆரம்பிக்கலாமா? அல்லது வேண்டாமா? என்பது இவ்விடத்தில் ஏற்படும் ஸந்தேஹம். அதற்காக விசாரிக்க வேண்டியது அத்யயநத்தினாலே வேதத்தின் எழுத்தை மாத்ரம் தெரிந்து கொள்ளவேண்டியதா? அல்லது அதன் அர்த்தத்தையுங் கூடவா? எழுத்து மாத்ரமானால், விசாரம் வேண்டியதில்லை. அர்த்தமும் தெரியவேண்டுமானால் கட்டாயம் விசாரிக்க வேண்டியது.

பூர்வ பக்ஷம்:—1 அத்யயநத்தால் வேதத்தின் எழுத்தை மாத்ரம் தெரிந்து கொள்ள வேண்டியது. 'வேதத்தின் அர்த்தத்தையும் அறிவதற்காக இந்த விதி' என்று சொல்லுகிறவரைக் கேட்போம்:—இந்த விதியானது அபூர்வ விதியா? அல்லது நியம விதியா? அபூர்வ விதி யென்றால், விதியில்லா விட்டால் எது உண்டாகாதோ அதை விதிப்பது. இந்த விதி இல்லா விட்டால் அத்யயநம் பண்ணமாட்டார்கள் என்று சொல்லமுடியாது. ஒருவன், தனக்குப் பாரதம் தெரிய வேண்டுமானால் எப்படி அதைப் படிப்பனோ அப்படியே வேதத்தில் சொல்லிய விஷயங்களை அறிய விரும்புகிறவன் தானே அதைப் படிப்பன். ஒருவன் எந்தக் கர்மத்தைத் தானாகவே செய்வனோ, அதை வேதம் விதிக்கவேண்டியதில்லை. இந்த அத்யயந விதியை நியம விதி யென்றும் சொல்ல முடியாது. நியம விதிக்கு உதாஹரணம். தர்ச இஷ்டிக்குப் புரோடாசம் வேண்டும். அதற்காக நெல்லை யெடுத்து அரிசியாகப் பண்ணவேண்டும். அதைக் குத்தியுஞ் செய்யலாம், நகத்தினாலும் உமியை யெடுத்து விடலாம். வேதமானது "வ்ரீஹீநவஹந்தி," (நெல்லைக் குத்தவேண்டியது) என்று விதிக்கிறது. குத்தியே அரிசியாய்ப் பண்ண வேண்டியது; நகத்தால் உமியை யுரிக்கக் கூடாது, என்பது இந்த விதியின்

பொருள். இது நியம விதி. 'தர்ச இஷ்டியில் புரோடாச யாகத்தால் ஒரு அபூர்வம் உண்டாகிறது. நெல்லைக் குத்தி அரிசி பண்ணுவதால் உண்டாகும் ஒரு சின்ன அபூர்வம் அதற்கு உதவி செய்கிறது என்று கல்பிக்கிறோம். (1) ஆகையால் நெல்லைக் குத்தவேண்டும் என்கிற விதி நியமவிதி. இங்கேயோ புஸ்தகத்தைப் பார்த்து வேதத்தின் அர்த்தத்தைத் தெரிந்து யஜ்ஞங்களைச் செய்யலாம். 'அப்படிச் செய்யக்கூடாது. குருவினிடம் போய்த் தான் அதைத் தெரிந்து கொள்ளவேண்டும்' என்று ஏற்பட்டால் அத்யயந விதியை நியம விதி யென்று சொல்லலாம். அப்படி யேற்படுவதற்கு அந்த விதியை யஜ்ஞங்களைச் சொல்லுமிடங்களில் சொல்லியிருக்கவேண்டும். அவ்விடங்களிற் சொல்லவில்லை.' அதைத் தனியாய்ச் சொல்லியிருக்கிறது. ஆகையால் இது நியம விதியாகமாட்டாது. இப்படி இது இரண்டு விதமான விதியும் இல்லாததனால் வேதத்தின் எழுத்தை மாத்ரம் தெரிந்து கொண்டால் போதும்; அர்த்தத்தைத் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

2. அத்யயந விதியானது இரண்டுவித விதியாகவும் இல்லாவிட்டால் அதற்கு என்ன கதி? என்றால், அத்யயநத்தின் பலன் ஸ்வர்க்கத்தை அடைவது தான் என்று சொல்லவேண்டும். இந்தப் பலன் கிடைக்கும் என்று சொல்லாவிட்டாலும் 'விஶ்வஜிதா யஜேத' என்கிற இடத்தில் போல் ஸ்வர்க்கத்தைப் பலனாகக் கல்பிக்கக்கூடும். (2)

3. மேலும் "வேதமதீத்ய ஸ்நாயாத்" என்று விதியிருக்கிறது. வேதத்தை அத்யயநம் பண்ணி ஸமாவர்த்தநம் என்கிற கர்மத்தைக் கல்யாணத்திற்குப் பூர்வாங்கமாகச் செய்யவேண்டியது. இரண்டிற்கும் நடுவில் குருவின் வீட்டிலிருந்து மீமாம்ஸையைப் படிப்பதற்குக் காலமில்லையே. ஆகையால், அத்யயந விதியைக் கொண்டு மீமாம்ஸையை ஆரம்பிக்க வேண்டியதில்லை.

---

1 செய்து முடிந்தவுடனே கர்மங்கள், போய் விடுகிறபடியால் அவைகளின் பலனை எது கொடுக்கும் என்றால், கர்மத்தினால் ஒரு சக்தி யுண்டாகி பலனைக் கொடுத்து பிறகு அது போய்விடுகிற தென்று கல்பிக்க வேண்டும். கல்பிப்பது என்பது ஒரு ப்ரமாணத்தாலும் ஏற்படாமல், சில விரோதங்களைத் தீர்ப்பதற்காக ஒப்புக் கொள்வது. இந்தச் சக்தி கர்மம் செய்தவனிடமிருக்கிறது. அதற்கு அபூர்வம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். தர்ச இஷ்டியில் புரோடாச யாகத்தால் ஒரு அபூர்வம் உண்டாகிறது. நெல்லைக் குத்தி அரிசி பண்ணுவதால் ஒரு சின்ன அபூர்வம் உண்டாகிறது. அது பெரிய அபூர்வத்துடன் சேர்ந்து யாகத்தின் பலனை அடைவதற்கு உபயோகப் படுகிறது.

2 விச்வஜித் யாகத்திற்குப் பலனைக் கல்பிக்க வேண்டு மென்றும் அந்தப்பலன் ஒன்றாகவே இருக்கவேண்டு மென்றும் அது ஸ்வர்க்க மென்றும் 4வது அத்யாயத்தில் 3வது பாதம், 5, 6, 7, வது அதிகரணங்களில் தீர்மானிக்கப் படுகிறது.

ஸித்தாந்தம்:—பூர்வ பக்ஷத்தில் இரண்டாவது பாராவில் சொன்னது ஒப்புக்கொள்ளத் தகுந்ததன்று. த்ருஷ்ட பலனை (எவனுக்கும் தெரியக் கூடிய பலனை) எங்கே சொல்லக்கூடுமோ, அவ்விடத்தில் அத்ருஷ்ட (கண்ணுக்குத் தென்படாத) பலனைக் கல்பிப்பது ந்யாயமன்று. இதை யெல்லாரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அத்யயநத்திற்கு த்ருஷ்ட பலன் வேதத்தின் அர்த்தத்தை அறிவது. இதை விட்டு ஸ்வர்க்கம் என்கிற பலனை ஏன் கல்பிக்க வேண்டும் ?

அத்யயந விதி அபூர்வ விதியாக இருக்கவேண்டாம்; நியம விதியாயிருக்கலாம். இந்த விதியை ஒரு யஜ்ஞத்தைச் சொன்ன விடத்தில் படித்திருந்தால் அந்த யஜ்ஞத்தாலே உண்டாகும் அபூர்வத்திற்கு மாத்ரம் அத்யயநத்தால் உண்டாகும் சின்ன அபூர்வம் உதவும். தனியாய்ச் சொல்லியிருப்பதால் ஒருவன் செய்யும் எல்லா யஜ்ஞங்களாலும் உண்டாகும் அபூர்வங்களுக்கு இது உதவி செய்கிறது.

பூர்வபக்ஷத்தின் மூன்றாவது பாராவில் சொன்னதும் சரியன்று. வேதத்தைப் படிப்பதற்குப்பின் ஸமாவர்த்தநம் செய்யவேண்டு மென்று சொல்லியிருக்கிறதே யன்றி உடனே அதைச் செய்யவேண்டுமென்று சொல்லவில்லை. ஆகையால், இரண்டு வேலைகளுக்கும் நடுவில் மீமாம்ஸையைப் படிக்க இடம் இருக்கிறது.

இங்கே ஒரு சிறிய கேள்வி:—' வேதத்தைப் படிக்கிறவன் அத்துடன் வ்யாகரணத்தையும் மற்ற அங்கங்களையும் படிக்கிறானே. அவனுக்கு வேதத்தின் அர்த்தம் தெரியுமே. அவன் எதற்காக அர்த்தத்தைப் பற்றி விசாரம் செய்யவேண்டும்?' என்பது இதற்கு பதில்:—அர்த்தம் தெரியுமானாலும் ஸந்தேஹம் உண்டாகும்போது விசாரமில்லாமல் முடிவு செய்யமுடியாது. ஏனென்றால் "அக்தா: சர்க்கரா உபதத்ஹாதி" என்று விதியிருக்கிறது. மண்ணுடன் கலந்திருக்கும் கருங்கல் சல்லிக்கு " சர்க்கரா " என்று பெயர். அவைகளை எண்ணெய் போன்ற பிசுக்குள்ள த்ரவ்யத்தில் தோய்த்து ஆஹவநீய அக்நிக்கு இடம் பண்ணவேண்டியது. இப்படித் தோய்ப்பதற்கு அஞ்ஜநம் என்று பெயர். இந்த அஞ்ஜநத்தை யெப்படிச் செய்கிறது ? எண்ணெய் முதலானவைகளாலேயா ? அல்லது நெய்யினாலேயா ? இந்த ஸந்தேஹத்தை வேதமாவது வ்யாகரணமாவது சொற்களுக்கு அர்த்தம் சொல்லும் நிருக்தமாவது தீர்க்காது. விசாரம் செய்தால், ' நெய் தேஜஸ் அல்லவா ?' என்று பின்னாலே வருகிற விதியைச் சேர்ந்த வாக்யத்தைப் [வாக்ய சேஷத்தை] பார்த்து நெய்யினாலேயே அஞ்ஜநம் செய்யவேண்டிய தென்று முடிவு செய்யலாம். ஆகையால், விசார சாஸ்த்ரம் ஆரம்பிக்கவேண்டியதுதான். [அதிகரணம்—1]

அத்யயந விதியினாலே, ப்ராஹ்மணன் முதலான மூன்று ஜாதியர்கள் தாம் வேதத்தை அத்யயநம் பண்ணலா மென்று ஏற்படுகிறது. எப்படியென்றால்:— "வஸந்தே ப்ராஹ்மணமுபநயீத க்ரீஷ்மே ராஜந்யம் சரதி வைச்யம்" என்று விதிகளிருக்கின்றன. அதன் பொருள்:—வஸந்த ருதுவில் ப்ராஹ்மணனுக்கும், க்ரீஷ்ம ருதுவில் ராஜாவுக்கும், சரத்ருதுவில் வைச்யனுக்கும் உபநயநம் செய்என்பது. 'ப்ராஹ்மணனுக்கு,' 'ராஜாவுக்கு ' 'வைச்யனுக்கு ' என்று தமிழில் அர்த்தம் எழுதியிருந்த போதிலும் அந்த சொற்களுக்கு விதி வாக்யத்தில் இரண்டாவது விபக்தி (வேற்றுமை)யைக் காட்டும் ப்ரத்யயம் (விகுதி) இருக்கிறது. அவைகளின் பொருள் ' ப்ராம்ஹணனை ' ' ராஜாவை,' ' வைச்யனை ' என்பதாம். ஆகையால் அவர்களுக்கு உபநயநத்தால் ஒரு ஸம்ஸ்காரம் செய்யப் படுகிறது என்பது ஏற்படுகிறது. ஸம்ஸ்காரம் என்றால் யோக்யதை, அல்லது தகுதி. இந்த உபநயநத்தால் இந்த ஸம்ஸ்காரத்தைப் பெற்றவர்கள் இதைக்கொண்டு என்ன செய்ய வேண்டு மென்று தேடுகிறார்கள். வேதம் ' யார் என்னைப் படிக்கப் போகிறார்களா?' என்றுதேடுகிறது. அது இந்தத் தகுதியைப் பெற்றவர்களைப் பிடித்துக் கொள்ளுகிறது. இவர்கள் அகப்பட்ட பிறகு வேறு ஒருவரையும் தேடுகிறதில்லை. சூத்ர ஜாதிக்கு உபநயநம் விதிக்காததனாலே, அவர்களுக்குத் தகுதியுமில்லை; அவர்களை வேதம் தேடுகிறது மில்லை. ஆகையால் அவர்கள் வேதத்தைப் படிக்கக் கூடாதவர்கள் (சாஸ்த்ர தீபிகை பக்கம்—6.)

6. மீமாம்ஸா சாஸ்த்ரத்தை ஆரம்பிக்கவேண்டிய தென்று முதல் அதிகரணத்தில் தீர்மானிக்கப்பட்டது. இந்த அதிகரணத்தில், ' அதைச் செய்யமுடியுமா,?' என்பது விசாரிக்கப் படுகிறது.

பூர்வபக்ஷம்—இதைச் செய்யமுடியாது. இதற்கு விஷயம் தர்மம். அதற்கு லக்ஷணமும் சொல்லமுடியாது; ப்ரமாணமும் கிடையாது. ஒரு வஸ்துவை அதே ஜாதி வஸ்துக்களிலிருந்தும் வேறு ஜாதி வஸ்துக்களிலிருந்தும் பிரிக்கக் கூடியதாயும் எல்லாருக்கும் தெரிந்ததாயுமான அந்த வஸ்துவினிடத்தில் உள்ள ஒரு ஆகாரத்தை லக்ஷணம் என்று சொல்லுகிறது. இதைக் கொண்டு ஒரு வஸ்து இருக்கலாம் என்கிற அறிவு உண்டான பிறகு அந்த வஸ்து இருக்கிறதா என்று தேடி ப்ரமாணத்தினாலே அதை யறிகிறான். "உதாரணம்:—'பசுமாடு ஸாஸ்நாவை யுடையது ' என்று ஒருவன் சொல்ல, மற்றொருவன் கேட்டுக் கொண்டான். ஸாஸ்நா என்பது மாடுகளின் கழுத்திலிருந்து தொங்குந் தோல். இவ்விதமான பிராணி எங்கே யிருக்கிறதென்று தேடி, ஒரு பிராணியிடத்தில் இது இருந்ததைக் கண்ணாலே பார்த்து, இது பசுமாடு என்று தீர்மானம் பண்ணுகிறான். இங்கே தர்மமானது உலகத்தில் உள்ள பதார்த்தங்களுள் ஒன்றும் அல்லாமையால், அதற்கு லக்ஷணமுங் கிடையாது. இப்படியிருக்க, அதற்கு ப்ரமாணம் இருக்கிறதா வென்று எவன் தேடுவன் ? ஒருக்கால் தேடினாலும் அதற்குப்

பிரமாணம் இருக்கு மென்று எப்படி யெண்ணலாம்? தர்மத்திற்கு உருவம் முதலானவை இல்லாமையால், ப்ரத்யக்ஷத்திற்கு யோக்யதை யில்லை. அநு மாநத்திற்கும் யோக்யதை யில்லை. ஏனென்றால்:—மலையில் ஒருவன் புகையைப் பார்க்கிறான். புகையும் நெருப்பும் சேர்ந்திருப்பதை அநேக இடங்களில் முன்னாலே பார்த்திருந்தால், மலையில் நெருப்பும் இருக்கிற தென்று முடிவு செய்கிறான். புகைக்கு நெருப்புடன் சேர்க்கை வ்யாப்தி என்று சொல்லப்படும். இதை ப்ரத்யக்ஷத்தாலேதானே அறியவேண்டும்? எங்கே ப்ரத்யக்ஷத்திற்கு யோக்யதை இல்லையோ அங்கே வ்யாப்தியை யெப்படி கண்டு பிடிக்கிறது? ஆகையால் எப்படி அநுமாநத்தாலே நிர்மானம் பண்ணுகிறது? சப்தப் பிரமாணமு மில்லை. ஏனென்றால், "கோ" என்கிற சொல்லுக்குப் பசுமாடு பொருளென்று அறிவதற்கு, அதன் லக்ஷணந்தெரியவேணும். பிறகு இந்த லக்ஷணமுள்ள ஒரு பிராணியைப் பார்க்கவேண்டும். தெரிந்த லக்ஷணமிருப்பதால் இந்தப் பிராணி பசுமாடு என்று முடிவு பண்ணவேண்டும். ப்ரத்யக்ஷத்திற்கும், அநுமாநத்திற்கும் விஷயமில்லாத விடத்தில், சொற்களுக்கு எப்படிப் பொருள்களைத் தெரிந்து கொள்ளலாம்?

ஸித்தாந்தம்:—கண் முதலான இந்திரியங்களாலே அறியக்கூடிய ஆகாரம் இருக்கவேண்டாம். ஆனபோதிலும், 'ஸ்வர்க்கம் என்கிற பலனுக்கு ஸாதநமாக வேதத்தின் விதியால் சொல்லப்பட்டது' என்கிற ஆகாரம் இருக்கிறதே. ஆகையால், இதை லக்ஷணமாக வைத்துக் கொள்ளலாம். ஸ்வர்க்கம் என்கிற பலனுக்கு ஸாதநம் என்று மாத்ரம் சொன்னால், ப்ரஹ்மத்தையும் தர்மமென்று சொல்லவேண்டும். அதற்காக 'விதியால் சொல்லப்பட்ட' என்கிற பாகத்தையும் லக்ஷணத்தில் சேர்க்கவேண்டும். அதை மாத்ரம் லக்ஷணமாகச் சொன்னால் ஒருவனை இறந்து போகும்படி செய்வதற்காக விதியில் சொல்லப்பட்ட ச்யேந யாகமும் தர்ம மாகிவிடும். அதற்காக 'ஸ்வர்க்கம் என்கிற பலனுக்கு ஸாதநமாக இருக்கும்' என்று லக்ஷணத்தில் சேர்க்கவேண்டியது. 'ச்யேந யாகத்திற்குப் பலன், விரோதி மரிப்பதல்லவா? அதற்கு நரகம் பலனல்லவே' என்றால்—ஒருவனைச் சாகும்படிச் செய்வதால் அதற்குப் பலனாக நரகம் வரும். இந்த வழியாக ச்யேநயாகம் கெடுதலான படியால் அது தர்மமன்று.

சொன்ன லக்ஷணத்தினாலே தர்மத்திற்கு ப்ரமாணம் வேதத்தின் விதியே என்று ஏற்படுகிறது. தர்மம் ப்ரத்யக்ஷத்திற்கும் அநுமாநத்திற்கும் விஷயமல்லாமல் இருந்தாலும் தெரிந்த சொற்களின் சேர்க்கையால் தர்மம் என்கிற சொல்லுக்குப் பொருள் இன்னதென்று அறியலாம். ஆகையால் விசார சாஸ்தரத்தை ஆரம்பிக்கலாம். [அதிகரணம்—2.]

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடம் 40-வது பட்டம்

ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் வைபவம்

ஸ்ரீய: பதியான ஸர்வேச்ரவன் தசாவதார லீலைகள் உவந்தருளியதும், ஆழ்வார் ஆசார்யாதிகள் திருவவதாரங்கள் கண்டருளியதும், பற்பல புண்ணிய தீரங்கள் நிரம்பியது மாகிய இப்பாரத கண்டத்தில், ஸுக்ருத பூயிஷ்டர்களுக்குத்தான் ஜந்மம் ப்ராப்தமாகும். இத்தகைய வேற்றம் பெற்ற இந் நில வுலகின் கண், தாம்ரபர்ணி நதி தீரத்தில் மஹா வித்வான்கள் பலரால் அலங்க்ருதமான காரக்குரிச்சி யென்னும் அக்ரஹாரத்தில் ஸ்ரீமத் பாஷ்யகாரருடைய, சிஷ்யர்களுள், ஒப்புற்றவரான வங்கிபுரத்து நம்பிகளுடைய ஸம்பந்தமும், எழுபத்து நான்கு ஸிம்மாஸநாதிபதிகளான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஸ்ரீ மத் பாஷ்யகாரோபக்ஞமான மஹாமடத்தில் 16 வதும், ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் முதல் 6 வது மான ஆஸ்தாநத்திற்கு நிர்வாஹகருமான ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீஷஷ்ட பராங்குச யதீந்த்ர மஹா தேசிகன் பூர்வாச்ரமத் திருமேனி ஸம்பந்தமும், பெற்றத் திரு வம்சத்தில் பிறந்தவரும், ஸகல சாஸ்த்ர வல்லுனரும், பரமை காந்தி ஸார்வபௌமருமாகிய வெங்கட வரதாசாரியர் என்கிற ஓர் ஸ்வாமி யெழுந்தருளியிருந்தார்.

இந்த ஸ்வாமி, ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மனுடைய, திருவடிகளை ஆச்ரயித்து, அநேக ஸத் சிஷ்யர்களுக்கு சாஸ்த்ராப்யாஸஞ் செய்வித்து வாழ்ந்து வருகையில், ஒரு நாள் இந்த ஸ்வாமியின் தேவிகள், பகவத் கைங்கரியாபி விருத்திக்குத் தக்கதொரு ஸத்புத்ரன் இல்லையே யென மனக்லேசங்கொண்டு, ஸ்ரீ ஸ்வாமியிடம் விண்ணப்பஞ் செய்ய, ஸ்ரீ ஸ்வாமியும் பிரபந்நனுக்கு இந்த அபேக்ஷை வேண்டுவதில்லை யென்று அருளிச் செய்ய, இதைத் தேவியாரும், அர்த்தாங்கீகாரமாக அங்கீகரித்திருந்தார். ஒரு நாள் இராத்ரி, திருக்குருகைப்பிரான் ஸ்ரீ ஸ்வாமியின் ஸ்வபநத்தில் எழுந்தருளி "வாரீர் வெங்கட வரதாசார்யரே! நமக்கு ஓர் ஞாந வைராக்யநாம் ஸம்பந்நனை ஸுபுத்ரனை கல்பித்துள்ளோம்." என ஸாதித்தார். இந்த ஸ்வப்நங் கண்ட ஸ்வாமியும், சடக்கென வெழுந்து, தன் ஸ்வப்ந விருத்தாந்தத்தைத் தம் தேவியாருக்குச் சொல்லி, மறுநாள் தம் நித்ய கர்மா நுஷ்டாநங்களை முடித்துக் கொண்டு, தம் தேவியாருடன் குருகைப்பிரானடி பணிந்து, இல்லற தருமத்தை நடத்தலானார். இப்படி பன்னாட்கழிய, ஸர்வ லக்ஷணங்களும் பொருந்திய, நம்மாழ்வார் திருவவதாரம் செய்தருளின, ஸ்ரீ, பராங்குசாவதாரம் தொடங்கி 4952 க்கு மேல் விரோதிகிருது ஞு மார்கழி (மாதத்தில்) விசாகத்தில், ஒரு குமாரர் இந்த ஸ்வாமிக்கு அவதரித்தார். ஸ்ரீகுமாரரும், வெங்கட கிருஷ்ணன் என்ற நாமம் பெற்று, பிறைச்சந்திரனைப் போல் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, ஐந்தாமாண்டையும் அடைந்தார். வித்யாப்யாஸ காலத்தில் ஸாஹித்யாலங்காரங்களைத் தன் திருத்தகப்பனாரிடத்திலேயே யதிகரித்து ஸமர்த்தராயிருக்க, ஏழாவது வருஷத்தில் உபநயன ஸம்ஸ்காரத்தை ஸ்வீகரித்து வேதத்தைப் பூர்ணமாக அத்யயநம் செய்து, ஸாமாந்ய சாஸ்த்ரங்களையும் நன்குணர்ந்தே இல்லற மல்லது நல்லறமன்ற நீதிக்கிணங்கி இல்லறத்தை யேற்று, யகா

வத்தாக வர்ணாச்ரம தருமத்தையும் அநுஷ்டித்து, ஸ்ரீ மதஹோபில மடத்தில், 33 வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸர்வஜ்ஞ ஸார்வபௌமரான ஸ்ரீ வண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருவடிகளில்பஞ்ச ஸம்ஸ்காரமும் பெற்று, ஸ்ரீ பாஷ்யம் முதலான க்ரந்த சதுஷ்டியங்களிலும் திராவிட வேதாந்தத்திலும், பரிபூர்ண தேர்ச்சி பெற்று, ஆசார்யனுடைய க்ருபாகடாக்ஷத்தால் ஸூக்ஷ்மமான அர்த்தங்களையும் ஸம்ப்ரதாயப்படி க்ரஹித்து வ்ருத்தரான தம் பிதாவுக்கு சிச்ருஷைகள் ஆற்றி ஸ்ரீ பாஷ்யத்தைப் பலகாலும் சிந்தித்து வந்தார்.

இப்படி யிருக்கையில், வெங்கடக்ருஷ்ணமாசாரிய ஸ்வாமியும், ஜ்ஞாந வைராக்ய முடைந்து, வீடு பெறுவதற் கேதுவான பூர்வாசார்யகளால் எடுத்துக் காட்டியுள்ள பரஸமர்ப்பணத்தைப் பெற வேண்டுமென்ற பேரவாக் கொண்டு ஸ்ரீமதஹோபில மடம் 35 வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப யதீந்த்ர ரங்கநாத மஹா தேசிகனுடைய விசேஷ கடாக்ஷத்தால் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மன் திருவடிகளில் உத்க்ருஷ்டதமமான உபாயாநுஷ்டானத்தை ஸாங்கமாக வநுஷ்டித்து, நிர்ப்பரராய் ஆசார்யன் திருவடிகளில் அநேகாவர்த்தி தண்டனிட்டு, இம்மஹோபகாரத்தையநுக்ரஹித்த ஆசார்யனுக்கு தாஸன் செய்வது என்னவாகும், என சிந்தித்து, லஜ்ஜையுடன் பிரார்த்தித்து நிற்க, ஸ்ரீ ஸ்வாமியும், மிக்கக் கடினமான க்ரந்தங்களின் பொருளை ஸர்வ ஸாமக்யரும் அறிந்துகொள்வதற்கு ஸாதகமாக தெள்ளிய நடையில் த்ராவிட மணிப்ரவாளங்களால் செய்கவென, அவ்வாறே, ஸ்ரீஸ்வாமியும் பல செய்தருளினார்.

இவ்விதம் இந்த ஸ்வாமி ஆசார்ய க்ருபையை பரிபூர்ணமாகப் பெற்று, நியமநப்படி ஸ்ரீ வேதாந்த மஹாதேசிகனுடைய ஸத் ஸம்ப்ரதாய க்ரந்தங்களை ஸத் சிஷ்யர்களுக்கு பிரவசநங்கள் செய்து வரும் நாளில், ஸ்ரீ மதஹோபில மடம், 36 வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகனுடைய நியமநப்படி ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மனை ஆராதித்தும் வந்தார்.

பின்பொருகால், தமதில்லம் சேரவேண்டுமென்ற எண்ணங் கொண்டு ஸ்ரீ ஸ்வாமியும் ஸ்ரீஸந்நிதியில் பிரார்த்திக்க, பிரார்த்தித்தவாறே நியமனமும் பெற்று, தம் கிராமம் சென்று, தன் குடும்ப பாரத்தைத் தம் புத்ரனிடம் ஒப்புவித்து, மற்றும் பல ஸத் சிஷ்யர்களுக்கும் தம் குமாரருக்கும் சாஸ்த்ரங்களை யநுக்ரஹித்தும் வந்தார்.

அக்காலத்து, ஸ்ரீ மதஹோபில மடம், 39 வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ பராங்குசயதீந்த்ர மஹாதேசிகன் திருமாமணி மண்டபம் அலங்கரித்தருளினார். இந்த ஸ்வாமியின் நியமநப்படி ஸ்ரீ ஸ்வாமியும் துரியாச்ரம மேற்கொண்டு திருமாமணி மண்டபம் அலங்கரித்த ஸ்வாமிக்குச் செய்வன வேண்டிய காரியாதிகளை ஸாங்கோபாங்கமாக சாஸ்த்ர விதிக்கு ஓர் துளியும் விரோத மின்றிக்குச் செய்து முடித்து, ஸ்ரீ அஹோபில மடத்தின் ஸகல வைதிக லௌகிக காரியங்களை செம்மனே நடத்தியும், ஸ்ரீலக்ஷ்மி நரஸிம்மனுடைய, கைங்கரியத்தில் எள்ளளவும் லோபமன்றிச் செய்தும், கேரள பாண்டிய சோழவளாதி நாட்டுத் திவ்ய தேசங்களில் யாத்ரை செய்து, ஆங்காங்கு எழுந்தருளியுள்ள எம்பிரான்களைத் தமதாச்ரம வைபவங்களுக்கு எவ்வளவும் குறைவின்றி மஹோந்நத மர்யாதைகளைப் பெற்று மங்களாசாஸநம் செய்தும் வந்தார்.

இவ்விதம் யாத்ரையில் ஸ்ரீ ஸ்வாமி ஸ்ரீ மத் வேதாந்த தேசிகனுடைய ஸம்ப்ரதாயத்தைச் செம்மனே பிரவசநம் செய்துவருங் காலத்தில் ஒரு ஸமயத்தில் சேஷகிரியின் மீது நின்ற திருக்கோலமாயிரானின்ற திருவேங்கட முடையானை மங்களாசாஸநம் செய்யவேணுமென்ற பேரவாக்கொண்டு, திருமலைக் கெழுந்தருளியிருக்கையில், கத்தவால் ஸமஸ்தாநாதிபதியுமான மஹாராஜா ஸ்ரீ ஸீதாராமா பூ பாலன் அத்திருப்தியின் கண்போந்து, ஸ்ரீ மதழகியசிங்கர் திருவடியில், மனப்பூர்த்தியாய் அநேகாவர்த்தி தெண்டம் ஸமர்ப்பித்து, தன் தேசம் எழுந்தருளி தன்னையும், ஆண்டுள்ளோர்களையும் கிருதார்த்தர்களாக்க வேண்டுமென்று பிரார்த்தித்துநிற்க, அவ்வாறே ஸ்ரீ ஸ்வாமியும், தம் பரிவாரங்களோடு புறப்படவும் ஸ்ரீ ஸீதாராம பூபாலனால் ரதகஜ துரக பதாதி பரிவாரங்களால் எதிர் கொண்டழைக்கப்பட்டு ஆண்டுள்ள மஹா மடத்தில் எழுந்தருளப் பண்ணிவைத்து, ஒவ்வொருநாளும் பஞ்சகால ஆராதனத்திற்குரிய ஸாமக்ரிகளையும் ஸமர்ப்பித்து. ஸ்ரீலக்ஷ்மி நரஸிம்மன் திருக்கையால் தீர்த்தாதி பிரஸாதங்கள் ஸ்வீகரித்துக் கொண்டு மிருந்த ஸந்தோஷமுள்ளவனாயிருந்ததும் ஸ்ரீ ஸ்வாமியின் பேருளே யன்றோ.

ஸ்ரீ மதழகிய சிங்கரும், ஆங்குள்ள அஹோபில மடத்தில், ஆராதகர்களை வருத்தி வந்தபிரம்மராக்ஷஸ்ஸை தன் தபோ மந்த்ரபல ஸித்தியால், வெளிப்படுத்தியருளினார். அப்பிரம்ம ராக்ஷஸ்ஸும், தன் வரலாற்றை ஆவேச மூலமாகச் சொல்லி தன்னைக் க்ருதார்த்தனாக்க வேண்டுமென்று ஸ்ரீ ஸ்வாமியிடம், இறைஞ்சி நிற்கவும், ஸ்ரீ ஸ்வாமியுங் கிருபை கூர்ந்து, இனி நீ, ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மனை ஆராதிக்கிறவர்கள் எனச் சொல்வோரிடத்தும் செல்லக் கூடாதென்று, ஆக்ஞையிட அதை அப் பிரம்மராக்ஷஸ்ஸும் சிரஸாவஹித்து, விடைப் பெற்றுச் சென்ற விருத்தாந்தம் ஸ்ரீ ஸ்வாமியின் மந்த்ர தபோபலத்தைக் காட்டும் அத்யாச்சர்ய வியப்பேயாகும்.

இப்பால் பன்னாட்கழித்து, ஸ்ரீ மதழகிய சிங்கர், தென்னாட்டு யாத்ரைச் செல்ல விருப்பங் கொண்டு, கத்தவால் ஸமஸ்தானத்தை விட்டு, புறப்பட்டு வந்தது, ஸ்ரீ பரதாழ்வான் சித்ரகூடத்திருந்த ஸ்ரீ ராமனைக் கண்டு, பாதுகையைப் பெற்று நந்தி கிராமத்திற்குச் சென்ற காட்சியை, ஸ்ரீ ஸீதாராம பூபாலன் ஸ்ரீ ஸ்வாமியை விட்டுப், பிரிந்த நிலைமை நிகர்த்த தென்று சொல்லும்படி யிருந்தது.

ஸ்ரீ ஸீதாராம பூபாலனும், ஸ்ரீ மதழகிய சிங்கரிடமும், ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மனிடமும், அத்யந்த பக்தி விநயத்துடன் இருந்தபடியால், அவர் தம் பொருள் கிருபா கடாக்ஷத்தால், மக்கட் பேறும் பெற்றான்.

நிற்கவும் ஸ்ரீ ஸ்வாமி, ஸ்ரீ மதஹோபில மடத்தைச் சார்ந்த பல மடங்களின் ஜீர்ணோத்தாரணங்கள், பிருந்தாவன ஜீர்ணோத்தாரணங்கள், முதலிய கைங்கரியங்களில், மிக்க ஈடுபட்டுச் செய்வித்தும், ஸ்ரீ மடத்து விபூதிகள் பல ஸ்வாதீன மல்லாததை ஸ்வாதீனப் படுத்துவித்ததும், ஆகிய காரியாதிகள் யாவும் வியக்கத்தக்கதாம்.

இதன்றியும் ஸ்ரீ வைஷ்ணவ சம்ப்ரதாயங்களைப் பிரவசநம் செய்ய, ஆரிய பாஷா போஷகக்கல்லூரிகள் பல ஏற்படுத்தியது நாஸ்திகர்கள் வாதம் தலைகாட்டா வண்ணம் இருக்கப் பல ஆஸ்திகமான கைங்கரியங்கள் செய்ததும் ஸ்ரீ ஸ்வாமியின் திருக்கல்யாண குணங்கள் செம்மனே அறிய கிடக்கிறது.

இந்தப்படி ஸ்ரீ ஸ்வாமியும், தென்னாட்டு யாத்ரா ஸஞ்சாரத்தில் தனது, தேஹாவஸான லக்ஷணத்தை புணர்ந்து, மதுராபுரிக்கு மேற்புறத்தில் ஏகாந்த ஸ்தலமாயும், ஸ்ரீ நரஸிம்ம விபூதிகளான அநேக ஸ்ரீ வைஷ்ணவர்கள் அலங்க்ருதமாயுள்ள துவரிமானென்ற அக்ராஹாரத்திற்கு எழுந்தருளி யங்கு ஹோவு சாத்திக்கொண்டு இருக்கையில், அழகிய சிங்கரும் அங்குள்ள வதிகாரிகளை யழைத்து, நாம் திருமாமணி மண்டபத்தில், ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மனை ஆராதிக்கப்ராப்தராகப் போகிறபடியால், இந்த மஹாஸ்தானத்தை வஹித்து வைதிக லௌகிக காரியங்களை நடத்தும் ஸாமர்த்தியமும், ஆத்ம குணங்களுக்கு நிதியும், ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மனுடைய மஹா விபூதிகளை அபிவ்ருத்தி செய்வதில் குதூகல முடையவருமான காரக்குரிச்சி, தட்டை வாதூல கோத்ரோத்தாரணருமான, ஸ்ரீ கோபாலராம பத்ராசாரியரை நியமித்திருக்கிறோம், என்று விளங்க அருளிச்செய்து ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மனுக்கு விசேஷாராதனங்களைச், செய்வித்து, பூர்வாசாரியர்களுடைய ஸ்ரீ பாத தீர்த்தம் ஸ்வீகரித்து திவ்யப் பிரபந்தானுஸந்தான பூர்வமாய் யுபநிஷத் கோஷத்துடன் தாதுவருஷ தைமீ 2௳ பானுவாரம் மூல நக்ஷத்ரம், க்ருஷ்ணத்ரயோதசி, கூடிய மஹா புண்யதினத்தில் திருமா மணி மண்டபம் ஏற எழுந்தருளினர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வானமஹாசல முனிப்யோ நம:

ஸ்ரீ ராமாநுஜ ஸம்ப்ரதாயா பிவர்த்தினீ ஸபா விசேஷ ஸம்மேளனம்

இந்த ஸபையானது இவிடம் வானமாமலை ஸ்ரீ பொன்னன வானமாமலை ராமாநுஜ ஸ்வாமி திரு நக்ஷத்திரமான கன்யா புனர்வஸு மஹோத்ஸவத்தில் ப்ரதி வருஷமும் நடந்துவருவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

ஸ்ரீ பொன்னன ஸ்வாமி திருவடிகளில் ப்ராவண்யாதிசயத்தாலே இந்த ஸபையை ஆரம்பித்து ப்ரதி ஸம்வத்ஸரமும் விசேஷமாக நடத்திக்கொண்டு எழுந்தருளியிருந்த 25-வது பட்டம் ஸ்ரீ கலியன் வானமாமலை ராமாநுஜஸ்வாமி திரு நக்ஷத்திரமான சித்திரை அச்வதி மஹோத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீ ஸ்வாமி ஆஸேது ஹிமாசலம் உபயவேதாந்த ப்ரதிஷ்டாபநம் பண்ணியருளின வைபவத்திற்கு ப்ரகாசமாக இந்த ஸபையின் விசேஷ ஸம்மேளனம் நாளது பவ வருஷ சித்திரைமீ 21௳ முதல் 30௳ ஸ்ரீ ஸ்வாமி திரு நக்ஷத்ரம்வரை நடைபெற்றது. அது ஸமயம் உபய வேதாந்தங்களிலும் வாக்யார்த்தங்களும் உபந்யாஸங்களும் பண்டிதர்களைக்கொண்டு செய்விக்கப்பட்டன. அவரவர்கள் யோக்யதானு குணமாக ஸன்மானங்களும் செய்யப்பட்டன.

வித்வான் வானமாமலை அய்யங்கார்,
வித்வான் சே. சடகோப அய்யங்கார்,
வித்வான் சடகோபாசாரியார். சிரோமணி
வித்வான் தே. திருமலாசாரியார்.

பவ வருஷ வைகாசிமீ 12 ஸபா காரியதரிசிகள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ।

யோऽநந்த: ப்ருதிவ்யா ஈச பரசவோம் ப்ரஸஹ்யாம்
ஸஞ்ஜீவயத்யவிருஹஸ்திபரா: ஸ்வயாஹ்ர ।
சந்த்ராம்சு ஹஸ்தசரணாச் சவணத்வமாதீந
ப்ராணாநஹோ ஹமவதே பராக்ஷாய தஸ்மை ॥

ஸம்பாதகரின் குறிப்புகள்

கொஞ்ச காலமாக நமது ராஜாங்கத்தார், நமது மதம் ஆசாரம் இவைகள் விஷயமாக சிற் சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டு மென்னும் எண்ணத்துடன் சிற் சில சட்டங்களைச் செய்து வருகிறார்கள். ராஜாங்கத்தாரும் விதவா விவாஹச் சட்டம், சாரதா சட்டம், தேவ ஸ்தான சட்டம், இவை முதலியவைகள் அவைகளுட் சில. மத விஷய சட்டங்களும். தேவாலய ப்ரவேசத்தைப்பற்றிய சட்டமொன்றும் இப்பொழுது அவர்களால் பர்யாலோசிக்கப்பட்டு வருகின்றது. இம்மாதிரி புதிய புதிய சட்டங்களைச் செய்வதற்கும் அவைகளை பலாத்காரமாக அநுஷ்டாநத்திற்குக் கொண்டு வருவதற்கும் ராஜாங்கத்திற்கு சக்தி உண்டா? இல்லையா? என்பதைப் பற்றி விவாதமில்லை. அவர்கள் இச்சித்தால் எதையும் செய்ய சக்தர்களே. ஆனால், அவர்கள் அப்படி பலாத்கரிப்பது ந்யாயத்திற்கு ஒத்ததாகுமோ என்பதைப்பற்றி நமக்கு பலமான ஸந்தேஹம் ஏற்படுகின்றது.

முற்காலத்தில் நமது தேசத்தைப் பரிபாலநம் செய்து வந்த அரசர்கள், திருடர்களையும் பொய் பேசுகிறவர்களையும் ராஜதண்டனைக்கு உள்ளாக்குவது போல, நமது சாஸ்த்ர விதிகளுக்கு விருத்தமாக நடப்பவர்களையும் தண்டனைக்கு உள்ளாக்கி வந்தார்கள் என்பது உண்மையே. இதை நாம் நமது புராணம் முதலிய க்ரந்தங்களிலிருந்து அறியலாம். சம்பூக வ்ருத்தாந்தமொன்றே இதற்குப் போதுமான நிதர்சநம். சம்பூகன் என்பவன் அநேக அம்சங்களில் ஸத்வ குணத்தால் நிறைந்தவனே. பொய் பிரட்டுக்களிலிருந்து மிகவும் பயந்தவன்; தைவ பக்தியும் அவனிடம் பூர்ணமாக இருந்தது. ஒரு அம்சத்தில் மாத்ரம் மோஹம் அடைந்தவனுய்

அவன் தனது வர்ணத்திற்கு இன்றியமையாத ஒரு அநுஷ்டானத்தை இன்றியமைந்தாக ப்ரமித்து, அதில் ப்ரவ்ருத்தனுனன். அதற்காக அவன், அப்பொழுது அரசு புரிந்து வந்த ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனல் சிக்ஷிக்கப்பட்டானென்று ஸ்ரீ ராமாயணம் சொல்லுகின்றது. தர்ம சாஸ்த்ரங்களும், ராஜ தர்மங்களைச் சொல்லிவருமிடங்களில், ஸமஸ்த ப்ரஜைகளையும் அவரவர் வர்ண தர்மங்களிலும் ஆச்ரம தர்மங்களிலும் நிலை நிறுத்தி வருவதை அரசர்களுடைய முக்யமான தர்மமாக வற்புறுத்துகின்றன. இவ்விதம் பெரியோர்களுடைய அநுஷ்டானங்களாலும் சாஸ்த்ரங்களுடைய விதிகளாலும் ஆதரிக்கப்பட்டுள்ள இந்த ப்ரவ்ருத்தியை ஏன் இக்காலத்திய ராஜாங்கத்தாரும் அடியொற்றி நடக்கக் கூடாது ? முற்காலத்திய அரசர்களுக்கு இருந்த அதிகாரம் ஏன் இக்காலத்திய ராஜாங்கத்தாருக்கு இராமல் போகவேண்டும்? இவ்வாறு ஒரு சங்கை சிலர் மநஸ்ஸில் உதிக்கலாம்.

இது சரியான சங்கையே. ஆனல் மத விஷயமாகச் சீர்திருத்தங்களைச் செய்ய யத்நிப்பவர்கள் சீர்திருத்தப்படும் மதத்தைத் தழுவினவர்களாக இருத்தல் வேண்டும் என்னும் ஒரு நியமம் ஒன்று உண்டன்றோ ? இந்த நியம விஷயமாக இக்காலத்திய ராஜாங்கத்தாருக்கும் முற்காலத்திய அரசர்களுக்கும் பெரியதொரு விசேஷம் இருக்கின்றதே. அதை நாம் மறக்கக் கூடுமோ ? முற்காலத்திய அரசர்கள் நமது சாஸ்த்ரங்களில் நம்பிக்கையுள்ளவர்களாகவும் அதைத் தழுவினவர்களாகவுமே இருந்தார்கள். நமது வேத வாக்யங்களில் அவர்களுக்கு அப்ராமாண்ய புத்தி என்பதே இருந்ததில்லை. இக்காலத்திய அரசர்களோ நமது வேத மதத்தைத் தழுவினவர்களல்லர். அவர்களுக்கு மதாந்தரத்தில் ப்ராமாண்ய புத்தி இருக்கக்கூடுமே தவிர நம்முடைய சாஸ்த்ரங்களில் அவர்களுக்கு விச்வாஸம் உண்டாகமாட்டாது, நிற்க, இப்பொழுது இந்தத் தேசத்தில் நமது ராஜாவின் ப்ரதிநிதிகளாகவும் அவரால் நியமிக்கப்பட்டவர்களாகவும் இருந்துகொண்டு அந்த ராஜா செய்ய வேண்டிய கார்யங்களை நிர்வஹித்துவரும் ராஜாங்கக்கூட்டத்தாரும் பல மதங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கிறுர்கள். இப்படிப்பட்ட ராஜாங்கத்தாருக்கு நமது ஆசார விஷய சீர்திருத்தங்களைச் செய்வதற்கும் அப்படிப்பட்ட சீர் திருத்தங்களை ராஜாவின் ஆஜ்ஞை யென்று நமது மீது பலாத்கரிப்பதற்கும் எவ்விதத்தில் அதிகாரம் ஏற்படக்கூடும் ?

தவிரவும், முற்காலத்திய அரசர்களாற் செய்யப்பட்டு வந்த தர்ம பரிபாலநம் முழுவதும் ஏற்கெனவே நமது மஹர்ஷிகளால் தர்மமென்று விதிக்கப்பட்ட சட்டங்களை அநுஸரித்தே செய்யப்பட்டு வந்தது. அந்த அரசர்களோ அல்லது அவர்களுடைய மந்த்ரி முதலான ராஜாங்கத்தார்களோ புதியதாகத் தாமே ஒரு சட்டத்தை ஏற்படுத்தினுர்கள் என்பதே இல்லை. நிக்ரஹாநுக்ரஹங்களைச் செய்யும் காலங்களெல்லாவற்றிலும் அந்த அரசர்

கள், 'இவைகளைப் பற்றி நமது சாஸ்த்ரங்களால் என்ன சொல்லப்படுகின்றது' என்பதை நன்கு அறிந்து கொண்டு அந்தச் சாஸ்த்ர விதிகளை அநுஸரித்தே அவர்கள் நிக்ரஹாநுக்ரஹங்களைச் செய்து வந்தார்கள். இக்காலத்திய ராஜாங்கத்தாரோ வென்றுல், அம்மாதிரி நமது சாஸ்த்ரங்களின் அபிப்ராயத்தை விசாரியாமலே, அவைகளை அநாதரித்து தமது சிற்றறிவுக்கு யுக்தம் போலத் தோன்றுமவை யெல்லாவற்றையும் சட்டங்களாக ஏற்படுத்த ப்ரயத்நப்படுகிறுர்கள். இது ந்யாயத்திற்கு ஒத்ததாகுமோ? அந்த:கரணத்திற்கு விருத்தங்களான கார்யங்களில் அசக்த ஜநங்களைச் சக்தர்கள் நிர்பந்திப்பது தர்மம் ஆகுமோ ? தமது சக்தியைக் கொண்டு இந்த பலாத்காரத்தை இவர்கள் இப்பொழுது நிர்வஹித்து வரலாம்; அந்தச் சக்தி தமக்குள்ளவரையிலும் அதை நிர்வஹித்து வரக்கூடும். ஆனல் அது தைவத்திற்கு ஸம்மதமாக மாட்டாது என்பதே நமது அபிப்ராயம்.

* * * * *

இக்காலத்திய வைத்யர்களுள் மிகச் சிறந்தவரென்று பெயர் பெற்ற டாக்டர் ரங்காசார்யர் என்பவர் சென்ற மாஸத்தில் தேஹ வியோகமடைந்தார். கணக்கற்ற ஜநங்களைத் தமது வைத்ய டாக்டர் ஸாமர்த்யத்தால் ம்ருத்யு முகத்திலிருந்துத் தப்பு ரங்காசார்யர். வித்து வந்த இந்த வைத்ய ச்ரேஷ்டருக்கும் மரணம் நேர்ந்து விட்டது. இதை நிரூபித்துப் பார்ப்பவர்களுக்கு புருஷ காரத்தைக் காட்டிலும் மேற்பட்டதாக தைவ ஸங்கல்பம் என்று ஒன்று இருக்கின்றது என்பது நன்கு விளங்கும். ஸ்ரீமந் நாராயணனுடைய ஸங்கல்பத்தால் மாத்ரம் புருஷ ப்ரயத்நங்களுக்கு ஒரு வித சக்தி உண்டாகின்றதே தவிர, புருஷ ப்ரயத்நங்களும் அந்தப் புருஷனுடைய ப்ரதி விதானங்களும் ஸ்வயமே எவ்வித சக்தியும் அற்றவைகளே.

டாக்டர் ரங்காசார்யருடைய மரணத்தைப் பற்றி துக்கியாதவர்கள் ஒருவரும் இல்லை. தநிகர்கள் முதல் ஏழை ஜநங்கள் வரையிலான எல்லாரும் ஒரு ஸமயம் இராவிட்டால் ஒரு ஸமயத்தில் அவருடைய மஹோபகாரத்திற்குப் பாத்ரமானவர்களே. வைத்ய ஸாமர்த்யமும் அது ஸம்பந்தமான ப்ரஜ்ஞையும் நிறைந்திருந்ததுடன், ஸௌலப்யம் என்னும் உத்தம குணமும் அவரிடம் குடிகொண்டிருந்தது. கடுத்த முகமாவது க்ரூரமான சொல்லாவது அவரிடம் ஒரு பொழுதும் இருந்ததில்லை. அவரிடம் ஸஹாயத்தை அர்த்தித்து வந்தவர்கள் பக்ந மநோரதர்களாகத் திரும்பிப் போனுர்கள் என்பதும் கிடையாது. இவ்வளவு மஹோபகாரியாக இருந்தவர் இனி துர்லபராகி விட்டார் என்பதை நினைக்க எவனுக்குத்தான் சோகம் உண்டாக மாட்டாது ?

இந்த வ்யக்தியை நாம் பல வர்ஷங்களாக அறிவோம். 'இவர் ஒரு மஹா புருஷன்' என்பதே நமது க்ரஹணம். மஹா ஜநங்களுக்கு வ்யாதி சிகித்ஸை செய்து அதுவழியாக அவர்களுக்கு உபகரிப்பதையே தமது முக்ய தர்மமாக இவர் உணர்ந்திருந்தார். அந்தத் தர்மத்தை எள்ளளவும் தவறாது அவர் அநுஷ்டித்து வந்தார் என்பதே அவருடைய மஹா புருஷத் தன்மைக்கு ஸூசகம். தர்மத்தைக் கேவல தர்மாநுஷ்டாநம் என்னும் புத்தியுடன் அநுஷ்டித்து வருவது மஹா புருஷர்களாற் செய்யப்படும் யோகத்தில் அந்தர் பூதமென்று நமது சாஸ்த்ரங்கள் சொல்லவில்லையா? இவருடைய ஹ்ருதயத்தில் பகவத் விச்வாஸ மில்லையென்றும் இவர் தாம் அநுஷ்டித்து வந்த தர்மத்தைப் பகவானுடைய ஆராதந ரூபமாக செய்து வரவில்லை யென்றும் சிலர் நினைக்கலாம். அது தவறுதலான நினைவே. அவைகளை வெளியிடும் வெளிப்படையான அடையாளங்கள் அவரிடம் காணப்படாவிடினும், அவருடைய நடவடிக்கையிலிருந்து அவைகள் அவரிடம் இருந்தன வென்றே அநுமிக்கக் கூடும். ஸ்வோத்கர்ஷம் பர நிகர்ஷம் என்னும் படுகுழியில் இவர் விழுந்தவரன்று. ஒருவரையும் அவர் இகழ்ந்து நினைத்ததே இல்லை. அர்த்தத்தை உத்தேசித்து ஒரு பொழுதும் இவர் ஒரு அகார்யத்திலும் ப்ரவ்ருத்தித்ததில்லை. காமம் என்பதை ஜயித்தவரென்றே இவரைச் சொல்லக்கூடும். இவையெல்லாம் ஸாமாந்ய குணங்களல்ல. பகவத் கடாக்ஷமின்றிக்கு இவை இவ்வளவு சிறப்புடன் ஒருவனிடம் அமையமாட்டா. இப்படிப்பட்ட ஆத்மகுண பூர்த்தியானது ஹ்ருதயத்தின் உள்ளிருக்கும் பகவத் பக்திக்கு ஸூசகங்களாகாவிட்டால், அந்தர்நிஹிதமான அந்தப் பக்தியை நாம் வேறு எவ்விதத்தில் தான் அறியக்கூடும்? ஜடபரதரித்தில் போல இவரிடமும் பகவத்ஜ்ஞாநம் அந்தர்கதமாக இருந்ததென்றே நாம் சொல்லத் துணிவோம். இப்படிப்பட்டவர் மஹா புருஷனாகமாட்டாரோ?

அடியிற்கண்ட க்ரந்தங்களை நாங்கள் அச்சுப்பதிப்பித்து வருகிறோம். எவரிடத்திலாவது அவைகளின் கையெழுத்து ப்ரதிகள் இருந்தால், அவர்கள் அந்த ப்ரதிகளை எங்களுக்கு அநுப்பினுல், அது பெரிய உதவியாக இருக்கும். சோதநம் முடிந்தவுடன், அந்த ப்ரதிகள் திருப்பி அநுப்பப்படுவதுடன் அச்சுப்பதிப்பு முடிந்த பிறகு அச்சு ப்ரதிகளில் ஒரு காபியும் விலையின்றிக்கு அந்த உதவி புரிந்தவர்களுக்கு அநுப்பப்படும்.

1. பஞ்ச விஜயங்கள்.
2. பாராசர்ய விஜயம் (1-வது அத்யாயம் 2-வது பாதம் முதல், முடிய)
3. ச்ருதி தாத்பர்ய நிர்ணயம்.

இவை ஸ்ரீ தோட்டையாசார்ய ஸ்வாமியால் அருளிச் செய்யப்பட்டவை.

மானேஜர், ஸுதர்சந ப்ரெஸ்,
காஞ்சீபுரம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவைகுண்டஸ்தவ:.

ஸ்ரீவத்ஸ சிஹ்நமிச்ரேப்யோ நம உக்திமதீமஹே ।
யதுக்தயஸ் த்ரயீகண்டே யாந்தி மங்கள ஸூத்ரதாம் ॥
யோ நித்யமச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே ।

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீ வைகுண்டஸ்தவ வ்யாக்யாநம்

இந்த ப்ரக்ருதி மண்டலத்திற்கு வெளிப்பட்டு சுத்த ஸத்வ மயமான ஒரு ஸ்தாந விசேஷமிருக்கின்றதென்றும், அவ்விடத்தில் பகவான் ஒரு திவ்ய மங்கள விக்ரஹத்துடனும் அநந்த பரிஜந பரிச்சதங்களுடனும் லக்ஷ்மீ விசிஷ்டனாக நித்யம் ஸந்நிஹிதனாக இருக்கின்றானென்றும், அதில் அநந்த கருட விஷ்வக்ஸேநர் முதலான நித்யர்கள் அநாதி காலமாக பகவத் கைங்கர்யத்தைச் செய்து கொண்டு அளவற்ற ஆநந்தத்தை அநுபவித்து வருகிறார்களென்றும், இவ்விடத்திலுள்ள ஸம்ஸாரி ஜீவன்களும் தமது பந்தம் நீங்கின பிறகு அந்த ஸ்தாநத்திற்கே போய் நித்யர்கள் போலப் பகவத் கைங்கர்யம் பெற்று அதனால் ஆநந்தசாலிகளாகிறார்களென்றும் நமது சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. இந்த ஸ்தாந விசேஷத்திற்கு ஸ்ரீவைகுண்டம் என்று பெயர். ஸம்ஸ்க்ருதத்தில் 'குடி' [குடி] என்று ஒரு வினைச் சொல் உண்டு; கதியைத் தடுத்தல் என்னும் அர்த்தத்தை அது குறிக்கும். ஆகையால் 'குண்ட' [குண்ட] என்பதற்கு ஆநந்தத்தைத் தடுக்கும் ஸ்வபாவமுள்ள கர்ம பந்தம்' என்று பொருள் கொள்ளக் கூடும். ஆகையால் அப்படிப்பட்ட கர்ம பந்த ப்ரஸக்தியே அற்றிருக்கும் நித்யர்களை 'விகுண்டா:' [விகுண்டர்கள்] என்று சொல்வது உண்டு. அவர்களுடைய ஸம்பந்தத்தால் இந்த ஸ்தாந விசேஷத்திற்கு 'வைகுண்ட' [வைகுண்டம்] என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு லோகம் இருக்கின்றது என்பதற்கு

"தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:"

[அது விஷ்ணுவின் பரமமான ஸ்தாநம்; அதை ஸூரிகள் எப்பொழுதும் தர்சநம் செய்து கொண்டிருக்கிறார்கள்]

"தேஷாம் தத் பரமம் ஸ்தாநம் யத்வை பச்யந்தி ஸூரய:"

அஸ்மத்குரோர் பகவதோऽஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே || (க)

[எதை நித்ய ஸூரிகள் எப்பொழுதும் தர்சநம் செய்து கொண்டிருக்கிறார்களோ, அது அவர்களுக்குப் பரமமான ஸ்தாநம்] இத்யாதியான வாக்யங்கள் ப்ரமாணம். இந்த லோகம், இப்பொழுது நாம் வஸித்து வரும் ப்ரக்ருதி மண்டலத்தைக் காட்டிலும் பல மடங்கு பெரியது.

"பாதோऽஸ்ய விச்வா பூதாநி - த்ரிபாதஸ்யாம்ருதம் திவி"

[இந்த ப்ரபஞ்சமானது பகவானுடைய விபூதியில் ஒரு அல்ப அம்சமே! இதைக் காட்டிலும் பல மடங்கு பெரியதாக க்ஷயமற்ற வேறொரு விபூதி இந்த ப்ரக்ருதி மண்டலத்திற்கு மேல் பட்டு நிற்கின்றது] என்று நமது புருஷ ஸூக்தம் சொல்லுகின்றது. ஒரு ப்ரளயத்திலும் இதற்கு அழிவு இல்லை. பகவத் ஸ்வரூபத்திற்கு விசேஷணமாயுள்ள ஜ்ஞாநம் பலம் முதலிய கல்யாண குணங்கள் போல இந்த நித்ய விபூதியும் அந்த ஸ்வரூபத்திற்கு ஒரு கல்யாண விசேஷணமாகவே எப்பொழுதும் பகவத் ஸ்வரூபத்தை ஆச்ரயித்து அழிவற்று நிற்கின்றதென்று நமது ஆசார்யாகள் நிர்வஹித்திருக்கிறார்கள். பகவத் ஸ்வரூபமே நமக்கெல்லாம் பரம ப்ராப்யம். இந்த வைகுண்ட லோகத்தினுடைய ப்ராப்தி, பகவத் ப்ராப்தியுடன் கூடிக் கொண்டே இருக்கிறபடியால், இந்த லோகத்தையும் நாம் பரம ப்ராப்யமாக வ்யவஹரிக்கக் கூடும். இதன் தத்வத்தை ஸ்ரீ பாஷ்யகாரருடைய வேதார்த்த ஸங்க்ரஹம் என்னும் க்ரந்தத்தின் கடைசி பாகத்திலும் அவருடைய கத்யங்களிலும் கண்டு கொள்க. இந்த வைகுண்ட லோகத்தையும் அதற்கு நாதனை ஸ்ரீமந் நாராயணனையும் இந்த க்ரந்தம் ஸ்துதிக்கின்றது.

1. இதில் ஸ்ரீ கூரேசன், தமது ஆசார்யராகிற ஸ்ரீ ராமாநுஜனை உத்தேசித்து ப்ரபதந ரூபமான நமஸ்காரத்தைச் செய்கிறார். ஆகையால் இது ஒரு மங்கள ச்லோகமாகவும் ஆகின்றது. ஸதாசார்யனுடைய நாம க்ரஹணமும் அவனுடைய திருவடிகளை ஆச்ரயிப்பதும் பலமான மங்கள மென்று ப்ரஸித்தம்.

[ப - ரை] ய:-எந்த ராமாநுஜன், நித்யம் - எப்பொழுதும், அச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம வ்யாமோஹத: - ஸ்ரீமந்நாராயணனுடைய பாதாரவிந்த யுக்மமாகிற பரம போக்ய வஸ்துவில் வைக்கப்பட்ட அபிநிவேசத்தால், ததிதராணி - அந்த வஸ்துவைத் தவிர்த்த வேறு வஸ்துக்களை, த்ருணாய மேநே - த்ருணமாக அநாதரித்து நினைத்திருந்தாரோ, அஸ்ய - அப்படிப் பட்ட இந்த, தயைகஸிந்தோ: - தயைக் கெல்லாம் ஓரே ஸமுத்ர மாயுள்ள, அஸ்மத்குரோ: - நமக்கெல்லாம் ஆசார்யனாகிற, பகவத: ராமாநுஜஸ்ய - கல்யாண குண கணங்களுக்கு இருப்பிடமாகிற ராமாநுஜனுடைய, சரணௌ-திருவடிகளை, சரணம் - உபாயமாக [அதாவது, ச்ரேயஸ் ஸாதநமாக], ப்ரபத்யே - அடைகிறேன் [அதாவது, நிச்சயமான புத்தியைச் செய்கிறேன்].

த்ரைவித்ய வ்ருத்த ஜந மூர்த்த விபூஷணம் ய:
ஸம்பச்ச ஸாத்விக ஜநஸ்ய யதேவ நித்யம் |
யத்வா சரண்யம் அசரண்ய ஜநஸ்ய புண்யம்
தத் ஸம்ச்ரயேம வகுளாபரணாங்க்ரி யுக்மம் || (உ)

இதில் ஆசார்ய ப்ரபதநம் செய்யப் பட்டதாகின்றது. ப்ரபதநம் என்பது சேஷத்வாநுஸந்தாந விசேஷமே. ஸமஸ்த கல்யாண குணங்களால் நிறைந்துள்ள ஸ்ரீ ராமாநுஜனைப் பற்ற, தன்னை ரக்ஷித்துக் கொள்ளும் வ்யாபாரத்திலும் அந்த ரக்ஷணத்தின் பலத்திலும் ஸ்வாதீநமாகவும் ஸ்வார்த்தமாகவும் தனக்கு அந்வயமிராதபடி அத்யந்த பாரதந்த்ர்ய விசிஷ்டமாகவன்றோ நிற்கின்றது இந்த அநுஸந்தாநம்? பகவானிடத்தில் ஸ்ரீ ராமாநுஜனுக்கு இருந்த ப்ரீதியும் அவனைத் தவிர்த்த மற்றை வஸ்துக்களில் அவருக்கு இருந்த வைராக்யமும் அளவற்றவை.

ததிதராணி—பகவத் பாதாரவிந்தங்களைத் தவிர்த்த மற்றை வஸ்துக்கள் மாத்ரம் இவ்விடத்தில் விவக்ஷித மன்று; அந்தப் பகவானுடைய ப்ரீதியைத் தவிர்த்த மற்றை ப்ரயோஜநங்களும் இவ்விடத்தில் விவக்ஷிதம். மற்றை வஸ்துக்களை அநாதரித்திருந்தது போல மற்றை ப்ரயோஜநங்களையும் இவர் அநாதரித்திருந்தார் என்பது குறிப்பு.

த்ருணாய மேநே - இவ்விடத்தில் 'த்ருணாய' என்பதில் தென்படும் நான்காம் வேற்றுமை அநாதரத்தைக் குறிக்கின்றது.

பகவத:—இதற்கு ஸகல கல்யாண குணங்கள் நிறைந்திருப்பதும் ஹேய குணங்களின் கந்தமுமற்றிருப்பதும் பொருளாகும்.

"ஜ்ஞாந சக்தி பலைச்வர்ய வீர்ய தேஜாம்ஸ்யசேஷத: |
பகவச்சப்த வாச்யாநி விநா ஹேயைர் குணாதிபி: ||"

[ஜ்ஞாநம் முதலிய ஸகல குணங்களின் பூர்த்தியும் ஹேய குணங்களின் இராமையும் "பகவான்" என்னும் சப்தத்தால் சொல்லப்படுகின்றன] என்பது ஸ்ரீ விஷ்ணு புராண வாக்யம்.

சரணம்—இந்த சப்தத்திற்கு 'உபாயம்' என்னும் அர்த்தமும் உண்டு. அந்த அர்த்தத்திலேயே இம்மாதிரியான விடங்களில் இது ப்ரயோகிக்கப் படுகின்றது. 'ஸகல அநிஷ்ட நிவ்ருத்தியை முன்னிட்டுக் கொண்டிருக்கும் ஸகல இஷ்டப்ராப்திக்கும் ஸ்ரீராமாநுஜனுடைய திருவடிகளே ஸாதநம்' என்பது தான் கருத்து.

2. ஸ்ரீராமாநுஜனை இவ்வாறு ப்ரபதநம் செய்து விட்டு, ஸ்ரீபராங்குச முநியை இரண்டு ச்லோகங்களால் நமஸ்கரிக்கிறார். ஸ்ரீபராங்குசன் ஸ்ரீமந்நாத முநிகளால் "ரேகா விதா யாவதய:" இத்யாதியான ச்லோகத்தயல் ஸ்துதிக்கப்பட்டார். அவருடைய அளவற்ற வைபவம் இவரையும் ஆகர்ஷிக்கின்றது.

ஹ்ருத்வ்யாப்தஸாவதாநாத் ப்ரஹ்மஸாவயம்
ஸம்யக்ஷித புண்யஸாரஸளவசுஃ।

[ப - ரை] யத் - எந்தப் பாதாரவிந்த யுக்மமானது, த்ரைவித்யவ்ருத்தஜநமூர்த்தவிபூஷணம் - மூன்று வேதங்களின் உட்கருத்தைக் கசடற அறிந்துள்ள மஹான்களுக்கெல்லாம் சிரோபூஷணமாயிருக்கின்றதோ, யச்ச - எந்தப் பாதாரவிந்த யுக்மமே, நித்யம் - எப்பொழுதும், ஸாத்விக ஜநஸ்ய - ரஜஸ் தமஸ் தலை சாய்ந்து ஸத்வம் மேலிட்டிருக்கும் ஜநங்களெல்லாருக்கும், ஸம்பத் - ஸர்வ வித ஸம்பத்தாக [அதாவது-பரமபோக்யமாய்] இருக்கின்றதோ, யத்வா - எந்தப் பாத யுக்மமே, அசரண்ய ஜநஸ்ய - எவ்வித புகலுமற்றிருக்கும் அகிஞ்சநர்களுக்கு, சரண்யம் - இஷ்ட பலத்தைக் கொடுக்கக்கூடிய, ஸாதநம் - ஸாதநமோ, தத் - அப்படிப்பட்ட, வகுளாபரணாங்க்ரியுக்மம் - வகுளாபரணனுடைய பாதாரவிந்தம் இரண்டையும், ஸம்ச்ரயேம - அடைவோம் [ஸகல விதமான ச்ரேயஸ்ஸுக்கும் ஸாதநமாகக் கைப்பற்றுவோம்].

த்ரைவித்யவ்ருத்தஜநமூர்த்தவிபூஷணம் - திஸ்ர: வித்யா: த்ரைவித்யம்—ருக் யஜுஸ் ஸாம ஆகிய மூன்று வேதங்கள். இவைகளில் வ்ருத்தர்களென்றால், இவைகளின் அர்த்தத்தை நன்கு பரிசீலனம் செய்தவர்கள் என்று சொன்னதாகின்றது. அவர்களுக் கெல்லாம் சிரோ பூஷணமென்று சொன்னதால், வேதங்களின் உட்கருத்து அனைத்தும் ஸ்ரீபராங்குசனுடைய திவ்ய ஸூக்திகளில் தெளிவாகவும் அதிரஞ்சகமாகவும் பொதிந்து கிடப்பதைக் கண்டு வேதம் அறிந்தவர்களெல்லாரும் அவரைக் கொண்டாடுகிறார்கள் என்று சொன்னதாயிற்று.

ஸம்பத்—கீழ் ச்லோகத்தில் காணப்படும் 'ருக்ம' [ஸ்வர்ணம்] என்னும் சப்தம் போல, இதுவும் 'போக்ய வஸ்து' என்னும் அர்த்தத்தைக் குறிக்கின்றது.

நித்யம்—எப்பொழுதும். பகவத் க்ருபையை ஸாதித்துக் கொடுக்கும் ஸாதநமாக மாத்ரமன்று; பகவத் க்ருபை கிடைத்த பிறகும் இது போக்யமாகவே நிற்கின்றது என்பது தாத்பர்யம். 'அத்ர பரத்ர சாபி,[இவ்விடத்திலும் பரலோகத்திலும்] என்று சொல்லி இருப்பது போல இவ்விடத்தில் 'நித்யம்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

3. இந்த ச்லோகத்தில் ஸ்ரீ பராங்குசனை க்ஷீரஸமுத்ரத்திற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். க்ஷீர ஸமுத்ரம் க்ஷீர ப்ரவாஹங்களால் நிறைந்திருக்கும்; இவர் ப்ரீதிரஸத்தால் நிறைந்திருக்கிறார். ஸமுத்ரம் ரத்நங்களுக் கெல்லாம் இருப்பிடம்; இவர்

முடியா ராயிரம் பணி மீதே மூக்கணை
ஞதி யிமையோர்வந்
தடியார்ந் துய்ய வின்றுயில் கொண்டா
னந்தணர் போற்ற மறைபோற்ற 62

வேறு.

எம்பெருமா னிவ்வண்ண மீண்டருள வங்கரி
னும்பர்களு மற்றுளதம் மாலயம்வந் தொன்றினரால்
வம்பலரின் வாவிசெறி யங்கரம் பண்டையினும்
வெம்புதுய ரொழிந்து வீறிச் செழித்ததரோ. 63

கானம் படர்ந்தரக்கர் காலழிய வேர்களைந்து
மானம் பெருகிரகு நாதன்பின் மணந்தருள
வீனந் தவிர்ந்தொளிர்ந்த வின்னகர்நேர் தன்னகரைக்
கோனும் விழிகுளிரக் கொண்டுமகிழ் நோக்கியுடன். 64

வில்லெறியும் பூண்பலவுங் கோசிகமும் விளம்பரிய
பல்லாயி ரம்புரியும் பைம்பொற் கவரிகளும்
நல்ல கவிகைகளு மின்னபல நற்பொருளு
மல்லன் மழிசையிறை மலரடியிற் கொண்டளித்தே 65

போற்றித் தொழுதிறைஞ்சப் பொன்னருள்செய் தன்னவரு
மேற்ற வினைக்கடைக்கணித் தேயேகு கெனவிடுத்தச்
சாற்றற் கரும்பொருளைச் சலசநய னன்பதத்திற்
கேற்ற தெனவரித்தே யிதயங்க ளித்திருந்தார். 66

மாமழிசை மன்னவன்சொல் வண்ணமல ராள்கணவ
னுமென் றருளி யிழைத்ததி னத்தொல்பதியிற்
சேமம் பெறவிலகு மன்னவற்குச் செகமுழுது
நாமம் யதோத்தகா ரனென்றே நவின்றிடுமே 67

பல்லாண் டவர்மினுமப் பட்டணத்தில் வீற்றிருந்தே
யெல்லா ரெயிற்குடந்தை யோரார ராவமுதன்
மல்லாண்ட திண்டோள் மணி வண்ணன் றாள்போற்றச்
செல்லாநின் றொழுந்தி யோகஞ் சிதையாமே. 68

போமா றிடையொளிரும் புலியூரென் றோர்பதியாங்
காமா ரணமோது மந்தணர்கள் கண்டிவரைத்
தாமா ரணநிறுத்தித் தாழ்ந்தகுலத் தாரென்றத்
தீமா வினையினவர் விட்டவிடந் தேடினரால். 6

நிறத்துமிடந் தோன்றும னின்றலையக் கண்டாழ்வார்
கறுத்தவொரு நெல்லெடுத்துக் கையுகிரி னாற்போழ்ந்தக்
குறிப்பி னுணர்த்தமனங் கொண்டவரும் விண்டதலம்
வெறுத்துத்தம் வெள்ளறிவை யிருடி தமைவியந்தே. 70

எக்குலத்தா ராயினுமா லோரார் மலரடியைத்
தக்க படியடையி னந்தணருந் தாமவரே
மிக்க குலத்துதித்து மத்திருவை மேவாதார்
கைக்கு மிழிகுலத்துக் காராளர் தாமவரே 71

என்று மிகப்போற்றி யெல்லோருந் தாங்களித்துத்
துன்றி யவரடியைத் தொன்முறையி னேபணிந்து
நின்றெம் பிழைபொறுப்பி ரென்றுபல நிகழ்த்த
நன்றார் திருவுள்ளத் தாழ்வார் நனிகுளிர்ந்தார். 72

பின்பத் திருப்பதியிற் பீடார் மழிசையிறை
யின்புற் றெழுந்திசைக ளெங்கு மவனருச்சை
தன்படிவ மாயொளிரும் தாமரையாள் கோன்றிரும்ப
அன்பினைக் கண்டவர்க ளானந்தித் தந்நகரில். 73

மிக்கவவி சொரிந்து மேலா மகம்புரியுந்
தக்கவொரு பரம பாகவதர் தாங்கேட்க
வித்தகையை நன்கியம்ப லென்னே யெனவியந்து
புக்கவரு மாழ்வாரின் பொன்னடியைத் தான்பணிந்தே. 74

கண்ணனடி யார்பணிந்து கண்படைத்த பேறுடையேன்
பண்ணுமென னுமகச் சாலையுறும் பாதமலர்
நண்ணிப் புனிதமுற நல்லருள்செய் கெனப்பழிச்ச
வண்ண மவர்வேண்டு மாழ்வாரும் வந்தடைந்தார். 75

அந்த மகம் புரியு மரிபாத சேரவிதனும்
முந்தவெது நாயகற்கு முரசக் கொடியுயர்த்தோ
னந்தமுறு மக்கிரபூசனையாங் கிழைத்தபடி
யிந்தத் திருமழிசை யிறைவர்க்கிழைத்தனனால். 76

அந்நாட் சிசுபால னுய்ச்சியர்க டாங்களிக்க
மன்னோர் குரவைபுரி மாயன் றனைப்பழித்த
தென்னேயவ் வேள்வியிடை யிருந்த சிற்சிலரிந்
நன்னு வலர்வெறுக்க நாடா திழித்துரைத்தார். 77

கண்டப் பரிபவத்தை யரிபாத கோவிதனித்
துண்டக் குலம்பிதற்றுந் தோமொழியை யான்பொறுக்கேன்
பண்டைப் பெருமறையின் பண்புணர்ந்தீ ரென்றாழ்வார்
இண்டைத் திருமுகத்தை நோக்கி யிறைஞ்சினனால். 78

அப்போ தருந்தவருந் தந்தமை யாங்கொளிர
வெப்போதுந் தம்மிதய கஞ்சத் தெழுந்தருளு
மெப்போ தருந்திருமா லொண்பதத்தைத் தானினைந்தே
யிப்போ தெழுந்தடியே னின்னல்களை கென்றிறைஞ்சி. 79

மாயா மதுசூதா மாலே மணிவண்ணா
காயா வெனுநிறத்தாய் கையாருஞ் சக்கரத்தாய்
தீயார் செருக்கொழியத் திண்மனத் தென்னுள்ளதுபோ
லாயா வெளிப்பட்டிங் காள்கவென வேத்தினரால். 80

ஆட்பட்ட வர்துயரை யாற்றாத வாளரியுந்
தாட்பட்ட வரித்தகவே பழிச்சவுடன்
கோட்பட்ட வெங்கிகிரி முதலாங் குலவுபடை
நாட்பட்ட செம்மலர்க்கை நான்கிடையு நன்கொளிர. 81

ஆழ்வாரே தன்னுருவா யாங்குதிக முத்திகழத்
தாழ்வாயு ரைத்தவருந் தக்கமகஞ் செய்தவருங்
கேழ்வாய்தி ருத்திகிரிக் கேசவனே நீசெரமை
வாழ்வார்க் கிடவருள்வா யென்று வணங்கினரால். 82

ஆனகதுந் துபிதுதித்த வந்நாளப் பேருருவந்
தான்மறைத்த தன்மையினே யிங்குமது தான்மறைக்க
வானவருந் தாள்பணியவ் வாழ்வாரம் மாமகம்பின்
மானமுறத் தானடத்தி மற்றவரைக் கடைக்கணித்தே. 83

அஞ்சலிசெய் தெல்லோரு மானந்த நீர்வடியப்
பின்செலவோ ரோசனைபின் னிற்கவெனப் பேரருள்செய்
தெஞ்சலில் வேள்விகளி னின்புகைமே லெண்மறைய
விஞ்சுந் திருக்குடந்தை வெம்பதியை யண்மினரே. 84

வேறு.

திரைக் கரத்தி னூடகத் திரள்க ரைக்கண் சேர்த்தலா
லுரைக்க லுற்ற பொன்னி யென்னு மோடுமந் நதித்தடம்
வரைக்க லங்க ணிரைத்த தென்ன வைகுமாட வீதிசூழ்ந்
திருக்க வோங்கு பைம்பொனா லயத்து வாயி லெய்தியே. 85

செங்கதிர் மணிக்கு வட்டினையி ரஞ்செ றிந்தவோர்
திங்க ளென்னும் வெண்பொருப்பி னூடுமோர் தெளிந்தகார்
பைங்க திர்மணிப் பருப்ப தம்படிந்த பான்மையாய்
மங்களத்து றங்கு மெந்த மாயனைப் பணிந்தரோ. 86

நடந்த கால்க ளொந்தவோ நடுங்க ஞால மேனமா
யிடந்த மெய்கு லுங்கவோ விலங்கு மால்வ ரைச்சுரங்
கடந்த கால்ப ரந்தகா விரிக்க ரைக்கு டந்தையுள்
கிடந்த வாறெழுந்தி ருந்துபேசு கென்று கேண்மையால். 87

ஊறு தேனின் பாட லொன்று ரைக்கவா ராவமுதனும்
நாறு பைந்து ழாய்முடியை மீதெழுப்ப நல்லுரை
கூற யோகிபின்ன ருள்ளங் கொண்டுவப் பருங்கவி
யீறு கொள்ள வாழி கேசனேயெனப் பழிச்சினர். 88

இந்தவண்ணம் வாழ்த்தலத் திருக்கு டந்தையெம்பிரா
னந்தவண்ண மீதுநோக்க ருந்துயில் புரிந்திடத்
தந்திருக்க ரத்திலந்த குஞ்சுடர் பொருத்தியே
முந்தியோக நேமமுற்றிரு மாதமுற் றிருந்தரோ. 89

ஈறி லாது துய்த்த வந்த வின்பவெள் ளமுற்றவும்
வீறு நான்முகன் றிருவந் தாதி யாயும் விழைதருங்
கூறு திருச்சந் தவிருத் தங்க ளென்றுங் கூறரும்
பேற ளிக்கு மார ணங்க ளென்று வையம்பேசவே. 90

நன்க மைத்து நாலா யிரத்தெழு நூறென்று நவிலுறு
மின்ப முற்ற வருடமிவ் விரும்பு மிக்க ணின்றுபின்
பொன்க லுழ்ந்த திருவை குந்த மென்றுவையம் போற்றுறும்
மின்க லந்த நாட கந்து மேவியங் கொளிர்ந்தனர். 91

முற்றிற்று

நம்மாழ்வார் வைபவம்

4-வது,சருக்கம்

ஏறுபோரி லொன்னலர்கள் செகுத்திடே னெனக்கரத்
தேறுவில்லி றங்கவிட்ட வெழில்விளங்கு பற்குனற்
காற துய்யு மருள்வதென்னு மாற்றினெங்கு மனைவருங்
கூறியுய்ய மறைதெரித்த கொண்டருள் வணங்குவாம். 1

மீளவிலின்ப மேவமின்னும் பரதகண்ட மென்னுமிக்
கோளமர்ந்த பொழில்வளத்தில் குணநிறைந்த புண்ணியம்
நீளவோடு மென்னலாய பொருநையென் றநீணதி
வாளைபாயுங் கங்கையென்ன வளஞ்சுறக்க வொழுகுமால் 2

அத்தரங்கி ணித்தடத்தி லமரரூரை யண்மிநீ
யெத்திரத்தை யென்றசிப்ப தென்னலாய வெண்சுதை
வைத்தெறிக்கு முடிதுலங்கு மனைசெறிந்த குறுகையென்
றொருத்த நாம மோங்கு செல்வ நகரமொன்று குலவுமே. 3

குலவுமந்த நகரையாதி வழுதிநாடன் கோடிடா
தலகில்கா லங்காண்டுதன் மரதனொன்று ருமறைதரும்
புலவுநாறு வேல்பிடித்த புதல்வனுள வீந்தனன்
நலமுறந்த நரபதிக்கு மைந்தன்சக் ரபாணியே. 4

அவன்றனைச் சமச்சுதன் செந்தாமரைக் கண்ணனவன்
றவந்தனிற்சி றந்தசெல்வ னன்னவன்றன் றனயனங்
குவந்தளிக்குஞ் செங்கணன்பொற் காரியன்ன வுத்தமற்
கவந்தளிக்கு மதலையன்ன வரசன்மைந் தன்காரியே. 5

காரிமைந்தன் மாறனுமிக் காவலற் குளந்தபொற்
காரியுந்தனின் மகற்குக் கடிமணம் புரிந்திடச்
சிருறுங்க ருத்தெழுந்து திருவண்பரி சாரமென்
பேரடைந்த பேறுயர்ந்த வூரடைந்து புக்கனன். 6

வழிவழியாய்ப் பரமபத நாதன்பாதம் வாழ்த்திவாழ்
வழியுதித்து வைகுதிரு வாழுமார்ப னென்றவன்
கழியகங் களிக்கவாருங் காவல்செய் கண்ணிய
னழகுமிக்க விழையுமாடத் தவன்களிக்க வெய்தினன் 7

வந்தவற்க வன்றகுந்த வண்ணமேறு பூசைசெய்
திந்தவெங்கு லம்பிழைக்க வீந்தெழுந்த தென்னெனக்
கந்தமாமலர்க்குழலுன் னுடையநங்கை கைம்மல
ரந்தமாறென் மைந்தன்பற் றுமாசையுற் றடைந்தனன் 8

என்றுரைத்த போழ்தவன்ற னேந்திழைப் புதல்வியைச்
சென்றிவன்வி ழைந்துகேட் குஞ்செந்தவஞ் செய்தேனென
நன்று பொங்கி யொன்றுபட்டே பொழ்திலந்த நரபதி
தன்றிருப்பு ரம்படர்ந்து தக்கவோரை தன்னிலே. 9

தனயனொடுங் கிளைகளோடுந் தழங்குபேரி கைக்குலத்
தினியகல்லை யோடுந்தானை யெய்துஞ்சூழ மீண்டுமவ்
வனையுமாட வண்பரிசா ரத்தையண் மிவானவ
ரனைவரும்வ ழுத்தமன்ற லாரணத் திறுற்றியே. 10

வண்டலம்புஞ் சோலைசூ ழுமந்தமுந்து வளநகர்க்
கண்டிருவாழ் மார்பனென்னுங் கார்முகிற் பதந்தமைக்
கெண்டையங்கண் மருகிமைந்தன் கிளைஞ்சருங் கொடர்ந்துறக்
கண்டுபோற்றி மீண்டனன்றன் கடிநகர் குறித்தரோ. 11

வேறு.

அரையன் மகற்கு மணஞ்செய் தனனங்கு மீண்ட
வுரைதஞ் செவிக்கு ளுறவங்க கர்மாந்தர் யாருங்
வரையஞ் சுமாட மிசைவான வரூரி லாட
வரைவெஞ் சுவண்ணத் றுகிற்றண்டு வயங்க நட்டார். 12

புடையா ருமொளித்த மாமலர்ப் பொங்கு கூதனைக்
குடையா வருந்திவரி வண்டுகள் கூர்ந்து கால
விடையா ருமீரம் புலராத மறுகி னைங்கும்
தொடையா டுபூங்கா வணமோங்கித் துலங்க வேய்ந்தார். 13

சேகுற் றசந்த மணித்தோ ரணஞ்சேர வீக்கிக்
காகுத் தனுடற் சனகன் மகள்கைபி டித்தன்
றேகுற் றகாலவ் வெழின்மா நகரேய்ந்த கோல
மாசத் துலங்க விதுவும் வனைந்தார்க ளன்றே. 14

இவ்வா றிழைத்தந் தணர்பூ ரணகும்ப மேந்தி
யவ்வா ரணத்தின் முறையோ தமுழக்கு மார்ப்பு
மெவ்வாய் முரசத்திரன் விஞ்சவும் வீழ்வின் யாரு
மொவ்வா தமன்னன் றனைப்போந் தெதிருற்று வந்தார். 15

தோகைக் குலங்களென்ன மங்கையர் தோன்றி யாட
பாகொக் குமென்னப்ப லமங்கையர் பாடல் பாட
வாகைப் புயத்தாண்வள மாநகர் வீதி போந்து
மாகக் குவட்டின்ம னைத்தன்னு ழைவந்து புக்கான். 16

பின்னர்த் தகாரியிணை நேர்விழி நங்கை யோடும்
பொன்னந் தகாடரெனப் போகமும் பொங்கி யுண்டு
பின்னம் படாதமனை வாழ்க்கையும் பொட்பி னாற்றி
மன்னும் பொழுத்தி னியாயது மற்று ரைப்பாம். 17

வாயா லொருகால் வழங்கிற் பவக் குப்பை வாட்டுங்
காயா நிறத்துத் திருநம்பி கலந்து மின்னுஞ்
சேயா ரணத்தின் றெளிவிண்ணு லகத்துஞ் சேரும்
வீயா வளத்தென் றிசையின்பு றமேவு மூராம். 18

குறுவென் மொழியை முதற்கொண்ட குடியெ னும்பே
ருறுமப் பதியிற் பெருஞ்செல்வத் தொருவன் விஞ்சு
மிறுமாப் புறும்பின் னவனாரண மாதி யெல்லாம்
குறையா துணர்ந்து குறிப்பின்ற ருநீதி யொன்றும். 19

முன்னு னிருடிக்கு லஞ்செய்த விம்மூல வேத
மன்னு புராணமுதல் யாவையும் வாய்மை யன்று.
லென்னு னுமொன்றுமிவை முற்றிலு மின்றி மாய்ந்திந்
நன்னு டனைத்துமத மொன்றுற நாட்டு கிற்பான் 20

பீடா ரொரு பிள்ளையை யிங்ஙனம் பெற்றெ டுப்பே
னீடா தெனத் தன்மனத் தேநிலை கொண்டு நின்று
வாடா தநம்பி மலர் தாண்மனத் தார வைத்துக்
கோடா தருவெந்தவஞ் செய்தனன் கூர்ந்து மன்னோ. 21

சீரார் தவஞ்சேரிரு டித்திரள் சென்று காரி
யேரார் முகத்திற்கெதிர் நிற்றலு மாங்க வன்கண்
டாரா வமுதக்கட லாடின னென்ன வின்புற்
றோரா வரிசையுவந் தேற்கவ வற்கிழைத்தான். 22

வந்தீ ரெனதின்குல முய்ந்திட வந்தி ரேனும்
நுந்தம் பணியென்சிரங் கொள்ள நுவல்க வென்ன
நந்தா தவாய்மையவ ராசி நவின்று நன்று
கொந்தா ரலங்கற்குவ வுப்புயற் கோதனுற்றார் 23

நண்ணார் தடைவுண்டொளிர் கூரயினண் ணுங்கையாய்
மண்ணோ ருழவனொரு வன்மறை மற்ற நூலு
மெண்ணு திழிந்தவென வேசிப் புவன மெங்கு
மொண்ணு யிழைக்குஞ்சுத னைப்பெற வோர்ந்து மன்னோ 24

வீறூர் குறுங்குடியி னன்றொரு வெந்த வத்தை
மாறு யிழைத்து வருகின்றனன் மன்ன வின்னே
நாறோர் துளவத்திரு நம்பியை நாடி நீயும்
பேறே பெருகும்பெரு வைணவ வேள்வி யாற்றின். 25

வாரே றுங்கொங்கை வளர்கோவி யருள்ளத் தோடுஞ்
சீரா ருமாடைகளுங் காதல் சிறந்து கொண்ட
காரா ருமேனிப் பெருமானவன் கட்க மொன்றுன்
னேரே யெழுந்தே யருளுங் கொளநின் கரத்தே. 26

நீயங் தவாளி னவன்சென்னி நிலத்து வீழக்
காயந் தநாளி லொருபின் னவனகந் தறித்த
மாயன் றிருத்தா சரதிக்கிளை யென்ன மன்ன
நேயந் தனுலிப் பெருநன்றி நிகழ்த்துக வென்றுர் 27

கேட்டந் தவன்னை மறிகெண்டையின்கேளி ரென்ன
நாட்டங் கொணங்கை யுடனுய்ந்தம் முனிக டம்மைக்
காட்டுங் கருவிபென வாய்ந்தரு கார நங்கை
மூட்டுங் களவியிடை பெய்தவிழுந் றினுல் 28

அக்கா லேகம்பி யவன்கண் முகப்பே யெழுந்து
மிக்கா ரயினுந் தகமொன் றவன்மே வவீந்து
மிக்கா லுனக்கேன் றதுகே ளென்வேந் தலைய
நற்கா தலனென் றருள்கென் னநயந் திரந்தான் 29

கோனைக் களியுற்று வசுதேவன் குலத்தி லன்னுண்
மாணப் பிறந்த தகவே யுன்மனைக் கிழத்தி
யேணற் கருவிலினி யானுதித் தெங்கு மென்சீர்
பேணிப் பலரும் பெருகக் கொளச்செய் குவன்காண். 30

தாழா இனியிக் கரவான் கொடுத்தா னவன்மெய்
வீழா மடிய விரைந்தே கிகீவிட்டு கென்றக்
கேழார் கிகிரிக் கிளர்மா முகில்வாய் மலர்ந்து
சூழா மறைக்கு கித்துத் தொடாக் கரந்தான். 31

கங்கா தரவின் முறித்துக் கலியாணங் கண்ட
சிங்கா ரனேகத் திருக்காரி யுஞ்சிக்கெ னச்சென்
றங்கா ரமிட்டக் குறுகான் சிரம்வீழ வோச்சி
யங்கா ருமேத்த வயவாகை யணிந்து மீண்டான். 32

வேறு

பண்டே யிசன்பார் வதியங்கைம் மலர் பற்றக்
கண்டே வானோர்தா பதரோடுங் கயிலைக்கண்
கொண்டே யானந்தம் பெருங்கூட்டங் கொளவப்பான்
மண்டாழற் றாழுமலை கைமோப்பக்கன் வயந்தன்றே. 33

உக்தப்ரவாஹவிஷயா, ஸதா பஶ்யந்தீத்யேகைகப்ருத்விஷய தயா ப்ரதீதே: ஶ்ருதிஹாநிப்ரஸங்காத் । அநேகாத்மவிஷயதா ஹ்யபூர்: காலபேதேஷ்வபி விச்சின்னத்வாத், கிம் ப்ரயோஜநம் விஶேஷேண நித்யவிஶேஷணத்வம் ஸ்வாத் ஸதேதி? இதி ஸர்வமுபபந்நம் ।

நநு ச 'தத்விஷ்ணோ: பரமம் பதம்' இதி பரஸ்வரூபமேவ பரமபதஶப்தேநாபிதீயதே,

"ஸமஸ்தஹேயரஹிதம் விஷ்ண்வாக்யம் பரமம் பதம்"

இத்யாதிஷு வ்யக்திரேகதர்ஶநாத் । நைவம்,

"க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே"

"ததக்ஷரே பரமே வ்யோமந்"

"யோ அஸ்யாத்யக்ஷ: பரமே வ்யோமந்"

"யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமந்"

'ஒவ்வொரு முக்த ஜீவனேயும் பற்றியது அந்த ச்ருதி என்பது சரி இல்லாவிட்டாலும், அது அப்படி முக்தர்களான ஜீவன்களின் பரம்பரையைப் பற்றியது என்று சொல்லக்கூடாதோ' என்று கேட்பதும் அஸங்கதமே. ஏனென்றால், 'ஸதா பஶ்யந்தி' [எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்] என்பதால் ஒவ்வொரு முக்த ஜீவனும் அப்படிப் பார்த்துக் கொண்டிருப்பதாகவன்றே தோற்றம் ஏற்படுகின்றது? ஆகையால் வேறுவிதமாக அர்த்தம் சொன்னால் ச்ருதி வாக்யத்திற்குப் பங்கம் ஸம்பவித்து விடும். மந்த்ரங்களிலிருந்தும் அர்த்த வாதங்களிலிருந்தும் அறியப்படும் கார்ய பரங்களான அர்த்தங்களுக்கே ஸித்தி உண்டு என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறபடியால், வ்யுத்பத்தியைக் கொண்டு அறியப்படும் ஸித்த வஸ்து பரமான அர்த்தத்திற்கு ஸித்தி உண்டு என்பதைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஆகையால் இங்கு சொல்லப்பட்டவை யெல்லாம் உபபந்நங்களே.

நநுச...'தத்விஷ்ணோ:' இத்யாதியான வாக்யத்தில் சொல்லப்படும் 'பரமம் பதம்' என்பது, பர ப்ரஹ்ம ஸ்வரூபத்தைக் குறிக்கின்றது என்று சொல்ல வேண்டும்; ஏனென்றால் 'விஷ்ணுவென்னும் பெயருடைய பரம பதமானது ஸமஸ்த ஹேய குணங்களாலும் விடப்பட்டது' என்னும் வாக்யத்தில் 'விஷ்ணுவாகிற பரம பதம்' என்று விஷ்ணுவும் பரம பதமும் ஒன்றாகவே பேசப்பட்டிருக்கின்றதன்றோ?' என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். இந்த ஆக்ஷேபம் நிற்கமாட்டாது. ஏனென்றால், 'ப்ரக்ருதி மண்டலத்திற்கு வெளிப்பட்ட ஓரிடத்தில் வஸித்துக் கொண்டிருக்கிற' என்றும், 'க்ஷயமற்ற பரம ஆகாசத்தில் இருக்கிறான்' என்றும், 'இதற்கெல்லாம் அத்யக்ஷனாக இருக்கும் அவன் பரம ஆகாசத்தில் இருக்கிறான்' என்றும், 'பரம ஆகாசமாகிற குஹையில் வஸிக்கும் அவனை யார் அறிகின்றாரோ' என்றும் இவ்வாறு பரம ஸ்தானமொன்று உண்டு

'ஸதா' [எப்பொழுதும்] என்னும் பதம் பாதிக்கின்றது என்று சொல்லுகிறார்.

நநுச...ஸ்ரீ வைகுண்டமென்று அப்ராக்ருத ஸ்தான விசேஷமொன்று உண்டு என்று நாம் ஒத்துக் கொள்வதற்கு 'தத்விஷ்ணோ: பரமம் பதம்' இத்யாதி

[illegible]

[illegible]

என்பது வ்யக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ? இது மாத்ரமன்று; இந்த வாக்யத்திலேயே 'விஷ்ணுவினுடைய பரம பதம்' என்று, விஷ்ணுவை வேறாகவும் அவருடைய பரம பதத்தை வேறாகவும் பேசியிருக்கிறார்கள். இதற்க 'விஷ்ணுவாகிற பரமபதம்' என்று சொல்லப் பட்டிருக்கிறபடியால், விஷ்ணுவாயிராத பரம பதங்களும் உண்டு என்பது இந்த வாக்யத்திலிருந்தே ஸித்திக்கின்றது. அதுதான் இந்தப் பரமமான ஸ்தாநமாக இவ்விடத்தில் ப்ரதிபாதிக்கப்படுகின்றது; அதைத்தான் ஸூரிகள் எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், நாம் அறிய வேண்டிய விஷயம் என்ன வென்றால்:— 'பரமம் பதம்' என்னும் சப்தம் சிலவிடங்களில் பரமமான ஒரு ஸ்தாந விசேஷத்தையும், மற்றும் சில விடங்களில் ப்ரக்ருதி ஸம்பந்தத்திலிருந்து விலகி இருக்கும் சுத்த ஆத்ம ஸ்வரூபத்தையும், வேறு சிலவிடங்களில் பகவத் ஸ்வரூபத்தையும் குறிக்கின்றது என்பது தான். 'அது விஷ்ணுவின் பரம பதம்' என்னும் வாக்யத்தில் பரமமான ஸ்தாந விசேஷமும், 'ப்ராக்ருத குணங்களற்றிருக்கும் அந்தப் பெரிய பரம பதமானது, ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் இந்தக் காலங்களில் குண ஸம்பந்தம் பெற்று, அந்தக் குணங்களின் ப்ரவ்ருத்தியால் மூன்று விதமாய் இருப்பதாகக் காணப்படுகின்றது' என்னும் வாக்யத்தில் சுத்த ஆத்ம ஸ்வரூபமும், 'ஸமஸ்த ஹேயகுணங்களாலும் விடப்பட்டிருக்கிறவும் விஷ்ணு வென்னும் பெயரை உடையதுமானப் பரம பதம்' என்னும் இடத்தில் பகவத் ஸ்வரூபமும், ஆக இந்த மூன்றும் 'பரம பதம்' என்னும் சப்தத்தால் ப்ரதி பாதிக்கப் படுகின்றன. மூன்றும் பரம ப்ராப்

யான ச்ருதி வாக்யமே முக்யமான ப்ரமாணம். இந்த வாக்யத்தில் 'விஷ்ணுவினுடைய பரமமான ஸ்தாந விசேஷமொன்று உண்டு; அவ்விடத்தில் நித்யர்கள் என்று சில ஆத்மாக்கள் இருக்கிறார்கள்; அவர்கள் குறைவற்ற ஜ்ஞாநத்துடன் எப்பொழுதும் அந்த ஸ்தாநத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. சிலர், 'இந்த வாக்யத்திலுள்ள 'விஷ்ணுவின் பரம பதம்' என்பதால் விஷ்ணுவின் ஸ்வரூபம் குறிக்கப்படுகின்றதே தவிர, ஒரு ஸ்தாந விசேஷமும் குறிக்கப்படவில்லை' என்று ஆக்ஷேபிக்கிறார்கள். அந்த ஆக்ஷேபத்திற்கு இவ்விடத்தில் ஸமாதாநம் சொல்லப்படுகின்றது. அந்த ஸமாதாநம் என்ன வென்றால்:—(1) வேறு ப்ரமாணங்களால்

[illegible]

யங்களே (எல்லாராலும் கடைசியாக அடையப்பட வேண்டியவைகளே). 'மூன்றும் எப்படிப் பரம ப்ராப்யங்களாகும்?' என்று கேட்டால், பகவத் ஸ்வரூபம் பரம ப்ராப்யமென்பது நிர்விவாதம்; மற்றை இரண்டும், 'பகவான் அடையப் படுகையில் அவைகளும் பகவானுடன் கூட்டவே அடையப் படுகின்ற படியால், பரம ப்ராப்யங்களே. ஆத்ம ப்ராப்தியானது, பகவத் ப்ராப்தியுடன் கூடியதென்பது பின் வரும் உபபாதநத்தால் விளங்கும். அதாவது:—'நம்மை மூடிக் கொண்டிருக்கும் கர்மங்கள் நசித்தால் நமக்கு ஆத்ம ப்ராப்தி உண்டாகின்றது. அந்தக் கர்மங்களே பகவானுடைய குணங்களை நமக்குத் தெரியவொட்டாமல் மறைத்துக் கொண்டிருக்கின்றபடியால், அப்படி மறைத்துக் கொண்டிருக்கும் கர்மங்கள் நசிக்கும் பொழுது பகவத் குணங்களும் நமக்கு வெளிப்படும்; அப்பொழுது பகவத் ப்ராப்தியும் ஸித்திக்கு மாதலால், ஆத்ம ப்ராப்தி ஸித்திக்கையில் பகவத் ப்ராப்தியும் ஸித்திக்கின்றது என்பது திண்ணம். பகவத் குணங்களை நமது கர்மங்கள் மறைக்கின்றன வென்பது 'த இமே' இத்யாதியான வாக்யத்தால் விளங்கும்' என்பது தான். 'த இமே' இத்யாதியான வாக்யத்தில் அந்ருதங்களால் பகவானுடைய குணங்கள் மறைக்கப் பட்டிருக்கின்றன வென்று மாத்ரமே

இந்த அர்த்தம் ஸித்திக்கின்றது; (2) இவ்விடத்திலும் 'விஷ்ணுவினுடைய பரம பதம்' என்று விஷ்ணும் பரம பதத்தையும் வெவ்வேறான வஸ்துக்களாகவே நிர்த்தேசம் செய்திருக்கிறார்கள்; (3) 'பரம பதம்' என்னும் சப்தம் ஸ்தாநத்திலேயே வ்யுத்பத்தி யுள்ளது, என்பவை.

[illegible]—இது, சாந்தோக்யம் எட்டாவது ப்ரபாடகம் மூன்றாவது கண்டத்தின் முதல் வாக்யம். இதன் பொருள்:—'ஸத்யங்களான அந்தக் கல்யாண குணங்களெல்லாம் அந்ருதத்தால் மறைக்கப்பட்டிருக்கின்றன' [illegible] [எவை அர்த்திக்கப்படுகின்றனவோ அவை காமங்கள்] என்பது வ்யுத்பத்தி. ஸகல விஷயங்களிலிருந்தும் விரக்தனாக இருக்கும் முக்தனுக்குப் பகவானுடைய கல்யாண குணங்களைத் தவிர்த்து மற்றை ஒன்றிலும் நோக்கம் இருக்கமாட்டாதாகையால் 'காமங்கள்' என்னும் பதம் அந்தக் கல்யாண குணங்களைக் குறிக்கின்றது என்று [illegible]' என்னு மிடத்தில் வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கின்றது. அந்தக் குணங்களாவன:—அபஹத பாப்மத்வம் முதலி

மணஸ்ய திரோதாயகத்வேநாந்ருதஶப்தேந வ்யபதேஶ: ஶ்ருதிவாத நாத் | 'அந்ருதேந திரோதாநம் க்ஷேத்ரஜ்ஞகர்மேதி கதமவகம்யதே?' இதி சேத்,

"அவித்யா கர்மஸம்ஜ்ஞாந்யா த்ருதீயா ஶக்திரிஷ்யதே |
யயா க்ஷேத்ரஜ்ஞஶக்தி: ஸா வேஷ்டிதா ந்ருப ஸர்வகா |
ஸம்ஸாரதாபாநகிலாநவாப்நோத்யதிஸந்ததாந் |
தயா திரோஹிதத்வாச்ச"

இத்யாதிவசநாத் | ஸர்வஸ்யாநவாப்திரபி ஸம்வத்ஸாதிமவேதி ஸாம்யஸ்ய |

சொல்லப் பட்டிருக்கின்றது; அந்த அந்ருதங்கள் க்ஷேத்ரஜ்ஞர்களான நம்முடைய கர்மங்களே என்பது எப்படி ஏற்படுகின்றது?' என்று கேட்டால்,

'கர்மம் என்னும் பெயருடைய அவித்யை மூன்றாவது சக்தியாகின்றது. இந்தக் கர்ம சக்தியால், பற்பல சரீரங்களில் குடி கொண்டிருக்கும் க்ஷேத்ரஜ்ஞனென்கிற இந்த ஜீவ சக்தியானது மூடப்பட்டிருக்கின்றது. இப்படி மூடப்பட்டிருக்கிறபடியால், அந்த ஜீவன் ஸகல விதமான ஸம்ஸார தாபங்களையும் அடைகிறான்'

இத்யாதியான வாக்யங்களிலிருந்து ஏற்படுகின்றது என்பது அந்த ப்ரச்நத்திற்கு ஸமாதானமாகும். பரம ஸ்தான ப்ராப்தியும் பகவத் ப்ராப்தியுடன் கூடியது என்பது ஸ்பஷ்டமே.

யவை. அந்ருதஶப்தாபிதாநம் யேஷாம் தே அந்ருதாபிதாநா: [அந்ருதத்தை மறைவாக உடையவை; அதாவது—அந்ருதத்தால் மறைக்கப்பட்டவை என்று சொன்னதாயிற்று.]

அவித்யா கர்மஸம்ஜ்ஞா...இந்த வாக்யம் ' அவித்யை ' என்னும் பதம் கர்மத்தைக் குறிக்கும் என்பதற்கு ப்ரமாணம். ' அவித்யை ' என்பதும் ' அந்ருதம் ' என்பதும் பர்யாய பதங்களாகையால், ' அந்ருதம் ' என்பது கர்மத்தைக் குறிக்கும் என்பதற்கும் இது ப்ரமாணமாகக்கூடும் என்பது தாத்பர்யம். ஸ்ரீ பாஷ்யம்• மஹா ஸித்தாந்தத்தில் இதற்கு வேறு விதமாக நிர்வாஹம் செய்யப்பட்டிருக்கின்றது. அதுவும் இவ்விடத்தில் விவக்ஷிதம். அதாவது—' எது ருதமன்றோ அது அந்ருதம். பலத்தில் நோக்கமின்றிக்கு முமுக்ஷுக்களாற் செய்யப்படும் கர்மம் ' ருதம் ' என்று சொல்லப்படும். ஸம்ஸாரிகளால் பலத்தில் நோக்கத்துடன் செய்யப்படும் கர்மம் அதைக் காட்டிலும் வேறு பட்டதாதலால், அது ' அந்ருதம் ' என்று சொல்லப்படுகின்றது. அதாவது— ப்ரஹ்ம ப்ராப்திக்கு விரோதியான கர்மம் என்று சொன்னதாயிற்று. ' ருதம் ' என்னும் பதத்திற்குக் ' கர்மம் ' என்றும் அர்த்தமுண்டோ வென்று கேட்டால், 'ருதம் பிபந்தௌ' இத்யாதியான ச்ருதி வாக்யத்தில் அம்மாதிரி அர்த்தமுண்டு என்பதைக் காணலாம்.

"க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே" இதி ரஜஶ்ஶப்தேந த்ரிகுணாத்மிகா ப்ரக்ருதிரபிதீயதே, கேவலஸ்ய ரஜஸோऽவஸ்தாநாஸம்பவாத் | இதம் த்ரிகுணாத்மிகாம் ப்ரக்ருதிமதிக்ரம்ய ஸ்திதே ஸ்தாநே வஸந்தமித்யர்த: | அநேந த்ரிகுணாத்மகாத் க்ஷேத்ரஜ்ஞஸ்ய போக்யபூதாத் வஸ்துந: பரஸ்தாத் வஸந்தமித்யுச்யதே | "வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" இத்யத்ராபி தமஶ்ஶப்தேந ஸைவ ப்ரக்ருதிரபிதீயதே, கேவலஸ்ய தமஸோऽவஸ்தாநாஸம்பவாதேவ | 'ரஜஸ: பராகே க்ஷயந்தம்' இத்யநேநைகவாக்யத்வாத் 'தமஸ: பரஸ்தாத்வஸந்தம் மஹாந்தம் ஆதித்யவர்ணம் புருஷமஹம் வேத' இத்யயமர்தோऽவகம்யதே | "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம - யோ வேத நிஹிதம் குஹாயாம்

'க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே'—இந்த வாக்யத்திலுள்ள 'ரஜஸ:' என்னும் சப்தத்தால், மூன்று குணங்களை உடைய ப்ரக்ருதியே குறிக்கப்படுகின்றது. ஏனென்றால், ரஜஸ் என்பது தனித்து நிற்கமாட்டாதன்றோ? 'மூன்று குணங்களை உடைய இந்த ப்ரக்ருதிக்கு வெளிப்பட்டிருக்கும் ஒரு ஸ்தானத்தில் வஸித்துக்கொண்டிருக்கும்' என்பது இந்த வாக்யத்தின் அர்த்தம். இதிலிருந்து, விஷ்ணுவின் வாஸஸ்தானமானது, மூன்று குணங்களை உடையவும் ஸம்ஸாரத்தில் அகப்பட்டுள்ள ஜீவன்களுக்கு போக்யமாயுமுள்ள ப்ரக்ருதி என்னப்படும் இந்த வஸ்துவுக்கு வெளிப்பட்டு நிற்கின்றது என்பது ஏற்படுகின்றது. "வேதாஹமேதம்" என்னும் வாக்யத்திலுள்ள 'தமஸ்' என்னும் சப்தத்தாலும் அந்த ப்ரக்ருதியே குறிக்கப்படுகின்றது; ஏனென்றால் தமஸ் என்பது தனித்து நிற்கமாட்டாதன்றோ? 'ரஜஸ: பராகே' என்னும் வாக்யமும் இந்த 'தமஸ: பரஸ்தாத்' என்னும் வாக்யமும் ஒரே அர்த்தத்தைச் சொல்லும் வாக்யங்கள்; ஆகையால் இந்த வாக்யத்திற்கு 'தமஸ்ஸாகிற ப்ரக்ருதிக்கு வெளிப்பட்ட இடத்தில் வஸிக்கும் இந்த மஹா புருஷனை நான் அறிவேன்; அவன் ஸூர்யனுடைய வர்ணம் போன்ற வர்ணத்தை உடையவன்' என்றே பொருள் கொள்ள வேண்டும். நிற்க, அந்த ஸ்தானம் எவ்வித விகாரமுமற்றதென்பதும் 'பரம வ்யோம' என்னும் பதங்களால் வ்யவஹரிக்கப்படுகிறதென்பதும் 'ஸத்யம் ஜ்ஞா'

க்ஷயந்தம்—கீழ் உதாஹரிக்கப் பட்டுள்ளவைகளுள் இதுவும் ஒரு வாக்யம். இதன் அர்த்தம் இப்பொழுது விசாரிக்கப்படுகின்றது. 'க்ஷி' என்னும் தாதுவுக்கு 'வஸிக்கிறது' என்னும் அர்த்தமும் உண்டு. ஆகையால் 'க்ஷயந்தம்' என்பதற்கு 'வஸிக்கிற' என்பது பொருள். 'பராகே' என்றால் 'பரஸ்தாத்' அதாவது 'வெளிப்பட்டு' என்பது பொருள். 'ரஜஸ: பராகே' என்பதற்கு 'ரஜஸ்ஸுக்கு வெளிப்பட்டு' என்று அர்த்தம் கொண்டால், அப்பொழுது 'ரஜஸ் என்று ஒன்று ஒரு இடத்தில் இருக்கின்றது; அதற்கு வெளிப்பட்டு நிற்கின்றது இந்த நித்ய விபூதி' என்று சொன்னதாகும். அப்படி 'ரஜஸ்' என்பது ஒரு இடத்திலும் தனியே நிற்கவில்லை யாதலால், 'ரஜஸ்' என்பதால் 'ரஜஸ்ஸைக் குணமாக உடைய த்ரிகுண

பரமே வ்யோமந்," "ததக்ஷரே பரமே வ்யோமந்" இதி தஸ்யாந விகாராஸ்பதத்வம் பரமவ்யோமஶப்தாபிதேயத்வமிதி ச கம்யதே । "அக்ஷரே பரமே வ்யோமந்" இத்யஸ்ய ஸ்தாநஸ்யாக்ஷரத்வஶ்ரவணாத் க்ஷரணஸ்வபாவாதித்யமண்டலாதேர் ந பரமவ்யோமஶப்தாபிதேயதா । "யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா:" "யத்ரர்ஷய: ப்ரதமஜா யே புராணா:" இத்யாதிஷு ச ஸ ஏவ தேஶ இத்யவகம்யதே । "தத்விப்ராஸோ விபந்யவோ ஜாக்ருவாம்ஸஸ்ஸமிந்ததே விஷ்ணோர்யத்பரமம் பதம்" இத்யத்ராப்யயமேவார்த்த: ப்ரதிபாத்யதே । 'விப்ராஸ:' – மேதாவிந: । 'விபந்யவ:' – ஸ்துதிஶீலா: । 'ஜாக்ருவாம்ஸ:'— அஸ்கலிதஜ்ஞாநா: । தே ஸதாஸ்கலிதஜ்ஞாநாஸ்தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா ஸ்தவந்தஸ்ஸமிந்ததே இத்யர்த்த: ।

தம்' இத்யாதியான வாக்யத்திலிருந்தும் 'ததக்ஷரே பரமே வ்யோமந்' என்னும் வாக்யத்திலிருந்தும் அறியப்படுகின்றன. 'அக்ஷரே பரமே வ்யோமந்' என்பதால் 'இந்த ஸ்தாநம் விகாரமற்றது' என்பது விளக்கப்படுகிறபடியால், விகாரங்களை அடையக் கூடிய ஸ்வரூபத்தை உடைய ஸூர்ய மண்டலம் முதலியவைகள் இந்தப் 'பரம வ்யோம' சப்தத்தால் சொல்லப்பட மாட்டா. 'எந்தப் பரம பதத்தில் ஸாத்யர்கள் தேவர்கள் இருக்கிறார்களோ', 'எவ்விடத்தில் அநாதிகாலமாக இருக்கும் புராணர்ஷிகள் இருக்கிறார்களோ' என்னும் வாக்யங்களிலிருந்து 'அவர்களே ஸூரிகள்' என்பதும் விளங்குகின்றது. "தத்விப்ராஸ:" இத்யாதியான வாக்யமும் இந்த அர்த்தத்தையே விளக்குகின்றது. 'விப்ராஸ:' என்பதற்கு 'மேதையை உடையவர்கள்' என்பதும், 'விபந்யவ:' என்பதற்கு 'ஸ்தோத்ரம் செய்து கொண்டே இருப்பவர்கள்' என்பதும், 'ஜாக்ருவாம்ஸ:' என்பதற்கு 'நழுவாமலிருக்கும் ஜ்ஞாநத்தை உடையவர்கள்' என்பதும் பொருள். ஆகையால் இந்த வாக்யத்திற்கு 'அந்த ஸூரிகளே ஒரு பொழுதும் தமது ஜ்ஞாநத்தை இழக்காதவர்களாய், விஷ்ணுவின் பரம பதமாகிற அந்த ஸ்தாநத்தை எப்பொழுதும் ஸ்துதி செய்து கொண்டு ப்ரகாசித்து நிற்கிறார்கள்' என்பது தான் அர்த்தம்.

ப்ரக்ருதி' சொல்லப்படுகின்றது என்று வ்யாக்யானம் செய்தருளுகிறார். 'தமஸ: பரஸ்தாத்' [தமஸ்ஸுக்கு வெளிப்பட்டு] என்னுமிடத்திலும் இம்மாதிரியே அர்த்தம் கொள்ளுதல் வேண்டும்.

ஏகவாக்யத்வாத்—இதற்கு 'ஒரே வாக்யமாகிறபடியால்' என்பது பொருள். இவ்விடத்தில் அப்படி அர்த்தம் சொல்வது அஸங்கதமாகுமாதலால், 'ஒரே அர்த்தத்தைச் சொல்லும் வாக்யங்களாகிறபடியால்' என்று அர்த்தம் சொல்லப்படுகின்றது.

ஏதேஷாம் பரிஜநஸ்தாநாதீநாம் "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" இத்யத்ர ஜ்ஞாநபலைஶ்வர்யாதிகல்யாணகுணகணவத் பரப்ரஹ்மாந்தர்பூதத்வாத் 'ஸதேவ' 'ஏகமேவ' 'அத்விதீயம்' இதி ப்ரஹ்மாந்தர்பாவோऽவகம்யதே, ஏஷாமபி கல்யாணகுணைகதேஶத்வாதேவ; "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" இத்யத்ர

ஏதேஷாம் பரிஜநஸ்தாநாதீநாம்— 'இந்த ஸ்தாநம், இதில் இருக்கும் பரிஜநங்கள் இவை எல்லாம், பரப்ரஹ்மம் என்று சொல்லப்படும் பகவானுடைய ஸ்வரூபத்தில், அவனுடைய ஜ்ஞாநம் பலம் முதலிய கல்யாண குணக் கூட்டங்கள் போல அந்தர்ப் பூதங்களே (உள்ளடங்கினவைகளே)' என்பது தான், "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" என்னும் வாக்யத்தில், 'ஸதேவ' 'ஏகமேவ' 'அத்விதீயம்' என்னும் பதங்களுடன் சேர்க்கப்பட்டிருக்கும் 'ஏவ' என்பதன் கருத்து. ஏனென்றால், இவையெல்லாம் அவனுடைய அப்ராக்ருத விசேஷணங்களுள் அகப்பட்டவையன்றோ? "ஸதேவ" இத்யாதியான வாக்யத்தில் இருக்கும் "இதம்" என்னும் சப்தமானது, கர்ம வச்யர்களாயும் போக்தாக்களாயுமுள்ள ஸம்ஸாரி ஜீவன்கள் அவர்களுக்கு போக்யமாயுள்ள ப்ராக்ருத வஸ்துக்கள் இவைகளை உடைய ப்ரபஞ்சத்தைக் குறிக்கின்றது. "ஸதா பஶ்யந்தி ஸூரய:" என்னும் வாக்யத்தில் 'எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்' என்பது சொல்லப்பட்டிருக்கிறபடியால், அந்த ஸூரிகள் கர்ம வச்யர்களல்லர் என்பது ஸித்தம். 'அபஹதபாப்மா' என்று, ஆரம்பிக்கும் ச்ருதி வாக்யமும், 'அபிபாஸ:' என்னும் வரையிலுள்ள பாகத்தால்

ஏதேஷாம் பரிஜநஸ்தாநாதீநாம்— இப்படி 'நித்ய விபூதி என்று ஒரு ஸ்தாந விசேஷமும், அதில் அநந்த பரிஜநங்களும் எப்பொழுதும் நித்யங்களாக இருக்கின்றன' என்று சொல்லும் பக்ஷத்தில், 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்' [ஸ்ருஷ்டிக்கு முன் ப்ரளய காலத்தில் ஸத் ஒன்றே இருந்தது] என்னும் வாக்யத்திற்கு விரோதம் வரமாட்டாதோ? நித்ய விபூதியும் நித்யமாகையால், 'ஸத்தாகிற ப்ரஹ்மமும் நித்யவிபூதியும் இவை இருந்தன' என்றன்றோ சொல்லவேண்டும்? என்னும் சங்கையைச் செய்து கொண்டு அதற்குப் பரிஹாரம் சொல்லுகிறார். அந்தப் பரிஹாரமாவது-'இந்த நித்ய விபூதியும் அதிலுள்ள வஸ்துக்களும், பகவானுடைய கல்யாண குணங்களாகிற ஜ்ஞாநம் பலம் முதலியவை போல பகவத் ஸ்வரூபத்தில் அந்தர் பூதங்கள்' என்பதுதான். 'ஸத் ஒன்றே இருந்தது' என்று சொல்வது எப்படி ஜ்ஞாநம் பலம் முதலியவைகளின் இருப்பை நிஷேதிக்கவில்லையோ, அப்படியே அது நித்ய விபூதியின் இருப்பையும் நிஷேதிக்கமாட்டாது என்பது தாத்பர்யம். ஆகையால் 'ஸத்' என்னும் பதத்திற்கு 'நித்ய விபூதியுடன் விசிஷ்டமான ப்ரஹ்மம்' என்பது அர்த்தம்.

கல்யாணகுணைகதேஶத்வாத் — நித்ய விபூதியானது குணமாகுமோ? ஜ்ஞாநம் பலம் முதலியவை குணங்களாகிறபடியால் அவைகளுடன் கூடிய ப்ரஹ்

158952

[illegible]

பகவானுடைய லீலைகளுக்கு உபகரணமாயுள்ள த்ரிகுண ப்ரக்ருதி அந்த ப்ரக்ருதியின் விகாரங்களான பதார்த்தங்கள் அவைகளுடன் கலந்து நிற்கும் ஸம்ஸாரி ஜீவன்கள் இவைகளிடம் தென்படும் விகார ஸ்வபாவ மொன்றும் பகவானிடம் இல்லை யென்று அவைகளை ப்ரதிஷேதித்து, 'ஸத்யகாம:' என்ற முடியும் பாகத்தால் பகவானுக்குப் போக்யமாயும் போகோபகரணமாயுமுள்ள ஸகல வஸ்துக்களும் நித்யங்களே என்று ப்ரதிபாதிக்கின்றது. எவனுடைய காமங்கள் ஸத்யங்களோ அவன் ஸத்யகாமன். எவை இச்சிக்கப் படுகின்றனவோ அவை காமங்கள். பர ப்ரஹ்மத்தால், எவை யெவை தனக்குப் போக்யங்களாகவும் போகத்திற்கு உபகரணங்களாகவும் அபிமதிக்கப்பட்டு இச்சிக்கப்படுகின்றனவோ அவையெல்லாம் ஸத்யங்கள்,[அதாவது நித்யங்கள்] என்பது தான் ஸத்ய காமன் என்பதன் பொருளென்று ஏற்படுகிறது. போகோபகரண மின்

மமே குறிக்கப்படுகின்றது என்று சொல்வது ஒத்துக்கொள்ளத்தகுந்ததாகும். நித்ய விபூதி என்பது த்ரவ்யமா யிருக்கிறபடியால், அதன் வைசிஷ்ட்யம் எவ்விதத்தில் சொல்லப்படக்கூடும்? என்று சங்கை ஜநிக்கலாம். 'விசேஷணங்கள் எல்லாம் குணங்களாகவே இருத்தல் வேண்டும் என்று ஒரு நியமமும் இல்லை? என்பதே இதற்கு ஸமாதாநம். த்ரவ்யங்களையும் விசேஷணங்களாகக் காண்கிறோமன்றோ? இவ்விடத்தில் ' குண ' என்னும் பதத்திற்கு 'விசேஷணம்' என்று அர்த்தம் கொள்ளுதல் வேண்டும். இப்படி ஸமாதாநம் சொல்லும் பக்ஷத்தில் லீலா விபூதியாகிற இந்த ப்ரபஞ்சமும் பகவானுக்கு விசேஷணமாகிறபடியால் அதுவும் நித்ய விபூதியைப்போல க்ரஹிக்கப்பட வேண்டுமன்றோ?' என்று கேட்கலாம். அந்த லீலா விபூதியை விலக்கும் பொருட்டே இவ்விடத்தில் 'கேறுூரணா' என்று ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது. 'கேறூரணா' என்பதற்கு அப்ராக்ருத' என்பது பொருள். நிற்க, ப்ராக்ருதமாகிற லீலா விபூதி விகார மடையக்கூடியது; அப்ராக்ருதமாகிற நித்யவிபூதி விகார மடையாதது. இந்தக் காரணத்தாலேயே நித்ய விபூதிக்கு நித்யத்வம்.

ஸ்ரீ:

நவனீதம்

இது, வித்யாரத்நாகர, வேதாந்தகேஸரீ குடவாசல் V. R. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமிகளால் சின்னாட்களுக்கு முன் எழுதி முத்திரிப்பித்து வெளியிடப்பட்டிருக்கிற ஓர் உயர்தரச் செந்தமிழ்ச் சமயநூல். இந்நூல் நம்தேசத்தின்கண் உள்ள வேதசாஸ்திர பாரங்தர்களான பண்டித சிரேஷ்டர் பலராலும், லௌகிக சாஸ்திர நிபுணர்களான மேதாவிகள் அனேகராலும், பலபடியாகப் புகழ்ந்து போற்றப்பெற்றிருப்பதைக் கொண்டே இதன் பெருமையை ஒருவாறு உணரலாகும். இந்நூல், நம் தேசத்தில் தொன்று தொட்டு பிரஸித்தமாய் விளங்கிக் கொண்டிருக்கின்ற சார்வாகம், தார்க்கிகம், ஸாங்கியம், பௌத்தம், ஜைநம், வேதாந்தம், எனப்படுகிற ஆறுவிதமான முக்கிய மதங்களின் ஸாரங்களையும் யாவரும் எளிதாக அறிந்து கொள்ளும் வகையில் மிக்க தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. மேலும் அந்தந்த மதாசிரியர்களால் அருளப்பெற்ற அந்தந்த மதங்களுக்கேயான அரியபெரிய அஸல் கிரந்தங்கள் பலவற்றையும் மிக்க பரிசிரமத்துடன் வெகு காலம் பயின்று, அதன் பயனாகப் பக்ஷபாதமற்ற நடுவு நிலையோடு அவற்றின் தத்வார்த்தங்களை யெல்லாம் இருபாலாரும் இலகுவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற பரந்த நோக்கத்தைக் கொண்டே வரையப் பெற்றிருப்பதால், இப்புத்தகத்தை எல்லா மதத்தினரும் தந்தம் சமய நூலாகவே மதித்து ஏற்றுக்கொண்டு போற்றுகின்றனர். சுருங்கச் சொல்லில்: இது போன்ற சமய நூலொன்று நந்தமிழ்நாட்டில் இதுகாறும் உண்டாகியதே யில்லை யென்று கெட்டியாகக் கூறிவிடலாம். இத்தகைய அரிய பெரிய புத்தகத்தின் அர்த்த ஸாரங்களை அறிந்துகொண்டு பயன்பெற வேண்டியது தமிழ் மக்கள் அனைவருக்கும் மிக்க அவச்யமானது. புத்தகம் நல்ல கிளேஸ் பேபரில் ராயல் ஸைஸ ஸுமார் 400 பக்கங்கள் கொண்டதாய், சுத்தமாய் முத்திரிப்பித்து சேர்த்தியாகக் காலிகோ பயிண்டு செய்து விற்பனைக்குத் தயாராக விருக்கின்றது. விலை ரூ. 3 தான். வேண்டியவர்கள் " ரா. வரதாசார்யர். B. A., L. T., ஸ்ரீ ஸத்வித்யா புத்தகசாலை மானேஜர், 1, புஜங்கராவ் தெரு, சைதாப்பேட்டை, மதராஸ் " என்ற விலாசத்திற்கு எழுதிக் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபை

அடியிற்கண்ட புஸ்தகங்கள் அவைகளுக்கு எதிரில் குறிக்கப்பட்டுள்ள குறைந்த விலைக்கு விற்கப் படும். மணி ஆர்டர் மூலமாகவாவது வி. பி. மூலமாகவாவது பணத்தைச் செலுத்தலாம்.

1. பெரியாழ்வார் திருமொழி—பல்லாண்டு உள்பட வ்யாக்யாநத்துடன் (2 வால்யூம், 3 பௌண்ட்)	3	4	0
2. பெரிய திருமொழி—வ்யாக்யாநத்துடன் (3 வால்யூம்—பௌண்ட்)	3	0	0
3. திருவாய்மொழி—1 முதல் 9 பத்துக்கள்: 6000, 12000, பதவுரை (2 வால்யூம்—பௌண்ட்)	5	8	0
4. இயற்பாவில் சில (1 வால்யூம், பௌண்ட்)	1	0	0

ஏ. சேஷாசாரியர்,
சிங்குவார் அக்ரஹாரம், மவுண்ட் ரோட், மதிராஸ்.

Registered No. M. 916.

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

வைதிக ஹிந்து மத ஸம்பந்தமான
ஓர் உயர்தர மாதத் தமிழ்ப் பத்ரிகை.

வருஷச் சந்தா: ரூ. 3.
தனிப் பிரதி: அணா 5

குறிப்பு

(1) தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களையும் மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாவற்றையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, 1 ராமஸ்வாமி தெரு, மாம்பலம், சென்னை" என்னும் விலாஸத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(2) தபாலில் அனுப்பப்படும் பத்ரிகைகள் சரிவர எல்லாச் சந்தாதாரர்களுக்கும் போய்ச் சேரவில்லை என்று நாம் அறிகின்றோம். ஒவ்வொரு மாஸத்திலும் 30வ திகதியே பத்ரிகைகளெல்லாம் தபாலில் சேர்ப்பிக்கிறபடியால் அடுத்து வரும் மாஸம் 2 அல்லது 3 தேதிகளுக்குள் சந்தாதாரர்களிடம் அவை சேரவேண்டும். அப்படி அவை சேராவிட்டால் சந்தாதாரர்கள் தயவு செய்து அதைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(3) இந்த வர்ஷத்தியச் சந்தாவை இன்னும் செலுத்தாமலிருக்கும் சந்தாதாரர்கள் விளம்பமின்றிக்குச் சந்தாவைக் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்ப க்ருபை செய்தால் ஸௌகர்யமாக இருக்கும்.

27—4—34
மதராஸ்.

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை,
ராமஸ்வாமி தெரு
மாம்பலம், தேனாம்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Sabha, Madras.